லெனின்

தேர்வு நூல்கள்
பன்னிரண்டு தொகுதிகளில்

தொகுதி

8

நமது நாட்களின் பிரதானக் கடமை
சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள்
விஞ்ஞான தொழில் நுட்ப வேலைக்கான நகல் திட்டம்
''இடதுசாரி'' சிறுபிள்ளைத்தனமும் குட்டிமுதலாளித்துவ மனோபாவமும்
அமெரிக்கத் தொழிலாளர்களுக்கு எழுதிய கடிதம்

T. 11976

உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

வி. இ. லெனின், *1918*

வி. இ. லெனின்

தேர்வு நூல்கள்

பன்னிரண்டு தொகுதிகளில்

தொகுதி

8

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

В. И. Ленин

ИЗБРАННЫЕ ПРОИЗВЕДЕНИЯ В 12 ТОМАХ

ТОМ 8

На тамильском языке

V. I. Lenin

SELECTED WORKS IN 12 VOLUMES

VOL. 8

in Tamil

© தமிழ் மொழிபெயர்ப்பு

முன்னேற்றப் பதிப்பகம், 1981

Л $\frac{10102-116}{016(01)-81}$ 804—81

0101020000

பொருளடக்கம்

நமது நாட்களின் பிரதானக் கடமை . . . 9

சோவியத்துகளின் நாலாவது விசேஷ அகில ருஷ்ய காங்கிரஸ், 1918 மார்ச், 14-16 . . 17
1. மார்ச் 14ந் தேதி சமாதான உடன்படிக்கையை ஊர்ஜிதம் செய்வது பற்றிய அறிக்கை . 17
2. பிரேஸ்த் உடன்படிக்கை ஊர்ஜிதம் செய்யப்படுவது பற்றிய தீர்மானம் 46

சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள்
ருஷ்யாவின் சோவியத் குடியரசினது சர்வதேச நிலைமையும் சோஷலிசப் புரட்சியின் அடிப்படைப் பணிகளும் 50
இத்தருணத்துக்குரிய பொதுவான கோஷம் . . 56
முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்தின் புதிய கட்டம் 59
நாடு தழுவிய அளவில் கணக்குப் பதிவுக்கும் கண்காணிப்புக்குமான போராட்டத்தின் முக்கியத்துவம் 74
உழைப்பின் உற்பத்தித் திறனை உயரச் செய்தல் . 79
போட்டியின் ஒழுங்கமைப்பு 84
''இசைவான ஒழுங்கமைப்பும்'' சர்வாதிகாரமும் . 90
சோவியத் ஒழுங்கமைப்பின் வளர்ச்சி 105
முடிவுரை 111

விஞ்ஞான தொழில் நுட்ப வேலைக்கான நகல் திட்டம் 115
சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள் பற்றிய ஆறு ஆய்வுரைகள் 117
''இடதுசாரி'' சிறுபிள்ளைத்தனமும் குட்டி முதலாளித்துவ மனோபாவமும் 123
1 124
2 129
3 136
4 147
5 152
6 167
இன்றைய அரசியல் நிலைமை மீதான ஆய்வுரைகள் 172
1 172
2 173
3 174
4 176
5 177
பஞ்சம் பற்றி. பெத்ரோகிராத் தொழிலாளருக்கு ஒரு கடிதம் 179
தேசியப் பொருளாதார தலைமைக் கவுன்சில்களின் முதலாவது அகில-ருஷ்யக் காங்கிரசில் ஆற்றிய உரை, 1918, மே 26. 192
''தேசவுடைமையாக்கப்பட்ட நிறுவனங்களின் நிர்வாகம் பற்றிய விதிகளின்'' நகல் மீதான கருத்துரை. 205
தொழிலாளர், விவசாயிகள், படையாளர், செஞ்சேனைப் பிரதிநிதிகளின் சோவியத்துகளின் ஐந்தாவது அகில-ருஷ்யக் காங்கிரஸ், 1918 ஜூலை 4-10 206

மக்கள் கமிசார்கள் கவுன்சில் அறிக்கை, ஜூலை 5 . 206

பிரெஸ்னியா மாவட்டக் கூட்டத்தில் ஆற்றிய உரை, ஜூலை 26, 1918 242

அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி, மாஸ்கோ சோவியத், ஆலை மற்றும் தொழிற்சாலைக் கமிட்டிகள், மாஸ்கோ தொழிற்சங்கங்களின் கூட்டு அமர்வில் ஆற்றிய உரை, ஜூலை 29, 1918 245

தொழிலாளர்-தோழர்களே, இறுதியான நிர்ணயமான போராட்டத்தில் முன்செல்வீர்! . 273

அமெரிக்கத் தொழிலாளர்களுக்கு எழுதிய கடிதம் 280

அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி, மாஸ்கோ சோவியத், ஆலை மற்றும் தொழிற்சாலைக் கமிட்டிகள், தொழிற்சங்கங்களின் கூட்டு அமர்வு, அக்டோபர் 22, 1918 . . 304

தீர்மானம் 304

பித்திரீம் சரோக்கினின் பயனுள்ள ஒப்புதல்கள் 308

பதிப்பாளர் குறிப்புகள் 323

பெயர்க் குறிப்பகராதி 366

மக்களர், சுதந்தரம், அவர் திலம் ஆக்ஷம, ஜூலை 5. . 206

கதிர் மனியா மாகாடக் கட்டத்தில் ஆற்றிய உரை, ஜூலை 26, 1918 242

ஜில்லா குழுவ மந்திய நிர்வாகக் கமிட்டி மான்டேகு செம்ஸ்போர்டு அறிக்கை, மற்றும் சொசீர்திருத்தக் கமிட்டியுடன், மான்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களின் கூட்டு அமர்வில் ஆற்றிய உரை, ஜூலை 29, 1918 245

சீர்திருத்தங்கள்-மேல்நாடுகளோ, இந்தியாவா நிர்வாகமான போராட்டத்தில் முன் செல்கிறீர்! . 273

அமெரிக்க, சீர்திருத்தங்களைக் குறித்து ஒரு கடிதம் 280

ஜில்லா குழுவ மந்திய நிர்வாகக் கமிட்டி, மான்டேகு செம்ஸ்போர்டு, ஆகிய மற்றும் சீர்திருத்தக் கமிட்டியுடன், சீர்திருத்தங்கள் கமிட்டி கூட்டு அமர்வு, ஆகஸ்ட் 22, 1918 . . 304

நிரமலம் 304

பத்திரிகை சுதந்திரம் பற்றிய தீர்மானம் கள் 308

சட்டசபை பற்றிய ஒரு கடிதம் . . . 323

பெரியார் சீர்திருத்தம் 356

நமது நாட்களின் பிரதானக் கடமை

> ''வறியவள் நீ, பெருஞ்செல்வியும் நீயே,
> விறலினை நீ, வலிவில்லளும் நீயே,—
> அன்னை ருஷ்யா!''1

மனித வரலாறு நமது நாட்களில் முக்கியமான, மிகவும் கடினமான திருப்பத்தை நிகழ்த்துகிறது; இந்தத் திருப்பம் அளவில்லாத உட்பொருளை—எவ்வித மிகைப் படுத்தலுமின்றி அது உலக-விடுதலை இயக்கத்திற்கு இன்றி யமையாதது என்று சொல்லலாம்—கொண்டிருக்கிறது. போரிலிருந்து சமாதானத்திற்கான திருப்பம் இது; மிக அதிக பலம் வாய்ந்த சூறைக்காரர்களால் அடிக்கப்பட்ட கொள்ளையினைப் புதிய முறையில் பங்கிடுவதற்காகக் கொள் ளைக்காரர்களிடையே நடக்கும், லட்சோபலட்சம் சுரண்டப் பட்டவர்களையும் உழைப்பாளி மக்களையும் படுகொலைக்கு அனுப்பும் போரிலிருந்து முதலாளித்துவ நுகத்தடியிலிருந்து விடுபடும்பொருட்டு ஒடுக்குவோரை எதிர்த்து ஒடுக்கப்படு வோர் நடத்தும் போருக்கான திருப்பம், துன்பம், துயரம், பட்டினி, இழிவு என்ற படுகுழியிலிருந்து கம்யூனிஸ்ட் சமு தாயமும், உலக சுபிட்சமும், நிலையான சமாதானமும் என்ற ஒளிமயமான வருங்காலத்திற்கான திருப்பம் ஏற்பட்டு வரு கிறது. எனவே சட்டென நிகழும் இந்தத் திருப்பத்தின் ஆக முனைப்பான கட்டங்களில், சுற்றிலும் பழைய அமைப்பு தகர்ந்து சரிந்து சடசடவென்று முறிந்துவிழும்போது, வர் ணிக்க முடியாத கஷ்டங்களிடையே புதுமை பிறந்து வரும் போது, சிலர் தலைமயக்கமுறுகின்றனர்; சிலர் பீதியடைகின்ற னர், சிலவேளை மிகவும் கசப்பான யதார்த்தத்திலிருந்து விடுபடச் சிலர் கவர்ச்சி மிகுந்த, அழகான சொல்லடுக்கு களைத் தூவுகின்றனர் என்றால் இதில் அதிசயம் எதுவும் இல்லை.

ஏகாதிபத்தியத்திலிருந்து கம்யூனிஸ்ட் புரட்சிக்குத் திரும்பும் வரலாற்றின் சட்டென நிகழும் திரும்புமுனேகளே மிகவும் தெளிவாகக் கண்டு மிகக் கடுமையான வேதனே யுடன் அனுபவித்துவரும் வாய்ப்பு ருஷ்யாவுக்குக் கிடைத்துள் ளது. மிகப் பழமையான, மிகவும் வலிமைகொண்ட, காட்டு மிராண்டித்தனமான, கொடுமைமிக்க முடியரசுகளில் ஒன் றினே நாம் ஒரு சில நாட்களுக்குள் அழித்தோம். முதலாளி வர்க்கத்தினருடன் சமரசம் செய்து கொள்வதும், குட்டி முதலாளித்துவ பிரமைகளே அகற்றுவதுமான சில கட்டங் களே ஒருசில மாதங்களுக்குள் நாம் கடந்தோம்; பிற நாடு களுக்கோ இவற்றுக்குப் பல பத்தாண்டுகள் தேவைப்பட் டன. முதலாளி வர்க்கத்தை முறியடித்த நாம் உள்நாட்டுப் போரில் அதன் வெளிப்படையான எதிர்ப்பையும் சில வாரங்களுக்குள் ஒடுக்கினேம். மிகப் பெரிய நமது நாட் டின் ஒரு முனேயிலிருந்து மறுமுனேக்கு போல்ஷிவிசத்தின் வெற்றிப் பவனியாக வலம் வந்தோம். ஜாராட்சியாலும் முதலாளி வர்க்கத்தாலும் ஒடுக்கப்பட்டுக் கிடந்த மிகக் கீழ்மட்டத்திலிருந்த பாடுபடும் மக்களே விடுதலேக்கும் சுதந் திர வாழ்வுக்கும் உயர்த்தினேம். சோவியத் குடியரசினே ஸ்தாபித்து வலுப்படுத்தினேம்; முதலாளித்துவ-பாராளு மன்றக் குடியரசுகளில் மிகச் சிறந்தவற்றை விட அளவற்ற முறையில் உயர்ந்த, மேலும் ஜனநாயகமான புதிய மாதிரி அரசு இது. ஏழை விவசாயிகள் ஆதரவு நல்கும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தினே நிறுவினேம் நாம்; பிறகு விரிந்த முறையில் சோஷலிஸ்ட் சீர்திருத்தங்களே நிறைவேற்றத் தொடங்கினேம். சகல நாடுகளிலுமுள்ள கோடானுகோடித் தொழிலாளர்கள் தங்களுடைய சொந்த சக்தியில் நம் பிக்கை வைக்கச் செய்து அவர்களிடையில் உத்வேக நெருப் பினே மூட்டினேம். உலகத் தொழிலாளர் புரட்சிக்கு எங் கும் அறைகூவல் விடுத்தோம். எல்லா நாடுகளிலுமுள்ள ஏகாதிபத்தியக் கொள்ளேயருக்குச் சவால் விடுத்தோம்.

பிறகு, சில நாட்களில், ஓர் ஏகாதிபத்தியக் கொள்ளே யன் நிராயுதரான நம்மீது பாய்ந்து நம்மைக் கீழே தள்ளி ஞன். ஏகாதிபத்தியப் போர் என்ற இரும்புப் பிடியிலிருந்து

சிறிது காலத்திற்காவது நாம் விலகியிருந்த துணிவுக்குக் கப்பம் வாங்குவது போல அவன் நம்மை நம்ப முடியாத அளவு கடுமையான, கேவலப்படுத்தும் சமாதான உடன்படிக் கையில்[2] கையொப்பமிட நிர்ப்பந்தித்தான். தனது சொந்த நாட்டில் தொழிலாளர் புரட்சி என்ற பூதம் எந்த அளவு பயங்கரமாக எழுகிறதோ, அந்த அளவுக்கு அதிகமான மூர்க்கத்தனத்துடன் இந்தக் கொள்ளையன் ருஷ்யாவை ஒடுக்கி மூச்சுத் திணற வைத்து சின்னுபின்னமாக்குகிறுன்.

''டில்ஸீட்'' சமாதான உடன்படிக்கையில்[3] கையொப்ப மிட நாம் நிர்ப்பந்திக்கப்பெற்ருேம். நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளத் தேவையில்லை. நாம் இந்தக் கசப்பான, அலங்காரமற்ற உண்மையினைத் தீரத்துடன் நேருக்குநேர் பார்க்க வேண்டும். எந்தப் படுகுழியில் நாம் தள்ளப்பட் டிருக்கிருேமோ, அந்த தோல்வி, துண்டாடல், அடிமைப் படுத்தல், இழிவுபடுத்தல் என்ற படுகுழியை நாம் அடி யாழம் வரை முற்ருக அளவிட்டுப் பார்க்க வேண்டும். இதனை நாம் எவ்வளவு தெளிவாகப் புரிந்துகொள்கிருேமோ அந்த அளவுக்கு நமது விடுதலை விருப்பமும், அடிமைத்தனத் திலிருந்து சுதந்திரத்திற்காக மீண்டும் எழுச்சியுறுவதற்கான நமது விழைவும் என்ன விலை கொடுத்தும் ருஷ்யாவை வறு மையும் வலிவின்மையும் கொண்ட நிலையிலிருந்து, உண்மை யான விறலும் செல்வமும் மிக்க நிலைக்கு உயர்த்தும் நமது மாற்ற முடியாத தீர்மானமும் மேலும் உருக்கேறும், உறுதி யைப் பெறும்.

ருஷ்யா விறலும் செல்வமும் மிக்க நிலையினை அடைய முடியும்; ஏனெனில் ஒவ்வொருவருக்கும் அமோகமாக இல் லாவிட்டாலும் போதிய வாழ்க்கைச் சாதனங்களைக் கொடுக் கும் அளவுக்கு நமக்கு இன்னும் போதுமான நிலப்பரப்பும் இயற்கைச் செல்வங்களும் இருக்கின்றன. உண்மையில் விறல் மிக்க, செல்வமிக்க ருஷ்யாவைச் சிருஷ்டிப்பதற்கு இயற்கைச் செல்வங்களிலும், மனித சக்திகளிலும், மக்களின் படைப் பாற்றலுக்கு மகத்தான புரட்சி அளித்துள்ள உயர்ந்த ஊக் கத்திலும் நமக்குத் தேவையான மூலப்பொருள் இருக்கி றது.

எல்லாவித மனச்சோர்வையும் சகலவிதச் சொல்லடுக்கு களையும் கைவிட்டு, வைராக்கிய உறுதியுடன் சகல சக்தி களையும் திரட்டினுல், கடுமையாக உழைத்து அருமுயற்சி செய்தால் நாம் தொடக்கம் செய்துள்ள சோஷலிஸ்ட் புரட்சியின் பாதையில் மட்டுமே விமோசனம் சாத்தியமானது என்பதைப் புரிந்துகொண்டால், ருஷ்யா விறல்மிக்க, செல் வம் கொழிக்கும் நாடு ஆகிவிடும். தோல்விகளால் சோர்வு ருது அந்தப் பாதையில் முன்செல்வோம், கல்லின்மேல் கல்லாக வைத்து சோஷலிஸ்ட் சமுதாயத்தின் உறுதியான அடித்தளத்தினை அமைப்போம், கட்டுப்பாட்டையும், சுயக் கட்டுப்பாட்டையும் ஸ்தாபிப்பதிலும் எங்கும் அமைப்புத் திரட்சியையும், ஒழுங்கையும், திறமையையும், மக்களது சக்திகள் அனைத்தின் இசைவான ஒத்துழைப்பையும், பொருள் களின் உற்பத்தி, விநியோகம் விஷயத்தில் சர்வவியாபக மான கணக்குவைப்பதையும் கட்டுப்பாட்டையும் உறுதிப் படுத்துவதிலும் ஆழ்ந்து ஈடுபடுவோம்—இதுவே ராணுவ வலிமையையும் சோஷலிஸ்ட் வலிமையையும் கட்டி வளர்க் கும் வழியாகும்.

கடுமையான தோல்வி கண்டுவிட்ட ஓர் உண்மையான சோஷலிஸ்ட் வீண் ஆரவாரம் செய்வதோ, பீதிக்கு இட மளிப்பதோ அழகல்ல. நாம் புகலற்ற நிலையில் இருக்கிறேம் என்பதோ நம்முன் இருப்பது மிகக் கடுமையான சமாதா னம் என்ற (ஷ்லியாஹ்திச்[4] கண்ணேட்டத்தில் அவமதிப் பான) ''அவமதிப்பான'' மரணமோ அல்லது நம்பிக்கையற்ற போரில் ''வீர'' மரணமோ தான் என்பதோ உண்மையல்ல. ''டில்ஸீட்'' சமாதான உடன்படிக்கையில் கையொப்பமிட்ட தன்மூலம் நாம் நமது லட்சியங்களுக்கும் நண்பர்களுக்கும் துரோகம் இழைத்துவிட்டோம் என்பதும் உண்மையல்ல. நாம் எதற்கும் எவர்க்கும் துரோகம் செய்யவில்லை; எந்த ஒரு பொய்யையும் புனிதமாக்கவில்லை, மூடி மறைக்கவில்லை; துயரில் சிக்கிய எந்த நண்பருக்கும் தோழருக்கும் நமது சக்தி அனைத்தையும் பயன்படுத்தி இயன்ற எல்லா வழிகளி லும் உதவி புரிய நாம் மறுக்கவில்லை. முறியடிக்கப்பெற்று அல்லது பீதியடைந்து ஓடும் சேனையின் மிச்சங்களை நாட்

டின் உள் பகுதிக்கு வாபஸ் பெறும் ஒரு தளபதி, மிகவும் நெருக்கடியான நிலையில் இந்தப் பின்வாங்கலைக் காப்பாற்ற மிகக் கடுமையான, கேவலமான சமாதானத்தை ஏற்கும் தளபதி, விரோதியால் துண்டிக்கப் பெற்ற, தம்மால் உதவி தர முடியாத படைப் பகுதிகளுக்குத் துரோகம் செய்வதில்லை. இத்தகைய தளபதி இன்னும் பாதுகாக்க முடிந்ததைப் பாதுகாக்கும் ஒரே ஒரு வழியைப் பின்பற்றுகிறார்; துடுக்குத்தனமாகச் சூதாட்டம் நடத்த மறுக்கிறார்; மக்களிடம் கசப்பான உண்மையினை அலங்கரித்துக் காட்டுவதை தவிர்க்கிறார்; ''காலத்தைப் பெறுவதற்கு இடப்பரப்பை விட்டுக் கொடுக்கிறார்''; சக்திகளைத் திரட்டுவதற்கும் சீர்குலைவாலும் உளச்சோர்வாலும் சேனை பீடிக்கப்பட்டு இருக்குமானால் அது ஓய்வெடுத்துக்கொள்ளவோ அல்லது முந்திய நிலையை அடையவோ இடமளிக்கும் எல்லா ஓய்வு நேரத்தையும்—அது எவ்வளவு குறுகியதாக இருப்பினும் சரி—அவர் பயன்படுத்துகிறார்; இவ்வழிகளில்தான் அப்படிப்பட்ட தளபதி தமது கடமையை நிறைவேற்றுகிறார்.

நாம் ''டில்ஸிட்'' சமாதான உடன்படிக்கையில் கையொப்பமிட்டிருக்கிறோம். 1807ம் ஆண்டில் முதலாம் நெப்போலியன் பிரஷ்யாவை நிர்ப்பந்தித்து டில்ஸிட் சமாதான உடன்படிக்கையில் கையொப்பமிட வைத்த பொழுது, அந்தப் படையெடுப்பாளன் ஜெர்மானியர்களின் எல்லாப் படைகளையும் முறியடித்தான்; அவர்களது தலை நகரத்தையும் எல்லாப் பெரிய நகரங்களையும் கைப்பற்றினான்; தனது போலீஸ் படையினைக் கொண்டு வந்தான்; தோற்றுப்போனவர்களைத் தனக்குப் புதிய கொள்ளைக்காரப் போர்கள் நடத்த உதவிப்படைகளைக் கொடுக்கும்படி நிர்ப்பந்தித்தான்; ஜெர்மனியைப் பல பகுதிகளாகத் துண்டுபோட்டான்; ஒரு சில ஜெர்மன் பிரதேச அரசுகளுடன் வேறு பிரதேச அரசுகளுக்கு விரோதமாக உடன்பாடுகளைச் செய்துகொண்டான். இருந்த போதிலும் ஜெர்மன் மக்கள் இத்தகைய சமாதானத்தையும் சமாளித்து, தங்களுடைய சக்திகளைத் திரட்டி, எழுச்சியுற்று, விடுதலைக்கும் சுயாதீனத்திற்குமான உரிமையை வென்று பெறும் ஆற்றலைப் பெற்றிருந்தார்கள்.

சிந்தனை செய்யும் விருப்பமும் ஆற்றலும் உள்ள எல்லோருக்கும் டில்ஸீட் சமாதானத்தின் உதாரணம் (அந்தக் காலகட்டத்தில் ஜெர்மானியர்மீது திணிக்கப்பெற்ற பல கடுமையான, மானக்கேடான உடன்பாடுகளில் ஒன்ருக இருந்தது அது) எல்லாச் சூழ்நிலைமைகளின் கீழும் மிகக் கடுமையான ஒரு சமாதானம் நாசகரமான படுகுழி என்றும் போரரோ வீரத்தின், விமோசனத்தின் பாதை எனவும் எண்ணுவது எவ்வளவு குழந்தைத்தனமான பேதைமை என்பதைத் தெட்டத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. வரலாற்றில் சமாதானம் அடிக்கடி ஓய்வெடுத்துக்கொள்வதற்கும் புதிய போர்களுக்குச் சக்திகளைத் திரட்டுவதற்கும் உதவும் ஒரு சாதனமாக இருந்தது என்பதைப் போர்க் காலகட்டங்களின் படிப்பினைகள் நமக்குப் போதிக்கின்றன. டில்ஸீட் சமாதானம் ஜெர்மனிக்கு மிகப் பெரிய மானக்கேடாக இருந்தது; ஆனல் அதே பொழுதில் இது மிகப் பெரிய தேசியப் புத்தெழுச்சிக்கான திருப்பத்தையும் குறித்தது. அந்தச் சமயத்தில் நிலவிய வரலாற்றுச் சூழ்நிலைமையில் இந்தப் புத்தெழுச்சி முதலாளித்துவ அரசு என்ற திசைவழியில் மட்டுமே செல்ல முடிந்தது. அந்தச் சமயத்தில், அதாவது நூறு ஆண்டுகளுக்கு முன்னல், வரலாறு விரல்விட்டெண்ணத்தக்க பிரபுக்களாலும் ஒரு சில முதலாளித்துவ வகைப்பட்ட படிப்பாளிகளாலும் சிருஷ்டிக்கப்பட்டது; தொழிலாளர்களும் விவசாயிகளும் அப்பொழுது முழு உறக்கத்திலும் செயலொடுங்கியும் இருந்தார்கள். இதன் விளைவாக வரலாறு அந்தக் காலத்தில் மிகமிக மந்தமான கதியிலேயே ஊர்ந்து சென்றது.

இப்போது முதலாளித்துவம் பொதுவான பண்பாட்டினை, குறிப்பாகப் பொது மக்களின் பண்பாட்டினை, மிகமிக உயர்ந்த மட்டத்திற்கு ஏற்றியுள்ளது. போர் மக்களை அதிர வைத்துள்ளது; வர்ணிக்க முடியாத பயங்கரத்தாலும் துன்ப துயரங்களாலும் அவர்களை விழிப்புறச் செய்துள்ளது. போர் வரலாற்றை முடுக்கிவிட்டது; அதுவோ இப்போது எஞ்சின் வேகத்தில் ஓடுகிறது. தற்போது வரலாறு லட்சக் கணக்கான, கோடிக்கணக்கான மக்களால் சுதந்திரமாகப் படைக்கப்

பெறுகிறது. முதலாளித்துவம் சோஷலிசத்திற்குரிய பக்குவ நிலையை எய்திவிட்டது.

ஆகவே ருஷ்யா இப்போது ''டில்ஸீட்'' சமாதானத்திலிருந்து தேசியப் புதுமலர்ச்சிக்கு, மகத்தான தேசபக்தப் போருக்குச் செல்கிறதென்றால்—அது நிச்சயமாக இந்தத் திசையில் செல்கிறது—இந்த மறுமலர்ச்சியின் நோக்கம் முதலாளித்துவ அரசு அல்ல, உலக சோஷலிஸ்ட் புரட்சியின் திசையில் இருக்க வேண்டும். 1917 அக்டோபர் 25ந் தேதி முதல் நாம் தற்காப்புவாதிகளாக இருந்து வந்திருக்கிறோம். நாம் ''தந்தையர் நாட்டின் பாதுகாப்புக்காக'' நிற்கிறோம்; ஆனால் நாம் இறங்கப் போகிற தேசபக்தப் போர், சோஷலிஸ்ட் தாய் நாட்டிற்காகவும் தாய் நாடு என்ற முறையில் சோஷலிசத்திற்காகவும் உலக சோஷலிசப் படையின் ஒரு பிரிவு என்ற முறையில் சோவியத் குடியரசுக்காகவும் நடக்கும் போராக விளங்கும்.

''ஜெர்மானியர்மீது பகைமை கொள், ஜெர்மானியரைக் கொல்'' என்பதே சாமான்ய, அதாவது முதலாளி வர்க்க வகைப்பட்ட தேசபக்தியின் கோஷமாக இருந்தது, இன்னும் இருக்கிறது. ஆனால் நாம், ''ஏகாதிபத்தியக் கொள்ளையர்மீது பகைமை கொள், முதலாளித்துவத்தின்மீது பகைமை கொள், முதலாளித்துவம் ஒழிக!'' என்று சொல்லிக் கொண்டு அதேபொழுதில், ''ஜெர்மானியரிடமிருந்து படிப்பினைகளைக் கற்றுக்கொள்! ஜெர்மன் தொழிலாளர்களுடன் சகோதர இணைப்புக்கு விசுவாசமாக இரு. அவர்கள் நமது உதவிக்கு வருவதில் தாமதம் ஏற்பட்டது. நமக்கு அவகாசம் கிடைக்கும்; அவர்கள் வரப்போவதற்காகக் காத்திருப்போம்; அவர்கள் நமக்கு உதவ நிச்சயம் வருவார்கள்'' என்று கூறுவோம்.

ஆம், ஜெர்மானியரிடமிருந்து படிப்பினைகளைக் கற்றுக் கொள்! வரலாறு வளைவு நெளிவான, சுற்றிவளைத்துள்ள வழிகளில் செல்கிறது. ஜெர்மானியர் இப்பொழுது ஈவிரக்கமற்ற ஏகாதிபத்தியத்தின் உருவாக இருப்பதோடு கட்டுப்பாடு, ஸ்தாபனத் திரட்சி, நவீன யந்திரத் தொழில் அடிப்படையில் இசைவான ஒத்துழைப்பு, கறாராகக் கணக்குவைத்

தல், கண்காணிப்பு எனும் கோட்பாடுகளின் உருவாகவும் திகழ்கின்றனர்.

நம்மிடையில் குறையாக இருப்பது இதுவே. நாம் கற்றுக் கொள்ள வேண்டியது இதுவே. நமது மகத்தான புரட்சி வெற்றிகரமான துவக்கத்திலிருந்து பல்வேறு கடுமையான சோதனைகளைத் தாண்டித் தனது வெற்றி லட்சியத்தினைப் போயடையத் தேவைப்படுவது இதுவே. ருஷ்யாவின் சோவியத் சோஷலிஸ்ட் குடியரசு வறியதாகவும் வலியற்றதாகவும் இருக்கும் நிலை தொலைந்து அது எல்லாக் காலத்திற்கும் அமோகமாகவும் விறல்மிக்கதாகவும் திகழ அவசியமாயிருப்பது இதுவே.

மார்ச் 11, 1918

அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின்
இஸ்வேஸ்தியா, இதழ் *46*
1918 மார்ச் 12ந் தேதி

நூல் திரட்டு,
தொகுதி *36*,
பக்கங்கள் *78-82*

சோவியத்துகளின் நாலாவது விசேஷ அகில ருஷ்ய காங்கிரஸ்[5]

1918 மார்ச், 14—16

1

மார்ச் 14ந் தேதி சமாதான உடன்படிக்கையை ஊர்ஜிதம் செய்வது பற்றிய அறிக்கை

தோழர்களே, ருஷ்யப் புரட்சியின் வளர்ச்சியில் மட்டுமல்ல, சர்வதேசப் புரட்சியின் வளர்ச்சியிலும் ஒரு திரும்புமுனையினைக் குறிக்கும் ஒரு பிரச்சினைக்கு நாம் இன்று தீர்வு காண வேண்டும். பிரேஸ்த்-லிட்போவ்ஸ்கில் சோவியத் ஆட்சியின் பிரதிநிதிகள் செய்துகொண்ட மிகக் கடுமையான சமாதான ஒப்பந்தத்தை சோவியத் ஆட்சி அங்கீகரிக்கவோ அல்லது ஊர்ஜிதம் செய்யவோ பிரேரிக்கிறது; இந்தப் பிரச்சினைக்குச் சரியான தீர்வு காண்பதற்கு, நாம் எட்டியிருக்கும் திரும்புமுனையின் சரித்திர முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்வதும், இதுகாறும் புரட்சியில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியின் பிரதான அம்சம் எதில் இருந்தது என்பதையும் நாம் அனுபவித்த கடுமையான தோல்விக்கும் கண்டிப்பான சோதனைகள் நிறைந்த காலகட்டத்துக்கும் அடிப்படைக் காரணம் எதில் இருக்கிறது என்பதையும் புரிந்துகொள்வதும் எப்போதையும்விட அதிக அவசியமாகிறது.

இந்தப் பிரச்சினைமீது சோவியத் கட்சிகளுக்கு[6] இடையில் ஏற்பட்டுள்ள வேறுபாடுகளின் பிரதானக் காரணம், சிலர் சோவியத் குடியரசு ஏகாதிபத்தியத்திடம் தோல்வியுற்றது குறித்து நியாயமும் நேர்மையுமான கோபத்திற்கு அளவிற்கு அதிகமாக ஆளாகியுள்ளனர் என்பதும், அளவிற்கு அதிகமாகச் சோர்வுற்றிருக்கின்றனர் என்பதும் ஆகும். இப்போதைய சமாதான முடிவு வரையில் புரட்சி அடைந்துள்ள

வளர்ச்சியின் வரலாற்று நிலைமைகளையும் சமாதானத்துக்குப் பிறகு நம்முன் தோற்றமளிக்கும் வடிவிலான வரலாற்று நிலைமைகளையும் கருதிப்பார்ப்பதற்குப் பதிலாக அவர்கள் புரட்சியின் போர்த்தந்திரங்கள் பற்றிய பிரச்சினைக்கு நேரடியான உணர்ச்சியால் தூண்டப்பட்டுத் தீர்வு காண முயல்கிறார்கள். நாம் ஒரு வெகுஜன இயக்கத்தின் விஷயத்திலோ அல்லது வர்க்கப் போராட்டத்தின் விஷயத்திலோ—குறிப்பாக தனி ஒரு நாட்டில் எனினும் ஒரு பிரம்மாண்டமான நாட்டின் பரப்பு முழுவதிலும் நடக்கும் வர்க்கப் போராட்டத்தின் விஷயத்தில் மட்டும் அல்ல, அத்துடன் எல்லாச் சர்வதேச உறவுகளையும் அணைத்துக்கொள்ளும் தற்போதைய வர்க்கப் போராட்டத்தின் விஷயத்திலும்கூட—நமது போர்த்தந்திரங்களை வகுப்பதில் நாம் எதற்கும் முன்னும் எதையும் விட அதிகமாகவும் யதார்த்த நிலை குறித்த ஒரு மதிப்பீடை அடிப்படையாகக் கொள்ள வேண்டும்; இதுவரை புரட்சியின் போக்கு எவ்வாறு இருந்தது என்பதையும் அது அவ்வளவு அபாயகரமாகவும், அவ்வளவு சட்டென்றும், நமக்கு இந்த அளவு பாதகம் ஏற்படுத்தும் முறையிலும் ஏன் மாறியுள்ளது என்பதையும் பரிசீலனை செய்ய வேண்டும்; இதுதான் புரட்சிகளின் வரலாறு முழுதும் நமக்குப் போதித்திருக்கும் படிப்பினை.

அந்த நோக்குநிலையிலிருந்து நமது புரட்சியின் வளர்ச்சியினை நாம் பரிசீலனை செய்தால் இது இந்த நாள் வரையில் ஒப்புநோக்கான, பெரும்பாலும் கற்பிதமான தற்சார்பு, காலகட்டத்தைக் கடந்திருப்பதும், சர்வதேச உறவுகளிலிருந்து தாற்காலிகமாக சுயேச்சையாக இருப்பதும் தெளிவாகத் தெரியும். 1917 பிப்ரவரி இறுதி முதல் இவ்வாண்டு பிப்ரவரி 11ந் தேதி வரையில், அதாவது ஜெர்மன் தாக்குதலின் தொடக்கம் வரையில், நமது புரட்சி கடந்து சென்ற பாதை பெரும்பாலும் எளிதான, துரிதமான வெற்றிகளின் பாதையாக இருந்தது. அந்தப் புரட்சியின் வளர்ச்சியை நாம் சர்வதேச அளவில், ருஷ்யப் புரட்சியின் நிலையிலிருந்து மட்டுமே பார்த்தால், நாம் இவ்வாண்டில் மூன்று காலகட்டங்களைக் கடந்து வந்திருப்பதைக் காணலாம். முதல்

காலகட்டத்தில் ருஷ்யத் தொழிலாளி வர்க்கம் முற்போக்கான, வர்க்க உணர்வுள்ள, செயலூக்கமுள்ள விவசாயிகளுடனும் குட்டிமுதலாளிகள் மட்டுமன்றி பெரிய முதலாளிகளின் ஆதரவும் பெற்று, சில நாட்களில் முடியரசு ஆட்சியை அகற்றியெறிந்தது. இந்த மிக அற்புதமான வெற்றிக்குக் காரணம், ஒருபுறத்தில், 1905ம் ஆண்டில் ஏற்பட்ட அனுபவத்தால் ருஷ்ய மக்கள் மாபெரும் புரட்சிப் போராட்ட ஆற்றல் பெற்றிருந்தனர் என்பதும், மறுபுறம் மிகமிகப் பிற்பட்ட நாடாகிய ருஷ்யா, போரினுல் மற்ற எந்த நாட்டையும்விட அதிகமாகத் துயர்ப்பட்டதும், அதோடு பழைய ஆட்சியின்கீழ் போரைத் தொடர்ந்து நடத்த அறவே முடியாத நிலையைக் குறிப்பாகச் சீக்கிரமாக எய்திவிட்டதும் ஆகும்.

குறுகிய காலம் நீடித்த, கொந்தளிப்புள்ள இந்த வெற்றிக்குப் பிறகு, தொழிலாளர், படையாளர், விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துகள் என்ற புதிய அமைப்பு படைக்கப்பெற்றபின், நமது புரட்சியின் இடை மாறுபாட்டுக் காலகட்டம் தொடங்கியது; அது பல மாதங்களுக்கு நீடித்திருந்தது. இந்தக் காலகட்டத்தில் சோவியத்துகளால் உடனே பலவீனப்படுத்தப்பட்ட முதலாளித்துவ அரசாங்கம் அவ்வாட்சிக்கு ஆதரவு கொடுத்துவந்த குட்டிமுதலாளித்துவச் சமரசக் கட்சிகளால்,—அதாவது மென்ஷிவிக்குகளாலும் சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களாலும்[7]—ஆதரிக்கப்பெற்று உறுதிப்படுத்தப்பட்டு இயங்கி வந்தது. இந்த அரசாங்கம் ஏகாதிபத்தியப் போரையும் ஏகாதிபத்திய இரகசிய உடன்படிக்கைகளையும் ஆதரித்தது, தொழிலாளி வர்க்கத்தை வெறும் வாக்குறுதிகளைக் கொடுத்து ஏமாற்றியது; எதுவும் செய்யாமல் பொருளாதார நாச நிலையினை நீடிக்க வைத்தது. நமக்கும் ருஷ்யப் புரட்சிக்கும் நீடியதாகத் தோன்றிய இந்தக் காலகட்டத்தில் சோவியத்துகள் தங்களுடைய சக்திகளைத் திரட்டின; ருஷ்யப் புரட்சிக்கு இது நீண்ட காலகட்டமாகத் தோன்றினுலும், சர்வதேசக் கண்ணேட்டத்தில் பார்த்தால் இது குறுகிய காலகட்டமாக இருந்தது; ஏனெனில் பிரதான நாடுகள் பெரும்பாலான

வற்றில் பல்வேறு கட்சிகள், குழுக்கள், போக்குகள் இவற்றின் சமரசக் கொள்கையின் குட்டிமுதலாளித்துவ பிரமைகளை அகற்றிச் சமாளிப்பதற்கு மாதங்களல்ல, பல நீண்ட பத்தாண்டுகள் தேவைப்பட்டன. ஏப்ரல் 20க்கும்[8] (தனது பைக்குள் இரகசிய ஏகாதிபத்திய உடன்பாடுகளை வைத்திருந்த) கேரென்ஸ்கி ஜூன் மாதத்தில்[9] ஏகாதிபத்தியப் போரை மீண்டும் தொடங்கிய காலத்துக்கும் இடையிலுள்ள இந்தக் காலகட்டம் நிர்ணயமான பாத்திரத்தை வகித்தது. இந்தக் காலகட்டத்தில் நாம் ஜூலைத் தோல்வி[10], கர்னீலவ் எதிர்புரட்சிக் கலகம்[11] இவற்றை அனுபவித்தோம்; அப்பொழுதுதான், வெகுஜனப் போராட்டத்தில் ஏற்பட்ட அனுபவத்தின்மூலமே, குட்டிமுதலாளித்துவ சமரசம் வீண் என்பதை வெறும் உபதேசத்திலிருந்தல்ல—தங்களது சொந்த அனுபவத்தின்மூலம் தொழிலாளிகள், விவசாயிகள் ஆகியோரின் மிகப் பரந்த பகுதிகள் உணர்ந்த பிறகு, நீண்டகால அரசியல் வளர்ச்சிக்குப்பிறகு, நீண்ட தயாரிப்புகளுக்கும் கட்சிக் குழுக்களின் மனப்போக்கிலும் கருத்திலும் ஏற்பட்ட மாறுதலுக்கும் பிறகுதான், அக்டோபர் புரட்சிக்குரிய அடித்தளம் உருவாக்கப்பட்டது; அந்தச் சமயத்தில்தான் ருஷ்யப் புரட்சி, சர்வதேசப் புரட்சியிலிருந்து தனிப்பட்டோ அல்லது தாற்காலிகமாகப் பிரிக்கப்பட்டோ நின்ற ஆரம்ப கட்டமாகிய மூன்றுவது காலகட்டத்திற்குள் பிரவேசித்தது.

ஒழுங்கமைப்பு வேலையின் கட்டமாகிய இந்த மூன்றுவது, அல்லது அக்டோபர், காலகட்டம் மிகவும் கடினமானதாயிருந்தது; அதேபொழுதில் இது மிகப் பெரிய, மிகத் துரிதமான வெற்றிகளின் காலகட்டமாகத் திகழ்ந்தது. அக்டோபருக்குப் பிறகு, புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் கரங்களில் அதிகாரத்தை ஒப்படைத்துவிட்டதும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தினை ஸ்தாபித்துவிட்டதும், இதற்கு மிகப் பெரும்பான்மையான தொழிலாளர், ஏழை விவசாயிகளின் ஆதரவைத் தேடித்தந்துவிட்டதுமான நமது புரட்சி, வெற்றிவாகை சூடி முன்னேறியது. ருஷ்யா முழுவதிலும், ஏகாதிபத்திய முதலாளி வர்க்கத்தில் ஒரு பகுதியினரின் ஆதரவைப் பெற்ற சுரண்டுவோர், நிலப்பிரபுக்கள்,

முதலாளிகளின் எதிர்ப்பு என்ற உருவில் உள்நாட்டுப் போர் தொடங்கியது.

உள்நாட்டுப் போர் தொடங்கியது; அந்த உள்நாட்டுப் போரில் சோவியத் ஆட்சியின் எதிரிகளின் சக்திகளும் உழைக்கும், சுரண்டப்பட்டுவரும் மக்களின் விரோதிகளுடைய சக்திகளும் அற்பமானவையாக இருந்தன; உள்நாட்டுப் போர் சோவியத் ஆட்சியின் தொடர்ச்சியான வெற்றியாக இருந்தது; ஏனெனில் அதன் விரோதிகளான சுரண்டுவோர், நிலப்பிரபுக்கள், முதலாளி வர்க்கத்தினருக்கு எவ்வித அரசியல், பொருளாதார ஆதரவும் இருக்கவில்லை; அதனுல்தான் அவர்களது தாக்குதல் தகர்ந்து விழுந்தது. அவர்களை எதிர்த்து நடத்தப்பட்ட போராட்டம் அநேகமாக ராணுவ நடவடிக்கையாக இருக்கவில்லை; பெரும்பாலும் பிரசாரப் போராட்டமாக இருந்தது; பகுதி பகுதியாக, திரள் திரளாக, உழைக்கும் கசாக்குகள்[12] உள்ளிட்ட மக்கள், சோவியத் ஆட்சியிலிருந்து தங்களைப் பிரித்துச் செல்ல முயலும் சுரண்டும் கும்பலை விட்டு விலகி வரலாயினர்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமும் சோவியத் ஆட்சியும் வெற்றிப் பவனி கண்ட இந்தக் காலகட்டத்தில் சோவியத் ஆட்சி ருஷ்யாவின் மிகப் பெருந்திரளான உழைப்பாளி மற்றும் சுரண்டப்படும் மக்களை உறுதியாகவும் மாற்ற முடியாத வகையிலும் தன் பக்கத்துக்கு ஈர்த்துக்கொண்டு விட்டது; ஆகவே இந்தக் காலகட்டம் இந்நேரம் முழுவதும் சர்வதேச ஏகாதிபத்தியத்திடமிருந்து சுதந்திரமாக நின்றது போலக் காட்சியளித்த ருஷ்யப் புரட்சியின் வளர்ச்சியின் இறுதியான, உச்சி முடியைக் குறித்தது. இதனுல்தான் மிக மிகப் பின்தங்கியிருந்த, ஆனுல் 1905ன் அனுபவத்தின்மூலம் புரட்சிக்கு மிக நன்ருக ஆயத்தமாக இருந்த நாடு, ஒரு வர்க்கத்திற்குப் பிறகு வேறு ஒரு வர்க்கத்தை அவ்வளவு விரைவிலும் எளிதாகவும் முறையாகவும் அதிகார பீடமேற்ற முடிந்தது; பிறகு பல்வேறு அரசியல் இணைப்புக்களை ஒழித்துக் கட்டிக் கடைசியாக ருஷ்யப் புரட்சியில் மட்டுமன்றி மேற்கு ஐரோப்பியத் தொழிலாளர் புரட்சியிலும் மிக நவீன சாதனையான அரசியல் கட்டமைப்பை நிறுவ முடிந்

தது; ஏனெனில் சோவியத் ஆட்சி அதிகாரம் ருஷ்யாவில் வலுப்பெற்றது; உழைக்கும், சுரண்டப்படும் மக்களின் முழு ஆதரவையும் பெற்றது; இது அரசின் பழைய ஒடுக்கு முறை இயந்திரத்தை நிர்மூலமாக்கி அடிப்படையிலே ஒரு புதிய உயர்ந்த வடிவிலான அரசுக்கு அடிகோலியது. பாரிஸ் கம்யூன் இதன் முன்னேடி மாதிரியாகும். கம்யூன்[13] பழைய அரசு இயந்திரத்தினை அழித்தொழித்து அதனிடத்தில் நேரடியாகப் பொது மக்களின் ஆயுதப் படையினை அமர்த்தியது, முதலாளித்துவ-பாராளுமன்ற ஜனநாயகத்திற்குப் பதில் உழைப்பாளி மக்கள் ஜனநாயகத்தை நிறுவியது, சுரண்டலாளர்களை ஒதுக்கிவைத்து அவர்களது எதிர்ப்பினை முறையாக ஒடுக்கியது.

இதையேதான் இந்தக் காலகட்டத்தில் ருஷ்யப் புரட்சி நிறைவேற்றியது; ருஷ்ய புரட்சியின் இந்தத் துரிதமான, வெற்றிகரமான முன்னேற்றம் மேலும் தொடர்ந்து வெற்றிகளைத் தந்தபடியிருக்கும் என்ற எண்ணத்தில் ருஷ்யப் புரட்சியின் சிறிய முன்னணிப் படை இருந்தது. இதுவே துல்லியமாயும் அதன் தவருக இருந்தது; ஏனெனில் ருஷ்யப் புரட்சி வளர்ந்து ஆட்சி அதிகாரத்தை ஒரு வர்க்கத்திடமிருந்து இன்னொரு வர்க்கத்திடம் மாற்றி அளித்து ருஷ்ய வரம்புக்குள் மட்டிலும் வர்க்க சமரசத்தை ஒழித்துவிட்ட காலகட்டம் வரலாற்று ரீதியாக நிலவ முடிந்ததற்குக் காரணம், உலக ஏகாதிபத்தியத்தின் ராட்சசக் கொள்ளைக்காரர்கள் சோவியத் ஆட்சிக்கு எதிராக முன்னேறி வருவது தாற்காலிகமாக தடுத்து நிறுத்தப்பட்டிருந்ததே. சில நாட்களுக்குள் முடியரசு ஆட்சியைத் தூக்கியெறிந்ததும் சில மாதங்களுக்குள் முதலாளி வர்க்கத்துடன் சமரசத்துக்கான எல்லா சாத்தியப்பாடுகளையும் தீர்த்து முடித்ததும், சில வாரங்கள் நடந்த உள்நாட்டுப் போரில் முதலாளிகளின் எதிர்ப்பு முழுவதையும் சமாளித்து முறியடித்ததுமான இந்தப் புரட்சி, சோஷலிஸ்ட் குடியரசின் புரட்சி, முதலாளிகள் ஒருவரோடொருவர் ஜீவமரணப் போராட்டத்தில் கட்டுண்டு, ருஷ்யாவுக்கு எதிரான அவர்களது தாக்குதல் முடமாக்கப்பட்டதனுல்தான் ஏகாதிபத்திய வல்லரசுகள் நடுவே,

சர்வதேசக் கொள்ளைக்காரர்களிடையில், சர்வதேச ஏகாதிபத்தியத்தின் காட்டு விலங்குகளுடன் அக்கம் பக்கமாக வாழ முடிந்தது.

இதன் பிறகு நாம் மிகத் துயருடன் உணரும், நம் கண்முன் காட்சி தரும் காலகட்டம், ருஷ்யப் புரட்சிக்குப் படுநாசமான தோல்விகள், கடுமையான சோதனைகள் ஏற்பட்ட காலகட்டம், புரட்சியின் விரோதிகளுக்கு எதிராகத் துரிதமான, நேரடியான, பகிரங்கமான தாக்குதல்கள் முடிந்து அவற்றுக்குப் பதில் நாம் படுநாசமான தோல்விகளை அனுபவித்து, நம்முடையதைவிட அளவிட முடியாத அளவு பெரியதான படைகளின் முன் பின்வாங்க வேண்டிய நிலை ஏற்பட்ட காலகட்டம் தொடங்கிவிட்டது; சர்வதேச ஏகாதிபத்தியம் மற்றும் நிதி மூலதனத்தின் படைகளின் முன், கொள்ளையடித்தல், ஒடுக்குமுறை, சிறு தேசங்களை நசுக்குதல் என்ற நோக்கத்துடன் நவீன ஆயுதங்களை ஏந்திய, சிறந்த ஒழுங்கமைப்புடன் கூடிய முதலாளி வர்க்கம் முழுதும் நமக்கு எதிராகத் திரட்டியுள்ள ராணுவ வலிமையின் முன் நாம் பின்வாங்க வேண்டியிருந்தது. இந்தக் காலகட்டத்தில் நமது படைகளை அவர்களது படைகளின் மட்டத்துக்குக் கொண்டு வருவதைப் பற்றிச் சிந்திக்க வேண்டியிருந்தது; நாம் பிரம்மாண்டமான இடர்ப்பாடு மிகுந்த பணியை எதிரிட வேண்டி இருந்தது. காரியமாக எடுத்துக் கொள்ளத்தகுதியற்ற ரமானவ், கேரென்ஸ்கி ஆகியோரிலிருந்து வேறுபட்ட விரோதியை எதிர்த்து நாம் நேரடியாகப் போராட வேண்டியிருந்தது; நாம் சர்வதேச முதலாளித்துவத்தின் படைகளையும், அதன் அனைத்து ராணுவ பலத்தையும் எதிர்க்கவும், உலகக் கொள்ளைக்காரர்களுக்குமுன் நேருக்கு நேர் நிற்கவும் வேண்டியிருந்தது. சர்வதேச சோஷலிஸ்ட் பாட்டாளி வர்க்கத்தின் உதவி தாமதப்பட்டதால், இந்தச் சக்திகளுடன் மோதலை நாமே மேற்கொள்ள நேர்ந்தது; நாம் படுநாசமான தோல்வியை அடைந்தோம்.

இந்த சகாப்தம், படுநாசமான தோல்விகளின் சகாப்தம், பின்வாங்குதல்களின் சகாப்தம், இந்தச் சகாப்தத்தில் நாம் ஏகாதிபத்தியத்தின்முன் பின்வாங்கிக்கொண்டு, நமது

பிரதேசத்தில் ஒரு சிறு பகுதியினையாவது பாதுகாத்துக் கொள்ள வேண்டும்; பொதுவாக உலக நிலைமைகளில் மாறுதல்கள் ஏற்படுவதற்காகவும் ஐரோப்பியப் பாட்டாளி வர்க்கத்தின் சக்திகள் நமக்கு உதவி புரிய விரைந்து வருவதை நோக்கியும் காத்திருக்க வேண்டும்; இந்தச் சக்திகள் இருக்கின்றன, அவை முதிர்ச்சியடைந்து வருகின்றன, ஆனால் நாம் நமது விரோதியை முறியடித்தது போல அவ்வளவு எளிதாக அவற்றால் அவற்றின் விரோதியை முறியடிக்க முடியவில்லை; ருஷ்யப் புரட்சி எளிதில் தொடங்கிவிட்டது, எனினும் அது மேலும் முன்னேறுவது கடினமாக இருக்கிறது என்பதை மறப்பது மிகப் பெரிய பிரமையாகவும், மிகப் பெரிய தவறாகவும் இருக்கும். நாம் மிகவும் பின்தங்கிய, மிகவும் சிதிலமாகிப்போன அரசியல் அமைப்பிலிருந்து தொடங்கும் நிர்ப்பந்தத்தில் இருந்ததினால் இது தவிர்க்க முடியாததாக ஆயிற்று. இந்த ஐரோப்பியப் புரட்சியோ முதலாளி வர்க்கத்துக்கு எதிராகத் தொடங்க வேண்டும்; அது அளவிடமுடியாத வகையில் அதிகக் கஷ்டமான நிலைமைகளில், மிக மிகப் பெரிய பலம் கொண்ட விரோதியை எதிர்த்த போராட்டமாகும். ஐரோப்பியப் புரட்சி தொடங்குவதில் மிக அதிகக் கஷ்டம் இருக்கும். புரட்சியைத் தடுத்து நிறுத்திவரும் அமைப்பு முறையில் முதல் பிளவை ஏற்படுத்துவது அளவிட முடியாதவாறு கடினமாக இருக்கும் என்பது தெளிவு. மாறாக, ஐரோப்பியப் புரட்சி அதன் இரண்டாவது, மூன்றாவது கட்டங்களுக்குள் பிரவேசிப்பது எவ்வளவோ அதிக எளிதாக இருக்கும். இன்று உலக அரங்கில் நிலவும், புரட்சிகர வர்க்கங்களுடையவும் பிற்போக்கான வர்க்கங்களுடையவும் சக்திகளின் ஒப்புநிலைமையின் காரணமாக, அது வேறுவிதமாக இருக்க முடியாது. சரித்திரத்தின் கண்ணோட்டத்திலிருந்தன்றி, தமது சொந்த உணர்ச்சிகள், மற்றும் கோபாவேசத்தின் கண்ணோட்டத்திலிருந்தே இன்றுள்ள நிலையினை, புரட்சியின் மிகவும் நெருக்கடியான நிலையினைப் பார்ப்பவர்கள் நிகழ்ச்சிகளின் இந்தப் பிரதானத் திருப்பத்தைக் காண எப்பொழுதும் தவறிவிடுகிறார்கள், எப்பொழுதும், எல்லாப் புரட்சிகளிலும்,

துரிதமான வெற்றிகளில் இருந்து கடுமையான தோல்விகளை நோக்கி புரட்சியின் போக்கில் திடீர்த் திருப்பம் ஏற்படும் போது புரட்சியின் வளர்ச்சிக்கு மிகப் பெரிய பாதகம் விளைக்கும் போலிப் புரட்சிகரமான வாய்ச்சொல்லின் கால கட்டம் ஆரம்பமாகிவிடுகிறது என்பதை வரலாற்று அனுபவம் நமக்குப் போதிக்கிறது. ஆகவே, தோழர்களே, நம்மைத் துரிதமான, எளிதான, பூர்ணமான வெற்றிகளிலிருந்து ஆபத்தான தோல்விகளுக்குத் தள்ளிய திடீர்த் திருப்பத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டால்தான் நமது போர்த் தந்திரங்களைச் சரியாக மதிப்பிட முடியும். இந்தப் பிரச்சினை மிகவும்இடர்ப்பாடானதாயும் மிகவும் தீவிரமானதாயும் இருக்கிறது; அது புரட்சியின் தற்போதைய வளர்ச்சியில் ஏற்பட்ட திரும்பு முனையில்—இருந்து, உள்நாட்டில் எளிதான வெற்றிகளைப் பெறுவதிலிருந்து வெளியிலிருந்து ஏற்படும் அசாதாரணமான கடுமையான தோல்விகளைக் குறிக்கும் திருப்பத்தில் இருந்து எழுகிறது. முழு உலகப் புரட்சியிலும் ஏற்பட்டுள்ள திரும்பு முனையாகும் இது; ருஷ்யப் புரட்சி தன் வகைக்கு கிளர்ச்சியும் பிரசாரமும் செய்து கொண்டும், ஏகாதிபத்தியம் தக்க தருணம் பார்த்துக் காத்துக் கொண்டும் இருந்த கட்டத்திலிருந்து ஏகாதிபத்தியம் சோவியத் ஆட்சியை எதிர்த்துத் தாக்குதலைத் தொடங்கிய கட்டத்திற்கு மாறிச்சென்ற திருப்பம் இது; இந்தத் திருப்பம் மேற்கு ஐரோப்பாவின் சர்வதேச இயக்கத்தின் முன் குறிப்பாயும் ஒரு கடுமையான, முனைப்பான பிரச்சினையை எழுப்புகிறது. நிலைமையின் இந்த வரலாற்று அம்சத்தை நாம் அசட்டை செய்யாமல் இருக்க வேண்டுமானுல், கடுமையானது, ஆபாசமானது என்று அழைக்கப்படுகிற இன்றையச் சமாதானத்தில் ருஷ்யாவின் அடிப்படை நலன்கள் எவ்வாறு உருவாயின என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

அந்தச் சமாதானத்தை ஏற்க வேண்டுவதன் அவசியத்தைப் பார்க்க மறுத்தவர்களுக்கு எதிராக வாதிடும்போது, சமாதானம் செய்து கொள்ள வேண்டுமென்ற கருத்து சோர்ந்துபோன விவசாயி மக்கள், வர்க்கச் சார்பு இழந்த படையாளிகள், முதலியோரின் நலன்களை மட்டுமே பிரதி

பலிப்பதாக அறிக்கைகள் செய்யப்படுவதை நான் அடிக்கடி கேட்டிருக்கிறேன். இத்தகைய அறிக்கைகளேயும் குறிப்புகளேயும் கேட்கும்பொழுதெல்லாம் சில தோழர்கள்,—விளக்கங்களே நாடுவதோடு மட்டும் நின்றுவிடும் மக்கள், தேசிய வளர்ச்சியின் வர்க்க அம்சத்தினே மறந்துவிட்டிருப்பதைக் கண்டு நான் எப்பொழுதும் அதிசயப்பட்டிருக்கிறேன். பாட்டாளி வர்க்கத்தின் கட்சி, ஆட்சி அதிகாரத்தினே மேற்கொண்ட போது, பாட்டாளி வர்க்கம், அரைப் பாட்டாளி வர்க்கம், அதாவது ஏழை விவசாயிகள் (அதாவது ருஷ்யாவின் பெரும்பான்மையான விவசாயிகள்) ஆகியோரின் இணைப்பு மட்டுமே ருஷ்யாவில் அரசாங்கத்தை சோவியத்துகளின் புரட்சிகர ஆட்சி அதிகாரத்திடம் மக்களில் பெரும்பான்மையினரின், உண்மையான பெரும்பான்மையினரின் ஆட்சி அதிகாரத்திடம் ஒப்படைக்க முடியும் என்பதையும் இந்த இணைப்பு இல்லேயேல் ஆட்சியதிகாரத்தினே—குறிப்பாக, வரலாற்றின் கடினமான திருப்பங்களில்—ஸ்தாபிக்க முயல்வது பொருத்தமற்றது என்பதையும் கருத்தில் கொள்ளவில்லே போலும்! நாம் எல்லோரும் ஏற்றுக்கொண்ட இந்த யதார்த்த உண்மையினே இப்போது கைவிட்டு, சோர்வடைந்த விவசாயிகள் பற்றியும் வர்க்கச் சார்பு இழந்த படையாளிகள் பற்றியும் கேவலமாகக் குறிப்பிடுவதுடன் திருப்தியடைய முடியும் போலும்! விவசாயிகள், வர்க்கச் சார்பு இழந்த படையாளிகளின் சோர்வடைந்த நிலேயைப் பொறுத்தவரையில், இந்த நாடு எதிர்த்துப் போராடுமென்றும் ஏழை விவசாயிகள் தங்களுடைய சக்திகளே எந்த அளவுக்குப் போராட்டத்தின் திசையில் திருப்ப முடியுமோ அந்த அளவுக்குத்தான் அவர்கள் எதிர்ப்பினேக் காட்ட முடியும் என்றும் நாம் சொல்ல வேண்டும்.

அக்டோபரில் நாம் ஆட்சி அதிகாரத்தினேக் கைப்பற்றும் தறுவாயில், இருந்த போது நிகழ்ச்சிகள் தவிர்க்க முடியாத வகையில் இதற்கு இட்டுச் சென்றன என்பதும் சோவியத்துகளில் போல்ஷிவிசத்தை நோக்கி ஏற்பட்ட திருப்பம் நாடு முழுவதிலும் உண்டான திருப்பத்தைக் குறித்தது என்பதும் போல்ஷிவிக்குகள் தவிர்க்க முடியாத வகையில் ஆட்சி

அதிகாரம் மேற்கொள்ள வேண்டும் என்பதும் தெளிவாக இருந்தன. இதை நன்ருக உணர்ந்து அக்டோபரில் நாம் ஆட்சி அதிகாரம் மேற்கொண்டபோது, ஆட்சி அதிகாரம் பாட்டாளி வர்க்கம் மற்றும் ஏழை விவசாயிகளுக்கு மாற்றி வழங்கப்பட்டது என்றும், சமாதானத்திற்கான அதன் தீவிரமான போராட்டத்திற்கும்பெரிய நிதிமூலதனத்தை எதிர்த்துத் தொடர்ந்து போராட வேண்டுமென்ற அதன் செயல் முனைப்புக்கும்—இது உங்களுக்குத் தெரியும்—விவசாயிகள் ஆதரவு கொடுப்பார்கள் என்பதைப் பாட்டாளி வர்க்கம் அறிந்திருந்தது என்றும் நாம் நமக்கும் எல்லா மக்களுக்கும் மிகவும் தெளிவாகவும் திண்ணமாகவும் சொன்னேம். இந்த விஷயத்தில் நாம் தவறு எதுவும் செய்யவில்லை, சிறு விவசாயிகளின் ஒரு நாட்டினை, ஐரோப்பிய, மற்றும் உலகப் புரட்சிக்கு இவ்வளவு பெரிய சேவை புரிந்திருக்கிற நாட்டை, கடுமையான, மிகவும் கடினமான சூழ்நிலையில், அதாவது மேற்கு ஐரோப்பியப் பாட்டாளி வர்க்கத்தின் உதவி கிடைப்பதில் நிச்சயமாகத் தாமதம் ஏற்பட்டுள்ளது என்ற நிலையில்—இந்த உதவி நமக்குக் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை, என்ற போதிலும் வேலைநிறுத்தங்கள் போன்ற நிகழ்ச்சிகள் இதை நிரூபிக்கின்றன—தொடர்ந்து போராடும்படி கோர முடியாது என்ற மறுக்க முடியாத உண்மையில் இருந்து, வர்க்கச் சக்திகள் வர்க்க அணிசேர்க்கைகள் எனும் கருத்துருவைப் பற்றி நிற்கும் எவரும் தப்பி நழுவி விட முடியாது. இதனுல்தான் விவசாயி மக்கள் சோர்ந்து விட்டார்கள் என்ற குறிப்புகள், தக்க வாதங்கள் எவையும் இல்லாதவர்களால், முற்றிலும் புகலின்மை காரணமாக இத்தகைய வாதங்களை நாடுபவர்களால் செய்யப்படுகின்றன என நான் சொல்லுகிறேன். வர்க்க உறவுகளை மொத்தமாக, அவற்றின் முழுமையில், புரிந்து கொள்ளவும் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிக்கும் பெரும்பான்மையான விவசாயிகளுக்கும் இடையிலான உறவுகளைப் புரிந்து கொள்ளவும் ஆற்றல் சிறிதும் இல்லாதவர்கள் இவர்கள்; வரலாற்றின் திடீர்த் திருப்பம் ஒவ்வொன்றிலும் நாம் வர்க்க உறவுகளை, எல்லா வர்க்கங்களின் உறவுகளை, தனிப்பட்ட உதாரணங்கள், தனி

நிகழ்ச்சிகளைப் பொறுக்கி எடுக்காமல், முற்றுக மதிப்பிடும் போதுதான் உத்தேச மெய்நடப்புகள் பற்றிய பகுப்பாய் விஞல் உறுதியாக ஆதரிக்கப்படுகிறோம். புரட்சிகரப் போர் நமக்கு முற்றிலும் அசாத்தியமாக இருக்கிற நிலையில் ருஷ்ய முதலாளி வர்க்கம் நம்மை இத்தகைய போருக்கு ஏன் தூண்டி வருகிறது என்பதை நான் முற்றும் நன்ருக உணர் கிறேன். இது முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்களுக்கு அத்தியாவசியமானது.

இந்த நபர்கள் ஆபாச சமாதானம் என்று கூக்குரல் போட்டுக்கொண்டு, சைனியத்தை இன்றுள்ள நிலைக்குக் கொண்டுவந்தவர்கள் யார் என்பது பற்றி ஒரு சொல்கூடக் கூருதிருக்கும் போது, அவ்வாறு செய்தவர்கள் தியேலொ நரோதா ஆதரவாளர்கள்[14], த்ஸெரெத்தேலி, செர்னேவ் வகை மென்ஷிவிக்குகள், அவர்களைப் பின்பற்றுகிறவர்கள் உடன் சேர்ந்த முதலாளி வர்க்கத்தினர் தான் என்று நான் நன்ருக உணர்கிறேன் (கரவொலி); இந்த முதலா ளித்துவ வர்க்கத்தினர் தாம் புரட்சிப் போரைப்பற்றிக் கூக்குரலிடுகின்றனர் என்பதை நான் நன்ருக உணர்கிறேன். அவர்களது வர்க்க நலன்களுக்கு இது உகந்தது; சோவியத் ஆட்சி ஒரு தவருன நடவடிக்கையில் இறங்க வேண்டும் என்ற அவர்களது விருப்பத்துக்கு இது உகந்தது. தங்களுடைய செய்தித்தாள்களில் புரட்சி எதிர்ப்புக் கட்டுரைகளை ஒரு புறம் நிரப்பி வருபவர்கள் இதைச் செய்வதில் அதிசய மில்லை... (''அவை எல்லாம் ஒடுக்கப்பெற்றுவிட்டன'' என்ற குரல்கள்.) துரதிருஷ்டவசமாக எல்லாம் ஒடுக்கப்பெற வில்லை; ஆனுல் நாம் எல்லாவற்றையும் மூடிவிடுவோம். (கரவொலி). புரட்சி எதிர்ப்பாளர்கள், முதலாளித்துவ வர்க்கத்தின் ஆதரவாளர்கள், இந்த வர்க்கத்தோடு உடனு ழைப்பவர்கள் ஆகியோர் தங்களுடைய முதலாளித்துவ அபி னியால் மக்களை மயக்குவதற்குத் தங்களுடைய செல்வ ஏக போகத்தைப் பயன்படுத்துவதை அனுமதிக்கும் பாட்டாளி வர்க்கத்தைப் பார்க்க முடியுமா? இத்தகைய பாட்டாளி வர்க்கம் இல்லை. (கரவொலி)

ஆபாச சமாதானத்தைப் பற்றி இப்படிப்பட்ட பிரசு

ரங்கள் கூக்குரலை, ஓலத்தை, அலறலை மட்டுமே எழுப்பும் என்பதை நான் பூர்ணமாகப் புரிந்து கொள்கிறேன். இந்தப் புரட்சிப்போரை ஆதரிப்பவர்கள்—காடேட்டுகள்[15] முதல் வலதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள் வரை—யார் என்பதை நான் நன்கு அறிவேன், ஜெர்மானியர்கள் முன்னேறுகையில் அவர்களை வரவேற்று ''இதோ ஜெர் மானியர்கள்'' என்று வெற்றிக் களிப்புடன் சொல்லி, பின்னர் ஜெர்மன் ஏகாதிபத்தியப் படையெடுப்பாளர் கைப்பற்றிவிட்ட பிரதேசங்களில் தங்களுடைய அதிகாரிகள் ராணுவ உடையில் பகட்டித் திரிய அனுமதி கொடுக்கும் மக்கள் இவர்கள். இல்லவே இல்லை, இந்த முதலாளிகள், இந்த சமரசவாதிகள் புரட்சிப் போர் பற்றிய பிரசாரம் நடத்திவருவதைக் கண்டு நான் சற்றும் அதிசயப்படவில்லை. அவர்கள் சோவியத் ஆட்சியை ஒரு கண்ணியில் சிக்க வைக்க விரும்புகிறார்கள். இந்த முதலாளிகள், சமரசவாதிகளுடைய உள்ளெண்ணம் வெளிப்பட்டுவிட்டது. அவர்களை நாம் கண்டிருக்கிறோம், இவர்களுடைய நடமாடும் மாதிரிகளை இப்போதும் பார்க்கிறோம்; இதோ உக்ரேனில் உக்ரேனிய கேரென்ஸ்கிகள், உக்ரேனிய செர்னோவ்கள், உக்ரேனிய த்ஸெரெத்தேலிகள்—இதோ வின்னிச்சேன்கோவைப் போன்ற கனவான்கள் இருக்கின்றனர். உக்ரேனிய கேரென்ஸ்கிகள், செர்னோவ்கள், தெஸெரெத்தேலிகள் ஆகிய இந்தக் கனவான்கள், ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகளுடன் தாங்கள் செய்துகொண்ட சமாதானத்தை மக்களிடமிருந்து மறைத்து வைத்தார்கள்; இப்போது அவர்கள் ஜெர்மன் துப்பாக்கிகளின் உதவியுடன் உக்ரேனில் சோவியத் ஆட்சியைக் கவிழ்க்க முயல்கிறார்கள். இதைத்தான் அந்த முதலாளிகளும் அந்தச் சமரசவாதிகளும் அவர்களது உடந்தையாளர்களும் செய்துள்ளனர். இதைத்தான் அந்த உக்ரேனிய முதலாளிகளும் சமரசவாதிகளும் செய்திருந்தார்கள்; தங்கள் இரகசிய உடன்படிக்கைகளை மக்களிடமிருந்து மறைத்து வைத்தார்கள், இப்போதும் மறைத்து வைத்திருக்கிறார்கள் அவர்கள்; ஜெர்மன் துப்பாக்கிகளின் உதவியுடன் சோவியத் ஆட்சியினைத் தாக்குகிறார்கள் அவர்கள்; அவர்களின் உதார

ணம் நம் கண் முன் உள்ளது. இதைத்தான் ருஷ்ய முதலாளித்துவ வர்க்கத்தினர் விரும்புகிருர்கள், இத்திசையில்தான் சோவியத் ஆட்சியைத் தள்ளிவிட முதலாளித்துவ ஆமாம் சாமிகள் தெரிந்தோ தெரியாமலோ முயல்கிருர்கள்: வலிமை மிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து ஓர் ஏகாதிபத்தியப் போரில் இத்தருணத்தில் சோவியத் ஆட்சி இறங்க முடியாது என்பது அவர்களுக்குத் தெரியும். இதனுல்தான் இந்தச் சர்வதேச நிலையில், இந்தப் பொதுவான வர்க்கச் சூழ்நிலையில் மட்டுமே, இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சிக் கட்சியினரைப்[16] போன்றவர்கள் புரிந்துள்ள தவறின் ஆழத்தை நாம் புரிந்துகொள்ள முடியும்; இவர்கள் இடர்ப்பாடான காலங்களில் எல்லாப் புரட்சிகளின் வரலாற்றிலும் பொதுவாக நிலவும் தத்துவத்தில் வசமிழந்து விட்டார்கள்; இந்தத் தத்துவம் பாதி விரக்தித்தன்மையும் பாதி வெற்றுச் சொல்லுமாகும்; இந்தத் தத்துவத்தின்படி ஒருவர் யதார்த்த நிலை பற்றிய நிதானமான கருத்துடன், வர்க்க சக்திகளின் நோக்கு நிலையில் இருந்து உள்நாட்டு, வெளிநாட்டு விரோதிகள் சம்பந்தமாகப் புரட்சியின் கடமைகளை நிர்ணயிப்பதற்குப் பதிலாக மிகவும் கடினமான ஆபத்தான பிரச்சினையை உணர்ச்சி வேகத்தினுல் தூண்டப்பட்டு, உணர்ச்சியின் நோக்கு நிலையில் இருந்து மட்டுமே, தீர்க்குமாறு கோரப்படுகிருர். இந்தச் சமாதானம் நம்பத்தகாத அளவுக்குக் கடுமையானது, மானக்கேடானது. எனது அறிக்கைகளிலும் பேச்சுக்களிலும் பல கடுந்தோல்விகளுக்குப் பிறகு பிரஷ்ய, ஜெர்மன் மக்கள்மீது படையெடுப்பாளனுகிய நெப்போலியன் திணித்த டில்ஸிட் சமாதானத்துடன் இதைப் பல தடவை நான் ஒப்பிட்டுக் காட்டியுள்ளேன். ஆம், இந்தச் சமாதானம் மிக மோசமான தோல்வி, அது சோவியத் ஆட்சிக்கு அவமானகரமானது; ஆனுல் நீங்கள் இதிலிருந்து தொடங்கி, இதோடு வரையறுத்துக் கொண்டு நின்ருல், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மகத்தான பிரச்சினைக்குப் பரிகாரம் காணும் முயற்சியில் உணர்ச்சிகளைக் கிளப்பி, அதிருப்தியினைத் தூண்டினுல், சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களின் கட்சி ஒருமுறை மாட்டிக்கொண்டது

போன்ற மிகவும் கேலிக்கூத்தான பரிதாபகரமான நிலையில் நீங்களும் மாட்டிக்கொள்வீர்கள் (கரவொலி); 1907ல் இருந்த, சில அம்சங்களில் இன்றுள்ளதைப் போன்ற சூழ் நிலையில் அதே மாதிரியாக அந்தக் கட்சி புரட்சியாளர் களின் உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டது. அப்பொழுதைய நிலைமை எப்படி இருந்தது என்று சற்று நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். 1906—1907ல் நமது புரட்சி மிகக் கடு மையான தோல்வியுற்றது, ஸ்தலீப்பின் நம்மீது மூன்றுவது டூமாவைப்[17] பற்றிய சட்டங்களைச் சுமத்தினர்; இவற்றின் பிரகாரம் மிக வெறுப்பிற்குரிய இந்தப் பிரதிநிதித்துவ அமைப்பில் மிகக் கஷ்டமான, மானங்கெட்ட நிலைமை களில் நாம் பணியாற்ற வேண்டியிருந்தது; எனினும் இப் பிரச்சினையைப் பற்றி நமது கட்சி, குறுகியகால ஊசலாட் டத்திற்குப் பிறகு (இந்தப் பிரச்சினையில் ஊசலாட்டம் இன் றுள்ளதைவிட அதிகமாக இருந்தது) இப்பிரச்சினையைப் பின்வருமாறு முடிவு செய்தது: உணர்ச்சி வசப்பட்டிருக்க நமக்கு உரிமையில்லை என்றும், மானங்கெட்ட மூன்றும் டூமா பற்றி நமது கோபாவேசமும் அதிருப்தியும் எவ்வளவு அதிகமாக இருப்பினும் சரி, இங்கே நிகழ்வது வெறும் தற் செயல் அல்ல, மாருக வளர்ந்து வரும் வர்க்கப் போராட் டத்தின் வரலாற்று அவசியம் என்பதையும் இந்த வர்க்கப் போராட்டம் தொடர்ந்து இயங்கப் போதிய வலு இன்றி இருந்தபோதிலும் நம்மீது திணிக்கப்பெற்றுள்ள மானங் கெட்ட நிலைமைகளில்கூட இது பலத்தைத் திரட்டும் என் பதையும் நாம் அங்கீகரிக்க வேண்டும். நமது தீர்மானம் சரி என்பது நிருபிக்கப்பட்டது. புரட்சிகரமான வாய்ச்சொற் களின் மூலமும், நியாயம் கோரி வேண்டுகோள்கள் விடுத் தும் மக்களைக் கவர முயன்றவர்களுக்குச் சிந்தனை ஆற்ற லும் கருத்துக்களும் கொண்டிருந்த எந்தப் புரட்சியாளனும் மறக்க முடியாத அத்தகைய படிப்பினை கிடைத்தது.

துரிதமான, எளிதான முன்னேற்றத்தை உத்தரவாதப் படுத்தும் முறையில் புரட்சிகள் தங்குதடையின்றிச் செல் வதில்லை. தோல்விகளின் கடுமையான காலகட்டத்தினை அனு பவியாத மாபெரும் புரட்சி எதுவும், தேசிய அளவில் கூட

ஏற்பட்டதில்லை; வெகுஜன இயக்கம், வளர்ந்துவரும் புரட்சிகள் போன்ற முக்கியமான பிரச்சினையை அணுகும் போது ஒரு புரட்சியாளன் சமாதானத்தை ஆபாசம், மானக்கேடு என்று பிரகடனம் செய்து இதை ஏற்க முடியாது என்று கூறுவது சரியல்ல; வெறும் கிளர்ச்சிச் சொல்லடுக்குகளைப் பொழிந்தால் மட்டும் போதாது, இந்தச் சமாதானத்தின் காரணமாக நம்மீது கடிந்துரைகளைப் பொழிந்தால் மட்டும் போதாது—இது நன்கறிந்த புரட்சியின் அரிச்சுவடி, எல்லாப் புரட்சிகளின் அனுபவம். 1905க்குப் பிறகு பெறப்பட்ட அனுபவத்தால் நாம் எதிலாவது செழுமையுடன் இருக்கிறோம் என்றால், உலக சோஷலிஸ்டுப் புரட்சியைத் தொடங்கும் மிகவும் கடினமான, மதிப்புமிக்க கடமையினை ருஷ்யத் தொழிலாளி வர்க்கமும் ஏழை விவசாயிகளும் ஏன் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு ஏதாவது முகாந்திரம் இருக்குமானால், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், வரலாற்றுச் சூழ்நிலைமைகள் ஒரு விசேஷமான முறையில் அமைந்ததின் விளைவாக ருஷ்ய மக்கள் இரு மாபெரும் புரட்சிகளை நடத்த முடிந்ததே அதற்குக் காரணமாகும். ஆகவே இந்தப் புரட்சிகளின் அனுபவத்திலிருந்து படிப்பினை பெற வேண்டும்; ஒரு நாட்டிற்கும் இன்னொரு நாட்டிற்கும் இடையேயுள்ள வர்க்கத் தொடர்புகளின் மாற்றங்களைக் கருத்தில் கொண்டே நாம் தற்போது போரை ஏற்கும் நிலையில் இல்லை என்பதைத் திட்டவட்டமாக நிரூபிப்பது சாத்தியம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்; நாம் இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்; நமக்குக் கிடைக்கும் ஒய்வு எதுவாயினும் சரி, சமாதானம் எவ்வளவு உறுதியற்றதாக இருப்பினும் சரி, அது எவ்வளவு குறுகியதாக இருப்பினும் சரி, அது எவ்வளவு கடுமையாகவும் கேவலமாகவும் இருப்பினும் சரி, அது போரைவிட நல்லது; ஏனெனில் அது மக்களுக்கு மூச்சுவிட இடமளிக்கிறது, அது கூக்குரலிடச் சந்தர்ப்பம் கிட்டிய இடங்களிலெல்லாம் குறிப்பாக, ஜெர்மானியர் பாதுகாப்பில் உள்ள பிடிபட்ட பிரதேசங்களில், கூக்குரல் போடுகிற முதலாளி வர்க்கத்தினர் செய்துள்ளதைத் திருத்த வாய்ப்பளிக்கிறது என்றெல்

லாம் நமக்கு நாமே சொல்லிக்கொள்ள வேண்டும். (கரவொலி.)

இராணுவம் சீர்குலைந்து போனதற்குப் பொறுப்பாளிகள் போல்ஷிவிக்குகள் என்றும் தற்போது சைனியமே இல்லை, இதற்காக போல்ஷிவிக்குகள்மீதே குற்றம் சாட்டப்பட வேண்டும் என்றும் முதலாளி வர்க்கத்தினர் கூக்குரலிடு கிறார்கள்; ஆனால், தோழர்களே, சென்ற காலத்தைப் பார்ப் போம், முதற்கண் நமது புரட்சியின் வளர்ச்சியைப் பார்ப் போம். நமது சைனியத்தின் துறந்தோட்டமும் சீர்குலைவும் புரட்சிக்கு நெடுங்காலத்துக்கு முன்பே, 1916ல், தொடங் கியது என்பதும் சைனியத்தைப் பார்த்த எவரும் இதை ஒப்புக்கொள்ள வேண்டும் என்பதும் உங்களுக்குத் தெரி யாதா? இதைத் தடுத்து நிறுத்த நமது முதலாளி வர்க்கத்தினர் என்ன செய்தார்கள்? அந்தச் சமயத்தில் ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து விமோசனம் பெறுவதற்குக் கிடைத்த ஒரே வாய்ப்பு அவர்களிடம் இருந்தது என்பதும், இந்த வாய்ப்பு மார்ச்-ஏப்ரல் மாதங்களில் ஏற்பட்டது என் பதும் அப்போது சோவியத் அமைப்புகள் முதலாளிகளுக்கு எதிராக ஒரே கையசைப்பினால் அதிகாரத்தை மேற்கொள்ள முடிந்திருக்கும் என்பதும் தெட்டத் தெளிவாக இல்லையா? அன்று சோவியத்துகள் ஆட்சி அதிகாரத்தை மேற்கொண் டிருந்தால், முதலாளித்துவ, குட்டிமுதலாளித்துவ படிப் பாளிகள் சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களுடனும் மென்ஷி விக்குகளுடனும் சேர்ந்து, மக்களை ஏய்க்கவும் இரகசிய உடன்படிக்கைகளை மறைத்து வைக்கவும் படையினைத் தாக் குதலுக்கு இட்டுச் செல்லவும் கேரென்ஸ்கிக்கு உதவாமல்—சைனியத்தின் உதவிக்கு விரைந்திருந்தால், அதற்கு ஆயு தங்களையும் உணவுப் பொருள்களையும் வழங்கியிருந்தால், முத லாளித்துவ வர்க்கத்தைத் தாய் நாட்டிற்கு—வியாபாரி களின் நாட்டிற்கல்ல, மக்களைக் கொலை செய்ய உதவும் உடன் பாடுகளின் நாட்டிற்கல்ல (கரவொலி.)—உதவி புரி யும்படி நிர்ப்பந்தித்திருந்தால் தாங்களும் உதவியில் பங் காற்றியிருந்தால், சோவியத்துகள் உழைப்பாளிகள், தொழி லாளர்களின் அனைத்து உழைக்கும் மக்களின் தாய் நாட்

டிற்கு உதவும்படி முதலாளிகளை நிர்ப்பந்தித்து, உடைகள், காலணிகளின்றியும் உணவில்லாமலும் தவிக்கின்ற படையாளிகளுக்கு உதவி கொடுத்திருந்தால், படைக்கு ஓய்வு தரவும் ஒருமுகமான ஆதரவு பெறவும் போதுமான பத்து மாத இடை நேரம் நமக்கு ஒருவேளை கிடைத்திருக்கலாம்; அப்பொழுது படை போர்முனையிலிருந்து ஓரடிகூடப் பின் வாங்கவேண்டிய தேவை இன்றியே இரகசிய உடன்படிக்கைகளைக் கிழித்தெறிந்து பொதுவான ஜனநாயக சமாதான யோசனையினை முன்வைத்திருக்கலாம், ஓரடிகூடப் பின்வாங்காமல் போர்முனையில் நின்றிருக்கலாம். இதில்தான் தொழிலாளரும் விவசாயிகளும் விருப்புடன் ஆதரித்து ஏற்றுக் கொள்ளக் கூடிய சமாதானத்திற்கான வாய்ப்பு இருந்தது. இதுதான் தாய் நாட்டின்—ரமானவ், கேரென்ஸ்கி, செர்ஞேவ் போன்றவர்களின் தாய் நாடல்ல, இரகசிய உடன்பாடுகளின் தாய் நாடல்ல, துரோகம் செய்யக்கூடிய முதலாளிகளின் தாய் நாடல்ல—உழைக்கும் மக்களுடைய தாய் நாட்டின் பாதுகாப்புக்குரிய போர்தந்திரமாக விளங்கியிருக்கும். போரிலிருந்து புரட்சிக்கும், ருஷ்யப் புரட்சியிலிருந்து உலக சோஷலிசத்திற்குமான மாற்றம் இவ்வளவு கடுமையான சோதனைகளோடு நடைபெறுவதற்குப் பொறுப்பாளி இதுவே. நம்மிடம் படை இல்லை என்பது, நமக்குத் தெரிந்திருந்தும் படையினை நீடித்து வைத்திருப்பது சாத்தியமல்ல என்பது, நமக்குத் தெரிந்திருந்தும் புரட்சிப் போர் என்பது போன்ற யோசனையை முன்வைப்பது பொருளற்ற சொல்லடுக்கு மட்டுமேயாகும்; நிலைமையைப் பற்றி அறிந்தவர்கள், படைகள் கலைக்கப்படுவது பற்றிய ஆணை கற்பனையால் உண்டாக்கப்பட்டதல்ல, அது தெட்டத் தெளிவான தேவையின் விளைவு, காரணம் படையினை நீடித்து வைத்திருப்பது அசாத்தியமாகிவிட்டது, என்பதைப் பார்க்காமல் இருக்க முடியாது. படையினை நீடித்து வைத்திருப்பது அசாத்தியமாக இருந்தது. படைகள் போராட முடியாது, போராடப் போவதில்லை என்று அக்டோபர் புரட்சிக்கு முன் கூறிய, போல்ஷிவிக்கல்லாத அதிகாரியின்[18] கூற்று சரியானதென்று மெய்ப்பிக்கப்பட்டது. முதலாளித்துவ வர்க்கத்

தினருடன் பல மாதங்கள் பேரம் பேசியதும் போரைத் தொடர்ந்து நடத்த வேண்டுவதின் அவசியத்தைப் பற்றிய எத்தனையோ பேச்சுகளும் இந்த நிலைக்குத்தான் இட்டுச் சென்றன; இந்தப் பேச்சுக்களை நிகழ்த்திய பல புரட்சியாளர் களின் அல்லது சில புரட்சியாளர்களின் உன்னதமான உணர்ச்சிகள் அவர்களுக்கு என்ன ஆணை பிறப்பித்த போதிலும் சரி, இவை வெறும் புரட்சிச் சொல்லடுக்குகளே என் பது நிரூபணமாயிற்று. இவை சர்வதேச ஏகாதிபத்தியவாதி களுக்குச் சாதகமாக இருந்தன; பிரேஸ்த் ஒப்பந்தத்தில் கை யொப்பமிடாத கால முதலான நமது போர்த்தந்திர அல்லது அரசுறவுத் தந்திரத் தவறுக்குப் பிறகு அவர்கள் கொள்ளை யிட்ட அதே அளவுக்கோ அல்லது மீண்டும் அதற்கும் அதிகமாகவோ கொள்ளையிடும் வாய்ப்பை அவர்களுக்கு அளித்தன. ஓரளவு நீண்ட இடைக்கால ஓய்வு கிடைத்திருக் குமானால், படையின் களைப்பகற்றி வலுப்படுத்தலும் உழைப் பாளிகளின் நலன்களும் எல்லாவற்றையும் விட அதிக முக் கியமானவை என்றும் இதன் பொருட்டு சமாதானம் செய்து கொள்ள வேண்டும் என்றும் நாம் சமாதானம் செய்து கொள்வதை எதிர்த்தவர்களிடம் கூறியபோது அவர்கள் ஓய்வுக் காலம் இருக்க முடியாது என்று சாதித்தார்கள்.

ஆனால் நமது புரட்சிக்கும் முந்திய புரட்சிகள் அனைத்திற் கும் உள்ள வேறுபாடு என்னவென்றால் அது பொது மக் களிடையில் கட்டவும் படைக்கவுமான விருப்பத்தை எழச் செய்துள்ளது, இப்பொழுது நெடுந்தொலைவிலுள்ள கிராமங் களில் இருக்கும் உழைப்பாளி மக்கள், ஜார்களாலும், நிலப் பிரபுக்களாலும், முதலாளிகளாலும் இழிவு செய்யப் பெற்று மிதித்துத் துவைக்கப்பட்டு ஒடுக்கப்பட்டுக் கிடந்த மக்கள், எழுச்சியுற்றுள்ளனர்; புதிய முறையில் வாழ்க்கையை அமைக் கும் கிராமப்புறத்துப் புரட்சி நடைபெறும் இந்த நாட் களில்தான் புரட்சியின் இந்தக் காலகட்டம் நிறைவுறுகிறது. இந்த ஓய்வுக்காக, இது எவ்வளவு குறுகியதாக, சிறியதாக இருப்பினும் சரி, வாட்களை ஆட்டிக் கொண்டு நம்மைப் போராட அழைக்கும் முதலாளித்துவ சூரப்புலிகளின் நலன் களைக் காட்டிலும் உழைப்பாளி மக்களின் நலன்களை நாம்

மேலானவையாகக் கருதியபடியால் இந்த உடன்படிக்கை யில் கையொப்பமிடுவது நமது கடமையாக இருந்தது. இதையே புரட்சி நமக்குப் போதிக்கிறது. நாம் அரசுறவுத் தந்திரத் தவறுகள் செய்யும்போது, ஜெர்மன் தொழிலாளர் நமக்கு நாளை உதவ வருவார்கள் என்று நாம் உத்தேசிக் கும் போது, லீப்க்னெஹ்ட் உடனடியாக வெற்றி பெற்று விடுவார் என்று நாம் எதிர்பார்க்கும் போது (எப்படியும் லீப்க்னெஹ்ட் வெற்றி பெறுவார், தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வளர்ச்சியில் இது தவிர்க்க முடியாதது என்பது நமக்குத் தெரியும் (கரவொலி)), இதன் பொருள் கடின மான சோஷலிஸ்ட் இயக்கத்தின் புரட்சி கோஷங்களை நாம் யோசனையின்றிப் பயன்படுத்தும் போது அவை வெறும் சொல்லடுக்குகளாக மாறிவிடுகின்றன என்பதே என்பதைப் புரட்சி நமக்குப் போதிக்கிறது; ஜெர்மனியின் சோஷலிஸ்ட் இயக்கத்திற்கு உதவ மிகப் பெரிய தியாகத்தினைச் செய்ய மறுக்கும் உழைப்பாளி மக்களின் பிரதிநிதி அல்லது நேர் மையான தொழிலாளி ஒருவன்கூட இல்லை; காரணம், போர் முனையில் இருந்த இந்தக் காலகட்ட முழுதிலும் ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகளையும் ஜெர்மன் கட்டுப்பாட்டால் வாதையுற்று, பெரும்பாலும் நம்மீது பரிவு கொண்டிருக்கும் வீரர்களையும் இனம் பிரித்துக் காண அவர்கள் கற்றுக்கொண் டுள்ளனர். இதனால் தான் ருஷ்யப் புரட்சி நமது தவறை நடைமுறையில் திருத்திவிட்டது, நமக்கு ஓய்வு கொடுத்த தின் மூலம் இதைத் திருத்திவிட்டது என்று நான் கூறு கிறேன். இது மிக மிகக் குறுகியதாக இருக்கலாம்; எனினும் சோர்வடைந்த, பட்டினியில் வாடும் படை தனக்கு களைப் பகற்றி வலுவடைய ஒரு வாய்ப்பு கிடைத்தது என்ற உண் மையினை நன்கறிந்து கொள்ளும் மிகக் குறுகிய ஓய்வுக் காலத்திற்கான சாத்தியம் இதன் விளைவாக ஏற்பட்டது. பழைய ஏகாதிபத்தியப் போர்களின் காலகட்டம் முடிந்து விட்டது, புதிய போர்கள் வெடிப்பதால் ஏற்படும் புதிய பயங்கரங்களால் நாம் அச்சுறுத்தப்படுகிறோம் என்பது தெளிவு; ஆனால் இத்தகைய போர்க் காலகட்டங்கள் பல வரலாற்றுச் சகாப்தங்களில் இருந்தன; அவை எப்போதும்

முடிவுறும் தறுவாயில் மிகவும் கொடுமையானவையாக ஆயின. இதைப் பெத்ரோகிராதிலும் மாஸ்கோவிலும் நடக்கும் கூட்டங்களில் மட்டும் புரிந்துகொண்டால் போதாது; கிராமப் புறங்களிலுள்ள லட்சோபலட்சம் மக்கள் இதைப் புரிந்துகொள்ள வேண்டும்; போரின் எல்லாப் பயங்கரங்களையும் கண்டனுபவித்து போர் முனையிலிருந்து திரும்பியுள்ள அதிக அறிவொளிபெற்ற கிராமத்தார் மற்றவர்களுக்கு இதைப் புரிந்து கொள்ள உதவ வேண்டும்; மிகப் பெரும் திரளான விவசாயிகளும் தொழிலாளர்களும் புரட்சி அணியின் அவசியத்தை உறுதியாகப் புரிந்து கொள்ள வேண்டும்—பின்னர் அவர்கள் நாம் சரியாகச் செயல்பட்டோம் என்று நிச்சயமாயும் சொல்வார்கள்.

உக்ரேனுக்கும் பின்லாந்திற்கும் நாம் துரோகம் இழைத்துவிட்டோம் என்று நம்மிடம் சொல்லப்படுகிறது—என்ன கேவலம்! ஆனல் நாம் பின்லாந்திலிருந்து—புரட்சியின் தொடக்கத்துக்குமுன்பு நாம் இந்த நாட்டோடு ஓர் எழுதாத உடன்படிக்கை[19] செய்துகொண்டோம்; இப்பொழுது அதிகார பூர்வமான உடன்படிக்கை செய்து கொண்டிருக்கிறோம்[20]—துணிக்கப்பட்டு நிற்கும் நிலை ஏற்பட்டது. உக்ரேனை நாம் சரணடையச் செய்கிறோம் என்றும் செர்னேவ், கேரென்ஸ்கி தெஸெரெத்தேலி முதலியோர் அதை நாசம் செய்யப்போகிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது; ''நீங்கள் துரோகிகள், உக்ரேனுக்குத் துரோகம் விளைவித்துவிட்டீர்கள்'' என்று நம்மிடம் சொல்லப்படுகிறது! நான் கூறுகிறேன்: தோழர்களே, புரட்சியின் வரலாற்றில் நான் போதிய அனுபவம் பெற்றிருக்கிறேன்; அதனல் உணர்ச்சி வசப்பட்டு, தெளிவாகச் சிந்திக்கும் ஆற்றலை இழந்துவிட்ட மக்களின் பகைமை நிறைந்த பார்வைகளும் கூக்குரல்களும் என்னைத் திகைக்க வைக்க முடியாது. நான் உங்களுக்கு ஓர் எளிய உதாரணம் தருகிறேன். இரவில் இரண்டு நண்பர்கள் உலாவச் செல்கிறார்கள் என்றும் அவர்களைப் பத்துப் பேர்கள் தாக்குகிறார்கள் என்றும் வைத்துக்கொள்ளுங்கள். அந்தப் போக்கிரிகள் ஒருவனைத் தனியாகப் பிரித்துவிட்டால் மற்றவன் என்ன செய்வது? அவனல் உதவி செய்ய முடியாது, அவன்

ஓடிவிட்டால் துரோகியாகிவிடுவாஞ?*ஆஞல் நாம் தனிப்பட்ட நபர்களேக் குறித்தோ அல்லது நேரடி உணர்ச்சிகள் பற்றிய பிரச்சினேகள் தீர்க்கப்படும் துறைகளேக் குறித்தோ பேச வில்லே என்று வைத்துக்கொள்வோம்; ஒவ்வொன்றிலும் நூரு யிரம் ஆள் பலம் கொண்ட ஐந்து படைகள் இரு நூரு யிரங்கள் கொண்ட ஒரு படையைச் சுற்றி வளேத்திருக் கின்றன என்று வைத்துக்கொள்வோம். இந்தப் போர் அணி யில் இருக்கும் படைக்கு உதவியாக வர வேண்டிய இன்ஞெரு படை இருக்கிறது. ஆஞல் அது நிச்சயமாகக் கண்ணியில் அகப்பட்டிருக்கும் என்று இரண்டாவது படைக்குத் தெரிந் திருந்தால் அது பின்வாங்க வேண்டும்; மிகவும் ஆபாச மான, கேடுகெட்ட சமாதானத்தை செய்து கொள்ளும் அவசியம் ஏற்படினும்கூட அது நிச்சயமாகப் பின்வாங்க வேண்டும்; இந்தச் சமாதானத்தை நீங்கள் எவ்வளவு சபித் தாலும் சரி, கட்டாயம் சமாதானம் செய்து கொள்ள வேண் டும். இருவர் போரை நடத்தும் ஒருவன் வாளே உறை யிலிருந்து வெளியே எடுத்து, தன்னேக் கேவலமான சமாதா னம் செய்து கொள்ள நிர்ப்பந்திக்கும் காரணத்தால் தான் சாக வேண்டும், என்று சொல்லும் போது நாம் அவன் உணர்ச்சிகளேப் பொருட்படுத்தலாகாது. நாம் எந்த முடிவு செய்தாலும் சரி, நமக்குப் படையில்லே, நமது படைகள் களேப்பகற்றி வலுவடைய இயலுமாறு நாம் இடைக்கால ஓய்வு பெறவும் பின்வாங்கவும் வேண்டும்; இந்த அவசியத் திலிருந்து எவ்விதச் சைகைகளும் நம்மைத் தப்புவிக்க முடி யாது என்பது எல்லோருக்கும் தெரியும். யதார்த்தத்தை நேராகக் காண்பவர்கள் அனேவரும், தங்களேத் தாங்களே புரட்சிகரமான வாய்சொற்களால் ஏமாற்றிக்கொள்ளாதவர் கள் அனேவரும் இதை ஒப்புக்கொள்வார்கள். சொல்லடுக்கு களாலும் அகங்காரத்தாலும் தங்களே கண் மூடிகளாக்கிக் கொள்ளாமல் யதார்த்தத்தை நேரில் காண்பவர்கள் அனே வரும் இதைத் தெரிந்திருக்க வேண்டும்.

---

* இப்பதிப்பின் தொகுதி 7, பக்கம் 255ஐப் பார்க்க. —ப-ர்.

இது நமக்குத் தெரிந்திருந்தால் இந்தக் கடுமையான, மிகக் கடுமையான, கொள்ளைக்கார உடன்படிக்கையைச் செய்து கொள்வது நமது புரட்சிக் கடமையாகும்; ஏனெனில் இப்படிச் செய்வதன் மூலம் நமக்கும் நமது நேச சக்திகளுக்கும் நல்ல நிலையை உண்டாக்கலாம். மார்ச் 3ம் தேதிய சமாதான உடன்படிக்கையைச் செய்துகொண்டதன் விளைவாக நாம் உண்மையில் எதையாவது இழந்துவிட்டோமா? இருவர் போர் நடத்தும் பிரபுக்களின் நோக்கிலன்றி வெகுஜன உறவுகள் என்ற கண்ணோட்டத்தில் காரியங்களைப் பார்க்க விரும்பும் ஒவ்வொருவனும் ஒரு படையில்லாமல் அல்லது நலிவுற்றுத் தளர்ந்த எஞ்சிய படைகளை மட்டும் வைத்துக் கொண்டு, போர் நடத்த இசைந்து அதைப் புரட்சிப்போர் என்றழைப்பது தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்வது மட்டுமல்ல, மக்களை மிக மோசமான முறையில் ஏமாற்றுவதாகும் என்பதைப் புரிந்துகொள்வார்கள். மக்களுக்கு உண்மையை எடுத்துச் சொல்வது நமது கடமை: ஆம், சமாதானம் மிகக் கடுமையானது, உக்ரேனும் பின்லாந்தும் அழிவுறுகின்றன, ஆனால் நாம் இந்தச் சமாதானத்தை ஏற்றே தீர வேண்டும்; வர்க்க உணர்வு கொண்ட ருஷ்ய உழைப்பாளி மக்களனைவரும் இதை ஏற்பார்கள், ஏனெனில் வெளிப்பூச்சில்லாத உண்மை அவர்களுக்குத் தெரியும், போர் உண்மையில் என்னவென்பது அவர்களுக்குத் தெரியும், ஜெர்மன் புரட்சி உடனே தொடங்கிவிடும் என்ற நம்பிக்கையுடன் எல்லாவற்றையும் அபாயத்திற்குள்ளாக்குவது தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்வதாகும் என்பதும் அவர்களுக்குத் தெரியும். சமாதானம் செய்து கொண்டதன் மூலம் நாம் நமது பின்லாந்து நண்பர்களுக்கு எதை அளித்தோமோ அதை—ஓய்வுக் காலத்தை, உதவியை, நாசத்தையல்ல—பெற்றோம்.

மக்களின் வரலாற்றில் இதை விடக் கொள்ளைக்காரத் தனமான சமாதான உடன்படிக்கைகள், நிலைத்து நிற்கக் கூடிய நாடுகளை வெற்றியாளனின் தயவைச் சார்ந்திருக்கும் நிலையில் ஒப்படைத்த உடன்படிக்கைகள் பற்றிய உதாரணங்கள் எனக்குத் தெரியும். நமது இந்தச் சமாதானத்தை

டில்ஸீட் சமாதானத்துடன் ஒப்புநோக்குவோம்; டில்ஸீட் சமாதானம் பிரஷ்யா மீதும் ஜெர்மனி மீதும் வெற்றி பெற்ற படையெடுப்பாளனுல் சுமத்தப்பட்டது. அந்தச் சமாதானம் மிகவும் கடுமையானதாக இருந்தது; எல்லா ஜெர்மன் அரசுகளின் எல்லாத் தலைநகரங்களும் பிடிக்கப்பட்டன; பிரஷ்யர்கள் டில்ஸீட் நகர் வரை பின்தள்ளப்பட்டார்கள், நாம் ஓம்ஸ்க், தோம்ஸ்க் நகரங்கள்* வரை தள்ளப்படுவது போன்றது இது. அது மட்டுமல்ல, நெப்போலியன் தான் படையெடுத்து வென்ற மக்களைத் தனது போர்களுக்கான உதவிப்படைகள் தரும்படி நிர்பந்தித்தான் என்பது மிகவும் பயங்கரமாகும்; இருந்தபோதிலும் ஜெர்மன் மக்கள் படையெடுப்பாளனின் தாக்குதலை எதிர்த்து நிற்கும் நிலை ஏற்பட்ட போது, பிரான்சில் புரட்சிப் போர்களின் சகாப்தத்துக்குப் பின் ஏகாதிபத்தியப் படையெடுப்புப் போர்களின் சகாப்தம் வந்த போது ஒரு விஷயம் வெளிப்பட்டது; சமாதானம் செய்து கொள்ளுவது வீழ்ச்சி என்று சித்திரித்து வெறும் சொல்லடுக்குகளில் சண்டப் பிரசண்டம் செய்து வருபவர்கள் புரிந்துகொள்ள விரும்பாதது இந்த விஷயம். இந்த மனேதத்துவம் வாட்போர் செய்யும் பிரபுவிடம் இருப்பதைப் புரிந்துகொள்ள முடியும்; ஆனுல் தொழிலாளர், விவசாயிகள் மத்தியில் அதற்கு இடமில்லை. பின்னவர்கள் போர் என்னும் கடினமான பள்ளியில் படித்த பிறகு எல்லாவற்றையும் கணக்கில் எடுக்கக் கற்றுக்கொண்டனர். இதை விட மிகக் கடுமையான சோதனைகள் இருந்திருக்கின்றன; இதை விடப் பிற்பட்டிருந்த நாடுகள் அவற்றைச் சமாளித்துள்ளன. இதை விடக் கடுமையான சமாதான உடன்படிக்கைகள் செய்யப்பட்டுள்ளன; ஜெர்மானியர்களிடம் படை இல்லாத, அல்லது நமது படை போல் அவர்கள் படை நலிவுற்றுக்கிடந்த சகாப்தத்தில் ஜெர்மானியர்கள் இந்தச் சமாதான உடன்படிக்கைகளைச் செய்து கொண்டார்கள். அவர்கள் நெப்போலியனுடன் மிகவும்

---

* இவ்விரு நகரங்கள் சைபீரியாவில் இருக்கின்றன.—மொ-ர்.

கடுமையான சமாதான ஒப்பந்தத்தைச் செய்துகொண்டார்கள். அந்தச் சமாதானத்தால் ஜெர்மனி வீழ்ச்சியடைந்துவிடவில்லை—அதற்கு மாருக, அது ஒரு திரும்புமுனையாக இருந்தது; தேசியப் பாதுகாப்பிற்கும் புதுப்பித்தலுக்கும் அது பேருதவி நல்கியது. நாமும் அத்தகைய திரும்பு முனையின் முன் நிற்கிறேம்; அதே போன்ற நிலைமைகளை அனுபவித்து வருகிறேம். நாம் உண்மையைத் துணிவுடன் பரிசீலிக்க வேண்டும். சொல்லடுக்குகளையும் வெறும் பிரகடனங்களையும் அகற்றி எறிய வேண்டும். சமாதானம் அவசியமென்ருல் அதைச் செய்துகொள்ள வேண்டும் என்று நாம் கட்டாயம் சொல்ல வேண்டும். நெப்போலியனின் யுத்தத்திற்குப் பதிலாக விடுதலைப் போர், வர்க்கப் போர், மக்கள் போர் எழும். நெப்போலியனின் யுத்த அமைப்பு மாறும்; யுத்தத்திற்குப் பின் சமாதானம், சமாதானத்திற்குப் பதில் போர் வரும்; ஒவ்வொரு புதிய கடுமையான சமாதானத்தில் இருந்தும் போருக்கு விரிவான தயாரிப்புகள் செய்யும் நிலை எப்போதும் எழுந்துள்ளது. சமாதான உடன்படிக்கைகளில் மிகவும் கடுமையான டில்ஸீட் சமாதானம், வரலாற்றில் ஒரு திரும்பு முனையாகப் பதிவாயிற்று; இந்தக் காலத்திலிருந்து ஜெர்மன் மக்களிடையே ஒரு மாற்றம் ஏற்பட்டது; அவர்கள் டில்ஸீட்டை நோக்கி, ருஷ்யாவை நோக்கிப் பின் வாங்கிய போது வாஸ்தவத்தில் கால அவகாசத்தைப் பெற்றிருந்தார்கள், இப்பொழுதைய ஹோஹன்ஸோலர்ன், ஹிண்டன்பர்க் போன்ற கொள்ளைக்காரனை நெப்போலியனுக்கு ஒரு சமயம் சாதகமாக இருந்த சர்வதேச நிலைக்காகக் காத்திருந்தார்கள், சில பத்தாண்டுகள் நெப்போலியனின் போர்களாலும் அவற்ருல் அடைந்த தோல்விகளாலும் வாதனை செய்யப்பட்ட ஜெர்மன் மக்கள் சோர்வகன்று வலுப்படவும் அவர்கள் புத்துயிர் பெறுவதற்காகவும் காத்திருந்தார்கள். வரலாறு இதைத்தான் நமக்குப் போதிக்கிறது; இதனுல் தான் எல்லாவிதமான விரக்தியும் வெற்றுச் சொல்லடுக்குகளும் பாதகமானவை; இதனுல் தான், ஆம், பழைய ஏகாதிபத்தியப் போர்கள் முடிவடைந்துவருகின்றன,

உயர்த்திப் பிடித்திருக்க முடியாது. நாம் சாதித்துள்ள சோஷலிச சீர்த்திருத்தங்கள் இன்னும் முழுமையுறவில்லை, அவை பலவீனமாகவும் பற்ருக்குறையாகவும் உள்ளன; மேற்கு ஐரோப்பியத் தொழிலாளர்களுக்கு அவை ஒரு வழி காட்டியாக அமையும், அவர்கள் இப்படித்தான் சொல்லிக்கொள் வார்கள்: ''செய்ய வேண்டிய வேலையை ருஷ்யர்கள் சரியாகத் தொடங்கவில்லை'', ஆனுல் ஜெர்மனியுடன் ஒப்பிடும் போது நமது நாடு பலவீனமாகவும் பிற்பட்ட நிலையிலும் இருந்தபோதிலும் அது புரட்சியின் பதாகையை உயர்த்தி விட்டது. எல்லா நாடுகளேயும் சேர்ந்த முதலாளிகள் தங்களுடைய பத்திரிகைகளில் போல்ஷிவிக்குகளைப் பற்றி அவதூறுகளைப் பத்தி பத்தியாக நிரப்புகிருர்கள் என்ற போதிலும், பிரான்ஸ், பிரிட்டன், ஜெர்மனியிலுள்ள ஏகாதிபத்தியப் பத்திரிகைகள் ஒருமுகமாக போல்ஷிவிக்குகள் மீது வசைமாரி பொழிகின்றன என்றபோதிலும், எந்த நாட்டிலும் தொழிலாளர்கள் கூட்டத்தில் நமது சோஷலிஸ்ட் ஆட்சியின் பெயர்களும் கோஷங்களும் கோபாவேசத்தை எழுப்பவில்லை. (''இது பொய்'' என்ற கூக்குரல்) இது பொய் அல்ல, உண்மைதான்; ஜெர்மனி, ஆஸ்திரியா, ஸ்விட்சர் லாந்து, அமெரிக்க நாடுகளுக்குக் கடந்த சில மாதங்களில் சென்றுள்ள அனைவரும் இது பொய் அல்ல, உண்மை தான் என்றும் ருஷ்யாவில் சோவியத் ஆட்சியின் பிரதிநிதிகளினுடைய பெயர்களும் கோஷங்களும் தொழிலாளரிடையே மிகப் பெரிய உற்சாகத்துடன் வரவேற்கப்படுகின்றன என்றும் ஜெர்மன், பிரான்ஸ் நாடுகளில் தொழிலாளிகள் முதலாளித்துவத்தின் பொய்களை நம்பாமல், நாம் எவ்வளவு பலவீனமாக இருந்தாலும், இங்கே, ருஷ்யாவில், அவர்களது சொந்த நலன்கள் காக்கப்படுகின்றன என்பதைப் புரிந்துகொண்டனர் என்றும் உங்களுக்குச் சொல்லுவார்கள். ஆம், நமது மக்கள் பெருஞ்சுமையை, தங்கள் மீது தாங்களே சுமத்திக்கொண்டிருக்கும் மிகப் பெரிய சுமையைத் தாங்க வேண்டும், ஆனுல் சோவியத் ஆட்சியைச் சிருஷ்டிக்க வல்ல மக்கள் அழிந்துபோக முடியாது. சோவியத் ஆட்சிக்கு எவ்வளவு குறைபாடுகள் இருப்பினும்—

அவற்றை நான் நன்றாக அறிகிறேன், சரியாக மதிப்பிடு கிறேன்—சோவியத் ஆட்சி ஓர் ஆக உயர் மாதிரியான அரசாங்க அமைப்பாக, பாரிஸ் கம்யூனின் நேரடியான வாரி சாக இருப்பதை வர்க்க உணர்வுள்ள எந்த ஒரு சோஷலிஸ் டும் புரட்சியின் வரலாற்றைப் பற்றிச் சிந்திக்கும் எந்த ஒரு தொழிலாளியும் மறுக்க முடியாது என்று நான் மீண் டும் சொல்கிறேன். இது மற்ற ஐரோப்பியப் புரட்சிகளை விட மேலும் உயர்ந்தபடியை எய்திவிட்டது; இதனால் நூறாண்டு களுக்கு முன்பு ஜெர்மன் மக்கள் அனுபவித்த அவ்வளவு கஷ்டமான நிலைமைகளை நாம் அனுபவிக்கவில்லை; கொள்ளைக் காரர்கள் இடையில் சக்திகளின் பரஸ்பர நிலையிலான மாற்றம், மோதலைச் சாதகமாகப் பயன்படுத்தல், கொள்ளைக் காரனான நெப்போலியன், கொள்ளைக்காரனான முதலாவது அலெக்சாந்தர், கொள்ளையடிக்கும் பிரிட்டிஷ் முடியரசு ஆட்சியின் இவர்களது கோரிக்கைகளைத் திருப்திப்படுத்தல்—இவையெல்லாம்தான் நிலப்பிரபுக்களால் ஒடுக்கப்பட்டுக் கிடந்த ஜெர்மன் மக்களுக்கு விடப்பட்டிருந்த ஒரே ஒரு வாய்ப்பாக இருந்தன; இருந்த போதிலும் டில்ஸீட் சமா தானத்தின் காரணமாக ஜெர்மன் மக்கள் அழிந்துவிடவில்லை. நமக்கோ மேம்பட்ட சூழ்நிலைகள் உள்ளன என்று நான் மீண்டும் சொல்கிறேன்; ஏனென்றால் மேற்கு ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் நமக்கு மாபெரும் கூட்டாளி—சர்வ தேச சோஷலிஸ்ட் பாட்டாளி வர்க்கம்—இருக்கின்றது; நம் விரோதிகள் என்ன சொன்னாலும் அது நம் பக்கத்தில் உள்ளது. (க ர வொ லி.) *1917* பிப்ரவரியின் முடிவு வரை நமக்குக் குரல் எழுப்புவது கஷ்டமாக இருந்தது போல இந்தக் கூட்டாளிக்கும் தனது குரலை எழுப்புவது அவ் வளவு சுலபமல்ல. இந்தக் கூட்டாளி எல்லா ஏகாதிபத்திய நாடுகளும் ராணுவச் சிறையாக மாறிவிட்ட சூழ்நிலையில் தலைமறைவாக வாழ்கிறான்; ஆனால் இந்தக் கூட்டாளி நம்மை அறிந்திருக்கிறான், நமது இலட்சியத்தைப் புரிந்துகொள் கிறான்; அவன் நமக்கு உதவ வருவது கடினம், எனவே அவன் உதவி நமக்குக் கிடைக்கும் வரை சோவியத் படைகளுக்கு நிறைய நேரமும் அதிகப் பொறுமையும் தேவைப்படும்,

அவை பல சோதனைகளை அனுபவிக்க வேண்டியிருக்கும்; நாம் காலத்தை நீட்டிக்கக் கிடைக்கும் ஒவ்வொரு சின்னஞ்சிறு வாய்ப்பையும் பயன்படுத்துவோம்; ஏனெனில் காலம் நமக்குச் சாதகமாக இருக்கிறது. நமது இலட்சியம் வலுவடைந்து வருகிறது; ஏகாதிபத்திய சக்திகள் பலவீனமடைந்து வருகின்றன; ''டில்ஸிட்'' சமாதானத்தால் எத்தனையோ சோதனைகள், தோல்விகள் ஏற்பட்ட போதிலும் நாம் பின்வாங்கல் என்னும் போர்தந்திரங்களைக் கையாளத் தொடங்குகிறோம்; வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்களும், வர்க்க உணர்வுள்ள விவசாயிகளும் நமது பக்கத்திலுள்ளனர் என்பதில் எவ்விதச் சந்தேகமும் இல்லை என்று மீண்டும் கூறுகிறேன்; நாம் வீரத்துடன் தாக்கிப் போராட முடியும், வீரமாகவே பின்வாங்கவும் முடியும்; சர்வதேச சோஷலிஸ்ட் பாட்டாளிகள் உதவிக்கு வரும் வரை காத்திருந்து, பிறகு நாம் உலகளாவிய வீச்சுடைய இரண்டாம் சோஷலிஸ்ட் புரட்சியைத் தொடங்குவோம். (கரவொலி.)

2

பிரேஸ்த் உடன்படிக்கை ஊர்ஜிதம் செய்யப்படுவது பற்றிய தீர்மானம்

இந்தக் காங்கிரஸ் 1918 மார்ச் 3ந் தேதி பிரேஸ்த்-லிட்டோவ்ஸ்க்கில் நமது பிரதிநிதிகள் கைச்சாத்திட்ட சமாதான உடன்படிக்கையை உறுதிப்படுத்துகிறது (ஊர்ஜிதம் செய்கிறது).

நம்மிடம் படையில்லாமல் இருப்பதின் காரணமாகவும், மக்கள் மிகப் பெரிய அளவிற்குச் சோர்வடைந்திருப்பதின் காரணமாகவும் அவர்களது இந்தக் கஷ்ட நிலையில், முதலாளித்துவ வர்க்கத்தினரும் முதலாளித்துவ படிப்பாளிகளும் அவர்களுக்கு எவ்வித ஆதரவும் கொடுக்காமல் அதற்கு மாருக, இந்தக் கஷ்ட நிலையைத் தங்கள் சுயநல வர்க்க

நோக்கங்களுக்குப் பயன்படுத்திக்கொள்ளும் சூழ்நிலையில், நம்பமுடியாத அளவு கடுமையான, கொள்ளைக்காரத்தன மான, மானக்கேடான இந்தச் சமாதானத்தைச் செய்து கொள்ள வேண்டுமென்று முடிவு செய்த மத்திய நிர்வாகக் கமிட்டி, மக்கள் கமிசார்களின் கவுன்சில் இவற்றின் செயல் கள் சரியானவை என்று இந்த காங்கிரஸ் அங்கீகரிக்கிறது.

ஜெர்மன் சமாதான நிபந்தனைகள் நம்மீது அப்பட்ட மான இறுதியெச்சரிக்கையின் வடிவிலும் ஒளிவுமறைவில் லாத பலப்பிரயோகம் மூலமும் திணிக்கப்பட்டதால் இவை சம்பந்தமாக விரிவான விவாதம் நடத்த மறுத்துவிட்ட சமாதான தூதுக் குழுவின் செயல்கள் சந்தேகத்துக்கிட மின்றிச் சரியானவை என்பதையும் இந்த காங்கிரஸ் அங்கீ கரிக்கிறது.

உழைப்பாளி மக்களின் கட்டுப்பாட்டையும் சுயக்கட்டுப் பாட்டையும் மேம்படுத்துவதும், பொருள்களின் உற்பத்தி முழுவதையும் வினியோகம் முழுவதையும் முடிந்த அளவு பூர்ணமாக மேற்கொள்ளும் உறுதியான, நன்கமைந்த ஸ்தா பனங்களை நாடெங்கும் சிருஷ்டிப்பதும், மிகவும் வேதனைப் படுத்தும் போரின் விளைகேடு என்ற முறையில் வரலாற்று ரீதியாகத் தவிர்க்க முடியாததாக இருக்கும், அதே சமயம் சோஷலிசத்தின் முடிவான வெற்றிக்கும் சோஷலிஸ்ட் சமு தாயத்தின் அடித்தளங்கள் உறுதிபெறுவதற்கும் பிரதானத் தடையாக இருக்கும் குழப்பம், ஸ்தாபனக் குலைவு, பொருளா தார நாசம் இவற்றை எதிர்த்து ஈவிரக்கமின்றிப் போராடு வது என்ற தற்போதைய பிரதானமான, நேரடியான, அவசரமான கடமையை இந்த காங்கிரஸ் தொழிலாளர் கள், படையாளிகள், விவசாயிகள் அனைவர்களிடமும், உழைக்கும் மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவர்களிட மும் மிகவும் ஊன்றி அழுத்தமாக எடுத்துக் கூறுகிறது.

இன்று, அக்டோபர் புரட்சிக்குப் பின்னால், ருஷ்யாவில் முதலாளித்துவத்தின் அரசியல் அதிகாரம் முறியடிக்கப் பட்டதற்குப் பின்னால், எல்லா இரகசிய ஏகாதிபத்திய ஒப்பந்தங்களையும் நாம் கண்டனம் செய்து அவற்றைப் பகிரங்கப்படுத்திய பிறகு, அன்னியக் கடன்களை எல்லாம் நாம்

ரத்தாக்கிய பிறகு, தொழிலாளர்கள், விவசாயிகளின் அரசாங்கம் விதிவிலக்கின்றிச் சகல நாடுகளின் மக்களுக்கும் நியாயமான சமாதானத்தைப் பிரேரேபித்த பிறகு, ஏகாதிபத்தியப் போரின் பிடியிலிருந்து தப்பித்துவிட்ட ருஷ்யா மற்ற நாடுகளைச் சூறையாடுவதிலும் ஒடுக்குவதிலும் தனக்குப் பங்கில்லை என்று எடுத்துக்கூறும் உரிமையைப் பெற்றுள்ளது.

கொள்ளைக்காரப் போர்களை ஒரு முகமாகக் கண்டனம் செய்துள்ள ருஷ்யாவின் சோஷலிஸ்டு சோவியத் கூட்டாட்சி குடியரசு, ஏகாதிபத்திய வல்லரசுகள் எதுவும் நடத்தக் கூடிய எல்லாத் தாக்குதல்களையும் எதிர்த்து சோஷலிஸ்டு தாய் நாட்டினைப் பாதுகாப்பது தனது உரிமையும் கடமையும் என்று கருதுகிறது.

எனவே நமது நாட்டின் பாதுகாப்புத் திறனைப் புனரமைத்து மேம்படுத்தவும், சோஷலிஸ்ட் மிலீஷியாவை அமைப்பதும் இருபால்களையும் சேர்ந்த இளைஞர்களுக்கும் வயது வந்தவர்களுக்கும் சர்வப்பொதுவான ராணுவப் பயிற்சி கொடுப்பதும் என்ற அடிப்படையில் நாட்டின் ராணுவ வலிமையைப் புனரமைக்கவும் சகல சக்திகளையும் ஒன்று திரட்டுவது உழைப்பாளி மக்கள் அனைவரதும் நிபந்தனையற்ற கடமை என்று இந்த காங்கிரஸ் கருதுகிறது.

முதலாளித்துவ ஆதிக்கத்தை எதிர்த்தும் சோஷலிசத்திற்காகவும் போராடும் அனைத்து நாட்டுத் தொழிலாளர்களினுடைய சர்வதேச ஒருமைப்பாட்டின் எல்லாக் கடமைப் பொறுப்புக்களையும் தீரமுடன் நிறைவேற்றியுள்ள சோவியத் ஆட்சி, உலக சோஷலிஸ்ட் இயக்கத்தை வளப்படுத்தவும் முதலாளித்துவ ஆதிக்கத்திலிருந்தும் கூலியடிமைத்தனத்திலிருந்தும் மனித குலத்தை விடுதலைக்கு இட்டு செல்லும் பாதையை உறுதிப்படுத்தவும் அதை விரைவாக்கவும் சோஷலிஸ்ட் சமுதாயத்தைப் படைக்கவும் மக்களிடையே நிலையான, நீதியான சமாதானத்தை நிறுவவும் தன்னால் இயன்றதை எல்லாம் செய்யும் என்று இந்த காங்கிரஸ் தனது பரிபூரணமான நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.

சர்வதேசத் தொழிலாளர் புரட்சி நெடுந்தொலைவில்

இல்லை என்பதையும் எல்லா நாடுகளையும் சார்ந்த ஏகாதிபத்தியவாதிகள் சோஷலிஸ்ட் இயக்கத்தை ஒடுக்க மிகமிக மிருகத்தனமான வழிகளைக் கையாளத் தயங்க மாட்டார்கள் என்றாலும் சோஷலிஸ்ட் பாட்டாளி வர்க்கத்தின் முழுமையான வெற்றி உறுதியானது என்பதையும் இந்த காங்கிரஸ் மிகத் திடமாக நம்புகிறது.

1918 மார்ச் 13 அல்லது 14ல்
எழுதப்பட்டது

பிராவ்தாவில்
(சொத்ஸியால்-டெமக்ராட்) இதழ் *47*,
மார்ச் 16(3),1918 வெளியிடப்பட்டது

நூல் திரட்டு,
தொகுதி *36*,
பக்கங்கள் *122-123*

சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள்[21]

ருஷ்யாவின் சோவியத் குடியரசினது சர்வதேச நிலைமையும் சோஷலிசப் புரட்சியின் அடிப்படைப் பணிகளும்

அடையப் பெற்றிருக்கும் சமாதானம், அளவுமீறிய கடுஞ் சுமையை இருத்துவதாகவும் அளவுமீறி நிலையற்றதாகவும் இருப்பினும், இந்தச் சமாதானத்தின் விளைவாய் ருஷ்யாவின் சோவியத் குடியரசு சிறிது காலத்துக்கு அதன் முயற்சிகளை சோஷலிசப் புரட்சியின் மிகவும் முக்கியமான, மிகவும் கடினமான பணியில், அதாவது ஒழுங்கமைத்திடும் பணியில் ஒருமுனைப்படுத்தி ஈடுபடுத்துவதற்கான வாய்ப்பினைப் பெற்றுக் கொண்டுள்ளது.

மாஸ்கோவில் 1918 மார்ச் 15ல் நடைபெற்ற சோவியத்துகளின் விசேஷக் காங்கிரசால் ஏற்கப்பட்ட தீர்மானத்தின் நான்காவது பாராவில் (பிரிவு 4), உழைப்பாளி மக்களது சுயகட்டுப்பாட்டைப் பற்றியும் குழப்பத்தையும் சீர்குலைவையும் எதிர்த்து ஈவிரக்கமின்றி நடத்தப்பட வேண்டிய போராட்டத்தைப் பற்றியும் கூறும் அந்தப் பாராவில் (அல்லது பிரிவில்), இந்தப் பணியானது உழைப்போரும் ஒடுக்கப்படுவோருமாகிய மக்கள் எல்லோர்க்கும் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் வகுத்தளிக்கப்பட்டது.*

ருஷ்யாவின் சோவியத் குடியரசு பெற்றிருக்கும் இந்தச் சமாதானம் நிலையற்றதாக இருப்பதற்கு, இராணுவ நடவடிக்கைகளைத் திரும்பவும் மேற்கொள்ள இக்குடியரசு தற்போது நினைக்கிறது என்பதல்ல காரணம், இல்லவே இல்லை— முதலாளித்துவ எதிர்ப்புரட்சிக்காரர்களையும் அவர்களது

---

* இத்தொகுதியின் பக்கம் 47 பார்க்க.—ப-ர்.

அடிவருடிகளையும் (மென்ஷிவிக்குகளையும் ஏனையோரையும்) தவிர்த்து, புத்தி சுவாதீனமுள்ள எந்த அரசியல்வாதியும் இப்படிச் செய்ய நினைக்கவில்லை. பிரம்மாண்ட இராணுவப் படைகளைத் தம் கையில் வைத்துக் கொண்டு ருஷ்யாவின் எல்லைகளை ஒட்டி மேற்கிலும் கிழக்கிலும் இருந்து வரும் ஏகாதிபத்திய அரசுகளில் இராணுவக் கட்சியானது, ருஷ்யாவின் தற்காலிகமான பலவீனத்தைக் கண்டு மயங்கி மதியிழந்தும், சோஷலிசத்தை வெறுப்போரும் கொள்ளையடிப்பதில் ஆவல் கொண்டோருமான முதலாளிகளால் தூண்டிவிடப்பட்டும், எத்தருணத்திலும் ஆதிக்க நிலை பெற்றுவிடக் கூடுமென்பதுதான் இந்தச் சமாதானத்தின் நிலையின்மைக்குக் காரணமாகும்.

இந்நிலைமைகளில் சமாதானத்துக்கு நமக்குள்ள மெய்யான—காகிதத்திலானதல்ல—ஒரே உத்தரவாதம், ஏகாதிபத்திய அரசுகளிடையிலான பகைமையேதான். இந்தப் பகைமை மிதமிஞ்சிய வரம்புகளை எட்டியுள்ளது; ஒரு புறத்தில் மேற்கில் மக்களிடை ஏகாதிபத்தியப் படுகொலை திரும்பவும் துவக்கப்பட்டிருப்பதிலும், மறு புறத்தில் பசிபிக் மாகடலிலும் பசிபிக் கரையிலும் ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்குமிடையே மேலாதிக்கத்துக்கான ஏகாதிபத்தியப் போட்டாபோட்டி மிதமிஞ்சி கடுமையாகியிருப்பதிலும் இந்தப் பகைமை தெளிவாகவே புலப்படுகிறது.

பாதுகாப்புக்கு நம்பகமில்லாத இத்தகைய காப்பு அரணைக் கொண்டுள்ள நமது சோவியத் சோஷலிசக் குடியரசு மிதமிஞ்சிய அளவுக்கு நிலையற்றதும், நிச்சயமாகவே நெருக்கடியானதுமான சர்வதேச நிலையில் இருக்கிறது என்பது கூறாமலே விளங்குவதாகும். சூழ்நிலைமைகளின் இணைப்பினால் நமக்கு வரப் பெற்றிருக்கும் இந்த இடைநேர அமைதியினைப் பயன்படுத்திக் கொண்டு, யுத்தத்தால் ருஷ்யாவின் சமுதாய உறுப்பமைவு அனைத்துக்கும் ஏற்பட்டுள்ள மிகக் கடுமையான காயங்களை ஆற்றிக் கொள்வதற்கும், பொருளாதாரத்தைப் புத்தெழுச்சி பெறச் செய்வதற்கும் நாம் உச்சபட்சமான அளவுக்கு சகல முயற்சிகளையும் எடுத்தாக வேண்டும். இதைச் செய்யாமல் நமது நாட்டின் தற்காப்பு

ஆற்றலில் மெய்யான ஏற்றம் ஏற்படுவது பற்றிச் சிந்திக்கவே முடியாது.

மேற்கில் சோஷலிசப் புரட்சியானது மிகப் பல காரணங்களால் தாமதப்படுத்தப்பட்டு விட்டது. நம்மை எதிர்நோக்கும் ஒழுங்கமைப்புப் பணியினை எந்த அளவுக்கு நாம் நிறைவேற்றுகிறோமோ, அந்த அளவுக்குத்தான் மேற்கில் சோஷலிசப் புரட்சிக்கு நாம் பயனுள்ள உதவி அளிக்கக் கூடியோராய் இருக்க முடியும் என்பதும் கூறாமலே விளங்குவதாகும்.

நம்மை எதிர்நோக்கும் முதற்பெரும் பணியாகிய இந்த ஒழுங்கமைப்புப் பணி வெற்றிகரமாய் நிறைவேற்றப்படுவதற்கு அடிப்படையான ஒரு நிபந்தனை என்னவெனில், மக்களின் அரசியல் தலைவர்களும், அதாவது ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியின் (போல்ஷிவிக்குகள்) உறுப்பினர்களும், அவர்களைத் தொடர்ந்து உழைப்பாளிப் பெருந்திரள் மக்களது வர்க்க உணர்வு படைத்த பிரதிநிதிகள் எல்லோரும் இத்துறையில் முந்தைய முதலாளித்துவப் புரட்சிகளுக்கும் தற்போதைய சோஷலிசப் புரட்சிக்குமுள்ள அடிநிலை வேறுபாட்டை முழு அளவுக்கு உணர்ந்து கொண்டாக வேண்டும்.

முதலாளித்துவப் புரட்சிகளில் பெருந்திரளான உழைப்பாளி மக்களது தலையாய பணி, பிரபுத்துவத்தையும் முடியரசையும் மத்தியகால நிலைமைகளையும் ஒழித்திடுவதென்ற எதிர்நிலையான அல்லது அழித்தல் வழிப்பட்ட வேலையை நிறைவேற்றுவதாகவே இருந்தது. புதிய சமுதாயத்தை ஒழுங்கமைத்திடுவதென்ற நேர்நிலையான அல்லது ஆக்கவழிப்பட்ட வேலையானது மக்களில் சொத்துடைத்த முதலாளித்துவச் சிறுபான்மையோரால் செய்து முடிக்கப்பெற்றது. தொழிலாளர்கள், ஏழை விவசாயிகளின் எதிர்ப்பை மீறி இந்தச் சிறுபான்மையோர் இப்பணியை ஒப்பளவுக்கு எளிதாகவே செய்து முடித்தனர்; மூலதனத்தால் சுரண்டப்பட்ட மக்கள் சிதறுண்டும் கல்வியறிவில்லாதோராகவும் இருந்ததால் அந்தக் காலத்தில் இவர்களது எதிர்ப்பு மிகவும் பலவீனமாயிருந்தது மட்டுமல்ல இதற்குக் காரணம், தன்னியல்பாய் வளர்ந்து விரிவடைந்து வரும் தேசிய மற்றும் சர்வ

தேசியச் சந்தையே அராஜக முறையில் அமைந்த முதலாளித்துவ சமுதாயத்தின் பிரதான ஒழுங்கமைப்பு சக்தி என்பதும் இதற்குக் காரணம்.

ஆனல் ஒவ்வொரு சோஷலிசப் புரட்சியிலும்—ஆகவே ருஷ்யாவில் 1917 அக்டோபர் 25ல் நாம் ஆரம்பித்த சோஷலிசப் புரட்சியிலும் கோடிக்கணக்கான மக்களது வாழ்வுக்குத் தேவையான பண்டங்களின் திட்டமிட்ட உற்பத்திக்கும் வினியோகத்துக்கும் விரிந்து இயங்கும் படியான புதிய ஒழுங்கமைப்பு உறவுமுறைகளுக்குரிய அளவுகடந்த சிக்கலும் நுண்ணயமும் வாய்ந்த அமைப்பினை நிறுவும் நேர்நிலையான அல்லது ஆக்க வழிப்பட்ட வேலைதான் பாட்டாளி வர்க்கத்துக்கும் அது தலைமை தாங்கும் ஏழை விவசாயிகளுக்குமான தலையாய பணியாய் இருக்கிறது. மக்களில் பெருவாரியானேரும், யாவருக்கும் முதலாய் உழைப்பாளி மக்களில் பெருவாரியானேரும், வரலாற்றின் படைப்பாளர்களாய் சுயேச்சையான ஆக்க வேலையில் ஈடுபடும் போது மட்டும்தான் இத்தகைய ஒரு புரட்சி வெற்றிகரமாக நடத்தப்பட முடியும். பாட்டாளி வர்க்கத்தினரும் ஏழை விவசாயிகளும் போதிய அளவில் வர்க்க உணர்வும், கோட்பாட்டில் பற்றுறுதியும், தன்னலங்கருதாத் தியாக உணர்ச்சியும், விடா முயற்சியும் வெளிப்படுத்தும் போது மட்டும்தான் சோஷலிசப் புரட்சியின் வெற்றி திண்ணமாக முடியும். உழைப்போரும் ஒடுக்கப்படுவோருமான மக்கள் புதிய சமுதாயத்தைக் கட்டியமைத்திடும் சுயேச்சைப் பணியில் செயல் முனைப்போடு பங்கு கொள்வதற்கு வாய்ப்பு அளித்திடும் சோவியத் வடிவிலான ஒரு புது வகை அரசை உருவாக்கியதன் மூலம் நாம் இந்தக் கடினமான பிரச்சினையில் ஒரு சிறு பகுதிக்கு மட்டுமே தீர்வு கண்டுள்ளோம். பிரதான இடர்ப்பாடு பொருளாதாரத் துறையில் அடங்கியிருக்கிறது, அதாவது பண்டங்களது உற்பத்தியிலும் வினியோகத்திலும் மிகவும் கண்டிப்பான, சர்வவியாபகமான கணக்குப் பதிவையும் கண்காணிப்பையும் புகுத்தி, உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதிலும் பொருளுற்பத்தியை நடைமுறையில் சமூகமயமாக்குவதிலும் அடங்கியிருக்கிறது.

ருஷ்யாவில் இன்று ஆளும் கட்சியாய் இருக்கும் போல் ஷிவிக் கட்சியின் வளர்ச்சியானது, வரலாற்றில் தற்போது நாம் வந்தடைந்திருக்கும் திருப்பத்தின் தன்மையைப் பளிச் செனப் புலப்படுத்திக் காட்டுகிறது. இந்தத் திருப்பம்தான் தற்போதைய அரசியல் நிலைமையின் தனி இயல்பாகும், இதுதான் சோவியத் ஆட்சியதிகாரத்தின் புதிய திசையமை வினை, அதாவது புதிய பணிகள் புதிய முறையில் முன்வைக்கப் படுவதை அவசியமாக்குகிறது.

வருங்காலக் கட்சி ஒவ்வொன்றும் தனது வேலைத்திட்ட மும் போர்த்தந்திரமும் பிழையற்றவை என்பதில் பெரும் பாலான மக்களுக்கு திடநம்பிக்கை அளிப்பதுதான் அக் கட்சிக்குரிய முதலாவது பணியாகும். இந்தப் பணிதான் ஜார் காலத்திலும், மற்றும் செர்னேவ்களும் த்ஸெரெத்தேலி களும் கேரென்ஸ்கிகள் குறித்தும் கிஷ்கின்கள் குறித்தும் கடைப்பிடித்த சமரசவாதக் கொள்கையின் காலத்திலும், முன்னணியில் நின்றது. இப்போது இந்தப் பணி பிரதான மாய் நிறைவேற்றப்பட்டுவிட்டது, ஏனெனில் அண்மையில் கூடிய சோவியத்துகளின் காங்கிரஸ் யாரும் மறுக்க முடி யாதபடி நிரூபித்துக் காட்டியது போல, ருஷ்யாவின் தொழி லாளர்களிலும் விவசாயிகளிலும் பெரும்பான்மையோர் தெட்டத் தெளிவாயும் போல்ஷிவிக்குகள் தரப்பிலேயே இருக்கிறார்கள். ஆயினும் இப்பணி எவ்வகையிலும் பூரண மாய் நிறைவேற்றப்பட்டுவிடவில்லை என்பது மெய்தான் (எக்காலத்திலும் இது பூரணமாய் நிறைவேற்றப்படுதல் சாத் தியமன்று).

அரசியல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதும் சுரண்டு வோரது எதிர்ப்பை நசுக்குவதும்தான் நமது கட்சியை எதிர்நோக்கிய இரண்டாவது பணி. இந்தப் பணியும் எவ் வகையிலும் பூரணமாய் நிறைவேற்றப்பட்டு விடவில்லை, இது கவனியாது புறக்கணிக்கப்பட முடியாத ஒன்று. ஏனெ னில் ஒரு புறத்தில் முடியரசுவாதிகளும் காடேட்டுகளும், மறு புறத்தில் இவர்களது கூட்டாளிகளும் அடிவருடிகளுமான மென்ஷிவிக்குகளும் வலதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியா ளர்களும் சோவியத் ஆட்சியதிகாரத்தைக் கவிழ்க்கும்

பொருட்டு ஒன்றுபடுவதற்காக தொடர்ந்து முயன்று வருகிறுர்கள். ஆயினும் சுரண்டுவோரது எதிர்ப்பை நசுக்குவதென்னும் பணி, 1917 அக்டோபர் 25க்கும் (குத்துமதிப்பாய்) 1918 பிப்ரவரிக்கும், அல்லது பொகயேவ்ஸ்கி சரணடைந்ததற்கும் இடைப்பட்ட காலத்தில் பிரதானமாய் நிறைவேற்றி முடிக்கப் பெற்றுள்ளது.

இப்போது மூன்ருவது பணி ஒன்று, அதாவது ருஷ்யாவின் நிர்வாகத்தை ஒழுங்கமைத்திடும் பணி, உடனடிப் பணியாக முன்னிலைக்கு வந்து கொண்டிருக்கிறது. தற்போதைய நிலைமையின் தனி இயல்பாய் அமைந்திடும் ஒரு பணி இது. 1917 அக்டோபர் 25ஆம் நாளுக்கு மறுதினமே நாம் இந்தப் பணியை முன்வைத்து இதைச் சமாளிக்க முற்பட்டது மெய்தான். ஆனுல் இதுகாறும் சுரண்டுவோரது எதிர்ப்பு பகிரங்க உள்நாட்டுப் போரின் வடிவை ஏற்றுவந்ததால், இந்த நிர்வாகப் பணி இதுவரை பிரதானமான, மையமான பணி ஆக முடியவில்லை.

இப்போது இது பிரதானமான, மையமான பணி ஆகியுள்ளது. போல்ஷிவிக் கட்சியினரான நாம் ருஷ்யா திட நம்பிக்கை பெறச் செய்துவிட்டோம். ருஷ்யாவை நாம் செல்வந்தர்களிடமிருந்து ஏழைகளுக்காக, சுரண்டுவோரிடமிருந்து உழைப்பாளி மக்களுக்காக வென்று கொண்டு விட்டோம். இப்போது நாம் ருஷ்யாவை நிர்வகித்தாக வேண்டும். மக்களை திடநம்பிக்கை பெறச் செய்தல், சுரண்டுவோரை ஆயுத பலங் கொண்டு நசுக்குதல் என்கிற தலையாய பணியிலிருந்து நிர்வாகம் என்கிற தலையாய பணிக்கு மாறிச் செல்லுதலின் பிரத்தியேக இயல்புகளைப் புரிந்து கொள்வதில் தான் தற்போதைய சூழ்நிலையின் தனித்தன்மை அனைத்தும், இடர்ப்பாடு அனைத்தும் அடங்கியுள்ளது.

மனித வரலாற்றிலேயே முதன்முதலாய் ஒரு சோஷலிஸ்டுக் கட்சி ஆட்சியதிகாரத்தை வெற்றி கொள்வதும் சுரண்டுவோரை நசுக்குவதுமாகிய பணியினைப் பிரதானமாய் நிறைவேற்றி முடித்துவிட்டு, நிர்வாகம் எனும் பணியினை நேரடியாக அணுக முற்பட்டிருக்கிறது. சோஷலிசப் புரட்சியின் இந்த மெத்தக் கடினமான (மிகவும் மனநிறைவு

தருவதான) பணியினை நாம் சிறப்புடன் நிறைவேற்றி முடிப்பவர்கள் என்பதை நிரூபித்துக் காட்ட வேண்டும். வெற்றிகரமாய் நிர்வகிக்கும் பொருட்டு நாம் மக்களுக்கு திட நம்பிக்கை அளிக்க வல்லோராய் இருப்பதோடு அன்னியில், உள்நாட்டுப் போரில் வெற்றி பெற வல்லோராய் இருப்பதோடு அன்னியில், நடைமுறை ஒழுங்கமைப்பு வேலையைச் செய்ய வல்லோராயும் இருக்க வேண்டுமென்பதை நாம் பூரணமாய் உணர்ந்து கொண்டாக வேண்டும். இது மிகமிகக் கடினமான பணி, ஏனெனில் கோடானுகோடி மக்களது வாழ்க்கையின் மிகமிக ஆழ வேரூன்றியுள்ள அடிப்படைகளை, பொருளாதார அடிப்படைகளை ஒரு புதிய வழியில் ஒழுங்கமைத்திடும் பணி இது. அதேபோது இது மிகவும் மன நிறைவுதரும் பணி, ஏனெனில் இந்தப் பணி (முதன்மையான, பிரதான உருவரைகளில்) நிறைவேற்றி முடிக்கப் பெற்றதன் பிறகுதான் ருஷ்யாவானது ஒரு சோவியத் குடியரசு மட்டுமன்றி, ஒரு சோஷலிசக் குடியரசும் ஆகிவிட்டது என்று கூற முடியும்.

இத்தருணத்துக்குரிய பொதுவான கோஷம்

அளவுமீறிய கடுஞ் சுமையாகவும் நிலையற்றதாகவும் அமைந்த சமாதானத்தால் தோற்றுவிக்கப்பட்டிருக்கும் மேலே நாம் பார்வையிட்ட எதார்த்தச் சூழ்நிலை, யுத்தமும் முதலாளித்துவ வர்க்கத்தின் ஆட்சியும் (கேரென்ஸ்கியாலும் அவரை ஆதரித்த மென்ஷிவிக்குகளாலும் வலதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களாலும் பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது) நமக்கு விட்டுச் சென்ற பயங்கர அழிவு நிலையும் வேலையின்மையும் பஞ்சமும் உழைப்பாளி மக்களின் பரவலான பகுதியோரிடத்தே தவிர்க்க முடியாதவாறு மட்டுமீறிய களைப்பையும் வலிவிழந்த ஒடுங்கிய நிலையையுங்கூட ஏற்படுத்தியிருக்கின்றன. இம்மக்கட் பகுதியோர் சற்றே ஓய்வு இடைநேரம் வேண்டுமென விடாப்பிடியாகக் கோருகிறார்கள், நிலைமைகளால் நிர்ப்பந்திக்கப்பட்டு இவ்வாறு கோருகிறார்கள். போராலும் முதலாளித்துவ ஆட்சி

யாலும் அழிக்கப்பட்ட உற்பத்திச் சக்திகளை மீட்டமைத்தல், போராலும், போரில் ஏற்பட்ட தோல்வியாலும் லாபவெறியாலும் சுரண்டுவோரது கவிழ்க்கப்பட்ட ஆட்சியை மீட்டமைப்பதற்காக முதலாளித்துவ வர்க்கம் செய்யும் முயற்சிகளாலும் உண்டான காயங்களை ஆற்றுதல், நாட்டின் பொருளாதாரத்தைப் புத்தாக்கம் பெறச் செய்தல், சர்வசாதாரணமான வாழ்க்கை முறைக்கு நம்பகமான பாதுகாப்பு அளித்தல்—இவை தாம் இன்றைய தினத்துக்குரிய பணி. இது முரணுரையாகத் தோன்றலாம், ஆனாலும் இது வேதான் உண்மை: மேலே சுட்டிக் காட்டப் பெற்ற எதார்த்த நிலைமைகளைக் கருதிப் பார்க்கும் போது பொது வாழ்வினை நிலைநிறுத்துவது சம்பந்தமான இந்தச் சர்வசாதாரணமான, மிகப் பெரும் அளவுக்குச் சர்வசாதாரணமான பிரச்சினைகளுக்கு—முதலாளித்துவ வர்க்கத்தினரும் மென்ஷிவிக்குகளும் வலதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களும் காட்டும் எதிர்ப்பை மீறி—நடைமுறையில் தீர்வு காணப்படும் போது மட்டும்தான், ருஷ்யாவில் சோஷலிசத்தை அடைவதற்கான மாற்றம் நடந்தேறும்படி தற்போதைய தருணத்தில் சோவியத் அமைப்பால் உத்தரவாதம் செய்ய முடியும், இதில் எந்த ஐயப்பாட்டுக்கும் இடமில்லை. தற்போதுள்ள சூழ்நிலையின் பிரத்தியேக இயல்புகளின் காரணமாகவும், நிலச் சமுதாயவுடைமைச் சட்டத்தையும் தொழிலாளர்கண்காணிப்பு சட்டத்தையும் இன்ன பிறவற்றையும் பெற்றுள்ள சோவியத் ஆட்சியதிகாரம் இருந்து வருவதன் காரணமாகவும், இந்த மிகமிகச் சர்வ சாதாரணமான பிரச்சினைகளுக்கு நடைமுறைத் தீர்வு காண்பதும், சோஷலிசத்தின் திசையிலான முன்னேற்றத்தின் ஆரம்பக் கட்டங்களுக்குரிய அமைப்புத்துறை இடர்ப்பாடுகளை வென்று அகற்றி முன்செல்லுதலும் தற்போது ஒரே சித்திரத்தின் இரு அம்சங்களாகும்.

முறையான, நேர்மையான ரொக்கக் கணக்கு வைத்து வர வேண்டும், சிக்கனமாய் நிர்வகிக்க வேண்டும், சோம்பலாய் இருக்கலாகாது, திருடக் கூடாது, கண்டிப்பான உழைப்புக் கட்டுப்பாட்டை அனுசரிக்க வேண்டும்—முதலாளித்துவ வர்க்கம் சுரண்டும் வர்க்கம் என்ற முறையில் தனது

ஆட்சியை மூடிமறைப்பதற்காக இவற்றைப் பயன்படுத்திய போது புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தால் நியாயமாகவே வெறுத்து ஒதுக்கப்பட்டவையான இந்தக் கோஷங்கள்தாம் இப்போது, முதலாளித்துவ வர்க்கம் வீழ்த்தப்பட்டுவிட்ட பின், இத்தருணத்துக்குரிய முதன்மையான உடனடிக் கோஷங்களாகி வருகின்றன. ஒரு புறத்தில், இந்தக் கோஷங்கள் உழைப்பாளி மக்கட் பெருந் திரளினரால் நடைமுறையில் செயல்படுத்தப்படுவதானது, ஏகாதிபத்தியப் போராலும் ஏகாதிபத்தியக் கொள்ளைக்காரர்களாலும் (கேரென்ஸ்கியின் தலைமையிலானவர்கள்) அனேகமாக மடிந்தொழியும் அளவுக்குச் சித்திரவதை செய்யப்பட்டிருக்கும் ஒரு நாடு விமோசனமடைவதற்குரிய ஒரே நிபந்தனையாகும். மறு புறத்தில், இந்தக் கோஷங்கள் சோவியத் அரசால், அதன் வழிமுறைகளின்படி, அதன் சட்டங்களது அடிப்படையில் நடைமுறையில் செயல்படுத்தப்படுவதானது சோஷலிசத்தின் இறுதி வெற்றிக்கு அவசியமானதும் போதுமானதும் ஆகிய நிபந்தனையாகும். ''பழம் பல்லவியான'', ''அற்பமான'' இந்தக் கோஷங்களை முன்னிலையில் வைப்பதாவது என்று இக்கருத்தை ஏளனமாக வெறுத்து ஒதுக்குகிறுர்களே, அவர்கள் இதைத்தான் துல்லியமாயும் புரிந்துகொள்ளத் தவறிவிடுகிறுர்கள். சிறுவிவசாயிகளது நாடான ஒன்றில்—இந்நாடு ஜாராட்சியை வீழ்த்தி ஓராண்டே ஆகிறது, கேரென்ஸ்கிகளிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு ஆறு மாதங்களுக்கும் குறைவான காலமே ஆகிறது—நீடித்ததும் பிற்போக்கானதுமான போர் ஒவ்வொன்றையும் தொடர்ந்து எழும் கொடுமை மற்றும் காட்டுமிராண்டித்தனத்தால் கடுமையாக்கப்பட்ட தன்னியல்பான அராஜகத்தில் பெருமளவு எஞ்சியிருப்பது இயற்கையே, பெருமளவிலான விரக்தியும் இலக்கற்ற மனக் கசப்பும் மிகுதியாகவே ஏற்பட்டுள்ளன. இவற்றுடன் முதலாளித்துவ வர்க்கத்தினரது அடிவருடிகள் (மென்ஷிவிக்குகள், வலதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள் முதலானேர்) பின்பற்றி வரும் ஆத்திரமூட்டித் தூண்டிவிடும் கொள்கையையும் சேர்த்துக் கொண்டோமானுல் மக்களது மனப்பாங்கில் முழு அளவிலான மாற்றத்தை உண்

டாக்கி, ஒழுங்கும் கட்டுப்பாடும் வாய்ந்த உழைப்புக்குரிய சரியான பாதைக்கு அவர்களை இட்டுவர ஆகச் சிறந்த மிக அதிகமான வர்க்க உணர்வுடைய தொழிலாளர்களும் விவசாயிகளும் எத்தகைய நீடித்த விடாப்பிடியான முயற்சிகளை எடுத்தாக வேண்டுமென்பது முற்றிலும் தெளிவாகும். பெருந்திரளான ஏழை மக்களால் (பாட்டாளிகளாலும் அரைப் பாட்டாளிகளாலும்) உண்டாக்கப் பெறும் மாற்றத்தால்தான் முதலாளித்துவ வர்க்கத்தார் மீதும், இன்னும் குறிப்பாய் மேலும் பிடிவாதமானோரும் எண்ணிக்கையில் அதிகமானோருமாகிய விவசாய முதலாளித்துவ வர்க்கத்தார் மீதும் ஆன வெற்றியை நிறைவு பெறச் செய்ய முடியும்.

முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்தின் புதிய கட்டம்

நமது நாட்டில் முதலாளித்துவ வர்க்கம் வெற்றி கொள்ளப்பட்டிருக்கிறது, ஆனால் இன்னும் அது வேரறுக்கப்படவில்லை இன்னும் அது அழிக்கப்படவில்லை, அறவே தகர்க்கப்படக்கூட இல்லை. எனவேதான் நாம் முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான போராட்டத்தின் மேலும் உயர்வான ஒரு புதிய வடிவத்தை எதிர்நோக்குகிறோம்; மேலும் தொடர்ந்து முதலாளிகளை உடைமை நீக்கம் செய்யும் மிக எளிய பணியிலிருந்து, முதலாளித்துவ வர்க்கம் நிலவுவதை அல்லது இது மீண்டும் உதித்தெழுவதைச் சாத்தியமற்றதாக்கிவிடும் நிலைமைகளைத் தோற்றுவிப்பதென்ற மிகவும் அதிக சிக்கல் வாய்ந்த, கடினமான பணிக்கு மாறிச் செல்வதற்கான போராட்டமாகும் இது. இந்தப் பணி முந்தியதைக் காட்டிலும் அளவுகடந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும் என்பது தெளிவு; இந்தப் பணி நிறைவேற்றி முடிக்கப்படாதவரை சோஷலிசம் சாத்தியமன்று.

மேற்கு ஐரோப்பியப் புரட்சிகளின் அளவுகோலைக் கொண்டு நமது புரட்சியை அளவிடுவோமாயின், 1793லும் 1871லும் வந்தடையப் பெற்ற நிலையினைத் தற்போது நாம் ஏறத்தாழ வந்தடைந்திருப்பது தெரிய வரும். இந்த நிலைக்கு நாம்

உயர்ந்துள்ளது குறித்தும், ஒரு விதத்தில் நிச்சயமாகவே இன்னும் கொஞ்சம் அதிகமாய் முன்னேறியிருப்பது குறித்தும்—அதாவது, மிக உயர்ந்த மாதிரி அரசான சோவியத் ஆட்சியதிகாரத்தை ருஷ்யாவெங்கும் ஆணை பிறப்பித்துப் புகுத்தியுள்ளோம் என்பது குறித்தும்—நியாயமாகவே நாம் பெருமை கொள்ளலாம். ஆயினும் இதுகாறும் சாதிக்கப் பெற்றுள்ளவை குறித்து எவ்விதத்திலும் நாம் திருப்தி கொண்டுவிட முடியாது, ஏனெனில் இப்போதுதான் நாம் சோஷலிசத்துக்கு மாறிச் செல்ல தொடங்கியிருக்கிறோம், இந்தத் திசையில் தீர்மானகரமான காரியத்தை நாம் இன்னமும் செய்தாகவில்லை.

பண்டங்களது உற்பத்தியிலும் வினியோகத்திலும் நாடு தழுவிய அளவில் மிகவும் கறாரான கணக்குப் பதிவுக்கும் கண்காணிப்புக்கும் ஏற்பாடு செய்வதுதான் தீர்மானகரமான காரியமாகும். ஆயினும், முதலாளித்துவ வர்க்கத்தினரிட மிருந்து நாம் எடுத்துக் கொண்ட நிறுவனங்களிலும், பொரு ளாதாரக் கிளைகளிலும் துறைகளிலும் கணக்குப் பதிவையும் கண்காணிப்பையும் நாம் இன்னமும் புகுத்தியாகவில்லை. இது செய்யப்படாத வரை, சோஷலிசத்தைப் புகுத்துவதற்குத் தேவையான இரண்டாவதும், முதலாவதைப் போல் அதே அளவுக்கு அத்தியாவசியமானதுமாகிய பொருள்வகை நிபந்தனையைச் சாதிப்பது குறித்து—அதாவது, உழைப்பின் உற்பத்தித் திறனை தேச அளவில் உயர்த்துவதென்ற நிபந் தனையைச் சாதிப்பது குறித்து—நினைப்பதற்கே வழியில்லை.

ஆதலால்தான், மூலதனத்தை எதிர்த்துத் தொடர்ந்து தாக்குதல் நடத்துவது என்னும் எளிய சூத்திரத்தைக் கொண்டு, தற்போது நம்முன்னுள்ள பணியினை வரையறுக்க இயலவில்லை. மூலதனம் முற்றாக ஒழித்துக் கட்டப்படவில்லை என்பது மெய்தான் என்ற போதிலும், உழைப்பாளி மக்களது இந்தப் பகைவனை எதிர்த்துத் தொடர்ந்து தாக்குவது நிச் சயம் அவசியமே என்ற போதிலும், இம்மாதிரியான ஒரு சூத்திரம் கறாரானதல்ல, ஸ்தூலமானதல்ல; தற்போதைய சூழ்நிலையின் தனியியல்பைக் கணக்கிலெடுத்துக் கொள்வதாய் இல்லை—வருங்காலத்தில் தொடர்ந்து வெற்றிகரமாய்

முன்னேறிச் செல்லும் பொருட்டு இப்போது நமது தாக்குதலைத் ''தற்காலிகமாய் நிறுத்தி வைப்பது'' அவசியமாய் இருக்கும் தனியியல்பைக் கணக்கிலெடுத்துக் கொள்வதாய் இல்லை.

ஓர் ஒப்புமை மூலம் இதனை விளக்கலாம்: மூலதனத்துக்கு எதிரான போராட்டத்தில் நாம் வந்தடைந்திருக்கும் நிலையானது, வெற்றிகர சேனை ஒன்று பகைவனது பிரதேசத்தில், உதாரணமாக ஒரு பாதியையோ மூன்றில் இரு பகுதியையோ பிடித்துக் கொண்டபின், தனது படைகளை அணிதிரட்டுதல், ஆயுத தளவாட இருப்புகளை அதிகரித்துக் கொள்ளுதல், போக்குவரத்து வசதிகளைச் சீராக்கி மேலும் உறுதியாக்கிக் கொள்ளுதல், புதிய கிடங்குகளை அமைத்தல், புதிய சேமப்படைகளைக் கொண்டு வருதல் முதலானவற்றைச் செய்து முடிக்கும் பொருட்டு மேலே முன்னேறிச் செல்வதைச் சிறிது காலத்துக்கு நிறுத்தி வைக்க வேண்டி வரும் நிலைக்கு ஒப்பானதாகும். வெற்றிகர சேனையானது மேற்கண்ட நிலைமைகளில் தனது தாக்குதலை நிறுத்தி வைப்பது அவசியமாவது எதன் பொருட்டெனில், பகைவனது பிரதேசத்தின் எஞ்சிய பகுதியையும் பிடிக்கும் பொருட்டு தான், அதாவது முழுநிறை வெற்றி பெறும் பொருட்டு தான். இத்தருணத்தில் எதார்த்த நிலவரங்கள், மூலதனத்துக்கு எதிரான தாக்குதல் இவ்விதம் ''தற்காலிகமாய் நிறுத்தப்படுவதை'' நெறியாணை செய்கின்றன என்பதைப் புரிந்து கொள்ளத் தவறுகிறவர்கள், தற்போதுள்ள அரசியல் நிலைமை குறித்து எதையுமே புரிந்து கொள்ளத் தவறுகிறவர்களே ஆவர்.

மூலதனத்துக்கு எதிரான தாக்குதல் ''தற்காலிகமாய் நிறுத்தப்பட'' வேண்டுமென்று மேற்கோள் குறிகளிட்டே, அதாவது உருவக முறையிலேயே, குறிப்பிட வேண்டும், இது கூறாமலே விளங்கும் ஒன்று. சாதாரண யுத்தத்தில், தாக்குதலை நிறுத்தும்படி பொதுவான உத்தரவு பிறப்பிக்க முடியும், முன்னேறுதல் மெய்யாகவே நிறுத்தப்பட முடியும். ஆனால் மூலதனத்துக்கு எதிரான யுத்தத்தில் முன்னேறுதல் நிறுத்தப்பட முடியாதது, மூலதனம் தொடர்ந்து மேலும் உடைமை நீக்கம் செய்யப்படுதலை நாம் கைவிடு

வது என்பது நினைக்கவே முடியாத காரியம். நமது பொரு ளாதார, அரசியல் வேலைகளின் ஈர்ப்பு மையம் இடம்பெய ருதல் குறித்தே இங்கு நாம் விவாதிக்கிறோம். உடைமை பறிப்போர் நேரடியாகவே உடைமைநீக்கம் செய்யப்படு வதற்கான நடவடிக்கைகள் இதுகாறும் முன்னணியில் இருந் தன. முதலாளிகள் ஏற்கெனவே உடைமை நீக்கம் செய்யப் பட்டுவிட்ட அந்த நிறுவனங்களிலும் மற்றும் ஏனைய எல்லா நிறுவனங்களிலும் கணக்குப் பதிவுக்கும் கண்கா ணிப்புக்கும் ஏற்பாடு செய்யும் பணி இப்போது முன்னணிக்கு விரைகிறது.

இதுகாறும் நாம் செய்து வந்த அதே வேகத்தில் இனி யும் தொடர்ந்து மூலதனத்தை உடைமைநீக்கம் செய்வ தெனத் தீர்மானித்தோமாயின், நிச்சயம் நாம் தோல்வி யுறவே செய்வோம். ஏனெனில் பாட்டாளி வர்க்கக் கணக்குப் பதிவுக்கும் கண்காணிப்புக்கும் ஏற்பாடு செய்வதற்கான நமது வேலையானது, ''உடைமை பறிப்போர் உடைமை நீக்கம் செய்யப்படும்'' நேரடி வேலையிலிருந்து பின்தங்கி விட்டது என்பது தெளிவாகவே தெரிகிறது—சிந்தனையுள்ள ஒவ்வொருவருக்கும் தெளிவாகவே தெரிகிறது. கணக்குப் பதிவையும் கண்காணிப்பையும் ஒழுங்குபடுத்துவதில் இப் போது நாம் நமது முயற்சிகள் அனைத்தையும் ஒருமுனைப் படுத்துவோமாயின், இந்தப் பிரச்சினைக்கு நம்மால் தீர்வு காண முடியும், இழக்க நேர்ந்த நேரத்தை ஈடுசெய்து கொள்ள முடியும், மூலதனத்துக்கு எதிரான நமது ''போராட் டத்தில்'' நாம் முழுநிறை வெற்றி பெறுவோம்.

ஆனால், இழக்க நேர்ந்த நேரத்தை ஈடுசெய்து கொண் டாக வேண்டுமென நாம் ஒத்துக் கொள்வது, ஏதோ பிழை புரிந்துவிட்டதாய் ஒத்துக் கொள்வதற்குச் சமமாகாதா? இல்லவே இல்லை. இன்னொரு ராணுவ உதாரணத்தை எடுத்துக் கொள்ளலாம். குதிரைப் படைகளைக் கொண்டே பகை வனைத் தோற்கடித்துப் பின்னால் தள்ள முடியுமாயின், இது செய்யப்படவே வேண்டும். ஆனால் குறிப்பிட்ட ஒரு வரம்பு வரையில்தான் இதனை வெற்றிகரமாகச் செய்ய முடியுமா யின், அப்போது அந்த வரம்பை வந்தடைந்ததும் கன பீரங்கி

களைக் கொண்டு வருவது அவசியமாகி விடலாம், இப்படி நேர்வது முற்றிலும் சாத்தியமே. கன பீரங்கிகளைக் கொண்டு வருவதில் இழக்க நேர்ந்த காலத்தை இப்போது சரிசெய்து கொண்டாக வேண்டுமென ஒத்துக் கொள்வதன் மூலம், வெற்றிகரமான குதிரைப் படைத் தாக்குதல் தவறானது என்று நாம் ஒத்துக் கொண்டுவிடவில்லை.

மூலதனத்தின் மீது ''செங் காவலர்'' தாக்குதல் தொடுத்ததற்காக, முதலாளித்துவ வர்க்கத்தின் அடிவருடிகள் அடிக்கடி நம்மைக் கண்டனம் செய்தனர். இந்தக் கண்டனம் அபத்தமானது, பணமூட்டைகளது அடிவருடிகளால் மட்டுமே செய்யப்படத் தக்கது. ஏனெனில் மூலதனத்தின் மீது ''செங் காவலர்'' தாக்குதல் தொடுப்பது ஒரு காலத்தில் சூழ்நிலைமைகளின் காரணமாய் அத்தியாவசியமாய் இருந்தது. முதலாவதாக, அந்தக் காலத்தில் மூலதனமானது கேரென்ஸ்கி மூலமும், கிரஸ்னேவ், சாவின்கவ், கோட்ஸ் மூலமும் (கெகெச்கோரி இப்போதுங்கூட இம்மாதிரியான எதிர்ப்பு காட்டி வருகிறார்), தூத்தவ், பொகயேவ்ஸ்கி மூலமும் ராணுவ எதிர்ப்பைத் தோற்றுவித்தது. இராணுவ எதிர்ப்பை ராணுவ வழியிலே அல்லாமல் வேறு எவ்விதத்திலும் முறியடிக்க முடியாது. உழைப்போரும் சுரண்டப்படுவோருமான மக்களைச் சுரண்டலாளர்களது ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கும் உன்னதமான, தலையாய வரலாற்று இலட்சியத்துக்காகச் செங் காவலர்கள் போராடினர்.

இரண்டாவதாக, அந்தக் காலத்தில் நம்மால் அடக்கி நசுக்கும் முறைகளுக்குப் பதிலாய் நிர்வாக முறைகளை முன்னணிக்குக் கொண்டுவர முடியவில்லை, ஏனெனில் நிர்வாகக் கலையானது அனுபவத்தின் வாயிலாகப் பெறப்படுவதே அன்றி இயல்பார்ந்த ஒன்றல்ல. அந்தக் காலத்தில் நாம் இந்த அனுபவம் இல்லாதோராய் இருந்தோம், இப்போது நாம் இதனை அடைந்திருக்கிறோம். மூன்றாவதாக, அறிவியலின், தொழில் நுட்பத்தின் பல்வேறு துறைகளிலுமான நிபுணர்கள் அந்தக் காலத்தில் நம் வசம் இருக்கவில்லை, ஏனெனில் அந்நிபுணர்கள் பொகயேவ்ஸ்கிகளது அணிகளில் சேர்ந்து போராடிக்கொண்டிருந்தார்கள், அல்லது நாசவேலையின் மூலம்

முறையாகவும் விடாப்பிடியாகவும் சாத்துவீக எதிர்ப்பைத் தோற்றுவிக்க இயலும் நிலையில் இருந்தார்கள். இப்போது நாம் இந்த நாசவேலையைத் தகர்த்துவிட்டோம். மூலதனத் தின் மீதான ''செங் காவலர்'' தாக்குதல் வெற்றி கண்டது, வாகை சூடியது; மூலதனத்தின் ராணுவ எதிர்ப்பையும், நாசவேலை மூலமான அதன் எதிர்ப்பையும் நாம் தகர்த் திட்டோம்.

அப்படியானல், மூலதனத்தின் மீதான ''செங் காவலர்'' தாக்குதல் எப்போதுமே எல்லாச் சூழ்நிலைமைகளிலும் சரி யானதுதான் என்று பொருள்படுமா? மூலதனத்தை எதிர்த்துப் போராட நமக்கு வேறு வழி இல்லை என்ரு அர்த்தம்? இவ்வாறு நினைப்பது சிறுபிள்ளைத்தனமாகும். குதிரைப் படை யின் துணை கொண்டு நாம் வெற்றியடைந்தோம், ஆனல் நம்மிடம் கன பீரங்கிகளும் இருக்கின்றன. அடக்கி நசுக்கும் முறைகள் மூலம் நாம் வெற்றியடைந்தோம்; நிர்வாக முறை கள் மூலமும் நம்மால் வெற்றியடைய முடியும். பகைவனை எதிர்த்துப் போராடுவதற்கான நமது முறைகளைச் சூழ்நிலை மைகளில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப எப்படி மாற்றிக் கொள்வதென்று நாம் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். சாவின்கவ்களையும் கெகெச்கோரிகளையும் ஏனைய எல்லா நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ எதிர்ப்புரட்சியாளர்களை யும் ''செங்காவலர்'' முறையில் நசுக்கியடக்குவதைக் கணப் பொழுதுக்கும் நாம் கைவிட்டுவிடப் போவதில்லை. ஆனல் செங் காவலர் தாக்குதல்கள் தேவையாயிருந்த காலக்கூறு முடிவடைந்துவிட்ட (வெற்றிகர முடிவை அடைந்துவிட்ட) ஒரு நேரத்தில், எவ்வகையான முதலாளித்துவ வர்க்கமும் எழுச்சியுற்று வளருவதைத் தடுக்கும் பொருட்டு, நிலத்தைத் திரும்பவும் உழுவதற்காகப் பாட்டாளி வர்க்க அரசு அதிகாரமானது முதலாளித்துவ நிபுணர்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய காலக் கூறு வந்து சேர்ந்திருக்கும் ஒரு நேரத்தில், ''செங் காவலர்'' முறைகளை முன்னணியில் வைக் கும் அளவுக்கு நாம் முட்டாள்தனமாய் இருக்கப் போவ தில்லை.

இது ஒரு தனியியல்பு வாய்ந்த சகாப்தம், அல்லது

வளர்ச்சிக் கட்டம் என்பது இன்னும் பொருத்தமாயிருக்கும். மூலதனத்தை அறவே தோற்கடிக்கும் பொருட்டு, நமது போராட்டத்தின் வடிவங்களை நாம் இந்தக் கட்டத்தின் தனியியல்பு வாய்ந்த நிலைமைகளுக்குத் தகவமைத்துக் கொள்ளக் கூடியோராய் இருத்தல் வேண்டும்.

அறிவியல், தொழில்நுட்பம், அனுபவம் ஆகியவற்றின் பல்வேறு துறைகளையும் சேர்ந்த நிபுணர்களது வழிகாட்டலின்றி சோஷலிசத்துக்கு மாறிச் செல்லுதல் சாத்தியமன்று. ஏனென்றால் உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதில், (முதலாளித்துவத்தால் சாதிக்கப் பெற்றுள்ளதன் அடிப்படையில்), முதலாளித்துவத்துடன் ஒப்பிடுகையில் இன்னும் மேலான நிலைக்கு உணர்வுபூர்வமாய் பெருமளவிலான முன்னேற்றம் ஏற்பட வேண்டுமென சோஷலிசம் கோருகிறது. இந்த முன்னேற்றத்தைச் சோஷலிசமானது தனக்கே உரிய வழியில், தனக்கே உரிய முறைகளில்—அல்லது இதையே மேலும் ஸ்தூலமான வடிவில் சொல்வதெனில், சோவியத் முறைகளில் சாதனை பெறச் செய்தாக வேண்டும். நிபுணர்களாக இருப்போர், அவர்களை நிபுணர்களாகச் செய்த சமூகச் சுற்றுச்சார்பு அனைத்தின் காரணமாய், தவிர்க்க முடியாதபடி பிரதானமாயும் முதலாளித்துவ இயல்பு வாய்ந்தோராய் இருக்கின்றனர். நமது பாட்டாளி வர்க்கமானது ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டதும் தேச அளவில் கணக்குப் பதிவுக்கும் கண்காணிப்புக்கும் ஒழுங்கமைப்புக்கும் ஏற்பாடு செய்யும் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு கண்டிருந்தால் (போரின் காரணமாகவும் ருஷ்யாவின் பின்தங்கிய நிலையின் காரணமாகவும் இது சாத்தியமற்றதாகி விட்டது), நாம் நாசவேலையைத் தகர்த்து விட்ட பின்னர் இந்த முதலாளித்துவ நிபுணர்களைச் சர்வவியாபகமான கணக்குப் பதிவின் மூலமும் கண்காணிப்பின் மூலமும் பூரணமாக நமக்குக் கீழ்ப்படியுமாறு செய்திருக்கலாம். பொதுவாகக் கணக்குப் பதிவையும் கண்காணிப்பையும் புகுத்துவதில் கணிசமான ‘‘தாமதம்’’ ஏற்பட்டுவிட்டதனால், நாசவேலையை நாம் வெற்றி கொண்டுங்கூட, இன்னும் நாம் முதலாளித்துவ நிபுணர்களை நமது செயலாட்சியின் கீழ்

வரச் செய்வதற்கான நிலைமைகளைத் தோற்றுவித்தாகவில்லை. நாசவேலையினரில் பெருந் திரளானோர் ''வேலைக்கு வருகிறார்கள்; ஆனால் சிறந்த ஒழுங்கமைப்பாளர்களையும் உயர் படியிலுள்ள நிபுணர்களையும் அரசானது, ஒன்று பழைய வழியில், முதலாளித்துவ வழியில் (அதாவது, உயர்ந்த சம்பளங்கள் கொடுத்து) உபயோகித்துக் கொள்ள முடியும், அல்லது புதிய வழியில், பாட்டாளி வர்க்க வழியில் (அதாவது, கீழிருந்து தேச அளவில் கணக்குப் பதிவுக்கும் கண்காணிப்புக்குமான நிலைமைகளைத் தோற்றுவித்து, தவிர்க்க முடியாத வகையில், தானாகவே இவ்விதம் நிபுணர்களைக் கீழ்ப்படியச் செய்து நமது வேலைகளில் அவர்களை அமர்த்தி) உபயோகித்துக் கொள்ள முடியும்.

இப்போது நாம் பழைய, முதலாளித்துவ வழியை மேற்கொண்டு, உயர்படியிலுள்ள முதலாளித்துவ நிபுணர்களது ''சேவைக்காக'' மிக உயர்ந்த விலை கொடுக்க உடன்பட்டாக வேண்டியிருக்கிறது. இந்த விவகாரம் குறித்து பரிச்சயமுள்ளவர்கள் எல்லோரும் இதனைச் சரியாக கணித்திருக்கிறார்கள். ஆனால் பாட்டாளி வர்க்க அரசால் இந்த நடவடிக்கை ஏற்கப்படுவதின் உட்பொருள் குறித்து எல்லோரும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. இந்த நடவடிக்கை ஒரு சமரசமே என்பது தெளிவு; எல்லாச் சம்பளங்களும் சராசரித் தொழிலாளிச் சம்பளங்களுக்குச் சரிமட்டமாகக் குறைக்கப்பட வேண்டுமெனக் கோரி, தன்னல நாட்டத்தைச் சொல்லளவில் அல்ல, செயலில் எதிர்த்துப் போராட வேண்டுமென வற்புறுத்துவதுமான பாரிஸ் கம்யூன் கோட்பாடுகளிலிருந்தும் எல்லா பாட்டாளி வர்க்க அரசின் கோட்பாடுகளிலிருந்தும் விலகிச் செல்லுதலே ஆகும்.

தவிரவும் இந்த நடவடிக்கை மூலதனத்துக்கு எதிரான தாக்குதல் ஒரு குறிப்பிட்ட துறையில், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு நிறுத்தி வைக்கப்படுவதை உணர்த்துவது (ஏனெனில் மூலதனம் ஒரு பணத்தொகை அல்ல, மாறாக ஒரு திட்டவட்டமான சமூக உறவாகும்). மட்டுமன்றி, உயர்ந்த சம்பளங்களைச் சராசரித் தொழிலாளிச் சம்பளங்களுக்குச் சரிமட்டமாகக் குறைத்திடும் கொள்கையை[22] ஆரம்பம்

தொட்டே பிரகடனம் செய்தும் பின்பற்றியும் வந்துள்ள நமது சோஷலிஸ்டு சோவியத் அரசாட்சி, ஓரடி பின்னேக்கி எடுத்து வைப்பதையும் உணர்த்தும் என்பது தெளிவு.

முதலாளித்துவ வர்க்கத்தின் அடிவருடிகள், முக்கியமாய் மென்ஷிவிக்குகளேயும் நோவயா ஷீஸ்ன் ஆட்களேயும்[23] வலது சாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களேயும் போன்ற சில்லரைப் பேர்வழிகள், ஓரடி பின்னேக்கி எடுத்து வைக்கிறேம் என்ற நமது குறை ஏற்புக் குறித்துக் கொக்கரிப்பார்கள் என்பது மெய்தான். ஆனல் இவர்களது கொக்கரிப்புப் பற்றி நாம் கவலேப்படத் தேவையில்லே. நமது தவறுகளேயும் பலவீனங்களேயும் மூடிமறைக்காமல் நாம் சோஷலிசத்தை அடைவதற்கான மிகமிகக் கடினமான புதிய பாதையின் பிரத்தியேக இயல்புகளே ஆராய்ந்தாக வேண்டும், செய்யாமல் விட்டு வைக்கப்பட்டவற்றைத் தாமதமின்றி செய்து முடிக்க முயல வேண்டும். மிதமிஞ்சிய உயர்ந்த சம்பளங்கள் மூலம் முதலாளித்துவ நிபுணர்களே ஈடுபடுத்திக் கொள்வது பாரிஸ் கம்யூனின் கோட்பாடுகளிலிருந்து பின்வாங்கிச் செல்லுதலாகும் என்பதை மக்களிடமிருந்து மூடிமறைப்பது, முதலாளித்துவ அரசியலாளர்களது இழிநிலேக்குச் சரிந்துவிடுவதும் மக்களே ஏமாற்றுவதுமே ஆகும். எதற்காக, ஏன் நாம் ஓரடி பின்னேக்கி எடுத்து வைக்கிறேம் என்பதை ஒளிவுமறைவின்றி விளக்கிச் சொல்லி, இழந்த நேரத்தைச் சரிசெய்வதற்கு கிடைக்கக் கூடிய வழிமுறைகள் என்னவென்று இதன் பிறகு பகிரங்கமாய் விவாதிப்போமாயின், அதன் பொருள் மக்களுக்குப் போதனேயளிக்கிறேம், அனுபவத்திலிருந்து கற்றறிந்து கொள்கிறேம், சோஷலிசத்தை எப்படிக் கட்டியமைப்பதென்று மக்களுடன் சேர்ந்து பயின்று கொள்கிறேம் என்பதாகும். வெற்றியாளர் சிற்சில தவறுகளேப் புரிந்திராத, பகுதியளவிலான பின்னடைவுகளுக்கு ஆட்படாத, தற்காலிகமாக எதையேனும் விட்டுக் கொடுக்கவும் சில இடங்களில் பின்வாங்கவும் நேர்ந்திராத வெற்றிகரமான ராணுவப் போர்ச் செயல் எதையும் வரலாற்றில் காண்பது அரிது. முதலாளித்துவத்தை எதிர்த்து நாம் நடத்திவரும் ''போர்ச் செயல்'' மிகமிகக் கடினமான

ராணுவப் போர்ச் செயலையும் விட பத்து லட்சம் மடங்கு அதிகக் கடினமானது. பகுதியளவிலான குறிப்பிட்ட ஒரு பின்வாங்குதலுக்காக மனச்சோர்வுக்கு இடந்தருவது மடமையாகும், வெட்கக்கேடாகும்.

இப்போது நாம் நடைமுறைக் கண்ணேட்டத்திலிருந்து இந்தப் பிரச்சினையை விவாதிக்கலாம். முடியுமான முழு வேகத்தில் பொருளாதாரப் புத்தாக்கத்தை அடைவதற்கான திசையிலே மக்களது உழைப்பை நெறியாண்மை புரியும் பொருட்டு ருஷ்யாவின் சோவியத் குடியரசுக்கு அறிவியல், தொழில்நுட்பம், நடைமுறை அனுபவம் ஆகியவற்றின் பல்வேறு துறைகளிலும் ஆன முதல் தரமான விஞ்ஞானிகள் நிபுணர்கள் ஆயிரம் பேர் தேவைப்படுவதாக வைத்துக் கொள்வோம். இந்த ‘‘முதல்தரத் தாரகைகளுக்கு’’ ஆண்டு தோறும் தலைக்கு 25,000 ரூபிள் வீதம் தர வேண்டியிருப் பதாக வைத்துக் கொள்வோம்—தொழிலாளர்களிடம் ஊழல் மலிந்துவிட்டதாய் யாவரிலும் பலமாகக் கூச்சலிடு வோரில் பெரும்பாலானேர் முதலாளித்துவ நெறிமுறை களால் படுமோசமாகச் சீரழிக்கப்பட்டு ஊழலில் மூழ்கிய வர்களே ஆவர். இந்த மொத்தத் தொகை (2,50,00,000 ரூபிள்) இரட்டிப்பாக்கப்பட வேண்டுமென வைத்துக் கொள் வோம் (மிகவும் முக்கியமான ஒழுங்கமைப்புப் பணிகளும் தொழில்நுட்பப் பணிகளும் குறிப்பிடத்தக்க வெற்றியோடும் வேகத்தோடும் நிறைவேற்றப்படுகையில் போனசுகள் அளிக்க வேண்டியிருப்பதாகக் கொண்டால்); அல்லது நான்கு மடங் காகவுங்கூட அதிகமாக்கப்பட வேண்டுமென வைத்துக் கொள்வோம்(மேலும் அதிகமாக அவசியப்படும் அயல்நாட்டு நிபுணர்கள் சில நூறு பேரை நாம் வருவித்து ஈடுபடுத்த வேண்டியிருப்பதாகக் கொண்டால்). மக்களது உழைப்பை நவீன விஞ்ஞான, தொழில்நுட்ப வழிகளில் திருத்தியமைத்து ஒழுங்கு செய்வதற்காக சோவியத் குடியரசு ஐந்து அல்லது பத்து கோடி ரூபிள் வருடாந்தரச் செலவை ஏற்க நேர்வது அளவு மீறியதாகவோ, பெரும் சுமையாகவோ இருக்குமா என்பதே கேள்வி. நிச்சயமாய் அப்படி ஒன்றும் இருக் காது. வர்க்க உணர்வு கொண்ட தொழிலாளர்களிலும்

விவசாயிகளிலும் மிகப் பெருவாரியானோர் இந்தச் செலவை ஆமோதிக்கவே செய்வார்கள். ஏனெனில் நமது பின்தங்கிய நிலை காரணமாய் நாம் பல நூறு கோடிக் கணக்கில் இழக்கிறோம் என்பதும், முதலாளித்துவ படிப்பாளிப் பகுதியின் ''தாரகைகள்'' எல்லோரையும் நமது வேலைகளில் சுயவிருப்புடன் பங்கு கொள்ளுமாறு தூண்டும்படி, அந்த அளவு ஒழுங்கமைப்பையும் கணக்குப் பதிவையும் கண்காணிப்பையும் நாம் இன்னமும் வந்தடையவில்லை என்பதும் நடைமுறை அனுபவத்தின் வாயிலாய் அவர்களுக்குத் தெரியும்.

இந்தப் பிரச்சினைக்கு மற்றொரு பக்கம் உண்டென்பது கூறாமலே விளங்கும். உயர்ந்த சம்பளங்கள் ஊழல்படுத்துகிறவை என்பது மறுக்க முடியாதது. இந்தப் புன்மைக்கு சோவியத் அதிகாரிகள் மட்டுமல்ல (முக்கியமாய், புரட்சியானது அதிவேகமாய் நடந்தேறியதால் சிற்சில சாகசக்காரர்களும் கயவர்களும் அதிகாரப் பதவிகளில் புகுவதைத் தடுக்க முடியவில்லை, இவர்களும் மற்றும் தகாத அல்லது நேர்மையற்ற கமிசார்கள் பலரும் அரசு நிதிகளை மோசடி செய்வதில் ''முதல் தர நபர்களாய்'' விளங்கத் தயங்க மாட்டார்கள்) தொழிலாளர் பெருந்திரளினரும் இதற்கு இலக்காகிவிடுவர். ஆனால் முதலாளித்துவம் நமக்கு விட்டுச் சென்றுள்ள இந்தத் தீமையை உடனடியாக ஒழித்துக்கட்டி விட முடியாது; நம்மை ஒழுங்கமைத்துக் கொள்வதன் மூலம் தான், நமது அணிகளில் கட்டுப்பாட்டைக் கடுமையாக்கிக் கொள்வதன் மூலம்தான், ''முதலாளித்துவம் விட்டுச் சென்றுள்ள ஆஸ்தியைப் பாதுகாத்து வருவோரும்'', ''முதலாளித்துவ மரபுகளைப் பின்பற்றி வருவோருமான'' எல்லோரையும், அதாவது சோம்பேரிகளையும் புல்லுருவிகளையும் அரசு நிதிகளை (இப்போது எல்லா நிலங்களும் எல்லா ஆலைகளும் எல்லா ரயில்பாதைகளும் சோவியத் குடியரசின் ''அரசு நிதிகள்'' ஆகும்) கையாடுவோரையும் நமது அணிகளிலிருந்து களையெடுப்பதன் மூலமும்தான் சோவியத் குடியரசை ஐந்து கோடி அல்லது பத்து கோடி ரூபிள் வருடாந்தரக் ''கப்பம்'' (நாடு தழுவிய கணக்குப் பதிவு மற்றும் கண்காணிப்பைக் கீழ்மட்டத்தில் இருந்து ஒழுங்கமைப்

பதிலான நமது பின்தங்கிய நிலைமைக்குச் செலுத்தும் கப்பம்) செலுத்தும் கடப்பாட்டிலிருந்து நாம் விடுவிக்க முடியும்—சிந்தனையுள்ள நேர்மையான ஒவ்வொரு தொழிலாளியும் ஏழை விவசாயியும் இதில் நம்முடன் உடன்படுவார், இதனை ஒத்துக் கொள்வார். வர்க்க உணர்வு படைத்த, முன்னேறிய தொழிலாளர்களும் ஏழை விவசாயிகளும் சோவியத் நிறுவனங்களின் துணை கொண்டு கட்டுப்பாடு மிக்கவர்களாகி, தம்மை ஒருங்கிணைத்துக் கொண்டு, ஓராண்டில் சக்தி வாய்ந்த உழைப்புக் கட்டுப்பாட்டினைத் தோற்றுவிப்பார்களாயின், பிறகு ஓராண்டில் நாம் இந்தக் ''கப்பத்தை'' உதறியெறிந்து விடலாம். இதற்கும் முன்பேகூட நாம் இதனைக் குறைத்துக் கொள்ள முடியும்... நமது தொழிலாளர்கள், விவசாயிகளது உழைப்புக் கட்டுப்பாட்டிலும் ஒழுங்கமைப்பிலும் நாம் சாதிக்கும் வெற்றிகளுக்குத் தகுந்த விகிதத்தில் இதனைக் குறைத்துக் கொள்ள முடியும். தொழிலாளர்களும் விவசாயிகளுமான நாம் முதலாளித்துவ நிபுணர்களை நமக்குக் கற்றுத் தரும்படி வைத்து சிறந்த உழைப்புக் கட்டுப்பாட்டையும் மிக நவீன உழைப்பு நுட்பத்தையும் எவ்வளவு சீக்கிரமாகக் கற்றறிந்து கொள்கிறோமோ, அவ்வளவு சீக்கிரமாய் இந்த நிபுணர்களுக்குச் செலுத்த வேண்டிய ''கப்பத்திலிருந்து'' நம்மைநாம் விடுவித்துக் கொள்வோம்.

பாட்டாளி வர்க்கத்தின் மேற்பார்வையில் பொருளுற்பத்திக்கும் வினியோகத்துக்கும் நாடு தழுவிய அளவில் கணக்குப் பதிவுக்கும் கண்காணிப்புக்கும் ஏற்பாடு செய்வதற்கான நமது வேலை, உடைமைபறிப்போரை நேரடியாக உடைமை நீக்கம் செய்வதற்கான நமது வேலையிலிருந்து வெகுவாகப் பின்தங்கிவிட்டது. தற்போதைய நிலைமையின் பிரத்தியேக இயல்புகளையும் இவற்றிலிருந்து பெறப்படும் சோவியத் அரசாங்கப் பணிகளையும் புரிந்து கொள்வதற்கு இந்த முன்கூற்று அடிப்படையான முக்கியத்துவம் வாய்ந்ததாகும். முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிரான நமது போராட்டத்தின் ஈர்ப்பு மையம் இத்தகைய கணக்குப் பதிவுக்கும் கண்காணிப்புக்கும் ஏற்பாடு செய்வதை நோக்கி

இடம் பெயர்ந்து வருகிறது. இதனைத் துவக்க நிலையாகக் கொண்டால்தான், வங்கிகளை நாட்டுடைமை ஆக்குவதும், அயல் நாட்டு வாணிபத்தை ஏகபோகமாக்குவதும், பணப் புழக்கத்தை அரசின் கண்காணிப்பின் கீழ் கொண்டுவருவதும், பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டத்தில் திருப்திகரமாய் இருக்கக் கூடிய சொத்து, மற்றும் வருமான வரியை அமுலுக்குக் கொண்டுவருவதும், கட்டாய உழைப்புச் சேவையைப் புகுத்துவதுமாகிய துறைகளில் பொருளாதார, நிதிக் கொள்கையின் உடனடிப் பணிகளைச் சரிவர நிர்ணயிக்க முடியும்.

இந்தத் துறைகளில் (மிகமிக முக்கிய துறைகள் இவை) சோஷலிசச் சீர்திருத்தங்களைப் புகுத்துவதில் நாம் வெகுவாகப் பின்தங்கியிருக்கிறோம். கணக்குப் பதிவும் கண்காணிப்பும் பொதுவாகப் போதுமான அளவுக்கு ஏற்பாடு செய்யப்படாததுதான் இதற்குரிய காரணமாகும். இது மிகக் கடினமான பணிகளில் ஒன்றாகும் என்பதைக் கூறத் தேவையில்லை. யுத்தத்தால் உண்டான அழிவின் காரணமாய், நீண்ட காலப் போக்கிலேதான் இந்தப் பணியைச் செய்து முடிக்க முடியும். இங்கேதான் முதலாளித்துவ வர்க்கத்தினர்—குறிப்பாயும் பெருமளவில் இருக்கும் குட்டிமுதலாளித்துவ, விவசாய முதலாளித்துவ பகுதியினர்—ஏற்கெனவே ஏற்பாடு செய்யப்பட்டு வரும் கண்காணிப்பைச் சீர்குலைத்தும், உதாரணமாகத் தானிய ஏகபோகத்தைச் சீர்குலைத்தும், இலாபக் கொள்ளைக்கும் ஊகவாணிபத்துக்குமான வசதி நிலைகளைக் கைப்பற்றியும் மிகக் கடுமையாய்ப் போராடுகின்றனர், என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. நாம் பிறப்பித்துள்ள அரசாணைகளின்படி செய்யப்பட வேண்டிய காரியங்களைப் போதிய அளவில் நிறைவு செய்யாமல் பின்தங்கியிருக்கிறோம். ஏற்கெனவே சட்டமாகியுள்ள (ஆனல் இன்னும் எதார்த்த நடைமுறையாகாமல் இருந்து வரும்) சீர்திருத்தங்களின் அடிப்படைகளைக் காரியக் கண்ணோட்டத்துடன் நடைமுறையில் சித்தி பெறச் செய்வதில் எல்லா முயற்சிகளையும் ஒருசேர ஈடுபடுத்துவதுதான் தற்போதைய தலைமையான பணியாகும்.

வங்கிகளை நாட்டுடைமையாக்குதலைத் தொடர்ந்து நடத்திச் செல்லும் பொருட்டும், சோஷலிசத்தின் கீழ் பொதுக்கணக்குப் பதிவின் கணு மையங்களாக வங்கிகளை மாற்றுவதை நோக்கி உறுதியாக முன் செல்லும் பொருட்டும், மக்கள் வங்கியின் கிளைகளது எண்ணிக்கையை அதிக மாக்குவதிலும், வைப்புத் தொகைகளைக் கவர்ந்து இழுப்பதிலும், பொது மக்கள் வைப்புத் தொகைகள் செலுத்துவதையும் திருப்பியெடுப்பதையும் சுலபமாக்குவதிலும், நீள் வரிசைகளில் காத்திருக்க நேர்வதை ஒழித்திடுவதிலும், இலஞ்சம் வாங்குவோரையும் மோசடிக்காரர்களையும் பிடிப்பதிலும் சுடுவதிலும், இன்ன பிறவற்றிலும் முதலாவதாகவும் முக்கியமாகவும் நாம் மெய்யான வெற்றி பெற்றாக வேண்டும். முதலில் ஆக எளியவற்றை மெய்யாகவே செய்து முடித்தாக வேண்டும், கிடைக்கக் கூடியவற்றைச் சரிவர ஒழுங்கு செய்தாக வேண்டும், பிறகு அதிக சிக்கலான காரியங்களைச் செய்வதற்குத் தயாராக வேண்டும்.

ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டிருக்கும் (தானியத்திலும் தோலிலும் பிறவற்றிலும்) அரசு ஏகபோகங்களை உறுதியாக நிலைபெறச் செய்தும் மேம்படுத்தியும் வர வேண்டும், இவ்வாறு செய்வது மூலம் அயல்நாட்டு வாணிபத்தை அரசு ஏகபோகமாக்குவதற்குத் தயார் செய்தாக வேண்டும். இந்த ஏகபோகம் இல்லையேல், ''கப்பம்''[24] செலுத்துவதன் மூலம் அன்னிய மூலதனத்திடமிருந்து ''நம்மை விடுவித்துக் கொள்ள'' முடியாது. சோஷலிசத்தைக் கட்டியமைப்பதற்கான சாத்தியப்பாடு, குறிப்பிட்ட ஓர் இடைக் காலகட்டத்துக்கு அன்னிய மூலதனத்துக்குக் குறிப்பிட்ட அளவிலான ''கப்பம்'' செலுத்துவதன் மூலம் நமது உள்நாட்டுப் பொருளாதாரச் சுயேச்சை நிலையைப் பாதுகாத்துக் கொள்கிறோமா என்பதையே முற்றிலும் சார்ந்திருக்கிறது.

பொதுவாக வரிகளையும், குறிப்பாக சொத்து, வருமான வரியையும் வசூலிப்பதிலும் நாம் வெகுவாகப் பின்தங்கி வருகிறோம். முதலாளித்துவ வர்க்கத்தாருக்கு இழப்பீட்டுத் தொகைகள் விதிப்பதானது—கோட்பாட்டு அளவில் இது முற்றிலும் அனுமதிக்கக் கூடியதும் பாட்டாளி வர்க்கத்

தால் ஆமோதிக்கப்படத்தக்கதுமான நடவடிக்கையே—இத் துறையில் இன்னமும் நாம் நிர்வாக வழி முறைகளைக் காட்டிலும் அதிகமாய் போர்நடப்பு வழி முறைகளுக்குத்தான் (ருஷ்யாவைச் செல்வந்தர்களிடமிருந்து ஏழையெளியோருக்கு வென்று கொள்வதற்கானவை) அருகாமையில் இருக்கிறோம் என்பதையே காட்டுகிறது. ஆனால் மேலும் வலிமை வாய்ந்தோராகும் பொருட்டும், மேலும் உறுதியாகக் காலூன்றி நிற்கும் பொருட்டும் பின்கூறிய முறைகளையே நாம் கடைப்பிடிக்க வேண்டும், முதலாளித்துவ வர்க்கத்தாருக்கு விதிக்கப்படும் இழப்பீட்டுத் தொகைகளுக்குப் பதிலாய் நாம் தொடர்ச்சியாகவும் முறையாகவும் சொத்து, வருமான வரி வசூலிப்பைக் கைக்கொள்ள வேண்டும். இந்த வரி வசூலிப்பு பாட்டாளி வர்க்க அரசுக்கு மேலும் கூடுதலான வரவு கிடைக்கச் செய்யும்; நம் தரப்பில் மேலும் சிறப்பான ஒழுங்கமைப்பினையும், மேலும் சிறப்பான கணக்குப் பதிவையும் கண்காணிப்பையும் இது கோருகின்றது[25].

கட்டாய உழைப்புச் சேவையைப் புகுத்துவதிலும் நாம் கால தாமதம் செய்திருப்பதானது, தற்போது முன்னணிக்கு வந்து கொண்டிருக்கும் பணி சரிநுட்பமாயும் தயாரிப்பு ஒழுங்கமைப்பு வேலையேதான் என்பதைக் காட்டுகிறது. இந்த வேலை ஒரு புறத்தில் நமது சாதனைகளை முடிவாக உறுதி பெறச் செய்யும்; மறு புறத்தில் மூலதனத்தைச் ''சூழ்ந்து கொள்வதற்கும்'', அதைச் ''சரணடையும்படி'' பலவந்தம் செய்வதற்குமான பணித்திட்டத்துக்குத் தயார் செய்யும் பொருட்டு இது அவசியமாகும். உடனடியாக நாம் கட்டாய உழைப்புச் சேவையைப் புகுத்த முற்பட்டாக வேண்டும்; ஆனால் ஒவ்வொரு படியையும் நடைமுறை அனுபவத்தைக் கொண்டு சோதித்துப் பார்த்தும், செல்வந்தர்களுக்குக் கட்டாய உழைப்புச்சேவையை முதற்கண் புகுத்தியும் தான், படிப்படியாகவும் சுற்றிலும் கவனித்து எச்சரிக்கையோடும் இதனைச் செய்ய வேண்டும். நாட்டுப்புற முதலாளித்துவ வர்க்கத்தார் உட்பட முதலாளித்துவ வர்க்கத்தார் ஒவ்வொருவருக்கும் வேலைப் பதிவு, நுகர்வாளர் வரவு செலவுப் பதிவுக் கையேட்டுப் புத்தகங்களை நடைமுறைக்குக்

கொண்டு வருவதானது, பகைவனை முழு அளவுக்குச் ‘‘சூழ்ந்து கொள்வதை’’ நோக்கியும், பண்டங்களின் உற்பத்தியிலும் வினியோகத்திலும் மெய்யாகவே மக்கள் பாணி கணக்குப் பதிவையும் கண்காணிப்பையும் நிறுவுவதை நோக்கியும் எடுக்கப்படும் ஒரு முக்கிய நடவடிக்கையாக இருக்கும்.

நாடு தழுவிய அளவில் கணக்குப் பதிவுக்கும் கண்காணிப்புக்குமான போராட்டத்தின் முக்கியத்துவம்

மக்களை ஒடுக்குவதற்கும் சூறையாடுவதற்குமான உறுப்பாகப் பல நூறு ஆண்டுகளாய் இருந்து வந்திருக்கும் அரசானது, அதனுடன் சம்பந்தப்பட்டவை யாவற்றின் மீதும் மக்களுக்குள்ள கட்டுக்கடங்காத பகைமையையும் சந்தேகத்தையும் நமக்கு மரபாக விட்டுச் சென்றிருக்கிறது. இவற்றை எதிர்த்து நின்று சமாளிப்பது மிகவும் கடினமாகும், சோவியத் அரசாட்சி ஒன்றால் மட்டுமே இதனைச் செய்ய முடியும். இதனாலுங்கூட இதனைச் செய்து முடிக்க மிகுந்த காலமும் பேரளவான விடா முயற்சியும் தேவையாய் இருக்கும். கணக்குப் பதிவு, கண்காணிப்புப் பிரச்சினையில், முதலாளித்துவ வர்க்கம் வீழ்த்தப்பட்டதும் மறு தினமே சோஷலிசப் புரட்சியை எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினையாகிய இதில், மேற்கூறிய ‘‘மரபு’’ மிகவும் குறிப்பான அளவுக்குக் கடுமையாக இருந்து வருவது பிரபுக்களும் முதலாளித்துவ வர்க்கத்தினரும் வீழ்த்தப்பட்டிருப்பதால் மக்கள் முதன் முதலாய் இப்போது தாம் சுதந்திரமடைந்திருப்பதை உணருகிறார்கள். பண்டங்களின் உற்பத்தியிலும் வினியோகத்திலும் விரிவான அரசுக் கணக்குப் பதிவும் கண்காணிப்பும் இல்லையேல் உழைப்பாளி மக்களது ஆட்சியதிகாரத்தையும் உழைப்பாளி மக்களதுசுதந்திரத்தையும் கட்டிக்காக்க முடியாது, திரும்பவும் முதலாளித்துவ ஆதிக்கத்துக்குள் வருவது தவிர்க்க முடியாதது என்பதை இம்மக்கள் புரிந்துகொள்வதற்கும்—புத்தகங்களிலிருந்தல்ல, தமது சொந்த, சோவியத் அனுபவத்திலிருந்து புரிந்து கொள்

வதற்கும்—உணர்வதற்கும் தவிர்க்க முடியாதபடி சிறிதளவு காலம் ஆகத்தான் செய்யும்.

முதலாளித்துவ வர்க்கத்தின், குறிப்பாகக் குட்டிமுதலாளித்துவப் பகுதியோரின் பழக்கவழக்கங்கள், மரபுகள் எல்லாம் அரசுக் கண்காணிப்பை எதிர்ப்பனவாகவும், ''புனிதமான தனியார் சொத்தும்'' ''புனிதமான'' தனியார் தொழில் முயற்சியும் கேடின்றிப் பாதுகாக்கப்பட வேண்டுமென வலியுறுத்துகிறவையாகவும் இருக்கின்றன. அராஜகவாதமும் அராஜக-சிண்டிக்கலிசமும் முதலாளித்துவப் போக்குகளாகுமென்ற மார்க்சிய ஆராய்ச்சியுரை எவ்வளவு சரியானது என்பதும், சோஷலிசத்துக்கும் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்கும் கம்யூனிசத்துக்கும் எப்படி இவை சிறிதும் ஒவ்வாதவாறு நேர்முரணானவை என்பதும் என்றையும்விட இப்போது நமக்குத் தெளிவாக விளங்குகின்றன. சோவியத், அரசுக் கண்காணிப்பு, கணக்குப் பதிவு என்னும் கருத்தினை மக்கள் மனத்தில் பதிய வைப்பதற்காகவும் இந்தக் கருத்தினை நடைமுறைச் செயலாக்குவதற்காகவும் போராடுவது, உணவையும் உடைகளையும் கொள்முதல் செய்தல் ''தனியாரது'' விவகாரமாகுமென்றும் வாங்குதலும் விற்றலும் ''என்னை மட்டுமே பொறுத்த நடவடிக்கையாகுமென்றும்'' கருதுமாறு மக்களுக்குக் கற்று தந்த கேடுகெட்ட அந்தப் பழங் காலத்திலிருந்து துண்டித்துக் கொள்வதற்காகப் போராடுவது உலக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பெரும் போராட்டமாகும்; சோஷலிஸ்டு உணர்வுக்கும் முதலாளித்துவ-அராஜகவாதத் தன்னியல்புக்கும் இடையிலான போராட்டமாகும்.

தொழிலாளர்கள் மூலமான கண்காணிப்பை நாம் சட்டமாக இயற்றியுள்ளோம், ஆனால் இந்தச் சட்டம் இப்போதுதான் செயல்பட ஆரம்பித்திருக்கிறது, பாட்டாளி வர்க்கத்தின் விரிவான பகுதியோரின் மனத்துள் இப்போது தான் ஊடுருவத் தலைப்பட்டிருக்கிறது. பண்டங்களது உற்பத்தியிலும் விநியோகத்திலும் கணக்குப் பதிவும் கண்காணிப்பும் இல்லையேல், அது சோஷலிசத்தின் மூலக் கருத்துகள் மடிந்தொழிவதைக் குறிப்பதாகும் என்பதை, அரசு

நிதிகள் களவாடப்படுதலைக் குறிப்பதாகும் என்பதை (ஏனெனில் எல்லாச் சொத்துகளும் அரசுக்கு உரியவை, இந்த அரசானது உழைப்பாளி மக்களில் பெருவாரியானோருக்கு ஆட்சியதிகாரம் உரியதாயுள்ள சோவியத் அரசாகும்) போதிய அளவுக்கு நமது கிளர்ச்சிப் பிரசாரத்தில் நாம் விளக்கிக் கூறுவதில்லை. கணக்குப் பதிவிலும் கண்காணிப்பிலும் கருத்தின்றி இருப்பது ஜெர்மானிய, ருஷ்யக் கர்னீலவ்களுக்கு நேரடியாக உதவுவதும் உடந்தையாய் இருப்பதுமே ஆகுமென்பதையும், கணக்குப் பதிவு, கண்காணிப்புப் பணியைச் சமாளிக்க நாம் தவறும் போது மட்டுமேதான் இந்தக் கர்னீலவ்களால் உழைப்பாளி மக்களது ஆட்சியதிகாரத்தைக் கவிழ்க்க முடியுமென்பதையும், இவர்கள் நாட்டுப்புற முதலாளித்துவ வர்க்கத்தார் அனைவரின் உதவியோடும் காடேட்டுகள், மென்ஷிவிக்குகள், வலதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள் ஆகியோரது உதவியோடும் ''பதுங்கிக் காத்திருக்கிறார்கள்'', நம்மைத் தாக்குவதற்கு எப்போது தக்க தருணம் வருமெனக் காத்துக் கொண்டிருக்கிறார்களென்பதையும் போதிய அளவுக்கு நாம் விளக்கிக் கூறுவதில்லை. முன்னேறிய தொழிலாளர்களும் விவசாயிகளும் இதைப்பற்றி போதிய அளவுக்குச் சிந்திக்காமலும் பேசாமலும் இருக்கிறார்கள். தொழிலாளர்கள் கண்காணிப்பு நடைமுறை உண்மையாகும் வரை, முன்னேறிய தொழிலாளர்கள் இந்தக் கண்காணிப்பை மீறுவோருக்கும் கண்காணிப்பு விவகாரங்களில் கருத்தில்லாதோருக்கும் எதிராய் வெற்றிகரமான, ஈவிரக்கமில்லாத போராட்டத்துக்கு ஏற்பாடு செய்து இதனை நடத்திமுடிக்கும் வரை, சோஷலிசத்தை நோக்கி முதலாவது படியிலிருந்து(தொழிலாளர்கள் கண்காணிப்பிலிருந்து) இரண்டாவது படிக்குச் செல்வது,அதாவது உற்பத்தியைத் தொழிலாளர்கள் ஒழுங்கமைத்திடுவதற்குச் செல்வது, முடியாத காரியம்.

வலைப்பின்னல் போல் அமைந்த உற்பத்தியாளர்கள், நுகர்வாளர்கள் கம்யூன்களாகவே சோஷலிச அரசு எழ முடியும். இந்தக் கம்யூன்கள் தமது உற்பத்தியையும் நுகர்வையும் மனச்சாட்சி பூர்வம் கணக்குப் பதிவு செய்யும், உழைப்புச் செலவைச் சிக்கனம் செய்யும், உழைப்பின் உற்பத்தித்

திறனை இடையருது உயர்த்தும்; இவ்விதம் இவை வேலை நேரத்தை ஏழு மணியாகவும் ஆறு மணியாகவும் இன்னுங் கூட குறைவாகவும் குறைத்துச் செல்வதற்கு வகை செய்யும். தானியத்தின், தானிய உற்பத்தியின் (பிற்பாடு ஏனைய எல்லா அவசியப் பண்டங்களினதும்) மிகக் கறாரான நாடு தழுவிய அளவிலான, விரிவான கணக்குப் பதிவும் கண்காணிப்பும் நடந்தேறினாலன்றி, எதையும் சாதித்துவிட முடியாது. பண்டங்களது வினியோகத்தின் கணிசமான அளவிலான கணக்குப் பதிவுக்கும் கண்காணிப்புக்கும் நாம் மாறிச் செல்வதற்கு உதவி புரியக் கூடிய வெகுஜன நிறுவனங்களை, அதாவது நுகர்வாளர் கூட்டுறவுச் சங்கங்களை முதலாளித்துவம் நமக்கு விட்டுச் சென்றுள்ளது. முன்னேறிய நாடுகளில் இருப்பது போல் ருஷ்யாவில் இந்தச் சங்கங்கள் அவ்வளவு நன்றாய் வளர்ச்சியடைந்திருக்கவில்லை என்றாலுங்கூட, இவை ஒரு கோடிக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டவை. சில நாட்களுக்கு முன்பு பிறப்பிக்கப்பட்ட நுகர்வாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிய அரசாணை[26] மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த புலப்பாடாகும். இது தற்போதைய சோவியத் சோஷலிசக் குடியரசின் விசேஷ நிலையையும் பிரத்தியேகப் பணிகளையும் பளிச்செனத் தெரியும்படி படம் பிடித்துக் காட்டுவதாகும்.

இந்த அரசாணை முதலாளித்துவக் கூட்டுறவுச் சங்கங்களோடும் இன்னமும் முதலாளித்துவக் கண்ணோட்டத்தையே அனுசரித்து வரும் தொழிலாளர்களது கூட்டுறவுச் சங்கங்களோடும் செய்து கொள்ளப்பட்ட உடன்பாடாகும். இது ஓர் உடன்பாடு அல்லது சமரசமே ஆகும்; ஏனெனில் முதலாவதாக, மேற்கூடிய நிலையங்களின் பிரதிநிதிகள் இந்த அரசாணையை விவாதிப்பதில் பங்கு கொண்டதோடன்றி, உண்மையில் இந்த விவகாரத்தை முடிவு செய்வதிலும் தீர்மானகரமான பங்குவகித்தனர். இந்நிலையங்களால் கடுமையாக எதிர்க்கப்பட்ட அரசாணையின் பகுதிகள் கைவிடப்பட்டன. இரண்டாவதாக, சமரசத்தின் சாரம் என்னவெனில், நுழைவுக் கட்டணம் இல்லாமலே கூட்டுறவுச் சங்கங்களில் புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட

வேண்டுமென்ற கோட்பாட்டினை (இது ஒன்றே முரணற்ற பாட்டாளி வர்க்கக் கோட்பாடு) சோவியத் அரசாங்கம் கைவிட்டுள்ளது; குறிப்பிட்ட வட்டாரத்தில் மக்கள் அனை வரையும் ஒரேயொரு கூட்டுறவுச் சங்கத்தில் ஒன்றுபடச் செய்வதென்ற கருத்தினையும் சோவியத் அரசாங்கம் கை விட்டுள்ளது. இதுதான் சோஷலிசக் கோட்பாடு, வர்க்கங் களை ஒழித்திடும் பணிக்கு உகந்த கோட்பாடு—இந்தக் கோட் பாட்டுக்கு முரணாய், ''தொழிலாளி வர்க்கக் கூட்டுறவுச் சங்கங்கள்'' (இங்கே இவை ''வர்க்கச்'' சங்கங்களாகத் தம்மைக் கூறிக் கொள்கின்றன என்றால், முதலாளிகளது வர்க்க நலன்களுக்கு இவை தம்மைக் கீழ்ப்படுத்திக் கொள் வதுதான் அதற்குரிய காரணம்) தொடர்ந்து நிலவுவதற்கு அவற்றுக்கு உரிமை அளிக்கப்பட்டது. முடிவில், முதலாளித் துவ வர்க்கத்தினரைக் கூட்டுறவுச் சங்கங்களது நிர்வாகக் குழுக்களிலிருந்து அறவே வெளியேற்றிவிட வேண்டுமென்ற சோவியத் அரசாங்க யோசனையும் வெகுவாய் மாற்றப்பட் டது; தனியார் முதலாளித்துவ வாணிப, தொழில் நிலையங் களது உடைமையாளர்கள் மட்டும்தான் நிர்வாகக் குழுக் களில் இடம் பெறலாகாதெனத் தடை விதிக்கப்பட்டனர்.

பாட்டாளி வர்க்கமானது சோவியத் அரசாங்கத்தின் மூலம் செயல்பட்டு, தேச அளவில் கணக்குப் பதிவுக்கும் கண்காணிப்புக்கும் ஏற்பாடு செய்திருந்தால், அல்லது இத்த கைய கண்காணிப்புக்குரிய அடிப்படையையேனும் அமைத் திருந்தால், இம்மாதிரியான சமரசங்களைச் செய்வது அவசிய மாய் இருந்திருக்காது. சோவியத்துகளது உணவு இலாக் காக்களின் மூலம், சோவியத்துகளின் கீழ் உள்ள வழங்கீட்டு நிறுவனங்களின் மூலம் பாட்டாளி வர்க்க நிர்வாகத்தில் அமைந்த ஒரே கூட்டுறவுச் சங்கத்தில் தேச மக்களை நாம் ஒழுங்கமைத்திருப்போம். முதலாளித்துவக் கூட்டுறவுச் சங் கங்களின் உதவியில்லாமலே நாம் இதைச் செய்திருப்போம்; தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் முதலாளித்துவக் கூட் டுறவுச் சங்கங்களை முழு அளவில் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொண்டு, இரண்டையும் ஒன்றாக இணைத்து, நிர்வாகம் அனைத்தையும் செல்வந்தர்களது நுகர்வினை மேற்பார்வை

யிடுதலையும் தமது சொந்தக் கரங்களில் எடுத்துக் கொள்வதற்குப் பதிலாக, முதலாளித்துவச் சங்கங்களுடன் கூட அவற்றின் பக்கத்தில் நிலவும் தொழிலாளர் சங்கங்களாய் இருந்துவரும்படி ஏவிவிடும் முழுக்க முழுக்க முதலாளித்துவத் தன்மையதான கோட்பாட்டுக்கு எவ்விதத்திலும் விட்டுக் கொடுக்காமலே இதைச் செய்திருப்போம்.

முதலாளித்துவக் கூட்டுறவுச் சங்கங்களுடன் இம்மாதிரி உடன்பாடு செய்து கொள்கையில் சோவியத் அரசாங்கம் தற்போதைய வளர்ச்சிக் கட்டத்தில் தனது போர்த்தந்திரக் குறிக்கோள்களையும் தனக்குரிய விசேஷச் செயல்முறைகளையும் பின்வருமாறு ஸ்தூல முறையில் வரையறுத்துக் கூறியது: முதலாளித்துவ நபர்களை நெறியாண்மை செய்தும், அவர்களைப் பயன்படுத்தியும், சிற்சில வழிகளில் ஓரளவுக்கு அவர்களுக்கு சலுகைகள் தந்தும் மேலும் முன்னேற்றம் ஏற்படுவதற்கான நிலைமைகளைத் தோற்றுவிப்போம்—இந்த முன்னேற்றம் முதலில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் மெதுவானதாய் இருப்பினும், மேலும் திடமானதாய், போக்குவரத்தின் அடித்தளமும் வழிகளும் மேலும் உறுதி வாய்ந்தனவாய், வென்று கொள்ளப்பட்டுள்ள நிலைகள் மேலும் நல்லபடி வலுவூட்டப் பெற்றனவாய் இருக்கும். சோஷலிசக் கட்டுமானத் துறையில் சோவியத்துகள் தமது வெற்றிகளை ஏனைய பலவற்றுக்கும் இடையில் இப்போது தெளிவான, எளிய, நடைமுறைத் தரங்களைக் கொண்டு—அதாவது, எத்தனைக் குடிவாழ்க் கூட்டுகளில் (கம்யூன்கள் அல்லது கிராமங்கள், வீட்டுத் தொகுதிகள் முதலானவை) கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன, எந்த அளவுக்கு அவற்றின் வளர்ச்சி அனைத்து மக்களையும் தழுவும் நிலையை வந்தடைந்திருக்கிறது என்பவற்றைக் கொண்டு—அளவிட முடியும் (அளவிடவும் வேண்டும்).

உழைப்பின் உற்பத்தித் திறனை உயரச் செய்தல்

ஒவ்வொரு சோஷலிசப் புரட்சியிலும் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றும் பிரச்சினைக்குப் பாட்டாளி வர்க்கம் தீர்வு

கண்டுவிட்ட பிறகு, உடைமை பறிப்போரை உடைமை நீக்கம் செய்து அவர்களது எதிர்ப்பை நசுக்கும் பணி பிரதானமாய் எந்த அளவுக்கு செய்து முடிக்கப்பட்டுள்ளதோ அதற்கு ஏற்ப, முதலாளித்துவத்தை விட மேலான ஒரு சமூக அமைப்பினைத் தோற்றுவிக்கும் அடிப்படை பணி—அதாவது உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதும் இது சம்பந்தமாகவும் இதன் பொருட்டும் உழைப்பின் மேலும் சிறப்பான ஒழுங்கமைப்பினை உறுதி செய்து கொள்வதுமாகிய பணி—இன்றியமையாதவாறு முன்னணிக்கு வருகிறது. கேரென்ஸ்கியிலிருந்து கர்னீலவ் வரையில், சுரண்டலாளர்கள் மீது பெறப்பட்ட வெற்றிகளின் விளைவாய் நமது சோவியத் அரசு இந்தப் பணியினை நேரடியாய் அணுகவும் முழு முனைப்புடன் இதனை ஏற்றுச் சமாளிக்கவும் முடியும்படியான நிலையினை வந்தடைந்திருக்கிறது. மத்திய அரசு அதிகாரத்தை சில நாட்களில் எடுத்துக் கொண்டு விடுவதும், சுரண்டுவோரது ராணுவ எதிர்ப்பை (மற்றும் நாசவேலையை) ஒரு பெரிய நாட்டின் பற்பல பகுதிகளிலுங்கூட சில வாரங்களில் நசுக்குவதும் சாத்தியமாய் இருக்கையில், உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்தும் பிரச்சினைக்குத் தலையாய தீர்வு காண்பதற்கு எப்படியும் (முக்கியமாய் மிகவும் கொடூரமான படுநாசப் போருக்குப் பிற்பாடு) சில ஆண்டுகள் தேவையாய் இருக்குமென்பது உடனே இப்போது தெளிவாகத் தெரிகின்றது. இந்தப் பணி நீடித்து நடைபெற வேண்டிய ஒன்றாய் இருப்பதற்கு நிச்சயமாய் எதார்த்தப் புறநிலைமைகளே காரணம்.

உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கு யாவற்றுக்கும் முதலாய்த் தேவைப்படுவது என்னவெனில், பெருவீதத் தொழில் துறையின் பொருளாயத அடிப்படை உறுதியாக்கப்பட வேண்டும் என்பதுதான்; அதாவது எரிபொருள், இரும்பு, பொறியியல், இரசாயனத் தொழில்கள் வளர்ச்சி பெற வேண்டும் என்பதுதான். ருஷ்யாவின் சோவியத் குடியரசு சாதகமான நிலையினைப் பெற்றிருக்கிறது—பிரேஸ்த் சமாதானத்துக்குப் பிற்பாடும்கூட பிரம்மாண்ட அளவில் கனி வளங்களும் (ஊராலில்), மேற்கு சைபீரியாவிலும் (நிலக்

கரி), காக்கஸசிலும் தென்கிழக்கு ருஷ்யாவிலும் (எண்ணெய்), மத்திய ருஷ்யாவிலும் (பீட் கரி) ஆன எரிபொருள்களும், பேரளவான மரச் செல்வமும், நீர் ஆற்றலும், இரசாயனத் தொழிலுக்கான மூலப் பொருள்களும் (கராபுகஸ்), இன்ன பிறவும் அதனிடம் உள்ளன. நவீனத் தொழில்நுட்ப முறைகளைக் கொண்டு இந்த இயற்கைச் செல்வாதாரங்கள் வளர்த்துப் பயன்படுத்தப்படுகையில் எந்நாளும் கண்டிராத வாறு உற்பத்திச் சக்திகள் முன்னேறுவதற்கு அடித்தளம் நிறுவப்படும்.

உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கு அவசியமான இன்னொரு நிபந்தனை, முதலாவதாக மக்கட் பெருந்திரளினரது கல்வி, கலாசார நிலையை உயர்த்துவதாகும். தற்போது இது மிகவும் விரைவாய் நடந்தேறி வருகிறது, முதலாளித்துவ மாறு நடைமுறையால் கண்ணவிந்து போனவர்களால் இந்த உண்மையைப் பார்க்க முடியவில்லை; சோவியத் ஒழுங்கமைப்பு வடிவத்தின் விளைவாய் மக்களது "கீழ் மட்டங்களில்" அறிவொளிக்கும் முன்முயற்சிக்குமான ஊக்கம் தற்போது எப்படி ஓங்கி வருகிறதென்பதை இவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. இரண்டாவதாக உழைப்பாளி மக்களது கட்டுப்பாட்டையும் அவர்களது தேர்ச்சித் திறனையும் உழைப்பின் பயன் திறனையும் வேகத்தையும் அதன் சிறந்த ஒழுங்கமைப்பையும் உயர்த்துவது பொருளாதாரத்தைப் புத்துயிர் பெற்றெழச் செய்வதற்குரிய ஒரு நிபந்தனையாகும்.

முதலாளித்துவ வர்க்கத்தினரின் மிரட்டலுக்குப் பணிந்துவிடும் ஆட்களையோ, சொந்த நோக்கம் கருதி முதலாளித்துவ வர்க்கத்தாருக்கு ஊழியம் புரிவோரையோ நம்புவோமாயின், இத்துறையில் நிலைமை மிகவும் மோசமாய் இருக்கிறது, நம்பிக்கைக்கு இடமில்லாதபடி படுமோசமாகவுங்கூட இருக்கிறது எனலாம். பழைய அமைப்பின் ஆதரவாளர்கள் குழப்பமென்றும், அராஜகமென்றும், இன்ன பலவாறாகவும் கூப்பாடு போடாத புரட்சி ஏதும் இருந்ததில்லை, இருக்கவும் முடியாது என்பதை இந்த ஆட்கள் புரிந்து கொள்ளவில்லை. முன்பின் கண்டிராத காட்டுத்தனமான ஒடுக்குமுறை

ஆதிக்கத்தை இப்போதுதான் தூக்கியெறிந்துள்ள மக்களிடத்தே கொந்தளிப்பும் குமுறலும் இயற்கையாகவே ஆழமாகவும் பரவலாகவும் இருக்கின்றன. மக்களால் உழைப்புக் கட்டுப்பாட்டுக்கான புதிய கோட்பாடுகள் வகுக்கப்படுதல் மிக நீண்ட நெடிய நிகழ்ச்சிப் போக்காகும். நிலப்பிரபுக்கள் மீதும் முதலாளித்துவ வர்க்கத்தார் மீதும் முழுநிறை வெற்றி பெறப்படும் வரை இந்த நிகழ்ச்சிப் போக்கு ஆரம்பமாவது கூட சாத்தியமன்று.

ஆனல் நாம் நம்பிக்கைக்கு இடமில்லா இந்த விரக்திக்கு (இது பெரும்பாலும் புரட்டான விரக்தி) சிறிதும் அடிபணியலாகாது—இதை (தமது பழைய தனியுரிமைகளைப் பாதுகாக்க வழியில்லையெனக் கண்டு விரக்தி கொண்டுள்ளவர்களாகிய) முதலாளித்துவ வர்க்கத்தாராலும் முதலாளித்துவ அறிவுத் துறையினராலும் பரப்பப்பட்டு வருவதாகும். அதே போது நாம் அப்பட்டமாகத் தெரியும் தீமையை எந்நிலையிலும் மூடிமறைக்கலாகாது. மாறாக, இதனை நாம் அம்பலம் செய்வோம்; இதை எதிர்த்துப் போராடுவதற்கான சோவியத் முறைகளைத் தீவிரப்படுத்திச் செல்வோம். தன்னியல்பான குட்டிமுதலாளித்துவ அராஜகத்தின் மீது; கேரென்ஸ்கியமும் கர்னீலவியமும் மீட்டமைக்கப்படுதல் சாத்தியமாவதற்கு மெய்யான உத்தரவாதமாய் அமையும் இதன் மீது, பாட்டாளி வர்க்கத்தின் உணர்வு பூர்வமான கட்டுப்பாடு வெற்றி பெறுமல், சோஷலிசத்தின் வெற்றி நினைக்கவே முடியாதது.

ருஷ்யப் பாட்டாளி வர்க்கத்தின் அதிக வர்க்க உணர்வு படைத்த முன்னணிப் படை, உழைப்பின் கட்டுப்பாட்டை உயர்த்திடும் பணியினை, தனக்குரிய பணியாய் ஏற்கெனவே வகுத்துக் கொண்டுவிட்டது. உதாரணமாய், உலோகத் தொழிலாளர் சங்கத்தின் மத்தியக் கமிட்டியும் தொழிற் சங்கங்களது மத்தியக் கவுன்சிலும் தேவையான சட்டங்களையும் அரசாணைகளையும்[27] வரைய முற்பட்டுள்ளன இந்த வேலை ஆதரவளிக்கப்பட்டு, முழு வேகத்தில் நடந்தேறும்படி ஊக்குவிக்கப்பட வேண்டும். வேலைவீத ஊதியப் பிரச்சினையை எழுப்பி அதை நாம் நடைமுறையில் அனுசரித்துச்

சோதனை செய்து பார்க்க வேண்டும். டெய்லர் முறையில் விஞ்ஞான வழியில் அமைந்தவற்றிலும் முற்போக்கானவற்றிலும் பலவற்றைக் கையாளும் பிரச்சினையை நாம் எழுப்பியாக வேண்டும். கூலி அளவுகள் முடிக்கப் பெறும் பண்டங்களின் மொத்த அளவுக்கு, அல்லது ரயில்வேக்களாலும் நீர் வழிப் போக்குவரத்து அமைப்பாலும் பிறவற்றாலும் செய்யப்படும் வேலையின் அளவுக்கு ஏற்ப அமையும்படிச் செய்தாக வேண்டும்.

முன்னேறிய நாடுகளைச் சேர்ந்தோருடன் ஒப்பிடுகையில் ருஷ்யத் தொழிலாளி மோசமான தொழிலாளி. ஜார் ஆட்சியின் கீழ், பண்ணையடிமை முறையின் எச்சங்கள் விடாப்பிடியாக இருந்த நிலையில் இது வேறு எவ்வாறும் இருப்பதற்கில்லை. வேலை செய்யக் கற்றுக் கொள்ளுங்கள்—இதுதான், இதன் முழு வீச்சிலும், சோவியத் அரசாங்கம் மக்களுக்கு வகுத்து முன்வைக்க வேண்டிய பணி. இத்துறையில் முதலாளித்துவத்தின் தேர்ந்த முடிபாகிய டெய்லர் முறையானது, முதலாளித்துவ முன்னேற்றம் அனைத்தையும் போல், முதலாளித்துவச் சுரண்டலின் நேர்த்தி நயம் வாய்ந்த மிருகத்தனத்தோடு கூட, வேலையின் போது நிகழும் இயந்திரவியல் அசைவுகளைப் பகுத்தாய்வதிலும், தேவையற்றவையும் தாறுமாறானவையுமான அசைவுகளை நீக்குவதிலும், சரியான வேலை முறைகளை ஆய்ந்தறிந்து வகுத்திடுவதிலும், கணக்குப் பதிவுக்கும் கண்காணிப்புக்குமான சிறந்த அமைப்பைப் புகுத்துவதிலும் இன்னபிறவற்றிலுமான பெரிய பல விஞ்ஞான சாதனைகளும் இணைந்து அமைந்ததாகும். இத்துறையில் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் கண்டிருக்கும் சாதனைகளில் மதிப்பு வாய்ந்தவை யாவற்றையும் சோவியத் குடியரசு எப்பாடுபட்டேனும் தெரிந்தெடுத்துக் கையாண்டாக வேண்டும். சோவியத் ஆட்சியதிகாரத்தையும் சோவியத் நிர்வாக ஒழுங்கமைப்பையும் முதலாளித்துவத்தின் மிக நவீன சாதனைகளுடன் சேர்த்து இணைத்துக் கொள்வதில் நாம் காணும் வெற்றியையே பொறுத்திருக்கிறது, சோஷலிசத்தைக் கட்டியமைப்பதற்கான சாத்தியப்பாடு. ருஷ்யாவில் நாம் டெய்லர் முறையின் ஆய்வுக்கும் போதனைக்கும்

ஏற்பாடு செய்து, இதனை ஒழுங்காய்க் கையாண்டு பார்த்து நமக்கு உரித்தான நோக்கங்களுக்குத் தகவமைத்துக் கொள்ள வேண்டும். அதே போது, உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்காகப் பாடுபடுகையில், முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்வதற்குரிய இடைக் காலத்தின் பிரத்தியேக இயல்புகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த இடைக் காலத்தில் ஒரு புறத்தில் போட்டிக்கான சோஷலிச ஒழுங்கமைப்புக்குரிய அடித்தளங்கள் நிறுவப்படுவதும், மறு புறத்தில் கோழைத் தனமான பாட்டாளி வர்க்க அரசாங்கத்தின் நடைமுறையால் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் எனும் கோஷத்துக்கு இழுக்கு நேர்ந்துவிடாது இருக்கும் பொருட்டு, பலவந்தத்தைப் பயன்படுத்துவதும் அவசியமாகும்.

போட்டியின் ஒழுங்கமைப்பு

சோஷலிஸ்டுகள் போட்டியின் முக்கியத்துவத்தை மறுக்கிறார்கள் என்பதான கூற்று, சோஷலிசம் குறித்து முதலாளித்துவ வர்க்கத்தார் முனைந்து பரப்பி வரும் அபத்தங்களில் ஒன்று. உண்மை என்னவெனில் சோஷலிசம் மட்டும்தான் வர்க்கங்களை ஒழிப்பதன் வாயிலாகவும், இவ்விதம் மக்களது அடிமை நிலையை ஒழிப்பதன் வாயிலாகவும் மெய்யாகவே வெகுஜன அளவில் போட்டி நடைபெறுவதற்கு முதன்முதலாகப் பாதையைத் திறந்து விடுகிறது. சோவியத் ஒழுங்கமைப்புதான், முதலாளித்துவக் குடியரசின் சம்பிரதாய ஜனநாயகத்திலிருந்து மாறி நிர்வாகத்தில் உழைப்பாளி மக்கள் திரள் மெய்யாகவே பங்கெடுத்துக் கொள்ளும் நிலை வந்தடையப் பெறுவதை உறுதி செய்வதன் மூலம், போட்டியினை முதன்முதலாய் விரிந்தமைந்த அடித்தளத்தின் மீது அமர்த்துகின்றது. பொருளாதாரத் துறையைக் காட்டிலும் அரசியல் துறையில் இதற்கு ஏற்பாடு செய்வது மிகவும் சுலபம். ஆனால் சோஷலிசத்தின் வெற்றிக்குப் பொருளாதாரத் துறைதான் முக்கியத்துவம் மிக்கது.

எடுத்துக்காட்டாய், போட்டியின் ஒழுங்கமைப்புக் குரிய ஒரு சாதனமாகிய தகவல் வெளியீட்டை எடுத்துக்கொள்வோம். முதலாளித்துவக் குடியரசு புறவடிவ அளவில் மட்டுமே தகவல் வெளியீட்டுக்கு வகை செய்கிறது. நடைமுறையில் அது பத்திரிகைத் துறையை மூலதனத்துக்குக் கீழ்ப்படுத்துகிறது, பரபரப்பு உண்டாக்கும்படியான அரசியல் குப்பைக் கூளங்களைக் கொண்டு ''கும்பலுக்கு'' வேடிக்கை காட்டுகிறது, ஆலைகளிலும் வாணிப நடவடிக்கைகளிலும் ஒப்பந்தங்களிலும் பிறவற்றிலும் என்ன நடைபெறுகிறதென்பதை ''புனிதமான சொத்துரிமையைப்'' பாதுகாக்கும் ''வாணிப இரகசியங்கள்'' என்னும் திரைக்குப் பின்னுல் மூடிமறைக்கின்றது. சோவியத் அரசாங்கம் வாணிப இரகசியங்களை ஒழித்துள்ளது; அது புதிய பாதையை மேற்கொண்டுள்ளது. ஆனுல் பொருளாதாரப் போட்டிக்கு ஊக்கமளிக்கும் பொருட்டு தகவல் வெளியீட்டைப் பயன்படுத்திக் கொள்வதற்கு நாம் அனேகமாய் ஏதும் செய்தாகவில்லை. முழுக்க முழுக்க பொய்யும் பித்தலாட்டமும் துடுக்கான அவதூறும் பரப்பும் முதலாளித்துவப் பத்திரிகைத் துறையை இரக்கம் காட்டாமல் நசுக்கி, அதே போது அரசியல் பரபரப்பையும் அற்ப விவகாரங்களையும் கொண்டு வேடிக்கை காட்டி மக்களை ஏமாற்ருமல், அன்ருடப் பொருளாதார வாழ்க்கை சம்பந்தமான பிரச்சினைகளை மக்களது தீர்ப்புக்குச் சமர்ப்பித்து இந்தப் பிரச்சினைகளைக் கருத்தார்ந்த முறையில் ஆராய்வதற்கு அவர்களுக்கு உதவும்படியான பத்திரிகைத் துறையைத் தோற்றுவிப்பதற்காக நாம் இடையருது பாடுபட முற்பட்டாக வேண்டும். ஒவ்வோர் ஆலையும் ஒவ்வொரு கிராமமும் உற்பத்தியாளர், நுகர்வாளர் கம்யூனுகும். இவை பொதுவான சோவியத் சட்டங்களைத் தமது சொந்த வழியில் செயல்படுத்த உரிமை பெற்றவையும் கடமைப் பட்டவையும் ஆகும் (''தமது சொந்த வழியில்'' என்பது இந்தச் சட்டங்களை மீறிச் செல்லலாம் என்ற அர்த்தத்தில் அல்ல, பல்வேறு வடிவங்களில் இவற்றைப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்ற அர்த்தத்தில்). பண்டங்களது உற்பத்தியிலும் வினியோகத்திலும் கணக்குப் பதிவுப் பிரச்சினைக்குத்

தமது சொந்த வழியில் தீர்வு காண்பது அவற்றின் உரிமையும் கடமையும் ஆகும். முதலாளித்துவத்தில் இது தனிப்பட்ட முதலாளி, நிலப்பிரபு, அல்லது குலாக்கின்* ''சொந்தவிவகாரமாய்'' இருந்தது. சோஷலிச அமைப்பில் இது மிக முக்கிய அரசு விவகாரமே அன்றி தனியாரது சொந்த விவகாரமல்ல.

கம்யூன்களுக்கு இடையே போட்டிக்கு ஏற்பாடு செய்தல்; தானியம், துணிமணி பிற பொருள்களது உற்பத்திச் செயல்முறையில் கணக்குப் பதிவையும் தகவல் வெளியீட்டையும் கைக்கொள்ளுதல்; வரண்டவையும் உயிரற்றவையும் அதிகாரவர்க்கத் தன்மையவையுமாகிய கணக்குகளை உயிர்த் துடிப்புள்ள உதாரணங்களாக, எதிர்த்து அடிப்பனவாகச் சிலவும் கவர்ந்து இழுப்பனவாக ஏனையவும் அமைந்த உதாரணங்களாக மாற்றிடுதல்—மிகப் பெரியது, கடினமானது என்றாலும் பெரும்பயன் அளிக்கவல்லதான இந்தப் பணியினை அனேகமாய் இன்னமும் நாம் துவக்கியாகவில்லை. முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையில் தனிப்பட்ட ஓர் உதாரணத்தின் முக்கியத்துவம், எடுத்துக்காட்டாய் ஒரு கூட்டுறவுத் தொழிற்கூடத்தினுடைய உதாரணத்தின் முக்கியத்துவம் தவிர்க்க வொண்ணுதவாறு வரம்பிட்டுப் பெரிதும் தடுக்கப்படுகிறது குட்டிமுதலாளித்துவப் பிரமைகள் கொண்டவர்களால் மட்டும்தான் உயர்பண்பு வாய்ந்த நிலையங்களது உதாரணத்தின் மூலம் முதலாளித்துவத்தைச் ''சரிசெய்துவிடலாம்'' என்று கனவு காண முடியும். அரசியல் அதிகாரமானது பாட்டாளி வர்க்கத்துக்கு மாறிய பிறகு, உடைமை பறிப்போர் உடைமை நீக்கம் செய்யப்பட்ட பிறகு, நிலைமை தீவிரமாய் மாறுகின்றது; முதன்மையான சோஷலிஸ்டுகள் அடிக்கடி குறிப்பிட்டிருப்பது போல், உதாரணத்தின் சக்தியானது முதன்முதலாய் மக்கள் திரளை வயப்படுத்த முடிகின்றது. முன்மாதிரியான கம்யூன்கள் கல்விபோதம் அளிப்பனவாய், போதளுசிரியர்களாகப் பயன்பட வேண்டும்,

---

* குலாக்கு—பிறரது உழைப்பைச் சுரண்டும் பணக்கார விவசாயி.—மொ-ர்.

பயன்படவும் செய்யும். பின்தங்கிய கம்யூன்கள் உயர்வதற்கு இவை உதவி புரியும். பத்திரிகைகள் சோஷலிசக் கட்டுமானக் கருவியாகச் சேவையாற்ற வேண்டும், முன்மாதிரியான கம்யூன்கள் காணும் வெற்றிகளை அவற்றின் முழு விவரங்களில் விளம்பரப்படுத்த வேண்டும், இந்த வெற்றிகளுக்குரிய காரணங்களையும் இந்தக் கம்யூன்கள் கையாளும் நிர்வாக முறைகளையும் அவை ஆய்ந்தறிய வேண்டும்; அதே போது ''முதலாளித்துவ மரபுகளில்'', அதாவது அராஜகத்திலும் சோம்பலிலும் ஒழுங்கின்மையிலும் இலாபக் கொள்ளையிலும் தொடர்ந்து திளைத்திடும் கம்யூன்களைக் ''கறுப்புப் பட்டியலுக்கு'' உரியனவாய் அறிவிக்க வேண்டும். முதலாளித்துவச் சமுதாயத்தில் புள்ளியியலானது முற்றிலும் ''அரசாங்கப் பணியாளருக்கு'' அல்லது குறுகிய துறைகளிலான நிபுணர்களுக்கு உரித்தான விவகாரமாய் இருந்துள்ளது. நாம் புள்ளியியலை மக்களிடம் எடுத்துச் சென்று அவர்களிடையே பிரபலமாக்க வேண்டும். இதன் மூலம் உழைப்பாளி மக்கள் தாமே எவ்வளவு நேரம் எப்படி வேலை செய்ய வேண்டும், எவ்வளவு நேரம், எப்படி ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டும் என்று அறிவதற்கும் படிப்படியாகக் கற்றுக் கொள்வதற்கும் வகை செய்யலாம். இவ்விதம் பல்வேறு கம்யூன்களது தொழிற் பலன்களின் ஒப்பீடானது பொதுவாய் எல்லோரது கருத்துக்கும் ஆய்வுக்கும் உரியதாகும்படியும், மிகச் சிறந்தனவாய் இருக்கும் கம்யூன்கள் உடனடியாகப் பரிசு பெறும்படியும் (வேலை நேரத்தை குறைப்பது, ஊதியத்தை உயர்த்துவது, கலாசார அல்லது கலாரசனை வசதிகள் அல்லது செல்வங்களை அவற்றுக்குக் கிடைக்கச் செய்தல் முதலான வழிகளில்) செய்யலாம்.

புதிய வர்க்கம் ஒன்று சமுதாயத்தின் தலைவனாகவும் வழிகாட்டியாகவும் வரலாற்று அரங்கினுள் பிரவேசிக்கும் போது, ஒரு புறத்தில் வன்மை மிக்க ''ஆட்டத்துக்கும்'' அதிர்ச்சிகளுக்கும் போராட்டத்துக்கும் புயலுக்குமான காலம் ஒன்றும், மறு புறத்தில் திடமற்ற முயற்சிகளுக்கும் பரிசோதனைகளுக்கும் புதிய எதார்த்த நிலைமைக்கு இசைவான புதிய முறைகளைத் தேர்வு செய்வதில் ஊசலாட்டத்

துக்கும் தயக்கத்துக்குமான காலம் ஒன்றும் தவிர்க்கமுடியாதவை. அந்திமக் காலம் எய்திய பிரபுத்துவக் கோமான்கள், தம்மைத் தோற்கடித்துத் தமது இடத்தில் அமர்ந்து கொண்ட முதலாளித்துவ வர்க்கத்தினர் மீது வஞ்சம் தீர்த்துக் கொண்டார்கள்—சதிகள் மூலமும் கலகத்துக்கும் மீட்சிக்குமான முயற்சிகள் மூலமும் மட்டுமின்றி, கோமான்களும் பெருமான்களும் பிரபுக்களும் மேதகைகளும் பல நூறு ஆண்டுகளாய்ப் பயின்று பெற்றிருந்த பயிற்சி இல்லாமலே அரசின் ''புனிதமான பீடத்தைக்'' கைக்கொள்ளத் துணிந்த ''புதுப்பவிஷாளர்களும்'', ''அகம்பாவிகளும்'' தேர்ச்சித் திறனில்லாதோராகவும் நயமற்றோராகவும் இருந்தது குறித்தும் அவர்களது தவறுகள் குறித்தும் எள்ளி நகையாடுவதன் மூலமும் வஞ்சம் தீர்த்துக் கொண்டார்கள். இதே போலவேதான் கர்னீலவ்களும் கேரென்ஸ்கிகளும் கோட்ஸ்களும் மார்த்தவ்களும் முதலாளித்துவ மோசடி அல்லது முதலாளித்துவ ஐயுறவுவாதி வீரர்கள் எல்லோரும், ஆட்சியதிகாரத்தைக் கைக்கொள்ளும்படியான ''துணிச்சலைப்'' பெற்றுவிட்ட ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கத்தின் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்கிறார்கள்.

ஒரு புதிய சமூக வர்க்கமானது, அதுவும் இதுகாறும் ஒடுக்கப்பட்டும் வறுமையாலும் அறியாமையாலும் நசுக்கப்பட்டும் வந்திருக்கும் ஒரு வர்க்கமானது, தனது புதிய நிலையில் பழக்கம் பெற்று, சூழ்நிலையைப் புரிந்து கொண்டு, தனது வேலையை ஒழுங்கமைக்கவும், தனது சொந்த ஒழுங்கமைப்பாளர்களை வளர்த்து முன்கொண்டு வரவும், வாரங்களல்ல, நீண்ட பல மாதங்களும் ஆண்டுகளும் தேவைப்படவே செய்யும். புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்துக்குத் தலைமை தாங்கும் கட்சியானது, பத்து லட்சக் கணக்கிலும் கோடிக் கணக்கிலுமான குடிமக்களைக் கொண்ட பெரிய நிறுவன ஒழுங்கமைப்பு முயற்சிகளுக்கு வேண்டிய அனுபவத்தையும் பழக்கங்களையும் பெறுதிருப்பது புரிந்து கொள்ளக் கூடியதே; அனேகமாய் முற்றிலும் கிளர்ச்சியாளர்களுக்கு உரித்தான பழைய பழக்கங்களை உருமாற்றித் திருத்தியமைத்துக் கொள்வது மிக நீண்டதொரு நிகழ்ச்சிப் போக்கு. ஆனால் இது முடியாத

காரியமன்று: மாறுதல் அவசியமென்று தெளிவாக உணர்ந்து ஏற்கப்பட்டதும், மாறுதலை உண்டாக்க வேண்டுமென்ற உறுதியான வைராக்கியமும் கடினமான பெரியதொரு குறிக்கோளுக்காகப் பாடுபடுவதில் விடாமுயற்சியும் பெறப்பட்டதும் நாம் நிச்சயம் இந்தக் காரியத்தைச் செய்யத்தான் போகிறோம். ''மக்கள்'' இடத்தே, அதாவது தொழிலாளர்களிடத்தும் ஏனையோரது உழைப்பைச் சுரண்டாத விவசாயிகளிடத்தும் நிறுவன ஒழுங்கமைப்பு ஆற்றல் பெரிய அளவில் இருக்கிறது. ஆற்றல் படைத்த ஆயிரக்கணக்கான இம்மக்களை மூலதனமானது நசுக்கியது. அவர்களது ஆற்றலை அழித்து அவர்களைக் குப்பை மேட்டில் ஒதுக்கிற்று. இம்மக்களைக் கண்டுபிடித்து, இவர்களுக்கு ஊக்கமளித்து, எழுந்து காலூன்றி நிற்க வைத்து, இவர்களை வளர்த்து உயரச் செய்வதற்கு இன்னும் நம்மால் முடியவில்லை. முழுமுனைப்பான புரட்சிகர ஆர்வத்துடன்—இது இல்லாமல் வெற்றிகரப் புரட்சிகள் எவையும் சாத்தியமன்று—நாம் இவ்வேலையில் இறங்குவோமாயின் இதனைச் செய்யக் கற்றுக் கொள்வோம்.

கேடுகெட்ட கசடு மேல் மட்டத்துக்கு வராமல், எதற்கும் துணிந்த அயோக்கியர்களும் கயவர்களும், வாய்வீச்சுக்காரர்களும் கும்மாளிகளும் அனுபவமில்லாதவர்களாகிய புதியன புனையும் முன்னோடிகளுடன் ஒட்டிக் கொள்ளாமல், அசட்டுக் குழப்படியும் களேபரமும் இல்லாமல், தனிப்பட்ட ''தலைவர்கள்'' ஒருங்கே இருபது காரியங்களைச் செய்ய முயன்று எதையும் நிறைவு செய்யாது விட்டு வைக்காமல், ஆழமும் வலிவும் மிக்க எந்த வெகுஜன இயக்கமும் வரலாற்றில் நடைபெற்றதில்லை. பெரிய பழைய மரத்தை வெட்டுகையில் அதிகப்படியாய்ச் சீவியெறியப்படும் ஒவ்வொரு சில்லு குறித்தும், முதலாளித்துவச் சமுதாயத்தின் வளர்ப்பு நாய்கள்—பெலரூசவிலிருந்து மார்த்தவ் வரையிலான யாவரும்—கீச்சிட்டுக் குரைக்கட்டும். பாட்டாளி வர்க்க யானையைப் பார்த்துக் குரைப்பதற்கு அல்லாமல் வேறு எதற்காக இருக்கின்றனவாம் இந்த வளர்ப்பு நாய்கள்? அவர்கள் குரைக்கட்டும். நாம் நமது வழியில் செல்வோம்; மெய்யான

ஒழுங்கமைப்பாளர்களை, நிதானமும் காரியக் கண்ணோட்டமும் கொண்டவர்களை, சோஷலிசத்தின்பால் பற்றுறுதியும் அதேபோது களேபரமின்றி (குழப்படியையும் களேபரத்தையும் மீறி) பெரிய எண்ணிக்கையிலானோரை முறையாகவும் ஒருங்கிணைந்தும் சோவியத் நிறுவனத்தின் கட்டுக்கோப்பினுள் வேலை செய்ய வைக்கும் ஆற்றலும் ஒருங்கே பெற்றிருப்போரைச் சோதித்துப் பார்த்துக் கண்டுபிடிப்பதற்காக கூடுமான அளவுக்குக் கவனமாகவும் பொறுமையாகவும் நாம் முயற்சி செய்வோம். இம்மாதிரியானவர்கள் மட்டும்தான், எளிய பணிகளிலிருந்து மேலும் கடின பணிகளுக்கு மாற்றப்பட்டுப் பத்துப் பன்னிரண்டு தரம் சோதித்துப் பார்க்கப்பட்ட பிற்பாடு, மக்களது உழைப்பின் தலைவர்களுக்கும் நிர்வாகத் தலைவர்களுக்குமாகிய பொறுப்புள்ள பதவிகளுக்கு உயர்த்தப்பட வேண்டும். இதைச் செய்ய இன்னும் நாம் கற்றுக்கொண்டாகவில்லை, ஆனால் இதனை நாம் கற்றுக் கொள்வோம்.

‘‘இசைவான ஒழுங்கமைப்பும்’’ சர்வாதிகாரமும்

அண்மையில் நடைபெற்ற சோவியத்துகளது (மாஸ்கோ) காங்கிரஸ் ஏற்றுக் கொண்ட தீர்மானம், ‘‘இசைவான ஒழுங்கமைப்பை’’ நிறுவுவதையும் கட்டுப்பாட்டினைக் கடுமையாக்குவதையும் இத்தருணத்துக்குரிய முதன்மையான பணியாக முன்வைத்தது.* இந்த மாதிரியான தீர்மானங்களுக்கு எல்லோரும் இப்பொழுது தயங்காது ‘‘வாக்கு அளிக்கிறார்கள்’’, ‘‘உடன்பட்டு ஆதரவளிக்கிறார்கள்’’, ஆனால் இம்மாதிரியான தீர்மானங்களைச் செயல்படுத்துவதற்குப் பலவந்தம்—சர்வாதிகாரத்தின் வடிவிலான பலவந்தம்—தேவைப்படுவது குறித்து சாதாரணமாய் இவர்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை. எனினும் பலவந்தம் இல்லாமல், சர்வாதிகாரம்

* இத்தொகுதியின் பக்கம் 47ஐப் பார்க்க.—ப-ர்.

இல்லாமல் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்ல முடியுமெனக் கொள்வது முழு முட்டாள்தனமும் அசட்டுக் கற்பனுவாதமுமே ஆகும். குட்டிமுதலாளித்துவ-ஜனநாயகவாதமும் அராஜகவாதமுமாகிய இந்த அபத்தத்தை நெடுங் காலத்துக்கு முன்பே மார்க்சின் தத்துவம் மிகவும் திட்டவட்டமாய் எதிர்த்தது. 1917—1918ஆம் ஆண்டுகளது ருஷ்யாவானது இது பற்றிய மார்க்ஸ் தத்துவம் பிழையற்றதே என்பதை அவ்வளவு பளிச்சென்றும் கண்கூடாகவும் பிரமாதமாகவும் உறுதி செய்து காட்டியிருப்பதால், அறவே மதி மழுங்கியோரால்தான், அல்லது உண்மையிடமிருந்து ஓடிச் செல்வதென்று பிடிவாத முடிவுக்கு வந்துவிட்டோரால் தான் இது குறித்து எந்தத் தப்பபிப்பிராயமும் கொண்டிருக்க முடியும். கர்னீலவின் சர்வாதிகாரம் (முதலாளித்துவக் கவெனியாக்கின் ருஷ்ய ரகமாய் இவரைக் கொள்வோமாயின்), இல்லையேல் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம்—இரண்டில் ஒன்றைத் தேர்வு செய்து கொள்ள வேண்டும்; வரலாற்றிலே மிகக் கொடிய யுத்தங்களில் ஒன்றால் உண்டான படுபாதகச் சேதங்களுக்கிடையே கடுந் திருப்பங்களின் ஊடே மட்டுமீறிய வேகத்தில் வளர்ச்சியுற்று வரும் ஒரு நாட்டுக்கு இதன்றி வேறு எதுவும் சாத்தியமன்று. நடுப் பாதை ஒன்று இருப்பதாகச் சொல்லி முன்வைக்கப்படும் எந்தத் தீர்வும், மக்களை ஏமாற்றுவதற்காக முதலாளித்துவ வர்க்கம் கையாளும் ஏமாற்றுகவோ—முதலாளித்துவ வர்க்கத்தினர் உண்மையைச் சொல்லத் துணியவில்லை, தமக்குக் கர்னீலவ் தேவைப்படுகிறுரெனக் கூறத் துணியவில்லை என்பதால்—அல்லது ஜனநாயகத்தின் ஒற்றுமையென்றும் ஜனநாயகச் சர்வாதிகாரமென்றும் பொது ஜனநாயக முன்னணியென்றும் இன்ன பிற அபத்தமும் பேசிவரும் குட்டிமுதலாளித்துவ ஜனநாயகவாதிகளின்—செர்னேவ்கள், த்ஸெரெத்தேலிகள், மார்த்தவ்கள் ஆகியோரின்—மதியீனத்தை வெளிக்காட்டுவதாகவோ இருக்கின்றது. நடுப்பாதை சாத்தியமல்ல என்று 1917—1918 ருஷ்யப் புரட்சியின் முன்னேற்றத்திலிருந்துங்கூட போதனை பெருதவர்கள், கடைத்தேற வழியற்றவர்களாகக் கைவிடப்பட வேண்டியவர்களே.

மறு புறத்தில் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத் துக்கான ஒவ்வொரு மாறுதல் கட்டத்திலும் சர்வாதிகார மானது இரு பிரதான காரணங்களால், அல்லது இரு பிர தான மார்க்கங்களில் அத்தியாவசியமாகிவிடுவதைப் புரிந்து கொள்வது கடினமன்று. முதலாவதாக, சுரண்டுவோரது எதிர்ப்பை இரக்கமின்றி நசுக்காமல் முதலாளித்துவத்தைத் தோற்கடித்து இல்லாதொழித்திட முடியாது. சுரண்டு வோரது செல்வத்தையும், ஒழுங்கமைப்பினுலும் அறிவாலும் அவர்களுக்குக் கிடைக்கப் பெறும் அனுகூலங்களையும் எடுத்த யெடுப்பிலே அவர்களிடமிருந்து பறித்துவிட முடியாது; ஆகவே அவர்கள் தமது வெறுப்புக்குரிய ஏழைகளது ஆட்சி யைக் கவிழ்ப்பதற்காக, தவிர்க்க முடியாதவாறு ஓரளவு நீண்ட காலத்துக்கு முயலவே செய்வர். இரண்டாவதாக, பெரிய புரட்சி ஒவ்வொன்றும், குறிப்பாக ஒரு சோஷலிசப் புரட்சி, வெளியிலிருந்தான போர் ஏதும் இல்லாமற் போனு லும், உள்ளிருந்தான போர் அதாவது உள்நாட்டு போர் இல் லாமல் நடைபெறுவது நினைக்கவே முடியாதது. உள்நாட்டுப் போர் வெளியிலிருந்தான போரை விடவும் அதிக நாசம் விளைவிப்பது, ஆயிரக் கணக்கிலும் லட்சக் கணக்கிலுமா னேரை ஊசலாடச் செய்து, ஒரு தரப்பிலிருந்து இன்னென் றுக்குத் துறந்தோட வைப்பது; மித மிஞ்சிய தெளிவின்மை யையும் சமநிலையின்மையையும் குழப்பத்தையும் குறிப்பது. இத்தகைய ஆழ்ந்த புரட்சியின் போது பழைய சமுதாயத் தின் சிதைவுக் கூறுகள் யாவும் நிச்சயம் ''தம்மை வெளிப் படுத்திக் கொண்டே'' ஆக வேண்டும். தவிர்க்கவொண்ணுத படி இந்தச் சிதைவுக் கூறுகள் ஏராளமாகவே இருக்கின்றன, இவை பிரதானமாய்க் குட்டிமுதலாளித்துவப் பகுதிகளுடன் சம்பந்தப்பட்டவையாகும் (ஏனெனில் ஒவ்வொரு யுத்தமும் ஒவ்வொரு நெருக்கடியும் முதலில் குட்டிமுதலாளித்துவப் பகுதியோரையே நாசத்துக்கு உள்ளாக்கி அழித்திடுகிறது). குற்றச்செயல் போக்கிரித்தனம், லஞ்ச ஊழல், கொள்ளை லாப வெறி மற்றும் எல்லா விதமான முறைகேடுகளையும் பெருகச் செய்வதன் மூலம் அல்லாமல் வேறு எவ்வழியிலும் இந்தச் சிதைவுக் கூறுகள் ''தம்மை வெளிப்படுத்திக்

கொள்ள'' முடிவதில்லை. இந்தக் கேடுகளை அடக்கு வதற்கு அவகாசம் வேண்டும், இரும்புக் கரம் வேண்டும்.

மக்கள் உள்ளுணர்ச்சி மூலம் இதனை உணர்ந்து கொண்டு, திருடர்களை அந்தந்த இடத்திலேயே சுட்டுக் கொன்று, பயன் தரத்தக்க மன உறுதியை வெளிப்படுத்தாத பெரும் புரட்சி வரலாற்றில் ஒன்றுகூட இருந்ததில்லை. மக்களை இறுக்கமான நிலையில் தொடர்ந்து இருக்கச் செய்து, சிதைவுக் கூறுகளை இரக்கமின்றி அடக்குவதற்கான பலத்தை அவர்களுக்கு அளித்திட்ட அவர்களது புரட்சிகர ஆர்வம் அதிக காலத் துக்கு நீடிக்காமற் போனதுதான் முந்திய புரட்சிகளது துர்ப் பாக்கியமாய் அமைந்து விட்டது. மக்களது புரட்சிகர ஆர் வம் இப்படி நிலையற்றதாய் போனதற்குரிய சமூக, அதாவது வர்க்கக் காரணம், பாட்டாளி வர்க்கத்தின் பலவீனம்தான். பாட்டாளி வர்க்கம் ஒன்று மட்டுமே (எண்ணிக்கையில் அது போதுமானதாகவும் போதிய வர்க்க உணர்வு படைத்ததாக வும் கட்டுப்பாடு வாய்ந்ததாகவும் இருக்குமாயின்), உழைப் போரும் சுரண்டப்படுவோருமாகிய மக்களில். பெரும்பான் மையோரை (மேலும் எளிய முறையிலும் ஜனரஞ்சகமாக வும் சொல்வதெனில் ஏழையெளியோரில் பெரும்பான்மை யோரை) தன் தரப்புக்குக் கவர்ந்து இழுத்துக் கொள்ள வும், சுரண்டுவோர் எல்லோரையும் மற்றும் சிதைவுக் கூறு கள் யாவற்றையும் அறவே அடக்குவதற்குப் போதுமான காலத்துக்கு ஆட்சியதிகாரத்தை இழக்காமல் வைத்துக் கொள்ளவும் வல்லதாய் இருக்கின்றது.

மார்க்ஸ் பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் என்ற அவரது இரத்தினச் சுருக்கமான, கூர்மையான, அடக்கமான, பொருட் செறிவு வாய்ந்த சூத்திரத்தை வகுத்து அளித்த போது, எல்லாப் புரட்சிகளுக்கும் உரிய இந்த வரலாற்று அனுபவத்தைத்தான், இந்த உலக-வரலாற்று—பொருளா தார, அரசியல்—படிப்பினையைத்தான் அவர் தொகுத்துக் கூறினர். இந்த உலக-வரலாற்றுப் பணியை ருஷ்யப் புரட்சி அணுகிய முறை பிழையற்றதாகும் என்பது, ருஷ்யாவின் எல்லா மக்கள் இனத்தோரிடையிலும் மொழியினரிடையி லும் சோவியத் வடிவிலான ஒழுங்கமைப்பு கண்டிருக்கும்

வெற்றிகர முன்னேற்றத்தால் நிரூபித்துக் காட்டப் பெற்றுள் ளது. சோவியத் ஆட்சியதிகாரமானது பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின், முன்னேறிய வர்க்கத்தினுடைய சர்வாதி காரத்தின் ஓர் ஒழுங்கமைப்பு வடிவமே அன்றி வேறல்ல; உழைப்போரும் சுரண்டப்படுவோருமான கோடானு கோடி யான மக்களை, பாட்டாளி வர்க்கத்தின் கட்டுப்பாடு வாய்ந்த, வர்க்க உணர்வு கொண்ட முன்னணிப்படையினைத் தமது சொந்த அனுபவத்தின் வாயிலாய் உறுதியாய் நம்பத்தக்க தமது தலைவனாகக் கருதக் கற்றறிந்து கொள்ளும் இம்மக் களை, ஒரு புதிய ஜனநாயகத்துக்கு, அரசின் நிர்வாகத்தில் சுயேச்சையான பங்கு கொள்ளும் நிலைக்கு உயரச் செய்யும் முன்னேறிய வர்க்கத்தினுடைய சர்வாதிகாரத்தின் ஒரு வடிவமே அன்றி வேறல்ல.

ஆனால் சர்வாதிகாரம் என்பது ஒரு பெருஞ் சொல்; பெருஞ் சொற்களைக் கவனமின்றி கையாளக் கூடாது. சர் வாதிகாரமானது இரும்பின் உறுதி வாய்ந்த ஆட்சியாகும், சுரண்டுவோரும் போக்கிரிகளுமான இரு சாராரையும் அடக்குவதில் புரட்சிகரத் துணிவும் விரைவும் இரக்கமின்மை யும் கொண்டதான ஆட்சியாகும். ஆனால் நமது ஆட்சி அளவு மீறி இதமானதாய் இருக்கின்றது, அடிக்கடி இரும்பைக் காட்டிலும் அதிகமாய்ப் பழப்பாகையே ஒத்ததாய் இருக் கிறது. முதலாளித்துவ, குட்டிமுதலாளித்துவ சக்திகள் இரு வழிகளில் சோவியத் ஆட்சியதிகாரத்தை எதிர்த்துப் போராடுகின்றன என்பதைக் கணமும் நாம் மறக்கலாகாது. ஒரு புறத்தில் இவை வெளியிலிருந்து செயல்படுகின்றன; சாவின்கவ்கள், கோட்ஸ்கள், கெகெச்கோரிகள், கர்னீலவ்கள் ஆகியோரது செயல்முறைகள் மூலமும், சதிகள், கலகங்கள் மூலமும், அவர்களது இழிவான ''சித்தாந்தப்'' பிரதிபலிப் பாகிய காடேட்டுகள், வலதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கள், மென்ஷிவிக்குகளது பத்திரிகைகளில் பெருக்கெடுக்கும் பொய்கள், அவதூறுகள் மூலமும் செயல்படுகின்றன. மறு புறத்தில் இந்த சக்திகள் உள்ளிருந்து செயல்படுகின்றன; லஞ்சமளிக்கும் பொருட்டும், கட்டுப்பாட்டுக் குலைவினையும் கண்டிப்பின்மையையும் குழப்பத்தையும் அதிகமாக்கும்

பொருட்டும் சிதைவின் ஒவ்வொரு வெளிப்பாட்டை.யும் ஒவ்வொரு பலவீனத்தையும் பயன்படுத்திக் கொள்கின்றன. முதலாளித்துவத்தை ராணுவ வழியில் முழு அளவுக்கு நசுக்கும் நிலையை நெருங்கிச் செல்லச் செல்ல, குட்டிமுதலாளித்துவ அராஜகச் சக்திகள் மேலும் மேலும் அபாயகரமானதாகிச் செல்கின்றன. இந்தச் சக்திகளுக்கு எதிரான போராட்டத்தை முற்றிலும் பிரசாரத்தின், கிளர்ச்சியின் துணை கொண்டே, போட்டிக்கு ஏற்பாடு செய்வதன் மூலமும் ஒழுங்கமைப்பாளர்களைத் தேர்வு செய்து எடுப்பதன் மூலமுமே நடத்திச் செல்வது முடியாததாகும். பலவந்தத்தின் மூலமாகவும் இந்தப் போராட்டம் நடத்தப்பட வேண்டும்.

அரசாங்கத்தின் அடிப்படைப் பணி ராணுவ முறையில் அடக்குதல் அல்லாமல் நிர்வாகம் புரிதலாய் ஆகும் போது, அடக்குதல், வலுக்கட்டாயம் செய்தலின் இம்மாதிரி வெளிப்பாடானது அந்தந்த இடத்திலேயே சுட்டுக் கொல்வதாய் இல்லாமல் நீதி மன்றத்தின் மூலம் விசாரணை நடத்துவதாய் ஆகிவிடுகிறது. இத்துறையிலும் 1917 அக்டோபர் 25க்குப் பிற்பாடு புரட்சிகர மக்கள் திரளினர் சரியான பாதையையே மேற்கொண்டனர்; முதலாளித்துவ அதிகாரவர்க்க நீதிமன்றங்களைக் கலைக்கும் அரசாணைகள் பிறப்பிக்கப்படும் முன்னரே கூட தமது சொந்தத் தொழிலாளர்கள், விவசாயிகளது நீதிமன்றங்களை நிறுவிக் கொண்டதன் மூலம் புரட்சியின் செயல்திறனைக் கண்கூடாய் மெய்ப்பித்துக் காட்டினர். ஆனால் நமது புரட்சிகர, மக்கள் நீதிமன்றங்கள் நம்ப முடியாதபடி அளவு கடந்து பலவீனமாய் இருக்கின்றன. நீதிமன்றங்களிடம் மக்களுக்குள்ள போக்கு அதிகார முறையிலானவற்றிடமும் அன்னியமானவற்றிடமும் இருக்கும்படியான போக்காகவே, நிலப்பிரபுக்களின், முதலாளித்துவ வர்க்கத்தின் ஒடுக்கு முறையிலிருந்து வரப்பெற்ற போக்காகவே இருந்து வருவதை இன்னும் நாம் அகற்றியாகவில்லை என்பதாகத் தெரிகிறது. நீதிமன்றங்கள் ஏழை மக்களை, இவர்களில் ஒவ்வொருவரையும், அரசு நிர்வாக வேலையில் அணிதிரளச் செய்யும் உறுப்பாகும் (ஏனெனில் நீதிமன்றங்கள் புரியும் வேலை அரசு நிர்வாகத்துக்குரிய பணிகளில் ஒன்றாகும்) என்பது, நீதி

மன்றங்கள் பாட்டாளி வர்க்கத்தாரது, ஏழை விவசாயிகளது ஆட்சியதிகாரத்துக்கான ஓர் உறுப்பாகும் என்பது, கட்டுப்பாட்டைப் போதிப்பதற்கு நீதிமன்றங்கள் சாதனமாகும் என்பது போதிய அளவுக்கு இன்னமும் உணரப்பட்டாகவில்லே. தற்போது பட்டினியும் வேலேயின்மையுமே ருஷ்யாவின் தலேயாய துர்ப்பாக்கியங்கள் என்ருல், விட்டுவிட்டுச் செய்யப்படும் திடீர்பிரயத்தனங்களால் இந்தத் துர்ப்பாக்கியங்களேச் சமாளித்துவிட முடியாது; விரிந்தமைந்து அனேத்தும் அடங்கும்படி வியாபகமாய் நாடு தழுவிய அளவில் நிலவும் ஒழுங்கமைப்பையும் கட்டுப்பாட்டையும் நிறுவி, இவ்விதம் மக்களுக்கு வேண்டிய உணவின் உற்பத்தியையும் தொழில் துறைக்கு வேண்டிய உணவின் (எரிபொருளின்) உற்பத்தியையும் அதிகரிக்கச் செய்வதன் மூலமும், இவை தேவைப்படும் இடங்களுக்கு இவற்றைக் காலம் தாழ்த்தாது கொண்டு போய்ச் சேர்ப்பதன் மூலமும், இவற்றை ஒழுங்காய் வினியோகிப்பதன் மூலமும்தான் இந்தத் துர்ப்பாக்கியங்களேச் சமாளித்திட முடியும் என்ற தெட்டத் தெளிவான எளிய உண்மை போதிய அளவுக்கு இன்னமும் உணர்ந்து ஏற்கப்பட்டாகவில்லே. ஆகவே, எந்த ஆலேயிலும் எந்த நிலேயத்திலும் எந்த விவகாரத்திலும் உழைப்புக் கட்டுப்பாட்டை மீறுகின்ற ஆட்கள்தான் பஞ்சத்தாலும் வேலேயின்மையாலும் ஏற்படும் துன்பங்களுக்குப் பொறுப்பாளிகளாவர் என்பதும், குற்றவாளிகளே கண்டறிந்து விசாரணேக்குக் கொண்டு வந்து தயவு தாட்சண்யமின்றி அவர்களேத் தண்டிக்க நமக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்பதும் முழு அளவுக்குப் புரிந்து கொள்ளப்படவில்லே. குட்டிமுதலாளித்துவ அராஜகத்தை எதிர்த்து இப்போது நாம் மிகவும் விடாப்பிடியான போராட்டம் நடத்தியாக வேண்டும்; ஒரு புறத்தில் பஞ்சம், வேலேயின்மைக்கும், மறு புறத்தில் ஒழுங்கமைப்பு, கட்டுப்பாட்டு விவகாரங்களில் பொதுவாக இருந்துவரும் கண்டிப்பின்மைக்கும் இடையிலுள்ள பொருளாதார, அரசியல் தொடர்பினே உணரத் தவறுவதில்—சிறு உடைமையாளரது கண்ணேட்டமானது, அதாவது என் கைக்கு எட்டியவற்றை எல்லாம் எனக்கே உரியனவாய் வாரிக் கொள்ள வேண்டும், ஏனே

யோர் எக்கேடு கெட்டாலும் கவலேயில்லை என்பதான கண்ணேட்டமானது விடாப்பிடியாக நீடித்து நிலவுவதில்— இந்தக் குட்டிமுதலாளித்துவ அராஜகம் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.

பெருவீத முதலாளித்துவத்தால் தோற்றுவிக்கப்பட்ட கூட்டமைப்பின் பொருளாதாரப் பிணைப்புகளை மிக எடுப்பாய் உருவகப்படுத்துவதாகக் கொள்ளக் கூடிய ரயில் போக்குவரத்துப் பணித்துறையில் குட்டிமுதலாளித்துவக் கண்டிப்பின்மைக்கான கூறுக்கும் பாட்டாளி வர்க்க ஒழுங்கமைப்புக்கும் இடையிலான போராட்டம் குறிப்பிடத்தக்கத் தெளிவுடன் புலப்படுகிறது. ''நிர்வாகப்'' பணியினர் நாசவேலையினரையும் லஞ்ச ஊழியர்களேயும் ஏராளமாகத் தோற்றுவிக்க, பாட்டாளி வர்க்கப் பிரிவினரில் சிறந்த பகுதியோர் கட்டுப் பாட்டுக்காகப் போராடுகின்றனர். ஆனுல் இரு பகுதியோரிடையிலும் ஊசலாட்டக்காரர்களும், ''பலவீன'' ஆட்களும் பலர் இருக்கவே செய்கிருர்கள்; கொள்ளை இலாபம், லஞ்சம், தனிப்பட்ட ஆதாயம் ஆகியவற்றின் ''கவர்ச்சியை'' இவர்களால் எதிர்த்து நிற்க முடிவதில்லை. முழுப் பொறியமைவையும் கேடுறச் செய்து இவர்கள் தனிப்பட்ட முறையில் ஆதாயம் பெறுகிருர்கள்; ஆனுல் பஞ்சத்தின் மீதும் வேலேயின்மை மீதும் வெற்றி பெறுதல் இப்பொறியமைவு ஒழுங்காய் இயங்குவதையே பொறுத்திருக்கிறது.

இரயில்வேக்களின் நிர்வாகம் குறித்து அண்மையில் பிறப்பிக்கப்பட்ட அரசாணையை மையமாகக் கொண்டு வளர்ந்திருக்கும் போராட்டம் குறிப்பிடத்தக்கதாகும். இந்த அரசாணை தனிப்பட்ட நிர்வாகிகளுக்கு சர்வாதிகாரம்[28] (அல்லது ''வரம்பில்லா'' அதிகாரம்) அளித்திடுகிறது. குட்டிமுதலாளித்துவக் கண்டிப்பின்மை குறித்து உணர்வுள்ள பிரதிநிதிகள் (பெரும் பகுதியோர் இவ்வுணர்வு இல்லாதோராகவும் இருக்கலாம்), இவ்விதம் தனியாட்களுக்கு ''வரம்பில்லா'' அதிகாரம் (அதாவது, சர்வாதிகாரம்) அளிக்கப்பட்டிருப்பதானது, கூட்டுமைக் கோட்பாட்டிலிருந்து, ஜனநாயகத்திலிருந்து, சோவியத் ஆட்சியதிகாரத்தின் கோட்பாடுகளிலிருந்து விலகிச் செல்வதைக் குறிப்பதாய்க் கருத விரும்பு

கிறார்கள். சர்வாதிகாரம் அளித்திடும் இந்த அரசாணைக்கு எதிராய், இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களிடையே, இங்குமங்குமாக, திட்டவட்டமான காலித்தனம் வாய்ந்த கிளர்ச்சி, அதாவது கீழ்த்தரமான உணர்ச்சிகளையும் சிறு உடைமையாளருக்குரிய ''கைக்கு எட்டியவை யாவற்றையும் வாரிக் கொள்ளும்'' ஆவலையும் தூண்டிவிடும் படியான கிளர்ச்சி வளர்த்து உருவாக்கப்பட்டிருக்கிறது. பிரச்சினையானது மெய்யாகவே மிகப் பெரும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகியுள்ளது. முதலாவதாக, கோட்பாடு சம்பந்தமான பிரச்சினை: அதாவது தனியாட்களை, வரம்பில்லா அதிகாரமுள்ள சர்வாதிகாரிகளை நியமிப்பது பொதுவாக சோவியத் அரசாங்கத்தின் அடிப்படை கோட்பாடுகளுக்கு இசைவானதா? இரண்டாவதாக, இந்தச் செயல்—இந்த முன்மாதிரி என்பதாக வேண்டுமானாலும் சொல்லுங்கள்—தற்போதைய ஸ்தூல நிலைமையில் அரசாங்கத்துக்குள்ள விசேஷப் பணிகளுடன் கொண்டிருக்கும் உறவு என்ன? இந்த இரு பிரச்சினைகளையும் நாம் தீர்க்கமாய்ப் பரிசீலித்தாக வேண்டும்.

புரட்சி இயக்கங்களது வரலாற்றில் தனியாட்களது சர்வாதிகாரம் புரட்சிகர வர்க்கங்களது சர்வாதிகாரத்தின் வெளிப்பாடாக, சாதனமாக, செயல்வழியாக அடிக்கடி இருந்ததை வரலாற்றின் மறுக்க முடியாத அனுபவம் தெளிவுபடுத்திக் காட்டியுள்ளது. தனியாட்களது சர்வாதிகாரம் சந்தேகத்துக்கு இடமின்றி முதலாளித்துவ ஜனநாயகத்துக்கு இசைவானதாகவே இருந்தது. ஆனால் சோவியத் அமைப்பை நிந்தனை செய்வோரும் அவர்களது குட்டிமுதலாளித்துவக் கையாட்களும் இந்த விவகாரத்தில் எப்போதுமே செப்பிடுவித்தை புரிகிறார்கள்: ஒரு புறத்தில், சோவியத் அமைப்பு அபத்தமானதென்றும் அராஜகத் தன்மையதென்றும் காட்டுமிராண்டித் தனமானதென்றும் கூறுகிறார்கள்; சோவியத்துகள் உயர்வடிவிலான ஜனநாயகமாகும் என்பதோடு ஜனநாயகத்தின் சோஷலிச வடிவத்துக்கான துவக்க நிலையுமாகும் என்பதை நிரூபிக்கும் நமது வரலாற்று உதாரணங்கள் யாவற்றையும் தத்துவார்த்த வாதங்களையும் பற்றி ஒன்றும்

சொல்லாமலே கவனமாய் ஒதுங்கிச் செல்கிறார்கள். மறு புறத்தில், முதலாளித்துவ ஜனநாயகத்தை விட உயர்ந்த ஜன நாயகத்தை நம்மிடமிருந்து கோரி, உங்களது போல்ஷிவிக், (அதாவது, முதலாளித்துவமாய் இராது சோஷலிசமாய் இருக்கும்) சோவியத் ஜனநாயகத்துக்குத் தனியாள் சர்வாதிகாரம் நிச்சயமாயும் ஒவ்வாததெனச் சொல்கிறார்கள்.

படுகேவலமான வாதங்கள் இவை. நாம் அராஜகவாதிகளாக இல்லாத வரை, முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்வதற்கு அரசு, அதாவது பலவந்தம் அவசியம் என்பதை ஒத்துக் கொண்டாக வேண்டும். அந்தந்தப் புரட்சிகர வர்க்கமும் கண்டிருக்கும் வளர்ச்சியின் நிலையாலும், மற்றும் உதாரணமாய், நீண்டதொரு பிற்போக்குப் போர் விட்டுச் சென்றிருப்பவற்றையும் முதலாளித்துவ வர்க்கத்தினரும் குட்டிமுதலாளித்துவப் பகுதியோரும் காட்டும் எதிர்ப்பின் வடிவங்களையும் போன்ற விசேஷ சூழ்நிலைமைகளாலும் இந்தப் பலவந்தத்தின் வடிவம் நிர்ணயிக்கப்படுகிறது. ஆகவே சோவியத் (அதாவது, சோஷலிச) ஜனநாயகத்துக்கும் தனியாட்கள் செலுத்தும் சர்வாதிகாரத்துக்கும் இடையே நிச்சயமாயும் முரண்பாடு ஏதுமில்லை. பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்கும் முதலாளித்துவ சர்வாதிகாரத்துக்குமுள்ள வேறுபாடு என்னவெனில், முன்னது சுரண்டப்படும் பெரும்பான்மையோரது நலன்களுக்காக வேண்டி, சுரண்டும் சிறுபான்மையோரைத் தாக்குகிறது என்பதும், இச்சர்வாதிகாரம்—**தனியாட்கள்** மூலமானதே **இதுவும்**—உழைப்போரும் ஒடுக்கப்படுவோருமான மக்களால் மட்டுமின்றி, இம்மக்களை வரலாறு படைக்கும் செயலில் இறங்கும்படி தட்டியெழுப்பி ஊக்குவிக்கும்படியான முறையில் கட்டப் பெற்றுள்ள நிறுவனங்களாலும் செலுத்தப்படுகிறது என்பதும்தான் (சோவியத் நிறுவனங்கள் இவ்வகைப்பட்டவையே).

தற்போதைய தருணத்தின் பிரத்தியேகப் பணிகளின் நோக்கு நிலையிலிருந்து தனியாள் சர்வாதிகாரத் தன்மையதான அதிகாரங்களின் முக்கியத்துவத்தைப் பற்றிய இரண்டாவது பிரச்சினையைப் பொறுத்தவரை, பெருவீத இயந்

திரத் தொழில் துறையானது—இதுவேதான் சோஷலிசத்தின் பொருள்வகை ஆதாரம், பொருளுற்பத்தி ஆதாரம், சோஷலிசத்தின் அடிப்படை—முழுமையான, கண்டிப்பான சித்த ஒற்றுமை வேண்டுமெனக் கோருகிறது; நூற்றுக் கணக்கிலும் ஆயிரக் கணக்கிலும் பத்தாயிரக் கணக்கிலுமானவர்களது கூட்டு உழைப்பினை நெறியாண்மை புரிவது இந்தச் சித்த ஒற்றுமையே. தொழில்நுட்ப வழியிலும், பொருளாதார வழியிலும், வரலாற்று வழியிலும் இது அவசியமென்பது கண்கூடு. சோஷலிசம் குறித்துச் சிந்தனை செய்தவர்கள் எல்லோரும் இதனை சோஷலிசத்துக்குரிய நிபந்தனைகளில் ஒன்றாகுமென எப்போதுமே கருதி வந்துள்ளனர். ஆனால் கண்டிப்பான சித்த ஒற்றுமையை உறுதி செய்து கொள்வது எப்படி? ஆயிரக் கணக்கானோர் தமது சித்தத்தை ஒருவரது சித்தத்துக்குக் கீழ்படுத்திக் கொள்வதே இதற்குரிய வழி.

பொது வேலையில் பங்கு கொள்வோரிடம் குறைவற்ற முழுநிறை வர்க்க உணர்வும் கட்டுப்பாடும் இருக்குமாயின், இவ்வாறு கீழ்ப்படுத்திக் கொள்ளுதல் வாத்தியக் குழுவின் இயக்குனரது இதமான தலைமையைப் போன்றதாய் இருக்கும். குறைவற்ற முழுநிறைக் கட்டுப்பாடும் வர்க்க உணர்வும் இல்லாத போது இது சர்வாதிகாரத்தின் கடுமையான வடிவங்களை ஏற்கலாம். ஆனால் இது எப்படி இருப்பதாயினும், பெருவீத இயந்திரத் தொழில்துறையின் பாணியில் ஒழுங்கமைக்கப் பெற்ற வேலை முறைகள் வெற்றி பெறுவதற்கு, தனியொருவரது சித்தத்துக்கு மறு பேச்சின்றி கீழ்படிதல் முழுக்க முழுக்க அவசியமாகும். இரயில்வேக்களில் இது மேலும் இரண்டு, மூன்று மடங்குக்கு அவசியமாகும். ஓர் அரசியல் பணியிலிருந்து, மேலெழுந்த வாரியான பார்வைக்கு சிறிதும் இதை ஒத்ததாய் இராத இன்னொன்றுக்கு மாறிச் செல்ல வேண்டியிருப்பதில்தான் தற்போதைய நிலைமையின் தற்படைப்பு இயல்பு அனைத்தும் அடங்கியிருக்கிறது. வலுக்கட்டாயத்துக்கு உட்பட்டு மக்கள் கீழ்ப்படிய வேண்டியிருந்த மிகப் பழைமையான, வலிமை மிக்கதான, பெருஞ் சுமையாய் வருத்திய விலங்குகளை இப்போதுதான் புரட்சி தகர்த்திருக்கிறது. இது நடைபெற்றது நேற்று. ஆனால்

இன்று இதே புரட்சி உழைப்பின் தலைவர்களது தனியொரு சித்தத்துக்கு மறு பேச்சின்றி பணியும்படி மக்களிடம் கோருகிறது—தான் வளர்ச்சியுற்று உறுதி பெறுவதன் நலன்களை முன்னிட்டே, சோஷலிசத்தின் நலன்களை முன்னிட்டே இது இவ்வாறு கோருகிறது. இம்மாதிரியான ஒரு மாற்றத்தினை ஒரே மூச்சில் நடந்தேறச் செய்துவிட முடியாதுதான். மிகவும் கடுமையாய் ஆட்டிக் குலுக்கப்பட்டு, அதிர்ச்சிகளுக்கு உள்ளாகி, பழைய வழிமுறைகளுக்குத் திருப்பி விடப்பட்டு, மக்களுக்குத் தலைமை தாங்கி அவர்களைப் புதிய வழிமுறைகளுக்கு இட்டுச் செல்லும் பாட்டாளி வர்க்க முன்னணிப்படையானது பேரளவான பிரயத்தனங்களை எடுக்கும்படி ஆகி—இவை யாவற்றின் விளைவாகவே இது சாதிக்கப்பட முடியும். நோவயா ஷீஸ்ன் அல்லது வ்பெரியோத், தியேலோ நரோதா அல்லது நாஷ் வெக்கின்[29] அற்பத்தனமான, பித்தம் தலைக்கேறிய உணர்ச்சி ஆவேசத்துக்கு உள்ளாகி விடுவோர் இதெல்லாம் குறித்து சிந்திக்க முற்படுவதில்லை.

உழைப்போரும் ஒடுக்கப்படுவோருமான மக்கட் திரளினரது சராசரியான, சாதாரணப் பிரதிநிதியின் மனோபாவத்தை எடுத்துக் கொள்ளுங்கள், சமுதாயத்தில் அவரது வாழ்வின் புறநிலைப் பொருளாயத நிலைமைகளுடன் அதை ஒப்பிட்டுப் பாருங்கள். அக்டோபர் புரட்சிக்கு முன்பு, சொத்துடைத்தவையாகிய சுரண்டும் வர்க்கங்கள் ஒரேயொரு தரங்கூட அவருக்காக மெய்யான எந்தத் தியாகமும் புரிந்து, அவரது நன்மைக்காக எதனையும் கைவிடக் கண்டதில்லை அவர். அவருக்கு அளிக்கப்படுமெனத் திரும்பத் திரும்ப வாக்களிக்கப்பட்ட நிலத்தையும் சுதந்திரத்தையும் இவ்வர்க்கங்கள் அவருக்கு அளிக்கவோ, சமாதானம் கிடைக்கச் செய்யவோ, ''பேரரசு'' நலன்களையோ பேரரசு இரகசிய ஒப்பந்தங்களது நலன்களையோ அவை தியாகம் புரிந்தோ, மூலதனத்தையும் இலாபங்களையும் தியாகம் புரிந்தோ பார்த்ததில்லை அவர். 1917 அக்டோபர் 25க்குப் பிற்பாடுதான்—பலப்பிரயோகம் மூலம் இதை அவர் எடுத்துக் கொண்டு, தாம் எடுத்துக் கொண்டதைப் பலப்பிரயோகம் மூலம் கெரென்ஸ்கிகள், கோட்ஸ்கள், கெகெச்கோரிகள், தூத்தவ்

கள், கர்னீலவ்கள் ஆகியோரிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டியிருந்ததே, அதன் பிறகே—அவர் இதெல்லாம் நடைபெறக் கண்டார். இயற்கையாகவே சிறிது காலத்துக்கு அவரது கவனமெல்லாம், சிந்தனைகள் யாவும், ஆன்மிக பலம் அனைத்தும் நிம்மதியாக மூச்சு விடுவதில், முதுகை நிமிர்த்திக் கொள்வதில், தோள்களை நேராக்கிக் கொள்வதில் குவியலாயின; இப்போது வீழ்த்தப்பட்டுவிட்ட சுரண்டலாளர்களால் எப்போதுமே அவருக்கு இல்லாதபடி மறுக்கப் பட்டு வந்தவையும் தயாராய் இப்போது எதிரே இருந்தவையுமான வாழ்வின் பேறுகளைப் பெறுவதில் குவியலாயின. கிடைப்பவற்றை இப்படிச் சும்மா "எடுத்துக்" கொண்டுவிட, பற்றிக் கொண்டுவிட, வாரிக் கொண்டுவிட முடியாது, இப்படிச் செய்தால் கூடுதலான சீர்குலைவுக்கும், நாசத்துக்கும், கர்னீலவ்கள் திரும்பி வருவதற்கும்தான் வழி வகுக்கப் படும் என்பதைச் சாதாரண உழைப்பாளி தனக்குத் தானே கண்டு கொள்வதற்கும் ஐயமற தெரிந்து கொள்வதற்கும் மட்டுமின்றி, இதனை உணர்ந்து கொள்வதற்கும் சிறிதளவு காலம் தேவையாகவே இருக்கும். சாதாரண உழைப்பாளர்களின் வாழ்க்கை நிலைமைகளிலும் (ஆகவே மனோபாவத்திலும்) இதற்கு இசைவான மாறுதல் இப்போதுதான் ஏற்பட ஆரம்பித்திருக்கிறது. நமது பணி அனைத்தும், சுரண்டப்படுவோரின் விடுதலை நாட்டத்துக்கும் முயற்சிகளுக்கும் வர்க்க உணர்வு படைத்த பிரதிநிதியாகிய கம்யூனிஸ்டுக் கட்சியின் (போல்ஷிவிக்குகள்) பணி அனைத்தும், இந்த மாறுதலை உணர்ந்தறிந்து போற்றுவதுதான், இது அவசியமென்று புரிந்து கொள்வதுதான்; ஓய்ந்து போன மக்களுக்கு, விடுபட்டு வெளிவருவதற்காகக் களைப்புற்ற நிலையில் மீள் வழியைத் தேடி வரும் இவர்களுக்குத் தலைமை தாங்கி, சரியான பாதையில், உழைப்புக் கட்டுப்பாட்டுப் பாதையில், வேலை நிலைமைகளைப் பற்றிப் பொதுக் கூட்டங்களில் விவாதிக்கும் பணியினை வேலை செய்யும் போது சோவியத் தலைவரது, சர்வாதிகாரியினது சித்தத்துக்கு மறுபேச்சின்றி கீழ்ப்படியும் பணியுடன் ஒருமுகப்படுத்துவதற்கான பாதையில் இட்டுச் செல்வதுதான்,

''பொதுக் கூட்டப் பித்து''—முதலாளித்துவ வர்க்கத்தாருக்கும் மென்ஷிவிக்குகளுக்கும் நோவயா ஷீஸ்ன் ஆட்களுக்கும் இது கேலிக்குரியதாய் இருக்கிறது, இன்றுங்கூட அடிக்கடி குரோதக் கண்டனக் கூச்சலுக்குரியதாய் இருக்கிறது. ஆனுல் ஒடுக்கப்பட்ட பெருந்திரளினர் பொதுக் கூட்டங்களில் கூடி விவாதங்கள் நடத்தாமல், சுரண்டலாளர்களால் பலவந்தமாய் அவர்கள் மீது திணிக்கப்பட்ட கட்டுப்பாட்டிலிருந்து உணர்வு பூர்வமான, மனமுவந்த கட்டுப்பாட்டுக்கு ஒருபோதும் மாறி வந்திருக்க முடியாது. பொதுக் கூட்டங்களில் பகிரங்கமாக விவாதித்தல் உழைப்பாளி மக்களது மெய்யான ஜனநாயகமாகும்; முதுகை நிமிர்த்திக் கொள்வதற்கு, விழித்தெழுந்து புதுவாழ்வினுள் பிரவேசிப்பதற்கு அவர்களுக்குரிய வழியாகும்; அவர்கள் தாமே விரியன் பாம்புகளை (சுரண்டலாளர்களும் ஏகாதிபத்தியவாதிகளும் நிலப்பிரபுக்களும் முதலாளிகளுமாஞேரை) அகற்றிச் சுத்தம் செய்திருக்கும் பாதையில், தமக்கு அன்னியமான பிரபுத்துவ, முதலாளித்துவ ஆட்சிக்குரிய கோட்பாடுகள் அல்லாத, தமது சொந்த சோவியத் ஆட்சிக்குரிய கோட்பாடுகளின் அடிப்படையில் தமக்குரிய முறையில் தமக்காக தாமே அமைக்கக் கற்றுக் கொள்ள விரும்பும் பாதையில் முதலாவது அடிகளை எடுத்து வைத்து நடப்பதற்கு அவர்களுக்குரிய வழியாகும். உழைப்புக் கட்டுப்பாட்டின் மேலான வடிவங்களுக்கு, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்துக்கான அவசியத்தை உணர்வு பூர்வமாய் ஏற்றுக் கொள்ளும் நிலைக்கு, வேலையின் போது சோவியத் அரசாங்கத்தின் தனிப்பட்ட பிரதிநிதிகளது உத்தரவுகளுக்கு மறுபேச்சின்றி பணியும் நிலைக்கு திடமான முறையில் மாறிச் செல்வது சாத்தியமாகும் பொருட்டு, சுரண்டலாளர்கள் மீது உழைப்பாளர்களுக்குக் கிட்டிய அந்த அக்டோபர் வெற்றி துல்லியமாயும் தேவைப்பட்டது; உழைப்பாளி மக்கள் புதிய வாழ்க்கை நிலைமைகளையும் புதிய பணிகளையும் முதற்கண் தாமே விவாதிப்பதற்கான ஒரு வரலாற்றுக் காலக் கூறு முழுதும் தேவைப்பட்டது.

இந்த மாற்றம் இப்போது ஆரம்பமாகியுள்ளது.

புரட்சியின் முதலாவது பணியை நாம் வெற்றிகரமாய்ச் செய்து முடித்திருக்கிறோம். உழைப்பாளி மக்கட் பெருந்திரளினர் இந்தப் பணியின் வெற்றிக்கான அடிப்படை நிபந்தனையை எப்படி தம்முன் பரிணமிக்கச் செய்து கொண்டார்கள் என்பதை நாம் கண்டோம். சுரண்டலாளர்களைக் கவிழ்க்கும் பொருட்டு இவர்களுக்கு எதிராய் அவர்கள் தம் முயற்சிகளை ஒன்றுபடுத்திக் கொண்டார்கள். 1905 அக்டோபர், 1917 பிப்ரவரி, அக்டோபர் ஆகியவை[30] போன்ற கட்டங்கள் உலக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை.

புரட்சியின் இரண்டாவது பணியையும் நாம் வெற்றிகரமாய்ச் செய்து முடித்துள்ளோம்: சுரண்டலாளர்கள் அழுத்திக் கீழே இருத்தி வைத்திருந்தார்களே, சமுதாயத்தின் அந்த ''கீழ்மட்ட அணி''களை விழிப்புறச் செய்து அவர்களை உயர் மட்டத்துக்கு உயர்த்துவதே இந்தப்பணி. 1917 அக்டோபர் 25க்குப் பிற்பாடுதான் இவர்கள் சுரண்டலாளர்களை வீழ்த்துவதற்கும், நிலவரங்களை மதிப்பிட்டு தமக்குரிய வழியில் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு ஆரம்பிப்பதற்கும் முழுநிறை சுதந்திரம் பெற்றனர். மிக அதிகமாய் ஒடுக்கப்பட்டு, மிதிக்கப்பட்டு வந்தோர், உழைப்பாளி மக்களில் மிகக் குறைவாய்க் கல்வி போதம் பெற்றிருந்த பெருந்திரளினர், பொதுக் கூட்டங்களில் பகிரங்கமாய் விவாதித்தல், இவர்கள் போல்ஷிவிக்குகளின் பக்கம் வருதல், தமது சொந்த சோவியத் நிறுவனங்களை எங்கும் நிறுவிக் கொள்ளுதல்—புரட்சியின் இரண்டாவது பெரிய கட்டமாகும் இது.

மூன்றாவது கட்டம் இப்போது ஆரம்பமாகிறது. நமக்கு நாமே வென்று கொண்டவற்றை, நாமே நேரில் ஆணையிட்டும் சட்டம் இயற்றியும் விவாதித்தும் திட்டமிட்டும் இருப்பவற்றை, நாம் உறுதி பெறச் செய்தாக வேண்டும்; அன்றாட உழைப்புக் கட்டுப்பாட்டின் நிலையான வடிவங்களில் இவை யாவற்றையும் உறுதி பெறச் செய்தாக வேண்டும். இது மிக மிகக் கடினமானது என்றாலும் மனநிறைவு தரும் பணியாகும். ஏனெனில் இது செய்து முடிக்கப்படும் போது மட்டுமே நமக்கு சோஷலிச அமைப்பு கிடைக்கப் பெறும். உழைப்பாளி மக்களது ''பொதுக் கூட்ட'' ஜனநாயகத்தை—கொந்த

ளித்துப் பொங்கியெழுவதும், வசந்த வெள்ளமென கரை புரண்டு செல்வதுமான இதனை—வேலையின் போதான இரும்புக் கட்டுப்பாட்டுடன், வேலை செய்கையில் சோவியத் தலைவனின், தனியாளின் சித்தத்துக்கு மறுபேச்சின்றி பணிவதுடன் இணைப்பதற்கு நாம் கற்றுக் கொண்டாக வேண்டும்.

இதை இன்னும் நாம் கற்றுக் கொண்டாகவில்லை.

இதை நாம் கற்றுக் கொள்வோம்.

முதலாளித்துவச் சுரண்டலின் மீட்டமைப்பு நேற்று நம்மை அச்சுறுத்தியது; கர்னீலவ்கள், கோட்ஸ்கள், தூத்தவ்கள், கெகெச்கோரிக்கள், பொகயேவ்ஸ்கிகள் ஆகியோர் இந்த மீட்டமைப்பை உருவகப் படுத்துவோராய் இருந்தனர். இவர்கள் மீது நாம் வெற்றி பெற்றுவிட்டோம். இந்த மீட்டமைப்பு, இதே மீட்டமைப்பு, இன்று இன்னொரு வடிவத்தில் நம்மை அச்சுறுத்துகிறது. குட்டிமுதலாளித்துவ கண்டிப்பின்மையின், அராஜகத்தின் கூறினது வடிவில், அல்லது ''இது என் வேலையல்ல'' என்று கூறும் சிறு உடைமையாளரது மனோபாவத்தின் வடிவில், பாட்டாளி வர்க்கக் கட்டுப்பாட்டை எதிர்த்து இந்தக் கூறு தினசரி நடத்தும் அற்பமானவையாயினும் எண்ணிலடங்காத மோதல்கள், தாக்குதல்களின் வடிவில் நம்மை அச்சுறுத்துகிறது. இந்தக் குட்டிமுதலாளித்துவ அராஜகக் கூறினை நாம் தோற்கடித்தாக வேண்டும், தோற்கடிக்கவும் போகிறோம்.

சோவியத் ஒழுங்கமைப்பின் வளர்ச்சி

இன்று ஸ்தூலமாய்ச் செயல்படுத்தப்பட்டு வரும் வடிவில் சோவியத், அதாவது பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தின் சோஷலிசத் தன்மை, முதலில் உழைப்போரும் ஒடுக்கப்பட்டோருமான மக்களே தேர்ந்தெடுக்கும் உரிமையுள்ளோராய் இருப்பதிலும் முதலாளித்துவ வர்க்கத்தினர் விலக்கப்பட்டுள்ளதிலும் காணக்கிடக்கிறது. இரண்டாவதாக, தேர்தல்களின் எல்லா அதிகாரவர்க்க முறைமைகளும் தடைவரம்புகளும் ஒழிக்கப்பட்டிருப்பதிலும், மக்கள் தாமே தேர்தல்களின் கிரமத்தையும் காலத்தையும் நிர்ணயித்துக் கொள்

வதிலும், தேர்ந்தெடுக்கப்பட்டவர் எவரையும் திருப்பி யழைக்கப் பூரண உரிமையுடையோராய் இருப்பதிலும் அது காணக்கிடக்கிறது. மூன்றுவதாக, உழைப்பாளி மக்களின் முன்னணிப் படையின், அதாவது பெருவீதத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பாட்டாளி வர்க்கத்தின் சிறந்த வெகுஜன ஒழுங்கமைப்பு உருவாக்கப்படுவதில் அது காணக்கிடக்கிறது. இந்த வெகுஜன ஒழுங்கமைப்பு பாட்டாளி வர்க்கம் சுரண் டப்படுவோரான பெருந் திரளான மக்களுக்குத் தலைமை தாங்கி அழைத்துச் செல்லவும், சுயேச்சையான அரசியல் செயற்பாட்டில் அவர்களை ஈடுபடும்படி ஈர்க்கவும், அவர் களுடைய சொந்த அனுபவத்தின் வாயிலாகவே அரசியல் வழியில் அவர்களுக்குப் போதமளிக்கவும் வகை செய்கிறது. மக்கள் அனைவரும் நிர்வாகக் கலையைக் கற்கவும் நிர்வகிக்கத் தொடங்கவும் இவ்வாறு முதன்முதலாய் முற்படுகிறுர்கள்.

இவைதாம் இப்பொழுது ருஷ்யாவில் செயல்படுத்தப் படும் ஜனநாயகத்தின் தலையாய சிறப்பியல்புகள். இந்த ஜன நாயகம் உயர்ந்த ரகத்தைச் சேர்ந்ததாகும்; முதலாளித்துவ வழியில் ஜனநாயகம் திரித்துப் புரட்டப்படுவதிலிருந்து முறித்துக் கொள்வதாகும்; சோஷலிச ஜனநாயகத்துக்கும் அரசு உலர்ந்து உதிரத் தொடங்குவதற்குரிய நிலைமைகளுக் கும் மாறிச் செல்வதற்குரிய கட்டமாகும்.

ஒழுங்கைக் குலைக்கும் குட்டிமுதலாளித்துவக் கூறு (பாட் டாளி வர்க்கப் புரட்சி ஒவ்வொன்றிலும் தவிர்க்க முடியாத வாறு ஓரளவுக்கு இது தோன்றவே செய்கிறது, நமது நாட் டின் குட்டிமுதலாளித்துவத் தன்மையின் காரணமாகவும் அதன் பிற்பட்ட நிலையின் காரணமாகவும் பிற்போக்குப் போரின் விளைவுகள் காரணமாகவும் நமது புரட்சியில் இந்தக் கூறு மிகவும் குறிப்பிடத்தக்கவாறு தோற்றமளிக்கிறது) சோவியத்துகளிலும் தன் முத்திரையைப் பதிக்காது இருக்க முடியாதென்பது கூறுமலே விளங்கும்.

சோவியத்துகளின், சோவியத் ஆட்சியதிகாரத்தின் ஒழுங் கமைப்பை வளர்த்திடுவதற்காக நாம் அயராது பாடுபட வேண்டும். சோவியத்துகளின் உறுப்பினர்களை ''நாடாளு மன்றத்தினராகவோ'', இல்லையேல் அதிகார வர்க்கத்தவர்

களாகவோ மாறச் செய்திடும் குட்டிமுதலாளித்துவப் போக்கு இருந்து வருகிறது. சோவியத்துகளின் எல்லா உறுப்பினர்களையும் நிர்வாகத்தின் நடைமுறை வேலைகளில் ஈடுபடும்படிக் கவர்ந்திழுத்து நாம் இந்தப் போக்கை எதிர்த்துப் போராட வேண்டும். பல இடங்களில் சோவியத்துகளின் இலாகாக்கள் படிப்படியாய்க் கமிசாரகங்களுடன் இணைந்து வருகின்றன. ஏழை மக்கள் அனைவரையும் நடைமுறை நிர்வாகப் பணியில் ஈடுபடும்படிக் கவர்ந்திழுப்பதே நமது நோக்கம். இத்திசையில் எடுக்கப்படும் எல்லா நடவடிக்கைகளும்—எவ்வளவுக்கு எவ்வளவு பலதிறப்பட்டனவாய் இருக்கின்றனவோ அவ்வளவுக்கு அவ்வளவு நல்லது—கவனமாய்ப் பதிவு செய்யப்பட்டு, ஆராயப்பட்டு, முறைப்படுத்தப்பட்டு, மேலும் விரிவான அனுபவத்தால் சோதிக்கப் பெற்று, சட்ட வடிவமளிக்கப்பட வேண்டும். உழைப்பாளர் ஒவ்வொருவரும் பயன் விளைவுள்ள உழைப்பில் தமக்குரிய எட்டு மணி நேரப் பணியைச் செய்து முடித்தபின், சம்பளம் இல்லாமலே அரசுப் பொறுப்புகள் ஆற்றும்படி உறுதி செய்து கொள்வதே நமது நோக்கம். இந்த நிலைக்கு மாறிச் செல்வது மிகவும் கடினமே, ஆயினும் இவ்விதம் மாறிச் செல்வதன் மூலம் தான் சோஷலிசம் இறுதியாய் உறுதி பெறுமாறு உத்தரவாதம் செய்ய முடியும். இந்த மாற்றத்திலுள்ள புதுமையின் காரணமாகவும் இடர்ப்பாட்டின் காரணமாகவும் அபரிமிதமான பல நடவடிக்கைகள்—தட்டுத்தடுமாறியவாறு எனலாம்—எடுக்கப்படும்படியும், ஏராளமான தவறுகள் இழைக்கப்படும்படியும், ஊசலாடும்படியும் நேரிடும்; இது இயற்கையே இவை இல்லாமல் குறிப்பிடத்தக்க எந்த முன்னேற்றமும் சாத்தியமன்று. தம்மை சோஷலிஸ்டுகளாய்க் கருதிக் கொள்ள விரும்புகிறவர்கள் பலருக்கும் தற்போதைய நிலை விபரீதமானதாய்த் தோன்றக் காரணம் என்னவெனில், அவர்கள் கருத்தியலாகவே முதலாளித்துவத்தை சோஷலிசத்திடமிருந்து வேறுபடுத்திப் பார்த்துப் பழகியவர்கள், இவை இரண்டுக்குமிடையே ஆழ்ந்த முறையில் அவர்கள் ‘‘பாய்ச்சல்’’ எனும் சொல்லை வைத்துப் பொருத்துகிறவர்கள் (இவர்களில் சிலர் எங்கெல்சின் நூல்களில் தாம் படித்த

சில சிறு பகுதிகளை நினைவு படுத்திக் கொண்டு மேலும் ஆழ்ந்த முறையில் ''அவசியத்தின் ஆட்சியரங்கிலிருந்து சுதந்திரத்தின் ஆட்சியரங்கிற்குப் பாயுதல்''[31] என்னும் தொடரைச் சேர்த்துக் கொள்கிறவர்கள்). சோஷலிஸ்டுகள் எனப்படுவோரான இவர்களில் பெரும்பான்மையோர் சோஷலிசத்தைப் பற்றி ''புத்தகங்களில் படித்திருக்கிறார்கள்'', ஆனால் இது குறித்து கருத்தாழமுள்ள முறையில் சிந்தித்தவர்கள் அல்ல. சோஷலிசத்தின் போதனாசிரியர்கள் ''பாய்ச்சல்'' என்று கூறிய போது உலக வரலாற்று அளவிலான திருப்பங்களையே மனதிற் கொண்டிருந்தனர், இவ்வகைப்பட்ட திருப்பங்கள் பத்தாண்டுகளுக்கும் அதற்கும் அதிகமான காலங்களுக்கும்கூட நீடிப்பவை என்பதை இவர்களால் புரிந்து கொள்ள முடிவதில்லை. அவக்கேடுற்ற ''அறிவுத்துறையினர்'' மத்தியிலிருந்து ஒப்பாரி பாடுவோர் இயற்கையாகவே இக்காலங்களில் எண்ணற்றவர்கள் தோன்றுகின்றனர். அரசியல் நிர்ணய சபை[32] குறித்து சிலர் கண்ணீர் வடிக்கின்றனர், முதலாளித்துவக் கட்டுப்பாடு மறைந்துவிட்டதே என்று புலம்புகின்றனர் வேறு சிலர், முதலாளித்துவ அமைப்பு மாண்டுவிட்டதே என்கின்றனர் இன்னும் சிலர், உயர் பண்பாட்டுக்குரிய நிலப்பிரபுக்கள் போய்விட்டார்களே என்றும் ஏகாதிபத்தியப் பேரரசுவாதக் கொள்கை மறைந்து விட்டதே என்றும் இன்ன பலவாறாகவும் மற்றும் சிலர் அழுது புலம்புகின்றனர்.

பழமையின் உடைபட்ட ஏராளமான துண்டுகள் சில நேரங்களில் புதுமையின் மூலக் கருக்களைக் காட்டிலும் (இவை எப்பொழுதும் உடனடியாகவே கண்ணுக்குப் புலப்பட்டு விடக் கூடியவை அல்ல) வேகமாய்க் குவிந்து விடுவதானது, வளர்ச்சியின் தொடரிணைப்பு அல்லது சங்கிலியில் மிக முக்கிய அலகைக் கண்டறிந்து கொள்ளும் ஆற்றலை அவசியமாக்கி விடுகின்றன என்பதில்தான், மாபெரும் பாய்ச்சல்களது சகாப்தத்தில் மெய்யாகவே நாட்டத்துக்குரிய அம்சம் அடங்கியுள்ளது. உடைபட்ட இத்துண்டுகளைக் கூடுமான அளவுக்கு அதிகமாய்க் குவித்திடுவதே, அதாவது பழைய நிறுவனங்களில் கூடுமான அளவுக்கு அதிகமானவற்றைத்

தகர்த்திடுவதே புரட்சியின் வெற்றிக்கு மிகவும் முக்கியமாகி விடும் தருணங்கள் வரலாற்றில் தோன்றுகின்றன. போதுமான அளவுக்குத் தகர்த்தாகிவிட்டது, இனி உடைபட்ட துண்டுகளைத் துடைத்தெறிந்துவிட்டுச் சுத்தப்படுத்தும் ''சோபையில்லாப்'' பணியே (குட்டிமுதலாளித்துவப் புரட்சியாளர்களுக்குச் ''சலிப்பூட்டும்'' பணியே) அடுத்தபடியாய் நடைபெற வேண்டியதாகிவிடும் தருணங்களும் வருகின்றன. தகர்ந்த கற்கூளங்கள் இன்னும் சரிவர அகற்றப்படாத நிலத்தில் இடிபாடுகளுக்கு மத்தியில் வளர்ந்து கொண்டிருக்கும் புதிய அமைப்பின் மூலக் கருக்களைக் கவனமாய்ப் பேணிக் காக்க வேண்டியது மிக முக்கிய பணியாகிவிடும் தருணங்களும் வருகின்றன.

பொதுப்பட புரட்சியாளரும் சோஷலிஸ்டு ஆதரவாளரும் ஆகவோ, கம்யூனிஸ்டாகவோ இருந்தால் மட்டும் போதாது. குறிப்பிட்ட ஒவ்வொரு தருணத்திலும் சங்கிலியில் எந்த ஓர் இணைப்பை உங்கள் முழு பலத்தையும் கொண்டு பற்றிக்கொண்டால் முழுச் சங்கிலியையும் கெட்டியாய்ப் பிடித்துக்கொள்ளவும் அடுத்த இணைப்புக்கு மாறிச் செல்வதற்குத் திடமான முறையில் தயாரிப்பு செய்யவும் முடியும் என்பதை நீங்கள் கண்டு கொள்ளும் ஆற்றலுடையவராய் இருக்க வேண்டும். வரலாற்று நிகழ்ச்சிகளின் சங்கிலியில் இணைப்புக்களின் வரிசையும் அவற்றின் வடிவமும் அவை ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டிருக்கும் முறையும் ஒன்றுக்கொன்று அவை வேறுபடும் விதமும் கொல்லுப் பட்டறையாளரால் செய்யப்பட்ட சாதாரண சங்கிலியில் இருப்பதைப் போல் அவ்வளவு எளிதாகவும் அவ்வளவு அர்த்தமற்றவையாகவும் இருப்பதில்லை.

சோவியத்துகளுக்கும் ''மக்களுக்கும்''—உழைப்பாளரும் சுரண்டப்படுவோருமான மக்களையே இங்கு குறிப்பிடுகிறோம்—இடையிலுள்ள இணைப்பின் உறுதியும் இந்த இணைப்பின் நெகிழ்வும் குழைவும் ஒழுங்கமைப்பின் சோவியத் வடிவம் அதிகாரவர்க்க வழியில் திரித்துப் புரட்டப்படுவதற்கு எதிரான போராட்டத்துக்குரிய உத்தரவாதமாகும். உலகில் மிகவும் ஜனநாயகமான முதலாளித்துவக் குடியரசுகளிலுங்

கூட ஏழை மக்கள் முதலாளித்துவ நாடாளுமன்றத்தைத் ''தமது'' மன்றமாய்க் கருதுவதில்லை. ஆனுல் சோவியத்து களைப் பெருந்திரளான தொழிலாளர்களும் விவசாயிகளும் தமக்கு அன்னியமானவையாகக் கருதாது ''தமது'' அமைப்பு கள் என்றே கருதுகின்றனர். ஷெய்டெமன் அல்லது ஏறத் தாழ அவரை ஒத்த மார்த்தவ் ரகத்தைச் சேர்ந்த நவீன ''சமூக-ஜனநாயகவாதிகள்'' சோவியத்துகள் என்றதும் மிரண்டோடுகின்றனர், கனவான்களது முதலாளித்துவ நாடாளுமன்றத்தால் அல்லது அரசியல் நிர்ணய சபையினுல் கவரப்படுகின்றனர்—அறுபது ஆண்டுகளுக்கு முன்பு துர்கே னெவ் மிதவாத முடியரசுவாதப் பிரபுக்களது அரசியல மைப்புச் சட்டத்தால் கவரப்பட்டாரே அது போல தப்ரலி யூபவ், செர்னிஷேவ்ஸ்கி ஆகியோரது விவசாயி ஜனநாயகம் என்றதும் மிரண்டோடினுரே அதுபோல.

சோவியத்துகள் ''மக்களுக்கு'', உழைப்பாளி மக்களுக்கு நெருங்கியவை. இந்த நெருக்கம்தான் திருப்பியழைத்தல், அடியிலிருந்து கண்காணிப்பு செய்வதற்கான ஏனைய வழி முறைகள் ஆகிய விசேஷ வடிவங்களைத் தோற்றுவிக்கிறது. இப்பொழுது இவ்வடிவங்களை நாம் மிகவும் கண்ணுங் கருத்துமாய் வளர்த்துச் செல்ல வேண்டும். உதாரணமாய், பொதுக் கல்விக் கவுன்சில்கள் இத்துறையில் சோவியத் அதி காரிகளின் செயற்பாடுகள் குறித்து விவாதிக்கவும் கண்கா ணிப்பு செலுத்தவும் அவ்வப்பொழுது கூட்டப்படும் சோவி யத் வாக்காளர்கள், அவர்களது பிரதிநிதிகளின் மாநாடுகள் முழு ஆதரவுக்கும் பரிவுக்கும் உரித்தானவை. சோவியத்து களை இறுகிக் கெட்டியான, தனித் தொதுங்கிய அமைப்பு களாக்குவதைக் காட்டிலும் மடமை வேறு எதுவும் இல்லை. நாம் கடுமையான உறுதியான அரசாங்கத்தையும், குறிப் பிட்ட வேலைத் துறைகளில், முற்றிலும் செயலாக்கப் பணிகளின் குறிப்பிட்ட கூறுகளில், குறிப்பிட்ட வேலையில் தனியாட்களது சர்வாதிகாரத்தையும் எவ்வளவுக்கு எவ்வளவு வைராக்கியமாய் இப்பொழுது நாம் ஆதரித்து நிற்க வேண்டியிருக்கிறதோ, சோவியத் ஆட்சியதி காரத்தின் கோட்பாடுகளைத் திரித்துப் புரட்டுவதற்

கான சாத்தியப் பாட்டுக்குள்ள ஒவ்வொரு சாயலேயும் எதிர்த்து நிற்பதற்காகவும் அயராது மீண்டும் மீண்டும் அதிகாரவர்க்கத்தைக் களைந்தெறிவதற்காகவும் அடியிலிருந்து கண்காணிப்பு செலுத்துவதற்குரிய வடிவங்களும் முறைகளும் அவ்வளவுக்கு அவ்வளவு பலதிறப்பட்டனவாய் இருக்க வேண்டும்.

முடிவுரை

சர்வதேச விவகாரங்களில் அசாதாரணமாய்க் கடினமான, சிக்கலான, அபாயகரமான நிலைமை; சாமர்த்திய உபாயங்களும் பின்வாங்குதலும் இன்றியமையாதனவாகிவிடுதல்; வேதனை வாய்ந்த மந்த கதியில் மேலைய நாடுகளில் முதிர்ச்சியுற்று வரும் புரட்சியின் புதிய திடீர் வெடிப்புக்களுக்காகக் காத்திருக்க வேண்டியுள்ள ஒரு காலகட்டம்; உள்நாட்டில் மந்த கதியிலான கட்டுமானத்துக்கும்—குட்டி முதலாளித்துவக் கண்டிப்பின்மையும் அராஜகமுமாகிய அபாயகரமான கூறினை எதிர்த்து கடுமையான பாட்டாளி வர்க்கக் கட்டுப்பாடு புரிந்திடும் விடாப்பிடியான போராட்டத்தை தாட்சண்யமின்றி இறுக்கமாக்குவதற்குமான காலகட்டம்—சுருக்கமாய்ச் சொல்லுமிடத்து, இவைதாம் சோஷலிசப் புரட்சியில் இப்போது நாம் இருந்து வரும் இந்த விசேஷக் கட்டத்தின் சிறப்பியல்புகள். வரலாற்று நிகழ்ச்சிகளின் சங்கிலியில் இந்த இணைப்பைத்தான் தற்போது நமது முழு பலத்தையும் கொண்டு பற்றிக் கொள்ள வேண்டும், அப்போதுதான் அடுத்த இணைப்புக்கு மாறிச் செல்லுமுன் நம்மை எதிர்நோக்கும் பணிகளைச் செய்து முடிக்கும் ஆற்றலுடையோராக நாம் இருக்க முடியும்; தனிப்பெரும் சுடரொளியால், சர்வதேசப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வெற்றிகளது சுடரொளியால் நாம் இந்த அடுத்த இணைப்பை நோக்கிக் கவர்ந்திழுக்கப்படுகிறோம்.

தற்போதைய கட்டத்தின் பிரத்தியேக நிலைமைகளிலிருந்து, அதாவது சாமர்த்திய உபாயங்கள், பின்வாங்குதல், காத்திருத்தல், மந்த கதியில் கட்டியமைத்துச் செல்லுதல், தயவுதாட்சண்யமின்றிக் கண்டிப்புடன் இறுக்கிப்பிடித்தல்,

கடுங் கட்டுப்பாட்டை நிலைநிறுத்தல், கண்டிப்பின்மையைத் தகர்த்திடல்... ஆகியவற்றிலிருந்து பெறப்படும் கோஷங்களைப் ''புரட்சிகரமானது'' எனப்படும் சாதாரணமான அன்றாடக் கருத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க முயலுங்கள். இதைக் கேட்டதும் ''புரட்சியாளர்கள்'' சிலர் புனித ஆவேசம் கொண்டு சீற்றமடைவது குறித்தும், நாம் அக்டோபர் புரட்சியின் பாரம்பரியங்களை மறந்து விடுவதாகவும், முதலாளித்துவ நிபுணர்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதாகவும், முதலாளித்துவ வர்க்கத்துடன் சமரசம் செய்து கொள்வதாகவும், குட்டிமுதலாளித்துவத் தன்மையினராகவும் சீர்திருத்தவாதிகளாகவும் இருப்பதாகவும், மற்றும் பலவாறுகவும் ''இடிமுழக்க மிட்டு'' நம்மீது வசைமாரி பொழிய முற்படுவது குறித்தும் ஆச்சரியப்படவா வேண்டும்?

பரிதாபத்துக்குரிய இந்த ''புரட்சியாளர்களது'' துரதிருஷ்ட நிலை என்னவெனில், இவர்களில் உலகிலே உன்னதமான அடிநோக்கங்களால் உந்தப்படுவோராகவும் சோஷலிச இலட்சியத்துக்கு முழு விசுவாசம் செலுத்துவோராகவும் இருப்போருங்கூட, தனி நிலைமையைப் புரிந்து கொள்ளத் தவறிவிடுகிறார்கள்—பெரு நாசம் விளைவித்த பிற்போக்கு யுத்தத்தால் குதறிக் குலைக்கப்பட்டிருப்பதும் அதிகமாய் முன்னேறிய நாடுகளைக் காட்டிலும் நெடுங் காலம் முன்னதாகவே சோஷலிசப் புரட்சியை ஆரம்பித்துவிட்டதுமாகிய ஒரு பிற்பட்ட நாடு தவிர்க்க வொண்ணாதவாறு கடக்க வேண்டியிருக்கும் குறிப்பிடத்தக்க அளவுக்குக் ''கசப்பான'' நிலைமையைப் புரிந்து கொள்ளத் தவறிவிடுகிறார்கள்; கடினமான ஒரு மாற்றத்தின் கடினமான தருணங்களில் தக்க மனவுரம் இல்லாதவர்களாய் இருக்கிறார்கள். இயற்கையாகவே இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள்தான் நமது கட்சிக்கு எதிரான இந்த வகைப்பட்ட ''அதிகாரபூர்வ'' எதிர்த்தரப்பினராகச் செயல்படுகிறார்கள். கோஷ்டி, வர்க்க ரகங்களினுள் தனிப்பட்ட விதிவிலக்குகள் இருக்கத்தான் செய்கின்றன, எப்போதும் இருக்கவே செய்யும். ஆனால் சமூக ரகங்கள் நிலவி வருகிறவை. முழுக்க முழுக்க பாட்டாளி வர்க்கத்தவராய் இருப்போரைக் காட்டிலும் சிறு உடைமையாள



''சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள் மீதான ஆய்வுரை'' பற்றிய லெனினது கையெழுத்துப் பிரதியின் முகப்புப் பக்கம்.

ராய் இருப்போர் வெகுவாய் மிகுதியாயுள்ள நாட்டில் பாட்டாளி வர்க்கப் புரட்சியாளருக்கும் குட்டிமுதலாளித்துவப் புரட்சியாளருக்கும் இடையிலுள்ள வேறுபாடு தவிர்க்க வொண்ணுதவாறு தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது, அவ்வப்போது மிகவும் கடுமையாகவே வெளிப்படுத்திக் கொள்கிறது. நிகழ்ச்சிகளது ஒவ்வொரு திருப்பத்தின் போதும் குட்டிமுதலாளித்துவப் புரட்சியாளர் தடுமாறவும் ஊசலாடவும் செய்கிருர்; 1917 மார்ச் மாதத்தில் ஆர்வமிக்க புரட்சியாளராய் இருக்கிருர், மே மாதத்தில் ''கூட்டணி ஆட்சியைப்'' புகழ்கிருர், ஜூலை மாதத்தில் போல்ஷிவிக்குகளை வெறுக்கிருர் (அல்லது அவர்களது ''சாகசவாதம்'' குறித்து வருந்துகிருர்), அக்டோபர் இறுதியில் அச்சத்துடன் அவர்களிடமிருந்து விலகி ஒதுங்குகிருர், டிசம்பரில் அவர்களை ஆதரிக்கிருர், முடிவில் 1918 மார்ச், ஏப்ரல் மாதங்களில் இப்படிப்பட்ட ரகத்தினர் பெருவாரியான சந்தர்ப்பங்களில் இறுமாப்போடும் ஏளனத்தோடும் முகத்தைத் திருப்பிக் கொண்டு கூறுகின்றனர்: ''கூட்டிணைவான' வேலை, நடைமுறைக் காரியப் பாங்கு, படிப்படியான மாற்றம் இவற்றுக்குப் புகழ் மாலை பாடுவோரில் ஒருவனல்ல நான்.''

இம்மாதிரியான ரகத்தினருக்கு சமூகத் தோற்றுவாய் சிறு உடைமையாளரே—போரின் பயங்கரங்களாலும் திடுமென உண்டாகும் அழிவாலும் முன்பின் கண்டிராப் பஞ்சத்தின், நாசத்தின் கொடுந் துன்பங்களாலும் வதைக்கப்பட்டு வெறித்தனமாய்ச் சீற்றம் கொண்டவரும், கரையேறுவதற்கு, விமோசனத்துக்கு வழி தேடிப் பித்து கொண்ட நிலையில் அங்குமிங்கும் ஓடுகிறவரும், ஒரு நிமிடம் பாட்டாளி வர்க்கத்திடம் நம்பிக்கை கொண்டு அதை ஆதரிப்பவரும், மறு கணம் நம்பிக்கை இழந்து பரிதவிக்கிறவருமான சிறு உடைமையாளர் இவர். இம்மாதிரியான சமூக அடித்தளத்தின் மீது சோஷலிசத்தை அமைத்திட முடியாதென்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும், மறவாதபடி நினைவில் இருத்திக் கொள்ள வேண்டும். மிகக் கடினமானதும், கடுமை வாய்ந்ததும் அபாயம் மிக்கதுமாகிய கட்டங்களிலுங்கூட தைரியம் இழக்காமல், விரக்திக்கு இடந்தராமல், தனக்குரிய பாதை

யிலிருந்து பிறழாமல் தொடர்ந்து செல்லும் வர்க்கம்தான், உழைப்போரும் சுரண்டப்படுவோருமான மக்களுக்குத் தலைமை தாங்க வல்லதாகிய ஒரே வர்க்கம். ஆவேச உணர்ச்சித் துடிப்புகளால் நமக்கு எந்தப் பயனும் இல்லை. பாட்டாளி வர்க்கத்தின் உருக்குப் பட்டாளங்களது ஒரே சீரான முன்னேற்றமே நமக்கு வேண்டும்.

1918, ஏப்ரல் 13க்கும் 26க்கும்
இடையே எழுதப்பெற்றது

1918, ஏப்ரல் 28ல்
பிராவ்தா, *இதழ் 83லும்*
அகில ருஷ்ய மத்திய
நிர்வாகக் கமிட்டியின் இஸ்வேஸ்தியா,
இதழ் 85இன்
அனுபந்தத்திலும் வெளிவந்தது

நூல் திரட்டு,
தொகுதி *36,*
பக்கங்கள் *165-208*

விஞ்ஞான தொழில் நுட்ப வேலைக்கான நகல் திட்டம்[33]

ருஷ்யாவின் இயற்கையான உற்பத்தி சக்திகள்* குறித்த ஒரு முறையான ஆய்வையும், சோதனை ஆராய்வினையும் விஞ்ஞானப் பேரவை தொடங்கியுள்ளது. அது, ருஷ்யாவின் தொழில் துறையையும் பொருளாதார முன்னேற்றத்தையும் மறுசீரமைப்பதற்கான ஒரு திட்டத்தை சாத்தியமான அளவு வெகுவிரைவில் தொகுப்பதற்காக நிபுணர்கள் கமிஷன்கள் பலவற்றை நிறுவ வேண்டும். இதற்கான தனது நெறிமுறைகளை தலைமைப் பொருளாதாரக் கவுன்சில் உடனே வழங்க வேண்டும்.

இந்தத் திட்டத்தில் இடம் பெறுவன வருமாறு:

ருஷ்யாவில் தொழில்துறை சீரான முறையில் பரவலாக வகைப் படுத்தப்பட வேண்டும். இது, மூலப் பொருட்கள் அணிமையில் இருத்தல், ஆகக் குறைவான உழைப்பு சக்திப் பயனீடு என்ற நோக்கு நிலையில் இருந்து செய்யப்பட வேண்டும். மூலப் பொருட்களைப் பதப்படுத்துவதில் இருந்து அரைச் செய்கைப் பொருட்களைப் பதப்படுத்துவது வரையிலான பிந்திய கட்டங்கள் அனைத்துக்கும் இது பொருந்த வேண்டும். இதில் முழுமை செய்யப்பட்ட பொருட்களின் உற்பத்தியும் உட்படும்.

---

* இந்த விவரப் பொருட்களின் வெளியீடு உச்சபட்சமாகத் துரிதப்படுத்தப்பட வேண்டும்; இது பற்றிய ஒரு குறிப்பு மக்கள் கல்விக் கமிசாரகம், அச்சுத் தொழிலாளர் தொழிற் சங்கம் மற்றும் தொழிலாளர் நலக் கமிசாரகத்துக்கு[34] அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

தொழில் துறை ஒரு சில பெரிய நிறுவனங்களில் சீரான முறையில் இணைத்து ஒரு முனைப்படுத்தப்பட வேண்டும். இது மிகவும் நவீனமான பெருவீதத் தொழில் துறையின் சிறப்பாயும் டிரஸ்டுகளின் நோக்கு நிலையில் இருந்து இது செய்யப்பட வேண்டும்.

இன்றைய ருஷ்யன் சோவியத் குடியரசு (உக்ரேன் மற்றும் ஜெர்மானியர் பற்றுடல் செய்துள்ள பிராந்தியங்களைத் தவிர) சாத்தியமான வரை சுயேச்சையாக தானே மூலப் பொருள்களின் எல்லா பிரதான இனங்களையும் வழங்கிக் கொள்ளவும், தொழில் துறையின் முக்கிய பிரிவுகளை ஒழுங்கமைத்துக் கொள்ளவும் இயலுமாறு செய்தல்.

தொழில் துறையை மின்சார மயமாக்கல் மற்றும் போக்குவரத்து வசதிகள் விவசாயப் பணிகளுக்கு மின்சாரத்தைப் பயன்படுத்துவது ஆகியவை சம்பந்தமாக விசேஷக் கவனம் செலுத்தப்பட வேண்டும். மின்சார உற்பத்திக்கு குறைந்த தரத்திலான எரிபொருள்களை (பீட், குறைந்த தர நிலக்கரி) பயன்படுத்தல், அவற்றைத் தோண்டி எடுப்பதற்கும் எடுத்துச் செல்வதற்குமான செலவைச் சாத்தியமான அளவு குறைத்தல் இவை சம்பந்தமாயும் தனிக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

பொதுவாக நீர் விசை மற்றும் காற்று விசை மோட்டார்கள், விவசாய வேலைகளில் அவற்றைப் பயன்படுத்தல்.

1918 ஏப்ரல் 18க்கும்
25க்கும் இடையே
எழுதப்பட்டது

1924 மார்ச் 4ந் தேதிய **பிராவ்தா,** *இதழ் 52ல் வெளியிடப்பட்டது*

நூல் திரட்டு, *தொகுதி 36,* *பக்கங்கள் 228-231*

சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள் பற்றிய ஆறு ஆய்வுரைகள்[35]

1. சோவியத் குடியரசின் சர்வதேசிய நிலைமை மிகவும் இடர்ப்பாடானது, நெருக்கடியானது. காரணம், சர்வதேச மூலதனம் மற்றும் ஏகாதிபத்தியத்தின் ஆக ஆழமான அடிப் படையான நலன்கள் அதை ருஷ்யாவின் மீது ஒரு ராணுவத் தாக்குதல் தொடுக்க முயலும்படி மட்டும் தூண்டவில்லை, அதோடு ருஷ்யாவைத் துண்டாடுவது பற்றிய ஓர் உடன் பாட்டுக்கும் சோவியத் ஆட்சியை நெரித்துத் திணறடிக்க வும் கூடத் தூண்டின.

மேற்கு ஐரோப்பிய மக்கள் சம்பந்தப்பட்ட ஏகாதிபத் தியப் படுகொலையும், தொலைக்கிழக்கில் ஜப்பானுக்கும் அமெ ரிக்காவுக்கும் இடையிலான ஏகாதிபத்தியப் போட்டியும் தீவிரமடைந்ததால் மட்டுமே இந்த அபிலாஷைகள் முடமாக்கப்பட்டன, அல்லது கட்டுப்படுத்தப்பட்டன, அதுவும் ஓரளவுக்கு மட்டுமே, ஒரு குறிப்பிட்ட, உண்மையில் ஒரு குறுகிய காலத்துக்கு மட்டுமே, இவ்வாறு செய்யப்பட்டன.

எனவே சோவியத் குடியரசின் போர்த்தந்திரம் ஒருபுறத் தில் நாட்டின் ஆகவிரைவான பொருளாதார வளமீட்பை உறுதிப்படுத்தவும், அதன் தற்காப்பு ஆற்றலை அதிகரிக்க வும், ஒரு வலிமை மிக்க சோஷலிஸ்டு சேனையைக் கட்டவும் சகல முயற்சியையும் ஈடுபடுத்த வேண்டும். மறு புறம் சர்வ தேசக் கொள்கையில் போர்த்தந்திரம், முனைந்து திட்டமிடு வது, பின்வாங்குவது பல முன்னேறிய நாடுகளில் முன்னைக் காட்டிலும் மிகவும் வேகமாக இப்போது முதிர்ச்சியடைந்து வரும் சர்வதேசியப் பாட்டாளி வர்க்கப் புரட்சி முழுமையாக

முதிர்ச்சி அடையும் தருணத்திற்காகக் காத்திருப்பது என்பதாக இருத்தல் வேண்டும்.

2. உள்நாட்டுக் கொள்கைத் துறையில், 1918 மார்ச் 15ந் தேதி சோவியத்துகளின் அகில-ருஷ்யக் காங்கிரஸ் ஏற்றுக்கொண்ட தீர்மானத்திற்குப் பொருத்தமான முறையில் இன்றைய கட்டத்தில் முன்னணிக்குவரும் பணி ஸ்தாபன அமைப்புப் பற்றிய பணியாகும். சமூகவுடைமையாக்கப் பெற்ற பெருவீத இயந்திர (உழைப்பு) உற்பத்தியின் அடிப்படையில், உற்பத்தி மற்றும் வினியோகத்தின் புதிய மேலும் உயர்தரமான ஒழுங்கமைப்பின் தொடர்பாகவரும், இந்தப் பணியே 1917 அக்டோபர் 25ம் தேதியில் ருஷ்யாவில் தொடங்கப்பட்டதான சோஷலிஸ்டுப் புரட்சியின்—பிரதான உள்ளடக்கமாயும் பூரண வெற்றிக்குரிய முக்கிய நிபந்தனையாகவும் அமைகிறது.

3. முழுமையான அரசியல் கருத்துக் கோணத்தில் இருந்து பார்த்தால் இன்றைய நிலைமையின் சாரம், சோஷலிஸ்டுப் புரட்சியின் வேலைத்திட்டம் சரியானது என்பதையும், ருஷ்யாவை சுரண்டலாளர்களிடம் இருந்து உழைக்கும் மக்களுக்காக வென்று பெறும் பணி பிரதானமாயும் அடிப்படையான வழியிலும் செய்து முடிக்கப்பட்டு விட்டது எனவும், இப்போது முன்னணிக்கு வரும் முக்கியப் பிரச்சினை—ருஷ்யாவை எப்படி நிர்வாகம் செய்வது என்பதே எனவும், ருஷ்யாவின் உழைக்கும் மக்களுக்கு மெய்ப்படுத்திக் காட்டும் பணியேயாகும். சரியான நிர்வாகத்தை ஒழுங்கமைத்தல், சோவியத் அரசாங்கத்தின் முடிவுகளை நெறிபிறழாது நிறைவேற்றி முடித்தல்—இது சோவியத்துகளின் அவசரக் கடமை, சோவியத் மாதிரி அரசின் பூரண வெற்றிக்குரிய நிபந்தனை, இந்த அரசை சம்பிரதாயமான அரசாணைகளால் பறைசாற்றினால் மட்டும் போதாது, நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் நிலைநாட்டிக் கொண்டுவந்தால் மட்டும் போதாது, அதோடு கூட முறையான அன்றாட நிர்வாக வேலையில் நடைமுறையில் ஒழுங்கமைத்துச் சோதனை செய்யப்படவும் வேண்டும்.

4. சோஷலிசத்தின் பொருளாதாரத்தைக் கட்டியமைக்கும் துறையில் இன்றைய நிலைமையின் சாரம் என்னவென்

மூல், நாடுதழுவியதும் சர்வாம்ச ரீதியானதும் ஆன உற்பத்தி மற்றும் வினியோகத்தில் கணக்குப் பதிவு கண்காணிப்பு வேலைகளை ஒழுங்கமைப்பதிலும், உற்பத்தி மீது பாட்டாளி வர்க்கக் கண்காணிப்பைக் கொண்டு வருவதிலும் ஆன நமது பணி, உடைமை பறிப்போரை—நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகளை நேரடியாக உடைமை நீக்கம் செய்வதில் இருந்து மிகவும் பின்தங்கி உள்ளது. இதுவே நமது பணிகளை நிர்ணயம் செய்யும் அடிப்படை உண்மை.

இதிலிருந்து ஒரு புறத்தில் முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்த போராட்டம் ஒரு புதிய கட்டத்தில் பிரவேசித்துக் கொண்டிருக்கிறது, அதாவது: ஈர்ப்பு மையம், கணக்குப் பதிவு, கண்காணிப்பு இவற்றை ஒழுங்கமைக்கும் பணியை நோக்கி இடம் பெயர்ந்துள்ளது என்பது தொடர்கிறது. இந்த வழியில் மட்டுமே, மூலதனத்துக்கு எதிராக நெறியாக்கம் செய்யப்பட்ட எல்லாப் பொருளாதார சாதனைகளையும், அக்டோபருக்குப் பிறகு தேசியப் பொருளாதாரத்தில் தனிப் பட்ட கிளைகளை தேசவுடைமையாக்க நாம் செய்து முடித்த எல்லா நடவடிக்கைகளையும் கெட்டிப்படுத்துவது சாத்தியம், இந்த வழியில் மட்டுமே முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்து நடத்தும் போராட்டத்தின் வெற்றிகரமான நிறை முடிவுக்குத் தயார் செய்து கொள்வதும், அதாவது சோஷலிசத்தை முழுமையாகக் கெட்டிப்படுத்திக் கொள்வதும் சாத்தியமாகும்.

மறு புறத்தில், சில காரியங்களில் சோவியத் அரசாங்கம் ஓர் அடி பின்வாங்கும் கட்டாயத்திற்கு ஏன் உள்ளாயிற்று, அல்லது முதலாளித்துவப் போக்குகளுடன் ஏன் சமரசத்துக்கு உடன்பட்டது என்பது குறித்த விளக்கம். இந்த அடிப்படை மெய் விவரத்தில் இருந்து தொடர்கிறது. உதாரணமாகப் பல முதலாளித்துவ நிபுணர்களுக்கு உயர் ஊதியங்கள் தர ஏற்பாடு செய்யப்பட்டது. இத்தகைய ஓர் அடி பின்வாங்கல், மற்றும் பாரிஸ் கம்யூனின் கோட்பாடுகளில் இருந்து பிறழ்ந்து செல்வதாகும். மக்கள் முழுமையையும் கூட்டுறவுகளுக்குள் படிப்படியாகக் கொண்டுவர வேண்டும் என்பதற்கான முயற்சிகள் நடவடிக்கைகள் சம்பந்தமாக முதலாளித்துவக் கூட்

டுறவுகளுடன் உடன்பாட்டுக்கு வந்தது, அத்தகைய ஒரு சமரச மாகும். பாட்டாளி வர்க்க அரசாங்கம் நாடு தழுவிய முறை யில் கண்காணிப்பையும் கணக்குப் பதிவையும் உறுதியாக நிலே நாட்டும் வரையில், இந்த வகையான சமரசம் அவசி யம். இவற்றின் பாதகமான அம்சங்களே மக்களிடமிருந்து சற்றும் மறைத்து விடாமல் இருக்கும் அதே போதில், இந்த வகையான எல்லா சமரசங்களேயும் முழுமையாக அகற்றி நீக்குவதற்குரிய ஒரே மார்க்கம் என்ற முறையில் கணக்குப் பதிவையும் கண்காணிப்பையும் மேம்படுத்த முயற்சிகளே மேற்கொள்வது நமது கடமையாகும். மெதுவான ஆனல் நிச்சயமான முன்னேற்றத்திற்கு ஏக உத்தரவாதம் என்ற முறையில் தற்போது இந்த வகையான சமரசங்கள் தேவைப் படும் (காரணம், நாம் கணக்குப் பதிவு கண்காணிப்பை காலம் கடந்து செய்கிருேம்). உற்பத்தி, வினியோகம் சம் பந்தமான கணக்குப் பதிவும் கண்காணிப்பும் முழுமையாகப் புகுத்தப்படும் போது இத்தகைய சமரசங்களுக்கான தேவை மறைந்துவிடும்.

5. தொழிலாளர் கட்டுப்பாட்டையும் உழைப்பின் உற்பத்தித்திறனேயும் உயர்த்துவதற்கான நடவடிக்கைகள் இப்போது பிரத்தியேகமான முக்கியத்துவம் பெறுகின்றன. இந்தத் திசையில் விசேஷமாயும் தொழிற்சங்கங்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளே ஆதரிக்கவும், கெட்டிப் படுத்தவும் அதிகரிக்கவும் சகல முயற்சிகளும் செய்யப்பட வேண்டும். உதாரணமாக, வேலே வீத ஊதியம் பெறும் முறை புகுத்தப்படல், டெய்லர் முறையில் பெருமளவு விஞ்ஞான பூர்வமாயும் முற்போக்கானதாயும் உள்ள அம்சங்களே ஏற் பது, ஓர் ஆலேயின் வேலேயின் பொதுப் பலன்களுக்குச் சம மாக சம்பளங்கள் பட்டுவாடா, ரயில் மற்றும் நீர்வழிப் போக்குவரத்து சாதனங்களேப் பயன்படுத்தல் ஆகியவை இதில் உட்படும். தனிப்பட்ட உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வாளர் கம்யூன்களிடையில் போட்டியை ஒழுங்கமைப் பதும், அமைப்பாளர்களேத் தேர்வதும் கூட இதிலுட்படும்.

6. முதலாளித்துவத்தில் இருந்து சோஷலிசத்துக்கு மாறிச் செல்லும் கட்டத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதி

காரம் அறமுழுமையாயும் இன்றியமையாததாகும். நமது புரட்சியில் இந்த உண்மை நடைமுறையால் பூரணமாக உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. ஆனால் சர்வாதிகாரம் என்பது சுரண்டலாளர்கள் போக்கிரிகள் இருசாராரையும் ஒடுக்குவதில் உண்மையிலேயே உறுதியான தாட்சண்யம் காட்டாத ஒரு புரட்சிகர அரசாங்கத்தை முன்னனுமானிக்கிறது. நமது அரசாங்கமோ மிகவும் மெத்தனமாக இருக்கிறது. சோவியத் டைரக்டர்களின், சோவியத் நிறுவனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டோ அல்லது நியமனம் செய்யப்பட்டோ உள்ளவர்களும் (உதாரணமாக, ரயில்வே அரசாணையால் கோரப்படும்) சர்வாதிகார அதிகாரங்கள் தரப்பட்டவர்களுமான சர்வாதிகாரிகளின் ஒரு மனித முடிவுகளை ஒட்டி வேலை செய்யும் போது கீழ்ப்படிதல் மறு பேச்சின்றிக் கீழ்ப்படிதல் இன்னும் பெருமளவு உத்தரவாதம் செய்யப்படவில்லை. இது பாட்டாளி வர்க்கக் கட்டுப்பாட்டுடனும் சோஷலிசத்தோடும் அடிப்படையாகவே முரண்படுகிற குட்டிமுதலாளித்துவ அராஜகம், சிறு உரிமையாளர் வழக்கம், அபிலாஷைகள், உணர்ச்சிப் பசப்பு ஆகியவற்றின், அராஜகத்தின் செல்வாக்கின் விளைவாகும். இந்தக் குட்டிமுதலாளித்துவ அராஜகத்தை எதிர்த்துப் போரிடும் பணியில் பாட்டாளி வர்க்கம் தனது வர்க்க உணர்வு அனைத்தையும் ஒருமுகப்படுத்த வேண்டும். இந்த அராஜகம் (பாட்டாளி வர்க்க அரசாங்கத்தின் பாலான எல்லா வகையான எதிர்ப்புக்கும் முதலாளித்துவ வர்க்கமும் அதனை அண்டி வாழ்பவரும், மென்ஷிவிக்குகளும் வலது சாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளரும் தரும் ஆதரவில்) நேரடியாகவே வெளிப்படையாகி உள்ளது என்பது மட்டும் அல்ல, (குட்டிமுதலாளித்துவ இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் மற்றும் குட்டிமுதலாளித்துவப் புரட்சித்தன முறைகளுக்கு இறங்கி இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களைக் காப்பி அடிக்கும் ''இடதுசாரி கம்யூனிஸ்டுகள்'' எனப்படும் நமது கட்சியில் உள்ள போக்கினரும் அரசியல் கொள்கை பற்றிய பிரதானப் பிரச்சினைகளில் தோற்றுவிக்கும் வரலாற்று ரீதியான ஊசலாட்டத்தில்) மறைமுகமாகவும் வெளிப்படையாகி உள்ளது.[36]

இரும்பனைய கட்டுப்பாடு, குட்டிமுதலாளித்துவ ஊசலாட்டத்துக்கு எதிராகப் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை தீர்க்கமாகப் பயன்படுத்தல்—இதுவே இத்தருணத்திய பொதுவும் மொத்தமுமான கோஷமாகும்.

1918 ஏப்ரல் 29க்கும்
மே 3க்கும் இடையே
எழுதப்பட்டது

பெத்னத்தா, இதழ் *33*ல்
1918 மே *9*ந் தேதி வெளியிடப்பட்டது

நூல் திரட்டு, தொகுதி *36*, பக்கங்கள் *277-280*

"இடதுசாரி" சிறுபிள்ளைத்தனமும் குட்டிமுதலாளித்துவ மனோபாவமும்

''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளின்'' ஒரு சிறு குழு தமது கம்யூனிஸ்ட்[37] (இதழ் 1, 1918 ஏப்ரல் 20) என்கிற பத்திரிகையையும், தங்களுடைய ''ஆய்வுரைகளையும்'' வெளியிட்டிருப்பது, நான் சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள்* பற்றிய சிறு நூலில் வெளியிட்ட கருத்துக்களைத் தெளிவாக உறுதிப்படுத்துகிறது. சில சமயங்களில் ''இடதுசாரிக்'' கோஷங்களால் மறைக்கப்படுகிற குட்டிமுதலாளித்துவ ஒழுங்கீனத்தைத் தாங்கி ஆதரிப்பதின் படுமோசமான வெகுளித்தனத்துக்கு அரசியல் இலக்கியத்தில் இதைவிட நல்ல ஊர்ஜிதம் இருக்க முடியாது. ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளின்'' வாதங்களுக்கு பதில் சொல்வது பயனுள்ளதாகும், அவசியமாகும்; காரணம், நாம் கடந்து சென்று கொண்டிருக்கும் காலப் பகுதியின் தன்மைக் குறிப்பாக அவையுள்ளன. மிகத் தெளிவுடன் அவை இந்தக் காலப் பகுதியின் ''மையக் கூறின்'' எதிர்மறையான பக்கத்தைப் புலப்படுத்துகின்றன. அவை அறிவூட்டுவதாக உள்ளன, காரணம் நாம் யாரைப் பற்றிப் பேசுகிறோமோ அவர்கள் இந்தக் காலப்பகுதியைப் புரிந்து கொள்ளத் தவறியவர்களில் மிகச் சிறந்தவர்கள்; அதே தவறான கருத்துக்களின் சாதாரணப் பிரதிநிதிகளாகிய சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களை விட அறிவிலும் விசுவாசத்திலும் எவ்வளவோ உயரத்தில் நிற்பவர்கள்.

---

* இந்நூலில் 50-114 பக்கங்களைப் பார்க்க.—ப-ர்.

1

ஓர் அரசியல் பரிமாணம், அல்லது ஓர் அரசியல் பாத்திரம் வகிக்க உரிமை கோரும் ஒரு குழு என்கிற வகையில் ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளின்'' குழு தனது ''தற்கால நிலைமை பற்றிய ஆய்வுரைகளை'' முன்வைத்துள்ளது. தன்னுடைய கருத்துக்களுக்கும் போர்த்தந்திரங்களுக்கும் அடிப்படையாயிருக்கிற கோட்பாடுகளைப் பற்றி ஒரு கோர்வையான, முழுமையான விளக்கவுரை தருவது ஒரு நல்ல மார்க்சிய வழக்கமாகும். இந்த நல்ல மார்க்சிய வழக்கம் நம்முடைய ''இடது சாரிகள்'' புரிந்த தவறை வெளிப்படுத்த உதவியுள்ளது; காரணம், உணர்ச்சியாகப் பேசாமல் வாதமிட முயல்கிற வெறும் முயற்சியே அவர்களது வாதங்களின் தவறை அம்பலப்படுத்துகிறது.

முதன்முதலாக ஒருவருடைய கவனத்தில் பதிவது என்னவெனில், பிரேஸ்த் ஒப்பந்தம் செய்து கொண்டது சரியா தப்பா என்கிற பழைய பிரச்சினை சம்பந்தமாக அமோகமாகக் கிடைக்கும் மறைவான குறிப்புகளும் ஜாடைச் சொற்களும் தட்டிக் கழித்தல்களும் தான். ''இடதுசாரிகள்'' இப்பிரச்சினையை துலக்கமான வழியிலே வைக்கத் தைரியம் கொள்வதில்லை; கோமாளித்தனமான முறையிலே இப்படியும் அப்படியுமாகப் புரள்கிறார்கள்; வாதத்துக்கு மேல் வாதமாக அடுக்குகிறார்கள்; காரணங்களைத் தேடிப்பிடிக்கிறார்கள்; ''ஒரு பக்கத்தில் பார்த்தால்'' அப்படி இருக்கக் கூடும் ஆனால் ''இன்னொரு பக்கத்தில் பார்த்தால்'' அப்படி அல்லாமலும் இருக்கக் கூடும் என்று வாதிடுகிறார்கள்; அவர்களின் சிந்தனைகள் எல்லா விவகாரங்களையும் விடாது தொட்டுத் தொட்டு அலைகின்றன; தங்களைத் தாங்களே தோற்கடித்துக் கொள்வதைக் காணுமலிருக்க எப்போதும் முயன்ற வண்ணம் இருக்கிறார்கள். ''இடதுசாரிகள்'' புள்ளிவிவரங்களை மேற்கோள் காட்டுவதில் மிகவும் எச்சரிக்கையாயுள்ளனர்: கட்சிக் காங்கிரசிலே சமாதானத்துக்கு எதிராகப் பன்னிரண்டு ஓட்டுகளும், சாதகமாக இருபத்தெட்டும் விழுந்தன என்று கவனமாகச் சொல்லுகிறார்கள்; ஆனால் சோவியத்துகளின் காங்

கிரசிலுள்ள போல்ஷிவிக் குழுவின் கூட்டத்தில் பதிவான பல நூற்றுக்கணக்கான ஓட்டுகளில் தங்களுக்குப் பத்தில் ஒரு பங்குக்கும் குறைவாகத்தான் கிடைத்தது என்கிற விஷயத்தைக் குறிப்பிடாமல் ஜாக்கிரதையாகத் தவிர்த்து விடுகிறார்கள். ''களைத்துப்போன, வர்க்கத் தன்மை இழந்த பேர்வழிகளால்'' சமாதானம் மேற்கொள்ளப்பட்டது; ஆனால் ''பொருளாதார வாழ்வில் அதிக உயிராற்றலும் ரொட்டிசப்ளை மேலும் உறுதியாகவும் உள்ள தெற்கத்தியப் பிராந்தியங்களின் தொழிலாளர்களும் விவசாயிகளும்'' அதை எதிர்த்தார்கள் என்னும் ஒரு ''தத்துவத்தைப்'' புனைந்திருக்கிறார்கள்... இதைப் பற்றிச் சிரிக்காமல் வேறென்ன செய்ய முடியும்? சமாதானத்திற்கு ஆதரவாக அகில உக்ரேனிய சோவியத்துகள் காங்கிரசின் ஓட்டெடுப்பு முடிவு பற்றியோ, சமாதானத்துக்கு எதிராக இருந்த ருஷ்யாவிலுள்ள தனி மாதிரி வகைப்பட்ட குட்டிமுதலாளித்துவ, வர்க்கத்தன்மையிழந்த அரசியல் பலபட்டடையின் (இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கட்சியின்) சமுதாய, வர்க்கத்தன்மை பற்றியோ ஒரு வார்த்தை இல்லை. அறவே சிறுபிள்ளைத்தனமான முறையிலே, வேடிக்கையான ''விஞ்ஞான'' விளக்கங்கள் மூலமாக அவர்கள் தங்களுடைய திவாலான நிலையை மறைக்கவும், உண்மைகளை மறைக்கவும் முயல்கிறார்கள்; அவற்றை வெறுமனே மறுபரிசீலனை செய்தாலே போதும்—கட்சியிலுள்ள வர்க்கத் தன்மை இழந்த, அறிவுஜீவி இயல்பான ''சிறந்த பகுதியே'', உயர்ந்தோர் குழுவே புரட்சிகரமான குட்டிமுதலாளித்துவ வாய்ச்சொற்களால் புனைந்த கோஷங்களைக் கொண்டு சமாதானத்தை எதிர்த்தது என்றும், சமாதானத்தை மேற்கொண்டவர்கள் திரளான தொழிலாளர்களும் சுரண்டப்பட்ட விவசாயிகளும் தான் என்றும் காட்டிவிடும்.

போர், சமாதானம் குறித்த பிரச்சினை பற்றிய ''இடதுசாரிகளின்'' மேற்சொன்ன எல்லாப் பிரகடனங்களையும் மழுப்பல்களையும் மீறிக்கொண்டு பச்சையான, அப்பட்டமான உண்மை வெளிப்படுகிறது. ''சமாதான முடிவு, ஏகாதிபத்தியவாதிகள் உலக அளவில் பேரம் செய்துகொள்ளப்

பார்த்த முயற்சிகளைத் தற்சமயத்துக்கு பலவீனப்படுத்தியுள் ளது'' என்று ஆய்வுரைகளின் ஆசிரியர்கள் ஒத்துக்கொள்ளக் கட்டாயப்படுத்தப் பட்டிருக்கிறார்கள் (இதை ''இடதுசாரி கள்'' தவறாக வரையறுக்கிறார்கள்; ஆனால் தவறுகளைக்குறிக்க இது இடமல்ல). ''சமாதான முடிவு ஏற்கெனவே ஏகாதிபத் திய வல்லரசுகளிடையேயுள்ள மோதல்களை மேலும் கடுமை யாக்கி விட்டிருக்கிறது.''

ஆம், இது உண்மை. இது நிர்ணயமான உட்பொருள் கொண்ட விஷயம். எனவேதான், சமாதானம் செய்து கொள் வதை எதிர்த்தவர்கள் தன்னறிவின்றி ஏகாதிபத்தியவாதி களின் கைப்பாவைகளாக இருந்தார்கள்; ஏகாதிபத்தியவாதி கள் அவர்களுக்காக விரித்த வலையில் போய்விழுந்தார்கள். ஏனெனில், உலக சோஷலிசப் புரட்சி வெடிக்கும் வரை, அது பல நாடுகளைத் தழுவி வளர்ந்து சர்வதேச ஏகாதிபத்தியத் தையே வீழ்த்தும் அளவுக்குப் போதிய பலம் பெறும் வரை, ஒரு நாட்டில் (குறிப்பாக ஒரு பிற்பட்ட நாட்டில்) வெற்றி பெற்ற சோஷலிஸ்டுகளின் நேரடியான கடமை ஏகாதிபத்திய அசுரர் களுடன் போரிட ஒத்துக்கொள்ளக் கூடாது என்பதே. சோஷ லிஸ்டுகளின் கடமை சண்டையைத் தவிர்க்க முயல்வதும், ஏகாதிபத்தியவாதிகளிடையேயுள்ள மோதல்கள் அவர்களை மேலும் அதிகமாகப் பலவீனப்படுத்தும் வரை, மற்ற நாடு களில் புரட்சி இன்னமும் அதிகமாக நெருங்கி வரும்படி செய் கிற வரை காத்திருப்பதே ஆகும். நமது ''இடதுசாரிகள்'' இந்தச் சாதாரண உண்மையை ஜனவரியிலும் பிப்ரவரியி லும் மார்ச்சிலும் புரிந்து கொள்ளவில்லை. இப்போதும் கூட அவர்கள் இதைப் பகிரங்கமாக ஒத்துக்கொள்ள அஞ்சுகிறார் கள். எனினும், ''ஒரு புறத்தில் அதை ஒத்துக்கொண்டாக வேண்டும், மறு புறத்தில் இதை ஏற்றுக்கொண்டாக வேண் டும்'' என்கிற குழப்பமான வாதத்தின் மூலமாக அது வெளிச் சத்துக்கு வரவே செய்கிறது.[38]

''இடதுசாரிகள்'' தம்முடைய ஆய்வுரைகளில் எழுது வதாவது:

''வரப்போகும் வசந்தகாலத்திலும் கோடைகாலத்திலும் ஏகாதிபத்திய அமைப்பின் வீழ்ச்சி தொடங்கியே தீர வேண்

டும். போரின் இன்றையக் கட்டத்தில் ஜெர்மன் ஏகாதிபத்தியத்துக்கு வெற்றி கிடைக்குமேயானால், இந்த வீழ்ச்சி ஒத்திப் போடப்படுவது மட்டுமே நடக்க முடியும். ஆனால், பிறகு அது இன்னும் அதிகத் தீவிரமான வடிவங்களிலே தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும்.''

இந்த வரையறுப்பு விஞ்ஞானத்தோடு விளையாடுகிற போதிலும் இன்னும் அதிகச் சிறுபிள்ளைத்தனமான முறையிலே தவறானது. எந்த ஆண்டில், வசந்தகாலத்திலா, கோடைக்காலத்திலா, இலையுதிர்காலத்திலா, பனிக்காலத்திலா ''வீழ்ச்சி தொடங்க வேண்டும்'' என்று நிர்ணயிக்க முடிகிற ஒன்றே என்ற பொருளிலே விஞ்ஞானத்தைப் ''புரிந்து கொள்வது'' குழந்தைகளின் இயல்புதானே!

உறுதியாக அறிய முடியாததை உறுதியாக அறிய முயலும் நகைப்புக்கிடமான, வீணான முயற்சிகள் இவை. ஒரு ''அமைப்பின்'' ஏதாவதொருவகை வீழ்ச்சி எப்பொழுது ''தொடங்கித் தீர வேண்டும்'' என்று எந்தப் பொறுப்புள்ள அரசியல்வாதியும் என்றைக்கும் சொல்லமாட்டான் (அதிலும் அந்த அமைப்பின் வீழ்ச்சி ஏற்கெனவே தொடங்கிவிட்டது, எந்தெந்தக் குறிப்பிட்ட நாடுகளில் எந்தத் தருணத்தில் புரட்சி வெடிக்கும் என்பது இன்று பிரச்சினை ஆகியிருக்கும் போது). இந்தச் சிறுபிள்ளைத்தனமான ஏலாத வரையறுப்பினூடே ஒரு மறுக்க முடியாத உண்மை முட்டிக் கொண்டு வெளிப்படுகிறது: அதாவது, மேலும் முன்னேறிய பிற நாடுகளில் புரட்சியின் எழுச்சிகள், ஒரு மாதத்துக்கோ ஒன்றரை மாதத்துக்கோ முன்பு இருந்ததை விட, இன்று, சமாதானம் செய்துகொண்டதைத் தொடர்ந்து வந்த ''ஓய்வின்'' தொடக்கத்திற்குப் பிறகுள்ள ஒரு மாதத்தில், மேலும் நெருங்கி வந்திருக்கின்றன என்பதே.

இதற்கு என்ன பொருள்?

சமாதான ஆதரவாளர்களின் நிலை முற்றிலும் சரி, நிகழ்ச்சிகளின் போக்கு அவர்களின் நிலையை நியாயப்படுத்தி இருக்கிறது என்பதே இதன் பொருள். சக்திகளின் ஒப்புநிலையை ஒருவன் கணக்கிடத் திறன் பெற்றிருக்க வேண்டும்; சோஷலிசம் இன்னும் பலவீனமாக இருக்கையில், போரிடும் வாய்ப்

புக்கள் சோஷலிசத்துக்கு எதிரானவையாக வெளிப்படையாக இருக்கையில், சோஷலிசத்துக்கு எதிரான சண்டையை ஏகாதிபத்தியவாதிகளுக்கு மேலும் சுலபமாக்கித் தருவதின் மூலம் ஒருவன் ஏகாதிபத்தியவாதிகளுக்கு உதவக்கூடாது என்று படாடோபப் பிரியர்களின் மண்டையிலே உறைக்கும்படி அவர்கள் அடித்துச் சொல்லி வந்தது சரிதான்.

ஆனுல், நமது ''இடதுசாரிக்'' கம்யூனிஸ்டுகள்—இவர்கள் தங்களைப் ''பாட்டாளி வர்க்கக்'' கம்யூனிஸ்டுகள் என்றும்கூட அழைத்துக் கொள்ள விரும்புகிறுர்கள்; காரணம், பாட்டாளி வர்க்கத் தன்மை இவர்களிடமிருப்பது மிகக் குறைவே, குட்டிமுதலாளித்துவத் தன்மையே நிறைய இருக்கிறது—சக்திகளின் ஒப்புநிலையைப் பற்றி, அதைக் கணக்கிடுவது பற்றி சிந்திக்கச் சக்தியற்றிருக்கிறுர்கள். இது தான் மார்க்சியத்தின், மார்க்சியப் போர்த்தந்திரத்தின் மையக் கூறு ஆனுல் இவர்கள்:

''... ஒரு செயலற்ற 'சமாதான மனுேபாவத்தில்' மக்கள் திரள் உறுதியாக ஊறியிருக்கிறது என்பது அரசியல் நிலைமையின் ஒரு புறநிலை உண்மையாகும்...''

என்கிற ''பெருமிதமான'' சொற்களைக் கொண்டு, அந்த ''மையக் கூறை'' ஆணவ அவமதிப்புடன் ஒதுக்கித் தள்ளி விடுகிறுர்கள்.

முத்தான சொல்! மூன்றுண்டுகள் நடந்த, ஒரு மிகமிக வேதனை நிறைந்த, பிற்போக்கான போருக்குப் பிறகு, சோவியத் ஆட்சியின் காரணத்தாலும் வெறும் வாய்ச்சொல் வீச்சில் என்றைக்கும் இறங்காத அதன் சரியான போர்த்தந்திரத்தின் உதவியாலும், மக்கள் ஒரு மிக மிகக் குறுகிய கால, நிலையற்ற, போதவே போதாத ஓய்வைப் பெற்றுர்கள். ஆனுல், ''இடதுசாரி'' அறிவுஜீவிக் குழந்தைகளோ, தன்மீது தானே மோகங்கொண்ட ஒரு நார்ட்ஸீசின்[39] மேல் மினுக்கோடு, ஆழ்ந்த ரீதியிலே பிரகடனப்படுத்துகிறுர்கள்: ''ஒரு செயலற்ற (!!! ???) சமாதான மனுேபாவத்தில் மக்கள் திரள் (???) உறுதியாக ஊறியிருக்கிறது (!!!)'' என்று. ''இடதுசாரிகளின்'' பத்திரிகையை அல்லது சஞ்சிகையைக் கம்யூ

னிஸ்ட் என்று அழைப்பதற்குப் பதிலாக ஷ்லியாஹ்திச் என்றுதான் அழைத்திருக்க வேண்டும் என்று கட்சிக் காங்கிரசில் நான் சொன்னது சரிதானே இல்லையா?*

உழைக்கிற, சுரண்டப்படுகிற மக்களின் வாழ்க்கை நிலைமைகளையும் மனோபாவத்தையும் கொஞ்சத்துக்குக் கொஞ் சமாவது புரிந்து கொண்டிருக்கும் ஒரு கம்யூனிஸ்டு ‘‘சமாதான மனோபாவம்’’ ‘‘செயலற்றது’’ என்று பிரகடனம் செய்து, அட்டைக் கத்தியைச் சுழற்றி, அதுவே ‘‘செயல்புரிவது’’ என்று நம்புகிற ஒரு பிரபுவின் அல்லது ஷ்லியாஹ்திச்சின் மனோபாவத்தோடு கூடிய இனமாதிரியான வர்க்கத் தன்மையிழந்த, குட்டிமுதலாளித்துவ அறிவுஜீவியின் கருத்து நிலைக்கு இறங்கிவிட முடியுமா? ஏனெனில், மூன்றாண்டு காலமாக நடந்த படுகொலையினால் முற்றாகக் களைத்துப் போன மக்கள் ஓய்வு இன்றி சண்டை போட்டுக் கொண்டேயிருக்க முடியாது, மேலும் யுத்தத்தை தேச அளவிலே நடத்த முடியாவிட்டால் அதுவே அடிக்கடி பாட்டாளி வர்க்கத்தின் இரும்பனைய கட்டுப்பாட்டுக்குப் பதிலாகச் சிறு உடைமையாளர்களுக்கே உரித்தான சிதைவு மனோபாவத்தைத் தான் உண்டாக்குகிறது என்கிற, எல்லோருக்கும் தெரிந்த, உக்ரேனில் நடக்கும் யுத்தம் இதற்கு இன்னொரு கூடுதலான சான்றாகப் பயன்பட்டுள்ள உண்மையை நமது ‘‘இடதுசாரிகள்’’ புறக்கணிக்கிற போது, அட்டைக் கத்தியைத்தான் சுழற்றி வீசுகிறார்கள். நமது ‘‘இடதுசாரிகளுக்குப்’’ பாட்டாளி வர்க்க இரும்புக் கட்டுப்பாடு பற்றியும், அது எப்படி சாதிக்கப்படுகிறது என்பது பற்றியும் ஒன்றுமே தெரியாது, அவர்கள் வர்க்கத்தன்மையிழந்த குட்டிமுதலாளித்துவ அறிவுஜீவியின் மனோபாவத்தில் முற்றாக ஊறிப்போயிருக்கிறார்கள் என்று கம்யூனிஸ்ட் சஞ்சிகையின் ஒவ்வொரு பக்கமும் புலப்படுத்துகிறது.

2

யுத்தத்தைப் பற்றிய ‘‘இடதுசாரிகளின்’’ இந்த வாய்ச் சொற்கள் எல்லாம் சிறுபிள்ளைத்தனமான ஆர்வப் பேச்சு

---

* இப்பதிப்பின் தொகுதி 7, பக்கம் 241 பார்க்க.—ப-ர்.

தான் என்றும், அவை சென்ற காலத்தைப் பற்றியவை, ஆதலால் அரசியல் உட்பொருளின் சாயல் எதுவும் இல்லாதவை என்றும் ஒருவேளை சொல்ல முடியுமா? நமது ''இடதுசாரிகளைத்'' தாங்கி ஆதரிக்கும் வகையில் சிலர் முன்வைக்கும் வாதம் இது. ஆனால் இது தவறு. அரசியல் தலைமைக்கு வர விரும்புகிறவர்கள் அரசியல் பிரச்சினைகளைப் பற்றி தீர்க்கமாகச் சிந்திக்கத் திறன் பெற்றிருக்க வேண்டும்; இந்தத் திறனில்லாமை ''இடதுசாரிகளை'' ஓர் ஊசலாட்டமான கொள்கையைப் பிரசாரம் செய்யும் முதுகெலும்பற்ற பிரசாரகர்களாக மாற்றிவிடுகிறது; இந்தக் கொள்கைக்குப் புறநிலையில் ஒரேயொரு விளைவுதான் இருக்க முடியும், அதாவது ''இடதுசாரிகள்'' தங்களுடைய ஊசலாட்டத்தின் மூலமாக, வெளிப்படையாகத் தனக்குப் பாதகமாக இருக்கக் கூடிய ஒரு போரில் இறங்குமாறு ருஷ்ய சோவியத் குடியரசுக்கு ஆத்திரமூட்டிவிட ஏகாதிபத்தியவாதிகளுக்கு] உதவி வருகிறார்கள், நம்மை ஒரு கண்ணியில் இழுத்துச் சிக்க வைக்க அவர்கள் ஏகாதிபத்தியவாதிகளுக்கு உதவி வருகிறார்கள். இதைக் கேளுங்கள்:

''... அனைத்துலகப் புரட்சிப் பாதையைக் கைவிடுவதன் மூலம், தொடர்ச்சியாகப் போரிடுவதைத் தவிர்ப்பது மூலம், சர்வதேச மூலதனத்தின் நிர்ப்பந்தத்துக்குப் பணிந்து கொடுப்பது மூலம் 'உள்நாட்டு மூலதனத்துக்குச்' சலுகைகள் கொடுப்பது மூலம், ருஷ்யாவின் தொழிலாளி வர்க்கப் புரட்சி 'தன்னைத்தானே காத்துக் கொள்ள' முடியாது.

''இந்தக் கோணத்திலிருந்து பார்க்கையில், சர்வதேசப் புரட்சிப் பிரசாரத்தைச் சொல்லாலும் செயலாலும் ஒன்றுபடுத்துகிற ஒரு திண்ணமான வர்க்க சர்வதேசக் கொள்கையை மேற்கொள்வதும், சர்வதேச சோஷலிசத்தோடு (சர்வதேச முதலாளித்துவ வர்க்கத்தோடு அல்ல) இருக்கும் உள்ளார்ந்த தொடர்பைப் பலப்படுத்துவதும் அவசியமாகும்...''

உள்நாட்டுக் கொள்கை மீது இங்கு தாக்குதல்கள் தொடுக்கப்பட்டிருப்பதைத் தனியாகப் பார்ப்போம். ஆனால் வெளிநாட்டுக் கொள்கைத் துறை பற்றிய அட்டகாசமான வெறியாட்டமான வாய்ச்சொல் வீச்சையும்—செய்கைகளில்

பயந்தாங்கொள்ளித்தனத்தையும் பரிசீலியுங்கள். ஏகாதிபத்திய ஆத்திரமூட்டலுக்குக் கருவியாக இருக்க விரும்பாதவர்கள், அதன் கண்ணியில் சிக்கிட விரும்பாதவர்கள், எல்லோரும் கட்டாயமாக இன்று கடைப்பிடிக்க வேண்டிய போர்த்தந்திரங்கள் என்ன? இந்தக் கேள்விக்கு ஒவ்வொரு அரசியல்வாதியும் ஒரு தெளிவான, நேரான பதில் கொடுத்துத் தீர வேண்டும். நம் கட்சியின் பதில் நன்கு தெரிந்ததே: இந்தத் தருணத்தில் நாம் பின்வாங்க வேண்டும், சண்டையைத் தவிர்க்க வேண்டும். நமது ''இடதுசாரிகள்'' இதை மறுத்துச் சொல்லத் தைரியமின்றி, ஒரு ''திண்ணமான வர்க்க சர்வ தேசக் கொள்கை'' என்று மனம் போன போக்கில் கூறுகிறார்கள்!!

இது மக்களை ஏமாற்றுவதாகும். இப்போது சண்டை போட வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் அதைப் பகிரங்கமாகச் சொல்லுங்கள். இப்போது பின்வாங்கக் கூடாது என்று நீங்கள் விரும்பினால் அதையும் பகிரங்கமாகச் சொல்லுங்கள். இல்லையேல், உங்களுடைய எதார்த்தமான பாத்திரம் உங்களை ஏகாதிபத்திய ஆத்திரமூட்டலுக்குரிய ஒரு கருவியே ஆக்கும். மேலும், உங்களுடைய அகநிலை ''மனோபாவம்'' ஜன்னி வெறி கொண்ட குட்டிமுதலாளிக்கு உரியது; அவன் இறுமாந்து நடப்பான்; வீறாப்புடன் பேசுவான்; ஆனால் அவனுக்கு ஊகமாகத் தெரியும்—ஒழுங்காகவே பின்வாங்குவதிலும் பின்வாங்க முயல்வதிலும் பாட்டாளியின் நிலை சரி என்று. நமக்குப் பலமில்லாததால் நாம் (மேற்கத்திய, கிழக்கத்திய ஏகாதிபத்தியங்கள் முன்னே) பின்வாங்கித் தீர வேண்டும், ஊரால் பிரதேசம் வரைக்கும் கூட பின்வாங்கித் தீர வேண்டும் என்று பாட்டாளி விவாதிப்பது சரி என்று அவனுக்கு ஊகமாகப் புரியும்; ஏனெனில் மேற்கே புரட்சி பக்குவப்பட்டு வருகையில்—புரட்சி ''வசந்த காலத்திலோ கோடைக் காலத்திலோ'' தொடங்க வேண்டுமென்று ''கட்டாயம்'' ஒன்றுமில்லை (''இடதுசாரிகளின்'' வெற்றுப் பேச்சு இருந்த போதிலும் சரி), ஆனால் அது மேலும் மேலும் நெருங்கி வந்துகொண்டே இருக்கிறது; ஒவ்வொரு மாதமும் அது நிகழ்வதற்குரிய சாத்தியப்பாடு அதிகமாகி வருகிறது—

நமக்கு மெதுவாக இயங்குவதற்குரிய ஒரே வாய்ப்பு இந்த ஒன்றிலே தான் உள்ளது.

''இடதுசாரிகளுக்கு'' அவர்களுக்கே ''சொந்தமான'' கொள்கை ஏதுமில்லை. இந்தத் தருணத்தில் பின்வாங்கத் தேவையில்லை என்று பிரகடனம் செய்ய அவர்களுக்குத் தைரியம் கிடையாது. அவர்கள் இப்படியும் அப்படியும் புரள்கிறார்கள், நெளிகிறார்கள், சொற்களோடு விளையாடுகிறார்கள்; இந்தத் தருணத்தில் சண்டையைத் தவிர்ப்பது என்கிற பிரச்சினைக்குப் பதிலாகத் ''தொடர்ச்சியாகச்'' சண்டையைத் தவிர்ப்பது என்கிற பிரச்சினையை வைக்கிறார்கள். ''செயல் மூலம் சர்வதேசப் புரட்சிப் பிரசாரம்'' என்று சாரமற்ற வார்த்தைகளைத் தட்டி விடுகிறார்கள்!! இதற்கு அர்த்தம் என்ன?

இதற்கு அர்த்தம் இரண்டில் ஒன்றாகத்தான் இருக்க முடியும்: ஒன்று, அது வெறும் நொஸ்திரியோவ்வாதம்,[40] அல்லது சர்வதேச ஏகாதிபத்தியத்தைத் தூக்கியெறிவதற்கு ஒரு தாக்குதல் போர். இப்படிப்பட்ட முட்டாள்தனத்தைப் பகிரங்கமாகச் சொல்ல முடியாது; எனவே தான் ஒவ்வொரு அரசியல் உணர்வுள்ள பாட்டாளியிடமும் கேலிக்கு ஆளாவதிலிருந்து தப்பிப் புகலிடம் தேட படாடோபமான வெற்றுச் சொற்களின் பின்னே ''இடதுசாரிக்'' கம்யூனிஸ்டுகள் ஒளிந்து கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். ''செயல் மூலம் சர்வதேசப் புரட்சிப் பிரசாரம்'' என்கிற சொற்றொடரின் அர்த்தத்தை, உண்மையான அர்த்தத்தை, கவனமற்ற வாசகன் பார்க்க மாட்டான் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

படாடோபமான வாய்ச்சொற்களை எடுத்து வீசுவது வர்க்கத்தன்மை இழந்த குட்டிமுதலாளித்துவப் படிப்பாளியின் பண்பியலாகும். ஸ்தாபன ரீதியாகத் திரண்டுள்ள கம்யூனிஸ்டுகளாகிய பாட்டாளிகள் இந்தப் ''பழக்கத்தைக்'' கேலி செய்தும் பொறுப்புள்ள எல்லாப் பதவிகளிலிருந்தும் குறைந்த பட்சம் இவர்களை வெளியேற்றியும் நிச்சயமாகத் தண்டிப்பார்கள். மக்களுக்குக் கசப்பான உண்மையை எளிதாக, தெளிவாக, நேராகச் சொல்லித் தீர வேண்டும்: ஜெர்மனியில் போர் வேண்டும் என்று கோரும் கட்சியின் கை

மீண்டும் மேலோங்குவது சாத்தியமே, அநேகமாகச் சாத்தியமே (அதாவது, நமக்கு எதிராகத் தாக்குதல் உடனடியாகத் தொடங்கும்); ஜெர்மனி ஜப்பானுடன் அதிகார பூர்வமான ஒப்பந்தம் மூலமாகவோ, மௌன ஒப்புதல் மூலமாகவோ, ஒன்று சேர்ந்துகொண்டு நம்மைப் பிளவு படுத்தி நெரித்துவதைப்பது சாத்தியமே, அநேகமாகச் சாத்தியமே. வாய்வீருப்புக்காரர்களின் பேச்சை நாம் கேட்க விரும்பாவிட்டால், நம்முடைய போர்த்தந்திரம், காத்திருப்பது, நீட்டித் தள்ளிப் போட்டுக் கொண்டே போவது, சண்டையைத் தவிர்ப்பது, பின்வாங்குவது என்றுதான் இருக்க வேண்டும். வாய்வீருப்புக்காரர்களை நாம் உதறித் தள்ளிவிட்டு உண்மையான உருக்குக் கட்டுப்பாட்டை, உண்மையான பாட்டாளி வர்க்கக் கட்டுப்பாட்டை, உண்மையான கம்யூனிஸ்டுக் கட்டுப்பாட்டை உருவாக்குவதன் மூலமாக நம்மை ''வலுவூட்டிக் கொண்டால்'', பல மாத அவகாசம் பெறுவதற்கு நமக்கு ஒரு நல்ல வாய்ப்பு இருக்கும். அதன் பிறகு, நிலைமை மோசத்திலும் படுமோசமாகப் போகுமேயானால், யூரால் பிரதேசத்துக்கும்கூடப் பின்வாங்குவதின் மூலமாக நமது நேச சக்திகள் (சர்வதேசப் பாட்டாளி வர்க்கம்) நம் உதவிக்கு வருவதை, புரட்சிகரமான வெடிப்புகள் தொடங்குவதற்கும் புரட்சிக்கும் உள்ள தூரத்தை (விளையாட்டு மொழியிலே சொல்லுவதென்றால்) ''விரைந்து எட்டுவதை'', மேலும் சுலபமாக்கித் தருவோம்.

இவைதான், இவை மட்டுமேதான், உண்மையிலே சர்வதேச சோஷலிசத்தின் தற்காலிகமாகத் தனிப்பிரிக்கப் பட்டுள்ள ஒரு பகுதிக்கும் பிற பகுதிகளுக்கும் உள்ள தொடர்பை மெய்யாகவே பலப்படுத்த முடிகிற போர்த்தந்திரமாகும். ஆனால் அன்புக்குரிய ''இடதுசாரிக்'' கம்யூனிஸ்டுகளே, உண்மையைச் சொல்வதென்றால் உங்களுடைய வாதங்களெல்லாம் ஒரு படாடோபமான சொல்லுக்கும் மற்றொரு படாடோபமான சொல்லுக்கும் இடையே ''உள்ளார்ந்த தொடர்பைப் பலப்படுத்துவதிலேதான்'' கொண்டுபோய் விடுகின்றன. இது ஒரு மோசமான வகையான ''உள்ளார்ந்த தொடர்பு''!

எனது அருமை நண்பர்களே, இப்படிப்பட்ட விபத்து உங்களுக்கு வாய்த்ததின் காரணத்தை நான் தெளிவாக்கு கிறேன். அதற்குக் காரணம், புரட்சிகரமான கோஷங்களைச் சிந்தித்துத் தெளிவடைவதற்குப் பதிலாக மனப்பாடம் செய்து நினைவிலே வைத்துக் கொள்வதிலேதான் நீங்கள் அதிகமாக முயற்சியைச் செலவழிக்கிறீர்கள். இது உங்களை ''சோஷலிஸ்டு தாய் நாட்டுப் பாதுகாப்பு'' என்பதை மேற் கோள் குறிபோட்டு எழுதுவதிலே கொண்டு போய் விடுகிறது; அந்த மேற்கோள் குறிகள் ஒருக்கால் நீங்கள் நையாண்டி செய்ய முயல்வதைக் குறிக்கும் பொருள் உள்ளவை போலும், ஆனால் அவை நீங்கள் மனம் குழம்பிப் போனவர்கள் என்று தான் உண்மையிலே நிரூபிக்கின்றன. ''பாதுகாப்புவாதம்'' ஏதோ இழிவான, வெறுக்கத்தக்க ஒன்று என்று கருதுவதே உங்களுக்குப் பழக்கமாகி விட்டிருக்கிறது; இதைப் பயின் றீர்கள்; மனப்பாடம் செய்து கொண்டீர்கள். தீர்க்கமாக மனப்பாடம் செய்து கொண்டீர்கள் எனவே, உங்களில் சிலர், ஓர் ஏகாதிபத்திய சகாப்தத்தில் தாய் நாட்டைப் பாதுகாப் பது அனுமதிக்கத்தக்கதல்ல என்ற பொருளில் முட்டாள்தன மாக பேசத் தொடங்கியிருக்கிறீர்கள் (உண்மையிலே சொன் னால், முதலாளித்துவ வர்க்கம் நடத்துகிற ஓர் ஏகாதிபத்திய, பிற்போக்கான போரில் மட்டுமே அது அனுமதிக்கத்தக்க தல்ல). ஆனால் ''பாதுகாப்புவாதம்'' ஏன், எப்பொழுது, வெறுக்கத்தக்கது என்று நீங்கள் தீர்க்கமாகச் சிந்திக்க வில்லை.

தாய் நாட்டுப் பாதுகாப்பை அங்கீகரிப்பதின் பொருள் யுத்தத்தின் நியாயத்தையும் நீதியையும் அங்கீகரிப்பதா கும். நியாயமும் நீதியும் எந்தப் பார்வை நிலையிலிருந்து? சோஷலிசப் பாட்டாளி வர்க்கத்தின், அதன் விடுதலைக்குரிய போராட்டத்தின் பார்வை நிலையிலிருந்து மட்டுமே. வேறெந்த நிலையையும் நாம் அங்கீகரிக்கவில்லை. ஒரு வர்க் கம் என்ற முறையிலே தன்னுடைய ஆட்சியைப் பலப் படுத்திக் கொள்ளும் நோக்கத்தோடு சுரண்டும் வர்க்கம் போர் நடத்தினால் அது கொலைகாரப் போர். அப்படிப்பட்ட ஒரு போரில் ''பாதுகாப்புவாதம்'' என்பது சோஷலிசத்தை ஈனத்

தனமாகக் காட்டிக் கொடுப்பதாகும். பாட்டாளி வர்க்கம் தன் சொந்த நாட்டில் முதலாளித்துவ வர்க்கத்தை வெற்றி கொண்ட பிறகு சோஷலிசத்தைப் பலப்படுத்தும், வளர்க்கும் நோக்கத்துடன் போரை நடத்தினுல், அப்படிப்பட்ட போர் நியாயமானது, ''புனிதமானது''.

1917, அக்டோபர் 25ந்தேதியிலிருந்து நாம் ''பாதுகாப்பு வாதிகளாகத்'' தான் இருந்து வருகிறோம். ஒரு தடவைக்கு மேலாகவே இதை நான் திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறேன். இதை மறுக்க உங்களுக்கு தைரியம் இல்லை. சர்வதேச சோஷலிசத்தோடு ''தொடர்பைப் பலப்படுத்திக் கொள்ளும்'' நலன்களுக்காகவே தான் சோஷலிஸ்டு தாய் நாட்டைப் பாதுகாப்பது நம் **கடப்பாடான கடமையாகும்**. பாட்டாளி வர்க்கம் ஏற்கெனவே வெற்றிபெற்றுள்ள ஒரு நாட்டின் பாதுகாப்பைப் பொறுப்பின்றிக் கருதிப் பார்க்கிறவரே சர்வதேசச் சோஷலிசத்தோடு உள்ள தொடர்பை அழித்து விடுகிறார். ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின் பிரதிநிதியாக நாம் இருந்த போது, ஏகாதிபத்தியப் போரில் தாய் நாட்டைப் பாதுகாக்கும் விஷயத்தில் நாம் விளையாட்டுத்தனமான போக்கை மேற்கொள்ளவில்லை. அப்படிப்பட்ட பாதுகாப்பைக் கோட்பாட்டின் வழி நின்று நாம் எதிர்த்தோம். இன்று நாம் சோஷலிசத்தை அமைக்கத் தொடங்கி இருக்கும் ஆளும் வர்க்கத்தின் பிரதிநிதிகளாகி விட்டிருப்பதினுலே, நாட்டின் பாதுகாப்பு விஷயத்தில் **பொறுப்புள்ள** போக்கை எல்லோரும் மேற்கொள்ளுமாறு கோருகிறோம். மேலும், நாட்டின் பாதுகாப்பு விஷயத்தில் பொறுப்புள்ள போக்கை மேற்கொள்வது என்பதற்குப் பொருள், அதற்காக முற்ருகத் தயாரிப்பு செய்வது, சக்திகளின் ஒப்புநிலையைக் கறாராகக் கணிப்பது என்பதாகும். நம் சக்திகள் வெளிப்படையாகவே சிறிதாக இருந்தால், பாதுகாப்புக்குரிய தலைசிறந்த வழி நாட்டின் உள்பகுதிக்குப் **பின்வாங்கிச் செல்வதாகும்** (ஏதோ ஒரு தருணத்தின் தேவைகளுக்குப் பொருத்தமாகப் புனையப்பட்ட ஒரு செயற்கையான சூத்திரம் தான் இது என்று யாராவது கருதுவார்களே ஆனுல், ராணுவ விவகாரங்களில் மிகப் பெரிய நிபுணர்களில் ஒருவரான அந்த முதியவரான கிலாவுசேவித்சை, இது

சம்பந்தமான வரலாற்றின் படிப்பினைகள் பற்றிப் படிக்க வேண்டும்). ஆனால், ''இடதுசாரிக்'' கம்யூனிஸ்டுகள் சக்திகளின் ஒப்புநிலை பற்றிய பிரச்சினையின் உட்பொருளைப் புரிந்து கொண்டதற்கான அடையாளத்தையே காணோம்.

கோட்பாட்டின் மீது நின்று பாதுகாப்புவாதத்தை நாம் எதிர்த்த காலத்தில் சோஷலிசத்தின் நலன்களின் பெயரால் தங்களுடைய தாய்நாட்டைக் ''காப்பாற்ற'' விரும்பியவர்களை நாம் கேலி செய்ததில் நியாயமிருந்தது. பாட்டாளி வர்க்கப் பாதுகாப்புவாதிகளாகும் உரிமையை நாம் பெற்ற போது அந்தப் பிரச்சினை முழுதும் தீவிரமாக மாற்றப்பட்டது. சம்பந்தப்பட்ட வெவ்வேறு சக்திகளை மிகமிகத் திருத்தமாகக் கணிப்பதும், நமது நேச சக்தி (சர்வதேசப் பாட்டாளி வர்க்கம்) நம் உதவிக்கு உரிய காலத்தில் வர முடிவதற்குள்ள வாய்ப்புகளை ஆன மட்டும் எச்சரிக்கையோடு எடைபோட்டுக் கொள்வதும் நம் கடமையாகிவிட்டது. எல்லா நாடுகளிலும் உள்ள தொழிலாளர்களும் ஒன்றுசேர்ந்து விடும் (உள்ளபடியே ஒன்றுசேர்ந்து அதாவது புரட்சியைத் தொடங்கிவிடும்) முன்பு தனது விரோதியை (புரட்சிகரமான பாட்டாளி வர்க்கத்தை) படிப்படியாக ஒழிப்பது மூலதனத்தின் நலன்களுக்கு உகந்ததாகும். சாத்தியமானதை எல்லாம் செய்வது, புரட்சிகரமான தொழிலாளிகளின் படைப் பிரிவுகள் தனியொரு மாபெரும் சர்வதேச சைனியமாக ஒன்றுசேர்ந்து விடும் தருணம் வரை (அல்லது அந்தத் தருணத்திற்குப் ''பிறகு வரை'') நிர்ணயகரமான போராட்டத்தைத் தள்ளிப்போடக் கிடைக்கிற மிகச் சிறு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்திக் கொள்வது நம் நலன்களுக்கு உகந்ததாகும்.

3

உள்நாட்டுத் துறையில் நமது ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' அனுபவிக்கும் துர்ப்பாக்கியங்களைப் பார்ப்போம். தற்கால நிலைமை பற்றிய ஆய்வுரைகளில் பின்வரும் வாதங்களைச் சிரிக்காமல் படிப்பது என்பது கஷ்டமான விஷயம்;

''... சமுதாய உடைமையாக்குவது பற்றிய மிகமிக உறுதியான கொள்கையைப் பின்பற்றினால் மட்டுமே மீதமிருக்கும் உற்பத்திச் சாதனங்களை முறையாகப் பயன்படுத்துவது பற்றிச் சிந்திக்க முடியும்''... ''முதலாளித்துவ வர்க்கத்துக்கும் அதன் குட்டிமுதலாளித்துவ அறிவுஜீவி இயல்பான கையாட்களுக்கும் பணிவதற்காக அல்ல, மாறாக முதலாளித்துவ வர்க்கத்தை முறியடித்துத் துரத்துவதற்காக, நாசவேலையை முற்றாக ஒழிப்பதற்காக....''

அன்புக்குரிய ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'', எவ்வளவு உறுதியோடு இருக்கிறார்கள்; ஆனால் சிறிதேனும் சிந்தனையைக் காட்டவில்லையே!'' ''சமுதாய உடைமையாக்குவதில் மிகமிக உறுதியான கொள்கையைப் பின்பற்றுவது'' என்பதற்கு அர்த்தம் என்ன?

தேசவுடைமையாக்குவது, அல்லது பறிமுதல் செய்வது என்ற பிரச்சினை பற்றி ஒருவன் உறுதியுள்ளவனாகவோ இல்லாதவனாகவோ இருக்கக் கூடும்; ஆனால் விவகாரம் என்னவென்றால், தேசவுடைமை நிலையிலிருந்து, பறிமுதல் நிலையிலிருந்து, சமுதாயவுடைமை நிலைக்கு மாறுவதற்கு அதிகபட்சமான ''மனவுறுதி'' இருந்தால் மட்டும் போதாது. நம் ''இடதுசாரிகளின்'' துரதிருஷ்டம் என்னவெனில், ''சமுதாய உடைமையாக்குவது பற்றிய மிகமிக உறுதியான கொள்கை'' என்கிற வெகுளித்தனமான சிறு பிள்ளைத்தனமான சொற்றொடர் மூலமாகப் பிரச்சினையின் கடும் சிக்கலை, ''தற்கால'' நிலைமையின் கடும் சிக்கலைப் புரிந்துகொள்ளத் தவறியதைக் காட்டிக் கொள்கிறார்கள். நம் ''இடதுசாரிகளின்'' துரதிருஷ்டம் என்னவெனில், ''தற்கால நிலைமையின்'' சாராம்சத்தை—பறிமுதல் செய்கிற நிலையிலிருந்து (இதை நிறைவேற்றுவதற்கு ஓர் அரசியல்வாதியிடம், எல்லாவற்றிற்கும் மேலாக, உறுதி இருக்க வேண்டும்) சமுதாய உடைமை நிலைக்கு (இதை நிறைவேற்றுவதற்கு ஒரு புரட்சிக்காரனிடம் வேறொரு குணம் வேண்டியிருக்கிறது) மாறிச் செல்வதை—தவற விட்டு விட்டார்கள்.

நேற்றைய தினம், சாத்தியமான அளவுக்கு உறுதியுடன் தேசவுடைமையாக்குவதும், பறிமுதல் செய்வதும், முத

லாளித்துவ வர்க்கத்தை வீழ்த்தி நசுக்குவதும், நாசவேலையை ஒழிப்பதும் அத்தருணத்திய பிரதான கடமையாக இருந்தது. இன்றைய தினம் கணக்கிட்டுப் பார்க்க முடியாத அளவுக்கு நாம் தேசவுடைமையாக்கினேம், பறிமுதல் செய்தோம், அடித்து வீழ்த்தினேம், ஒழித்தோம் என்பதை ஒரு குருடன் மட்டுமே பார்க்கத் தவறியிருக்க முடியும். சமுதாய வுடைமை நிலைக்கும் சாதாரணமான பறிமுதலுக்கும் உள்ள வேறுபாடு என்னவெனில் ''உறுதியை'' மட்டும் கொண்டு—கணக்கிட்டு, முறையாக வினியோகம் செய்யும் திறன் இல்லாமலே—பறிமுதலை நிறைவேற்றி விட முடியும், ஆனல் சமுதாயவுடைமையாக்கத்தை இந்தத் திறனில்லாமல் கொண்டுவர முடியாது.

வரலாற்று ரீதியான நமது சேவை என்னவெனில், நேற்றைய தினம் (நாளைக்கும் கூடத்தான்) பறிமுதல் செய்வதிலேயும், முதலாளித்துவ வர்க்கத்தை வீழ்த்துவதிலேயும், நாசவேலையை ஒழிப்பதிலேயும் நாம் உறுதியோடு இருந்தோம். அதைப் பற்றி இப்போது ''தற்கால நிலைமை பற்றிய ஆய்வுரைகளில்'' எழுதுவது சென்ற காலத்தின் மீது பார்வையைப் பதித்துக் கொண்டு எதிர்காலத்துக்கு மாறிச் செல்வதைப் புரிந்து கொள்ளத் தவறுவதாகும்.

''... நாசவேலையை முற்ருக ஒழிப்பது....'' எத்தகைய கடமையைக் கண்டுபிடித்திருக்கிருர்கள்! நம் நாசவேலைக்காரர்கள் போதிய அளவுக்கு ''ஒழிக்கப்பட்டிருக்கிருர்கள்.'' நம்மிடம் இல்லாமலிருப்பது முற்றிலும் வேருென்ருகும்: எந்த நாசவேலைக்காரர்களிடம் வேலை வாங்குவது, எந்த இடத்தில் அவர்களை வைப்பது என்பது பற்றிய ஒரு முறையான கணிப்பு நம்மிடம் இல்லை. உதாரணத்துக்குச் சொன்னல், நமது சேவகத்துக்குள் இப்போது வந்து கொண்டிருக்கும் ஒரு நூறு நாசவேலைக்காரர்களை ஒரு போல்ஷிவிக் தலைவன் அல்லது கண்காணிப்பவன் மேற்பார்வையிடச் செய்வதற்குத் தேவையான முறையிலே நமது சொந்த சக்திகளின் ஒழுங்கமைப்பு நமக்கில்லை. விவகாரங்கள் இவ்வாறு இருக்க, ''சமுதாயவுடைமையாக்குவது பற்றிய மிகமிக உறுதியான கொள்கை'', ''முறியடித்துத் துரத்துவது'', ''முற்ருக

ஒழிப்பது'' போன்ற வாய்ச்சொற்களை வீசுவது இலக்கைத் தவறவிடுவதாகும். முறியடித்துத் துரத்துவது, ஒழிப்பது, முதலியவை மட்டும் சோஷலிசத்துக்குப் போதாது என்பதைப் பார்க்காமலிருப்பது குட்டிமுதலாளித்துவ புரட்சியாளரின் குறிப்பண்பாகும். ஒரு பெரிய உடைமையாளன் மேல் ஆத்திரப்படுகிற சிறு உடைமையாளனுக்கு அது போதும். ஆனால் எந்தப் பாட்டாளி வர்க்கப் புரட்சியாளரும் என்றைக்கும் இப்படிப்பட்ட தவறு செய்ய மாட்டான்.

நாம் மேற்கோள் காட்டிய சொற்கள் அடக்கச்சிரிப்பை உண்டாக்குகின்றன என்று சொன்னால், ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' செய்துள்ள பின்வரும் கண்டுபிடிப்பு அட்டகாசமான வெடிச் சிரிப்பைத்தான் நமக்கு உண்டாக்கும். அவர்கள் கருத்துப்படி, ''போல்ஷிவிக் வலதுசாரித் திரிபின்'' கீழ் சோவியத் குடியரசை ''அரசு முதலாளித்துவத்தை நோக்கிச் செல்கிற பரிணும வளர்ச்சி'' பயமுறுத்திக் கொண்டிருக்கிறதாம். இந்தத் தடவை அவர்கள் நம்மை உண்மையிலேயே பயப்படுத்தி விட்டார்கள்! எவ்வளவு உற்சாகத்தோடு இந்த ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' இந்தப் பயமுறுத்தலான கண்டுபிடிப்பைத் தங்களுடைய ஆய்வுரைகளிலும் கட்டுரைகளிலும் திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள்....

நம் சோவியத் குடியரசில் உள்ள இன்றைய விவகார நிலைமைகளோடு ஒப்பிடும்போது அரசு முதலாளித்துவம் ஒரு படி முன்னேற்றம் என்று அவர்கள் புத்தியில் படவே இல்லை. சுமார் ஆறு மாத காலத்தில் நம் குடியரசில் அரசு முதலாளித்துவம் நிலைபெற்று விடுமேயானால் அது ஒரு பெரிய வெற்றியாகும், ஓர் ஆண்டுக்குள் சோஷலிசம் நிரந்தரமான உறுதியான பிடிப்புப் பெற்று நம் நாட்டில் வெல்லற்கரியதாக ஆகிவிடுவதற்கு அது ஒரு நிச்சயமான உத்தரவாதமாகும்.

எவ்வளவு உன்னதமான ஆத்திரத்துடன் ஓர் ''இடதுசாரிக் கம்யூனிஸ்டு'' இந்தச் சொற்களிடமிருந்து விலகி ஓடுவான் என்பதையும், ''போல்ஷிவிக் வலதுசாரித் திரிபு'' பற்றித் தொழிலாளர்களிடம் எவ்வளவு ''அழிபாதகமான

விமர்சனம்'' செய்வான் என்பதையும் என்னுல் கற்பனே செய்ய முடியும். என்ன இது! சோவியத் சோஷலிசக் குடியரசில் அரசு முதலாளித்துவத்துக்கு மாறிச் செல்வது ஒரு படிமுன் னேற்றமா?... இது சோஷலிசத்துக்குத் துரோகமாகாதா?

''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளது'' பொருளாதாரப் பிழை யின் ஆணிவேர் இங்குதான் இருக்கிறது. எனவேதான் இவ் விஷயத்தை அதிக விவரமாக நாம் கவனிக்க வேண்டும்.

முதலாவதாக, முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத் துக்குப் போகிற எந்த வகைப்பட்ட மாற்றநிலே நமது நாட்டை சோவியத்துகளின் சோஷலிஸ்டுக் குடியரசு என்று அழைக்க நமக்கு உரிமையும் முகாந்தரங்களும் தருகிறது என்பதை ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' புரிந்து கொள்ள வில்லே.

இரண்டாவதாக, நம் நாட்டில் குட்டிமுதலாளித்துவ அம்சமே சோஷலிசத்தின் பிரதான எதிரி என்று அங்கீகரிக் காததைக் கொண்டுதான் துல்லியமாயும் அவர்கள் தங்களுடைய குட்டிமுதலாளித்துவ மனேபாவத்தை வெளிப்படுத்து கிருர்கள்.

மூன்ருவதாக, ''அரசு முதலாளித்துவம்'' என்று பூச் சாண்டி காட்டுவதின் மூலமாக, சோவியத் அரசு பொருளா தார ரீதியிலே முதலாளித்துவ அரசிடமிருந்து வேறுபட்டது என்று புரிந்துகொள்ளத் தவறுவதைக் காட்டிக் கொள்கிருர் கள்.

இந்த மூன்று விஷயங்களேயும் பரிசீலிப்போம்.

ருஷ்யாவின் பொருளாதார அமைப்பு பற்றிய பிரச்சினே யைப் பயில்வதில் யாருமே அதன் மாறிக் கொண்டிருக்கிற தன்மையை மறுக்கவில்லே என்று நினேக்கிறேன். அல்லது சோவியத் சோஷலிசக் குடியரசு என்கிற தொடர் சோஷ லிசத்துக்குக் கொண்டு போகும் மாற்ற நிலேயைச் சாதிப் பதில் சோவியத் ஆட்சிக்குள்ள உறுதியை உணர்த்துகிறதே அன்றி, புதிய பொருளாதார அமைப்பை ஒரு சோஷலிஸ்டு அமைப்பாக அங்கீகரிப்பதையல்ல, என்பதையும் எந்தக் கம் யூனிஸ்டும் மறுக்கவில்லே என்றும் நினேக்கிறேன்.

ஆனுல் மாற்றம் என்கிற சொல்லுக்குப் பொருள் என்ன?

பொருளாதாரத்தோடு பொருத்திப் பேசும் போது, சோஷலிசம் முதலாளித்துவம் ஆகிய இரண்டின் அம்சங்களும், துண்டுகளும், துணுக்குகளும் இன்றைய அமைப்பில் அடங்கியுள்ளன என்பதுதானே இதற்குப் பொருள்? இதன் பொருள் இது தான் என்று எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். ஆனால் இதை ஒப்புக்கொள்கிறவர்கள் எல்லோரும் இன்று ருஷ்யாவிலுள்ள பல்வேறு சமுதாயப் பொருளாதாரக் கட்டமைப்புக்களில் எதார்த்தத்தில் என்னென்ன அம்சங்கள் அடங்கியுள்ளன என்று சிந்திக்க முயல்வதில்லை. இதுவே பிரச்சினையின் அறுதிக் கூறுகும்.

இந்த அம்சங்களை விவரிப்போம்:

1) தந்தைவழி, அதாவது கணிச அளவுக்கு இயற்கை வழிப்பட்ட விவசாயியின் பயிர்த்தொழில் அமைப்பு;

2) சிறு வீதப் பண்ட உற்பத்தி (தாங்கள் சாகுபடி செய்யும் தானியத்தை விற்கிற விவசாயிகளில் பெரும்பான்மையினர் இதில் அடங்குவார்கள்);

3) தனியார் முதலாளித்துவம்;

4) அரசு முதலாளித்துவம்;

5) சோஷலிசம்.

ருஷ்யா எவ்வளவோ பெரிதாக, மிகவும் பல்வகைப்பட்டதாக இருக்கிறதனாலே இந்த வெவ்வேறான சமுதாய-பொருளாதாரக் கட்டமைப்புக்களின் மாதிரிகள் எல்லாம் கலந்து நிலவுகின்றன. இதுவே நிலைமையின் பிரத்தியேக இயல்பாக அமைந்துள்ளது.

எத்தகைய அம்சங்கள் மேலோங்கி இருக்கின்றன? என்ற கேள்வி எழுகிறது. சிறு விவசாயிகளைப் பெருமளவு கொண்ட நாட்டில் குட்டி முதலாளித்துவ அம்சமே மேலோங்கியிருக்கும், அது மேலோங்கியிருந்தே தீர வேண்டும். ஏனெனில் நிலத்தில் பாடுபடுகிறவர்களில் மிகப் பெரும்பான்மையினர் சிறு வீதப் பண்ட உற்பத்தியாளர்கள். நமது அரசு முதலாளித்துவத்தின் மேல் ஓடு (தானிய ஏகபோகம், அரசுக் கட்டுப்பாட்டிலுள்ள தொழிலதிபர்கள், வர்த்தகர்கள், முதலாளித்துவ கூட்டுறவாளர்கள்) ஒரு சமயம் ஓரிடத்திலும் மறு சமயம் வேறொரு இடத்திலும் கொள்ளை லாபக்காரர்களால்

துளைக்கப்படுகிறது; கொள்ளை லாபமடிப்பதற்குப் பிரதானப் பொருளாக இருப்பது தானியமே.

இந்தக் களத்திலேதான் பிரதானமான போராட்டம் நடத்தப்பட்டு வருகிறது. ''அரசு முதலாளித்துவம்'' போன்ற பொருளாதார வகைப் பிரிவுகளின் உருவில் நாம் பேசுவதானல், எந்த அம்சங்களுக்கிடையே இந்தப் போராட்டம் நடத்தப் பெறுகிறது? நான் இப்போது விவரித்த வரிசையில் நான்காவதற்கும் ஐந்தாவதற்கும் இடையிலா? நிச்சயமாக இல்லை. சோஷலிசத்தோடு சண்டை போட்டுக் கொண்டிருப்பது அரசு முதலாளித்துவமல்ல; மாறுக, குட்டிமுதலாளிகளும் தனியார் முதலாளித்துவமும் ஒருங்கே சேர்ந்து அரசு முதலாளித்துவம், சோஷலிசம் ஆகிய இரண்டையும் எதிர்த்துச் சண்டையிட்டு வருகின்றன. ஒவ்வொரு வகைப்பட்ட அரசுத் தலையீட்டையும், கணக்கு பதிவையும், கண்காணிப்பையும்—அது அரசு முதலாளித்துவமாக இருந்தாலும் சரியே, அரசு சோஷலிசமாக இருந்தாலும் சரியே—குட்டிமுதலாளிகள் எதிர்க்கிறுர்கள். இது எதார்த்தத்தின் முற்றுன, கேள்விக்கிடமற்ற உண்மையாகும்; இதைப் புரிந்து கொள்ளாததுதான் ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளின்'' பொருளாதார பிழையின் வேர் ஆகும். கொள்ளைலாபக்காரன், வியாபாரக் கொள்ளைக்காரன், அரசு ஏகபோகத்தைச் சீர்குலைப்பவன்—இவர்கள்தான் நமது பிரதான ''உள்நாட்டு'' விரோதிகள், சோவியத் ஆட்சியின் பொருளாதார நடவடிக்கைகளின் விரோதிகள். ஒரு நூற்று இருபத்து ஐந்து ஆண்டுகளுக்கு முன், மிகமிக ஆர்வமுள்ள, நேர்மையான புரட்சியாளர்களாகிய பிரெஞ்சுக் குட்டிமுதலாளிகள் ''பொறுக்கியெடுத்த'' சிலரைத் தூக்கிலிட்டுக் கொன்றதன் மூலமாகவும் இடி முழக்கம் போன்ற தாக்குரைகள் மூலமாகவும் கொள்ளைலாபக்காரனை நசுக்க முயன்றது மன்னிக்கக் கூடியதாய் இருந்திருக்கலாம். ஆனல் இன்று, இந்தப் பிரச்சினை மீது சில இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள் காட்டுகிற வெறும் சொற்கவர்ச்சிப் போக்கு ஒவ்வொரு அரசியல் உணர்வுள்ள புரட்சியாளரிடமும் வெறுப்பையும் எதிர்ப்பு உணர்ச்சியையும் தவிர, வேறெதையும் எழுப்ப முடியாது. கொள்ளை

லாபத்தனத்தின் பொருளாதார அடிப்படை, ருஷ்யாவில் அசாதாரணமான அளவுக்குப் பரவலாயிருக்கிற சிறு உடைமையாளர்களும், தனியார் முதலாளித்துவமும்—ஒவ்வொரு குட்டிமுதலாளியும் அதன் ஏஜெண்டுதான்—ஆகிய இரண்டுமேயாகும் என்பதை நாம் நன்ருக அறிவோம். இந்தக் குட்டி முதலாளித்துவ பன்தலைப்பாம்பின் லட்சக்கணக்கான கொடுக்குகள் அடிக்கடி தொழிலாளர்களின் பல்வேறு பகுதிகளைச் சூழ்ந்து கவ்விக் கொள்கின்றன என்றும், அரசு ஏகபோகத்திற்குப் பதிலாகக் கொள்ளைலாபத்தனம் நமது சமுதாய-பொருளாதார அமைப்பின் ஒவ்வொரு உறுப்பமைவிலும் முட்டிக் கொண்டு வெளிப்படுகிறது என்றும், நாம் அறிவோம்.

இதைப் பார்க்கத் தவறுகிறவர்கள் தங்களுடைய குருட்டுத்தனத்தால் தாங்கள் குட்டிமுதலாளித்துவக் காழ்ப்புக்களின் அடிமைகள் என்று காட்டிக் கொள்கிருர்கள். ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' இப்படித்தான் இருக்கிருர்கள். அவர்கள், சொல்லளவிலே (மிக நேர்மையுடன் அப்படித்தான் அவர்கள் நம்புகிருர்கள்) குட்டிமுதலாளிகளின் ஈவிரக்கமற்ற எதிரிகளே, ஆனுல் செயலளவிலோ எனில், அவர்கள் குட்டிமுதலாளித்துவ வர்க்கத்துக்கு மட்டுமே உதவுகிருர்கள்; ஜனத்தொகையின் இந்தப் பகுதிக்கு மட்டும் சேவை செய்கிருர்கள்; அதன் கருத்தை மட்டுமே வெளியிடுகிருர்கள்—''அரசு முதலாளித்துவத்தை'' எதிர்த்து போராடியபடி—1918ல் ஏப்ரலில்!!—மெய் இலக்கில் இருந்து பெருமளவு திறம்பிவிட்டார்கள்!

''நேர்மையான'' வழியிலேயும், குறிப்பாக, நேர்மையற்ற முறையிலேயும் யுத்த காலத்திலே சம்பாதித்த சில ஆயிரம் ரூபிள்களை குட்டிமுதலாளிகள் பத்திரப்படுத்திக் கொண்டுள்ளனர். கொள்ளைலாபத்துக்கும் தனியார் முதலாளித்துவத்துக்கும் அடிப்படையாக விளங்குகிற தன்மைக் குறிப்பான பொருளாதார வடிவின் மாதிரியாகும் இவை. பணம் என்பது அதை வைத்திருப்பவர் சமுதாயச் செல்வத்தைப் பெறுவதற்கு உரிமையளிக்கும் ஒரு சான்றே; பல லட்சக் கணக்கிலே இருக்கிற சிறு உடைமையாளர்கள் இந்தச்

சான்றை இறுகப் பிடித்து ''அரசிடமிருந்து'' இதை ஒளித்து வைத்திருக்கிறார்கள்; அவர்கள் சோஷலிசத்திலோ அல்லது கம்யூனிசத்திலோ நம்பிக்கையில்லாதவர்கள், பாட்டாளி வர்க்கப் புயல் வீசி ஓயும் வரை ''நின்று காத்திருக்கிறார்கள்.'' ஒன்று, நாம் குட்டிமுதலாளிகளை நமது கண்காணிப்புக்கும் கணக்கு பதிவுக்கும் கீழ்ப்படுத்த வேண்டும் (வர்க்க உணர்வுள்ள பாட்டாளிகளின் முன்னணிப் படையைச் சூழ்ந்து ஏழைகளை, அதாவது ஜனத்தொகையில் பெரும்பான்மையினரை, அல்லது அரைப் பாட்டாளிகளை, திரட்டி ஒழுங்கமைத்தால் இதை நாம் செய்ய முடியும்) அல்லது, சிறு சொத்து உடைமை என்கிற இத்தகைய மண்ணிலிருந்து தோன்றிய நெப்போலியன்களும் கவெனியாக்குகளும் புரட்சியைத் தூக்கியெறிந்தது போலவே, நிச்சயமாகவும், தவிர்க்க முடியாத வகையிலும் அவர்கள் நம்முடைய தொழிலாளர்களின் ஆட்சி அதிகாரத்தைத் தூக்கியெறிவார்கள். இதுதான் பிரச்சினை. ''உழைக்கும்'' விவசாயிகளைப் பற்றிய தங்களுடைய வெற்றுச் சொற்களின் பனிமூட்டத்தினூடே இருந்துகொண்டு இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள் மட்டுமே வெளிப்படையான, பச்சையான இந்த உண்மையைப் பார்க்கத் தவறுகிறார்கள், ஆனால் சொல்லடுக்கு ஜாலம் செய்யும் இந்த இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களை யார் மதிக்கிறார்கள்?

ஆயிரக் கணக்கில் பணத்தைப் பதுக்கும் குட்டிமுதலாளி, அரசு முதலாளித்துவத்தின் விரோதியாவான். ஏழை மக்களுக்கு எதிராக, எல்லாவித அரசுக் கண்காணிப்புக்கும் எதிராக தன்னுடைய ஆயிரங்களை அவன் தனக்காக மட்டுமே பயன்படுத்த விரும்புகிறான். பலப்பல கோடிகளாகத் தொகை கூடும் இந்த ஆயிரங்களின் ஒட்டு மொத்தமே, கொள்ளை லாபத்தனத்துக்கு அடிப்படையாகிறது; அது நமது சோஷலிச நிர்மாணத்தைப் பலவீனப்படுத்துகிறது. 1,000க்குச் சமமான மதிப்புகளை ஒரு சில நாட்களில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள தொழிலாளர்கள் உற்பத்தி செய்வதாக வைத்துக்கொள்வோம். பிறகு, சின்னத்தனமான கொள்ளை லாபம் மூலமும், பலவிதமான கையாடல்களாலும், சிறு உடைமை

யாளர்கள் சோவியத் அரசாணைகளையும் விதிகளையும் ஏய்ப்ப தாலும் இந்த மொத்தத்தில் 200 மறைந்துவிட்டது என்றும் வைத்துக்கொள்வோம். அந்த 1,000ல் 300ஐக் கொடுப் பதின் மூலமாக இன்னமும் மேலான ஒழுங்கும் ஒழுங்கமைப் பும் பெற முடியுமாயின், தான் 200க்குப் பதிலாக 300ஐ விரும் பிக் கொடுப்பதாக ஒவ்வொரு வர்க்க உணர்வுள்ள தொழிலா ளியும் சொல்வான்; ஏனெனில் பின்னுல்—ஒழுங்கும் ஒழுங் கமைப்பும் நிலைநிறுத்தப்பெற்றதும், அரசு ஏகபோகத்தைக் குட்டிமுதலாளி தகர்ப்பதை முற்றுக ஒழித்ததும்—இந்தக் ''கப்பத்தை'' 100 ஆகவோ 50 ஆகவோ (எடுத்துக் காட் டாகச் சொல்கிறேன்) குறைத்து விடுவது சோவியத் ஆட்சி யின் கீழ் மிகச் சுலபமாகும்.

இந்த எளிய எண் ரூபத்திலுள்ள உதாரணவிளக்கம்— எல்லோருக்கும் புரிய வேண்டுமென்பதற்காக நான் மிகவும் எளிதாக்கி இருக்கிறேன்—அரசு முதலாளித்துவத்துக்கும் சோஷலிசத்துக்கும் உள்ள தற்போதைய தொடர் பாட்டை விளக்குகிறது. வேறு எதற்கும் ஒரு கோபெக்கு கூடத் தராமல், இந்த ஆயிரங்கள் அனைத்தையும் சோஷலிஸ்ட் நோக் கங்களுக்கு மட்டுமே ''எடுத்துக் கொள்ளுவதற்கு'' ஏற்ற சட்டவாய்ப்புடைய அரசாங்க அதிகாரம் தொழிலாளர்கள் கைகளில் இருக்கிறது. எதார்த்தத்தில் தொழிலாளர் கை களுக்கு ஆட்சி அதிகாரம் மாறியிருப்பதைச் சார்ந்துள்ள இந்தச் சட்டவாய்ப்பு சோஷலிசத்தின் ஓர் அம்சம் ஆகும்.

ஆனால், பல வழிகளிலே, சிறு உடைமையாள மற்றும் தனியார் முதலாளித்துவ அம்சம் இந்தச் சட்ட நிலையைப் பலவீனப்படுத்துகிறது; கொள்ளை லாபமடிப்பதை புகுத்து கிறது; சோவியத் அரசாணைகளை நிறைவேற்றுவதற்குத் தடங்கல் செய்கிறது. நாம் இன்று கொடுப்பதைவிட அதி கமாகக் கொடுத்த போதிலும்கூட (இதைப் பளிச்செனத் தெளி வாக்கும் பொருட்டு வேண்டுமென்றே இப்படிப்பட்ட எண் ரூபமுள்ள உதாரணத்தை எடுத்துக் கொண்டேன்) அரசு முதலாளித்துவம் ஒரு மிகப் பெரிய முன்னேற்றப்படியாக இருக்கும்; ஏனெனில் ''பாடம் கற்பதன்'' பொருட்டு அதிக விலை கொடுப்பது லாபகரமானது; தொழிலாளர்களுக்குப்

பயனுள்ளது; காரணம், ஒழுங்கின்மை, பொருளாதார நாசம், கண்டிப்பின்மை ஆகியவற்றை எதிர்த்து வெல்வது தான் மிகமிக முக்கியமான விஷயம்; சிறு உடைமையின் அராஜகம் நீடிப்பதானது மிகப் பெரிய, மிகக்கடுமையான அபாயமாகும்; அது நிச்சயமாக நமக்குக் கேடாக அமையும் (அதை நாம் வெல்லா விட்டால்). ஆனால் அரசு முதலாளித் துவத்துக்கு இன்னும் அதிக அளவில் கப்பம் கொடுப்பதால் நாம் நாசமாக மாட்டோம். அது மட்டுமல்ல, நம்மை நிச்சயமான பாதையிலே சோஷலிசத்துக்குக் கொண்டு போய் விடும். சிறு உடைமையின் அராஜகத்திலிருந்து அரசு அமைப்பை எப்படிப் பாதுகாப்பது என்று தொழிலாளி வர்க்கம் கற்றுக் கொள்ளும் பொழுது, பெருவீத உற்பத்தியை தேச அளவில் அரசு முதலாளித்துவப் பாதையிலே அமைக்க அது கற்றுக் கொள்ளும் பொழுது, அது தன் கையில் (இந்தச் சொல்லை நான் உபயோகிக்கக் கூடுமானால்) எல்லாத் துருப்புச் சீட்டுகளையும் வைத்திருக்கும், சோஷலிசத்தைக் கெட்டிப்படுத்துவது உறுதியாகிவிடும்.

முதலாவதாக, பொருளாதார ரீதியிலே, நம்முடைய இன்றைய பொருளாதார அமைப்பை விட அளவிட முடியாத அளவுக்கு எவ்வளவோ மேலானது அரசு முதலாளித்துவம்.

இரண்டாவதாக, இதில் சோவியத் ஆட்சிக்குப் பயங்கர மானதாக ஒன்றுமில்லை. ஏனெனில் சோவியத் அரசு என்பது தொழிலாளர்களின், ஏழை மக்களின் ஆட்சி அதிகாரம் உறுதிப்படுத்தப் பெற்றுள்ள ஓர் அரசாகும். ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' இந்தக் கேள்விக்கிடமற்ற உண்மைகளைப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டார்கள்; பொதுவாகவே அரசியல் பொருளாதாரத்தைப் பற்றிய எந்தக் கருத்துக்களையும் மண்டையிலே ஏற்றிக்கொள்ள முடியாத ஓர் ''இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்'' இவற்றை என்றைக்கும் புரிந்து கொள்ள மாட்டார்; ஆனால் அவற்றை ஒவ்வொரு மார்க்சியவாதியும் ஒப்புக்கொண்டே தீர வேண்டும். ஓர் இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளரோடு விவாதிப்பதிலும் கூடப் பயனில்லை. ஒரு வாயாடியின் ''வெறுப்பூட்டும் உதாரணமாக'' அவனைச் சுட்டிக் காட்டுவதே போதுமானது. ஆனால்

''இடதுசாரிக் கம்யூனிஸ்டோடு'' விவாதித்தாக வேண்டும்; ஏனெனில் தவறு செய்பவன் மார்க்சியவாதி, அவனுடைய தவறைப் பகுத்தாராய்வது தொழிலாளி வர்க்கம் உண்மை யான பாதையைக் கண்டு செல்வதற்கு உதவும்.

4

விஷயத்தை இன்னும் தெளிவாக்க, நாம் அரசு முதலா ளித்துவத்தின் மிகவும் திட்டவட்டமான ஓர் உதாரணத்தை முதலில் எடுத்துக் கொள்வோம். இந்த உதாரணம் எது என்று எல்லோருக்கும் தெரியும். அது ஜெர்மனிதான். இங்கே, ஜங்கர் முதலாளித்துவ ஏகாதிபத்தியத்துக்குக் கீழ்ப் படுத்தப்பட்டுள்ள நவீன பெருவீத முதலாளித்துவப் பொறி இயலின் திட்டமிட்ட ஒழுங்கமைப்பின் ''மிகச் செவ்வையான வடிவத்தைப்'' பார்க்கிறோம். கொட்டை எழுத்துக்களில் உள்ள சொற்களை அடித்து விடுங்கள், இராணுவ, ஜங்கர்,[41] முதலாளித்துவ, ஏகாதிபத்திய அரசுக்குப் பதிலாக இன்னொரு அரசை வையுங்கள் ஆனால், வேறொரு சமுதாய மாதிரியைச் சேர்ந்த, வேறொரு வர்க்க உள்ளடக்கமுள்ள அரசை, ஒரு சோவியத் அரசை, அதாவது ஒரு பாட்டாளி வர்க்க அரசை வையுங்கள்; சோஷலிசத்திற்கு வேண்டிய நிலைமைகளின் ஆக மொத்தம் உங்களுக்குக் கிடைத்துவிடும்.

நவீன விஞ்ஞானத்தில் கடைசியாக வந்த கண்டுபிடிப்பு களின் அடிப்படையில் அமைந்த பெருவீத முதலாளித்துவப் பொறி இயல் இல்லாமல் சோஷலிசத்தைப் பற்றிச் சிந்திக் கவே முடியாது. உற்பத்தியிலும் வினியோகத்திலும் ஒன்றி ணைக்கப்பட்ட தரத்தை மிகமிகக் கண்டிப்புடன் பின்பற்றி வருமாறு பல கோடிக்கணக்கான மக்களை வைக்கிற திட்ட மிட்ட அரசு அமைப்பு இல்லாமல் அதைப் பற்றிச் சிந்திக் கவே முடியாது. இதைப் பற்றி மார்க்சியவாதிகளாகிய நாம் எப்போதும் பேசி வந்திருக்கிறோம். இதைக்கூடப் புரிந்து கொள்ளாதவர்களோடு (அராஜகவாதிகளும் இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களில் சரிபாதிப் பேரும்) பேசி, இரண்டு வினாடிகள் கூட வீணாக்குவது பயனற்ற வேலை.

அதே நேரத்தில் பாட்டாளி வர்க்கத்தின் அரசாங்க ஆதிக்கம் இல்லாமல் சோஷலிசத்தைப் பற்றிச் சிந்திக்கவே முடியாது. இதுவும் அரிச்சுவடியே. மேலும், வரலாறு (''முழுமையான'' சோஷலிசத்தை மென்மையாக, மிருதுவாக, சுலபமாக, எளிதாக இது கொண்டுவந்து விடும் என்று முதல் தரமான மென்ஷிவிக் முட்டாள்கள் தவிர வேறு யாரும் எதிர்பார்க்கவில்லை) சர்வதேச ஏகாதிபத்தியத்தின் முட்டை ஓட்டுக்குள் எதிர்காலத்திய இரண்டு கோழிக்குஞ்சுகள் இருக்கிற மாதிரி ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாது அக்கம் பக்கமாக இருந்து கொண்டிருக்கும் சோஷலிசத்தின் இரண்டு பாதிகளை 1918ல் பெற்றெடுத்திருக்கிற அளவுக்கு ஒரு விநோதமான போக்கிலே போயுள்ளது. 1918ல் ஜெர்மனியும் ருஷ்யாவும், ஒரு பக்கத்தில், சோஷலிசத்திற்குரிய பொருளாதார, உற்பத்தி ரீதியான, சமுதாய-பொருளாதார நிலைமைகளையும், இன்னொரு பக்கத்தில், அதற்குரிய அரசியல் நிலைமைகளையும் பொருளாயத முறையில் நிறைவேற்றம் செய்த தன் எடுப்பான உருவகம் ஆகும்.

ஜெர்மனியில் நிகழும் ஒரு வெற்றிகரமான பாட்டாளி வர்க்கப் புரட்சி எந்த விதமான ஏகாதிபத்திய முட்டையோட்டையும் உடனடியாக, வெகு சுலபமாக உடைத்தெறியும் (அந்த முட்டை ஓடு, துரதிர்ஷ்டவசமாக, மிக நேர்த்தியான உருக்கிலே செய்யப்பட்டது; எனவே அதை எந்த... கோழிக்குஞ்சின் முயற்சிகளாலும் உடைக்க முடியாது), எவ்விதக் கஷ்டங்களுமில்லாமல், அல்லது கொஞ்சக் கஷ்டங்களுடன்—''கஷ்டம்'' எனும் போது மிகக் குறுகிய அற்பவாத அர்த்தத்தில் அல்லாமல் உலக வரலாற்று அளவிலே கஷ்டமானது என்கிற பொருளில் கொண்டால்—உலக சோஷலிசத்தின் வெற்றியை நிச்சயமாகச் சாதிக்கும்.

ஜெர்மனியில் புரட்சி ''பிறப்பது'' இன்னமும் மெதுவாகவே இருந்து வருகையில், ஜெர்மானியர்களின் அரசு முதலாளித்துவத்தைப் பயில்வதும், அதைப் பார்த்துப் பின்பற்றுவதில் சகல முயற்சியையும் செய்வதும், அதை பார்த்துப் பின்பற்றுவதைத் துரிதப்படுத்துவதற்கு சர்வாதிகார வழிமுறைகளை மேற்கொள்ளப் பின்வாங்காமலிருப்பதும்

நம் கடமையாகும். அநாகரிகத்தை எதிர்த்துப் போராட அநாகரிகமான வழிமுறைகளைப் பயன்படுத்தத் தயங்காமல், அநாகரிக நிலையிலிருந்த ருஷ்யா மேற்கத்தியப் பண்பாட்டைப் பார்த்துப் பின்பற்றுவதைப் பீட்டர் மன்னன் துரிதப் படுத்தியதை விட நாம் அதிகமாகத் துரிதப்படுத்த வேண்டும். நார்ட்ஸீஸஸ் போன்ற சிந்தனைகளில் ஆழ்ந்து ஜெர்மன் ஏகாதிபத்தியத்திடமிருந்து ''பாடம் கற்றுக்கொள்வது'' புரட்சியாளர்களாகிய நமக்குத் தகுதியல்ல என்று சொல்கிற அராஜகவாதிகளும் இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களும் இருப்பார்களேயானல் (மத்திய நிர்வாகக் கமிட்டிக்கு முன் கரேலின், கே ஆகியோரின் பேச்சுக்கள் தற்செயலாக நினைவுக்கு வந்தன), நாம் பதிலுக்குப் பின்வருமாறு சொல்ல முடியும்: இவர்களைப் பொருட்படுத்துகிற புரட்சி மீட்க முடியாதபடி அழிவுறும் (அழியத் தகுதியுடையது மாகும்).

தற்சமயம், ருஷ்யாவில் குட்டிமுதலாளித்துவ வகைப்பட்டதான முதலாளித்துவம் மேலோங்குகிறது. அதிலிருந்து ஒரேயொரு பாதைதான் பெருவீத அரசு முதலாளித்துவம், சோஷலிசம் ஆகிய இரண்டுக்கும் ''தேசிய ரீதியான கணக்குப் பதிவு, உற்பத்தியையும் வினியோகத்தையும் கண்காணித்தல்'' எனப்படும் ஒரே இடைக்கால நிலையத்தின் மூலமாக இட்டுச் செல்கிறது. இதைப் புரிந்து கொள்ளத் தவறுகிறவர்கள் ஒரு மன்னிக்க முடியாத பொருளாதாரப் பிழையினைச் செய்கிருர்கள்: ஒன்ரு, அவர்கள் வாழ்க்கையின் மெய் நடப்புக்களை அறியவில்லை, உள்ளபடியே நிலவுவதைப் பார்க்கவில்லை, உண்மையை துணிவுடன் பரிசீலிக்க இயலாமலிருக்கிருர்கள்; அல்லது, அவர்கள் கருத்தியலான முறையில் ''முதலாளித்துவத்தை'' ''சோஷலிசத்துடன்'' ஒப்புநோக்குவதோடு நிறுத்திக் கொள்கிருர்கள், நம் நாட்டில் ஏற்பட்டு வருகிற மாற்றத்தின் திட்டவட்டமான வடிவங்களையும் கட்டங்களையும் பயிலத் தவறுகிருர்கள். தத்துவரீதியான இதே பிழைதான் நோவயா ஷீஸ்ன், வ்பெரியோத் முகாமைச் சேர்ந்த தலைசிறந்த நபர்களை வழிதவறச் செய்தது என்று இடைமுறிப்பாக இங்கு சொல்லலாம். இவர்களில் மிக

மோசமானவர்களும் சாதாரணப் பேர்வழிகளும் தங்களுடைய முட்டாள் தனத்தாலும் முதுகெலும்பற்ற தன்மையாலும், தாங்கள் பயபக்தியோடு பார்க்கிற முதலாளித்துவ வர்க்கத்தின் பின்னே ஒட்டிக்கொண்டு செல்கிறார்கள். சோஷலிசத்தின் போதகர்கள், முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறிச் செல்வதின் ஒரு முழுக் காலகட்டத்தைப் பற்றிப் பேசியதும் புதிய சமுதாயத்தின் ''நீடித்த பேறுகால வேதனைகளைப்'' பற்றி வலியுறுத்தியதும் காரணம் இல்லாமல் அல்ல என்பதை அவர்களில் தலைசிறந்தவர்கள் புரிந்து கொள்ளத் தவறியிருக்கிறார்கள். மேலும், இந்தப் புதிய சமுதாயம் என்பதும் ஒரு கருத்தாக்கமே; அது ஏதாவதொரு சோஷலிஸ்டு அரசை உருவாக்க தொடர்ச்சியான, பல்வகையான, செவ்வைப் பாடற்ற திட்டவட்டமான முயற்சிகளைக் கடந்து செல்வதன் மூலமாகத்தான் தோன்ற முடியும்.

அரசு முதலாளித்துவத்துக்கும் சோஷலிசத்துக்கும் பொதுவாயுள்ள செயற்களத்தை (தேசியரீதியான கணக்குப் பதிவு, கண்காணித்தல்) கடந்து செல்லாமல் இன்றிருக்கிற பொருளாதார நிலைமையிலிருந்து ருஷ்யா முன்னேற முடியாது என்ற காரணத்தினாலேதான் ''அரசு முதலாளித்துவத்தை நோக்கிப் போகிற பரிணாம முறை'' என்கிறதைக் கொண்டு (கம்யூனிஸ்ட், இதழ் 1, பக்கம் 8, பத்தி 1) தங்களையும் பிறரையும் பயமுறுத்தும் முயற்சி தத்துவரீதியிலே முற்றான அபத்தமாகும். இது, ''பரிணாம முறையின்'' உண்மையான பாதையை விட்டுச் சிந்தனைகளை ''வேறெங்கோ'' அலைந்து திரிய விடுவதாகும்; அந்தப் பாதை எது என்று புரிந்துகொள்ளத் தவறுவதாகும். நடைமுறையிலே, அது நம்மைச் சிறு உடைமை முதலாளித்துவத்தை நோக்கிப் பின்னுக்கு இழுப்பதற்குச் சமமாகும்.

அரசு முதலாளித்துவத்தைப் பற்றி இந்த ''உயர்வான'' மதிப்பீடை, நான் கொடுத்திருப்பது இது முதல் தடவை அல்ல என்றும், போல்ஷிவிக்குகள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முன்பே அதைக் கொடுத்தேன் என்றும் வாசகர்களை நம்பச் செய்வதற்காக நிகழவிருக்கும் நெருங்கி வரும் பெரும் விபத்து, அதை எதிர்த்துப் போராடுவது எப்படி

என்கிற 1917, செப்டம்பரில் எழுதிய என்னுடைய சிறு நூலிலிருந்து பின்வரும் பகுதியை மேற்கோள் காட்ட உரிமை எடுத்துக் கொள்கிறேன்:

''...இப்போது ஜங்கர்-முதலாளித்துவ அரசுக்குப் பதில், நிலவுடைமையாளர்-முதலாளிகள் அரசுக்குப் பதில் ஒரு புரட்சிகர-ஜனநாயக அரசை மாற்றீடு செய்ய முயல்வோம். அந்த அரசு புரட்சிகரமான வழியில் எல்லாத் தனி உரிமைகளையும் ஒழிப்பதாயும், புரட்சிகரமான வழியில் பரிபூரணமான ஜனநாயகத்தைக் கொண்டுவர அஞ்சாததாகவும் இருக்க வேண்டும். மெய்யாகவே ஒரு புரட்சிகர-ஜனநாயக அரசு இருக்குமானால், அரசு-ஏகபோக முதலாளித்துவம் தான், சோஷலிசத்தின் திசையிலான ஒரு படியாக, ஒரு படிக்கும் மேற்பட்டதாக உறுதியாகவும் தவிர்க்க முடியாதபடியும் இருப்பதை உணர்த்தும்!

''... ஏனெனில் அரசு-முதலாளித்துவ ஏகபோகத்திலிருந்து எடுக்கப்படும் அடுத்த முன்னேற்றப் படியே சோஷலிசம்.

''... அரசு-ஏகபோக முதலாளித்துவம் சோஷலிசத்திற்கான முழுமையான பொருளாயதத் தயாரிப்பாகும், சோஷலிசத்தின் நுழைவாயிலாகும், வரலாற்று ஏணியில் ஒரு படியாகும். இந்தப் படிக்கும் சோஷலிசம் என்றழைக்கப்படும் படிக்கும் இடையே இடைப்பட்ட படிகள் எதுவும் கிடையாது'' (பக்கங்கள் 27, 28)*.

இது கேரென்ஸ்கி அதிகாரத்தில் இருந்த போது எழுதப்பட்டது என்பதையும், நாம் விவாதிப்பது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைப் பற்றியல்ல, சோஷலிஸ்டு அரசு பற்றியல்ல, ''புரட்சிகரமான-ஜனநாயக'' அரசு பற்றியே என்பதையும் தயவு செய்து கவனியுங்கள். இந்த அரசியல் ஏணியிலே நாம் எவ்வளவுக்கெவ்வளவு அதிக உயரத்தில் இருக்கிறோமோ, எவ்வளவுக்கெவ்வளவு அதிக முழுமையாக நாம் சோஷலிஸ்டு அரசையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்

---

* இப்பதிப்பின் தொகுதி 5, பக்கங்கள் 375, 376, 377, 378.—ப-ர்.

தையும் சோவியத்துக்களில் இணைத்துச் சேர்த்து விடு கிருேமோ அவ்வளவுக்கவ்வளவு குறைவாக நாம் ''அரசு முதலாளித்துவத்தைப்'' பற்றி பயப்பட வேண்டியிருக்கும் என்று தெளிவாகவில்லையா? பொருளாயத, பொருளாதார மற்றும் உற்பத்தியின் கருத்து நிலையிலிருந்து பார்க்கையில் நாம் இன்னும் சோஷலிசத்தின் ''நுழைவாயிலில்'' அடிவைக்க வில்லை என்று தெளிவாக வில்லையா? நாம் இன்னும் எட்டாத ''நுழைவாயிலைத்'' தாண்டாமல் சோஷலிசத்தின் கதவு வழியே கடந்து செல்ல முடியாது என்று தெளிவாக வில்லையா?

பிரச்சினையை எந்தப் பக்கத்திலிருந்து அணுகிஞலும், ஒரேயொரு முடிவுதான் எடுக்க முடியும், நம்மைப் பயமுறுத்தச் சொல்லப்படுகிற ''அரசு முதலாளித்துவம்'' பற்றிய ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளின்'' வாதம் பொருளாதார ரீதியில் ஒரு மோசமான பிழையாகும், அவர்கள் குட்டிமுதலாளித்துவ சித்தாந்தத்தின் பூரண அடிமைகள் என்பதற்கு வெளிப்படையான சான்ருகும்.

5

பின்வருவது மிகவும் படிப்பினையளிக்கும் விஷயமே ஆகும்.

மத்திய நிர்வாக கமிட்டியில் நாங்கள் தோழர் புஹாரிஞேடு விவாதித்த போது, மற்ற விஷயங்களுக்கிடையே அவர் சொன்ஞர்: நிபுணர்களுக்கு உயர்ந்த சம்பளங்கள் கொடுக்கிற பிரச்சினையில் ''நாங்கள்'' (''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளையே'' அவர் குறிப்பிட்டார் என்பது தெளிவு) ''லெனினைவிட வலதுசாரியாக இருந்தோம்''; ஏனெனில் இந்த விஷயத்தில் ''நாங்கள்'' கோட்பாட்டிலிருந்தான திரிபுகள் எதையும் பார்க்கவில்லை; ''அவர்கள் அத்தனை பேரையுமே பணம் கொடுத்துச் சரிக்கட்டி விடுவது''[42] (அதாவது, முதலாளிகள் அத்தனை பேரையும் பணம் கொடுத்து சரிக்கட்டி விடுவது, முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து நிலத்தையும்,

தொழிற்சாலைகளையும், உற்பத்திக் கூடங்களையும், மற்ற உற்பத்திச் சாதனங்களையும் விலைக்கு வாங்கிப் போடுவது) சில குறிப்பிட்ட நிலைமைகளில் தொழிலாளி வர்க்கத்துக்குச் சந்தர்ப்பப் பயனுள்ளதாகும் என்கிற மார்க்சின் சொற்களை நினைவில் வைத்திருந்தோம்.

மிகவும் அக்கறைக்குரிய இந்தக் கூற்று முதற்கண் தோழர் புஹாரின் அராஜகவாதிகளை விட, இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களை விட, எவ்வளவோ உயர்ந்தவர் என்றும், சொல்லாடல் சகதியிலே நம்பிக்கைக்கிடமற்ற முறையிலே அவர் நிச்சயமாக அழுந்திக் கிடக்கவில்லை, அதற்கு மாருக முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்துக்குப் போகிற மாற்ற நிலையின்—வேதனை தருகிற, கஷ்டமான மாற்ற நிலையின்—ஸ்தூலமான இடர்ப்பாடுகளைச் சிந்தித்தறிய முயற்சிகள் எடுத்து வருகிருர் என்றும் காட்டுகிறது.

இரண்டாவதாக, இந்தக் கூற்று புஹாரினுடைய பிழையை மேலும் தெளிவாக காட்டுகிறது.

மார்க்சின் கருத்தைக் கவனமாகப் பார்ப்போம்.

சென்ற நூற்ருண்டின் எழுபதாம் ஆண்டுகளைச் சேர்ந்த பிரிட்டனைப் பற்றி, ஏகபோகத்துக்கு முந்திய முதலாளித்துவ வளர்ச்சியின் உச்ச நிலை பற்றி மார்க்ஸ் குறிப்பிட்டுச் சொன்ஞர். அந்தக் காலத்தில் மற்ற நாடுகளை விட ராணுவ வெறியும் அதிகார வர்க்கமும் குறைவான முனைப்புடன் இருந்த நாடாக பிரிட்டன் இருந்தது; தொழிலாளர்கள் முதலாளித்துவ வர்க்கத்தைப் ''பணம் கொடுத்துச் சரிக்கட்டிவிடுவது'' என்கிற அர்த்தத்தில் சோஷலிசத்துக்கு ''சமாதானபூர்வமான'' வெற்றி கிடைக்கும் சாத்தியப்பாடு மிக அதிகமாக உள்ள நாடாக பிரிட்டன் இருந்தது. சில குறிப்பிட்ட சூழ்நிலைமைகளில் தொழிலாளர்கள் முதலாளித்துவ வர்க்கத்தைப் பணம் கொடுத்துச் சரிக்கட்டிவிட நிச்சயமாக மறுக்க மாட்டார்கள் என்று மார்க்ஸ் சொன்ஞர். வடிவ விவகாரங்களை பற்றி, புரட்சியை ஏற்படுத்துவதற்குரிய வழிவகைகளைப் பற்றி, மார்க்ஸ் தம்மையோ, சோஷலிசப் புரட்சியின் எதிர்காலத் தலைவர்களையோ, கட்டுப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. பெரும் எண்ணிக்கையில் புதிய பிரச்சினைகள்

எழும் என்றும் புரட்சியின் போக்கிலே மொத்த நிலைமையே மாறும் என்றும் நிலைமை தீவிரமாகவும் புரட்சியின் போக்கிலே அடிக்கடியும் மாறும் என்றும் மார்க்ஸ் நன்றாகப் புரிந்து கொண்டிருந்தார்.

சரி, சோவியத் ருஷ்யாவைப் பற்றி என்ன? பாட்டாளி வர்க்கம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு, சுரண்டு பவர்களின் ஆயுதமேந்திய எதிர்ப்பையும் நாசவேலையையும் நசுக்கிய பிறகு, சில நிலைமைகள் மேலோங்கி உள்ளன, அரை நூற்றாண்டுக்குமுன் பிரிட்டனில் சோஷலிசத்துக்குரிய ஒரு சமாதான பூர்வமான மாற்றம் தொடங்கியிருந்தால் என்ன நிலைமைகள் இருந்திருக்கக் கூடுமோ அவற்றுக்குப் பொருத்தமாக இவை உள்ளன என்று தெளிவாக வில்லையா? பிரிட்டனில் முதலாளிகள் தொழிலாளர்களுக்குக் கீழ்ப்படுவது அந்த சமயத்தில் பின்வரும் புற நிகழ்ச்சிகளின் காரணமாக உறுதிப் படுத்தப்பட்டிருக்கும்: (1) விவசாயி மக்கள் இல்லாததால் ஜனத்தொகையில் தொழிலாளர்களின், பாட்டாளிகளின் முற்றான விஞ்சிய நிலை இருந்தது (பிரிட்டனில், எழுபதுகளில், விவசாயத் தொழிலாளர்களிடையே சோஷலிசம் மிகத் துரிதமாகப் பரவும் என்கிற நம்பிக்கை இருந்தது); (2) பாட்டாளிகள் தொழிற்சங்கங்களிலே மிக நேர்த்தியாக ஸ்தாபன ரீதியில் திரட்டப் பெற்றிருந்தது (அப்போது இந்த அம்சத்தில் பிரிட்டன் உலகத்திலேயே தலைமை ஸ்தானத்தில் இருந்த நாடாகும்); (3) நூற்றாண்டுக் காலத்திய அரசியல் சுதந்திரத்தின் வளர்ச்சியால் பயிற்றுவிக்கப் பட்டிருந்த பாட்டாளி வர்க்கம் ஒப்புநோக்கில் உயர்ந்த பண்பாட்டுத் தரம் கொண்டிருந்தது; (4) நன்கு ஒழுங்கமைப்பு பெற்றுள்ள ஆங்கிலேய முதலாளிகள்—அந்தச் சமயத்தில் உலகத்தில் வேறெந்த நாட்டையும் விட இங்கிலாந்திலே தான் முதலாளிகள் நன்கு ஒழுங்கமைப்பு பெற்றிருந்தனர் (இந்த மேல்நிலை இப்போது ஜெர்மனிக்கு மாறிப் போயுள்ளது)—அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகளைச் சமரசம் மூலமாகத் தீர்க்கும் பழைய பழக்கம் பெற்றிருந்தனர். ஆங்கிலேயத் தொழிலாளர்கள் தாங்கள் நாட்டின் முதலாளிகளைச் சமாதான பூர்வமாகக் கீழ்ப்படியச் செய்வது சாத்தியமே

என்கிற கருத்தை இந்தச் சந்தர்ப்பங்களே அக்காலத்தில் தோற்றுவித்தன.

நம் நாட்டில், தற்சமயம் அடிப்படையான உட்பொருளுள்ள சில காரணங்களால் (அக்டோபரின் வெற்றி, அக்டோபரிலிருந்து பிப்ரவரி வரை முதலாளிகளின் நாசவேலையையும் ஆயுதமேந்திய எதிர்ப்பையும் ஒடுக்கியது) இந்தக் கீழ்ப்படியச் செய்தல் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. ஆனால் ஜனத்தொகையில் தொழிலாளர்களும் பாட்டாளிகளும் முற்றுன விஞ்சிய நிலையில் இருப்பதற்குப் பதிலாக, அவர்களிடையே அதி உயர்தரமான அளவிலே ஸ்தாபன அமைப்பு இருப்பதற்குப் பதிலாக, ருஷ்யாவில் வெற்றிக்குரிய முக்கியமான காரணமாக விளங்கியது ஏழை விவசாயிகளிடமிருந்தும், திடீரென்று நாசமடைந்த விவசாயிகளிடமிருந்தும் தொழிலாளர்கள் பெற்ற ஆதரவாகும். கடைசியாக, ஓர் உயர்தரமான அளவுக்குப் பண்பாடோ சமரசம் செய்து கொள்ளும் பழக்கமோ நமக்கு இல்லை. இந்த ஸ்தூலமான நிலைமைகளைக் கவனமாகப் பரிசீலித்தால், நாம் இரண்டு வழிமுறைகளை ஒரே காலத்தில் பயன்படுத்த முடியும், பயன்படுத்த வேண்டும் என்பது தெளிவாகும். ஒரு பக்கத்தில், ''அரசு முதலாளித்துவத்தோடு'' எவ்விதச் சம்பந்தத்தையும் அல்லது எந்த விதச் சமரசத்தையும் நிராகரிக்கிற, சோவியத் சட்ட நடவடிக்கைகளின் நிறைவேற்றத்துக்கு கொள்ளை லாபமடிப்பது மூலமும் ஏழை விவசாயிகளுக்கு லஞ்சம் கொடுப்பது மூலமும், தொடர்ந்து தடங்கல் செய்து வருகிற, பண்பாடற்ற முதலாளிகளை நாம் ஈவிரக்கமின்றி நசுக்க வேண்டும்.* மற்றொரு பக்கத்தில், சமரசம் செய்து

* இந்த நிகழ்விலும் நாம் உண்மையை நேரடியாகப் பார்க்க வேண்டும். சோஷலிசத்தின் வெற்றிக்கு இன்றியமையாத ஈவிரக்கமின்மை நமக்கு இன்னும் குறைவாகவே இருக்கிறது. குறைவாக இருப்பதற்குக் காரணம் நமக்குத் துணிவு இல்லாதது அல்ல. நமக்குப் போதிய துணிவு உண்டு. நமக்கு இல்லாதிருப்பது எதுவெனில், போதிய எண்ணிக்கையில் கொள்ளை லாபக்காரர்களை, ஏய்த்துப் பணம் பறிப்போரை, முதலாளிகளை—சோவியத்துகள் நிறைவேற்றும் சட்ட நடவடிக்கைகளை மீறுகிற பேர்வழிகளை —போதியளவு

கொள்ளும் வழிமுறையைப் பயன்படுத்த வேண்டும்; அல்லது ''அரசு முதலாளித்துவத்துக்கு'' ஒத்துக் கொள்கிற, அதை நடைமுறையில் செயல்படுத்தும் திறமையுள்ள, கோடானு கோடி மக்களுக்குப் பண்டங்களை எதார்த்தத்தில் சப்ளை செய்கிற மிகப் பெரிய தொழிற்சாலைகளின் அறிவுள்ள, அனுபவமுள்ள ஒழுங்கமைப்பாளர்கள் என்கிற ரீதியிலே தொழிலாளி வர்க்கத்துக்குப் பயனுள்ளவர்களாயுள்ள, பண்பாடுள்ள முதலாளிகளைப் பணம் கொடுத்துச் சரிக்கட்டி விடும் வழிமுறையைப் பயன்படுத்த வேண்டும்.

புஹாரின் நன்கு படித்த ஒரு மார்க்சிய-பொருளாதாரவாதி. ஆகவே, சோஷலிசத்துக்கு மாறிச் செல்வதைச் சுளுவாக்குவதற்காகவே பெரும் அளவு உற்பத்திக்குரிய அமைப்பை வைத்துப் பாதுகாப்பதின் முக்கியத்துவத்தைத் தொழிலாளர்களுக்குப் போதித்த போது மார்க்ஸ் மிக அறிவாழமிக்க சரியான நிலைதான் எடுத்தார் என்பதை அவர் நினைவில் கொண்டார். பணம் கொடுக்கப்பட்டால் முதலாளிகள் சமாதானமாகக் கீழ்ப்படிந்து, பண்பாடுள்ள, ஒழுங்கமைந்த வகையில் சோஷலிசத்தின் பக்கம் வரும்படி அவர்களை நிர்பந்திக்கத்தக்க சந்தர்ப்பங்கள் இருந்தால் (ஒரு விதிவிலக்காக—அப்பொழுது இங்கிலாந்து ஒரு விதிவிலக்கு தான்) முதலாளிகளுக்கு நன்ருகப் பணம் கொடுக்கும் கருத்து சிந்திக்கத் தக்கதே என்று போதித்தார் மார்க்ஸ்.

ஆனுல் புஹாரின் வழிதவறிச் சென்ருர்; காரணம், தற்சமயம் ருஷ்யாவிலுள்ள நிலைமையின் குறிப்பான இயல்புகளை அவர் போதிய ஆழத்துடன் ஆராயவில்லை—அது ஓர் அசாதாரணமான நிலைமை, அதில் ருஷ்யப் பாட்டாளி வர்க்கமாகிய

வேகமாகப் பிடிக்கும் திறமையேயாகும். இதைச் செய்வதற்குரிய ''திறமையைக்'' கணக்கு பதிவையும் கண்காணிப்பையும் நிலைநிறுத்துவதின் மூலமாக மட்டுமே பெற முடியும்! மற்ருெரு விஷயம், நீதி மன்றங்கள் போதிய அளவுக்கு உறுதியாக இல்லை. லஞ்சம் வாங்கும் பேர்வழிகளைச் சுட்டுத் தள்ளத் தீர்ப்பளிப்பதற்குப் பதிலாக, அவை ஆறு மாத சிறைத் தண்டனை விதிக்கின்றன. இவ்விரண்டு குறைபாடுகளுக்கும் ஒரேமாதிரியான வேர் உண்டு: அது தான் குட்டிமுதலாளித்துவத்தின் செல்வாக்கு, அதன் தொளதொளாத் தன்மை.

நாம், நம்முடைய அரசியல் அமைப்பையும் தொழிலாளர்களின் அரசியல் அதிகாரத்தின் பலத்தையும் பொறுத்த வரையில் எந்த பிரிட்டனையும்விட, எந்த ஜெர்மனியையும்விட முன்னேறிய நிலையில் இருக்கும் போதே, ஒரு நல்ல அரசு முதலாளித்துவத்தை ஒழுங்காக அமைப்பதைப் பொறுத்த வரையில், பண்பாட்டின் தரம், சோஷலிசத்தைப் ''புகுத்துவதற்கு'' வேண்டிய பொருளாயத, உற்பத்தித் திறன் தயாரிப்பு நிலையின் அளவு ஆகியவற்றைப் பொறுத்தவரையில் மிகமிகப் பிற்பட்ட மேற்கு ஐரோப்பிய நாட்டையும்விட பின்தங்கி இருக்கிறோம். இன்றைய நிலைமையின் குறிப்பான தன்மையானது ஒரு குறிப்பிட்ட விதமாக ''பணம் கொடுத்துச் சரிக்கட்டுதலின்'' அவசியத்தை உண்டாக்குகிறது. அதைத் தொழிலாளர்கள், சோவியத் அதிகாரத்தின் சேவையில் ஈடுபடவும், கூடியவரை பெரிய அளவிலே, மிகப் பெரிய அளவிலே ''அரசு'' உற்பத்தியை ஒழுங்கமைப்பதிலே நேர்மையோடு உதவி புரியவும் தயாராயிருக்கும் முதலாளிகளிடையேயுள்ள மேலான பண்பாடு கொண்ட, மேலான திறனுடைய, மிகவும் ஆற்றல் வாய்ந்த ஒழுங்கமைப்பாளர்களுக்கு வழங்க வேண்டும் என்று தெளிவாகவில்லையா? இந்தக் குறிப்பிட்ட நிலைமையில் இரண்டு பிழைகளை—அவ்விரண்டுமே ஒரு குட்டிமுதலாளித்துவ இயல்புள்ளவை—தவிர்க்க நாம் எல்லா முயற்சிகளும் செய்ய வேண்டும் என்று தெளிவாக வில்லையா? ஒரு பக்கத்தில், நமது பொருளாதாரச் ''சக்திகளுக்கும்'' நமது அரசியல் பலத்துக்கும் இடையே ஓர் இசைவின்மை இருக்கிறபடியால் நாம் அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கக் கூடாது என்று அதிலிருந்து ''பெறப்படுகிறது'' எனப் பிரகடனப்படுத்துவது ஒரு அழிவார்ந்த பிழையாக இருக்கும்[43]. அப்படிப்பட்ட ஓர் ''இசைவின்மை'' எப்போதும் இருக்கும்; இயற்கையின் வளர்ச்சியிலும் சமுதாயத்தின் வளர்ச்சியிலும் அது எப்போதும் இருந்து வருகிறது; வரிசையான முயற்சிகள் மூலமாக மட்டுமே—அவற்றில் ஒவ்வொன்றும், தனித்தனியாக எடுத்துப்பார்த்தால், ஒரு சார்பானதாக இருக்கும், சில இசைவின்மைகளைக் கொண்டதாக இருக்கும்—எல்லா நாடுகளையும் சேர்ந்த தொழிலாளர்களின் புரட்சி

கரமான ஒத்துழைப்பால் முழுமையான சோஷலிசம் உண்டாக்கப்படும் என்பதை மறக்கிற ஒரு ''கூட்டில் அடைந்த மனிதர்''[44] மட்டுமே அப்படிப்பட்டவாதத்தை முன்வைக்க முடியும்.

இன்னொரு பக்கத்தில், ''கண்ணைப் பறிக்கும்'' புரட்சி உணர்ச்சியால் நிலைகுலைய இடம் கொடுத்து விடுகிற, ஆனால் மிகக் கஷ்டமான மாற்றக் கட்டங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்கிற, தொடர்ச்சியான, சிந்தனை பூர்வமான, நிதானப் புத்தியுள்ள புரட்சி வேலைக்குத் திறனற்ற, கும்மாளிகளுக்கும் சொற்ஜாலக்காரர்களுக்கும் முழுச் சுதந்திரம் கொடுத்து விடுவதும் ஒரு வெளிப்படையான பிழையாகவே இருக்கும்.

அதிருஷ்டவசமாக, புரட்சிகரமான கட்சிகளின் வளர்ச்சி வரலாறும், அவற்றை எதிர்த்து போல்ஷிவிசம் நடத்திய போராட்டத்தின் வரலாறும், நமக்குக் கூர்மையாக வரையறை செய்யப்பட்ட மாதிரிகளின் பரம்பரையைத் தந்துள்ளன; அதில் மோசமான புரட்சியாளர்கள் என்பதற்குத் தெளிவாகத் தெரியும் எடுத்துக்காட்டுகளாக இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களும் அராஜகவாதிகளும் உள்ளனர். அவர்கள் இப்போது ''வலதுசாரி போல்ஷிவிக்குகளின்'' ''சமரசத்துக்கு'' எதிராக ஜன்னிவெறிக் கூச்சல் போட்டு வருகிறார்கள்; மூச்சுத் திணறக் கரகரத்துக் கூக்குரலிட்டு வருகின்றனர். ஆனால், ''சமரசத்திலே'' எது மோசம் என்றும், வரலாறும் புரட்சியின் போக்கும் ஏன் ''சமரசத்தை'' நியாயமாகவே கண்டித்துள்ளன என்றும் சிந்திக்க அவர்கள் திறனற்றவர்கள்.

கேரென்ஸ்கி காலத்தில் சமரசம் என்பதற்குப் பொருள் ஆட்சி அதிகாரத்தை ஏகாதிபத்திய முதலாளித்துவ வர்க்கத்திற்கு விட்டுக் கொடுப்பதாகும்; மேலும் ஆட்சி அதிகாரம் பற்றிய பிரச்சினையே ஒவ்வொரு புரட்சியின் அடிப்படையான பிரச்சினையாகும். 1917, அக்டோபர்-நவம்பர் மாதங்களில் போல்ஷிவிக்குகளில் ஒரு பகுதியினர் சமரசம் செய்து கொண்டார்கள் என்றால் அதன் பொருள், ஒன்று, அவர்கள் பாட்டாளி வர்க்கம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதைப் பற்றி பயப்பட்டனர்; அல்லது, ஆட்சி அதிகாரத்தைச்

சரிசமமாக இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள் போன்ற ''நம்பத் தகுதியற்ற சகபயணிகளோடு'' மட்டுமல்லாமல் எதிரிகளுடனும், செர்னேவ் வகையறுக்களுடனும் மென்ஷிவிக்குகளுடனும் பங்கிட்டுக் கொள்ள விரும்பினர் என்பதேயாகும். பின்குறிப்பிட்டவர்கள், அரசியல் நிர்ணய சபையைக் கலைத்தது, பொகயேவ்ஸ்கி வகையறுக்களை ஈவிரக்கமின்றி நசுக்கியது. சர்வவியாபகமாக சோவியத் ஸ்தாபனங்களை நிறுவியது, மற்றும் ஒவ்வொரு பறிமுதல் நடவடிக்கையும் போன்ற அடிப்படையான விவகாரங்களில் தவிர்க்க இயலாத முறையில் நமக்குத் தடங்கல் செய்திருப்பார்கள்.

இப்போது ''நம்பத் தகுதியற்ற சகபயணிகள்'' கூட இல்லாமலே ஒரு கட்சியால், பாட்டாளி வர்க்கக் கட்சியால், ஆட்சி அதிகாரம் கைப்பற்றப்பட்டு, நிலை நிறுத்தப் பட்டு, கெட்டிப்படுத்தப்பட்டுள்ளது. ஆட்சி அதிகாரத்தைப் பங்கிடுவது, முதலாளித்துவ வர்க்கத்தின் மேலுள்ள பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை விட்டுக் கொடுப்பது பற்றிய பிரச்சினையே இல்லாதிருக்கையில், இருக்க முடியாத நிலையில், இந்தச் சமயத்தில் சமரசம் பற்றிப் பேசுவது புரிந்து கொள்ளாமல் மனப்பாடம் செய்து கொண்ட வார்த்தைகளைக் கிளிப்பிள்ளை போல் திருப்பிச் சொல்வதேயாகும். நாம் நாட்டை ஆள முடியும், ஆள வேண்டும் என்கிற நிலைமையை எட்டி விட்ட பிறகு, முதலாளித்துவம் பயிற்றுவித்த மிகவும் திறமையுள்ள நபர்களை, செலவைப் பொருட்படுத்தாமல் நம் பக்கத்திற்கு வரச் செய்யவும், சிறு உடைமையின் சிதைவை எதிர்த்து நம் சேவையில் அவர்களை எடுத்துக்கொள்ளவும், நாம் முயல்கிற விஷயத்தை ''சமரசம்'' என்று வர்ணிப்பது சோஷலிச நிர்மாணத்தின் பொருளாதாரக் கடமைகளைத் தீர்க்கமாகச் சிந்தித்தறிய அறவே சக்தியில்லாத் தன்மையைத் தான் வெளிப்படுத்துகிறது.

எனவே, மத்திய நிர்வாக கமிட்டியில் தோழர் புஹாரின் தனக்குக் கரேலினும் கேயும் செய்த ''சேவையைப்'' பற்றி உடனேயே ''வெட்கப்பட்டது'' அவருக்குப் பெருமையே என்றாலும், ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுப்'' போக்கைப் பொறுத்த மட்டில், அவர்களுடைய அரசியல் தோழர்களைப்

பற்றிய குறியீடு இன்னமும் ஒரு கடுமையான எச்சரிக்கையாகவே இருந்து வருகிறது.

உதாரணத்துக்கு இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களின் பத்திரிகையான **ஸ்நாமியா த்ருதா**,[45] *1918, ஏப்ரல் 25* இதழை எடுத்துக் கொள்ளுங்கள். ''நம் கட்சியின் இன்றைய நிலை போல்ஷிவிஸத்திலுள்ள மற்ருெரு போக்குடன் (புஹாரின், பக்ரோவ்ஸ்கி, மற்றவர்கள்) ஒன்ருகப் பொருந்துகிறது'' என்று அது பெருமையுடன் அறிவிக்கிறது. அல்லது அதே தேதியிட்ட மென்ஷிவிக் **வ்பெரியோத்** என்ற பத்திரிகையை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் மற்ற கட்டுரைகளுக்கிடையே, அபகீர்த்தி மிக்க மென்ஷிவிக் இசூவ் எழுதிய பின்வரும் ''ஆய்வுரையைப்'' பாருங்கள்:

''தொடக்கத்திலிருந்தே ஓர் உண்மையான பாட்டாளி வர்க்கத் தன்மை இல்லாதிருக்கும் சோவியத் ஆட்சி அதிகாரத்தின் கொள்கை, சமீபகாலத்தில் மேலும் மேலும் பகிரங்கமாக முதலாளித்துவ வர்க்கத்துடன் சமரசம் செய்து கொள்ளும் போக்கைப் பின்பற்றியுள்ளது, வெளிப்படையான தொழிலாளி வர்க்கத்துக்கு விரோதமான தன்மையைப் பெற்றுள்ளது. தொழில் துறையைத் தேசியமயமாக்குகின்ற சாக்கிலே தொழில் துறை டிரஸ்டுகளை நிலைநாட்டும் கொள்கையை அவர்கள் பின்பற்றுகிருர்கள்; நாட்டின் உற்பத்திச் சக்திகளை மீட்டு நிறுவுவதின் சாக்கிலே அவர்கள் எட்டு மணி நேர வேலையை ஒழிக்கவும் வேலை வீத ஊதியம் ஏற்பாட்டையும் டெய்லர் முறையையும் கருப்புப் பட்டியல்களையும் குற்றஞ்சாட்டி வேலையிலிருந்து நீக்குவதையும் புகுத்த முயல்கிருர்கள். இந்தக் கொள்கை பாட்டாளி வர்க்கத்திலிருந்து அதன் அதிமுக்கியமான பொருளாதார ஆதாயங்களைப் பறிக்கவும், முதலாளித்துவ வர்க்கத்தின் வரம்பற்ற சுரண்டலுக்கு அதை இரையாக்கவும் அடிகோலுகிறது.''

பிரமாதம் இல்லையா?

ருஷ்ய முதலாளிகளுக்கு பிரதேசங்களைப் பிடித்துச் சேர்த்துக் கொள்ள வாக்குறுதி தந்த இரகசிய உடன்படிக்கைகளுக்காக ஓர் ஏகாதிபத்திய யுத்தத்தைக் கேரென்ஸ்கியோடு சேர்ந்து நடத்திய அவருடைய நண்பர்கள், ஜூன் 11ம் தேதியன்று தொழிலாளர்களை நிராயுதபாணியாக்குவதாகப் பய

முறுத்திய த்ஸெரெத்தேலியின் கூட்டாளிகள்[46], படாடோப மான சொற்களைக் கொண்டு முதலாளித்துவ வர்க்கத்தின் ஆட்சியைத் திரையிட்டு மறைத்த லிபெர்டான்கள்,[47] — இதே பேர்வழிகள் தாம் சோவியத் ஆட்சி ''முதலாளித்துவ வர்க்கத்துடன் சமரசம் செய்து கொள்கிறது'' என்றும், ''டிரஸ்டுகளை நிலைநாட்டுகிறது'' என்றும் (அதாவது ''அரசு முதலாளித்துவத்தை'' நிலைநாட்டுகிறது!), டெய்லர் முறையைப் புகுத்துகிறது என்றும் குற்றம் சாட்டுகிறார்கள்.

உண்மைதான், போல்ஷிவிக்குகள் இசூவுக்கு ஒரு பதக்கம் அளிக்க வேண்டும், அவருடைய ஆய்வுரை ஒவ்வொரு தொழிலாளர் கிளப்பிலும் சங்கத்திலும் காட்சிக்கு வைக்கப்பட வேண்டும்—முதலாளித்துவ வர்க்கத்தின் ஆத்திரமூட்டும் பிரசாரங்கங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக. தொழிலாளர்களுக்கு இந்த லிபெர்டான்களையும், த்ஸெரெத்தேலிகளையும், இசூவ்களையும் நன்றாகத் தெரியும். இப்பேர்ப்பட்ட நபர்களை அனுபவத்திலிருந்து அவர்கள் தெரிந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட முதலாளித்துவ வர்க்கத்தின் ஏவலாட்கள் தொழிலாளர்களை டெய்லர் முறையையும் ''டிரஸ்டுகளை நிறுவுவதையும்'' எதிர்க்கும்படி தூண்டுவதற்குக் காரணம் என்ன என்பதைத் தொழிலாளர்கள் சிந்தித்துப் பார்ப்பது மிகவும் பயனுள்ளதாயிருக்கும்.

வர்க்க உணர்வுள்ள தொழிலாளர்கள் லிபெர்டான்களின், த்ஸெரெத்தேலி வகையறாக்களின் நண்பனாகிய இசூவின் ''ஆய்வுரையையும்'' ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளின்'' பின்வரும் ஆய்வுரையையும் கவனமாக ஒப்புநோக்குவார்கள்:

''தொழில் துறையில் முதலாளிகளின் நிர்வாகத்தை மீட்டு நிறுவுவது சம்பந்தமாக உழைப்புக் கட்டுப்பாடு புகுத்துவது மூலம் உழைப்பின் உற்பத்தித் திறனைக் கணிசமான அளவுக்கு அதிகப்படுத்த முடியாது; ஆனால் அது பாட்டாளிகளின் வர்க்க முன்முயற்சியையும், செயலூக்கத்தையும், ஒழுங்கமைப்பையும் குறைக்கும். அது தொழிலாளி வர்க்கத்தை அடிமைப்படுத்துவதாக அச்சுறுத்துகிறது; அது பிற்பட்ட நிலையிலுள்ள நபர்களிடையேயும் பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையின் இடையேயும் அதிருப்தியை உண்

டாக்கும். 'முதலாளித்துவ நாசவேலைக்காரர்களை' எதிர்த்துப் பாட்டாளி வர்க்கத்திடையே நிலவும் பகைமைக்கு எதிர் முகமாக இந்த முறையை அமுலாக்குவதற்குக் கம்யூனிஸ்டு கட்சியானது, தொழிலாளிகளுக்கு எதிராகக் குட்டிமுதலாளி களைச் சார்ந்திருக்க வேண்டியிருக்கும்; இந்த வழியிலே அது பாட்டாளி வர்க்கத்தின் கட்சி என்ற முறையில் தன்னைத் தானே நாசப்படுத்திக் கொள்ளும்'' (கம்யூனிஸ்ட், இதழ் 1, பக்கம் 8, பத்தி 2).

''இடதுசாரிகள்'' அந்த கண்ணியில் வீழ்ந்து விட்டார் கள், இசூவ் வகையறுக்களும் முதலாளித்துவத்தைச் சேர்ந்த மற்ற துரோகிகளும் தங்களை ஆத்திரமூட்டிவிட இடங் கொடுத்து விட்டார்கள் என்பதற்கு இது மிகத் தெளிவான சான்றாகும். இது தொழிலாளிகளுக்கு ஒரு நல்ல பாடமாகப் பயன்படுகிறது; பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையே தான் உழைப்புக் கட்டுப்பாடு புகுத்தப் படுவதற்கு ஆதர வாக நிற்கிறது என்பதையும், குட்டி முதலாளித்துவ வர்க்கம் தான் இந்தக் கட்டுப்பாட்டைக் குலைக்கத் தன்னாலான அனைத் தையும் செய்து வருகிறது என்பதையும் அவர்கள் அறிவார் கள். ''இடதுசாரிகளின்'' மேலே எடுத்துக் காட்டிய ''ஆய் வுரை'' போன்ற உரைகள் பயங்கரமான மானக்கேடாகும், அதன் உட்குறிப்பு கம்யூனிசத்தை நடைமுறையில் முற்றாகக் கைவிடுவது, குட்டிமுதலாளித்துவ வர்க்கத்தின் முகாமுக்கு முற்றாக ஓடிப்போய் விடுவது, என்பதாகும்.

''முதலாளித்துவ நிர்வாகத்தை மீட்டு நிறுவுவது சம் பந்தமாக''—இந்த வார்த்தைகளைக் கொண்டு ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' ''தங்களைத் தற்காத்துக் கொள்ளலாம்'' என்று நம்புகிறார்கள். அறவே பயனற்ற ஒரு தற்காப்பு இது —ஏனெனில், முதலாவதாக, சோவியத் ஆட்சி அதிகாரம் முதலாளிகளின் கையில் ''நிர்வாகத்தை'' வைக்கும் போது, தொழிலாளர்களின் கமிசார்களை அல்லது தொழிலாளர் களின் கமிட்டிகளை நியமிக்கிறது; அவை நிர்வாகி எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் கண்காணிக்கின்றன, அவை அவனுடைய நிர்வாகத்திலிருந்து அனுபவத்தைக் கற்றுக் கொள்கின்றன, அவனுடைய உத்தரவுகளுக்கு

எதிராக முறையீடு செய்து கொள்ள அவற்றிற்கு உரிமை இருப்பது மட்டுமல்ல, சோவியத் ஆட்சியின் உறுப்பு களின் மூலமாக அவனைப் பதவியிலிருந்து நீக்கம் செய்யவும் முடியும். இரண்டாவதாக, வேலை செய்கிறபோது நிர் வாகக் காரியங்களுக்கு மட்டுமே முதலாளிகளிடம் ''நிர் வாகம்'' கொடுக்கப்படுகிறது; அவற்றின் நிபந்தனைகளை சோவியத் ஆட்சி நிர்ணயிக்கிறது; அவற்றை சோவியத் ஆட்சி ஒழிக்கக்கூடும், மாற்றக்கூடும். மூன்றாவதாக, சோவியத் அதிகாரம் ''நிர்வாகத்தை'' முதலாளிகளிடம் முதலாளிகள் என்கிற வகையில் அல்லாமல் தொழில்நுட்ப நிபுணர்கள் அல்லது ஒழுங்கமைப்பாளர்கள் என்கிற வகையில் தந்து அவர்களுக்கு உயர்ந்த சம்பளம் கொடுக்கிறது. உண்மை யிலே பெருவீதமான, பிரம்மாண்டமான தொழிற்சாலை களின், டிரஸ்டுகளின் அல்லது பிற நிறுவனங்களின் ஒழுங் கமைப்பாளர்களிலும் முதல்தரமான தொழில்நுட்ப நிபுணர் களிலும் நூற்றுக்கு தொண்ணூற்று ஒன்பது பேர் முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று தொழிலாளர்கள் நன்றாக அறிவார்கள். பாட்டாளி வர்க்கக் கட்சியாகிய நாம் இவர்களைத்தான் உழைப்பின் நடப்பை ''நிர்வாகிக்கவும்'', உற்பத்தியை ஒழுங்கமைக்கவும் நியமிக்க வேண்டும்; கார ணம், இந்த விஷயத்தில் நடைமுறை அனுபவமுள்ள நபர் கள் வேறு யாரும் கிடையாது. ''இடதுசாரிச்'' சொற்களா லோ குட்டிமுதலாளித்துவத்தனமான தொளதொளத்த சிந்தனையாலோ தவறாக இட்டுச்செல்லக் கூடிய தங்களுடைய குழந்தைப் பருவத்தைக் கடந்து வந்துள்ள தொழிலாளர் கள் டிரஸ்டுகளில் முதலாளித்துவ நிர்வாகத்தின் மூலமாகத் தான், பிரம்மாண்டமான இயந்திரத் தொழில் மூலமாகத் தான், ஆண்டுதோறும் பலகோடிப் பணப் புழக்கமுள்ள தொழில் அமைப்புகள் மூலமாகத்தான்—அப்படிப்பட்ட உற் பத்தி முறையின், அப்படிப்பட்ட தொழில் அமைப்புகளின் மூலமாகத்தான்—சோஷலிசத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். தொழிலாளர்கள் குட்டிமுதலாளித் துவத் தன்மை உடையவர்களல்ல. பெருவீத ''அரசு முதலாளித்துவத்தைக்'' கண்டு அவர்கள் பயப்படவில்லை.

அதை அவர்கள் தங்களுடைய, பாட்டாளி வர்க்கத்தினுடைய, உற்பத்திக்குரிய ஆயுதம் என்று, தங்களுடைய, சோவியத் ஆட்சி சிறு உடைமையாளர் பாணி சிதைவுக்கும் குலைவுக்கும் எதிராக அதைப் பயன்படுத்தும் என்று போற்றி மதிக்கிறார்கள்.

இது வர்க்கத்தன்மை இழந்த, அதன் மூலமாக முற்றாகக் குட்டிமுதலாளியாகிப்போன படிப்பாளிக் கூட்டத்துக்குத் தான் புரியக்கூடியதாயில்லை; ''இடதுசாரிக் கம்யூனிஸ்டு களிலே'' ஒசீன்ஸ்கி பின்வருமாறு எழுதும் போது இதை மாதிரியாக்கிக் காட்டுகிறார்:

''.... எந்தத் தொழில் நிறுவனத்தின் அமைப்பிலும் நிர்வாகத்திலும் முன்முயற்சி முழுவதும் 'டிரஸ்டுகளின் ஒழுங்கமைப்பாளர்களுக்குச்' சொந்தமாயிருக்கும். அவர்களுக்கு நாம் கற்றுத்தரப் போவதில்லை, அல்லது அவர்களைச் சாதாரணத் தொழிலாளர்களாக ஆக்கப் போவதுமில்லை; அவர்களிடமிருந்து நாம் கற்றுக் கொள்ளப் போகிறோம்'' (கம்யூனிஸ்ட், இதழ் *1*, பக்கம் *14*, பத்தி *2*).

இந்தப் பகுதியில் முயலப்பட்டுள்ள நையாண்டி ''டிரஸ்டுகளின் ஒழுங்கமைப்பாளர்களிடமிருந்து சோஷலிசத்தைக் கற்றுகொள்ளுங்கள்'' என்கிற எனது சொற்கள் மீது எய்த தாகும்.

இதை வேடிக்கை என்று ஒசீன்ஸ்கி நினைக்கிறார். டிரஸ்டுகளின் ஒழுங்கமைப்பாளர்களை அவர் ''சாதாரணத் தொழிலாளர்களாக'' ஆக்க விரும்புகிறார். ''பதினைந்து ஆண்டுகளே மேலில்லை என் இறைவா?''[48] என்று கவிஞன் எழுதிய சகாப்தத்தைச் சேர்ந்த ஒரு மனிதன் இப்படி எழுதியிருந்தால், அதில் வியப்படைய ஒன்றும் இருக்காது. ஆனால் பெருவீத முதலாளித்துவம் படைத்த தொழில் நுட்ப, பண்பாட்டுத் துறைகளின் சாதனைகளை அது பயன்படுத்தாவிட்டால் சோஷலிசம் சாத்தியமேயில்லை என்று போதிக்கப்பட்டுள்ள ஒரு மார்க்சியவாதியிடமிருந்து இவற்றைக் கேட்பது கொஞ்சம் விநோதமாகத்தான் இருக்கிறது. இதில் மார்க்சியத்தின் சாயல் அறவே கிடையாது.

இல்லை. டிரஸ்டுகளின் ஒழுங்கமைப்பாளர்களிடமிருந்து

கற்றுக் கொள்ளாமல் சோஷலிசத்தை உருவாக்குவதோ, புகுத்துவதோ அசாத்தியம் என்று புரிந்துகொள்கிறவர்கள் தான் கம்யூனிஸ்டுகள் என்கிற பெயருக்குத் தகுதியுடைய வர்கள். காரணம், சோஷலிசம் என்பது கற்பனையின் ஒரு புனைவு அல்ல; ஆட்சியை வென்று பெற்ற பாட்டாளி வர்க்க முன்னணிப் படை டிரஸ்டுகளால் உருவாக்கப்பட்டிருப்ப வற்றை தன்வயமாக்கி செயல்படுத்தப் படுவதே அது. டிரஸ்டு வழியில் பெருவீத உற்பத்தியை ஒழுங்கமைக்கும் திறமையை முதல்தரமான முதலாளித்துவ நிபுணர்களிடமிருந்து பெறு வதைத் தவிர, பாட்டாளி வர்க்கக் கட்சியாகிய நமக்கு வேறு வழி இல்லை.

முதலாளித்துவப் படிப்பாளிகளுக்கு சோஷலிசம் ''கற்றுக் கொடுப்பது'' என்கிற சிறுபிள்ளைத்தனமான வேலையை நாம் மேற்கொண்டாலொழிய, அவர்களுக்குக் கற்றுத்தர நம்மிடம் எதுவுமில்லை. அவர்களுக்கு நாம் கற்றுத்தரலா காது, அவர்களை உடைமை நீக்கம் தான் செய்ய வேண்டும் (ருஷ்யாவில் போதிய அளவுக்கு ''உறுதியோடு'' செய்யப் பட்டு வருவது போல), அவர்களின் நாசவேலைக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும்; அவர்களை ஒரு பகுதியாகவோ, குழுவாகவோ சோவியத் ஆட்சிக்குக் கீழ்ப்படுத்த வேண்டும். மறுபக்கத்தில், குழந்தை வயதுள்ள, குழந்தை அறிவுள்ள கம்யூனிஸ்டுகளாக நாம் இராவிட்டால்—அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும், கற்றுக் கொள்வதற்கு விஷயம் இருக்கிறது; ஏனெனில் பாட்டாளி வர்க்கக் கட்சிக்கும் அதன் முன்னணிப் படைக்கும் கோடானுகோடி மக்களின் தேவை களைப் பூர்த்தி செய்கிற பிரம்மாண்டமான தொழில் நிறு வனங்களை ஒழுங்கமைப்பதில் சுயேச்சையாக வேலை செய்த அனுபவம் கிடையாது.

ருஷ்யாவிலுள்ள தலைசிறந்த தொழிலாளர்கள் இதை உணர்ந்து கொண்டனர். அவர்கள் முதலாளித்துவ ஒழுங் கமைப்பாளர்களிடமிருந்தும் நிர்வகிக்கும் இஞ்சினீயர்களிட மிருந்தும் தொழில்நுட்ப நிபுணர்களிடமிருந்தும் கற்றுக் கொள்ளத் தொடங்கியுள்ளனர். திடமாக, எச்சரிக்கையாக, சிறு விஷயங்களிலிருந்து தொடங்கி, படிப்படியாக அதைவிட

அதிகக் கடினமான விஷயங்களுக்கும் போகிறவாறு கற்கத் தொடங்கியுள்ளனர். உலோகத் தொழிலிலும் இயந்திர நிர்மாணத் தொழிலிலும் விவகாரங்கள் இன்னமும் மெதுவாகப் போய்க் கொண்டிருக்கின்றன என்ருல் அதற்குக் காரணம், அவை அதிகக் கடினமாக உள்ளன. ஆனல் ஜவுளி, புகையிலைத் தொழிலாளிகள், தோல் பதனிடும் தொழிலாளிகள், ''அரசு முதலாளித்துவத்தைப்'' பற்றியோ, ''டிரஸ்டுகளின் ஒழுங்கமைப்பாளர்களிடம் கற்றுக் கொள்வது'' பற்றியோ வர்க்கத் தன்மையிழந்த குட்டிமுதலாளித்துவப் படிப்பாளிக் கூட்டம் பயப்படுவது போல பயப்படவில்லை. ''பிரதான தோல் கமிட்டி'', ''மத்திய ஜவுளிக் கமிட்டி'' ஆகிய பிரதான மத்திய நிலையங்களிலுள்ள இந்தத் தொழிலாளர்கள் முதலாளிகள்பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, அவர்களிடமிருந்து கற்றுக்கொள்கிருர்கள், டிரஸ்டுகளை நிலைநாட்டுகிருர்கள்;''அரசு முதலாளித்துவத்தை'' நிலைநாட்டுகிருர்கள். அது சோவியத் ஆட்சியின் கீழ் சோஷலிசத்தின் நுழை வாயிலைக் குறிக்கிறது, அதன் உறுதியான வெற்றிக்கு ஒரு நிபந்தனையாக இருக்கிறது.

ருஷ்யாவின் முன்னேறிய தொழிலாளிகளின் இந்த வேலையும், உழைப்புக் கட்டுப்பாடு புகுத்தும் அவர்களின் வேலையோடு கூடவே தொடங்கி விட்டது; சந்தடியில்லாமல், ஆர்ப்பாட்டம் இல்லாமல், சில ''இடதுசாரிகளுக்கு'' எவ்வளவோ அவசியமாயிருக்கிற சத்தமும் களேபரமும் இல்லாமல் இது நடந்து கொண்டிருக்கிறது. இது நடைமுறை அனுபவத்தின் படிப்பினைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, அதிக எச்சரிக்கையோடு, படிப்படியாக நடந்து கொண்டிருக்கிறது. இந்தக் கடினமான வேலை, பெருவீத உற்பத்தியை எப்படி நிர்மாணிப்பது என்று நடைமுறையில் கற்றுக் கொள்ளும் வேலை, நாம் சரியான பாதையிலேதான் செல்கிறோம் என்பதற்கு உத்தரவாதமாகும். சிறு உடைமையாளர் பாணி சிதைவையும் சீர்குலைவையும் எதிர்த்தும், குட்டிமுதலாளித்துவக் கட்டுப்பாடின்மையை* எதிர்த்தும் ருஷ்யாவின் வர்க்க

* பொருளாதாரத் துறையில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் முக்கியத்துவம் பற்றி ஒரு வார்த்தைகூட ஆய்வுரைகளின் ஆசிரியர்கள் சொல்லாமலிருப்பது மிகவும் குறிப்

உணர்வுள்ள தொழிலாளர்கள் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு உத்தரவாதமாகும், கம்யூனிசத்தின் வெற்றிக்கு உத்தரவாதமாகும்.

6

முடிவாக இரண்டு குறிப்புக்கள்.

1918, ஏப்ரல் *4*ம் தேதியன்று, ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளோடு'' வாதம் புரியும்போது (**கம்யூனிஸ்ட்**, இதழ் *1*, பக்கம் *4*, அடிக்குறிப்பைப் பார்க்க) ரயில்வே அரசாணையில்[49] உங்களுக்கு அதிருப்தியளிப்பதை விளக்குங்கள்; உங்களுடைய திருத்தங்களைக் கொடுங்கள். பாட்டாளி வர்க்கத்தின் சோவியத் தலைவர்கள் என்கிற வகையில் அது உங்கள் கடமையாகும்; இல்லையேல் நீங்கள் சொல்வது வெற்றுத் தொடர் தவிர வேறில்லை'' என்று நான் அவர்களிடம் பச்சையாகச் சொன்னேன்.

கம்யூனிஸ்ட் முதல் இதழ் *1918*, ஏப்ரல் *20*ம் தேதியில் வெளிவந்தது; ஆனால், ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளின்'' கருத்துப்படி ரயில்வே அரசாணையை எப்படி மாற்ற வேண்டும் அல்லது திருத்த வேண்டும் என்பது பற்றி ஒரு வார்த்தையேனும் அதில் இல்லை.

''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளின்'' மௌனமே அவர்களைத் தண்டித்து விட்டது. எல்லா விதமான மறைமுகக் குற்றச்சாட்டுகளையும் கொண்டு (இதழ் *1*, பக்கங்கள் *8*, *16* பார்க்க) ரயில்வே அரசாணையைத் தாக்குவதைத் தவிர அவர்கள் வேறொன்றும் செய்யவில்லை; ''அரசாணை தவறான

பிடத்தக்க விஷயமாகும். ''ஒழுங்கமைப்பு'' வகையறா என்று மட்டுமே அவர்கள் பேசுகிறார்கள். ஆனால் பொருளாதார உறவுகளில் தொழிலாளர்களின் சர்வாதிகாரத்தைத் தவிர்த்து ஒதுக்குகிற குட்டிமுதலாளிகள்கூட அதை ஒப்புக்கொள்கிறார்கள். பாட்டாளி வர்க்கப் புரட்சியின் இந்த மையக் கூறை. முதலாளித்துவத்தின் பொருளாதார அடிப்படைகளுக்கு எதிராக நெறியாக்கம் செய்யப்படுகிற இதை, இப்படிப்பட்ட தருணத்தில் ஒரு பாட்டாளி வர்க்கப் புரட்சியாளர் என்றைக்கும் ''மறக்க'' முடியாது.

தென்றல் அதை எப்படித் திருத்த வேண்டும்?'' என்கிற கேள்விக்குத் தெளிவான விடை தரவில்லை.

இதைப் பற்றி மேலும் சொல்லத் தேவையில்லை. இரயில்வே அரசாணையைப் பற்றிய (நம்முடைய செயல் கொள்கைக்கு, உறுதிப்பாடின் கொள்கைக்கு, சர்வாதிகாரத்தின் கொள்கைக்கு, பாட்டாளி வர்க்கக் கட்டுப்பாட்டின் கொள்கைக்கு அது ஒரு குறிப்பான எடுத்துக் காட்டாகும்) இப்படிப்பட்ட ''விமர்சனத்தை'' ''இசூவ் வகைப்பட்ட'' விமர்சனம் என்றோ வெறும் வாய்ச்சொல் வீச்சு என்றோதான் வர்க்க உணர்வுள்ள தொழிலாளிகள் அழைப்பார்கள்.

இரண்டாவது குறிப்பு. கம்யூனிஸ்ட் முதல் இதழில் அரசும் புரட்சியும் என்கிற என்னுடைய சிறுநூலை புஹாரின் மிகவும் புகழ்ந்து எழுதிய விமர்சனம் இருந்தது. புஹாரின் போன்றவர்களின் அபிப்பிராயத்தை நான் எவ்வளவுதான் மதித்த போதிலுங்கூட, அந்த விமர்சனத்தின் தன்மை ஒரு வருந்தத்தக்க, முக்கியமான தகவலை வெளிப்படுத்துகிறது என்று சொல்லுமாறு என் மனச்சாட்சி கட்டாயப் படுத்துகிறது. புஹாரின் பாட்டாளி வர்க்கத்தின் கடமைகளைச் சென்ற காலத்தின் நிலையிலிருந்து கவனிக்கிறாரே தவிர எதிர்காலத்தின் நிலையிலிருந்து அல்ல. அரசு பற்றிய பிரச்சினையில் பாட்டாளி வர்க்கப் புரட்சியாளருக்கும் குட்டிமுதலாளித்துவப் புரட்சியாளருக்கும் இடையே பொதுவாக இருக்கக் கூடியதை புஹாரின் குறிப்பிட்டார், வலியுறுத்தினார். ஆனால் அவர்களில் ஒருவரிடமிருந்து மற்றொருவரை வேறுபடுத்திக் காட்டுவது எதுவோ அதை புஹாரின் ''குறிப்பிடத் தவறினார்.''

பழைய அரசு இயந்திரத்தை ''நொறுக்க வேண்டும்'', ''தகர்க்க வேண்டும்'', முதலாளித்துவ வர்க்கத்தை ''இறுதியாக, முற்றாக நெரித்து நசுக்க வேண்டும்'' என்றெல்லாம் புஹாரின் குறிப்பிட்டார், வலியுறுத்தினார். வெறி கொண்ட குட்டிமுதலாளியும் இதை விரும்பக் கூடும். இதைத்தான், பிரதானமாக, நமது புரட்சி 1917 அக்டோபருக்கும் 1918 பிப்ரவரிக்கும் இடையே ஏற்கெனவே செய்துள்ளது.

மிகமிகப் புரட்சிகரமான குட்டிமுதலாளிகூட விரும்ப

முடியாத, வர்க்க உணர்வுள்ள பாட்டாளி விரும்புகிற, நமது புரட்சி இன்னமும் செய்து முடிக்காமலிருக்கிற விஷயத்தை யும் கூட என் சிறுநூலில் குறிப்பிட்டிருக்கிறேன். இந்தக் கடமையைப் பற்றி, நாளைய கடமையைப் பற்றி, புஹாரின் எதுவும் சொல்லவில்லை.

இவ்விஷயத்தைப் பற்றி நான் மௌனம் சாதிக்காமலிருப் பதற்கு இன்னமும் காரணமிருக்கிறது; ஏனெனில், முதலாவ தாக, நாளைய கடமைகளிலேதான், நேற்றைய கடமை களில் அல்ல, அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டும் என்று கம்யூனிஸ்டிடம் எதிர்பார்க்கப் படுகிறது; இரண்டாவதாக, போல்ஷிவிக்குகள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முன் எழுதப்பட்டது எனது பிரசுரம்; அச்சமயத்தில் ''ஆமாம், ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகும் நீங் கள் கட்டுப்பாட்டைப் பற்றிக் கட்டாயம் பேசத் தொடங்கு கிறீர்கள்...'' என்பது போன்ற கொச்சையான குட்டிமுதலா ளித்துவ வாதங்களை போல்ஷிவிக்குகளிடம் வைப்பது சாத்திய மற்று இருந்தது.

''... சோஷலிசம் கம்யூனிசமாய் வளர்ச்சியுறும்... ஏனெ னில் பலாத்காரம் இல்லாமலே, கீழ்ப்படிதல் இல்லாமலே மக்கள் சமுதாய வாழ்வின் சர்வ சாதாரண நெறி முறைகளை அனுசரித்து நடக்கப் பழக்கப்பட்டுவிடுவார்கள்'' (**அரசும் புரட்சியும்**, பக்கங்கள் 77-78*, ''சாதாரணமான நெறிமுறை கள்'' அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முன்பே விவாதிக் கப்பட்டன).

''...பல நூறு ஆண்டுகளாய் அறிந்துள்ள ஆயிரக் கணக்கான ஆண்டுகளாய் பழம்சுவடி நீதிவிளக்கங்களில் எல்லாம் மீண்டும் மீண்டும் கூறப்பட்டு வந்துள்ள சமுதாய ஒட்டுறவின் சர்வசாதாரண விதிகளைப் பற்றி யொழுகச் சிறிது சிறிதாய்ப் பழகிக் கொள்வார்கள். பலப்பிரயோகம் இல்லாமலே, பலவந்தம் இல்லாமலே, பல வந்தத்துக்கான அரசு எனப்படும் தனிவகை பொறியமைவு இல்லாமலே அவர்கள் இவ்விதிகளைப் பற்றியொழுகப் பழகிக் கொள்கிற'' காலத்தில் தான் ''ஜனநாயகம் உலர்ந்து

* இப்பதிப்பின் தொகுதி 6, பக்கம் 128 பார்க்க.—ப-ர்.

உதிரத் தொடங்கும்'' (மேற்குறிப்பிட்ட நூல், பக்கம் 84*, ''பழம்சுவடி நீதிவிளக்கங்கள்'' பற்றி அதிகாரத்தைக் கைப் பற்றுவதற்கு முன்பே குறிப்பிடப்பட்டது).

''கம்யூனிசத்தின் வளர்ச்சியின் உயர் கட்டம் (ஒவ்வொருவரிடம் இருந்தும் அவரது திறமைக்கு ஏற்ப, ஒவ்வொருவருக்கும் அவருடைய தேவைகளுக்கு ஏற்ப) முன் அனுமானிப்பது இன்றைய உழைப்பின் உற்பத்தி ஆற்றலையோ இன்றைய சாதாரண வழக்கமான மனிதர்களையோ அல்ல. இந்த மனிதர்கள் பமியலோவ்ஸ்கியின் கதைகளில் வரும் சமயப்பள்ளி மாணவர்களைப் (புர்ஸாக்குகளைப்)[50] போல பொதுச் செல்வ இருப்புக்களை வேடிக்கைக்கு வேண்டி அழிக்கவும் சாத்தியமல்லாததைக் கோரவும் வல்லவர்கள் (அதே நூல் பக்கம் 91).

''...கம்யூனிசத்தின் 'உயர்' கட்டம் வரும்வரை, உழைப்பின் அளவை மீதும் நுகர்வின் அளவை மீதும் சமுதாயமும் அரசும் மிகவும் கண்டிப்பான கண்காணிப்பு செய்ய வேண்டுமென்று சோஷலிஸ்டுகள் கோருகின்றனர்...'' (அதே நூல், அதே பக்கம்)**.

''...கணக்குப்பதிவு, கண்காணிப்பு—கம்யூனிச சமுதாயத்தின் முதற்கட்டம் தடங்கலின்றி இயங்கவும் சரிவரச் செயற்படவும் பிரதானமாய்த் தேவைப்படுகிறவை இவையே'' (அதே நூல், பக்கம் 95)***. ''மிகச் சொற்பத் தொகையினரே ஆன முதலாளித்துவச் சிறுபான்மையோரையும், தமது முதலாளித்துவப் பழக்கங்களை விட்டொழிக்க விரும்பாத கனவான்களையும்'' மட்டுமல்ல ''முதலாளித்துவத்தால் அறவே பாழ்படுத்தப்பட்டு விட்ட தொழிலாளர்களையும்'' (அதே நூல், பக்கம் 96)**** ''ஒட்டுண்ணிகளையும் செல்வச் சீமான்களது புதல்வர்களையும் மோசடிக்காரர்களையும்

---

* அதே நூல், பக்கம் 138.—ப-ர்.

** அதே நூல், பக்கம் 150.—ப-ர்.

*** அதே நூல், பக்கம் 156.—ப-ர்.

**** அதே நூல், பக்கம் 157.—ப-ர்.

ஏனைய 'முதலாளித்துவ மரபுகளின் காவலர்களையும்' '' கண் காணிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் (அதே நூல்)*.

இதை புஹாரின் வலியுறுத்தாமல் விட்டது கவனிக்கத் தக்கதாகும்.

1918, மே 5

1918, மே *9, 10, 11* தேதிகள், பிராவ்தா, இதழ்கள் *88, 89, 90*ல் பதிப்பிக்கப்பட்டது

நூல் திரட்டு, தொகுதி *36*, பக்கங்கள் *283-314*

---

* அதே நூல், பக்கம் *158*.—ப-ர்.

இன்றைய அரசியல் நிலைமை மீதான ஆய்வுரைகள்[51]

1

ஏகாதிபத்திய வல்லரசுகளால் சுற்றி வளைக்கப் பட்டிருக்கும் சோவியத் குடியரசின் சர்வதேசிய நிலைமையின் படுமோசமான ஸ்திரமின்மை குறித்து போல்ஷிவிக் பத்திரிகைகள் அடிக்கடி சுட்டிக் காட்டியுள்ளன, சோவியத் ஆட்சி அதிகாரத்தின் உயர் உறுப்புக்கள் தமது தீர்மானங்களில் ஒப்புக் கொண்டுள்ளன.

கடந்த சில தினங்களில் அதாவது 1918 மே மாதத்தின் முதல் பத்து நாட்களில் வெளிநாட்டு உள்நாட்டுக் காரணங்களின் விளைவாக அரசியல் நிலைமை மிகவும் நெருக்கடியாகியுள்ளது.

முதலாவதாக, எதிர்ப்புரட்சி சக்திகளின் (ஸெமியோனவும் பிறரும்) நேரடி எதிர்த்தாக்குதல் தொலை கிழக்கில் ஜப்பானியரின் உதவியுடன் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. இதன் தொடர்பாக, ருஷ்யாவுக்கு இறுதி எச்சரிக்கை சமர்ப்பிப்பதில் ஜெர்மன்-எதிர்ப்பு ஏகாதிபத்தியக் கூட்டணி முழுவதும் ஓர் உடன்பாட்டுக்கு வரும், சாத்தியக் கூறினைச் சுட்டும் பல அடையாளங்கள் இருந்தன. ஜெர்மனிக்கு எதிராகப் போராடுக இல்லையேல் எமது உதவியுடன் ஜப்பானியப் படையெடுப்பு நடக்கும் என்பதே இந்த இறுதி எச்சரிக்கை.

இரண்டாவதாக, பிரேஸ்த் பேச்சுக்களுக்குப் பிறகு பொதுவாக ஜெர்மன் அரசியலில் போர்க் கட்சியின் செல்வாக்கு மேலோங்கி இருந்தது. ருஷ்யாவுக்கு எதிரான ஒரு பொதுவான உடனடி எதிர்த்தாக்குதல் என்ற பிரச்சினை மீது இப்போது எந்தத் தருணத்திலும் இந்தக் கட்சியின் செல்

வாக்கு மேலோங்கக் கூடும். அதாவது இது ருஷ்யாவில் புதிய பிரதேசக் கைப்பற்றல்களுக்கு முயலும், ஆனால், தற் போதைக்கு அதற்கு எதிராக பொது எதிர்த்தாக்குதலை நடத்தாது அதனுடன் சமாதானத்தை விரும்பும், ஜெர்மன் முதலாளித்துவ-ஏகாதிபத்திய வட்டங்களின் இன்னொரு கொள்கையை முற்றாக விஞ்சிச் சமாளிக்க முடியும்.

மூன்றாவதாக, அகில ருஷ்யாவின் முதலாளித்துவ வர்க் கத்தின் அரசியல்-சட்ட ஜனநாயக (காடேட்டுகள்) மற்றும் அக்டோபர்வாதி நபர்களின்[51a] ஆதரவோடும், ஜெர்மன் துருப்புக்களின் உதவியோடும் உக்ரேனில் முதலாளித்துவ-நிலப்பிரபுத்துவ முடியரசு மீட்டமைக்கப்படுவது, ருஷ்யா வில் எதிர்ப்புரட்சிக்கு எதிரான போராட்டத்தை மேலும் கடுமையாக்கும், நமது எதிர்ப்புரட்சியாளர்களின் திட்டங் களைக் கட்டாயம் ஊக்குவிக்கும், அவர்களது தெம்பை உயர்த்தும்.

நான்காவதாக, ஒழுங்கு குலைந்த உணவு நிலைமை மிகவும் கடுமையாகிவிட்டது, பல இடங்களில் மெய்யாகவே பட்டி னிக்கு இட்டுச் சென்று விட்டது என்றால், இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. அவை, தோன் கரையில் உள்ள ரஸ் தோவில் இருந்து நாம் பிரிக்கப்பட்டதும், அதோடு குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினரும் பொதுவாக முதலாளிகளும் தானிய ஏகபோகத்தைச் சீர்குலைத்ததும் ஆகும். தொடர்ந்து, ஆளும் வர்க்கத்தை, அதாவது பாட்டாளி வர்க்கத்தைப் பொருத்தவரை, இத்தகைய நாட்டங்கள், முயற்சிகள், செயல்கள் விஷயத்தில் போதியளவு உறுதியான, கட்டுப் பாடான தாட்சண்யமற்ற எதிர்ப்பு இருக்கவில்லை.

2

சோவியத் ஆட்சி அதிகாரத்தின் அயல் துறைக் கொள்கை எந்த வழியிலும் மாற்றப்படக் கூடாது. நமது ராணுவத் தயாரிப்புகள் இன்னும் பூர்த்தியாகவில்லை. எனவே நமது பொதுவான கோஷம் முனைந்து திட்டமிடல் பின்வாங்குதல், உரிய காலம் நோக்கிக் காத்திருத்தல், நமது வலிமை முற் றையும் கொண்டு நமது தயாரிப்புக்களைத் தொடர்ந்து நடத்துதல் என்பதாக முன்போலவே இருக்கும்.

இத்தகைய ஓர் உடன்பாடு, எங்கு, சோவியத் ஆட்சி அதிகாரத்தின் அடிப்படைகளை அரித்தழிக்காமல், அதன் நிலையை வலுப்படுத்தி ஏதேனும் ஓர் ஏகாதிபத்திய வல்லரசின் தாக்குதலை முடமாக்குமோ, அத்தகைய இடங்களில் ஓர் ஏகாதிபத்தியக் கூட்டணிக்கு எதிராக இன்னொன்றுடன் ராணுவ உடன்பாட்டை நாம் பொதுவாக நிராகரிக்கவில்லை. என்ற போதிலும் இன்றைய தருணத்தில் நாம் ஆங்கில-பிரெஞ்சு கூட்டணியுடன் ஓர் ராணுவ உடன்பாட்டுக்கு வர முடியாது. ஆங்கில-பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளைப் பொருத்தவரை இத்தகைய உடன்பாட்டின் முக்கியத்துவம் என்னவெனில், ஜப்பானியப் படைப் பிரிவுகள் பல ஐரோப்பிய ருஷ்யாவின் உட்பகுதிக்குள் முன்னேற விடுவதன் மூலம் ஜெர்மன் துருப்புக்களை மேலைப் பகுதியில் இருந்து திசை திருப்ப முடியும் என்பதே. இந்த நிபந்தனையை ஏற்க முடியாது, காரணம் இது சோவியத் ஆட்சி அதிகாரம் முழுமையாயும் வீழ்ச்சியுறச் செய்யும். இதைப் போன்றதான ஓர் இறுதி எச்சரிக்கையை ஆங்கில-பிரெஞ்சு கூட்டணி எம்முன் வைக்குமானல் நாம் அதை நிராகரிக்க வேண்டும். காரணம் ஜெர்மானியர் பெத்ரோகிராத் மாஸ்கோ மற்றும் ருஷ்யாவின் பெரும் பகுதியைக் கைப்பற்றிக் கொள்ளும் அபாயத்தை விட ஜப்பானிய முன்னேற்றத்தால் ஏற்படும் அபாயத்தை மேலும் எளிதாக முடமாக்க முடியும் (நீண்ட காலத்துக்கு தவக்கப் படுத்த முடியும்).

3

இன்றைய தருணத்தில் சோவியத் ஆட்சி அதிகாரத்தின் அயல்துறைக் கொள்கையின் கடமைகளைக் கவனமாகப் பரிசீலிக்கும் போது, எந்த ஒரு கவனயீனமான அல்லது அவசர நடவடிக்கை மூலமும், ஜப்பான் மற்றும் ஜெர்மனியின் போர்க் கட்சிகளில் இருக்கும் படுமோசமான நபர்களுக்கு உதவி செய்யாமல் இருக்கும் பொருட்டு, ஆகப்பெரிய முன் எச்சரிக்கை, உசிதம், மற்றும் சுயக்கட்டுப்பாடு கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

இந்த விவகாரத்தில் உள்ள உண்மை நிலை என்னவென்

ருல், இந்த இரண்டு நாடுகளிலும் உள்ள போர்க் கட்சிகளில் இருக்கும் படுமோசமான நபர்கள், ருஷ்யாவின் பிரதேசம் அனைத்தையும் கைப்பற்றிக் கொள்ளவும், சோவியத் ஆட்சி அதிகாரத்தை வீழ்த்தவும் வேண்டி ருஷ்யாவுக்கு எதிரான. ஒரு பொதுவான உடனடி எதிர்த்தாக்குதலை ஆதரிக்கிருர் கள் என்பதே. எந்த நேரமும் இந்தப் படுமோசமான நபர் களின் செல்வாக்கு மேலோங்கலாம்.

ஆனல் மறு புறத்தில் ஜெர்மனியில் இருக்கும் ஏகாதிபத் திய முதலாளித்துவ வர்க்கத்தினரில் பெரும்பான்மையினர் இத்தகைய கொள்கைக்கு எதிராக உள்ளனர் என்பது சந்தேகமற்ற உண்மை. இன்றைய தருணத்தில் அவர்கள் போரைத் தொடர்ந்து நடத்துவதை விட ருஷ்யாவுடன் பிர தேசக் கைப்பற்றல் பாணியில் சமாதானம் செய்து கொள் வதை விரும்புகிருர்கள். இதற்குக் காரணம் போர் மேலைப் பகுதியில் இருந்து படைகளைத் திசைதிருப்பும், ஏற்கெனவே தோற்றமளித்துள்ள ஜெர்மனியின் உள்நாட்டு நிலைமையின் ஸ்திரமின்மையை அதிகரிக்கும், மேலும் ஆட்சி எதிர்ப்புப் புரட்சியில் ஈடுபட்டதாலோ அல்லது ரயில்வேக்கள் சேதப் படுத்தப்பட்டதாலோ போதியளவு பயிர் செய்யத் தவறிய தாலோ பாதிப்புக்கு உள்ளான இடங்களில் இருந்து மூலப் பொருள்கள் பெறுவதை இது கடினமாக்கும்.

ருஷ்யாவைத் தாக்க வேண்டும் என்ற ஜப்பானின் துடிப்பு முதலாவதாக சீனுவின் இயக்கங்கள் கலகங்களின் அபாயம் காரணமாகத் தடுத்து நிறுத்தப்படுகிறது. அமெரிக்கா ஓரளவு பகைமை காட்டுகிறது, அது ஜப்பான் வலுப்படுத்தப் படுவதை அஞ்சுகிறது, சமாதான நிலைமைகளில் ருஷ்யாவில் இருந்து மூலப் பொருள்கள் பெறுவது எளிது என்று கருது கிறது. இது இரண்டாவது காரணம்.

ஜெர்மனியிலும் ஜப்பானிலும் உள்ள போர்க் கட்சி களில் இருக்கும் படுமோசமான நபர்களின் செல்வாக்கு எந்த நேரமும் மேலோங்குவது முற்றிலும் சாத்தியம். ஜெர்மனி யில் புரட்சி வெடிக்கும் வரையில் இதற்கு எதிரான உத்தர வாதம் இருக்க முடியாது. அமெரிக்க முதலாளித்துவ வர்க் கம் ஜப்பானிய முதலாளித்துவ வர்க்கத்தோடு சேர்ந்து சதி

புரியலாம், ஜப்பானிய முதலாளித்துவ வர்க்கம் ஜெர்மன் முதலாளித்துவ வர்க்கத்தோடு சேர்ந்து சதிபுரியலாம். எனவே போருக்கு மிகவும் ஊக்கமான தயாரிப்புகளைச் செய்வது நமது அவசிய அவசரக் கடமையாகும்.

பின்லாந்து, உக்ரேன் மற்றும் துருக்கியுடன் சமாதானத்தைப் பேணிக் காக்கவோ அல்லது சமாதானம் ஏற்படுத்திக் கொள்ளவோ லவலேசம் வாய்ப்பும் கூட இருக்கும் காலம் வரை, ஓரளவு புதிய பிரதேசக் கைப்பற்றல்கள் அல்லது இழப்புக்களைப் பிரதிகூலமாக அடைந்த போதிலும், ஏகாதிபத்திய வல்லரசுகளில் இருக்கும் போர்க் கட்சிகளின் படுமோசமான நபர்களுக்கு உதவக் கூடியதான எந்த ஒரு நடவடிக்கையையும் நாம் எடுக்கக் கூடாது.

4

பஞ்சத்தை எதிர்த்துப் போராடும் பிரச்சினையைப் போலவே, மேலும் ஊக்கமான ராணுவப் பயிற்சி மேற்கொள்வது சம்பந்தமான முதற் கடமை ஸ்தாபன ஒழுங்கமைப்பு ஆகும்.

உணவுக் கஷ்டங்கள் தீர்க்கப்பட்டால் அன்றி, மக்களுக்குச் சரியானபடி ரொட்டி வழங்கப்பட்டால் அன்றி ரயில் வேக்களில் ஆகக் கறாரான ஒழுங்கு கொண்டுவரப்பட்டால் அன்றி, உழைக்கும் மக்கள் (மேல் மட்டத்தில் மட்டும் அல்ல) திரளின் மத்தியில் மெய்யாகவே இரும்பனைய கட்டுப்பாடு நிலைநாட்டப்பட்டால் அன்றி, உண்மையில் போருக்கான எந்த ஒரு காரியகரமான தயாரிப்பும் இருக்க முடியாது. இந்தத் துறையில் தான் நாம் மிகவும் பின்தங்கி நிற்கிறோம்.

இந்த உண்மையை முற்றும் புரிந்து கொள்ளாதிருக்கும் ஆகப் பெரிய குற்றவாளிகள் இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களும் அராஜகவாத நபர்களுமே. இவர்கள் ‘‘புரட்சிப் போராட்டக் கமிட்டிகள்’’ பற்றிக் கதறுகிறார்கள் மற்றும் ‘‘ஆயுதம் ஏந்துமாறு’’ அலறுகிறார்கள். இத்தகைய கதறல்களும் அலறல்களும் முட்டாள்தனத்தின் வடிகட்டிய சாரம் மற்றும் பரிதாபகரமான வெறுக்கத்தக்க, அருவருப்பான சொற்சிலம்பம் தவிர வேறு எதுவுமல்ல. சோவியத்

மத்திய ஆட்சி ராணுவப் பயிற்சி தொடங்கித் தம்மை ஆயுத பாணிகளாக்கிக் கொள்ளுமாறு மக்களைத் தூண்ட உச்ச பட்ச மாகச் செயல்படும் போது, நாம் கணக்கிட்டு வினியோகம் செய்ய முடிந்ததை விடவும் அதிகமான ஆயுதங்கள் எம்மிடம் இருக்கும் போது, இருக்கும் ஆயுதங்களைப் பயன்படுத்த முடியாமலும் பயிற்சிக்குப் பயன்படுத்த வேண்டிய மதிப்பு மிகுந்த கால அவகாசத்தை வீணுக்கும்படியும் நம்மைக் கட்டாயப்படுத்தும் பொருளாதார நாசமும் கட்டுப்பாடின்மையும் இருக்கும் போது, ''புரட்சிப் போராட்டம்'' ''புரட்சிப் போராட்டக் கமிட்டிகள்'' பற்றிப் பேசுவது கேலிக்கூத்தாகும்.

ஒரு முக்கியமான போருக்கான தீவிரமான ராணுவப் பயிற்சியை ஒரு திடீர் உந்து ஆற்றல், சண்டை முழக்கம் அல்லது செயல்துடிப்புள்ள கோஷம் மூலம் செய்ய முடியாது. இதற்குப் பெருமளவிலான நீடித்த, தீவிரமான, பிடிவாதமான கட்டுப்பாடான வேலை அவசியம். இதைப் புரிந்து கொள்ள விரும்பாத இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் மற்றும் அராஜகவாத நபர்களைத் தாட்சண்யமின்றி நடத்த வேண்டும். அவர்களது வெறித்தனத்தை நமது பாட்டாளி வர்க்க கம்யூனிஸ்டுக் கட்சியின் சில நபர்கள் மீது தொற்றுவிக்க அவர்களுக்கு வாய்ப்புத் தரக் கூடாது.

5

முதலாளித்துவ வர்க்கத்தை எதிர்த்து தாட்சண்யமற்ற போராட்டம் தொடுக்க வேண்டுவது அத்தியாவசியம். அது, மேலே குறிப்பிட்ட சந்தர்ப்ப சூழல்கள் காரணமாகக் கடந்த சில நாட்களில் தலைதூக்கியுள்ளது. மேலும் அவசர நிலைமை பிரகடனம் செய்வது, அதன் செய்திப்பத்திரிகைகளை மூடுவது, அதன் தலைவர்களைக் கைது செய்வது இத்தியாதிகளும் அத்தியாவசியமாகும். உபரி தானியத்தை ஒளித்து வைத்தும் தானிய ஏகபோகத்தை மீறி நடந்தும்வரும் நாட்டுப்புற முதலாளித்துவ வர்க்கத்தினரை எதிர்த்த ராணுவ இயக்கம் போலவே இந்த நடவடிக்கைகளும் அவசியம். பாட்டாளி வர்க்கத்தின் மத்தியில் இரும்பனைய கட்டுப்பாடு இல்லாவிட்

டால், எதிர்ப்புரட்சியிடமிருந்தோ பஞ்சத்திடம் இருந்தோ விமோசனம் இல்லே.

கடந்த சில நாட்களாக பாட்டாளி வர்க்க ஆட்சி அதி காரத்துக்கு எதிராக பீதி—பரப்புவதை முதலாளித்துவ வர்க்கம் மிகவும் தேர்ச்சியுடனும் தந்திரமாகவும் ஓர் ஆயுத மாகப் பயன்படுத்தி வருவதைக் குறிப்பாயும் மனத்தில் இருத்த வேண்டும். நமது தோழர்களில் சிலர் குறிப்பாயும் இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் பாணி மற்றும் அரா ஜகவாதப் புரட்சிகர கோஷங்கள் பற்றிய தமது தோரணே யில் போதிய கண்டிப்பு இல்லாதவர்கள். தம்மைத் தாமே திசைதிருப்பப்பட இடமளித்துள்ளனர், பீதியடைந்துள்ள னர் அல்லது பீதி பரப்பப்படுவதில் இருந்து வரும் அபாயம் பற்றிய நியாயமான அவசியமான எச்சரிக்கை குறித்து இனங்காணத் தவறியுள்ளனர்.

ருஷ்யாவின் இன்றையப் பொருளாதார அரசியல் நிலேமை முழுவதன் அடிப்படைப் பிரத்தியேக அம்சங்களே மனதில் உறுதியாக வைத்திருக்க வேண்டும். இந்த அம்சங் கள் இருப்பதால் திடீர் எழுச்சிகள் நமது லட்சியத்துக்கு உதவ முடியாது. இந்தத் தருணம் மாறிச் செல்லும் கட்டத் தின் மிகவும் இடர்ப்பாடான அபாயகரமான காலப் பகுதி யாகும். மேலே நாடுகளில் புரட்சி தவக்கமடைவதால் இது தவிர்க்க முடியாதது. எனவே, போக்கிரிகள் குலாக்குகள், ஒழுங்கு குலேக்கும் நபர்களே எதிர்த்து தாட்சண்யமற்ற நட வடிக்கை மேற்கொள்வது உட்பட, இரும்பனேய கட்டுப்பாட் டை நிலேநாட்டுவதற்கான சுயக்கட்டுப்பாடும் பொறுமை யான படைப்பாற்றல் பணியும் மட்டுமே சோவியத் ஆட்சி அதிகாரத்தைப் பாதுகாக்க முடியும். இந்த உண்மை பற்றி நமக்குத் திட நம்பிக்கை வேண்டும், எல்லாத் தொழிலாளர் களுக்கும் இது குறித்துத் திட நம்பிக்கை ஊட்ட வேண்டும்.

1918 மே 12 அல்லது 13ந் தேதி எழுதப்பட்டது	நூல் திரட்டு,
	தொகுதி 36,
லெனின் மஞ்சரி—*11ல், 1929* முதலில் வெளியிடப்பட்டது	பக்கங்கள் 322 -326

பஞ்சம் பற்றி

(பெத்ரோகிராத் தொழிலாளருக்கு ஒரு கடிதம்)[52]

தோழர்களே, அன்று ஒரு நாள் கட்சி உறுப்பினரும், புத்திலவ் தொழிற்சாலையின் தொழிலாளியுமான, உங்கள் பிரதிநிதி என்னைச் சந்தித்தார். இந்தத் தோழர் பெத்ரோகிராதில் ஏற்பட்ட பஞ்சம் குறித்து ஒரு விவரமான மிகவும் வேதனை தருகிற ஒரு சித்திரத்தை அளித்தார். தொழில் துறை குபேர்னியாக்கள் பலவற்றில் உணவு நிலைமை இதே போல மிகவும் கடுமையாக இருக்கிறது என்பதையும், தொழிலாளர், விவசாயிகள் மற்றும் பொதுவாக ஏழை மக்கள் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் நாம் அனைவரும் அறிவோம்.

இதற்கு அக்கம் பக்கமாக தானியத்திலும் இதர உணவுப் பண்டங்களிலும் அடிக்கப்படும் கொள்ளை லாபத்தின் வெறிக் கூத்தினை நாம் காண்கிறோம். பஞ்சம் ருஷ்யாவில் தானியம் இல்லை என்பதால் ஏற்பட்டதல்ல. மாறாக, முதலாளித்துவ வர்க்கம் பொதுவாகச் செல்வந்தர்கள், பாட்டாளிகளின் ஆட்சிக்கு எதிராக, தொழிலாளர் அரசுக்கு எதிராக, சோவியத் ஆட்சி அதிகாரத்துக்கு எதிராக இந்த மிகவும் முக்கியமான மற்றும் கடுமையான பிரச்சினை மீது, உணவுப் பிரச்சினை மீது, தமது இறுதியான தீர்மானகரமான போராட்டத்தை நடத்தி வருவதே இதற்குக் காரணம். முதலாளித்துவ வர்க்கமும், நாட்டுப் புறத்துச் செல்வந்தர்கள், குலாக்குகள் உள்ளிட்ட செல்வந்தர்கள் பொதுவாகவும் தானிய ஏக போகத்தைத் தாறுமாறாக்கி வருகிறார்கள். மக்கள் முழுமைக்கும் அதில் முதலாவதாகத் தொழிலாளர் உழைப்பாளிகள் மற்றும் வறியவர்களுக்கு உணவு வழங்கும் நோக்கத்துடனும்,

அதன் நலன் கருதியும், அரசு மேற்கொண்டுள்ள தானிய வினியோகத்தைத் தகர்த்துவருகிருர்கள். முதலாளித்துவ வர்க்கத்தினர் நிர்ணய விலேகளேத் தகர்த்து வருகிருர்கள், தானியத்தில் கொள்ளே லாபமடிக்கிருர்கள், ஒவ்வொரு பூடு தானியத்திலும் நூறும் இரு நூறும் அதற்கு அதிகமுமான ரூபிள் சம்பாதிக்கிருர்கள். லஞ்சம் ஊழல் முறைகளில் இறங்கியும், ''எவன் உழைக்கவில்லேயோ அவன் உண்ணவும் வேண்டுவதில்லே'' என்ற சோஷலிசத்தின் முதன்மையான அடிப்படையான வேரான கோட்பாட்டினேச் செயல்படுத்த முயலும் தொழிலாளர் ஆட்சி அதிகாரத்தை அழிக்கும் போக்குடைய சகலத்தையும் வேண்டுமென்றே ஆதரித்தும், அவர்கள் தானிய ஏகபோகத்தையும் தானியம் சரிவர வினியோகிக்கப் படுவதையும் தகர்த்து வருகிருர்கள்.

''எவன் உழைக்கவில்லேயோ அவன் உண்ணவும் வேண்டுவதில்லே''—இதை ஒவ்வொரு உழைப்பாளியும் புரிந்து கொள்கிருர். ஒவ்வொரு தொழிலாளியும் ஒவ்வொரு ஏழை மற்றும் நடுத்தர விவசாயியும் தமது வாழ்நாளில் வறுமையால் அவதிப்பட்ட அனேவரும், எப்போதும் தனது சொந்த உழைப்பு மூலமே உயிர்வாழ்ந்துவந்த அனேவரும் இதனுடன் உடன்படுகின்றனர். ருஷ்யாவின் மக்கள் தொகையில் பத்தில் ஒன்பது பகுதி இந்த உண்மையுடன் உடன்படுகிறது. இந்த எளிமையான, முதற்படியான முற்றும் கண்கூடான மெய்மையில் தான் சோஷலிசத்தின் அடிப்படை காணக்கிடக்கிறது. அதன் வலிமையின் தவிர்க்க முடியாத ஆதாரமும், அதன் இறுதி வெற்றியின் அழிக்க முடியாத உறுதியின் அறிகுறியும் காணக்கிடக்கின்றன.

ஆனுல் இங்குள்ள முழுமையான காரியம் என்னவென்ருல், இந்த மெய்மையை ஏற்பது, இதன்பால் விசுவாசம் உறுதிப்படுத்துவது, சொல்லுருவில் அங்கீகாரம் அளிப்பது என்பது ஒரு விஷயம், ஆனுல் இதைச் செயல்படுத்த இயலுவது என்பது முற்றும் வேருன விஷயம். லட்சோப லட்சக் கணக்கான பூடுகள் தானியத்தை செல்வந்தர்கள், குலாக்குகள் மற்றும் கொள்ளேலாபக்காரர்கள் பதுக்கி மறைத்து வைத்திருக்கும் ஒரு நாட்டில்—தன்னேத்தானே ஒரு சோஷ

லிஸ்டு சோவியத் குடியரசு என்று அழைத்துக் கொள்ளும் ஒரு நாட்டில்—கடும் பட்டினியின் கொடுமையால் நூறுயிரக் கணக்கான பத்து லட்சக் கணக்கான மக்கள் (பெத்ரோகிராதில் விவசாயம் இல்லாத குபேர்னியாக்களில், மாஸ்கோவில்) வாடுகிறார்கள் என்றால் இதைப் பற்றிய உணர்வுள்ள ஒவ்வொரு தொழிலாளியும் விவசாயியும் முக்கியமான தீர்க்கமான சிந்தனை செலுத்தியே தீர வேண்டும்.

''எவன் உழைக்கவில்லையோ அவன் உண்ணவும் வேண்டுவதில்லை'' இதை எவ்வாறு செயல்படுத்துவது? இதைச் செயல்படுத்த வேண்டும் பட்சத்தில் முதலில் அரசு தானிய ஏகபோகம் நமக்கு அவசியம் தேவை, அதாவது, தானியத்தில் தனியார் வர்த்தகம் முழுவதையும் தடை செய்ய வேண்டும், நிர்ணய விலையில் உபரி தானியம் அனைத்தும் அரசிடம் கட்டாயமாக ஒப்படைக்கப்பட வேண்டும், யாராக இருந்தாலும் சரி, உபரி தானியம் பதுக்கப்படுவதும் மறைக்கப்படுவதும் முற்றாகத் தடை செய்யப்பட வேண்டும். இரண்டாவதாக, தானிய உபரிகள் யாவும் கறாராகப் பதிவு செய்யப்பட வேண்டும். அபரிமிதமாக இருக்கும் இடங்களில் இருந்து பற்றாக்குறையாக இருக்கும் இடங்களுக்குத் தானியம் கொண்டு செல்லப்படும் ஏற்பாடு பிழையற்றதாக இருத்தல் வேண்டும். பயனீட்டுக்கும், பதனப்படுத்தவும், விதைத் தானியத்துக்குமான சேமங்கள் உருவாக்கப்பட வேண்டும். மூன்றாவதாக, ஒரு தொழிலாளர் அரசால் பாட்டாளிகளின் அரசால் கண்காணிக்கப்படும் ஒரு நீதியான முறையான உணவு வினியோகம் நாட்டில் உள்ள எல்லாக் குடி மக்களுக்கும் அவசியம். இந்த வினியோகமுறை செல்வந்தருக்கு என்று எவ்விதமான தனிச்சலுகையையும் அனுகூலத்தையும் அனுமதிக்காது.

பஞ்சத்தை அகற்றிச் சமாளிப்பதற்கான இந்த நிபந்தனைகளைப் பற்றிச் சற்றே ஊன்றிப் பார்க்கும் எவரும், ஆட்சி அதிகாரத்தின் அவசியத்தை மறுக்கும் வெறுக்கத்தக்க அராஜகவாத வாய்ச்சவடால் பேர்வழிகளின் அகாதமான முட்டாள்தனத்தைப் பார்க்க முடியும். முதலாளித்துவத்தில் இருந்து கம்யூனிசத்துக்கு மாறிச் செல்வதற்கும் உழைக்கும் மக்களை எல்லா வடிவிலுமான ஒடுக்குமுறை மற்றும் சுரண்

டலில் இருந்து விடுவிக்கவும் (முதலாளித்துவ வர்க்கத்திடம் தாட்சண்யமின்றிக் கடுமை காட்டுகிற, அரசாங்கத்தை, ஒழுங்கு குலைப்-போர் பால் தாட்சண்யமின்றி உறுதியுடன் நடந்து கொள்ளும் ஓர் ஆட்சி அதிகாரம்) உரிய ஆட்சி அதிகாரம் அத்தியாவசியம். இந்தத் தருணத்தில் தான் நமது புரட்சி, சோஷலிசம் செயலுருவம் பெறுவது சம்பந்தமான பணிகளை நேரடியாகவும் ஸ்தூலமாகவும் நடைமுறையிலும் அணுகி வருகிறது. இதில் தான் இதன் மதிப்பிட முடியாத இதன் தனிச்சிறப்பு காணக்கிடக்கிறது. இந்தத் தருணத்தில் தான் இந்த ஆக முக்கியமான பிரச்சினையின் உணவுப் பிரச்சினையின் தொடர்பாகத் துல்லியமாயும் ஓர் இரும்பனைய புரட்சிகர ஆட்சிக்கான தேவை, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கான தேவை முற்றும் தெட்டத்தெளிவாகிறது. உணவுப் பண்டங்களை சேகரித்தல், அவற்றைக் கொண்டு போய்ச் சேர்த்தல், வெகுஜன தேசிய வீதத்தில் அதனை வினியோகம் செய்தல் ஆகியவற்றை ஒழுங்கமைக்கும் தேவை முற்றும் தெட்டத் தெளிவாகிறது. இதைச் செய்யும் போது கோடிக்கணக்கான மக்களின் தேவைகளைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும், ஓர் ஆண்டுக்கு அல்லது பல ஆண்டுகளுக்கு முன்கூட்டியே உற்பத்தியின் நிலைமைகள் விளைவுகளை கணிப்புச் செய்ய வேண்டும் (சில சமயம் பல ஆண்டுகள் பயிர் சாவியாகப் போகலாம் சில சமயம் தானிய விளைச், சலை அதிகரிப்பதற்கு அத்தியாவசியமான நில மேம்பாட்டு வேலைக்குப் பல ஆண்டுகள் பாடுபட நேரலாம்).

ஒரு கொள்ளைக்கார, கொலைகாரத்தனமான மிகவும் பயங்கரமான போரை நடத்தியது மூலம் ரமானவும் கேரென்ஸ்கியும், அறவே வறுமைப்பட்ட ஒரு நாட்டை, ருஷ்யன் மற்றும் அன்னிய ஏகாதிபத்தியவாதிகளால் சுத்தமாகப் பறித்தழிக்கப்பட்டதான ஒரு நாட்டை தொழிலாளி வர்க்கத்திடம் விட்டுச் சென்றனர். ஒவ்வொரு பூடு தானியத்தையும் கறாராகக் கணக்கு வைத்தால் மட்டுமே, ஒவ்வொரு பவுண்டு ரொட்டியும் முற்றிலும் சமமாகப் பங்கிடப்பட்டால் மட்டுமே ரொட்டி எல்லோருக்கும் போதுமானதாக இருக்கும். இயந்திரங்களுக்கான உணவும் அதாவது எரி

பொருளும் கடுமையாயும் பற்றுக்குறையாக உள்ளது. இதன் பயனீட்டில் தாட்சண்யமற்ற கறாரான சிக்கனமும் சரியான வினியோகமும் ஏற்படுத்த சகல முயற்சிகளும் செய்யப்படா விட்டால், ரயில்வேக்களும் ஆலைகளும் இயங்காது நின்று விடும், வேலையில்லாத் திண்டாட்டமும் பஞ்சமும் முழு தேசத் துக்கும் நாசத்தைக் கொண்டுவரும். பெரு விபத்தினை நாம் எதிரிடுகிறோம், அது மிகவும் நெருங்கிவிட்டது. சகிக்கவொண் ணுத கடுமையான மே மாதமும் அதைத் தொடர்ந்து மேலும் இடர்ப்பாடான ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்களும் வரும்.

தானியத்திலான அரசு ஏகபோகம் சட்டத்தில் இருக் கிறது, ஆனுல் நடைமுறையில் இது ஒவ்வொரு படியிலும் முதலாளித்துவ வர்க்கத்தால் தாறுமாருக்கப்படுகிறது. நாட்டுப்புறச் செல்வந்தன், குலாக்கு அண்டைப் பிரதேசங் களை பலபத்தாண்டுகளாகச் சூறையாடி வருகிறுன், கொள்ளை லாபம் அடித்தும், கள்ளச் சாராயம் வடித்தும் தனக்குத் தானே செல்வம் திரட்டுகிறுன். அவனது பையை நிரப்ப இது மிகவும் நல்லது, பஞ்சத்திற்கான பழியை அவன் சோவியத் ஆட்சி மீது சுமத்துவான். இதுவே குலாக்குகளின் அரசியல் ஆதரவாளர்களான அரசியல் சட்ட ஜனநாயகவாதி கள், காடேட்டுகள் வலது சாரி சோஷலிஸ்டுப் புரட்சி யாளர்களின் கொள்கை வழியும் ஆகும். இவர்கள் ஒளிமறை வின்றியும் மறை முகமாயும் தானிய ஏகபோகத்துக்கும் சோவியத் ஆட்சி அதிகாரத்துக்கும் எதிராகச் ''செயல்பட்டு வருகின்றனர்.'' முதுகெலும்பில்லாத கட்சியினரான இடது சாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள் இங்கும் அவர்களது உறுதியற்ற தன்மையை வெளிப்படுத்துகிறுர்கள்: அவர்கள் முதலாளித்துவ வர்க்கத்தாரின் பேராசையான அலறலுக் கும் கூப்பாட்டுக்கும் பணிந்து கொடுக்கிறுர்கள், தானிய ஏக போகத்தை எதிர்த்து அவர்கள் கூக்குரல் போடுகிறுர்கள், உணவு சர்வாதிகாரத்தை எதிர்த்துக் ''கண்டனம்'' செய் கிறுர்கள், முதலாளித்துவ வர்க்கத்தினர் அவர்களை மிரட்ட இடமளிக்கிறுர்கள். குலாக்குகளை எதிர்த்துப் போராட அஞ்சி, நிர்ணய விலைகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் தனியார் வர்த்தகம் அனுமதிக்கப்பட வேண்டும் என்றும்

இப்படியான பரிந்துரைகளை வெறிப்பிதற்றலுடன் படபடக்கிறார்கள்.

உறுதியற்றவர்களின் இந்தக் கட்சி சாமான்ய வாழ்வில் நடைபெறும் இத்தகைய சிலவற்றை அரசியலில் பிரதிபலிக்கிறது. சாமான்ய வாழ்வில் குலாக்கு ஏழை விவசாயிகளை சோவியத்துக்கு எதிராகத் தூண்டிவிடுகிறார். சில ஏழை விவசாயிகளுக்கு ஒரு பூடு தானியத்தை ஆறு ரூபிளுக்கு விற்காமல் மூன்று ரூபிளுக்கு விற்பனை செய்து அதன் மூலம் லஞ்சம் தருகிறார். இவ்வாறு ஊழல் படுத்தப்பட்ட ஏழை விவசாயி கொள்ளை லாபவிலையான நூற்று ஐம்பது ரூபிளுக்கு இந்த தானியத்தை விற்று ''சற்றே பணம் பண்ணலாம்'' அவர், தானியத்தில் தனியார் வர்த்தகத்தைத் தடை செய்துள்ள சோவியத்தைக் கண்டிப்பவராகி விடுகிறார்.

சிந்திக்கும் ஆற்றலுடைய எவரும், சற்றேனும் சிந்தித்துப் பார்க்க விரும்பும் எவரும் இந்தப் போராட்டம் செல்லும் கொள்கை வழி என்ன என்பதைத் தெளிவாகப் பார்க்கலாம்.

ஒன்று, முன்னேறியவர்களான வர்க்க உணர்வுடைய தொழிலாளர்கள் வெற்றியடைந்து, ஏழை விவசாயி மக்கள் திரளைத் தம்மைச் சுற்றிலும் ஒன்றிணைத்துக் கொண்டு, ஒரு கடுங்கண்டிப்பான அமைப்பினை, இரக்கமற்ற கடுமையான ஆட்சியை, ஒரு மெய்யான பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தினை நிலை நாட்டுவார்கள்—ஒன்று, அவர்கள் குலாக்குகளைக் கீழ்ப்படியும்படி கட்டாயப்படுத்தி தேசிய அளவில் உணவையும் எரிபொருளையும் சரியாக வினியோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்வார்கள்;

—அல்லது முதலாளித்துவ வர்க்கத்தினர் குலாக்குகளின் உதவியோடும், உறுதியற்ற குழம்பிய மனத்தினர் (அராஜகவாதிகள், இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்) ஆதரவுடனும் சோவியத் ஆட்சி அதிகாரத்தை வீழ்த்தி ஒரு ருஷ்ய-ஜெர்மானிய அல்லது ருஷ்ய-ஜப்பானிய கர்னீலவை ஆட்சியில் அமர்த்துவர். அவர் பின்லாந்திலும் உக்ரேனிலும் போன்று மக்களுக்கு பதினாறு மணி வேலை நாள், வாரத்துக்கு ஓர் அவுன்சு ரொட்டி, தொழிலாளர்களைக் கூண்டோடு

சுட்டுக் கொல்வது சிறைக்கிடங்குகளில் சித்திரவதை செய்வது ஆகியவற்றை வழங்குவார்.

ஒன்று இது—அல்லது அது.

நடுப்பாதை என்பது இல்லை.

நாட்டின் நிலைமை மிகமிக நம்பிக்கையற்ற ஒன்றாக இருக்கிறது.

அரசியல் வாழ்க்கைபற்றிச் சிந்தித்துப் பார்க்கும் எவரும், அரசியல் சட்ட ஜனநாயகவாதிகளும் வலதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளரும் மென்ஷிவிக்குகளும், ஒரு ருஷ்ய-ஜெர்மானியக் கர்னீலவா அல்லது ருஷ்ய-ஜப்பானியக் கர்னீலவா யார் அதிக ''இனியவராக'' இருப்பார், ஒரு முடியாட்சி கர்னீலவா அல்லது குடியரசுக் கர்னீலவா யார் புரட்சியை அதிகத் திறம்படவும் நம்பகமாகவும் நசுக்குவார், என்பது பற்றி ஓர் இணக்கம் ஏற்படுத்திக் கொள்கின்றனர் என்பதைக் காணத் தவற மாட்டார்.

வர்க்க உணர்வுடைய முன்னேறிய தொழிலாளர்கள் அனைவரும் ஓர் இணக்கத்துக்கு வர வேண்டிய காலம் வந்து விட்டது. அவர்கள் தம்மைத்தாமே எழுச்சி கொளச்செய்து ஒவ்வொரு நிமிடத்திய தவக்கமும் நாட்டுக்கு நாசகரமானது, புரட்சிக்கு நாசகரமானது என்பதை உணரும்படி செய்யும் காலம் வந்து விட்டது.

அரைகுறை நடவடிக்கைகளால் பயன் இல்லை. குறை கூறுவதால் எவ்வித வழிகாட்டலும் கிட்டாது. ''ஒவ்வொரு மனிதனும் தனக்கு மட்டும்'' என்ற முறையில் ''சில்லரை வர்த்தக பாணியில்'' ''நமது'' ஆலை ''நமது'' பட்டறை என்று உணவோ எரிபொருளோ பெறச் செய்யும் முயற்சிகள் ஒழுங்குக்குலைவை மேலும் அதிகரிக்கும், கொள்ளை லாபக் காரர்கள் தமது சுயநலமான கேவலமான கயமைத்தனமான வேலையைச் செய்ய வசதியளிக்கும்.

இதனால் தான் தோழர்களே, பெத்ரோகிராத் தொழிலாளர்களே, இக்கடிதத்தை உங்களுக்கு உரிமையுடன் எழுதியுள்ளேன். பெத்ரோகிராத் ருஷ்யா அல்ல. பெத்ரோகிராத் தொழிலாளர்கள் ருஷ்யாவின் தொழிலாளர்களில் ஒரு சிறு பகுதி மட்டுமே ஆவர். ஆனால் அவர்கள் ருஷ்யாவின் தொழி

லாளி வர்க்கத்தின் அனைத்து உழைக்கும் மக்களின் ஆகச் சிறந்த, முன்னேறிய, மிகவும் வர்க்க உணர்வுடைய, மிகவும் உறுதியான படைப் பிரிவுகளில் ஒன்றாக விளங்குபவர்கள்; வெற்றுத் தொடர்கள் உறுதியற்ற விரக்தி மற்றும் முதலாளித்துவ வர்க்கத்தாரின் மிரட்டலுக்குப் பணியாதவர்கள். தேசங்களின் வாழ்க்கையில் நெருக்கடியான தருணங்களில், முன்னேறிய வர்க்கங்களின் சிறிய முன்னேறிய படைப் பிரிவுகளும் கூட, மற்றவர்களைத் தம்மோடு இணைத்துச் சென்று, மக்கள் திரளுக்குப் புரட்சிகர ஊக்கமூட்டி, பிரம்மாண்டமான வரலாற்று அருஞ் செயல்களை வெற்றிகரமாகச் சாதித்துள்ள சம்பவங்கள் அடிக்கடி நிகழ்ந்துள்ளன.

''புத்திலவ் ஆலையில் நாங்கள் நாற்பதாயிரம் பேர் இருந்தோம்'' என்று பெத்ரோகிராத் தொழிலாளர் பிரதிநிதி என்னிடம் கூறினர். ஆனால் அவர்களில் பெரும்பான்மையினர் ''தற்காலிகத்'' தொழிலாளர், பாட்டாளிகள் அல்ல, நம்பவியலாத வலிவற்ற கும்பல். இப்போது இருப்போர் பதினையாயிரம் பேர், ஆனால் இவர்கள் பாட்டாளிகள், போராட்டத்தில் புடம் போடப்பட்டு உருக்கேறியவர்கள்.

இந்த வகையான புரட்சியின் முன்னணிப் படை தான்—பெத்ரோகிராதிலும், நாடுமுழுவதிலும் போராட்ட முழக்கம் செய்தல் வேண்டும். ஒன்று சேர்ந்து எழுச்சியுற வேண்டும். நாட்டின் விமோசனம் தமது கரங்களில் இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அவர்களிடமிருந்து தான் 1905 ஜனவரி மற்றும் அக்டோபரிலும், 1917 பிப்ரவரி மற்றும் அக்டோபரிலும் அவர்கள் தோற்றுவித்ததான வீர சாகசத்தைவிடச் சற்றும் குறையாத வீரசாகசம் எதிர்பார்க்கப்படுகிறது. தானியத்தில் கொள்ளை லாபம் அடிப்போர், குலாக்குகள், புல்லுருவிகள், குலைவாளர்கள், லஞ்சம் வாங்குவோர்களை எதிர்த்து ஒரு மாபெரும் ''அறப்போர்'' ஏற்பாடு செய்யப்பட வேண்டும். மக்களுக்கான ரொட்டியும் இயந்திரங்களுக்கான உணவும் திரட்டப்பட்டு கொண்டு செல்லப்பட்டு வினியோகம் செய்யப்படுவது குறித்த ஆகக் கறாரான அரசு உத்தரவை மீறுவோர்களை எதிர்த்து ஒரு மாபெரும் ''அறப்போர்'' ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

முன்னேறிய தொழிலாளர்களின் வெகுஜன முயற்சி மூலம் மட்டுமே நாடும் புரட்சியும் பாதுகாக்கப்பட முடியும். நமக்குப் பத்தாயிரக் கணக்கான முன்னேறிய உருக்கேறிய பாட்டாளிகள் அவசியம். அவர்கள் நாடு முழுதிலுமுள்ள லட்சக்கணக்கான ஏழை விவசாயிகளுக்குக் காரியங்களை விளக்கிக் கூறவும் இந்த லட்சக்கணக்கான பேருக்குத் தலைமை மேற்கொள்ளவும் போதிய அளவுக்கு வர்க்க உணர்வு பெற்றிருக்க வேண்டும். கொள்ளை லாபமடிக்கும் ஆசையால் கவரப்பட்டு, மக்கள் லட்சியத்துக்குப் போராடுவோர் திருடர்களாக மாறுவதற்கு இடம் தரும் அனைவரையும் தமது மத்தியில் இருந்து தாட்சண்யமின்றி புறம் தள்ளவும் சுட்டுத்தள்ளவும் போதுமான உறுதி உள்ளவர்களாக இருத்தல் வேண்டும். இந்த அறப்போரின் எல்லாத் துன்பதுயரங்களையும் ஒழுங்கமைந்த முறையில் தாங்கக் கூடிய அளவுக்குப் புரட்சியின் பால் போதிய பற்றுறுதியும் அர்ப்பணிப்பும் கொண்ட பாட்டாளிகள் நமக்குத் தேவை. அவர்கள் இந்த அறப்போரை நாட்டின் எல்லா மூலைகளுக்கும் எடுத்துச் சென்று ஒழுங்கமைதியை நிலை நாட்டவும், சோவியத் ஆட்சி அதிகாரத்தின் வட்டார உறுப்புகளைக் கெட்டிப்படுத்தவும் ஒவ்வொரு பூடு தானியம் மற்றும் ஒவ்வொரு பூடு எரிபொருள் மீதும் வட்டாரங்களில் கண்காணிப்புச் செலுத்தவும் பாடுபட வேண்டும்.

பழக்கமான இடத்தை விட்டு நகராமல், அறப்போரில் சேராமல், மூடப்பூதமான ரமானவ் அல்லது முட்டாளும் தற்பெருமையாளருமான கேரென்ஸ்கிக்கு எதிரான ஒருதிடீர் புரட்சி எழுச்சி அளவில் நின்றுவிட்டு, ஒரு சில நாட்கள் வீர சாகசத்தைத் தோற்றுவிப்பதை விட இதைச் செய்வது அதிக இடர்ப்பாடானதாகும். ஓர் எழுச்சியில் தோற்றுவிக்கும் வீரசாகசத்தை விட தேசிய அளவிலான நீடித்த விடா முயற்சியான ஸ்தாபனப் பணியில் தோற்றுவிக்கும் வீரசாகசம் மிகப் பேரளவுக்கு அதிகக் கடினமானது, அதே சமயம் பேரளவுக்கு மேம்பாடு உடையதும் ஆகும். ஆனல் தொழிலாளி வர்க்கக் கட்சிகளின் வலிமை தொழிலாளி வர்க்கத்தின் வலிமை, அவை ஆபத்தை தீரத்துடன் நேர்மையுடன் பகிரங்கமாக நேருக்கு நேர் எதிரிடுவதில் தான் எப்போதும் காணக்

கிடக்கிறது. ஆபத்து இருக்கிறது என்று ஒப்புக்கொள்ள அவை அஞ்சுவதில்லை, ''நமது'' முகாமிலும் ''மற்றவர்'' முகாமிலும் சுரண்டலாளர் முகாமிலும் இருக்கும் சக்திகளை அவை நிதானமாகச் சீர்தூக்கி மதிப்பிடுகின்றன. புரட்சி முன்னேறி வருகிறது, வளர்ந்து வருகிறது, பெருகிவருகிறது. நாம் எதிரிடும் பணிகளும் பெருகிவருகின்றன. போராட்டம் விரிவும் ஆழமும் அடைந்து வருகிறது. ரொட்டியும் எரிபொருளும் முறையாகச் சரிவர வினியோகிக்கப்படுவது, அவை மேலும் பெருமளவில் கொள்முதல் செய்யப்படுவது, தொழிலாளர்கள் மூலம் நாடுதழுவிய அளவில் மிகவும் கறாரான கணக்குப் பதிவும் கண்காணிப்பும் ஏற்பாடு செய்வது. இதுவே சோஷலிசத்திற்கான மெய்யான முக்கியமான முற்செயலாகும். இது இனிமேலும் ''பொதுவான புரட்சிகரப்'' பணி அல்ல, மாறாக ஒரு கம்யூனிஸ்டுப் பணியாகும். உழைக்கும் மக்களும் ஏழைமக்களும் முதலாளித்துவத்தை எதிர்த்துத் தீர்மானகரமான போராட்டத்தில் ஈடுபடுவதை அவசியமாக்கும் ஒரு கடமையாகும்.

இந்தப் போராட்டம் ஒருவர் தமது வலிமை முழுவதையும் அளிப்பதற்கான தகுதி வாய்ந்தது. இடர்ப்பாடுகள் மிகவும் பெரிது. ஆனால் நாம் எதற்காகப் போராடி வருகிறோமோ அந்த ஒடுக்கு முறையையும் சுரண்டலையும் ஒழிப்பதற்கான லட்சியமும் மகத்தானது.

மக்கள் பட்டினி கிடக்கும் போது, வேலையில்லாத் திண்டாட்டம் என்றையும் விட மிகவும் பயங்கரமாகி வரும் போது உபரியாக ஒரு பூடு தானியத்தை ஒளித்து வைக்கும் எவரும், அரசுக்கு ஒரு பூடு எரிபொருள் நஷ்டப்படுத்தும் எவரும் அப்பட்டமான குற்றவாளி ஆவார்.

இத்தகைய நேரத்தில்—ஓர் உண்மையான கம்யூனிஸ்டு சமுதாய அமைப்பு விஷயத்தில் இது எப்போதுமே மெய்யாகும்—ஒவ்வொரு பூடு தானியமும் எரிபொருளும் மெய்ப்படியாகவே புனிதமானது. பூவுலகில் அடிமை வாழ்வுக்குப் பரிசாக வானுலக அரசை வாக்களித்து மூடர்களைக் குழப்புவதற்குப் புரோகிதர்கள் பயன்படுத்தும் புனித சாதனங்களை விடவும் இவை அதிகப் புனிதமானவை. புரோகிதர்களின்

''புனிதத்தன்மையின்'' சகல மீதமிச்சங்களில் இருந்தும் இந்த மெய்யான புனிதப் பொருளே விடுவிக்கும் பொருட்டு இதை முற்றுக உடைமை கொள்ள வேண்டும், நடைமுறையில் அதன் சரியான வினியோகத்தைச் சாதனையாக்க வேண்டும், விதிவிலக்கு இன்றி அது முழுவதையும் திரட்ட வேண்டும். உபரி தானியத்தின் ஒவ்வொரு மணியும் அரசுக்களஞ்சியத்திற்குள் கொண்டுவரப்பட வேண்டும், ஒளித்து வைக்கப்பட்ட அல்லது சேமிக்கப்படாத உபரி தானியம் நாடு முழுதும் இருந்து முற்றிலும் துடைத்தகற்றப்பட வேண்டும். எரிபொருள் உற்பத்தியை அதிகரிக்கவும், எரிபொருளில் ஆகப் பெரிய சிக்கனத்தை அமுலாக்கவும் அதைக் கொண்டு செல்வதிலும் பயனீடு செய்வதிலும் ஆகப் பெரிய திறனே ஏற்படுத்தவும் அவசியமான முயற்சிகள் அனைத்தையும் ஒருமுகப்படுத்த தொழிலாளியின் உறுதியான கரம் தேவை.

தானியம் எரிபொருள் உற்பத்தியின் ஒவ்வொரு மையத்திலும், வழங்கு துறை வினியோகத்தின் ஒவ்வொரு முக்கிய மையத்திலும் முன்னேறிய தொழிலாளர்களின் வெகுஜன ''அறப்போர்'' தேவை. வேலையின் முனைப்பைப் பத்து மடங்கு அதிகரிக்கவும், கணக்குப் பதிவு கண்காணிப்பு ஆகிய ஜோலிகளில் சோவியத் ஆட்சி அதிகாரத்தின் வட்டார உறுப்புக்களுக்கு உதவி செய்யவும், ஆயுதப் படைகள் மூலம் கொள்ளைலாபம், லஞ்ச ஊழல் மற்றும் சோம்பலைத் துடைத்தெறியவும் இந்த வெகுஜன ''அறப்போர்'' அவசியமாகும். இது புதிய கடமை அல்ல. சரியாகக் கூறுமிடத்து வரலாறு புதிய கடமைகளே முன்வைக்கவில்லை,—அது செய்வதெல்லாம் புரட்சியின் வீச்சும் அதன் இடர்ப்பாடுகளும் அதன் உலகவரலாற்று லட்சியங்களின் மகத்துவமும் அதிகரிப்பதால் பழைய கடமைகளின் வீச்சையும் அளவையும் அதிகரிப்பது மட்டுமேயாகும்.

அக்டோபர் புரட்சியின்—சோவியத் புரட்சியின் ஆக மகத்தான தவிர்க்க முடியாத வெற்றி சாதனைகளில் ஒன்று முன்னேறிய தொழிலாளி, ஏழை மக்களின் தலைவனுகை, நாட்டுப் புறத்துப் பாடுபடும் மக்களின் தலைவனுகை, பாட்டாளிகளின் அரசின் நிர்மாணியாக ''மக்கள் மத்தியில் விளங்கு

வதேயாகும்.'' பெத்ரோகிராதும் இதர பாட்டாளி வர்க்க மையங்களும் நாட்டுப் புறத்துக்கு ஆயிரக்கணக்கான தமது சிறந்த தொழிலாளர்களை வழங்கியுள்ளன. கலேதின்கள் தூத்தவ்களை எதிர்த்த போராளிகளின் படைப் பிரிவுகளும் உணவுப் படைப் பிரிவுகளும் புதியனவல்ல. பேரபாயம் நெருங்கி வருவதும் நிலைமையின் கடுமையும் மட்டுமே நம்மை முன்னை விடப் பத்துமடங்கு அதிகமாகச் செயல்படுமாறு கட்டாயப் படுத்துகின்றன.

தொழிலாளி ஏழை மக்களின் முன்னணிப் படை ஆன போது அதன் மூலம் ஒரு முனிவனுகி விடவில்லை. அவன் மக்களை முன்நோக்கி நடத்திச் சென்ருன், ஆனல் அவனும் குட்டி முதலாளித்துவச் சிதைவின் நோய்களால் பீடிக்கப்பட்டான். சிறந்த அமைப்புத் திரட்சியும் மிகவும் வர்க்க உணர்வும் ஆகக் கட்டுப்பாடும் உறுதியும் உள்ள தொழிலாளர்களின் படைப் பிரிவுகள் எந்தளவுக்கு மிகவும் குறைவாக இருந்தனவோ அந்தளவுக்கு அதிகமாக இந்தப் படைப்பிரிவுகள் அடிக்கடி சீரழிந்தன; மேலும் அடிக்கடி கடந்தகாலத்தின் சிறு உடமையாளர் இயல்புகள் வருங்காலத்தின் பாட்டாளி-கம்யூனிஸ்டு உணர்வு மீது வெற்றிகண்டன.

கம்யூனிஸ்டுப் புரட்சியைத் துவங்கிவிட்ட தொழிலாளி வர்க்கம் நிலப்பிரபுக்கள், முதலாளிகள் சமுதாய அமைப்பில் இருந்து, சுரண்டலாளர் புல்லுருவிகளின் சமுதாய அமைப்பில் இருந்து, ஒரு சிலரின் இழிவான சுயநலம், சொந்த லாபத்தையும் பலரின் வறுமையையும் அடிப்படையாக்கிய சமுதாய அமைப்பில் இருந்து வழிவழியே வந்த பலவீனங்களையும் தீக்குணங்களையும் திடீர் என்று அகற்றி விட முடியாது. ஆனல் தொழிலாளி வர்க்கம் தனது தீக்குணங்கள் பலவீனங்களுடன், எதிரிக்கு விரோதமாக அனுபவத்தால் மேலும் அதிகமான அறிவொளி படைத்த, போராட்டத்தின் துன்ப துயரங்களால் முறுக்கேறிய மேலும் அதிகமான தொழிலாளர் படைப் பிரிவுகளைக் கொண்டு வந்தால், பழைய உலகை வென்று முறியடிக்க முடியும், இறுதியில் நிச்சயமாயும் தவிர்க்க முடியாவகையிலும் வென்று முறியடித்தே தீரும்.

ருஷ்யாவில் இருக்கும் நிலைமை இத்தகையதே இத்தகை

யது மட்டுமே. தன்னந்தனியே பிளவுற்ற நிலையில் நாம் பஞ்சத்தையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் சமாளிக்க முடியாது. இந்தப் பரந்த நாட்டின் ஒவ்வொரு மூலை முடுக்குக்கும் முன்னேறிய தொழிலாளர்களின் ஒரு மாபெரும் ''அறப்போர்'' அவசியம். வர்க்க உணர்வுடைய கம்யூனிசத்தின் பால் எல்லையற்ற அர்ப்பணிப்புடைய பாட்டாளிகளின் இரும்பனைய படைப்பிரிவுகள் பத்து மடங்கு அதிகமாக நமக்குத் தேவை. அப்புறம் நாம் பஞ்சத்தையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் வெல்வோம். புரட்சியை சோஷலிசத்தின் மெய்யான முற்செயல் ஆக்குவோம். பின்னர் நாம் ஏகாதிபத்தியக் கழுகுகளை எதிர்த்து வெற்றிகரமான தற்காப்புப் போர் நடத்தும் நிலையில் இருப்போம்.

1918, மே 22 நி. லெனின்

பிராவ்தா, இதழ் *101*
1918, மே *24*

நூல் திரட்டு,
தொகுதி *36,*
பக்கங்கள் *357-364*

தேசியப் பொருளாதார தலைமைக் கவுன்சில்களின் முதலாவது அகில-ருஷ்யக் காங்கிரசில் ஆற்றிய உரை

1918, மே 26[53]

(லெனினது வருகையைத் தொடர்ந்து தொடர்ந்த கரவொலி முழக்கம்.)

தோழர்களே, முதன் முதலாக மக்கள் கமிசார்கள் கவுன்சிலின் பேரால் தேசியப் பொருளாதாரக் கவுன்சில்களின் காங்கிரசுக்கு என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். (கரவொலி.)

தோழர்களே, தேசிய தலைமைப் பொருளாதாரக் கவுன்சிலுக்கு[54] இப்போது மிகவும் கடினமான ஆனால் மிகவும் கைம்மாறு தருகிற ஒரு பணி உள்ளது. அக்டோபர் புரட்சியின் ஆதாயங்கள் இன்னும் முன் செல்லும் அளவுக்கு, அது தொடங்கிவைத்த எழுச்சி மேலும் தீர்க்கமடையும் அளவுக்கு, சோஷலிஸ்டுப் புரட்சியின் சாதனைகள் மேலும் உறுதியாக நிலை நாட்டப்படும் அளவுக்கு, சோஷலிஸ்டு அமைப்பு கெட்டிப்படும் அளவுக்கு பொருளாதாரக் கவுன்சில்களின் பங்கு அதிகமாகும், உயர்வுபெறும், அரசு நிறுவனங்களில் எல்லாம் வைத்து இவை மட்டுமே நிலைத்திருக்கும். சோஷலிஸ்டு அமைப்பு நிறுவப்படுவதை நாம் நெருக்கமாக அணுகி வரும் போது இவற்றின் நிலை மேலும் நிலைத்து நிற்கக் கூடியதாக மாற்றமுறும். முற்றிலும் நிர்வாகம் சார்ந்த பொறியமைவின் நிர்வாகத்தில் முழுமையாக ஈடுபட்டுள்ள ஒரு பொறியமைவின் தேவை குறையும். சுரண்டலாளர்களின் எதிர்ப்பு இறுதியாகத் தகர்க்கப்பட்ட பிறகு, உழைக்கும் மக்கள் சோஷலிஸ்டு உற்பத்தியை ஒழுங்கமைக்கத் தெரிந்து கொண்ட பிறகு, இந்த நிர்வாகப் பொறியமைவு இச்சொல்லின் சரியான கருரான குறுகிய பொருளில் பழைய

அரசின் இந்தப் பொறியமைவு, மடிந்தழிவது திண்ணம். அதேபோதில் தலைமைப் பொருளாதாரக் கவுன்சில் மாதிரியான பொறியமைவு நிச்சயமாயும் வளரும் வளமுறும் வலிமையடையும் ஸ்தாபனத் திரட்சியுள்ள சமூகத்தின் எல்லாப் பிரதானச் செயல்களையும் நிறைவேற்றும்.

இதனுல்தான் தோழர்களே, நாம் நமது தலைமைப் பொருளாதாரக் கவுன்சில் மற்றும் வட்டாரக் கவுன்சில்களின் அனுபவத்தை, அவை நெருக்கமாயும் பிரிக்கவொண்ணு முறையிலும் தொடர்புபூண்டுள்ள செயல்களுடன் சேர்த்துப் பார்க்கும் போது, பல காரியங்கள் முடிவுருமல், முழுமையடையாமல், ஒழுங்கமையாமல் இருந்த போதிலும் நாம் நம்பிக்கை இன்மை சார்ந்த முடிவுக்கு வருவதற்கான அற்பமான அடிப்படை கூட இல்லை என்று நான் கருதுகிறேன். தலைமைப் பொருளாதாரக் கவுன்சில் தனக்குத்தானே வகுத்து வைத்துக் கொள்ளும் பணி, பிராந்திய வட்டாரக் கவுன்சில்கள் தமக்குத்தாமே வகுத்து வைத்துக் கொள்ளும் பணி மிகப் பேரளவானதாயும், சர்வாம்சமானதாயும் இருப்பதன் காரணமாக, நாம் எல்லோரும் உற்று நோக்கும் இதில், கவலைதரக்கூடிய எதுவும் அறவே இல்லை. மிகப் பல தடவை —நமது கருத்து நிலையில் இருந்து நிச்சயமாயும் ஒருவேளை மிகவும் அடிக்கடி—‘‘மூன்று முறை அள ஒருதரம் வெட்டு’’ என்ற பழமொழி பிரயோகிக்கப்படவில்லை. துரதிருஷ்டவசமாக அந்தப் பழமொழியில் வெளியிட்டிருப்பது போன்று சோஷலிஸ்டு வழிகளில் பொருளாதாரத்தை ஒழுங்கமைப்பது சம்பந்தமான காரியம் அத்தனை எளிதானதல்ல.

சகல ஆட்சி அதிகாரமும்—இந்தத் தடவை அரசியல், பிரதானமாயும் அரசியல் ஆட்சி அதிகாரம் மட்டுமல்ல, ஆனுல் பொருளாதார ஆட்சி அதிகாரமும் அதாவது அன்ருட மானுட வாழ்க்கையின் ஆக ஆழமான அடித்தளங்கள் மீதே பாதிப்புச் செலுத்தும் ஆட்சி அதிகாரம்—ஒரு புதிய வர்க்கத்திடம் மாற்றி ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த வர்க்கம் மனிதகுல வரலாற்றில் முதல் தடவையாக மக்கள் தொகையின் மிகப்பெரிய பெரும்பான்மையின், உழைக்கும் சுரண்டப்படும் மக்களின் முழுத் திரளுக்கும் தலைவனுகத்

திகழ்கிறது. இந்த நிலையில் நமது கடமைகள் மேலும் சிக்க லுறுகின்றன. கோடிக்கணக்கான மக்களின் வாழ்க்கையின் ஆக ஆழமான அடித்தளங்களை முற்றிலும் புதிய வழிகளில் நாம் ஒழுங்கமைக்க வேண்டியுள்ள போது நம்மை எதிரிடும் ஸ்தாபனக் கடமைகளின் ஆக உயர் முக்கியத்துவமும் உயர் கடினமும் காரணமாக ''மூன்று முறை அள ஒருதரம் வெட்டு'' என்ற பழமொழியில் போன்று அவ்வளவு எளிதாகக் காரி யங்களை ஏற்பாடு செய்வது சாத்தியமல்ல என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஒரு சாதனத்தை எண்ணற்ற தடவைகள் அளந்து விட்டுப் பிறகு இறுதியாக அளக்கப்பட்டுப் பொருத் தப்பட்டதை வெட்டிவிட்டுப் பொருத்தும் நிலையில் நாம் நிச்சயமாயும் இல்லை. நாம் முன்னேறிச் செல்லும் போக்கில் நமது பொருளாதாரக் கட்டமைவை நிர்மாணிக்க வேண்டும். பல்வேறு நிறுவனங்களைத் தேர்ந்து ஆராய வேண்டும், அவற் றின் வேலையைக் கவனிக்க வேண்டும், உழைக்கும் மக்களின் பொது அனுபவத்தால், எல்லாவற்றுக்கும் மேலாக அவற் றின் வேலையின் பலன்களை வைத்துப் பரிசீலிக்க வேண்டும். நாம் முன்னேறிச் செல்லும் போக்கில் மேலும் சுரண்டலா ளர்களின் ஆவேசமான போராட்டமும் வெறித்தனமான எதிர்ப்பும் உள்ள நிலைமையில் இதை நாம் செய்ய வேண் டும். முதலாளித்துவச் சுரண்டலின் கடைசிச் சொத்தைப் பல்லைப் பிடுங்கி எடுக்கக் கூடிய தருணத்தை நாம் எந்தளவு நெருங்கி வருகிறோமோ, அந்தளவு சுரண்டலாளர்களின் வெறியாட்டமும் அதிகரிக்கிறது. ஒரு குறுகிய காலகட்டத் திற்கு உள்ளேயே தேசியப் பொருளாதாரத்தின் பல்வேறு கிளைகளின் மாதிரிகள், ஒழுங்கு விதிகள், நிர்வாக அமைப்பு களைப் பல தடவைகள் நாம் மாற்றம் செய்ய வேண்டி ஏற் பட்ட போதிலும், இந்த நிலைமைகளில் நம்பிக்கை இன் மைக்குச் சிறிதளவும் ஆதாரம் இல்லை என்பது புரிந்துகொள் ளக் கூடியதே. இருப்பினும் தமது சிறந்த உணர்வுகள் புண் படுத்தப்பட்டதாகக் கருதும் முதலாளித்துவ வர்க்கத்தின ரும் சுரண்டலாளர்களும் வன்மத்துடன் வெடித்துக் குமுறு வதற்கு இது பெருமளவு இடம் தருகிறது. இந்த வேலையில் உதாரணமாக, பிரதான தண்ணீர் வாரியத்தில், மிகவும்

நெருக்கமான மிகவும் நேரடியான பங்கு வகிப்போர் ஒழுங்கு விதிகளையும் நிர்வாகத்தின் நியதிகள் மற்றும் சட்டங்களை யும் மூன்று தடவை மாற்றுவதை எப்போதும் திருப்திகர மாக இருப்பதாகக் கருத முடியாது. இத்தகைய வேலையில் இருந்து பெறும் திருப்தி பெரிதல்ல. அரசாணைகளை மிகவும் அடிக்கடி மாற்றும் நேரடியான பொல்லாங்கில் இருந்து நாம் ஓரளவுக்கு நம்மை நாமே விலக்கிக் கொண்டும், அதன் சொந்த மான இன்னும் போதாததாக இருக்கும் அதன் சக்திகளின் உதவிகொண்டு ருஷ்யப் பாட்டாளி வர்க்கம் செய்து முடிக்க வேண்டியிருக்கும் பேரளவான உலக-வரலாற்று முக்கியத் துவம் உள்ள கடமையை மேலும் சற்று ஆழமாகப் பார்ப் போமானல், பல்வேறு நிர்வாக முறைகளிலும் பல்வேறு வடிவிலான கட்டுப் பாட்டிலும் இன்னும் பல மாற்றங்களைச் செய்வதும் அவற்றை நடைமுறையில் சோதிப்பதும் தவிர்க்க முடியாதது என்பது உடனடியாகப் புரிந்துகொள்ளக் கூடிய தாகும். இத்தகைய பிரம்மாண்டமான பணியில் நாம் முன் கூட்டியே நிர்ணயம் செய்த நெறிமுறைகளுக்கு ஏற்ப ஒரே அடியில் புதிய சமுதாய அமைப்பின் ஸ்தாபன வடிவங்களை உடனடியாக நிலைநாட்டி உருவாக்க முடியும் என்று என்றுமே உரிமை பாராட்டி இருக்க முடியாது; எதிர்காலத்தின் வாய்ப்பு கள் குறித்து என்றேனும் எழுதியுள்ள விவேகமுள்ள சோஷ லிஸ்டு எவரும் இதை என்றுமே கருதி இருக்க முடியாது.

நமக்குத் தெரிந்திருந்தது அனைத்தும், முதலாளித்துவ சமூகம் பற்றிய சிறந்த நிபுணர்கள் அதன் வளர்ச்சியை முன் னறிந்து கூறிய மாபெரும் சிந்தனையாளர்கள் நமக்குத் துல்லி யமாகச் சுட்டிக் காட்டியதுமான எல்லாம் என்னவெனில், இந்த மாற்றம் வரலாற்று ரீதியாகத் தவிர்க்க முடியாதது என்பதும் இது ஒரு குறிப்பிட்ட முக்கியமான வழியில் நடை பெற வேண்டும் என்பதும் உற்பத்தி சாதனங்களிலான தனி உடைமை உரிமை வரலாற்று ரீதியில் அழிந்தே தீரும் என் பதும் அது நிச்சயம் தகர்ந்தழிய வேண்டும், சுரண்டலாளர் கள் தவிர்க்க முடியாத வகையில் உடைமை நீக்கம் செய்யப் படுவார்கள் என்பதும் ஆகும். இது விஞ்ஞான ரீதியான துல்லியத்துடன் நிலைநாட்டப்பட்டது. நாம் சோஷலிசத்தின்

பதாகையைப் பற்றிக் கொண்ட போது, நாம் நம்மை சோஷலிஸ்டுகள் என்று பறை சாற்றிக் கொண்ட போது, நாம் சோஷலிஸ்டுக் கட்சிகளை நிறுவிக் கொண்ட போது, நாம் சமுதாயத்தை மாற்றி அமைத்த போது—இதை நாம் அறிந்திருந்தோம். சோஷலிஸ்டு மறு சீரமைப்பை நோக்கிச் செயல்படும் நோக்கத்துடன் நாம் ஆட்சி அதிகாரத்தை மேற் கொண்ட போது நாம் இதை அறிந்திருந்தோம். ஆனால் நமக்கு மாற்றங்களின் வடிவங்கள் பற்றியோ ஸ்தூலமான மறு சீரமைப்பின் வளர்ச்சி விகிதம் பற்றியோ தெரிந்திருக்க முடியாது. இந்த விஷயத்தில் கூட்டு அனுபவம், லட்சோப லட்சம் பேரின் அனுபவம் மட்டுமே நமக்கு நிர்ணயமான வழிகாட்டுதலை வழங்க முடியும். நமது பணிக்கு, சோஷ லிசத்தை நிர்மாணிக்கும் பணிக்கு, நிலப்பிரபுத்துவ சமுதாயத் திலும் முதலாளித்துவ சமுதாயத்திலும் வரலாற்றைப் படைத்தவர்களான அந்த உயர் பகுதிகளைச் சேர்ந்த நூறு பேர், நூறுயிரம் பேர்களின் அனுபவம் போதுமானதல்ல என்பதே இதற்குக் குறிப்பான காரணமாகும். அவர்களது இந்த வழியில் நாம் முன்னேறிச் செல்ல முடியாது என்பதற்குத் திட்டவட்டமான காரணம், நாம் கூட்டு அனுபவத்தை லட்சோபலட்சம் உழைக்கும் மக்களின் அனுபவத்தைச் சார்ந்து நிற்கிறோம் என்பதாகும்.

எனவே, சோவியத்துகளின் பிரதானமான அடிப்படை யான பணியான ஸ்தாபனப் பணி மீது பரந்த அளவிலான சோதனைகள், பரந்த அளவிலான நடவடிக்கைகள், பரந்த அளவிலான மாற்றங்கள், பரந்த அளவிலான இடர்ப்பாடு கள் தவிர்க்க முடியாத வகையில் சுமத்தப்படும் என்பதை யும், இதைப் பற்றிய அனுபவம் நமக்கு இல்லாததால் குறிப் பாயும், ஒவ்வொரு நபரையும் அவருக்கு உரிய சரியான இடத் தில் எப்படிப் பொருத்துவது என்ற பிரச்சினை சம்பந்தமாக இந்த இடர்ப்பாடுகள் சுமத்தப்படும் என்பதையும் நாம் அறி வோம். இங்கு ஒவ்வொரு நடவடிக்கையையும் நாமே வகுத்துக் கொள்ள வேண்டும். இந்தப் பாதையில் நாம் செய்யும் தவறு எந்தளவுக்குக் கடுமையாக இருக்கிறதோ அந்த அள வுக்கு இப்பணி நிச்சயமாயும் அதிகரிக்கும். தொழிற்சங்கங்

களில் அங்கத்தினர் தொகை அதிகரிக்குந்தோறும், கூடுதலாக வரும் ஒவ்வொரு ஆயிரம் பேரும், கூடுதல் வரும் ஒவ்வொரு நூறுயிரம் பேரும் உழைக்கும் மக்களின் சுரண்டப்படும் மக்களின் முகாம்களில் இருந்து வரும் தோறும், இதுகாறும் மரபுக்கும் வழக்கத்திற்கும் ஏற்ப வாழ்ந்தவர்கள் சோவியத் அமைப்புக்களை நிர்மாணிப்போர் முகாம்களில் சேர்ந்து வரும்போது தகுதியானோர் என்று நிரூபிக்கப்பட்டு சரியான வழியில் வேலைகளை ஒழுங்கமைக்க வேண்டியவர்களான மக்களின் தொகை அதிகரித்துவரும்.

தேசியப் பொருளாதாரக் கவுன்சில்—தலைமைப் பொருளாதாரக் கவுன்சில் முன்பாக குறிப்பாயும் அடிக்கடி எழுந்து வரும் இரண்டாம் பட்சமான பணிகளில் ஒன்றை, முதலாளித்துவ நிபுணர்களைப் பயன்படுத்துவது சம்பந்தமான பணியை, எடுத்துக் கொள்வோம். நாம் எல்லோரும், குறைந்த பட்சம் விஞ்ஞானம் மற்றும் சோஷலிசத்தின் அடிப்படை மீது தமது நிலையை மேற்கொள்வோர், இந்தப் பணி எந்த அளவுக்கு சர்வதேச முதலாளித்துவம் உழைப்பின் பொருளாயத தொழில்நுட்ப முன்தேவைகளை எந்தளவுக்கு வளர்த்திருக்கிறதோ, அதை விஞ்ஞானத்தை அடிப்படையாக்கிப் பேரளவில் ஒழுங்கமைத்து, மிகப் பெருமளவிலான விஞ்ஞான போதனை பெற்ற நிபுணர்களைப் பயிற்றுவித்துள்ளதோ அந்த அளவுக்கு மட்டுமே இப்பணியை நிறைவேற்ற முடியும் என்பதை அறிவோம். இது இல்லாமல் சோஷலிசம் சாத்தியம் அல்ல என்பதை நாம் அறிவோம். கடந்த அரை நூற்றுண்டு காலமாக முதலாளித்துவத்தின் வளர்ச்சியை உன்னிப்பாகக் கவனித்து வந்துள்ளவர்களும், சோஷலிசம் தவிர்க்க வொண்ணுதது என்ற முடிவுக்கு மீண்டும் மீண்டும் வந்திருப்பவர்களுமான அந்த சோஷலிஸ்டுகளின் நூல்களை நாம் திரும்பவும் படிப்போமானுல் அவர்கள் அனைவரும் எவ்விதமான விதிவிலக்கும் இன்றி, விஞ்ஞானத்தை அதன் முதலாளித்துவத் தளைகளில் இருந்து மூலதனத்துக்கு அடிமைப்பட்டுக் கிடப்பதில்இருந்து, நீசத்தனமான முதலாளித்துவப் பேராசையின் நலன்களுக்கு அடிமையாக இருப்பதில் இருந்து, விடுவிக்கவல்லது சோஷலிசம் மட்டுமே என்று சுட்டியுரைத்து

வந்திருக்கிருர்கள் என்பதை நாம் காண முடியும். சமூக உற்பத்தியும் வினியோகமும் விஞ்ஞான பூர்வமான வழிகளில் பரவலாக விஸ்தரிக்கப்படுவதையும், அவை உழைக்கும் மக்களின் வாழ்க்கையை எளிதாக்கி, கூடுமானவரை அவர்களது நல்வாழ்வை மேம்படுத்தும் நோக்கத்துக்கு உண்மையில் கீழடங்கியதாக இருக்கும்படி செய்வதும் சோஷலிசத்தால் மட்டுமே சாத்தியம், சோஷலிசத்தால் மட்டுமே இதை அடைய முடியும். இதை அது நிச்சயம் அடைய வேண்டும் என்பதை நாம் அறிவோம். இந்த உண்மையைப் புரிந்து கொள்வதில் தான் மார்க்சியத்தின் முழுமையான பன்முகத்தன்மையும் அதன் முழுமையான வலிமையும் காணக்கிடக்கின்றன.

இதை எதிர்க்கும் நபர்களைச் சார்ந்து நிற்கும் அதே பொழுதில் இதை நாம் அடைந்தாக வேண்டும். காரணம், மூலதனம் எந்த அளவுக்குப் பெரிதாக மாறுகிறதோ அந்த அளவுக்கு முதலாளித்துவ வர்க்கம் தொழிலாளர்களை அதிகமாக அடக்குகிறது. இப்போது ஆட்சி அதிகாரம் தொழிலாளர் ஏழை விவசாயிகளின் கரங்களில் இருப்பதாலும், அரசாங்கம் மக்களின் ஆதரவோடு தனக்குத்தானே பணிகளை வகுத்துக் கொள்வதாலும், நாம் இந்த சோஷலிஸ்டு மாற்றங்களை, முதலாளித்துவ சமூகத்தில் பயிற்சி பெற்ற, வேறு நிலைமைகளை அறியாத, வேறு எந்த ஒரு சமூக அமைப்பைப் பற்றியும் கருதிப் பார்க்க முடியாத, முதலாளித்துவ நிபுணர்களின் உதவியுடன் சாதனையாக்க வேண்டும். எனவே இந்த நிபுணர்கள் தம்து வேலையில் முற்றமுழு நேர்மையோடும் விசுவாசத்தோடும் இருக்கும் இடங்களில் கூட அவர்கள் ஆயிரக்கணக்கான முதலாளித்துவத் தப்பெண்ணங்களால் நிரம்பிக் கிடக்கிருர்கள், தாமே காணவியலாத ஆயிரக்கணக்கான பந்தங்களால் முதலாளித்துவ சமூகத்துடன் தொடர்பு பூண்டிருக்கிருர்கள். இந்த முதலாளித்துவ சமூக அமைப்பு மடிந்து வருகிறது, அழிவுற்றுவருகிறது, எனவே அது மூர்க்கமான எதிர்ப்பைத் தோற்றுவித்து வருகிறது.

இந்த முயற்சிகள், சாதனைகள் சம்பந்தமான இடர்ப்பாடுகளை நாம் நம்மிடமிருந்தே மறைத்துக்கொள்ள முடியாது. இதைக் குறித்து எழுதியுள்ள சோஷலிஸ்டுகள் பலர். ஆனல்

தொழிலாளி வர்க்கம் ஆட்சி அதிகாரத்தை எடுத்துக் கொள்ளும் போது, மிகவும் செழுமையான வரலாற்று முறையில் தவிர்க்க முடியாத நமக்கு அவசியமான முதலாளித்துவத்தால் சேகரம் செய்யப்பட்ட கலாசாரம், ஞானம் மற்றும் தொழில் நுணுக்கக் களஞ்சியத்தின் கூட்டு மொத்தத்தையும் முதலாளித்துவத்தின் கருவி என்பதில் இருந்து சோஷலிசத்தின் கருவியாக மாற்றும் கடமையினை தொழிலாளி வர்க்க ஆட்சி தனது பணியாக மேற்கொள்ளும் போது, அதை எதிரிடும் இந்த ஸ்தூலமான நடைமுறை இடர்ப்பாடு சம்பந்தமாக எதிர்கால சோஷலிஸ்டு சமூக அமைப்புப் பற்றிய எந்த ஒரு சோஷலிஸ்டின் நூலிலோ எந்த ஒரு பிரபல சோஷலிஸ்டின் கருத்திலோ சுட்டிக் காட்டப்பட்டிருப்பதைக் கண்டதாக எனக்கு நினைவு இல்லை. இதை ஒரு பொது சூத்திரத்தில், கருத்தியலான அறிவாய்வில் செய்வது எளிது. ஆனால் உடனே மடிந்துவிடாமல் மரணம் நெருங்க நெருங்க மிகவும் மூர்க்கமான எதிர்ப்பினைத் தொடுக்கும் முதலாளித்துவத்தை எதிர்த்த போராட்டத்தில் இந்தப் பணியைச் செய்யப் பிரம்மாண்ட முயற்சிகள் தேவை. இந்தத் துறையில் சோதனைகள் நடைபெற்று ஓரளவான பிழைகளை நாம் திரும்பத் திரும்பத் திருத்திக்கொள்வோமானால் இது தவிர்க்க முடியாதது. காரணம், நாம் தேசியப் பொருளாதாரத்தின் இந்த அல்லது அந்தத் துறையில் நிபுணர்களை முதலாளித்துவத்தின் ஊழியர்களாக இருப்பதில் இருந்து உழைக்கும் மக்களின் ஊழியர்களாக அவர்களது ஆலோசகர்களாக உடனடியாக மாற்ற முடியாது. இதை உடனடியாகச் செய்ய முடியாததால் அது மிகச்சிறிய அளவு நம்பிக்கை இன்மைக்குக் கூட இடமளித்தல் கூடாது. ஏனெனில் நாம் நமக்கென ஒருங்குவித்துள்ள பணி உலக-வரலாற்று இடர்ப்பாடும் முக்கியத்துவமும் உடைய பணியாகும். தனி ஒரு நாட்டில், ருஷ்யாவை விடக் குறைந்த அளவே பின்தங்கிய நாடாக அது இருந்த போதிலும், நாலாண்டுகள் நீடித்த முன் என்றும் கண்டிராத வேதனைமிகுந்த கடுமையான நாசகரமான போருக்குப் பிந்திய நிலைமைகளில் அன்றி மிகவும் சிறந்த நிலைமைகளில், நாம் வாழ்ந்து கொண்டிருந்த போதிலும் சரி, நாம் முற்றி

லும் நமது சொந்த முயற்சிகள் மூலமே சோஷலிஸ்டுப் புரட்சியை பூர்த்தி செய்திருக்க முடியாது. தற்போது ருஷ்யாவில் நடைபெற்றுவரும் சோஷலிஸ்டுப் புரட்சியுடன் மாறுபாடுற்று, சக்திகளின் தெட்டத்தெளிவான பொருத்தக் கேடைச் சுட்டிக்காட்டும் நபர் பழமைவாதியான ''கூட்டில் அடைந்த மனிதனை'' ஒத்தவஞக இருப்பார். அவரால் தமது இயலுணர்வுக்கு மிகையாகப் பார்க்க முடியாது. சக்திகளின் பொருத்தக்கேடுள்ள பல சம்பவங்கள் இல்லாமல் முக்கியத்துவம் உள்ள எந்த ஒரு வரலாற்று மாற்றமும் ஏற்படுவதில்லை என்பதை அவர் மறந்து விடுகிருர். சக்திகள் புரட்சி வளரும் விதத்தில் போராட்டத்தின் போக்கில் வளர்கின்றன. ஒரு நாடு ஆழமான மாற்றம் கொண்டுவரும் பாதையினை மேற்கொண்டுவிட்டதெனில், அது அந்த நாட்டுக்கும் அந்த நாட்டில் வெற்றியீட்டிய தொழிலாளி வர்க்கத்தின் கட்சிக்கும் பெருமை தருவதாகும். அவை முன்னுட்களில் கருத்தியலாயும் தத்துவார்த்த முறையிலும் எழுப்பப்பட்ட பணிகளை நடைமுறைப் பாங்கில் மேற்கொள்ள வேண்டும். இந்த அனுபவம் என்றுமே மறக்கப்பட மாட்டாது. பொருள் உற்பத்தி முழுவதையும் தேசிய அளவில் ஒழுங்கமைக்கும் நடைமுறை வேலையில் தொழிற்சங்கங்களிலும் வட்டார அமைப்புகளிலும் இப்போது ஒன்று சேர்ந்துள்ள தொழிலாளர்கள் பெற்றுவரும் அனுபவத்தை, ருஷ்யப் புரட்சியும் சர்வதேச சோஷலிஸ்டுப் புரட்சியும் கடந்து செல்லும் நிலைமாற்றங்கள், எத்துணை கடினமாக இருந்த போதிலும் சரி, பறித்துவிட முடியாது. இது வரலாற்றில் சோஷலிசத்தின் சாதனை என்று ஏற்கப்பட்டுவிட்டது. இதன் மீது வருங்கால உலகப் புரட்சி தனது சோஷலிஸ்டு கட்டுமானத்தை நிறுவும்.

இன்னெரு பிரச்சினையை, ஒருக்கால் மிகவும் கடினமான ஒரு பிரச்சினையை, தலைமைப் பொருளாதாரக் கவுன்சில் நடைமுறைத் தீர்வு காணவேண்டிய பிரச்சினையை நான் குறிப்பிட விரும்புகிறேன். இது தொழிலாளர் கட்டுப்பாடு பற்றிய பிரச்சினையாகும். சுருராகச் சொன்னுல் இந்தப் பிரச்சினையைக் குறிப்பிடும் போது குறிப்பாயும், தொழிற்சங்கங்கள் தான் தொழிலாளர்களின் ஆகப் பெரிய அமைப்புகளான

உலோகத் தொழிலாளர் சங்கத்தின் மத்தியக் கமிட்டியும், அகில ருஷ்யத் தொழிற்சங்கக் கவுன்சிலும் தான், லட்சக் கணக்கான உழைக்கும் மக்களை ஒற்றுமைப்படுத்தியுள்ள உயர் தொழிற்சங்க அமைப்புகள் தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முதலில் சுதந்திரமாக வேலைசெய்யத் தொடங்கின என்பதை, இப்பிரச்சினை உலக வரலாற்று முக்கியத்துவம் உடையது என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும், மன நிறைவுடன் வற்புறுத்த வேண்டும். இதைப் புரிந்து கொள்ளும் பொருட்டு நாம் அந்த ஓரளவு தோல்விகள், சிறு தோல்விகளில் இருந்தும், தனிப்பட எடுத்துக் கொண்டால் வென்று சமாளித்தற்கரியது என்று தோன்றும் நம்பற்கரிய இடர்ப்பாடுகளில் இருந்தும், நம்மை நாமே விலக்கிக்கொள்ள வேண்டும். நாம் மேலும் உயர் மட்டத்திற்கு எழுச்சியுற்று, சமூகப் பொருளாதார அமைப்பு முறைகளின் வரலாற்று மாற்றங்களை ஆய்வு செய்தல் வேண்டும். இந்தக் கோணத்தில் இருந்து மட்டுமே நாம் மேற்கொண்டுள்ள பணியின் அளப்பரிய தன்மையை சரியாகக் கணிக்க முடியும். இது வரையில், நிலப்பிரபுத்துவ ருஷ்யாவில் 1861 வரை[55] இது தமது சொந்த விவகாரம் என்று கருதிய ஒரு சில நில உடமையாளர்களால் தீர்வு காணப்பட்டதான இந்தப் பணியை இந்த சந்தர்ப்பத்தில் சமூகத்தின் ஆக முன்னேறிய பிரதிநிதிகள், உழைக்கும் சுரண்டப்படும் மக்கள் தமது சொந்த முன் முயற்சியின் மீது தாமே மேற்கொண்டுள்ளனர் என்ற மெய் விவரத்தின் பேரளவான முக்கியத்துவத்தை இதற்குப் பிறகு மட்டுமே சரியாகக் கணிப்பது சாத்தியமாகும். அந்த சமயத்தில் அரசு இணைப்பாக்கத்தையும் கட்டுப்பாட்டையும் கொண்டுவருவது அவர்களது விவகாரமாக இருந்தது.

இந்தக் கட்டுப்பாட்டைப் பிரபுத்துவ நிலவுடைமையாளர்கள் எப்படி உருவாக்கினர்கள் என்பதை நாம் அறிவோம். அது பெரும்பான்மையான மக்களுக்கு ஒடுக்குமுறையாக, மானக்கேடாக, கடுங்காவல் சிறைத் தண்டனையின் நம்பற்கரிய கடும்வதையாக இருந்தது. பண்ணை அடிமை முறையில் இருந்து முதலாளித்துவப் பொருளாதாரத்திற்கான இந்த மாறுதல் கட்டம் முழுவதையும் நினைவுக்குக் கொண்டு

வாருங்கள். நீங்கள் நேரடியாகப் பார்த்ததில் இருந்து—உங்களில் பெரும்பான்மையினர் நேரடியாகப் பார்த்திருக்க முடியாது என்ற போதிலும்—பழைய தலைமுறையினரிடமிருந்து நீங்கள் அறிந்து கொண்டதிலிருந்து, 1861க்குப் பிறகு முதலாளித்துவப் பொருளாதாரத்துக்கான மாற்றம், பழைய நிலப்பிரபுத்துவத்தின் தண்டாயுதக் கட்டுப்பாட்டிலிருந்து ஏற்பட்ட மாற்றம், மிகவும் அறிவற்றதான ஆணவம்பிடித்த மிருகத்தனமான மானமிழக்கச் செய்யும் சொந்த வன்முறையின் கட்டுப்பாட்டில் இருந்து, முதலாளித்துவக் கட்டுப்பாட்டுக்கு, பட்டினியின் கட்டுப்பாட்டுக்கு, உண்மையில் முதலாளித்துவ அடிமைத்தனத்தின் கட்டுப்பாடான கட்டற்ற கூலிக் கமர்த்தல் எனப்படுவதற்கு மாறிச் செல்வது, வரலாற்று ரீதியாக எவ்வளவு எளிதாகத் தோற்றமளித்தது என்பதை நீங்கள் அறிவீர்கள். இதற்குக் காரணம் மனிதகுலம் ஒரு சுரண்டலாளரிடமிருந்து இன்னொரு சுரண்டலாளருக்குக் கடந்து சென்றது. மக்கள் உழைப்பைச் சூறையாடும் சுரண்டும் ஒரு சிறுபான்மை, மக்கள் உழைப்பைச் சூறையாடும் சுரண்டும் இன்னொரு சிறுபான்மைக்கு இடம் கொடுத்தது, பிரபுத்துவ நிலவுடைமையாளர்கள் முதலாளிகளுக்கு இடமளித்தார்கள், ஒரு சிறுபான்மை இன்னொரு சிறுபான்மைக்கு இடமளித்தது. அதே போதில் உழைக்கும் சுரண்டப்படும் மக்கள் ஒடுக்கப்பட்டுக் கிடந்தனர். ஒரு சுரண்டலாளரின் கட்டுப்பாட்டிலிருந்து இன்னொரு சுரண்டலாளரின் கட்டுப்பாட்டுக்கு மாறுவதற்கும் கூட பல ஆண்டுகள் பல பத்தாண்டுகள் பிடித்தன. இந்தக் காலப் பகுதியில் பழைய பிரபுத்துவ நிலவுடைமையாளர்கள் எல்லாம் பாழாகி அழிந்து வருகிறது எனவும், நாட்டைப் பண்ணை அடிமை முறை இல்லாமல் நிர்வகிக்க முடியாது எனவும், முற்றிலும் உண்மையாகவே கருதினர். அதேபோதில் புதிய முதலாளித்துவ அதிபர் ஒவ்வொரு படியிலும் நடைமுறை இடர்ப்பாடுகளை எதிரிட்டு தனது முயற்சியால் பலன் இல்லை என்று அதைக் கைவிடலானார். இந்த மாறுதல் கட்டத்தின் போதான இடர்ப்பாடுகளுக்கு முக்கியமான சான்று, உருப்படியான நிரூபணங்களில் ஒன்று, அந்த சமயத்தில் பயன்படுத்துவதற்குச் சிறந்த இயந்

திரங்கள் வேண்டும் என்பதால் ருஷ்யா வெளிநாடுகளில்இருந்து இயந்திரங்களை இறக்குமதி செய்ததேயாகும். மேலும் இந்த இயந்திரங்களைக் கையாள ஆட்கள் இருக்கவில்லை, நிர்வாகிகள் இல்லை என்பதும் தெரியவந்தது. ருஷ்யா முழுதும் அருமையான இயந்திரங்கள் பயன்படுத்தப்படாமல் கிடந்ததை எவரும் பார்க்க முடியும். பழைய பிரபுத்துவக் கட்டுப்பாட்டில் இருந்து புதிய பூர்ஷ்வா-முதலாளித்துவக் கட்டுப்பாட்டுக்கு மாறிச் செல்வது இத்தனை கடினமாக இருந்தது.

எனவே, தோழர்களே, இந்த விவரத்தை இந்தக் கோணத்தில் இருந்து பார்ப்பீர்களானால், நீங்கள் அந்தப் பேர்வழிகளால், அந்த வர்க்கங்களால், அந்த முதலாளித்துவ வர்க்கத்தினரால், அவர்களை அண்டிப் பிழைப்பவர்களால் தவருக வழிநடத்தப்பட மாட்டீர்கள். இவர்களது ஏகப்பணி பீதியை விதைப்பதும், மனச்சோர்வை விதைப்பதும், நமது வேலை முழுதையும் பொருத்தவரையில் பூரண மனச்சோர்வை ஏற்படுத்துவதும், அது பயனற்றது என்று தோன்றும்படி செய்வதும் ஆகும். இவர்கள் கட்டுப்பாடின்மை மற்றும் ஊழலின் ஒவ்வொரு சம்பவத்தையும் சுட்டிக் காட்டி அந்தக் காரணத்திற்காக புரட்சி பயனற்ற வேலை என்று அதைக் கைவிடுகின்றனர். மக்கள் ஒரு புதிய கட்டுப்பாட்டைப் படைத்து வரும்போது உலகில், வரலாற்றில் ஊழல் இல்லாத கட்டுப்பாடின்மை இல்லாத வேதனை தரும் சோதனைப் படிகள் இல்லாத உண்மையிலேயே மகத்தான தனி ஒரு புரட்சி என்ருே இருந்தது போலக் கருதுகின்றனர் போலும். வரலாற்றில் இந்தத் தொடக்க கட்டம் முதல் தடவையாக எய்தப் பெற்றது என்பதையும், ஒரு புதிய கட்டுப்பாடு, தொழிலாளர் கட்டுப்பாடு, தோழமைத் தொடர்பின் கட்டுப்பாடு, சோவியத் கட்டுப்பாடு லட்சக் கணக்கான உழைக்கும் சுரண்டப்படும் மக்களால் உண்மையில் படைத்துருவாக்கப்படுகிறது என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது. இந்தத் துறையில் துரிதமான வெற்றி ஏற்பட்டுவிடும் என்று நாம் உரிமை பாராட்டவில்லை, எதிர்பார்க்கவும் இல்லை. இந்தப் பணி முழுமையுற ஒரு முழு வரலாற்று சகாப்தம் பிடிக்கும் என்பதை நாம் அறிவோம். இந்த வர

லாற்று சகாப்தத்தை நாம் துவக்கி விட்டோம், இன்னும் முதலாளித்துவ அமைப்பாக இருக்கும் ஒரு நாட்டில், முதலாளித்துவ சமூகத்தின் கட்டுப்பாட்டை உடைத்துவரும் சகாப்தத்தை நாம் துவக்கிவிட்டோம். இந்த அழிக்கும் பணியில் அரசியல் உணர்வுடைய எல்லாத் தொழிலாளர்களும், முற்ற முழுமையான பாடுபடும் விவசாயிகள் அனைவரும், எல்லா இடங்களிலும் உதவிவருவது கண்டு பெருமை அடைகிறோம். சுரண்டல் மற்றும் அடிமை முறையினை அடிப்படையாக்கிய இந்தக் கட்டுப்பாட்டை மாற்றி, அதனிடத்தில் ஒன்றுபட்ட உழைப்பின் புதிய கட்டுப்பாட்டை, கோடிக் கணக்கான மக்கள் தொகை கொண்ட நாடான ருஷ்யா முழுவதன் ஒன்றுபட்ட ஸ்தாபனத் திரட்சியுள்ள தொழிலாளர் உழைக்கும் விவசாயிகளின் கட்டுப்பாட்டை நிலைநாட்ட வேண்டும். இதை, மேலிருந்து வரும் நெறிமுறைகள் விளைவாகவன்றி தமது சொந்த ஜீவிய அனுபவத்தின் நெறிமுறைகளின் மீது மக்கள் சுயவிருப்பமாகத் தமது சொந்த முன்முயற்சியால் புரிதல் வேண்டும் என்று உணர்ந்துவரும் சகாப்தத்தை நாம் துவங்கிவிட்டோம். இந்தப் பணியில் பேரளவான இடர்ப்பாடு உள்ளது. ஆனால் இது ஒரு பயனுள்ள பணியுமாகும். காரணம், இதை நாம் நடைமுறையில் நிறைவேற்றினால் மட்டுமே நாம் குழிதோண்டிப் புதைத்து வரும் முதலாளித்துவ சமூகத்தின் சவப்பெட்டியின் மீது கடைசி ஆணியை அறைந்தவர்களாவோம். (கரவொலி.)

பெத்ரோகிராத்ஸ்கயா பிராவ்தா, இதழ் *108*ல், (மாலைப்பதிப்பு) *1918* மே *27*ல்
வெளியிடப்பட்ட செய்தி இதழ் விவரம்
பிராவ்தா, இதழ் *104* மற்றும் அ.ரு.ம.
நி.க. இஸ்வேஸ்தியா, இதழ் *106, 1918*
மே *28*

தேசியப் பொருளாதாரக் கவுன்சில்களின் முதலாவது அகில ருஷ்யச் சோவியத்துகளின் காங்கிரஸ் நடவடிக்கைகள் முழுமையான செய்திவிவரம் என்ற நூலில் *1918*ல் முழுமையாக வெளியிடப்பட்டது
(சுருக்கெழுத்துப் பிரதி)

நூல் திரட்டு, தொகுதி *36*, பக்கங்கள் *377-386*

"தேசவுடைமையாக்கப்பட்ட நிறுவனங்களின் நிர்வாகம் பற்றிய விதிகளின்" நகல் மீதான கருத்துரை[56]

நாடு முழுவதிலும் பெருவீதப் பொருள் உற்பத்தி ஆகப் பெருமளவுக்கு சாத்தியமானவரை கேந்திரப்படுத்தப்படு வதை கம்யூனிசம் அவசியப்படுகிறது மற்றும் முன்னனு மானிக்கிறது. எனவே அகில ருஷ்ய மையம், சம்பந்தப்பட்ட ஒரு தொழில் பிரிவில் இருக்கும் எல்லா நிறுவனங்கள் மீதும், நேரடிக் கண்காணிப்பு மேற்கொள்ளும் உரிமையை நிச்சய மாயும் பெற்றிருக்க வேண்டும். பிராந்திய மையங்கள் வட் டார வாழ்க்கை நிலைமைகளைச் சார்ந்தும், மையத்தின் பொது வான உற்பத்தி நெறியாக்கங்கள் மற்றும் முடிவுகளுக்கு ஏற்பவும், தமது பணிகளை வரையறுத்துக் கொள்ளும்.

கமிஷனது நகலில் இருந்து காணப்படுவது போன்று நாடு முழுவதிலுமுள்ள சம்பந்தப்பட்ட தொழிலின் எல்லா நிறு வனங்கள் மீதும் நேரடியான கண்காணிப்பு உரிமையை அகில ருஷ்ய மையத்துக்குத் தர மறுப்பது பிராந்திய அராஜக-சிண்டிகல்வாதமாகும், கம்யூனிசம் அல்ல.

1918 ஜூன் 2ல் எழுதப்பட்டது
லெனின் மஞ்சரி, இதழ் 36ல், 1959ல் முதலில் வெளியிடப்பட்டது

நூல் திரட்டு, தொகுதி 36, பக்கம் 392

தொழிலாளர், விவசாயிகள், படையாளர், செஞ்சேனைப் பிரதிநிதிகளின் சோவியத்துகளின் ஐந்தாவது அகில-ருஷ்யக் காங்கிரஸ்[57]

1918 ஜூலை 4—10

மக்கள் கமிசார்கள் கவுன்சில் அறிக்கை, ஜூலை 5

தோழர்களே, முந்திய பேச்சாளர் சில சமயம் மிகவும் உணர்ச்சி வசப்பட்டு பேசியபோதிலும்[58] நான் மக்கள் கமிசார்கள் கவுன்சிலின் சார்பில் எனது அறிக்கையை வழக்கமான முறையில் சமர்ப்பிக்கிறேன். அதாவது, கோட்பாடு சம்பந்தமான பிரதானப் பிரச்சினைகளை அவற்றின் தகுதிப்படி எடுத்து விளக்கவும், முந்திய பேச்சாளர் மிகவும் விரும்புவதும் நான் உண்மையில் முற்றாக மறுக்க உத்தேசிக்காததுமான வாதத்தில் இறங்காமலும் இருக்க முற்படுகிறேன். சென்ற காங்கிரசுக்குப் பிறகு, நமது நிலையை நிர்ணயித்ததும், நமது கொள்கையை மாற்றியதும், ருஷ்யாவில் உள்ள சில இதர கட்சிகளின்—பாலான நமது போர்த்தந்திரங்களையும் உறவு நிலையையும் உருவாக்கியதுமான முக்கிய காரணி பிரேஸ்த் உடன்படிக்கை என்பதை நீங்கள் அறிவீர்கள். சென்ற காங்கிரசில் எம்மீது எத்தனை வசைகள் வீசப்பட்டன, எத்தனை குற்றச் சாட்டுகள் தொடுக்கப்பட்டன, இந்தப் புகழார்ந்த ஓய்வு ருஷ்யாவுக்கு உதவிகரமாக இருக்காது, எப்படியும் ஒரு சர்வதேச ஏகாதிபத்தியக் கூட்டணி ஏற்பட்டுவிட்டது, நடைமுறையில் நாம் ஆதரிக்கும் பின்வாங்கல் எங்கும் இட்டுச் செல்லாது என்றெல்லாம் எத்தனை குரல்கள் எழுப்பப்பட்டன. இந்த அடிப்படைக் காரணி முதலாளித்துவ அரசுகளின் முழு நிலையையும் கூட நிர்ணயித்தது. இதைப் பற்றி நாம் விளக்க வேண்டுவது இயல்பு. வசைகள் குற்றச் சாட்டுகள் எல்லாம் இருந்த போதிலும் நமது செயல் சரி என்பதை கடந்த மூன்றரை மாதங்கள் முற்ற முழுமை

யாயும் மறுக்கவொண்ணுதது ஆக்கிவிட்டன. மற்றவர்களேச் சுரண்டாத, மக்களின் பட்டினியில் இருந்து லாபம் திரட்டாத, பாட்டாளிகளும் விவசாயி மக்களும் முழுமையாகவும் மட்டுமழுப்பலின்றியும் நமது பக்கம் இருக்கிருர்கள். அவர்களேப் போரில் சிக்க வைக்கும், பிரேஸ்த் உடன்படிக்கையை எதிர்க்கும் விவேகமற்ற பேர்களுக்கு எதிராக இருக்கிருர்கள். (ஆரவாரம்.)

மக்களில் பத்தில் ஒன்பது பாகம் நம் பக்கம் இருக்கிருர்கள். நிலேமை தெளிவடையும் தோறும், மேலே ஐரோப்பிய ஏகாதிபத்தியத் தரப்புக்கள், இரண்டு முக்கியமான ஏகாதிபத்தியப் பிரிவுகள் ஜீவமரணப் போராட்டத்தில் கொளுவிக் கொண்டிருக்கும் போது, ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு நாளும் நாம் எந்த அகாதமான பள்ளத்தின் உருவரையைத் தெளிவாகப் பார்க்க முடிகிறதோ அந்த அகாதமான பள்ளத்தினே நோக்கி ஒரு தரப்பு இன்னென்றைத் தள்ளிக் கொண்டிருக்கும் போது, இத்தகைய சமயத்தில், நிச்சயமாயும் நமது போர்த்தந்திரங்கள் சரியானவை என்பது முன் என்றையும் விட நமக்குத் துலாம்பரமாகிறது. இதைப் போரில் முழுதூடாக ஈடுபட்டவர்கள், போர் என்ருல் என்ன என்பதைக் கண்டவர்கள், அதைப் பற்றிக் கற்பனேயாகப் பேசாதவர்கள் மிகச் சிறப்பாக உணர்ந்து வருகிருர்கள், தெளிவாகக் கண்டு வருகிருர்கள். இந்தப் பிரிவுகள் ஒவ்வொன்றும் நம்மை விட அதிகமாக வலுப் பெற்றிருக்கும் வரை, அந்த அடிப்படை மாற்றம், ருஷ்யாவின் தொழிலாளர்களே, பொதுவாக உழைக்கும் மக்களே புரட்சியின் பலன்களே அனுபவிக்கவும், அவர்கள் மீது விழுந்த அடியில் இருந்து மீட்சிபெற்று தமது முழு உயர்த்திக்கு எழுச்சியுறவும் அதன் மூலம் புதிய வழியிலான, ஒரு புதிய ஸ்தாபனத் திரட்சியுள்ள கட்டுப்பாடுள்ள ஒரு சேனேயை உருவாக்கவும் அதன் வழி நாம் வெறும் சொல்லளவில் இன்றிச் செயலளவில்... (**இடது புறம் உரத்த கரவொலி, வலது புறம் இருந்து குரல்: ‘‘கேரென்ஸ்கி!’’**) அனுமதிக்கக் கூடியதான அந்த அடிப்படை மாற்றம் ஏற்படாத வரை நாம் காத்திருக்க வேண்டும். எனவே நாம்

மக்கள் திரளிடையே மேலும் ஆழமாகச் செல்லச் செல்ல, ஆலைகள் தொழிற்சாலைகளில் இருக்கும் தொழிலாளர்களிடமும் கூலி உழைப்பைச் சுரண்டாத, தானியத்தை ஒளித்து வைத்து உணவு சர்வாதிகாரத்தை அஞ்சும் குலாக்குகளின் கொள்ளை லாப நலன்களை ஆதரிக்காத, உழைக்கும் விவசாயிகளிடமும் நாம் நெருக்கமாகச் செல்லச் செல்ல அங்கும் நாம் முழுமையான அனுதாபத்தையும் ஒரு முகமான ஒப்புதலையும் பெறுவோம், பெற்று வருகிறோம் என்று மிக நிச்சயமாகக் கூற முடியும், நாம் ஏற்கெனவே பெற்று விட்டோம் என்று பரம திட நம்பிக்கையுடன் கூற முடியும். சிலர் தமது அறியாமையயாலோ தொடர்களுடனுள்ள மோகத்தாலோ, போரில் இறங்கும்படி மக்களைத் தூண்ட எவ்வளவுதான் முயன்றாலும் சரி, தம் எண்ணத்தை மூடி மறைக்க என்ன கவர்ச்சித் தொடர்களைப் பயன்படுத்தினாலும் சரி தற்போது மக்கள் போராட விரும்பவில்லை, போராட முடியாது, இந்த விரோதிகளை, ஏகாதிபத்தியவாதிகளை எதிர்த்துப் போராட மாட்டார்கள் என்பது உண்மை. இல்லை, தோழர்களே, இப்போது நேரடியாகவோ நேரடி இன்றியோ, பகிரங்கமாகவோ மூடி மறைத்த வடிவிலோ போருக்கு அழைக்கும் எவரும், பிரேஸ்த் சமாதான உடன்படிக்கை ஒரு தூக்குக் கயிறாக இருப்பதாகக் கூச்சலிடும் எவரும், ருஷ்யாவில் இருக்கும் தொழிலாளர் விவசாயிகளின் கழுத்துகளைச் சுற்றித் தூக்குக் கயிறை மாட்டுவோர் கேரென்ஸ்கியும், நிலவுடைமையாளர்களும், முதலாளிகளும் குலாக்குகளுமே என்பதைக் காணத் தவறுகிறார்கள். (குரல்: ''மிர்பாஹ்!'' ஆரவாரம்.) ஒவ்வொரு கூட்டத்திலும் அவர்கள் செய்வது போல அவர்கள் அலறட்டும், மக்கள் மத்தியில் அவர்களது லட்சியம் கவைக்குதவாதது! (கரவொலி. ஆரவாரம்.)

இந்தப் பேர்வழிகள் இருக்கும் இக்கட்டு நிலையில் அவர்களுக்கு வேறு வாதம் எதுவும் இல்லாததால் அவர்கள் கூச்சல்கள், வெறிபிடித்த பிதற்றல், வசவு, காட்டுத்தனமான நடத்தை என்ற வழியில் மட்டுமே பதிலளிக்க முடியும் (கரவொலி.) (குரல்: ''நமக்கு வாதங்கள் உள்ளன.'' கரவொலி.)

இந்தப் போரில் மேம்பாடு அடைவதற்கு எத்தகைய

நம்பற்கரிய துன்ப துயரங்களைத் தாங்க வேண்டி வந்தது என்பதை ருஷ்யப் படையாளிகளில் நூற்றுக்குத் தொண்ணூற்று ஒன்பது பேர் அறிவர். போரை ஒரு புதிய சோஷலிஸ்டு மற்றும் பொருளாதார அடிப்படையில் முன்வைக்க (''மிர்பாஹ் உங்களை அனுமதிக்க மாட்டார்'' என்ற கூச்சல்) பிரம்மாண்டமான முயற்சி தேவை, முதன் முதலாகக் கொள்ளையடிக்கும் போருக்கு முடிவு கட்ட வேண்டும். ஏகாதிபத்தியத்தின் வெறிபிடித்த படைகள் தொடர்ந்து போராடுகின்றன என்பதையும் சென்ற காங்கிரசுக்குப் பிறகு கடந்து சென்ற மூன்று மாதங்களில் அவை அகாதமான பள்ளத்தை நோக்கிப் பலபடிகள் நெருங்கி வந்துள்ளன என்பதையும் அறிந்த அவர்கள் இந்தப் போரில் சேர மாட்டார்கள். எல்லா தேசங்களின் பாலுமான எமது கடமையைச் செய்து முடித்த பிறகு, சமாதானப் பிரகடனத்தின் மதிப்பை உணர்ந்தும் எல்லா நாடுகளிலுமுள்ள தொழிலாளர்களுக்கும் தோழர் திரோத்ஸ்கியின் தலைமையிலான பிரேஸ்த் தூதுக் குழு மூலம் அதன் மதிப்பை மனதில் பதியவைத்த பிறகு, நாம் ஒரு நேர்மையான ஜனநாயக சமாதானத்தைப் பகிரங்கமாகப் பிரேரேபித்த போது, இந்த யோசனை எல்லா நாடுகளையும் சேர்ந்த வெறிபிடித்த முதலாளித்துவ வர்க்கத்தினரால் செயல் குலைக்கப்பட்டது. நமது நிலை காத்திருப்பது என்பதைத் தவிர வேறு எதுவாகவும் இருத்தல் முடியாது. இந்த வெறிபிடித்த ஏகாதிபத்தியக் கும்பல்கள், அவை இன்று இன்னும் பலமுள்ளவையாகவே இருந்த போதிலும், எல்லோரும் காணக்கூடிய முறையில், இப்போது நெருங்கி வரும் அகாதமான பள்ளத்தில் அவை சரிந்து விழப்போவதை மக்கள் நிச்சயம் காணத்தான் போகிறார்கள். (கரவொலி.) தமது கண்களை வேண்டுமென்றே மூடிக்கொள்ளாத எல்லோரும் அதைப் பார்க்க முடியும். போரை நீட்டிப்பதற்கு வேண்டி, வெறிபிடித்த ஏகாதிபத்தியத் தரப்பு தன்னால் இயன்றதனைத்தையும் செய்து வந்த இந்த மூன்றரை மாதங்களின் போது, இந்த அகாதமான பள்ளம் மேலும் நெருங்கி வந்துள்ளது என்பதில் ஐயமில்லை. நாம் போருக்கு இன்னும் தயாராக இல்லை என்பதை நாம் அறிவோம், உணர்கிறோம்,

தெளிவாகக் காண்கிறோம் என்று நடைமுறையில் போர் என்பது என்ன என்பதை அறிந்த படையாளிகள், ஆயுதமேந்திய ஆட்கள் சொல்லுகிறார்கள். பிரேஸ்த் தூக்குக் கயிறைத் தூக்கி எறிய வேண்டும் என்ற கூக்குரல்களைப் பொருத்த வரை அவை மென்ஷிவிக்குகள், வலதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர், கேரென்ஸ்கி மற்றும் அரசியல் சட்ட ஜனநாயகவாதிகளின் ஆதரவாளர்கள் ஆகியோரிடமிருந்தே வருகின்றன. நிலப்பிரபுக்கள் மற்றும் முதலாளிகளின் ஆதரவாளர்களும், வலதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் மற்றும் அரசியல் சட்ட ஜனநாயகவாதிகளை அண்டிநிற்கும் ஆதரவாளர்களும் இன்னும் எங்கே நிற்கிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். அந்த முகாமில் போரின் பால் நாட்டம் கொண்டுள்ள இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களின் உரைகள் கரவொலியுடன் வரவேற்கப்படும். முந்திய பேச்சாளர்கள் கூறியது போன்று இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள் தம்மைத் தாமே மிகவும் அலங்கோலமான இக்கட்டில் இருக்கக் காண்கிறார்கள்: அவர்கள் பொய்யான நிலையில் திண்டாடுகிறார்கள். (கரவொலி.)

மாபெரும் புரட்சிகள் மக்களின் மெய்யான முனைப்பில் இருந்து உதித்தெழும் என்பதையும், இதற்குப் பல மாதங்கள், பல ஆண்டுகள் எடுக்கும் என்பதையும் நாம் அறிவோம். புரட்சியின் நிகழ்ச்சிப் போக்கில் இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள் இத்தகைய நம்ப முடியாத அளவிலான ஊசலாட்டங்களைத் தோற்றுவித்துள்ளதைக் கண்டு நாம் வியப்படையவில்லை. இந்த ஊசலாட்டங்களைப் பற்றி இங்கு திரோத்ஸ்கி நமக்கு எடுத்துரைத்துள்ளார். அக்டோபர் 26ந் தேதி நாம் இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் தோழர்களை அரசாங்கத்தில் சேரும்படி அழைத்த போது அவர்கள் மறுத்து விட்டார்கள் என்பதையும், கிரஸ்னோவ் பெத்ரோகிராதின் வாயிலில் இருந்த போது அவர்கள் எம்முடன் இருக்கவில்லை என்பதையும், இதன் பின் விளைவு அவர்கள் நமக்கு உதவவில்லை மாறாக, கிரஸ்னோவுக்கே உதவினார்கள் என்பதையும் மட்டுமே நான் இங்கு கூடுதலாக எடுத்துச் சொல்கிறேன். இந்த ஊசலாட்டங்களைக் கண்டு நாம் வியப்

படையவில்லை. ஆம், இந்தக் கட்சி பெருமளவு பட்டு அனுபவித்துள்ளது. ஆனால் தோழர்களே, எல்லாவற்றுக்கும் ஓர் எல்லை உண்டு.

புரட்சி என்பது அனுபவத்தாலும் நடைமுறையாலும் பயின்று அறிந்து கொள்ள வேண்டிய ஒரு காரியம் என்பதையும், லட்சக்கணக்கான மக்கள் ஒரே இசைவுடன் ஒரு மனிதன் போன்று எழுச்சியுறும் போது மட்டுமே ஒரு புரட்சி ஒரு மெய்யான புரட்சியாகிறது என்பதையும் நாம் அறிவோம். (லெனினது இந்த வாசகங்கள் கரவொலியில் மூழ்கடிக்கப்பட்டன. ''சோவியத்துகள் நீடூழி வாழ்க'' என்ற முழக்கம்.) நம்மை ஒரு புதுவாழ்வுக்கு உயர்த்திவரும் இந்தப் போராட்டம் பதினொரு கோடி ஐம்பது லட்சம் மக்களால் தொடங்கப்பட்டுள்ளது: இந்த மாபெரும் போராட்டம் நிறைந்த அளவிலான கவனத்துடன் பரிசீலிக்கப்பட வேண்டும் (உரத்த கரவொலி.). அக்டோபரில், சோவியத் ஆட்சி நிறுவப்பட்டபோது, 1917 அக்டோபர் 26ல் (ஆரவாரம், கூச்சல்கள், கரவொலி) நமது கட்சியும் மத்திய நிர்வாகக் கமிட்டியில் இருந்த அதன் பிரதிநிதிகளும், அரசாங்கத்தில் சேர்ந்து கொள்ளுமாறு இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கட்சியை அழைத்த போது அக்கட்சி சேர மறுத்துவிட்டது. இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள் நமது அரசாங்கத்தில் சேர மறுத்த போது அவர்கள் எம்முடன் இருக்கவில்லை, நமக்கு எதிராகவே இருந்தார்கள். (இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் இருக்கைகளில் ஆரவாரம்.) உங்களுக்குப் பிடிக்காத விஷயங்களைச் சொல்ல வேண்டியிருப்பதற்காக நான் மிகவும் வருந்துகிறேன். (வலது பக்கம் மேலும் உரத்த ஆரவாரம்.) ஆனால் என்ன செய்வது? கசாக்கு ஜெனரல் கிரஸ்னோவ்... (லெனின் தொடர்ந்து பேச முடியாதபடி ஆரவாரமும் கூச்சலும்.) நீங்கள் விரும்பியது என்ன என்பதை நீங்களே அறியாத நிலையில் அக்டோபர் 26ல் ஊசலாடினீர்கள், எம்முடன் சேர மறுத்தீர்கள்... (பல நிமிடங்கள் நீடித்த ஆரவாரம்.)

உண்மையை ஏற்பது கடினம்! அவ்வாறு ஊசலாடியவர்கள், தமக்கு வேண்டியது என்ன என்பதைத் தாமே அறியாதவர்கள் எம்முடன் சேர மறுத்தவர்கள், மற்றவர்களது கட்டுக் கதைகளை விருப்பத்துடன் கேட்கிறார்கள் என்பதை நான் உங்களுக்கு நினைவூட்டுகிறேன். போரில் சேர்ந்திருந்த படையாளிபோல் நான் உங்களிடம் கூறியுள்ளேன்... (ஆரவாரமும் கரவொலியும்.) முந்திய பேச்சாளர் பேசிய போது பெரும்பான்மையான பிரதிநிதிகள் அவரது பேச்சில் குறுக்கிடவில்லை. நல்லது இது எதிர்பார்த்ததே! இந்தப் பேர்வழிகள் காங்கிரசில் இருந்து வெளியேற முடிவு செய்வார்களானால் அது நல்ல தொலைத்து முழுகலாக இருக்கும்! (வலதுபக்க இருக்கைகளில் சந்தடி, ஆரவாரம். அவைத் தலைவர் அமைதி வேண்டுகிறார்.)

எனவே, தோழர்களே, நாம் பிரேஸ்த் சமாதானத்தைச் செய்து கொண்டது சரியானது என்பதை நிகழ்ச்சிகளின் போக்கு முழுதும் எடுத்துக் காட்டி விட்டது. இடைக்கால ஓய்வு பற்றி சோவியத்துகளின் கடந்த காங்கிரசில் தீனமான வேடிக்கை பேச முயன்றவர்கள் நாம் சற்றே ஓய்வு நேரம் பெற்றுள்ளோம் என்பதைக் கண்டும் அறிந்தும் உள்ளனர். இதற்கு நம்பற்கரிய முயற்சிகள் தேவைப்பட்டன என்பது உண்மையே. ஆனால் இந்த ஓய்வு நேரத்தின் தருணத்தில் நமது தொழிலாளர்களும் விவசாயிகளும் சோஷலிஸ்டு நிர்மாணத்தில் பிரம்மாண்டமான முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். இதற்கு நேர்மாறாக மேலை வல்லரசுகள் இந்தப் போரில் ஒவ்வொரு வாரமும் செல்லும் தோறும் ஏகாதிபத்தியம் மேலும் வேகமாகக் கவிழ்ந்துவரும் அகாதமான பள்ளத்தை நோக்கி பிரம்மாண்டமான அடி எடுத்து வைத்துள்ளன.

நமது நிலைமையின் சங்கடம் காரணமாக நமது போர்த் தந்திரங்களைக் கண்டனம் செய்வோரின் நடத்தையை, அவர்கள் முற்றிலும் மனங்குழம்பிப் போயிருக்கிறார்கள் என்று மட்டுமே நான் விளக்க முடியும். கடந்த மூன்றரை மாதங்களை ஒருவர் நினைவு கூர்ந்தால் மட்டுமே போதும் என்று

நான் மீண்டும் கூறுகிறேன். கடந்த காங்கிரசில் கலந்து கொண்டவர்களுக்கு அங்கு கூறப்பட்ட சில விஷயங்களை நினைவு படுத்துகிறேன். அதில் கலந்து கொள்ளாதவர்கள் காங்கிரஸ் நிகழ்ச்சிக் குறிப்பேடுகளை அல்லது காங்கிரஸ் பற்றிய பத்திரிகைச் செய்திகளைப் படிக்குமாறு பரிந்துரைக்கிறேன். நிகழ்ச்சிகள் எமது போர்த்தந்திரங்களை முற்றுகச் சரி என உறுதிப்படுத்தி விட்டன என்பதை இவை அவர்களுக்கு மெய்ப்படுத்திக் காட்டும். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியின் வெற்றிகளுக்கும் சர்வதேச சோஷலிஸ்டுப் புரட்சியின் வெற்றிகளுக்கும் இடையே வரம்புகள் இருக்க முடியாது. இதர நாடுகளில் திடீர் எழுச்சிகள் நிச்சயமாயும் தொடங்கும். அவற்றைத் துரிதப்படுத்தும் பொருட்டு நாம் பிரேஸ்த் கால கட்டத்தில் முடிந்தது அனைத்தையும் செய்தோம். 1905 மற்றும் 1917 புரட்சிகளில் ஈடுபட்டவர்கள், அவற்றைப் பற்றித் தீர எண்ணிப் பார்த்தவர்கள், சிந்தனை யார்ந்த முறையில் காரியகரமாகப் பரிசீலனை செய்தவர்கள் இந்தப் புரட்சிகள் எமது நாட்டில் நம்பற்கரிய இடர்ப்பாடுகளுடன் தோற்றுவிக்கப்பட்டன என்பதை அறிவார்கள்.

1905 ஜனவரி அல்லது 1917 பிப்ரவரிக்கு இரண்டு மாதங்கள் முன்பாக எந்த ஒரு புரட்சியாளரும், அவரது அனுபவமும் அறிவும் எதுவாக இருந்த போதிலும், மக்கள் வாழ்க்கை குறித்து அவர் எவ்வளவுதான் பரிச்சயம் பெற்றிருந்த போதிலும் சரி, இத்தகைய திடீர் எழுச்சிகளால் ருஷ்யா குலுக்கப்படும் என்பதை முன்னறிந்து இருக்க முடியாது. தனிப்பட்ட கூக்குரல்களைப் பற்றிக்கொண்டு மக்களுக்கு அறைகூவல் விடுவது சமாதானத்துக்கு முடிவு கட்டி நம்மைப் போருக்குள் தள்ளுவதற்குச் சமமாகும், இது அறவே மனம் குழம்பிப் போய் முற்றிலும் சிந்தனை இழந்து விட்டவர்கள் கொள்கையாகும். இது அப்படிப்பட்டதே என்பதை நிரூபிக்க நானோ அல்லது வேறு எவரேனுமோ சந்தேகிக்க முடியாத அளவுக்கு நேர்மை வாய்ந்த ஒரு நபரின், தோழர் ஸ்பிரிதோனவாவின் உரையில் இருந்து சில வாசகங்களைச் சுட்டுகிறேன். இந்த உரை கோலஸ் துருதவோவா கிறிஸ்த்யான்ஸ்த்வா[59] பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்தது. இது

மறுக்கப்படவில்லை. ஜூன் 30ந் தேதி ஆற்றிய இந்த உரையில் ஜெர்மானியர் 200 கோடி ரூபிள் மதிப்புள்ள ஜவுளியைத் தமக்கு அனுப்பி வைக்கும்படி நம்மிடம் இறுதி எச்சரிக்கை விடுத்ததாக முற்றிலும் சம்பந்தமில்லாத மூன்று வாக்கியங்களை தோழர் ஸ்பிரிதோனவா புகுத்தி இருந்தார்.

தனது ஆக நேர்மையான ஒரு பிரதிநிதியை இத்தகைய பொய்யும் ஏமாற்றுமான ஒரு படுமோசமான சேற்றுக்குள் தள்ளும் ஒரு கட்சி, அத்தகைய கட்சி, அறமுழுமையாயும் அழிந்தே தீரும். பிரேஸ்த் உடன்படிக்கையில் கையொப்பம் இடுவதற்கு நாம் எத்தனை பிரம்மாண்டமான முயற்சி செய்ய நேர்ந்தது, எத்தகைய வேதனைகளை அனுபவிக்க நேர்ந்தது என்பதை தொழிலாளரும் விவசாயிகளும் அறியாமல் இருக்க முடியாது. அந்தக் கட்சியின் ஆக நேர்மையான உறுப்பினர்கள் கூடக் கையாள முனையும் இவ்வகைப்பட்டதான கட்டுக்கதைகள் புனைசுருட்டுகள் மூலம் அந்த சமாதானத்தின் துன்பதுயரங்களை மிகைப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், மக்களிடம் உண்மை இருக்கிறது, நாம் அதனால் வழிநடத்தப்படுகிறோம் என்பதையும், அதே போதில் இந்தக் கட்சி ஜன்னி வெறியால் துடிக்கிறது என்பதையும் நாம் அறிவோம். அந்த நிலையில், இத்தகைய படுமோசமான மனக்குழப்பத்தினால் தூண்டப்படும் நடத்தை எந்த ஆத்திர மூட்டலை விடவும் மோசமானதாகும். குறிப்பாயும், புரட்சியின் பாலான ஒரு விஞ்ஞான தோரணையோடு, ருஷ்யாவில் இருக்கும் எல்லாக் கட்சிகளையும் ஒட்டுமொத்தமாக ஒப்புநோக்கிப் பார்த்தால் இது தெரியவரும். ஒட்டுமொத்தமாக எல்லாக் கட்சிகளின் உறவுகளும் பரிசீலிக்கப்படுவதை எவரும் புறக்கணிக்க கூடாது. தனிப்பட்ட நபர்களோ கோஷ்டிகளோ தவறாகக் கொள்ளப்படலாம், தடுமாற்றம் அடையலாம், தமது சொந்த நடத்தையை விளக்க முடியாமற் போகலாம். ஆனால் நாம் ருஷ்யாவில் உள்ள எல்லாக் கட்சிகளையும் எடுத்துக் கொண்டு, அவற்றின் பரஸ்பர உறவுகளைப் பரிசீலித்தோமானால் பிழை எதுவும் ஏற்பட முடியாது. இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களின் வேண்டுகோள்களைக் கேட்கும்

போது வலதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளரும் கேரென்ஸ்கியும் சாவின்கவும் இப்போது என்ன கூறுகிறார்கள் என்பதைச் சற்றே பாருங்கள்... பித்தர்கள் போல அவர்கள் கரவொலி செய்கிறார்கள். மில்யுக்கோவின் நோக்கத்துக்குப் பொருத்தமாக இருக்கும் போது இப்போது ருஷ்யாவை ஒரு போரில் சிக்கவைக்க அவர்கள் மகிழ்ச்சியுடன் முன்வருவார்கள். அவ்வாறு பேசுவது பிரேஸ்த் சமாதானம் ஒரு தூக்குக் கயிறாக இருப்பதாக இப்போது பேசுவது, ருஷ்ய விவசாயியின் கழுத்தில் நிலப்பிரபுவின் தூக்குக் கயிறை மாட்டுவதாகும். போல்ஷிவிக்குகளுடன் ஒரு சண்டை என்பது பற்றிப் பேசிய முந்திய பேச்சாளரைப் போன்று இங்கு போல்ஷிவிக்குகளை எதிர்த்துப் போராடுவது பற்றி அவர்கள் பேசும் போது நான் கூறும் பதில்: இல்லை, தோழர்களே, இது சண்டை இல்லை. மாறாக, உண்மையான மாற்ற முடியாத ஒரு முறிவாகும். மக்களிடம் உண்மையைக் கூறி, நிலைமையின் முழுப் பொறுப்பையும் ஏற்று, கூக்குரல்களில் மயங்கிவிட இடந்தராத பேர்களுக்கும், இத்தகைய கூக்குரல்களில் மயங்கி, தம்மை அறியாமலே விரோதியின் வேலையை, ஆத்திரமூட்டுவோரின் வேலையைச் செய்து வரும் பேர்வழிகளுக்கும் இடையிலான முறிவாகும். (கரவொலி.)

எனது அறிக்கையின் முதல் பகுதியை நான் இப்போது முடித்து வைக்கிறேன். மூர்க்கவெறி ஏகாதிபத்தியப் போரின் இந்த மூன்றரை மாதக் காலத்தின் தருவாயில் ஏகாதிபத்திய அரசுகள் அகாதமான பள்ளத்தை நெருங்கி வந்துள்ளன, அதற்குள் மக்களைத் தள்ளி வருகின்றன. காயம் பட்டதான இந்த விலங்கு நமது உயிருள்ள உறுப்புருவில் இருந்து பல சதைக் கட்டிகளைக் கிழித்து எடுத்துக் கொண்டிருக்கிறது. நமது விரோதிகள் இந்த அகாதமான பள்ளத்தை மிகவும் வேகமாக நெருங்கி வருகிறார்கள். அவர்களுக்கு மூன்றரை மாதத்திற்கும் அதிகமான கால அவகாசம் கிடைத்தாலும் சரி, ஏகாதிபத்தியப் படுகொலை நமக்கு இதே போன்ற கடுமையான இழப்பை ஏற்படுத்தினாலும் சரி, அழியப் போவது அவர்களே அன்றி நாம் அல்ல. அவர்களது எதிர்ப்புச் சக்தி குன்றி வரும் வேகத்தைப் பார்த்தால் அவர்கள் வெகு விரைவில்

அகாதமான பள்ளத்தை நெருங்கி விடுவார்கள் என்று தெரி கிறது. மறு புறம், நாம், பிரம்மாண்டமான இடர்ப்பாடுகள் இருந்த போதிலும்—இதை நாம் மக்களிடமிருந்து மறைக்க வில்லை—இந்த மூன்றரை மாதங்களுக்குப் பிறகு ஆரோக்கிய மான உறுப்புருவில், ஆரோக்கியமான பல தளிர்களைக் காண் பிக்க முடிந்தது. தொழில் துறையிலும் மற்றும் எல்லா இடங் களிலும் சிறுவீத நிர்மாணப்பணி நடந்து வருகிறது. இது போலிப் பெருமையற்றதாய் பரபரப்பு ஊட்டாததாய் இருக்கலாம். இது ஏற்கெனவே மிகவும் பயனுள்ள விளைவு களைத் தந்துள்ளது. இத்தகைய வேலைக்கு இன்னொரு மூன்று மாதம், ஆறு மாதம் ஒரு முழு பனிக்காலப் பருவம் கிட்டும் பட்சத்தில் நாம் முன்னேறி அணி வகுத்துச் செல்வோம். அதே போதில் மேலைய ஏகாதிபத்திய விலங்கு போராட்டத் தால் உரமழிந்து போய் அத்தகைய போட்டியைத் தாங்க முடியாமல் போகும். காரணம், அதனுள்ளேயே முதிர்ச்சி யடைந்து வரும் சக்திகள், இது வரை அவற்றுக்குத் தம்மிடமே நம்பிக்கை ஏற்படவில்லை என்ற போதிலும், ஏகாதிபத்தியத் தை அதன் அழிவுக்கு இட்டுச் செல்வது திண்ணம். அங்கு ஏற்கெனவே தொடங்கப்பட்டு விட்ட வேலை, தீவிரமாகவும் அடிப்படையாகவும் தொடங்கப்பட்டுவிட்ட வேலை மூன்றரை மாதங்களில் மாறிவிடப் போவதில்லை. இந்த ஆக்கபூர்வமான சிறுவீத படைப்பாற்றல் பணி குறித்து மிகச் சொற்பமாகவே கூறப்பட்டுள்ளது, இதைப் பற்றி நாம் அதிகமாகப் பேச வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. என்னைப் பொருத்த வரை நான் இந்த மெய்விவரத்தை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. முந்திய பேச்சாளரின் தாக்குதல்களை கவனத்தில் எடுத்துக் கொண்டால் மட்டுமே கூட சும்மா இருக்க முடியாது. நான் 1918 ஏப்ரல் 29ந் தேதிய* மத்திய நிர்வாகக் கமிட்டியின் தீர்மானத்தைக் குறிப்பிடுகிறேன். அந்த சமயம் நான் பேசினேன். சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள் பற்றிக் கூறினேன். நமது நிலையில் நம்பற்கரிய சங்கடங்கள் இருந்த போதிலும் உள்

* இந்த நூலின் 117-122 பக்கங்களைப் பார்க்க.—ப-ர்.

நாட்டில் ஆக்கப் பணியிலேயே முதற் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று சுட்டிக் காட்டினேன்.

இங்கு நாம் எந்தப் பிரமைகளேயும் ஊக்குவிக்கக் கூடாது, இந்தப் பணி கடினமாக இருந்த போதிலும் இதற்கு நாம் எல்லா முயற்சிகளேயும் அர்ப்பணிக்க வேண்டும். நமது அனுபவம்—இதைப் பற்றி நான் உங்களுக்குச் சொல்ல முடியும்—இந்த விஷயத்தில் நாம் ஐயமின்றி பெரிய முன்னேற்றங்களேக் கண்டுள்ளோம் என்பதைக் காட்டும். முதலாளித்துவ வர்க்கம் செய்வது போன்று ஒருவர் வெளிப் பலன்களே மட்டுமே பார்ப்பாராயின், நமது தனிப்பட்ட பிழைகளேப் பிடித்துக் கொண்டு கிடப்பாராயின் நிச்சயமாயும் அவர் வெற்றிகளேப் பற்றிப் பேசுவது அரிதே. ஆனுல் நாம் இதை முற்றிலும் வேறு கருத்துக் கோணத்தில்இருந்து பார்க்கிறோம். உதாரணமாக, முதலாளித்துவ வர்க்கம் ஆற்றுக் கப்பல் தொகுதி நிர்வாகத்தைப் பொறுக்கி எடுத்துக் கொள்கிறது. இதை மறு சீரமைக்க நாம் எத்தனே தடவை முயன்றிருக்கிறோம் என்பதை சுட்டிக்காட்டி சோவியத் அரசாங்கத்தால் இந்த வேலேயைச் சமாளிக்க முடியாது என்று வன்மமான எக்களிப்புடன் பறைசாற்றுகிறது. நமது ஆற்றுக் கப்பல் தொகுதி நிர்வாகத்தைப் பலதடவை மறு சீரமைத்திருப்பது மெய்யே. இது ரயில்வே நிர்வாகத்தைச் சீரமைத்தது போலவும், இப்போது தேசியப் பொருளாதாரக் கவுன்சிலேப் பெரிய அளவில் சீரமைக்கப் போவது போலவும் விளங்குவதாகும் என்று நான் பதில் கூறுகிறேன். இதுவே புரட்சியின் முழுமையான அர்த்தம். அதாவது சோஷலிசம் எதையுமே புரிந்து கொள்ளாத நபர்கள் மட்டுமே விவாதிக்கக் கூடிய தான வறட்டுச் சூத்திரத் துறையில் இருந்து, புத்தக அறிவு அல்லது வேலேத்திட்டம் என்ற துறையில் இருந்து நடைமுறை வேலே என்ற துறைக்குக் கடந்து வந்துள்ளது. இன்று தொழிலாளர்களும் விவசாயிகளும் தமது சொந்தக் கரங்களால் சோஷலிசத்தை உருவாக்கி வருகிறார்கள்.

புத்தக அறிவின் அடிப்படையில் சோஷலிஸ்டு வேலேத் திட்டம் குறித்து நாம் வழக்கமாக வாதம் செய்யும் காலம் கடந்து விட்டது, ருஷ்யாவில் அம்முறை மீண்டும் தலே

காட்ட முடியாத அளவுக்கு காலம் கடந்து விட்டது என்பது திண்ணம். இன்று சோஷலிசம் குறித்து அனுபவத்தின் அடிப் படையில் மட்டுமே விவாதிக்க முடியும். வரலாற்றிலேயே முதல் தடவையாக, முதலாளித்துவ அலுவலர் தொகுதி எனும் பொறியமைவை முதலாளித்துவ நிர்வாக அமைப்பு முறையை உதறித்தள்ளி இந்த வேலையைத் தொழிலாளர் களும் விவசாயிகளும் தாமே தொடங்கிச் செய்ய வகை செய் யும் நிலைமைகளை உருவாக்கியுள்ளது, என்ற மெய் விவரத்தில் தான் புரட்சியின் அர்த்தம் முழுமையும் காணக்கிடக்கிறது. இது நம்பற்கரிய இடர்ப்பாடுகள் கொண்ட வேலையாகும், இந்த இடர்ப்பாடுகளை நாமே நம்மிடமிருந்து மறைப்பது அபத்தமானது. காரணம், நாட்டை நிர்வாகம் செய்யலாம் என்ற சிந்தனைக்கு இடம் கொடுத்ததற்குக் கூட, முதலாளி களும் நிலப்பிரபுக்களும் லட்சக் கணக்கான மக்களை அடக்கு முறை வேட்டையாடியும் அட்டூழியங்களுக்கு ஆளாக்கியும் வந்துள்ளனர். இப்போது, ஒரு சில வாரங்கள், ஒரு சில மாதங்களுக்கு இடையே, கடைகெட்ட, கோரமான பிளவின் மத்தியில், ருஷ்யாவின் உடல் முழுதும் போரினால் காயப்படுத் தப்பட்டு இடித்து நொறுக்கப்பட்டிருக்கும் போது, மக்கள் கிட்டத்தட்ட சாகடிக்கும் அளவுக்கு சக்கையாக அடிபட்ட மனிதனைப் போன்று இருக்கும் நிலையில்—இத்தகைய சமயத் தில், ஜார்களும் நிலப்பிரபுக்களும் முதலாளிகளும் நம்மிடம் அறவே குலைபட்ட நிலையிலான ஒரு நாட்டை விட்டுச் சென் றுள்ள சமயத்தில், புதிய வேலையை, நிர்மாணிக்கும் புதிய பணியினைப் புரிய, புதிய வர்க்கம், தொழிலாளரும், கூலி உழைப்பாளர்களைச் சுரண்டாத, தானியத்தில் கொள்ளை லாபம் அடிக்காத விவசாயிகளும், பொறுப்பேற்க வேண் டும். ஆம், இது மிகவும் கடினமான பணி, ஆனால் மிகவும் பலன்தரும் ஒன்று. இத்தகைய வேலை செய்யப் பெறும் இத் தகைய அனுபவம் அடையப் பெறும் ஒவ்வொரு மாதமும் நமது வரலாற்றின் பத்து இருபது ஆண்டுகளுக்குரிய மதிப்புக் கொண்டதாகும். எமது அரசாணைகள் பற்றிய பரிச்சயம் எதைக் காட்டும் என்பது பற்றி அதாவது, அவற்றை நாம் அடிக்கடி மாற்ற வேண்டியுள்ளது என்பதை ஒத்துக் கொள்ள

நாம் அஞ்சவில்லை. நாம் முழுமை செய்யப்பட்ட பூர்த்தியான எதையும் இன்னும் உருவாக்கி விடவில்லை, ஷரத்துக்கள் பாராக்களில் உருவகப்படுத்தக் கூடியதானஒரு சோஷலிசத்தை நாம் இன்னும் அறியோம். இந்தக் காங்கிரசுக்கு நாம் ஒரு சோவியத் அரசியல் சட்டத்தை இப்போது சமர்ப்பிக்க முடிந்தது என்றால், அதற்குக் காரணம் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் சோவியத்துகள் நிறுவப்பட்டு சோதிக்கப் பட்டன என்பதும், நீங்கள், நீங்களாகவே அரசியல் சட்டத்தை உருவாக்கி நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் அதைச் சோதித்துப் பார்த்தீர்கள் என்பதும் ஆகும். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பின், ஆறு மாதத்திற்குப் பிறகே, சோவியத்துகளின் அகில ருஷ்யக் காங்கிரசுக்குப் பின், சுமார் ஓர் ஆண்டுக்குப் பிறகு மட்டுமே எது நடைமுறையில் ஏற் கெனவே இருந்ததோ[60] அதை நாம் எடுத்து எழுத முடிந் துள்ளது.

பொருளாதாரத் துறையில் நாம் இப்போதுதான் சோஷ லிசத்தைக் கட்டத் தொடங்கியிருக்கிறோம், இங்கு ஒரு புதிய கட்டுப்பாடு உருவாக்கப்பட வேண்டியுள்ளது, இதில் நமக்கு இத்தகைய அனுபவம் எதுவும் இல்லை. மாற்றங்கள் மற்றும் மறு சீரமைப்புச் செய்யும் ஆற்றலின் விளைவாக இதை நாம் பெற்று வருகிறோம். இதுவே நமது முக்கியமான பணி. ஒவ் வொரு புதிய சமுதாய அமைப்பும் மனிதனுக்கும் மனிதனுக் கும் இடையே புதிய உறவுகளை ஒரு புதிய கட்டுப்பாட்டைக் கோருகிறது என்று நாம் பேசுகிறோம். பிரபுத்துவக் கட்டுப் பாடு இன்றி பொருளாதார வாழ்வு சாத்தியமல்ல என்ற ஒரு காலம் இருந்தது. அப்போது ஒரு வகையான கட்டுப் பாடு மட்டுமே இருந்தது. அது தான் கசையடிக் கட்டுப் பாடு. முதலாளித்துவ ஆட்சி நிலவிய காலத்தில் பட்டினியே கட்டுப்பாட்டின் சக்தியாக இருந்தது. ஆனால் இப்போது, சோவியத் புரட்சியோடு, சோஷலிஸ்டுப் புரட்சியின் துவக் கத்தோடு, கட்டுப்பாடு முற்றிலும் புதிய கோட்பாடுகளின் மீது நிறுவப்பட வேண்டும், தொழிலாளர்கள் ஏழை விவ சாயிகளின் ஸ்தாபன சக்தியில் நம்பிக்கையுள்ள ஒரு கட்டுப் பாடாக இருக்க வேண்டும்; ஒரு தோழமைப் பண்பின்

கட்டுப்பாடாக, அதிகப்பட்ச பரஸ்பர மதிப்பின் ஒரு கட்டுப் பாடாக, போராட்டத்தில் சுயேச்சையும் முன்முயற்சியும் காட்டும் ஒரு கட்டுப்பாடாக விளங்க வேண்டும். பழைய முதலாளித்துவ முறைகளைக் கையாளும் எவரும், பஞ்சமும் இல்லாமையும் நிலவும் ஒரு காலத்தில் பழைய முதலாளித் துவ வழியில் வாதம் செய்யும் எவரும், என் இஷ்டப்படி தானியம் விற்ருல் நான் இன்னும் பெரிய லாபம் அடைவேன், நான் சொந்தமாக தானியம் திரட்ட முயன்ருல் மேலும் எளிதாகப் பெறுவேன் என்று இந்த வழியில் வாதம் செய் யும் எவரும், மேலும் எளிதான பாதையைத் தேர்ந்து எடுத் திருக்கலாம், ஆனுல், அவர் சோஷலிசத்துக்கு வந்து சேர மாட்டார் என்பது திண்ணம்.

வழக்கமான முதலாளித்துவ உறவுகளின் பழைய அதி கார எல்லைகளுக்குள்ளேயே அகலாது இருப்பது சாதாரண மானது எளிதானது; ஆனுல் நாம் ஒரு புதிய பாதையை மேற் கொள்ள விரும்புகிருேம். இது நம்மிடமும் எல்லா மக்களிட மும் உயர் தரத்திலான அரசியல் உணர்வையும் ஸ்தாபனத் திரட்சியையும் கோருகிறது. இதற்கு அதிக காலாவகாசம் தேவை, இதில் மேலும் முக்கியமான பிழைகள் உள்ளடங்கி யுள்ளன. நடைமுறையில் எதையும் செய்ய முயலாதவர்கள் மட்டுமே பிழைகள் செய்யாதவர்களாக இருக்க முடியும் என்று நாம் கூறுகிருேம்.

இந்தக் கூட்டத்தின் கருத்துப்படி, பரிசீலனையில் இருக் கும் இந்தக் காலகட்டத்தில், மாறுதல்கள், திருத்தங்கள், பழமைக்குத் திரும்புதல்கள் ஆகியவற்றை ஒருவர் அடிக்கடி சந்திக்கும் சோதனைகள் உட்படுமானுல், இது முக்கிய விஷ யம் அல்ல, இது இந்தக் காலகட்டத்தின் முக்கிய கருத்தோ மதிப்போ அல்ல. ஊதியத்தை அதிகரிக்கும்படி உத்தரவு போடுவதற்கு அவர்களுக்குப் போதுமானதாக இருந்த பழைய அரசாங்கப் பொறியமைவு ஒரு கடந்துபோன விவ காரமாகும். பொருளாதார நிர்வாகத்தைத் தம் கரங்களில் எடுத்துக் கொள்ளும் தொழிலாளர் அமைப்புகளுடன் நாம் காரியம் செய்ய வேண்டியுள்ளது. மற்றவர்களை விட மோச மான நிலையில் இருந்து வழக்கப்பட்டுவிட்ட மேம்பட்ட நிலை

மைகளைக் கோரும் நியாயமான உரிமை படைத்த, இரயில்வேத் தொழிலாளர்களுடன் நாம் காரியம் செய்ய வேண்டியுள்ளது. நாளை ஆற்றுவழிப் போக்குவரத்துத் தொழிலாளரும், அதற்கு மறு நாள் நடுத்தர விவசாயிகளும் தமது கோரிக்கைகளை முன்வைப்பார்கள். இவர்களைப் பற்றிப் பின்னுல் மேலும் விரிவாகப் பேசுவேன். இவர்கள் தொழிலாளர்களை விட மோசமான நிலையில் இருப்பதாக அடிக்கடி கருதுகிருர்கள். தொழிலாளர்களிடம் நாம் உச்சபட்ச கவனம் செலுத்துகிருேம், நமது அரசாணைகள் அவர்களது நலன்களுக்கே அர்ப்பணிக்கப்பட்டவை—இதை முந்திய பேச்சாளர் அறவே புரிந்து கொள்ளவில்லை. இவையாவும் பேரளவான இடர்ப்பாடுகளை உருவாக்குகின்றன. ஆனுல் இந்த இடர்ப்பாடுகளுக்குக் காரணம், தொழிலாளர்களும் ஏழை விவசாயிகளும் பல நூற்றுண்டுகள் இடையில் முதல் தடவையாக, தாமே தமது சொந்தக் கரங்களால் ருஷ்யாவின் பொருளாதார வாழ்க்கை முழுவதையும் ஒழுங்கமைத்து வருகிருர்கள் என்ற மெய்விவரமேயாகும். எனவே, நியாயமான கோரிக்கைகளைத் திருப்தி செய்வதற்கான வழிவகைகளை நாம் காண வேண்டும்; அரசாணைகளை மாற்ற வேண்டும், நிர்வாக அமைப்பு முறையை மறு சீரமைக்க வேண்டும். பிழைகள் மற்றும் தோல்விகள் ஏற்படும் நிகழ்வுகள்—இவற்றை முதலாளித்துவப் பத்திரிகைகள் பற்றிப் பிடித்துக் கொள்கின்றன,—இவை மிகப் பல என்பதும் வாஸ்தவம்—உடன் அக்கம் பக்கமாக நாம் வெற்றிகளும் அடைகிருேம், இந்த ஓரளவான பிழைகள் தோல்விகளில் இருந்து படிப்பினை பெறுகிருேம், சோஷலிசக் கட்டமைப்பினை எப்படி நிர்மாணிப்பது என்பதை அனுபவத்தின் மூலம் அறிகிருேம். எல்லாப் பக்கங்களில்இருந்தும் கோரிக்கைகள் தாரையாகப் பொழியும் போது, ஒவ்வொருவரும் தனது நிலைமையை மேம்படுத்திக் கொள்ள விரும்பும் போது, எல்லோரும் வாழ்க்கை வசதிகளை அனுபவிக்க விரும்பும் போது இது இப்படித்தான் இருக்க வேண்டும், சோஷலிசத்தின் பொருள் இதுவே என்று நாம் கூறுகிருேம். ஆனுல் நாடு ஏழ்மையாக இருக்கிறது, நாடு வறுமையால் பீடிக்கப்பட்டிருக்கிறது, இப்போது உடனடி

எல்லாக் கோரிக்கைகளேயும் நிறைவு செய்வது சாத்தியமல்ல. இதனுல் தான் தகர்வின் மத்தியில் புதிய கட்டமைவினே நிர்மாணிப்பது மிகவும் கடினமாக இருக்கிறது. சமாதானமும் சாந்தியும் நிலவும் ஒரு காலத்தில் சோஷலிசத்தைக் கட்ட முடியும் என்று கருதுவோர் மிகவும் தீர்க்கமாயும் தவருகக் கொள்ளப்படுவர்: அது எல்லா இடங்களிலும் தகர்வு ஏற்பட்ட காலத்தில், பஞ்சம் ஏற்பட்ட காலத்தில் கட்டப்படும். இது இவ்வாறுதான் இருக்க வேண்டும். மெய்யான கருத்துக்கள் கொண்ட மக்களே நாம் நம் முன்னே காணும் போது நாம் கூறுகிருேம்: ஆயிரம், பதினுயிரம், லட்சம் அளவில் இருக்கும் தொழிலாளரும் உழைக்கும் விவசாயிகளும் தமது சொந்தக் கரங்களாலேயே புதிய சோஷலிஸ்டுக் கட்டமைவை நிர்மாணிக்கத் தொடங்கி விட்டார்கள். நாட்டுப் புறப் பகுதிகளில் ஆழமான ஒரு புரட்சி ஆரம்பமாகி வருகிறது, அங்கு பிறர் உழைப்பைச் சுரண்டாத, தானியத்தில் கொள்ளே லாபம் அடிக்காத உழைக்கும் விவசாயிகளிடம் குலாக்குகள் கிளர்ச்சி செய்து தலேயிட முயல்கிருர்கள், அங்கு இப்பணி வேறு விதமாக இருக்கிறது. நகரங்களில் ஆலேகளேயும் உலோகத் தொழிலேயும் ஒழுங்கமைக்க வேண்டும். போரினுல் ஏற்பட்ட பேரழிவின் விளேவாக மூலப் பொருட்களேயும் இதர சாதனங்களேயும் விநியோகிப்பது, உற்பத்திப் பொருட்களே விநியோகிப்பது மிகவும் கடினமான பணியாகும். அங்கு தொழிலாளர்கள் இதைச் செய்வதற்குப் பயிற்சி பெற்று வருகிருர்கள், நிர்வாகத்தின் மத்திய உறுப்புக்களே உருவாக்கி வருகிருர்கள். அங்கு நாம் தலேமைப் பொருளாதாரக் கவுன்சிலே மறு சீரமைக்க வேண்டும். ஆண்டின் தொடக்கத்தில் நிறைவேற்றப்பட்ட பழைய சட்டங்கள் ஏற்கெனவே காலாவதியாகிவிட்டன. தொழிலாளர் இயக்கம் முன்னேறி வருகிறது, பழைய தொழிலாளர் கண்காணிப்பு முறை ஏற்கெனவே பழமையாகி விட்டது. தொழிற்சங்கங்கள் எல்லாத் தொழில்களுக்கும் உரியதான நிர்வாக உறுப்புக்களின் கருமுளேகளாகி வருகின்றன. (கரவொலி.) இந்தத் துறையில் பெரும் பணி ஏற்கெனவே ஆற்றப்பட்டுவிட்டது, ஆனுல் இன்னும் மிடுக்கான வெற்றி

கள் கிட்டிவிட்டதாகப் பெருமையடித்துக் கொள்ள முடியாது. இந்தத் துறையில் முதலாளித்துவ நபர்கள், முதலாளிகள், நிலப்பிரபுக்கள் மற்றும் குலாக்குகள் இன்னும் நீண்ட காலத்துக்குத் தமது பிரசாரத்தை நடத்த வாய்ப்பு இருக்கிறது என்பதையும், வழக்கம் போல ஓர் அரசாணை நிறைவேற்றப்பட்டது, ஆனல் அமல் செய்யப்படவில்லை, இன்னென்று இப்போதுதான் நிறைவேற்றப்பட்டது, ஆனல் மூன்று மாதங்களுக்குப் பிறகு மாற்றப்படுகிறது, அதே போதில் முதலாளித்துவத்தின் கீழ் இருந்தது போலவே கொள்ளை லாபமடிப்பது நீடிக்கிறது என்று சொல்வதற்கும் வாய்ப்புக் கிடைக்கும் என்பதை நாம் அறிவோம். ஆம், கொள்ளை லாபம் அடிப்பதை ஒரே அடியில் நிறுத்திவிட எந்த ஒரு சர்வப் பொது போலிமருத்துவ நிவாரணி எதுவும் நமக்குத் தெரியாது என்பது உண்மையே. முதலாளித்துவ அமைப்பின் பழக்கங்கள் மிகவும் வலுவானவை. பல நூற்றுண்டுகளாக இந்தப் பழக்கங்களில் வளர்ந்து வந்துள்ள மக்களுக்கு மறுபோதனையளிப்பது எளிதான காரியமல்ல, இதற்கு நீண்ட காலம் பிடிக்கும். ஆனல் நமது போராட்ட ஆயுதம் ஸ்தாபனமே என்று கூறுகிறோம். நாம் எல்லாவற்றையும் ஒழுங்கமைக்க வேண்டும், எல்லாவற்றையும் நமது சொந்தக் கரங்களில் எடுத்துக் கொள்ள வேண்டும், ஒவ்வொரு படியிலும் குலாக்குகளையும் கொள்ளை லாபமடிப்பவர்களையும் கண்காணிக்க வேண்டும், அவர்கள் மீது விட்டுக் கொடாத போர்ப் பிரகடனம் செய்ய வேண்டும், அவர்கள் சுயேச்சையாக மூச்சுவிட இடந்தரலாகாது, அவர்களது எல்லா நடவடிக்கையையும் கண்காணிக்க வேண்டும். (கரவொலி.)

அரசாணைகளில் மாறுதல்கள் செய்வது தவிர்க்க முடியாதது என்பதை அனுபவம் வாயிலாக நாம் அறிவோம். ஏனெனில் புதிய மாற்றங்களுக்கு மூலமாக இருக்கும் புதிய சங்கடங்களை நாம் எதிரிட வேண்டியுள்ளது. நாம் உணவு வழங்கீடு விஷயத்தில் ஏழை விவசாயிகளை ஒழுங்கமைக்கும் நிலையை எட்டியிருக்கிறோம் என்றல், நமது முன்னள் தோழர்களான இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள் நேர்மையாகவே நமது பாதைகள் வேறு பிரிந்து விட்டன என்று

கூறுவார்களானல்—இதைச் சந்தேகிக்க முடியாது—அவர்களுக்கு நமது பதில்: உங்கள் பாடு இன்னும் படுமோசமே, இதன் பொருள் நீங்கள் சோஷலிசத்தைக் கைவிட்டுவிட்டீர்கள் என்பதே. (கரவொலி.)

தோழர்களே! உணவுப் பிரச்சினை பிரதானமான பிரச்சினை. இதில் தான் நாம் நமது கொள்கையை வகுப்பதில் ஆக அதிகமான கவனம் செலுத்துகிறோம். வெளியாருக்குப் புலப்படாத பல சிறிய நடவடிக்கைகளை மக்கள் கமிசார்கள் கவுன்சில் அங்கீகரித்துள்ளது. நீர்வழி மற்றும் ரயில்வே போக்குவரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள், போர்க் கமிசாரக கிடங்குகளை ஒழித்து அகற்றல், கொள்ளை லாபமடிப்பதை எதிர்த்துப் போராடுதல் ஆகிய இத்தகைய நடவடிக்கைகளே அவை. இவை யாவும் உணவு வழங்கலை சரியான அடிப்படையில் முறைப்படுத்தும் திசையில் எடுக்கப்பட்டவை. நமது நாடு மட்டுமல்ல, போருக்கு முன்னல் பஞ்சம் என்றால் என்ன என்பதை என்றுமே அறிந்திராத மிகவும் நாகரிகம் அடைந்த நாடுகளும் கூட இப்போது ஆகமோசமான இடுக்கண்ணான நிலையில் உள்ளன. ஒரு பிரிவு இன்னொரு பிரிவின் மீது மேலாதிக்கம் பெறுவதற்கு என நடத்தும் போராட்டத்தில் ஏகாதிபத்தியவாதிகள் உருவாக்கியதே இந்த இடுக்கண். மேலை நாடுகளில் லட்சக்கணக்கான மக்கள் பட்டினியின் கடுந்தொல்லையால் அவதிப்படுகிறார்கள். இதுவே சமுதாயப் புரட்சியைத் தவிர்க்க முடியாததாக்குகிறது. ஏனெனில் சமுதாயப் புரட்சி வேலைத்திட்டங்களில் இருந்து கிளைப்பதில்லை. மாறாக, லட்சக்கணக்கான மக்கள்: ''பட்டினி கிடந்து வாழ்வதை விடவும் புரட்சிக்காக இறப்பது மேல்'' என்று கூறும் மெய் விவரத்தில் இருந்தே கிளைக்கிறது. (கரவொலி.)

ஒரு பயங்கரப் பெருவிபத்து—பஞ்சம்—நமக்கு நேர்ந்துள்ளது. நமது நிலைமை எந்தளவு அதிகக் கடினமாகிறதோ அந்தளவுக்கு உணவு நெருக்கடி அதிகக் கடுமையுறும், சோவியத் ஆட்சியை எதிர்த்து முதலாளிகள் தமது போராட்டத்தை மேலும் அதிகமாகத் தீவிரப்படுத்துவர். செக்கோஸ்லோவாகியக் கலகம்[61] பிரிட்டிஷ்-பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதி

களால் விலைக்கு வாங்கப்பட்ட மனிதர்களின் கலகமே என்பதை நீங்கள் அறிவீர்கள். ஏதாவது ஒரு இடத்தில் சோவியத்துக்கு எதிரான கலவரங்கள் நடப்பதாக அடிக்கடி கேட்டு வருகிறோம். குலாக்குகளின் எழுச்சிகள் பிராந்தியத்துக்குப் பிராந்தியம் பரவி வருகிறது. தோன் பிராந்தியத்தில் கிரஸ்னோவ் இருக்கிறார். பெத்ரோகிராதில் அவர் வந்து பணிந்து தமது வாளை ஒப்படைத்தபோது, ருஷ்யத் தொழிலாளர்கள் பெருந்தன்மையுடன் அவரை சுதந்திரமாக வெளியே போக அனுமதித்தார்கள். காரணம், அறிவாளியின் விருப்புவெறுப்புக்கள் இன்னும் வலுவாகவே இருக்கின்றன, அறிவாளிகள் மரண தண்டனையை எதிர்த்து ஆட்சேபித்தார்கள். மரண தண்டனைக்கு எதிரான அறிவாளிகளின் விருப்பு வெறுப்புக் காரணமாகவே கிரஸ்னோவ் இஷ்டப்படி போக அனுமதிக்கப்பட்டார். தொழிலாளர்களையும் விவசாயிகளையும் சுட்டுக் கொல்லுகிற கிரஸ்னோவை சுடும்படி தண்டனை விதிக்காத மக்கள் நீதிமன்றத்தை தொழிலாளர் அல்லது விவசாயிகள் நீதிமன்றத்தை நான் பார்க்க விரும்புகிறேன். த்ஸெர்ழீன்ஸ்கி கமிஷன்[62] சிலரை சுட்டுக் கொல்லும்படி தண்டனை விதிப்பது சரிதான், ஆனால் ஒரு மனிதன் எதிர்ப்புரட்சியாளராக இருந்தவர் சுட்டுக் கொல்லத்தக்கவர் என்று பகிரங்கமாயும் வெளிப்படையாயும் ஒரு நீதிமன்றம் கூறுமானால் அது தவறு என்று எம்மிடம் சொல்லப்படுகிறது. இத்தகைய ஆழ்ந்த போலித் தனத்தில் மூழ்கியுள்ளவர்கள் அரசியல் பிணங்களே. (கரவொலி.) இல்லை, ஒரு பாசாங்குகாரனாக இருக்க விரும்பாத ஒரு புரட்சியாளன் மரண தண்டனையைக் கைவிட முடியாது. சுடுதல்கள் எதுவும் இல்லாத புரட்சியோ உள்நாட்டுப் போர் கால கட்டமோ என்றும் இருந்தது கிடையாது.

நமது உணவு வழங்கீடு கிட்டத்தட்ட பேராபத்தான நிலைக்குக் குறுக்கப்பட்டுவிட்டது. நாம் நமது புரட்சியின் ஆகப் பேரிடரான கால கட்டத்தை எட்டியிருக்கிறோம். நாம் எல்லாவற்றிலும் மிகவும் இடுக்கண் வாய்ந்த கால கட்டத்தை—தொழிலாளர் விவசாயிகளின் ருஷ்யாவில் இதை விட அதிக இடர்ப்பாடான ஒரு கால கட்டம் என்றும் இருந்தது கிடையாது—அறுவடை வரையிலான கால கட்டத்தை எதிர்

கொண்டுள்ளோம். எனது நாட்களில் நான் ஏராளமான கட்சி வேறுபாடுகளை புரட்சிகரத் தகராறுகளைப் பார்த்திருக்கிறேன். இத்தகைய நெருக்கடி நேரத்தில் மேலும் அதிகமான மக்கள் வெறிப்பிதற்றலுக்கு இடமளித்து ‘‘நான் சோவியத்துகளில் இருந்து ராஜினமாச் செய்துவிடுகிறேன்’’ என்று கூக்குரலிடுவதையும், மரண தண்டனையை ஒழிக்கும் அரசாணைகள் குறித்துப் பேசுவதையும் கண்டு நான் வியப்படையவில்லை. ஆனால் கடுமையான போராட்ட நேரத்தில் சட்டத்தின் மாற்றவொண்ணுத்தன்மையால் தடுத்து நிறுத்தப்படும் ஒருவர் மோசமான புரட்சியாளரே ஆவர். மாறிச் செல்லும் கால கட்டத்தில் சட்டங்களுக்குத் தற்காலிகமான செல் தகைமை மட்டுமே உண்டு. சட்டம் புரட்சியின் அபிவிருத்திக்கு இடையூறு செய்யுமானல் அது ஒழிக்கப்பட வேண்டும், அல்லது திருத்தப்பட வேண்டும். பஞ்சம் படுமோசமாகும் தோறும், இந்த மோசமான விபத்து இதற்குச் சம அளவில் கசப்பான முறைகள் மூலம் எதிர்க்கப்பட வேண்டும் என்பது தெளிவு.

சோஷலிசம் ஒரு வறட்டுச் சூத்திரமாக இனி இருக்காது, அது ஒருக்கால் ஒரு வேலைத்திட்டமாக இனியும் இருக்காது என்பது போல என்று நான் மீண்டும் கூறுகிறேன். நமது கட்சி இன்னும் ஒரு புதிய வேலைத்திட்டத்தை வரையவில்லை. ஆனல் பழைய வேலைத்திட்டம் ஏற்கெனவே பயனற்றதாகி விட்டது. (கரவொலி.) சரியான நேர்மையான உணவு வினியோகம்—இதுவே இன்று சோஷலிசத்தின் அடித்தளமாக அமையும். (கரவொலி.) போர் நமக்குப் பொருளாதாரத் தகர்வை மரபுரிமையாக விட்டுச் சென்றுள்ளது. ‘‘எமக்குப் பின் பிரளயம்’’ என்று சொல்லிக் கொண்டே கேரென்ஸ்கி, நிலப்பிரபுக்கள் மற்றும் குலாக்குகள் தமது முயற்சிகளால் நாட்டை ‘‘அது மோசமாவது வரை நல்லதே’’ என்று சொல்லும் அளவுக்கு ஆக்கிவிட்டார்கள். போர் நமக்கு வாரிசாகத் தந்துள்ள இடர்ப்பாடுகள் எத்தகையவை என்ருல், இந்த உணவு வழங்கீடு விஷயத்தில் நாம் சோஷலிசத்தின் மெய்யான சாரத்தைக் கொண்டிருக்கிருேம். இதை நமது கரங்களில் எடுத்துக்கொண்டு, இதற்கு நடைமுறை

யில் தீர்வு காண வேண்டும். உணவு விஷயத்தில் என்ன செய்வது என்று நம்மை நாமே கேட்டுக் கொள்கிறோம்: பழைய முதலாளித்துவ வழிகளிலேயே, விவசாயிகள் நிலைமையைப் பயன்படுத்திக் கொண்டு தானியத்தில் ஆயிரக்கணக்கான ரூபிள் லாபம் திரட்டவும் அதே சமயம் தம்மை விவசாயிகள் என்றும், சில சமயம் இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் என்றும்கூட அழைத்துக் கொள்ளும் வகையில், தொடர்ந்து செல்வதா? (ஆரவாரமும் கரவொலியும்.) அவர்கள் இவ்வாறு வாதிடுகிறார்கள்: மக்கள் பட்டினி கிடந்தால், தானிய விலைகள் அதிகரிக்கும்; நகரங்கள் பட்டினியில் கிடந்தால், நான் எனது பைகளை நிரப்பிக் கொள்வேன்; பட்டினி மேலும் மோசமானால், மேலும் பல ஆயிரங்கள் சம்பாதிப்பேன். இந்த வகையான வாதங்களுக்கான பழிக்கு தனிப்பட்ட நபர்கள் பொறுப்பல்ல என்பதை நான் நன்றாக அறிவேன். நிலப்பிரபுத்துவம் மற்றும் முதலாளித்துவத்தின் வெறுக்கத்தக்க மரபுரிமை முழுதும் இவ்வாறு வாதம் செய்யவும், இதைப் போன்று சிந்திக்கவும் வாழவும் மக்களுக்குப் போதித்துள்ளது; லட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கையைச் சீர்திருத்தியமைப்பது என்பது மிகவும் கஷ்டமானது. இதற்கு நீண்ட பிடிவாதமான பணி அவசியம், இந்தப் பணியை நாம் இப்போதுதான் தொடங்கியிருக்கிறோம். பசியினால் கடுந்தொல்லைக்கு உள்ளாகி உணவு வினியோகத்தில் சோஷலிஸ்டு அமைப்பு முறையின் ஒழுங்கமைப்பில் எவ்வித நன்மையும் காணாத மக்கள் மற்றவை எல்லாம் எக்கேடும் கெட்டுப் போகட்டும் என்று விட்டுத் தம்மைத் தாமே கவனித்துக் கொள்ள ஓடுகிறார்கள் என்றால் அவர்களைக் குறைகூற என்றுமே கருதமாட்டோம். இந்த மக்கள் மீது பழி போட முடியாது. ஆனால் இது கட்சிகளின் பிரதிநிதிகளின் காரியம் என்றாகும் போது, திட்டவட்டமான கட்சியைச் சேர்ந்த மக்களின் காரியம் என்றாகும் போது, பெருந்திரளான மக்களின் காரியம் என்றாகும் போது, அவர்கள் இந்த விவகாரத்தை யாரும் குறை சொல்ல முடியாத, துயருறும் கடும் தொல்லையுறும், பட்டினி கிடக்கும் தனி நபரின் நோக்கு நிலையில் இருந்து பார்க்கக் கூடாது,

மாறாக ஒரு புதிய சமூகத்தைக் கட்டும் நோக்கு நிலையில் இருந்து பார்க்க வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

எல்லாம் தடங்கலின்றியும் சாந்தமாகவும் நடந்து கொண்டிருக்கும் போது சோஷலிசத்தைக் கட்டுவது என்றுமே சாத்தியமில்லை என்பதை மீண்டும் கூறுகிறேன்; நிலப்பிரபுக்களும் முதலாளிகளும் ஆவேசமான எதிர்ப்பைக் காட்டாமல் சோஷலிசம் செயலுருப்பெறுவது என்றுமே சாத்தியமல்ல. நமது நிலைமை எவ்வளவுக்கு அதிக மோசமாக இருக்கிறதோ அந்தளவுக்கு அதிகமாக அவர்கள் எக்களிப்புடன் தமது கைகளைத் தேய்த்துக் கொள்கிறார்கள், அதிகமாகக் கலகத்தில் ஈடுபடுகிறார்கள். நமது நிலைமை எந்தளவு அதிக மோசமாக இருக்கிறதோ அந்தளவுக்கு நம்மிடையில் அதிக நாசவேலைக்காரர்கள் இருக்கிறார்கள் மேலும் ஆவலுடன் எல்லா வகையான செக்கோஸ்லோவக் மற்றும் கிரஸ்னோவ் விவகாரங்களில் ஈடுபடுகிறார்கள். குன்றின் கீழ் நோக்கிச் சரிவதற்கு இடந்தராமல் வண்டியை குன்றின் மேல் நோக்கி இழுத்துச் செல்வது கடினம் என்ற போதிலும் இதைச் சமாளிக்கப் பழைய வழி சரியான வழியல்ல என்று நாம் கூறுகிறோம். மக்கள் கமிசார்கள் கவுன்சில் உணவுப் பிரச்சினை மீது கவனம் செலுத்தாமல், ஆயிரக்கணக்கில் பரிந்துரைகள், உத்தரவுகள் மற்றும் அரசாணைகள் பிறப்பிக்காமல் பஞ்சத்தை எதிர்த்து எப்படிப் போராடுவது என்பது பற்றி விவாதிக்காமல், ஒரு வாரம் கூட ஒரு நாள்கூடக் கடந்ததில்லை என்பதை நாம் நன்றாக அறிவோம். தனி விலைகளோ நிர்ணய விலைகளோ அல்லது தானிய ஏகபோகமோ அவசியமில்லை என்று சிலர் கூறுகிறார்கள்: மக்களுக்கு இஷ்டப்படி வர்த்தகம் செய்ய இடமளியுங்கள் செல்வந்தர்கள், மேலும் செல்வந்தர்களாவார்கள், ஏழைகள் பட்டினியால் சாவார்கள் என்றால் அவர்கள் எப்போதும் அதையே அனுபவித்து வருகிறார்கள் என்கிறார்கள். ஆனால் ஒரு சோஷலிஸ்டு இவ்வாறு வாதம் செய்ய முடியாது. இந்தத் தருணத்தில் குன்று என்றையும் விட செங்குத்தாக இருக்கும் சமயத்தில் வண்டியை ஆகச் செங்குத்தான சரிவில் இழுத்துச் சென்றே தீர வேண்டும்.

சோஷலிசம் கட்சி வேறுபாடுகளின் ஒரு விவகாரம் என்ற நிலைமை போய் விட்டது, அது நடைமுறைப் பிரச்சினை ஆகி விட்டது. தானியத்தில் கொள்ளை லாபமடிக்காத விவசாயிகளுடன் அணி சேர்வது மூலம் நாம் குலாக்குகளை எதிர்த்து நிற்க முடியுமா என்பதே இப்போதைய பிரச்சினை. நாம் போராட வேண்டியிருக்கும் போது, நம் எதிரே ஆகப் பெரும் சுமையான வேலை இருக்கும் போது, இப்போது நாம் எதிர்த்து நிற்க முடியுமா என்பதே பிரச்சினை. ஏழை விவசாயிகள் கமிட்டிகளைப்[63] பற்றி அவர்கள் பேசுகிறார்கள். பசியின் கடுந்தொல்லைகளை தமக்குத் தாமே கண்டவர்கள், குலாக்குகளைத் தகர்த்து தாட்சண்யமின்றி நசுக்க வேண்டுமானல் மிகவும் தீவிரமான தாட்சண்யமற்ற நடவடிக்கைகள் அவசியம் என்பதைத் தெளிவாக உணர்வார்கள். ஏழை விவசாயிகள் சங்கங்களை நாம் அமைக்கத் தொடங்கும் போது இது எத்தகைய கடுமையான தீவிரமான நடவடிக்கை என்பதை முழுமையாக உணர்ந்தோம். நகர மக்கள், நாட்டுப்புறத்து ஏழை மக்களுடனும், இருப்புக்களை வைத்திருந்தாலும் லாபக் கொள்ளையடிக்காதவர்களுடனும், இடர்ப்பாடுகளை ஊக்கத்துடன் சமாளித்து தானிய உபரிகள் அரசிடம் அளிக்கப்பட்டு உழைக்கும் மக்கள் மத்தியில் வினியோகிக்கப்படுவதை உறுதி செய்ய விரும்புவோருடனும் கூட்டணி சேர வேண்டும்; அத்தகைய கூட்டணியே இந்தப் போராட்டத்தை நடத்துவதற்குரிய ஏக முறையாகும். இந்தப் போராட்டத்தை நடத்துவதற்கான வழி வேலைத்திட்டங்களும் சொற்பொழிவுகளும் அல்ல. பஞ்சத்துடனை இந்தப் போராட்டம் சோதனைகள் துன்பதுயரங்கள் எல்லாம் இருந்த போதிலும் யார் சோஷலிசத்திற்கு நேரடிப் பாதையில் செல்கிறார்கள் என்பதையும் யார் குலாக்குகளின் மோசடிக்கும் ஏமாற்றுக்கும் சரண் அடைகிறார்கள் என்பதையும் புலப்படுத்தும்.

ஆக நேர்மையான ஒருவராக, எனவே, எளிதில் வசமிழக்கக் கூடியவராகவும் கருத்துக்களை மாற்றிக் கொள்ள மிகவும் இடமளிப்பவராயும் இருக்கும் முந்திய பேச்சாளர் போன்று உள்ள நபர்கள்—இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கட்சியில் இருப்பார்களானல், அவர்கள் போல்ஷிவிக்கு

களுடன் சேர்ந்து வேலை செய்ய முடியாது எனவே விலகிக் கொள்கிறோம் என்று சொல்வார்களானால், இதைக்குறித்து ஒரு நிமிடமும் வருந்த மாட்டோம். மக்கள் நூறு ஆயிரக் கணக்கில் பசியால் மடிந்து வருகிறார்கள், மற்றவர்களிடம் பெருவாரியாக உபரி தானியம் உள்ளது. தானியத்திற்குரிய நிர்ணய விலைகள் இரு மடங்காக்கப்பட்டும் கூட கடந்த ஆகஸ்டுக்கு முன்னதாக அவர்கள் தானியங்களை விற்கவில்லை. இதை எதிர்த்து எல்லா ஜனநாயகவாதிகளும் கண்டனம் தெரிவித்தார்கள். பசியின் காரணமாக சொல்லற்கரிய கடுந் தொல்லைகளை மக்கள் அனுபவிக்க நேர்ந்துள்ளது என்பதை அவர்கள் அறிந்திருந்தும் கூட தானியங்களை நடுத்தர விவசாயிகள் விற்பனை செய்யும் விலைக்கு விற்க அவர்கள் விரும்பவில்லை. இத்தகையோர் மக்களின் விரோதிகளாவர். அவர்கள் புரட்சியை நாசப்படுத்த முனைந்து நிற்கிறார்கள், ஒடுக்குமுறைக்கு ஆதரவு தருகிறார்கள். இத்தகைய தருணத்தில் விலகிச் செல்லும் சோஷலிஸ்டுகள் முதலாளிகளின் நண்பர்களே! அத்தகைய நபர்களை எதிர்த்துப் போரிடுக! இரக்கமின்றிப் போரிடுக! (பொதுவான கரவொலி இதில் பெருமளவில் இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களும் கலந்து கொள்கின்றனர்.) எதிரிகளின் பேச்சில் ஒரு கண மேனும் வசமிழந்து போக இடமளித்து இது விவசாயிகளுக்கு எதிரான போராட்டம் என்று சில சமயம் எச்சரிக்கை இன்றியோ அல்லது சிந்தனை இன்றியோ இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் செய்வது போல—கூறும் ஒருவர் ஆயிரம் தடவை பிழை செய்பவராவார், ஆயிரம் தடவை தவறுகக் கொள்ளப் படுவார். இல்லை, இது அந்த அற்பமான சிறுபான்மையான கிராமப்புற குலாக்குகளை எதிர்த்து நடத்தும் போராட்டமாகும்; சோஷலிசத்தைப் பாதுகாக்கவும் ருஷ்யாவில் உணவைச் சரிவர வினியோகம் செய்யவும் நடத்தும் போராட்டமாகும். (குரல்கள்: ''பண்டங்கள் விஷயம் என்ன?'') நாம் மிகப்பெரும் பெரும்பான்மை விவசாயிகளுடன் சேர்ந்து போராடுவோம். இந்தப் போராட்டத்தில் வெற்றி பெறுவோம். அதற்குப் பிறகு ஒவ்வொரு ஐரோப்

பியத் தொழிலாளியும் சோஷலிசம் என்ருல் என்ன என்பதை நடைமுறையில் நிச்சயம் காணுவான்.

தனது வாழ்க்கை முழுவதும் உழைத்து வந்துள்ள, சோஷ லிசத்தின் பொருள் என்ன என்பதை விஞ்ஞான பூர்வம் அறி யாத, ஆனுல் தனது ரொட்டியை கடுமையான விலைகொடுத்தே சம்பாதிக்க வேண்டி இருந்தது என்பதை அறிந்த எவரிட மிருந்தும் இந்தப் போராட்டத்தில் நாம் உதவி பெற முடியும். அவர் நம்மைப் புரிந்து கொள்ளுவார் அந்த மனிதர் நம் பக்கமாக இருப்பார். தானிய உபரிகளை வைத்திருப்பவர் களும், மிகவும் மோசமான தேசியப் பேரிடர் ஏற்பட்ட தரு ணத்தில் தானியத்தை ஒளித்து வைக்க முயன்றவர்களுமான குலாக்குகளைப் பொருத்தவரை, புரட்சியின் ஆதாயங்கள் யாவும் பணயம் வைக்கப்பட்டுள்ள தருணத்தில், எல்லா வகைப்பட்ட ஸ்கரபாத்ஸ்கிகளும் பற்ருடல் செய்யப்பட்ட தும் அல்லாததுமான நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் தமது கழுத்தை நீட்டி பஞ்சத்தின் மூலம் தொழிலாளர் விவசாயி களை வீழ்த்தி, நிலப்பிரபுக்களை மீண்டும் பதவியில் அமர்த்தத் தருணம் நோக்கி இருக்கும் போது—அத்தகைய தருணத்தில் குலாக்குகள் மீது தாட்சண்யமற்ற போர்ப் பிரகடனம் செய் வது நமது முதன்மையான சோஷலிஸ்டுக் கடமையாகும். பட்டினியால் வாடும் மக்களுக்கும் சரி, சோஷலிஸ்டுப் புரட்சிக்கும் சரி, துயரார்ந்த இடர்ப்பாடும் கடுமையான சோதனையும் ஏற்பட்டுள்ள இந்தத் தருணத்தில் பொறுப் பினைத் தட்டிக்கழித்து முதலாளித்துவ வர்க்கத்தின் பொய்மைக் கதைகளை திருப்பி ஒப்பிக்கும் ஒருவர் மோச மான ஒரு சோஷலிஸ்டே ஆவார்.

இது விவசாயிகளுக்கு எதிரான போராட்டம் என்று கூறு வது பொய், ஆயிரம் தடவை பொய் ஆகும்! அரசியல் சட்ட ஜனநாயகக் கட்சியின் செய்திப் பத்திரிகைகளில் இது நூற்றுக்கணக்கான தடவை கூறப்பட்டிருப்பதை நான் பார்த் திருக்கிறேன். தொழிலாளர்கள் விவசாயிகளிடமிருந்து பிரிந்து விட்டார்கள் என்று அவை கூக்குரல் இடுவதைக் கேட்டு நான் வியப்படையவில்லை. ''விவசாயிகளே, உங்கள் கண்களைத் திறவுங்கள், சுய உணர்வு பெறுங்கள், போல்ஷி

விக்குகளுடன் ஒட்டுமில்லே, உறவுமில்லே என்று செய்துவிடுங்கள்!'' என்று அவர்கள் வெறிப்பிதற்றலால் கதறும் போது, இதைப் போன்றவற்றை நான் கேட்கும் போதும் படிக்கும் போதும் நான் வியப்பே அடைவதில்லே. அங்கு இது முற்றிலும் பொருத்தமே. இந்தப் பேர்வழிகள் தமது எஜமானுக்கு ஊழியம் செய்கிருர்கள், ஊழியம் செய்வது அவர்கள் வேலே. ஆனுல் இம்மாதிரிப் பேசும் அளவுக்கு இறங்கிவிடும் ஒரு சோஷலிஸ்டின் பண்பில் இருக்க நான் விரும்ப மாட்டேன்! (உரத்த கரவொலி.) உணவுப் பிரச்சினேக்குத் தீர்வு காண்பதில் எத்தகைய நம்பற்கரிய இடர்ப்பாடுகளேச் சுமக்க நேரும் என்பதை தோழர்களே, நாம் முழுமையாக உணர்கிருேம். இங்கு தப்பெண்ணங்கள் ஆக ஆழமானவை; நலன்கள் குலாக்குகளின் நலன்கள் ஆக ஆழ வேரூன்றியவை; இங்கு பிளவு, தேக்கம், கிராமிய வாழ்க்கையின் சிதறலான தன்மை, அறியாமை யாவும் பல இடங்களில் நமக்கு எதிராக ஒன்று சேர்ந்துள்ளன. இந்த இடர்ப்பாடுகள் இருந்த போதிலும் நாம் பின்வாங்க முடியாது என்று கூறுகிருேம்; பஞ்சம் விளேயாட்டுத்தனமாகச் செயல்படக் கூடிய ஒரு காரியம் அல்ல. இந்தப் பஞ்சத்தில் பெருந்திரளான மக்கள் உதவி பெறவில்லே என்ருல் பசியானது அவர்களே ஸ்கரபாத்ஸ்கியின் பக்கமாகக் கூட விரட்டிவிடக் கூடும். இது விவசாயிகளுக்கு எதிரான போராட்டம் என்று கூறுவது பொய்! இவ்வாறு கூறும் எந்த ஒரு நபரும் முழுக்க முழுக்கக் குற்றவாளி ஆவார்; வெறியுணர்ச்சியால் இத்தகைய பேச்சுக்குத் தூண்டப்படத் தம்மைத் தாமே அனுமதித்தவர்கள் பயங்கரமான அவப்பேறுக்கு இரையானவர்கள் ஆவர். இல்லே, ஏழை விவசாயிகளிடம் போராடவில்லே என்பது ஒரு புறம் இருக்க, நாம் நடுத்தர விவசாயிகளுடன் கூடப் போராடவில்லே. ருஷ்யா முழுவதிலும் நடுத்தர விவசாயிகளிடம் உபரித்தானியம் மிகவும் சிறிதளவே இருந்தது. புரட்சிக்குப் பல பத்தாண்டுகள் முன்பிருந்தே நடுத்தர விவசாயிகள் தொழிலாளர்களே விடவும் மோசமாக வாழ்ந்து வந்திருக்கிருர்கள். புரட்சிக்கு முன்பு அவர்களது வாழ்க்கை நிவாரணம் பெருத வறுமையும் ஒடுக்கு முறையும் கொண்டதாக இருந்தது. இந்த

நடுத்தர விவசாயிகள் விஷயத்தில் நமது கொள்கை உடன் பாடின் பாற்பட்டதாகும்.

சோஷலிஸ்டுப் புரட்சி என்ருல் உழைக்கும் மக்கள் அனை வருக்கும் சமத்துவம் என்று பொருள். தொழிலாளர்களைக் கூலிக்கு அமர்த்துவது மூலம் பிறர் உழைப்பைச் சுரண்டாம லும் கொள்ளை லாபமடிக்காமலும் இருக்கும் நடுத்தர விவ சாயியை விட அதிகமாக நகரப்புறத் தொழிலாளி ஊதியம் பெறுவது நியாயமல்ல. விவசாயிகள் தொழிலாளிகளை விட மேலதிகமான வறுமையாலும் ஒடுக்கு முறையாலும் துன்புறு கின்றனர், தொழிலாளர்களை விட மோசமாகவே வாழ் கின்றனர். அவர்களது நிலைமைகளை மேம்படுத்திக் கொள்ளப் பாடுபடும் அமைப்புக்களோ தொழிற்சங்கங்களோ அவர் களிடம் இல்லை. தொழிலாளர் சங்கங்களிடமும் கூட பல் வேறு தொழில்களில் ஊதியங்களை சமப்படுத்த முயல் வதற்கு டஜன் கணக்கான கூட்டங்கள் நடத்துவது அவசிய மாக இருப்பதையும், அப்படியும் அவற்றை சமப்படுத்த முடி யாமல் போவதையும் காண்கிருேம். இதற்கு நீண்ட காலம் பிடிக்கும் என்பதை விவேகமுள்ள ஒவ்வொரு தொழிலாளி யும் அறிவார். தொழிலாளர் நலக் கமிசாரகத்துக்கு எத்தனை புகார்கள் வருகின்றன என்பதைப் பாருங்கள்! ஒவ்வொரு வகைத் தொழில் செய்வோரும் எழுச்சியுற்று வருகின்றனர், பழைய வழியில் நீடித்து வாழ விரும்பவில்லை. அடிமைகளைப் போல வாழ விரும்பவில்லை என்று கூறுகின்றனர். இந்த வறுமையால் பீடிக்கப்பட்ட வகையற்ற நாட்டில் அவர்களை வேதனைப்படுத்தும் புண்களை ஆற்ற நாம் விரும்புகிருேம். கிட்டத்தட்ட முற்ருகத் தகர்ந்து விட்டதான பொருளாதார வாழ்வை நாம் எப்படியாவது காப்பாற்ற வேண்டும். இதை ஸ்தாபனம் மூலம் மட்டுமே செய்ய முடியும். விவசாயி மக் களை ஸ்தாபனத்தில் திரட்டும் பொருட்டு ஏழை விவசாயிகள் கமிட்டி சம்பந்தமான அரசாணையைப் பிறப்பித்தோம். இந்த அரசாணையை சோஷலிசத்தின் விரோதிகள் மட்டுமே எதிர்க்க முடியும். ஜவுளிவகைகளின் விலைகளைக் குறைப்பது நியாயம் என்று கருதுவதாக நாம் கூறினேம். நாம் எல்லா வற்றையும் பதிவு செய்து நிச்சயமாயும் தேசவுடைமையாக்கி

வருகிறோம். (கரவொலி.) இது தொழில்துறைப் பண்டங்களின் வினியோகத்தை நாம் முறைப்படுத்த அனுமதிக்கும்.

நாம் கூறினோம்: ஜவுளி வகைகளின் விலைகளை ஏழை மக்களுக்குப் பாதியும் நடுத்தர விவசாயிகளுக்கு 25 சதவிகிதமும் வெட்டிக் குறையுங்கள் என்று. ஒருவேளை இந்த விகிதங்கள் தப்பாக இருக்கலாம். இப்பிரச்சினைக்கான நமது தீர்வு சரி என்று நாம் உரிமை கொண்டாடவில்லை. நாம் அதைச் சொல்லவில்லை. பிரச்சினைக்குச் சரியான தீர்வு காணச் சேர்ந்து செயல் புரியுங்கள். (கரவொலி.) பிரதான நிர்வாகப் பதவிகளில் சாய்வு நாற்காலிகளில் அமர்ந்தபடியே இரகசியமாக கொள்ளை லாபத்தை எதிர்த்துப் போராடுவதும் இந்த நீசத்தனமான வேலையைச் செய்யும் மோசடிக்காரர்களை பிடிக்க முயல்வதும் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண உதவா.

உணவுத்துறைக் கமிசாரகம் விவசாயத்துறைக் கமிசாரகத்துடன் இணைந்து நின்று எல்லாப் பொருட்களையும் தேசவுடைமையாக்கம் செய்து, விலைகளை நிர்ணயம் செய்தால் மட்டுமே நாம் உண்மையில் சோஷலிசத்துக்கு நெருக்கமாக வர முடியும். நகரங்களில் இருக்கும் உழைக்கும் மக்களும், நாட்டுப்புற ஏழை மக்களும், பிறரைக் கொள்ளையடிக்காத, கூலிக்கமர்த்தியோ கொள்ளை லாபம் அடித்தோ மற்றவர்களின் உழைப்பைச் சுரண்டாத உழைக்கும் எல்லோரும் மட்டுமே சோஷலிசத்தை நெருங்கி வருவார்கள் காரணம், தானியத்துக்கு நூறு ரூபிளோ அதற்கு அதிகமாகவோ கோரும் நபர், கூலிக்கு ஆட்களை வேலைக்கு அமர்த்தும் நபரை விடக் கொள்ளை லாபமடிப்பதில் சற்றும் குறைந்தவனல்ல, ஒருக்கால் இவன் அவனைவிட மோசமானவனாக, படுகேடான கொள்ளை லாபமடிப்பவனாக இருக்கலாம். சோவியத் ஆட்சியின் கடுமையான இடர்ப்பாடான அரை ஆண்டுக்குப் பிறகு, நாம் ஏழை விவசாயிகளின் ஸ்தாபனத்தை வந்து அடைந்திருக்கிறோம். அரை வாரத்துக்குப் பின் நாம் அதை வந்து அடையாதது வருந்தத்தக்கது—இங்கு தான் நாம் பிழை செய்திருக்கிறோம்! ஆறு மாதங்கள் கூடுதல் தாமதமாக ஏழை

விவசாயிகள் ஸ்தாபனம் பற்றியும், உணவு சர்வாதிகாரம்[64] குறித்தும் அரசாணைகளைக் கொண்டு வந்தோம் என்பதற்காக நம்மைக் குறை கூறி இருந்தால் இந்தக் குற்றச் சாட்டை நாம் வரவேற்றிருப்போம். இப்போது இந்தப் பாதையை நாம் மேற்கொண்டு விட்ட பிறகு மட்டுமே சோஷலிசம் வெறும் தொடராக இருக்கும் நிலை போய் அது நடைமுறை விவகாரம் ஆகிவருகிறது என்று நான் கூறுகிறேன். அரசாணை துரதிருஷ்டவசமாக கருத்தில் உருவாக்கப் பட்டிருக்கலாம், விகிதங்கள் தவறாக இருக்கலாம். அவற்றை நாம் எப்படி நிர்ணயிப்பது? உங்கள் அனுபவத்தில் இருந்து மட்டுமே தான். இரயில்வேத் தொழிலாளர்களுக்குத் தமது தொழிற்சங்கங்கள் இருந்தும்கூட எத்தனை தடவை நாம் அவர்களது சம்பள விகிதங்களை மாற்றியமைத்திருக்கிறோம், ஆனால் ஏழை விவசாயிகளுக்கு இவை எதுவும் இல்லை! ஏழை விவசாயிகள் சம்பந்தப்பட்ட அரசாணைகளில் வகுக்கப் பட்டுள்ள விகிதங்கள் சரியா இல்லையா, விலைகளை ஏழை விவசாயிகளுக்கு பாதிப்பங்கும் நடுத்தர விவசாயிகளுக்குக் கால்பங்கும் என்று குறைப்பதும் பணக்கார விவசாயிகளிடம் இருந்து எல்லாவற்றையும் எடுத்துக் கொள்வதும் சரியா என்பதை—இந்த விகிதங்கள் சரியா அல்லவா என்பதை பரிசோதிப்பதில் நாம் ஒத்துழைப்போம்.

போராட வேண்டியிருப்பின் நாம் ஒரு கணமும் தயங்காமல் துணிச்சலான அரசாணைகள் மூலம் அந்தப் போராட்டத்தை நடத்துவோம் இது வறட்டுச் சூத்திரத்துக்கோ, ஒரு வேலைத்திட்டத்துக்கோ, ஒரு கட்சிக்கோ, ஒரு பிரிவுக்கோ அன்றி, சோஷலிசத்திற்காக, உயிர்த்துடிப்புள்ள சோஷலிசத் திற்காக, ருஷ்யாவின் தலைசிறந்த மாவட்டங்களில் பட்டினி கிடக்கும் நூறு ஆயிரம் லட்சக் கணக்கான மக்களுக்கு ரொட்டியை வினியோகம் செய்வதற்கான, எங்கு தானியம் கிடைக்கிறதோ அங்கிருந்து அதை எடுத்துச் சரிவர வினியோகம் செய்வதற்கான மெய்யான போராட்டமாக இருக்கும். நூறு விவசாயிகளில் தொண்ணூற்று ஒன்பது பேர் அவர்கள் உண்மையை அறிந்து கொள்ளும் போது, அரசாணையைப் பெற்று அதைப் பரிசீலித்து நடைமுறையில் சோதனை செய்து அதை

எவ்வாறு திருத்துவது என்று எமக்குச் சொல்லும் போது—நாம் இதைத் திருத்துவோம், விதிதங்களை மாற்றி அமைப்போம்—இந்த வேலையைச் செய்து சமாளித்து இதன் நடைமுறைக் கஷ்டம் பற்றித் தெரிந்து கொள்ளும் போது, இந்த விவசாயிகள் நமது பக்கம் இருப்பார்கள். நாங்கள் உழைக்கும் மனிதனின் ஆரோக்கியமான இயல்பை வெளிப்படுத்துகிறோம். இது, இது மட்டுமே மெய்யான பிரச்சினையை, அடிப்படையான ஜீவாதாரமான பிரச்சினையை—சோஷலிசத்தை முடிவு செய்யும் என்று கூறுவார்கள். பொருள்களுக்குச் சரியான விலைகளை நிறுவுவோம், தானியத்தில், ஜவுளி வகைகளில், எல்லாப் பொருள்களிலும் ஏகபோகத்தை நிலை நாட்டுவோம். அப்புறம் மக்கள் கூறுவார்கள்: ''ஆம், சோஷலிசத்தால் துவக்கி வைக்கப்பட்டுள்ள உழைப்பு வினியோகம், ரொட்டி வினியோகம், இதர பொருட்கள் வினியோகம் முன்னைவிடச் சிறப்பாக இருக்கிறது.'' இதைத்தான் மக்கள் சொல்லத் தொடங்கி இருக்கிறார்கள். எத்தனையோ பல இடர்ப்பாடுகளும் எத்தனையோ பல பிழைகளும் இருந்த போதிலும், நாம் மூடிமறைக்க முயலாது, மாறாக வெளிச்சம் போட்டுக் காட்டி வெட்கப்படும்படி எடுத்துக் காட்டும் சம்பவங்கள் இருந்த போதிலும்—நமது படைப் பிரிவுகளே கொள்ளை லாபமடிப்பதற்குத் தலைவணங்கி, மக்களை முதலாளித்துவ வழக்கங்களும் பழக்கங்களும் இழுத்துச் செல்ல முயலும் சரிவுப் பள்ளத்தில் விழும் சம்பவங்கள்—உள்ளன—ஆம் இத்தகைய சம்பவங்கள் எல்லா இடங்களிலும் உள்ளன. மக்களைத் திடுமென மறு உருவாக்கம் செய்ய முடியாது என்பதை, லட்சோபலட்சம் மக்களிடம் திடுமென சோஷலிசத்தில் நம்பிக்கை ஏற்படுமாறு உத்வேக மூட்ட முடியாது என்பதை நாம் அறிவோம் (இந்த நம்பிக்கையை அவர்கள் எங்கிருந்து பெறுவார்கள்? தமது சொந்த எண்ணத்தில் இருந்து அல்ல என்பது நிச்சயம் அல்லவா? அவர்களது அனுபவத்தில் இருந்தே பெறுவர்). இவை எல்லாம் இருந்த போதிலும், கொள்ளை லாபம் இன்றி ரொட்டி பெற முடியும் என்றும், பஞ்சத்திலிருந்து விமோசனம் பெறும் வழி நகரப்புற தொழிற்சாலை, தொழில்துறை தொழிலாளர்கள், ஏழை விவ

சாயிகளுடன் கூட்டணி சேர்வதில் தான் காணக் கிடக்கிறது என்றும் ஏழை விவசாயிகள் மட்டுமே தானியத்தில் கொள்ளை லாபம் அடிக்காதவர்கள் என்றும் மக்கள் சொல்லத் தொடங்கியுள்ளனர். ஆம், நடுத்தர விவசாயி நமது அரசாணைகளைப் பார்த்ததும் தனக்கென அவற்றைப் படிக்கிறுன், வலதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள் மற்றும் குலாக்குகளின் தீவிர ஆதரவாளர்களின் அவதூறுகளை வைத்து ஒப்புநோக்குகிறுன் பிறகு, ஏழை விவசாயிகளுக்கு ஒரு விகிதமும் நடுத்தர விவசாயிகளுக்கு இன்னெரு விகிதமும் நிறுவியதும், நஷ்டஈடு இன்றிக் குலாக்குகளிடம் இருந்து தானியத்தை எடுத்துக் கொள்வதும் சரியான செயல்பாடே என்று கூறுவான். நாம் சோஷலிஸ்டுகளைப் போலச் செயல்படுகிறேம் என்று அவன் கூறுமல் இருக்கலாம். அவனுக்கு அந்தத் தொடர் தெரியாமல் இருக்கலாம். ஆனுல் அவன் நிச்சயமாயும் நமது நேசசக்தி. ஏனெனில் அவன் தானியத்தில் லாபக் கொள்ளை அடிப்பதில்லை. மேலும் சோஷலிஸ்டுப் புரட்சிக்கு கொடிய அபாயம் ஏற்பட்டுள்ள தருணத்தில் தானியத்தில் கொள்ளை லாபம் அடிப்பது மக்களுக்கு எதிராகச் செய்யப்படும் கடுமையான குற்றச் செயல் என்பதைக் கட்டாயம் அவன் உணர்வான், ஒப்புக் கொள்வான்.

ரொட்டியை அரசாணை மூலம் வினியோகம் செய்ய முடியாது. ஆனுல் ஆலைகளின் மற்றும் நகரப்புறத் தொழிலாளர்களுடன் நாட்டுப்புறத்து ஏழைமக்களை, தொழிலாளிகளைக் கூலிக்கு அமர்த்தாத, கொள்ளை லாபத்தில் ஈடுபடாத, உழைக்கும் விவசாயிகளைச் சேர்ந்தமைக்கும் ஒரு கூட்டணியை நிறுவவும் மேம்படுத்தவும் நீண்ட பிடிவாதமான முயற்சிகளுக்குப் பிறகு இதைச் சரிவர முறைப்படுத்தும்போது நமது கட்சிக்கு எதிரான வெறித்தனமான கூக்குரல்களால் அந்தக் கூட்டணியை உடைத்துவிட முடியாது. (கரவொலி.)

விவசாயிகளிடம் நிலத்தை சமூகவுடைமை ஆக்குவதாக நாம் வாக்குறுதி அளித்த போது நாம் ஒரு சலுகையை விட்டுக் கொடுத்தோம்; ஏனெனில் தேசவுடைமையாக்கத்தை ஒரே அடியில் கொண்டுவர முடியாது என்பதை நாம் புரிந்து

கொண்டிருந்தோம். நமது அக்டோபர் 26ந் தேதியச் சட்டத்தில் உங்களது நிலத்தைச் சமூகவுடைமையாக்கம் செய்வதை உள்ளடக்கியது மூலம் நாம் பிழை செய்திருக்கலாம் என்பதை அறிவோம்.* இது இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களுக்கு என விட்டுக் கொடுத்ததாகும். அவர்கள் அரசாங்கத்தில் சேர மறுத்தார்கள், இந்தச் சட்டம் இயற்றப்பட்டால் மட்டுமே அரசாங்கத்தில் சேர்ந்து கொள்வதாகக் கூறினர்கள். என்னைக் காணவந்ததாயும் தன்னைத்தானே தாழ்ந்து பணிந்து என்னிடம் மன்ருடிக் கேட்டதாகவும் சம்பந்தா சம்பந்தமில்லாத விவரங்களை முன்வைப்பது மூலம் ஸ்பிரிதோனவா ஆயிரம் தடவை தவறு செய்கிருள். தோழர்களே, உங்களில் பலர் என்னைக் காணவந்திருக்கிறீர்கள், அவ்வாறு நடந்திருக்க முடியாது என்பதையும் எந்த ஒரு தோழரும் அவ்வாறு நடத்தப்பட்டிருக்க முடியாது என்பதையும் நீங்கள் அறிவீர்கள். ஒரு கட்சியின் சிறந்த தலைவர்கள் கட்டுக் கதைகளைப் பரப்பும் அளவுக்கு இறங்கக் கூடிய அக்கட்சி உண்மையில் மோசமானதே. (முழக்கம்.) தோழர் ஸ்பிரிதோனவா விடமிருந்து வந்த ஒரு கடிதம் என்வசம் உள்ளது. அவள் அடிக்கடி எனக்குக் கடிதம் எழுதியுள்ளாள். அந்தக் கடிதத்தை நாளை தேடிப்பார்த்து வெளியிடுவேன். அவள் எழுதுகிருள்: ''விவசாயக் கம்யூன்களுக்கு இருபது லட்சம் வழங்க நீங்கள் ஏன் மறுக்கிறீர்கள்?'' இது விவசாயத் துறை மக்கள் கமிசார் திரு. செரெதா விவசாயக் கம்யூன்களுக்கு ஒரு கோடி ஒதுக்கப்பட வேண்டும் என்ற யோசனை சமர்ப்பித்த அதே நாளில் அவளால் எழுதப்பட்டது. அவரது வேலை பற்றி அவளுக்குத் தெரியாது. (நீடித்த கரவொலி.) அவ்ளது உரையிலும் தோழர் ஸ்பிரிதோனவா இதையே கூறியதை நீங்கள் கேட்டீர்கள். பிரசார நோக்கங்களுக்காக ஒரு கட்சியின் ஆக நேர்மையான தலைவர்கள், சோவியத் அரசாங்கத்தைப் பற்றி இத்தகைய கட்டுக் கதைகளைப் பரப்பும் அளவுக்குச் செல்வார்களானல், அக்கட்சி உண்மையில் மோசமானதே என்று நான் மறுபடியும் கூறுகிறேன். அவர்

* இப்பதிப்பின் தொகுதி 7, பக்கம் 28 பார்க்க.—ப-ர்.

களுக்குத் தான் இது பாதகம்! விவசாயக் கமிசாரகத்துக்கு வந்து விவசாயிக் கம்யூன்களுக்கு ஒரு கோடி ஒதுக்கப்பட்டிருப்பது பற்றிய அறிவிப்பைப் படிக்கும் ஒவ்வொரு விவசாயியும் வேறு எவருடைய பேச்சையும்விடத் தான் சொந்தமாகக் கண்டதையும் கேட்டதையுமே நம்புவான், இந்த நபர்கள் கட்டுக் கதைகளைப் பரப்பும் அளவுக்கு கீழே இறங்கிவிட்டார்கள் என்பதைப் புரிந்து கொள்வான். இந்தக் கட்சியை ஆதரிக்க மறுத்துவிடுவான். (கரவொலி.) எனது உரையை முடிக்கும்முகமாக ஒரே ஒரு விஷயத்தை மட்டுமே கூற விரும்புகிறேன். புதிய அறுவடை வரையில், அந்த அறுவடை பெத்ரோகிராத், மாஸ்கோ பட்டினி வட்டாரங்களுக்கு கொண்டுவரப்படும் வரை ருஷ்யப் புரட்சியில் ஒரு கடினமான காலகட்டம் நம்முன் காணக்கிடக்கிறது. நகரப்புறத் தொழிலாளர்களுக்கும் தானியத்தில் கொள்ளை லாபமடிக்காத நாட்டுப்புற உழைக்கும் மக்கள் திரளுக்கும் இடையில் ஏற்படும் மெய்யாகவே நெருக்கமான ஒரு கூட்டணி மட்டுமே புரட்சியைக் காப்பாற்ற முடியும்.

இவை எல்லாம் இருந்த போதிலும், அனைத்து உழைக்கும் மக்களின் கூட்டணி ருஷ்யாவில் மட்டுமன்றி உலகம் முழுவதும் வளர்ந்து வருகிறது, விரிவடைந்து வருகிறது, வலுவடைந்து வருகிறது என்பதை நமது காங்கிரஸ் புலப்படுத்துகிறது. நமது புரட்சியைப் பற்றி வெளிநாடுகளில் தெரிந்திருப்பது நகைப்புக்கிடமான அளவு மிகச் சொற்பம், மிகமிகச் சொற்பம். அங்கு நிலவும் ராணுவத் தணிக்கை முறை எந்தத் தகவலையும் உள்ளே விடுவதில்லை. இதை வெளி நாடுகளில் இருந்து திரும்பி வந்த தோழர்கள் கூறியிருக்கிறார்கள். ஆயினும், இவை எல்லாம் இருந்த போதிலும், வெறும் இயல்புணர்வினால் மட்டுமே வழி காட்டப்பட்ட ஐரோப்பியத் தொழிலாளர்கள் போல்ஷிவிக் அரசாங்கத்திடம் அனுதாபம் காட்டுகின்றனர். ஐரோப்பாவில், ஏகாதிபத்தியப் போர் இன்னும் நடைபெற்று வரும் நாடுகளில், சோஷலிஸ்டுப் புரட்சிக்கு அனுதாபம் தெரிவிக்கும் குரல்கள் பெருமளவில் அதிகரித்தபடி உள்ளன. ஜெர்மன் சோஷலிஸ்டுகளும், அறிவொளி பெற்ற ஒவ்வொரு தொழிலாளியும்

விவசாயியும் அறிந்துள்ள பிரசித்தி பெற்ற பெயர்களான கிளாரா ஸெத்கின், ஃப்ரான்ஸ் மேரிங் போன்றவர்களும், போல்ஷிவிக் அரசாங்கத்துக்கு நன்றி தெரிவிக்கிறார்கள், அனுதாபமும் ஆதரவும் பிரகடனம் செய்கிறார்கள். இத்தாலியில் கட்சியின் பழைய செயலாளரும், ஸிம்மர்வால்ட் மாநாட்டில் போல்ஷிவிக்குகளை அவநம்பிக்கையுடன் கருதிப் பார்த்தவருமான லஸாரி நம்மிடம் அனுதாபம் காட்டியதற்காக இப்போது சிறையிலடைபட்டிருக்கிறார்.

புரட்சியைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் வளர்ந்து வருகிறது. பிரான்சில், ஸிம்மர்வால்ட் மாநாட்டில்[65] போல்ஷிவிக்குகளை ஆழமான அவநம்பிக்கையுடன் நடத்திய தோழர்களும் தொழிலாளர்களும் முன்னொரு நாள் சர்வதேச உறவுகள் கமிட்டியின்[66] பேரில் ஓர் அறிக்கை விடுத்தார்கள். அதில் போல்ஷிவிக் அரசாங்கத்தை ஆதரிக்குமாறு மனமாரக் கேட்டுக் கொண்டார்கள், எந்த ஒரு கட்சியின் சாகசங்களையும் எதிர்ப்பதாக அறிவித்தார்கள்.

எனவே, தோழர்களே, எம் எதிரே உள்ள காலகட்டம் எவ்வளவு இடர் மிகுந்ததாயும் கடினமானதாயும் இருந்தபோதிலும், உண்மையை எடுத்துச் சொல்வதும் இதைக் காணும்படி மக்களை விழிப்புறச் செய்வதும் நமது கடமை. காரணம், மக்கள் மட்டுமே அவர்களது முன் முயற்சி மற்றும் ஸ்தாபனத்தின் மூலம், கோரிக்கைக்குப் பின் கோரிக்கையாக முன்வைத்தும், சோஷலிஸ்டுக் குடியரசைத் தாங்கி ஆதரித்தும் நமக்கு உதவ முடியும். நாம் தேர்ந்தெடுத்துள்ளதும் நிகழ்ச்சிகளால் ஊர்ஜிதம் செய்யப்பட்டதுமான இந்தப் பாதையைப் பின்பற்றும் பட்சத்தில், இந்தப் பாதையை உறுதியாகவும் நெறிபிறழாமலும் நாம் பின்பற்றும் பட்சத்தில், எந்த ஒரு சொற்சிலம்பத்தாலோ, பிரமைகளாலோ, ஏமாற்றாலோ, வெறியுணர்விலோ நாம் சரியான பாதையில் இருந்து திசை திருப்ப இடமளிக்காத பட்சம், நமது நிலையை கட்டிக் காப்பதற்கும் ருஷ்யாவில் சோஷலிசத்தின் வெற்றியை உறுதியாக முன்கொண்டு சென்று, அவ்வாறு உலக சோஷலிஸ்டுப் புரட்சியின் வெற்றியை முன் கொண்டு செல்வதற்கு உலகில் சகல வாய்ப்பும் நமக்கு உண்டு என்

பதில் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை. (உரத்த நீடித்த கரவொலி, மகிழ்ச்சி ஆரவாரம்.)

செய்திபத்திரிகைச் செய்தியுரை
அ.ரு.ம.நி.க. இஸ்வேஸ்தியா, இதழ்கள்
139-140ல் 1918 ஜூலை 6, 7
தேதிகளில் வெளியிடப்பட்டது

1918 சோவியத்துகளின் ஐந்தாவது அகில ருஷ்யக் காங்கிரஸ். சுருக்கெழுத்துப் பிரதி. ம.நி.க. வெளியீட்டில் முழுமையாக வெளியிடப்பட்டது	நூல் திரட்டு, தொகுதி *36*, பக்கங்கள் *491-513*

பிரெஸ்னியா மாவட்டக் கூட்டத்தில் ஆற்றிய உரை
ஜூலை 26, 1918

(லெனினது வருகை நீடித்த நிலைத்த தான ஆரவாரத்துடன் வரவேற்கப்பட்டது. "சர்வதேசிய கீதம்" பாடப்பட்டது.) தமது உரையில் லெனின் சோவியத் அரசியல் சட்டத்தின் முக்கிய மான அம்சங்களையும் அடிப்படைக் கருத்துக்களையும் மிகவும் தெளிவான ஜனரஞ்சகமான முறையில் விளக்கிக் கூறினர். சோவியத்துகள் மக்களால் நடத்தப்படும் ஜனநாயக அரசாங் கத்தின் ஆக உயர் வடிவம். சோவியத்துகள் ஒருவரது சிந் தனையில் இருந்து புதுப்புனைவு செய்யப்பட்ட எதுவும் அன்று, அவை வாழ்க்கை எதார்த்தத்தின் விளைபயனாகும். அவை பின்தங்கி நிற்கும் எமது நாட்டில் வரலாற்றிலேயே முதல் தடவையாக தோன்றின, வளர்ந்தன. ஆனால் அவை புற நிலைக் காரணங்களால், உலகம் முழுதும் உழைக்கும் மக்களது அரசாங்க வடிவமாகி விளங்க வேண்டும்.

இது காறும் நிலவிவந்ததான அரசியல் சட்டங்கள் எல் லாம் ஆளும் வர்க்கங்களின் நலன்களைப் பாதுகாத்துவந்தன. சோவியத் அரசியல் சட்டம் ஒன்று மட்டுமே உழைக்கும் மக்களுக்கு சேவை செய்தது, இடைவிடாது சேவை செய்ய வல்லது, சோஷலிசத்திற்கான போராட்டத்தில் ஒரு வலிமை மிக்க ஆயுதமாகத் திகழ்ந்தது. "பத்திரிகை சுதந்திரம், கூட் டம் கூடும் சுதந்திரம்" என்ற கோரிக்கைகள் விஷயத்தில் முதலாளித்துவ அரசியல் சட்டங்களுக்கும் சோவியத் அரசி யல் சட்டத்திற்கும் இடையிலான வேறுபாடுகளைத் தோழர் லெனின் மிகவும் பொருத்தமாகச் சுட்டிக் காட்டினர். அங்கே பத்திரிகை சுதந்திரம் மற்றும் கூட்டம் கூடும் சுதந்திரம் முத

லாளித்துவ வர்க்கத்தின் தனிமுழு ஏகபோகமாகும். அங்கே முதலாளித்துவ வர்க்கத்தினர் தமது உயர் கூடங்களில் கூடுவர். வங்கிகளின் நிதி உதவியுடன் பெரிய தினசரிப் பத்திரிகைகளை வெளியிடுவர், இவற்றின் நோக்கம் பொய்யையும் அவதூறையும் விதைப்பதும் மக்கள் திரளின் மனங்களை விஷப்படுத்துவதுமேயாகும். அங்கே தொழிலாளர் பத்திரிகைகள் நெருக்கி நசுக்கப்படும் கொள்ளைக்காரத் தனமான போர் குறித்து அது என்ன கருதுகிறது என்பதைச் சொல்ல இடமில்லை. அங்கே போரை எதிர்த்தவர்கள் வேட்டையாடப் பட்டனர், அவர்களது கூட்டங்கள் தடைசெய்யப்பட்டன. இங்கே சோவியத் ருஷ்யாவில், தொழிலாளர் பத்திரிகைகள் நிலவின, உழைக்கும் மக்களுக்கு சேவை புரிந்தன. ருஷ்யாவில் நாம் முதலாளித்துவ வர்க்கத்தாரிடமிருந்து முதல் தரமான இல்லங்களையும் மாளிகைகளையும் எடுத்துக் கொண்டோம். கிளப்புகளாக அவற்றைப் பயன்படுத்துவதற்காக தொழிலாளர்களிடம் அவற்றை ஒப்படைத்தோம். இது நடைமுறையிலான கூட்டம் கூடும் சுதந்திரமாகும். சமயம் ஒரு தனிப்பட்ட விஷயம். தாம் விரும்பும் எந்த ஒரு சமயத்திலும் எவரும் நம்பிக்கை கொள்ளலாம், அல்லது சமய நம்பிக்கையே இல்லாமலும் இருக்கலாம். சோவியத் குடியரசு எல்லா தேசங்களின் உழைக்கும் மக்களையும் ஒன்றிணைத்தது, தேசிய பாரபட்சம் எதுவும் இன்றி உழைக்கும் மக்களின் நலன்களைக் காத்தது. சோவியத் குடியரசு சமய வித்தியாசங்களைப் பாராட்டாது. அது எல்லாச் சமயங்களில் இருந்தும் விலகி நின்றது, சமயத்தை சோவியத் அரசில் இருந்து பிரித்து வைக்க முயன்றது. எல்லாப் பக்கங்களிலும் ஏகாதிபத்தியக் கொள்ளைக்காரரால் சுற்றி வளைத்துக் கொள்ளப்பட்டிருந்த சோவியத் குடியரசின் இடர்ப்பாடுகளை லெனின் தொடர்ந்து வருணித்தார். சர்வதேச ஏகாதிபத்தியத்தின் எல்லா அத்துமீறல்களையும் எதிர்த்து நமது சோவியத் குடியரசை செஞ்சேனை வீரர்கள் பாதுகாப்பார்கள் என்றும், சர்வதேசப் பாட்டாளி வர்க்கம் நமக்கு உதவ முன்வரும் வரையில் அதைப் பத்திரமாகப் பேணி வைத்திருப்பார்கள் என்றும் தோழர் லெனின் நம்பிக்கை தெரிவித்தார். (தோழர்

லெனினது உரை நீண்ட ஆரவாரமான கரவொலியுடன் வரவேற்கப்பட்டது. ''சர்வதேசிய கீதம்'' பாடப்பட்டது.)

கம்யூனிஸ்ட் சஞ்சிகை, இதழ் 5ல் 1957ல் முதலில் வெளியிடப்பட்டது

நூல் திரட்டு, தொகுதி 36, பக்கங்கள் 535-536

அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி, மாஸ்கோ சோவியத், ஆலே மற்றும் தொழிற்சாலைக் கமிட்டிகள், மாஸ்கோ தொழிற்சங்கங்களின் கூட்டு அமர்வில் ஆற்றிய உரை ஜூலை 29, 1918[67]

(கரவொலி, மகிழ்ச்சி ஆரவாரமாகிறது.) தோழர்களே, ருஷ்யாவில் துவங்கிவிட்டதான சோஷலிஸ்டுப் புரட்சியில், புதிய அறுவடை வரையிலான கால கட்டம் மிகவும் இடர்ப்பாடான, கடுமையான, மிக முக்கியமான பகுதி என்பதைக் கட்சிப் பத்திரிகைகளில், சோவியத் நிறுவனங்களில், மக்களிடையான நமது கிளர்ச்சிப் பிரசாரத்தில் நாம் சுட்டிக் காட்டியிருப்பது முதல் தடவையல்ல. இந்த முக்கியமான நிலைமை அதன் உச்ச கட்டத்தை எட்டிவிட்டது என்று இப்போது நாம் கூற வேண்டும் என்று நான் கருதுகிறேன். இதற்குக் காரணம் இப்போது யார் ஏகாதிபத்திய உலகின், ஏகாதிபத்திய நாடுகளின் ஆதரவாளர்கள் என்பதும், யார் சோவியத் சோஷலிஸ்டுக் குடியரசின் ஆதரவாளர்கள் என்பதும், முடிவாகவும் முழுநிறைவாகவும் தெளிவாகிவிட்டது. இராணுவ நோக்கு நிலையில் இருந்து சோவியத் குடியரசின் நிலை இப்போதுதான் முற்றிலும் தெளிவாகியுள்ளது என்பதை முதலில் கூறியாக வேண்டும். செக்கோஸ்லோவாக் கலகத்தை, எதிர்ப்புரட்சிக் கலகங்களின் சங்கிலித் தொடரினைச் சேர்ந்த தொடர் நிகழ்வுகளில் ஒன்ருகவே பலர் முதலில் கருதினுர்கள். இந்தக் கலகத்தில் பிரிட்டிஷ்-பிரெஞ்சு மூலதனமும், பிரிட்டிஷ்-பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளும் பங்கு பற்றியது சம்பந்தமாகப் பத்திரிகைகளில் வந்த செய்திகளை நாம் போதியளவு உணர்ந்து மதிப்பீடு செய்யவில்லை. மூர்மனிலும், சைபீரியத் துருப்புக்கள் மத்தியிலும், குபானிலும் நிகழ்ச்சிகள் எவ்வாறு உருவாயின என்

பதையும் பிரிட்டிஷாரும்-பிரெஞ்சுக் காரர்களும் செக்கோஸ் லோவாகியருடன் சேர்ந்து, பிரிட்டிஷ் முதலாளி வர்க்கத் தாரின் மிக நெருக்கமான ஒத்துழைப்புடன் சோவியத்துகளை வீழ்த்த எப்படி முயன்றூர்கள் என்பதையும் நாம் இப்போது நினைவு கூர வேண்டும். செக்கோஸ்லோவாகிய இயக்கமானது, ருஷ்யாவை ஏகாதிபத்தியப் போர்களின் வளையத்துக்குள் மீண்டும் இழுக்கும் பொருட்டு சோவியத் ருஷ்யாவை நெரித்து அழிப்பதற்காக பிரிட்டிஷ்-பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் தமது திட்டமிட்ட கொள்கை மூலம் நீண்ட கால முன்பே வார்த்து உருவாக்கிய சங்கிலியில் ஒரு கண்ணியேயாகும் என்பதை இந்த மெய் விவரங்கள் யாவும் புலப்படுத்துகின் றன. இப்போது இந்த நெருக்கடிக்கு சோவியத் ருஷ்யாவின் பரவலான மக்கள் திரள் தான் தீர்வு காண வேண்டும். காரணம், சோவியத் சோஷலிஸ்டுக் குடியரசை பேணிக்காக்கும் பொருட்டு ஒரு குறிப்பிட்ட எதிர்ப்புரட்சித் தாக்குதல் என்ற முறையில் செக்கோஸ்லோவாகியாவின் தாக்குதலை எதிர்த்து மட்டுமல்ல, பொதுவான எதிர்ப்புரட்சித் தாக்குதல்களை எதிர்த்து மட்டும் அல்ல, ஆனல் ஏகாதிபத்திய உலகம் முழுவதன் தாக்குதலை எதிர்த்தும் போராட வேண்டிய நிலைமையை நாம் இன்று எதிரிட்டுள்ளோம்.

செக்கோஸ்லோவாகியக் கலகத்தில் பிரிட்டிஷ்-பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் நேரடியாகப் பங்கு பற்றினர்கள் என்ற உண்மை வெகு காலமுன்பே நிலைநாட்டப்பட்டு விட்டது என்பதை முதலாவதாக உங்களுக்கு நான் நினைவூட்ட விரும்புகிறேன். ஜூன் 28ந் தேதி செக்கோஸ்லோவாகிய கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்திய ஏடான சுதந்திரத்தின் முன்னேடி[68] வெளியிட்டதும் நமது பத்திரிகைகள் மறுபிரசுரம் செய்ததுமான ஒரு கட்டுரை பற்றி உங்களுக்கு நினைவூட்டு கிறேன்:

''மார்ச் 7ந் தேதி தேசியக் கவுன்சிலின் நிர்வாகப் பிரிவு பிரெஞ்சு கான்சலிடமிருந்து முதல் தவணையாக முப்பது லட்சம் ரூபிள் பெற்றது.

இந்தப் பணம் தேசியக் கவுன்சில் நிர்வாகப் பிரிவின் ஓர் அதிகாரியான திரு. ஷிப் என்பவர் வசம் தரப்பட்டது.

மார்ச் 9ந் தேதி இதே ஷிப் என்பவர் இன்னும் ஒரு இருபது லட்சத்தையும், மார்ச் 25ந் தேதி இன்னும் ஒரு பத்து லட்சமும் பெற்ருர். மார்ச் 26ந் தேதி தேசியக் கவுன்சிலின் துணைத் தலைவர் பொஹுமில் செர்மாக் பத்து லட்சம் பெற்ருர், ஏப்ரல் 3ந் தேதி ஷிப் இன்னும் ஒரு பத்து லட்சம் பெற்ருர்.

மொத்தத்தில் மார்ச் 7 முதல் ஏப்ரல் 4 வரை பிரெஞ்சு கான்சல் தேசியக் கவுன்சிலின் நிர்வாகப் பிரிவிடம் 80 லட்சம் ரூபிள் கொடுத்திருந்தார்.

பின்வரும் கொடுப்பல்களுக்குத் தேதிகள் குறிப்பிடப்படவில்லை: திரு. ஷிப் பத்து லட்சம், திரு. பொஹுமில் செர்மாக் பத்து லட்சம், திரு. ஷிப் இன்னும் ஒரு பத்து லட்சம்.

இதற்கும் கூடுதலாக, 1,88,000 ரூபிள் பெயரறியா ஒரு நபருக்குத் தரப்பட்டது. மொத்தம் 31,88,000 ரூபிள் மேலே குறிப்பிடப்பட்ட 80 லட்சத்துடன் சேர்த்து தேசியக் கவுன்சில் நிர்வாகப் பிரிவுக்கு பிரெஞ்சு அரசாங்கம் அளித்த மொத்தத் தொகை 1,11,88,000 ரூபிள் ஆகும்.

பிரிட்டிஷ் கான்சலிடமிருந்து இந்த நிர்வாகப் பிரிவு 80,000 பவுன்கள் பெற்றது. இவ்வாருக, மார்ச் 7 முதல் கலகம் தொடங்கிய நாள் வரையில் செக்கோஸ்லோவாகிய தேசியக் கவுன்சிலின் தலைவர்கள் பிரெஞ்சு-பிரிட்டிஷ் அரசாங்கங்களிடம் இருந்து சுமார் ஒன்றரைக் கோடி ரூபிள் பெற்ருர்கள். இந்தத் தொகைக்கு செக்கோஸ்லோவாகிய சேனை பிரெஞ்சு-பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளுக்கு விற்கப்பட்டது.''

உங்களில் பெரும்பான்மையினர் இந்தச் செய்தியை செய்திப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட போது படித்திருப்பீர்கள். சோவியத் அரசாங்கத்தை வீழ்த்தவும் அதன் பாதையில் சாத்தியமான எல்லா முட்டுக்கட்டைகளையும் போடவும் பிரிட்டிஷ்-பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளும் நிதித்துறைச் சீமான்களும் மிக உச்சபட்சமான அனைத்தையும் செய்வார்கள் என்பதை நாம் நிச்சயமாயும் என்றுமே சந்தேகித்ததில்லை. ஆனல் அந்த நேரத்தில், நாம் இங்கு எதிரிட வேண்டி இருப்பது சோவியத் குடியரசுக்கு எதிரான ஒரு திட்டமிட்ட, ஒழுங்குபடுத்தப்பட்ட, உண்மையிலேயே நீண்ட கால முன்பு திட்டமிடப்பட்ட, எதிர்ப்புரட்சி ராணுவ மற்றும் நிதிவழிப்பட்ட இயக்கம் என்பதையும், இதை பிரிட்டிஷ்-பிரெஞ்சு

ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதிகள் அனைவரும் உண்மையில் பல மாதங்களாகத் தயார்படுத்தி வருகிறார்கள் என்பதையும், காட்டுமளவுக்கு இந்தச் சித்திரம் முழுமை பெற்று இருக்கவில்லை. இவற்றை முழுமையாக மதிப்பாய்வு செய்யும் போது, செக்கோஸ்லோவாகிய எதிர்ப்புரட்சி இயக்கத்தை மூர்மன் படை இறக்கத்தோடு ஒப்புநோக்கும் போது, மூர் மன் படை இறக்கத்தில் பிரிட்டிஷார் பத்தாயிரம் படையாளிகளுக்கு மேல் கரை இறக்கினர் என்பதையும், மூர்மனைப் பாதுகாப்பது என்ற சாக்கில் உண்மையில் முன்னேறத் தொடங்கி கெம், சொரோக்கி ஆகியவற்றைப் பற்றுடல் செய்து சொரோக்கிக்குக் கிழக்குப் பக்கமாகப் பெயர்ந்து சென்று நமது சோவியத் அதிகாரிகளை சுடத் தொடங்கி விட்டார்கள் என்பதையும் நாம் அறியும் போது, இந்தக் காப்பாளர்கள், விடுதலையாளர்களிடமிருந்து அவர்களது உண்மைப் பெயரைக் கூற வேண்டுமானால், ருஷ்யாவை இன்னொரு முனையில் இருந்து தாக்கி வரும் இந்தப் புதிய ஏகாதிபத்தியக் கொள்ளைக் காரர்களிடமிருந்து, தொலை வடக்கில் இருக்கும் ஆயிரக்கணக்கான ரயில்வே ஊழியர்களும் இதரத் தொழிலாளர்களும் தப்பி ஓடுகிறார்கள் என்பதைச் செய்தி பத்திரிகைகளில் இருந்து அறிகிறபோது, இப்போது நிகழ்ச்சிகளின் பொதுப்போக்குத் தெளிவாகத் தெரிகிறது. ருஷ்யாவுக்கு எதிரான ஆங்கில-பிரெஞ்சு எதிர்த்தாக்குதலின் தன்மை குறித்து ஒரு புதிய ஊர்ஜிதத்தை நாம் மிக அண்மையில் பெற்றோம்.

பூகோள ரீதியான காரணங்களால் மட்டுமே, ருஷ்யாவுக்கு எதிரான இந்த ஏகாதிபத்திய எதிர்த்தாக்குதலின் வடிவம் ஜெர்மனி விஷயத்தில் நடந்தது போன்று அதே மாதிரியாக இருக்க முடியாது என்பது தெளிவு. ஜெர்மனி விஷயத்தில் இருந்தது போன்று ருஷ்யாவுடன் பொது எல்லைகள் இல்லை, படை பலமும் குறைவானது. தனது படையெடுப்புப் போர்களில் பிரிட்டன் அதன் ராணுவ வலிமை முதன்மையாயும் காலனி மற்றும் கடற்படை இயல்புடன் இருப்பதன் காரணமாக பல பத்தாண்டுகளாக வேறுபட்ட தாக்கு முறைகளைக் கையாள வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகியிருக்

கிறது. அது முக்கியமாயும் தாக்கப்படும் நாட்டின் சப்ளை ஆதாரங்களை வெட்டிவிடுவது மற்றும் நெருக்கி நசுக்கும் முறைகளை மேற்கொள்கிறது. உதவி என்ற சாக்கில் பகிரங்க மான, நேரடி, மொட்டையான அப்பட்டமான ராணுவ பலத்தைப் பயன்படுத்துகிறது. அண்மையில் கிடைத்த தக வலின்படி ருஷ்யப் படையாளிகள் தொழிலாளிகள் இடையே நெடுங்காலமாக இழிபுகழீட்டியுள்ள அலெக்சேயெவ், திஹ ரேத்ஸ்கயா என்ற கிராமத்தை சமீபத்தில் படையெடுத்துப் பற்றினர் என்பதும், அவர் பிரிட்டிஷ்-பிரெஞ்சு ஏகாதி பத்தியத்தின் உதவியைப் பயன்படுத்தினர் என்பதும் சந் தேகமின்றித் தெரியவந்தது. அங்கு கலகம் மேலும் அதிகத் தெளிவாக இருந்தது, காரணம் இதில் பிரிட்டிஷ்-பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் கை இருந்தது என்பது கண்கூடு.

கடைசியாக பாக்கூவில் பிரிட்டிஷ்-பிரெஞ்சு ஏகாதிபத் தியவாதிகள் மிகவும் தமக்குப் பயன்தரும் காரியத்தைச் செய்வதில் வெற்றிபெற்று விட்டார்கள் என்ற செய்தி நேற்றுக் கிடைத்தது. பாக்கூ சோவியத்தில் அவர்கள் நமது கட்சியை விட போல்ஷிவிக்குகளை விட, அந்த ஒரு சிலரே யான இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களை விட 30 ஓட்டுகள் பெரும்பான்மை எப்படியோ முயன்று பெற்றுவிட் டார்கள். இந்த இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள் மாஸ்கோ இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களின்[69] வெறுக்கத்தக்க சூதாட்டங்களிலும் சதிகளிலும் சிக்க மறுத் தவர்கள், ஏகாதிபத்தியத்தையும் போரையும் எதிர்த்த போராட்டத்தில் சோவியத் அரசாங்கத்துக்கு விசுவாச முடன் இருந்தவர்கள். சோவியத் அரசாங்கத்திடம் விசுவாச மாக இருப்பதும் இது வரையில் பெரும்பான்மையாக நில வியதுமான இந்த பாக்கூ சோவியத்தின் இந்த கருமையம் மீது பிரிட்டிஷ்-பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் முப்பது ஓட்டுப் பெரும்பான்மை இப்போது பெற்றிருக்கிருர்கள். இதற்குக் காரணம், தஷ்நக்திசுத்யூன் கட்சியின்[70] பெரும் பகுதி அர்மீனியன் போலி சோஷலிஸ்டுகள் எமக்கு எதிராக அவற்றுடன் சேர்ந்து நின்றதேயாகும். (**தந்தியைப் படிக்கிருர்.**)

''ஜூலை 26ந் தேதியன்று, மக்கள் கமிசார் கொர்கானவ் உத்தரவுப்படி அட்ஜிகாபூல் படைப் பிரிவு அட்ஜிகாபூலில் இருந்து பின்வாங்கி அல்யாத் அருகில் ஓர் இடத்தை அடைந்தது. ஷெமாக்காவில் இருந்தும் மராசாவில் இருந்தும் ஷெமாக்கா படைப் பிரிவு விலக்கிக் கொள்ளப்பட்ட பிறகு விரோதிகள் பிர்சகாத் ஆற்றின் பள்ளத்தாக்கின் நெடுகே முன்னேறத் தொடங்கினர்கள்; விரோதிகளின் முன்னணிப் படைகளுடன் முதல் மோதல்கள் குபாலா கிராமத்துக்கு அருகில் நடைபெற்றன.

இதனுடன் கூடவே தெற்கில் இருந்து குராவின் திசையில் இருந்து பெரியதோர் குதிரைப்படைப் பகுதி பிர்சகாத்தை நோக்கி முன்னேறியது. இத்தகைய சந்தர்ப்ப சூழல்களின் கீழ் அட்ஜிகாபூலை இழக்காமல் வைத்திருக்க வேண்டுமானல் நாம் நம்வசம் இருக்கும் படைகளை மூன்று பக்கங்களில்: அட்ஜிகாபூலுக்கு மேற்கே, நவாகி-பிர்சகாத் பள்ளத்தாக்குக்கு வடக்கேயும் தெற்கேயுமாக விரிவாக ஈடுபடுத்த வேண்டும். போர் முனையின் இத்தகைய விரிவாக்கல் நம்மிடம் சேமப்படை இல்லாத நிலையை ஏற்படுத்தி இருக்கும், நம்மிடம் குதிரைப்படை இல்லாததால் விரோதியைத் தாக்குவதற்கு முடியாமல் நாம் இருக்கும் நிலை ஏற்படும், போர் முனை வடக்கே அல்லது தெற்கே உடைபடுமானல் அட்ஜிகாபூலில் இருக்கும் பிரிவுக்கு அபாயம் ஏற்படுத்தும். இந்த நிலைமை காரணமாயும், துருப்புக்களின் பலத்தைப் பேணி வைத்திருக்கும் பொருட்டும், அட்ஜிகாபூலில் இருந்து அல்யாத் அருகே பின்வாங்கும்படி படைப் பிரிவுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. பின்வாங்கல் சரியான ஒழுங்குமுறையுடன் நடத்தப்பட்டது. முக்கியமான ரயில்வே நிறுவனங்கள், அட்ஜிகாபூல் நிலையம் மற்றும் மண்ணெண்ணெய், எண்ணெய் டாங்குகள் வெடிவைத்துத் தகர்க்கப்பட்டன. தகெஸ்தானில் பொதுவான எதிர்த்தாக்குதலில் ஒரு பகுதி என்ற முறையில் எதிரிகள் இயங்கி வருகின்றனர். ஜூலை 24ந் தேதி எதிரிகள் பெரிய படைகளுடன் நான்கு திசைகளிலும் முன்னேறினர். 24 மணி நேரச் சண்டைக்குப் பிறகு நாம் எதிரிகளின் பேரரண்களைப் பிடித்துக் கொண்டோம். எதிரிகள் காடுகளுக்குள் கலைந்து சென்றுர்கள், இரவு காரணமாக மேலும் தொடர்ந்து துரத்திச் செல்வது தடைப்பட்டது. ஜூலை 24ந் தேதி ஷுராவில் இருந்து வெற்றிகள் பற்றிய செய்திகள் கிடைத்தன. அங்கு நகரத்தைச் சுற்றிலும் சண்டை நடக்கிறது. எதிரிகள் பிடிவாதமாயும் ஸ்தாபனத் திரட்சியோடும் எதிர்த்துப் போராடி வருகிறுர்கள். முன்னுள் தகெஸ்தான் ராணுவ அதிகாரிகளால் தலைமை தாங்கப்படு

கின்றனர். தகெஸ்தான் விவசாயிகள் ஷுராவைச் சுற்றி நடக்கும் சண்டையில் தீவிரமாகப் பங்கு கொள்கின்றனர்.

பாக்கூவில் வலதுசாரிக் கட்சிகள் தலை உயர்த்தி, பிரிட்டிஷாரை அழைப்பதற்காக ஊக்கமுடன் இயக்கம் நடத்தி வருகின்றன. இந்த இயக்கத்தை ராணுவ அதிகாரிகள் பலமாக ஆதரிக்கிறார்கள், போர் முனையில் இருக்கும் படைகளின் மத்தியில் இவ்வியக்கம் நடத்தப்படுகிறது. ஆங்கில மோகிகளின் கிளர்ச்சிப் பிரசாரம் சேனையைக் கட்டுக் குலைத்துவிட்டது. சோர்ந்து களைத்துப்போன, நம்பிக்கையிழந்த மக்களுக்கு மத்தியில் பிரிட்டிஷ் தொடர்பு இணைவு அண்மையில் பெருமளவு முன்னேறி வந்துள்ளது.

வலதுசாரிக் கட்சிகளின் கயமைத்தனமான ஆத்திர மூட்டும் செயல்களின் செல்வாக்கின் கீழ், காஸ்பியன் கடற்படை பிரிட்டிஷார் சம்பந்தமாகப் பல முரண்பட்ட தீர்மானங்களை அங்கீகரித்துள்ளது. பிரிட்டிஷ் கையாட்களாலும் தொண்டர் படை ஏஜெண்டுகளாலும் ஏமாற்றப்பட்டு வந்த அது, மிகச் சமீப காலம் வரை பிரிட்டிஷ் ஆதரவு நேர்மையானது என்று கண்மூடித்தனமாக நம்பிக் கொண்டிருந்தது.

வெகு அண்மையில் வந்த தகவல்கள், பிரிட்டிஷார் பாரசீகத்தில் முன்னேறி வருவதாயும் ரெஷ்ட் (கில்யான்) கைப்பற்றி விட்டதாயும், அங்கே நான்கு நாட்களாக குச்சுக்-ஹான் மற்றும் ஜெர்மன்-துருக்கிப் படைகளை எதிர்த்துப் போராடி வருவதாயும், இப்படைகள் பாக்கூவில் இருந்து ஓடிச் சென்ற முஸ்ஸாவதிஸ்டுகள்[71] தலைமையில் குச்சுக்-ஹானுடன் சேர்ந்து கொண்டு விட்டதாயும் கூறுகின்றன. ரெஷ்ட் சண்டைக்குப் பிறகு பிரிட்டிஷார் எம்மிடம் உதவி கோரினர், ஆனால் பாரசீகத்தில் இருந்த நமது பிரதிநிதி மறுத்துவிட்டார். ரெஷ்டில் பிரிட்டிஷார் கை மேலோங்கியது. ஆனால் அவர்களுக்குப் பாரசீகத்தில் உண்மையில் படைகள் எதுவும் இல்லை. என்ஸெலியில் அவர்களுக்கு ஐம்பது படையாளர் மட்டுமே இருந்தார்கள் என்பதை நாம் அறிவோம். அவர்களுக்குப் பெட்ரோல் தேவை, அதற்குப் பரிவர்த்தனையாக அவர்கள் நமக்குக் கார்களை விற்க முன்வருகிறார்கள். பெட்ரோல் இல்லாமல் அவர்கள் முடங்கிக் கிடக்கிறார்கள்.

ஜூலை 25ந் தேதி அரசியல் மற்றும் ராணுவ நிலைமை குறித்து விவாதிக்க சோவியத்தின் இரண்டாவது அமர்வு நடைபெற்றது. வலதுசாரிக் கட்சிகளின் வற்புறுத்தலால் பிரிட்டிஷார் பற்றிய பிரச்சினை எழுப்பப்பட்டது. காக்கஸசிற்கான விசேஷக் கமிசார் ஷௌமியான் சோவியத்துகளின் ஐந்தாவது காங்கிரஸ் தீர்மானத்தையும் மக்கள் கமிசார்களின் மத்தியக் கவுன்சில் சார்பில் ஸ்தாலின் அனுப்பிய தந்தி

யையும் சுட்டிக்காட்டினர். பிரிட்டிஷாரை அழைப்பதற்கு எதிராகப் பேசினர். இந்த விஷயத்தை நிகழ்ச்சி நிரலில் இருந்து எடுத்துவிட வேண்டும் என்று கோரினர். தோழர் ஷௌமியான் பிரேரணை சிறிய பெரும்பான்மையால் தோற்கடிக்கப்பட்டது. உடனே மத்திய அரசாங்கத்தின் பிரதிநிதி என்ற முறையில் அவர் வன்மையான ஆட்சேபம் தெரிவித்தார். போர்முனை சென்று வந்த பிரதிநிதிகளின் அறிக்கை அமர்வில் சமர்ப்பிக்கப்பட்டது. வலதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர், வலதுசாரி தஷ்நக்குகள் மற்றும் மென்ஷிவிக்குகளின் 259 ஓட்டுகளின் ஆதரவுடனும், போல்ஷிவிக்குகள், இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் மற்றும் இடதுசாரி தஷ்நக்குகளின் 236 ஓட்டுகள் எதிர்ப்புடன் பிரிட்டிஷாரை அழைக்கவும், சோவியத்தில் பிரதிநிதித்துவம் பெற்றுள்ள எல்லா உறுப்பினர்களும் கொண்டதான ஓர் அரசாங்கத்தை நிறுவவும், மக்கள் கமிசார்கள் கவுன்சிலின் அதிகாரத்தை அங்கீகரிக்கவும் கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானம் இடதுசாரியினரால் கடுமையாகக் கண்டனம் செய்யப்பட்டது. இதை வெட்கக் கேடான துரோகம், ருஷ்யாவின் தொழிலாளர், விவசாயிகள் பால் தோற்றுவிக்கப்பட்ட முற்றமுழு நன்றிகெட்ட செயல் என்று ஷௌமியான் கூறினர். மத்திய அரசாங்கத்தின் பிரதிநிதி என்ற முறையில் இந்த முடிவில் தமக்கு எவ்விதப் பொறுப்பும் கிடையாது என்று மறுத்து விட்டார். போல்ஷிவிக்குகள், இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் மற்றும் இடதுசாரி தஷ்நக்குகள் பிரிவின் சார்பில் அவர்கள் கூட்டு அரசாங்கத்தில் சேர மாட்டார்கள் எனவும், மக்கள் கமிசார்கள் கவுன்சில் ராஜினுமாச் செய்யும் எனவும் குறிப்பிட்டு ஓர் அறிக்கை விடப்பட்டது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளை அழைத்தது மூலம் ருஷ்யாவின் சோவியத் அரசாங்கத்துடன் முறித்துக் கொண்டுவிட்ட ஓர் அரசாங்கத்துக்கு சோவியத் ருஷ்யாவில் இருந்து எவ்விதமான ஆதரவும் கிட்டாது என்று மூன்று இடதுசாரிப் பிரிவுகளின் சார்பில் தோழர் ஷௌமியான் அறிவித்தார். பிரிட்டிஷாரை அழைக்கும் அதன் துரோகத்தனமான கொள்கையின் மூலம், ஸ்தல சோவியத், ருஷ்யாவையும், சோவியத் அரசாங்கத்தை ஆதரிக்கும் கட்சிகளையும் இழந்து விட்டது.

மக்கள் கமிசார்கள் கவுன்சில் ராஜினுமாச் செய்துவிடும் என்ற முடிவு கேட்டு வலதுசாரிக் கட்சிகள் படுமோசமான குழப்பத்தில் ஆழ்ந்தன. இந்த நிலைமை பற்றிய செய்தி பரவியதும் வட்டாரங்களிலும் போர்முனையிலும் ஒரு திடீர் மாற்றம் ஏற்பட்டது. ருஷ்யாவுடன் முறித்துக் கொண்டு,

சோவியத் அரசாங்கத்தை வீழ்த்த விரும்பிய துரோகிகளால் தாம் ஏமாற்றப்பட்டதை கடற்படையினர் உணர்ந்தார்கள். பிரிட்டிஷார் குறித்து மக்கள் வேறுவிதத்தில் மீண்டும் எண்ணிப்பார்க்கலாயினர். மக்கள் கமிசார்கள் கவுன்சிலின் ராஜினமா சம்பந்தமாக நேற்று நிர்வாகக் கமிட்டியின் ஓர் அவசரக் கூட்டம் நடைபெற்றது. மக்கள் கமிசார்கள் அனைவரும் தமது பதவிகளில் இருந்தபடி, ஜூலை 31ந் தேதி சோவியத் அமர்வில் ஆட்சி அதிகாரம் பற்றிய பிரச்சினையில் முடிவு எடுக்கும் வரை தமது முன்னுள் பணிகளைத் தொடர்ந்து புரிய வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது. அச்சுறுத்தி வரும் எதிர்ப்புரட்சியை எதிர்த்து அவசர நடவடிக்கைகள் மேற்கொள்வதென்று நிர்வாகக் கமிட்டி முடிவு செய்திருந்தது. விரோதிகள் ஆங்கில-பிரெஞ்சு தரப்புக்களின் ஆதரவின் கீழ் செயல்படுகிறுர்கள்.

மக்கள் கமிசார்களின் பாக்கூ கவுன்சிலின் பத்திரிகை பியூரோ.''

தம்மைத்தாமே சோஷலிஸ்டுகள் என்று அழைத்துக் கொண்டு ஆனுல் முதலாளித்துவ வர்க்கத்துடனுன தனது உறவுகளை என்றுமே முறித்துக் கொள்ளாத இங்குள்ள பிரிவுகளைப் போலவே, இந்த நபர்களும் பாக்கூவைப் பாதுகாப்பதற்கு பிரிட்டிஷ் துருப்புகள் அழைக்கப்படுவதை ஆதரித்தார்கள்.[72] சோவியத் குடியரசைக் காப்பதற்கு ஏகாதிபத்தியத் துருப்புக்களுக்கு இத்தகைய அழைப்பு விடுப்பதன் அர்த்தத்தை நாம் ஏற்கெனவே மிகவும் நன்ருக அறிவோம். முதலாளித்துவ வர்க்கமும் சோஷலிஸ்டுப் புரட்சியாளரில் ஒரு பகுதியினரும் மென்ஷிவிக்குகளும் விடுத்த இந்த அழைப்பின் அர்த்தத்தை நாம் அறிவோம். டிஃப்ளிசிலும் ஜார்ஜியாவிலும் உள்ள மென்ஷிவிக் தலைவர்கள் விடுத்த இந்த அழைப்பின் அர்த்தத்தை நாம் அறிவோம்.

போல்ஷிவிக், கம்யூனிஸ்டுக் கட்சி ஒன்றே ஏகாதிபத்தியவாதிகளை என்றுமே அழைக்காத, அவர்களுடன் கொள்ளைக்காரக் கூட்டணியில் சேராத கட்சியாக இருந்து வந்துள்ளது. ஆனுல் இந்தக் கொலைபாதகர்கள் மிகவும் கடுமையாக நெருக்கியபோது மட்டும் சற்றே பின்வாங்கியுள்ளது. (கரவொலி.) ஜார்ஜியாவின் சுதந்திரத்தைப் பாதுகாப்பது என்ற சாக்கில் ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகளுடன் நேரடிக் கூட்டணியில்

சேர்ந்து எல்லா இடங்களிலும் மென்ஷிவிக்குகள் அவர்களுக்குத் துரோகம் செய்ததன் காரணமாக காக்கஸசில் இருந்த நமது கம்யூனிஸ்டு தோழர்கள் மிகவும் சங்கடமான நிலேயில் இருந்தார்கள் என்பதை நாம் அறிவோம்.

ஜார்ஜியாவின் சுதந்திரம் என்னும் இது, படுமோசமான ஏமாற்ருகி விட்டது என்பதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். உண்மையில் இது ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகள் ஜார்ஜியாவைக் கவர்ந்து பற்ருடல் செய்வதும், போல்ஷிவிக் தொழிலாளர் விவசாயிகளே எதிர்த்து ஜெர்மன் படைபலம் மென்ஷிவிக் அரசாங்கத்துடன் கூட்டணி சேருவதுமே ஆகும். எனவே நமது பாக்கூ தோழர்கள் நிலேமையின் அபாயம் குறித்துக் கண்ணே மூடிக்கொண்டிருக்க மறுத்து பின்வருமாறு கூறியது மூலம் ஆயிரம் மடங்கு சரியான காரியத்தையே செய்தார்கள்: இது எமக்குப் பாதகம் விளேக்காத பட்சம், ஆக்கிரமிப்பாளர்களின் படைபலத்துடன் நமது துருப்புக்களே பந்தப்படுத்தாத பட்சம், எமது சோஷலிஸ்டு மறு சீரமைப்பைத் தொடர்ந்து நடத்தி முடிப்பதில் இருந்து எம்மைத் தடுக்காத பட்சம், நாம் நமது பிரதேசத்தில் ஒரு பகுதியை விட்டுக் கொடுக்கும் அடிப்படையில் ஏகாதிபத்திய வல்லரசுடன் சமாதானம் ஏற்படுவதை என்றும் எதிர்க்க மாட்டோம்.

ஆனுல் இப்போது, பாக்கூவின் பாதுகாப்புக்கு என்ற பேரில் பிரிட்டிஷாரை அழைப்பது மூலம் அவர்கள் பாரசீகம் முழுவதையும் கபளிகரம் செய்ததும், தெற்குக் காக்கஸசைக் கவர்ந்து பற்ற நீண்ட காலமாகவே படைகளே இயக்கி வருவதுமான ஒரு வல்லரசை அழைக்கிருர்கள், அதாவது பிரிட்டிஷ்-பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளிடம் சரணடைகிருர்கள் என்ற அளவுக்கு இந்தப் பிரச்சினே இன்று நிற்கும் நிலேயில் நமது பாக்கூ தோழர்களின் நிலேமை எவ்வளவு சங்கடமானதாக இருந்த போதிலும், இத்தகைய சமாதானத்தைச் செய்து கொள்ள மறுத்தது மூலம் அவர்கள் உண்மையான சோஷலிஸ்டுகளுக்குத் தகுதியான ஒரே நடவடிக்கையை மேற்கொண்டார்கள் என்று, நாம் ஒரு கணமும் தயங்காமல் சந்தேகிக்காமல் நிச்சயம் கூறிவிட வேண்டும். பிரிட்டிஷ்-

பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளுடனுன எந்த ஒரு உடன் பாட்டையும் இவ்வாறு உறுதியாக மறுத்து விடுவதே பாக்கூ தோழர்கள் எடுக்க வேண்டிய ஒரே மெய்யான நடவடிக் கையாகும். ஏனெனில், ஒரு பிளவுபட்ட பிரதேசத்திலாயி னும் சரி, உங்களது சுதந்திரமான சோஷலிஸ்டு அரசாங் கத்தை ஏகாதிபத்தியப் போரின் ஓர் அடிமை ஆக்காமல் அவர்களை அழைக்க முடியாது.

ஆகவே, காரியங்களின் பொதுவான வகைதுறை ஏற் பாட்டில் பாக்கூ நிகழ்ச்சிகளின் முக்கியத்துவம் குறித்து நாம் கடுகளவும் சந்தேகம் கொள்ளவில்லை. மத்திய ஆசியா வில் சில நகரங்களில் எதிர்ப்புரட்சிக் கலகங்கள் வெடித் துள்ளன என்ற செய்தி நேற்றுக் கிடைத்தது. இதில் இந்தியா வில் வலுப்பெற்று நிற்கும் பிரிட்டிஷாரும் உடந்தை என் பது கண்கூடு. அவர்கள் ஆப்கானிஸ்தானை தமது ஆதிக்கத் தின் கீழ் முழுமையாகக் கொண்டு வந்ததோடு, தமது காலனி நாடுகளை விஸ்தரித்துக் கொள்ளவும் தேசங்களை நெரித்து நசுக்கவும் சோவியத் ருஷ்யாவைத் தாக்கவும் வேண்டிய ஒரு தளத்தை நெடுநாட்களுக்கு முன்பே உருவாக்கிவிட்டனர். இப்போது இந்தத் தனிப்பட்ட கண்ணிகள் நமக்கு முற்றும் தெளிவாகிவிட்ட போது, நமது குடியரசின் இன்றைய ராணுவ மற்றும் பொதுவான ஆதாரப் போர்த்தந்திர நிலை பூரணமாக வெளிப்பாடாகி விடுகிறது. வடக்கில் மூர்மன், கிழக்கில் செக்கோஸ்லோவக் போர் முனை, தென் கிழக்கில் துர்க்கெஸ்தான், பாக்கூ மற்றும் ஆஸ்த்ரகான்—இதில் பிரிட் டிஷ்-பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தால் உருவாக்கப்பட்ட சங்கி லியின் கிட்டத்தட்ட எல்லாக் கண்ணிகளும் சேர்க்கப்பட்டுள் ளன என்பதை நாம் காண்கிறோம்.

இங்கேயும் கூட, ருஷ்யாவில் இருந்து ஒட்டறுக்கப்பட்ட, உக்ரேனிலும் இதர பிராந்தியங்களிலும் நிலப்பிரபுக்கள் முதலாளிகள் மற்றும் குலாக்குகள் பின்பற்றி வரும் வழிகளைப் பெருமளவு ஒத்ததான வழிகளில், சோவியத் அரசாங்கத்தின் மீது முற்றிலும் இயல்பான காரணங்களால் நிச்சயமாயும் கடுமையான பகைமை பூண்டுள்ள, நிலப்பிரபுக் கள் முதலாளிகள் மற்றும் குலாக்குகள் செயல்பட்டு வரு

வதை நாம் இப்போது தெளிவாகக் காண்கிறோம். பிரிட்டிஷ்-பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் அடித் தொண்டர்கள் என்ற முறையில் எது எப்படியாயினும் சரி சோவியத் அரசாங்கத்தை அரித்தழிக்க வேண்டும் என்பதற்காக உச்சபட்சம் தம்மால் இயன்றது அனைத்தையும் அவர்கள் செய்துள்ளனர். ருஷ்யாவின் அகத்தே உள்ள சக்திகளைக் கொண்டு மாத்திரம் இதைச் செய்ய முடியாது என்பதை உணர்ந்து அவர்கள் மார்த்தவ் கனவான்களின் உணர்வில் சொற்களால் அல்லது வேண்டுகோள்களால் செயல்படக் கூடாது, மாறாக மேலும் உறுதியான போராட்ட முறைகளைக் கையாண்டு ராணுவப் போர் நடவடிக்கைகள் மூலம் செயல்பட வேண்டும் என்று முடிவு செய்தார்கள். அங்குதான் நமது கவனம் முக்கியமாக திருப்பப்பட வேண்டும், அங்குதான் நமது கிளர்ச்சி மற்றும் பிரசாரம் அனைத்தையும் ஒருமுகப்படுத்த வேண்டும். இதற்கு ஏற்பான வழியில் நமது சோவியத் வேலை முழுவதன் மையத்தை மாற்றியமைக்க வேண்டும்.

மற்ற கூட்டணியில் இருக்கும் ஏகாதிபத்தியப் படைகள் தாம் இப்போது செயல்பட்டு வருகின்றன என்பதும், நமது பிரதேசத்தில் ஒரு பகுதியைக் கவர்ந்து பற்றி அதை ஒரு தளமாகப் பயன்படுத்தி வருவது ஜெர்மானியர் அல்ல, மாறாக ஆங்கில-பிரெஞ்சு சக்திகளே என்பதும் ஓர் அடிப்படையான உண்மையாகும். இதுவரையில் அவர்களது பூகோள நிலை ருஷ்யாவை அவர்கள் நேரடி வழியாக தாக்குவதில் இருந்து தடுத்து வந்திருக்கிறது. இப்போது உலக மேலாதிக்கத்திற்கான போட்டியில் நாலாண்டுகளாக உலகை இரத்த ஆற்றில் மூழ்கடித்துவந்த பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சு ஏகாதிபத்தியம் ருஷ்யாவை எளிதில் சென்றடையும் மறைமுகமான வழியில், சோவியத் குடியரசை நெரித்து அழிப்பது, மீண்டும் ஒரு முறை ருஷ்யாவை ஏகாதிபத்தியப் போரில் தள்ளுவது என்ற நோக்கத்துடன் நெருங்கி வந்துள்ளது. அக்டோபர் புரட்சியின் வெகுதுவக்கம் முதலே நமது பிரதான நோக்கம் ஏகாதிபத்தியப் போருக்கு முடிவு கட்டுவதே என்பதை தோழர்களே, நீங்கள் முழுமையாக அறிவீர்கள். ஆனல் எவ்வளவு வீரஞ்செறிந்தவர்களாயும் எத்தகைய ஸ்தாபனத்

திரட்சியும் கட்டுப்பாடும் நிறைந்தவர்களாயும் இருந்த போதிலும் சரி, ஏதேனும் ஒரே ஒரு நாட்டின் பாட்டாளிகள் மற்றும் புரட்சிகர மக்களின் சக்திகள் சர்வதேச ஏகாதிபத்தியத்தை வீழ்த்தி விட முடியும் என்ற பிரமையை நாம் என்றுமே கொண்டிருந்தது கிடையாது. இதை உலகத் தொழிலாளர்களின் ஒன்றுசேர்ந்த முயற்சிகளால் மட்டுமே செய்ய முடியும்.

எனினும், நாம் செய்திருப்பது என்னவென்ருல், ஒரு நாட்டில் உலகம் முழுதிலுள்ள முதலாளிகளுடனுன எல்லாத் தொடர்புகளையும் ஒட்டறுத்திருப்பதேயாகும். நமது அரசாங்கம் எந்த வகையான ஏகாதிபத்தியவாதியுடனும் தனி ஒரு இழையால் கூடக் கட்டுண்டு கிடக்கவில்லை. நமது புரட்சி மேற்கொள்ள நேரும் எதிர்காலப் பாதை எதுவாயினும் சரி நாம் என்றுமே ஏகாதிபத்தியவாதியுடன் கட்டுண்டு கிடக்க மாட்டோம். நமது ஆட்சியின் எட்டு மாத காலத்தில் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான புரட்சிகர இயக்கம் பிரம்மாண்ட முன்னேற்றம் கண்டுள்ளது. ஏகாதிபத்தியத்தின் முக்கிய கேந்திரங்களில் ஒன்ருன ஜெர்மனியில், 1918 ஜனவரியில் இருந்த நிலைமையில், ஆயுத மோதல்களும் அந்த இயக்கம் கொடூரமாக ஒடுக்கப்படுவதும் நிகழ்ந்தன[73]. எந்த ஒரு நாட்டிலும் இருக்கும் புரட்சிகர அரசாங்கமும் என்றுமே செய்திரா அளவுக்கு, சர்வதேச அளவில் உலகளாவிய முறையில், எமது புரட்சிகரக் கடமையை நாங்கள் ஆற்றியுள்ளோம். ஆனுல் இதை தனி ஒரு நாட்டின் முயற்சிகளால் மாத்திரமே செய்ய முடியும் என்று கருதி நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளவில்லை. எமது முயற்சிகள் தவிர்க்க வொண்ணுத வகையில் உலகளாவிய புரட்சிக்கு இட்டுச் செல்கின்றன என்பதையும் ஏகாதிபத்திய அரசாங்கங்களால் துவங்கப்பட்ட போரை அந்த அரசாங்கங்கள் தாமே செய்யும் முயற்சிகளால் நிறுத்திவிட முடியாது என்பதையும் நாம் அறிந்திருந்தோம். இதை அனைத்துப் பாட்டாளி வர்க்கத்தினரின் முயற்சிகளின் மூலம் மட்டுமே நிறுத்த முடியும். மேலும் நாம் ஆட்சிக்கு வந்த போது—இதர நாடுகளில் முதலாளித்துவ பூர்ஷ்வா ஆட்சி நிலவும் வேளையில்—பாட்

டாளி வர்க்கக் கம்யூனிஸ்டு கட்சி என்ற முறையில் நமது கடமை, நமது உடனடிக் கடமை என்று மீண்டும் சொல்கிறேன்—அந்த ஆட்சி அதிகாரத்தை அந்த சோஷலிசம் என்ற ஒளிவிளக்கை விடாது வைத்திருப்பதேயாகும். அதன் விளைவாக அது சாத்தியமான அளவுக்கு அதிகமான பொறிகளைப் பரப்பி சோஷலிஸ்டுப் புரட்சியின் வளர்ந்து வரும் தீப்பிழம்புக்கு வலி கூட்டும்.

இது எல்லா இடங்களிலும் மிகவும் இடர்ப்பாடான பணியாக இருந்தது. இதை நாம் வெற்றிகரமாக முடிக்க இயலும்படி செய்தது எதுவென்றால், பாட்டாளிகள் சோஷலிஸ்டு குடியரசின் ஆதாயங்களைப் பாதுகாப்பதற்கு ஒன்று திரண்டார்கள் என்ற மெய்நடப்பேயாகும். இந்தப் பணி குறிப்பாயும் கடினமான ஒரு நெருக்கடியான நிலைமைக்கு இட்டுச் சென்றது. காரணம் அத்தொடரின் நேரடியான பொருளில் சோஷலிஸ்டுப் புரட்சி எந்த ஒரு நாட்டிலும் இன்னும் துவங்கவில்லை. ஆயினும் அது இத்தாலி மற்றும் ஆஸ்திரியா போன்ற நாடுகளில் அதிகம் நெருங்கி வரக் கூடியதாக இருக்கிறது. ஆனால் அது இன்னும் துவங்காத நிலையில் நாம் பிரிட்டிஷ்-பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின், எனவே உலக ஏகாதிபத்தியத்தின் புதிய வெற்றிகளை எதிரிட நேர்ந்துள்ளது. அப்படியிருக்க, மேலைப் பகுதியில் ஜெர்மன் ஏகாதிபத்தியம் ஒரு ராணுவ, பிரதேசக் கைப்பற்றல் செய்யும் ஏகாதிபத்திய சக்தியாகத் தொடர்ந்து நிலவி வருகிறது. ருஷ்யாவின் வடகிழக்கிலும் தெற்கிலும் பிரிட்டிஷ்-பிரெஞ்சு ஏகாதிபத்தியம் தன்னைத்தானே வலிமைப்படுத்திக்கொள்ள முடிந்திருக்கிறது. இந்த சக்தி ருஷ்யாவை மீண்டும் ஒரு முறை ஏகாதிபத்தியப் போரில் தள்ளுவதற்குத் தயாராக உள்ளது. உலகில் எங்குமே இது காறும் இருந்திராத ஈடிணையற்ற அளவில் தனது சோஷலிஸ்டுப் பணியையும் பிரசாரத்தையும் செய்துவரும் சுதந்திர சோஷலிஸ்டு அரசான ருஷ்யாவை நசுக்கத் தயார்ாக உள்ளது. இவை நமக்குப் பட்டவர்த்தனமாகத் தெரிய வருகின்றன. ருஷ்யாவுக்கு எதிராக பிரிட்டிஷ்-பிரெஞ்சு ஏகாதிபத்தியம் பெரிய வெற்றி அடைந்துள்ளது. நம்மை எல்லாப் பக்கங்களிலும் சுற்றி வளைத்துக் கொண்டு

சோவியத் ருஷ்யாவை நசுக்க முடிந்தவரை உயர்ந்த அளவில் செயல்படுகிறது. பிரிட்டிஷ்-பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் வெற்றியானது வர்க்கப் போராட்டத்துடன் பிரிக்க முடியாத வகையில் தொடர்பு பூண்டுள்ளது என்பதை நாம் முழுமையாக அறிவோம்.

சுரண்டலாளர்களின் பொருளாதார அதிகாரத்தின் அடிப்படைகள் இடர்நிலையில் இருக்கும் போது, கோடிக் கணக்கான தொழிலாளர்களையும் விவசாயிகளையும் அவர்களது செயலாட்சிக்குள் வைத்திருந்து ,நிலப்பிரபுக்களும் முதலாளிகளும் தம்மைத் தாமே செல்வந்தர்களாக்கிக் கொள்ள வகை செய்யும் அவர்களது சொத்து, மீண்டும் கூறுகிறேன், முதலாளிகள், நிலவுடைமையாளர்களின் தனிப்பட்ட சொத்து, இடர்நிலையில் இருக்கும் போது, அவர்கள் தமது நாட்டின் மீதான சுதந்திரத்தின் மீதான பற்றுதல் குறித்த சகல பேச்சுக்களையும் மறந்து விடுவார்கள். இதை நாம் எப்போதும் கூறிவந்துள்ளோம்—புரட்சிகள் இதை நிரூபித்துக் காட்டியுள்ளன. ஏகாதிபத்திய வல்லரசுகளுடன் கூட்டணிகள் அமைத்துக் கொள்வதிலும் கொள்ளைக்கார உடன்படிக்கைகளைச் செய்து கொள்வதிலும் நாட்டை ஆங்கில-பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்குக் காட்டிக் கொடுப்பதிலும் காடேட்டுகளும் வலதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களும் மென்ஷிவிக்குகளும் சாதனைகளை விஞ்சிவிட்டார்கள் என்பதை நாம் முற்றிலும் நன்ருக அறிவோம். உக்ரேனும் டிஃப்ளிசும் இதற்கு நல்ல உதாரணங்கள். செக்கோஸ்லோவாகியருடன் மென்ஷிவிக்குகளும் வலதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களும் செய்து கொண்ட கூட்டணி இதற்குப் போதிய சான்று ஆகும். மேலும், யாரஸ்லாவ்ல் வெண்காவலர்[74] நலன்களுக்காக, ருஷ்யன் குடியரசைப் போரில் சிக்கவைக்க அவர்கள் முயன்ற போது இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் மேற்கொண்ட செயல்கள், முதலாளித்துவ வர்க்கத்தினர் வர்க்க லாபங்களுக்கு இடர்ப்பாடு ஏற்படும் போது அவர்கள் தமது நாட்டையே விற்று விடுவார்கள், தமது சொந்த மக்களுக்கு எதிராக எந்த அன்னிய நாட்டவருடனும் பேரம் செய்வார்கள் என்பதை முற்றிலும் தெளிவாகக் காட்டுகின்றன. இந்த

உண்மை ருஷ்யப் புரட்சியின் வரலாற்றால் மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டு விட்டது. அதுவே முதலாளித்துவ வர்க்கத்தாரின் எல்லாக் காலங்களுக்கும் எல்லா நாடுகளுக்குமான வர்க்க நலன்களின் விதி, வர்க்கக் கொள்கையின் விதி என்பதை நூற்றுண்டுகளுக்கும் அதிகமான புரட்சியின் வரலாறு எடுத்துக் காட்டி விட்டது. எனவே, சோவியத் குடியரசின் சர்வதேச நிலை இன்று உக்கிரப்பட்டிருப்பது, உள்நாட்டில் வர்க்கப் போராட்டம் உக்கிரமடைந்திருப்பதுடன் தொடர்பு உள்ளது என்பது எவ்வகையிலும் வியப்பளிப்பதாகாது.

இந்த விஷயத்தில் உணவு நெருக்கடி உக்கிரம் அடைவது சம்பந்தமாக, புதிய அறுவடை வரையிலான கால கட்டம் மிகவும் இடர்ப்பாடானதாக இருக்கும் என்பதை நாம் அடிக்கடி கூறியுள்ளோம். ருஷ்யா பஞ்சம் என்ற கொள்ளை நோயால் துன்புறுத்தப்படுகிறது. இது இணைவரையற்ற அளவினை எட்டியுள்ளது. இதற்குத் துல்லியமான காரணம் ஏகாதிபத்தியக் கொள்ளையர் அதன் தானியக் களஞ்சியங்களை அழித்துவிடத் திட்டமிட்டிருப்பதே. அவர்களது சூழ்ச்சித் திட்டங்கள் நன்றாக ஆதாரப்படுத்தப்பட்டவை, தானியம் விளைக்கும் வெளிப் பிராந்தியங்களில், சமூக மற்றும் வர்க்க ஆதரவைப் பெறும் நோக்கம் கொண்டவை. குலாக்குகள், பேராதிக்கம் செலுத்தும் பகுதிகளை, போரினால் கொழுத்து பிறர் உழைப்பில் ஏழை மக்களின் உழைப்பில் வாழும் பணக்கார விவசாயிகளின் பகுதிகளை அவர்கள் நாடுகிறார்கள். இந்த நபர்கள் நூறாயிரக் கணக்கான ரூபிள் திரட்டிக் குவித்திருக்கிறார்கள், மிகப்பெரும் தானிய இருப்புக்களை வைத்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த நபர்கள் தேசிய இன்னல்கள் மீது கொழுத்தவர்கள், தலை நகரத்தின் மக்கள் எந்தளவுக்கு அதிகமாகத் துயர் உற்றார்களோ அந்த அளவுக்கு அதிகமாகக் கொள்ளையடிக்கவும் லாபம் பெருக்கவும் மேலதிகமான வாய்ப்புப் பெற்றவர்கள். இந்தக் குலாக்குகள் தான் ருஷ்யாவில் எதிர்ப்புரட்சி இயக்கத்தின் கடும் வல்லமைமிக்க தாங்கு சுவராக அமைந்துள்ளனர் என்பதை நீங்கள் அறிவீர்கள். இங்கு வர்க்கப் போராட்டம் அதன் ஆக ஆழமான மூலாதாரத்தை எட்டி விட்டது. ஒருபுறம் அவல

மான விரல்விட்டெண்ணத்தக்க குலாக்குகளுக்கும், மறுபுறம் மிகவும் பெரும்பான்மையாக இருக்கும், உபரிதானியம் இல்லாத, நீண்ட கால முன்பே அதைப் பயன்படுத்தித் தீர்த்து விட்ட, கொள்ளை லாபம் அடிக்க முனையாத, ஏழை மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கும் இடையிலான வர்க்கப் போராட்டம் குமுறி எழாத ஒரு கிராமம் கூட இல்லை. இந்த வர்க்கப் போராட்டம் ஒவ்வொரு கிராமத்தின் உள்ளேயும் ஊடுருவி விட்டது.

நாம் நமது அரசியல் திட்டங்களை நிர்ணயம் செய்து, நமது அரசாணைகளை வெளியிட்ட போது—இங்கு கூடியிருக்கும் பெரும்பான்மையினருக்கு அவை பரிச்சயமானவை என்பது திண்ணம்—நான் மீண்டும் கூறுகிறேன், ஏழை விவசாயிகளின் ஸ்தாபனம் சம்பந்தமான அரசாணைகளை நாம் வடிவமைத்து நிறைவேற்றிய போது, நாம் புரட்சி முழுவதன் மிகவும் தீர்மானகரமான அடிப்படையான பிரச்சினையை, மிகவும் தீர்மானகரமான அடிப்படையான பிரச்சினையான ஆட்சி அதிகாரம் குறித்த பிரச்சினையை நோக்கி முன்வருகிறோம் என்பது எமக்குத் தெளிவாகத் தெரிந்தது. ஆட்சி அதிகாரம் பாட்டாளி வர்க்கத்தினரின் கரங்களில் இருக்க வேண்டுமா; தம்மிடை வேறுபாடுகள் எதுவும் இல்லாத ஏழை விவசாயிகள் அனைவரின் ஆதரவைப் பெற முடியுமா, மாறுபாடுகள் எதுவும் இல்லாத விவசாயிகளைத் தம் பக்கமாக ஈர்ப்பதில் அவர்கள் வெற்றி பெற முடியுமா, கிராமங்கள் முழுதிலும் கலந்தும் பிரிந்தும் பரவலாயும் இருந்து இந்த விஷயத்தில் நகரப்புறத் தொழிலாளர்களை விடவும் பின்தங்கி இருக்கும் இந்த மக்கள் திரளினர் முழுவதையும் ஒற்றுமைப்படுத்த முடியுமா, அவர்களை மற்றமுகாமுக்கு எதிராக, நிலவுடைமையாளர் ஏகாதிபத்தியவாதிகள் மற்றும் குலாக்குகளுக்கு எதிராக ஒற்றுமைப்படுத்த முடியுமா என்பதே பிரச்சினை.

நமது கண் முன்பாகவே ஏழை விவசாயிகள் மிகவும் விரைவாக ஒன்றுசேர்ந்து அணிதிரளத் தொடங்கி விட்டார்கள். புரட்சி போதனை தரும் என்று சொல்வதுண்டு. வர்க்கப் போராட்டம் நடைமுறையில் போதனை

தருகிறது என்பது திண்ணம். இதனுல் எந்த ஒரு கட்சியின் நிலையிலுமான போலித்தனம் அக்கட்சிக்குத் தகுதியான இடம் எதுவோ அதில் கொண்டு போய்த்தள்ளி விடும். இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கட்சியின் கொள்கையில் இதைத் தெளிவாக நாம் கண்டோம். அவர்கள் தமது உறுதியின்மையாலும் மூடத்தனத்தாலும் உணவுப் பிரச்சினை உச்சகட்டத்தில் இருக்கும் போது ஊசலாடத் தொடங்கினர். அக்கட்சி ஒரு கட்சி என்ற முறையில் அரங்கத்தில் இருந்து மறைந்து, யாரஸ்லாவ்ல் வெண்காவலர் கரங்களில் கையாளாகி விட்டது. (க ர வொ லி.)

தோழர்களே, ருஷ்யாவில் வீசியடித்து வரும் புரட்சி அலைகளை உணவு நெருக்கடி கடுமையாகி வருவதன் அடிப்படையில் புரிந்து கொள்வது எளிது. இதே சமயம் புதிய அறுவடை வளம் நிறைந்தது, ஆனுல் இன்னும் திரட்ட இயலாதது என்பதை நாம் அறிவோம், பெத்ரோகிராதிலும் மாஸ்கோவிலும் பசியினுல் அலைக்கழிக்கப்படும் மக்கள் குலாக்குகள், முதலாளிகளால் கலகம் செய்யும்படி தூண்டப்படுகிருர்கள். அவர்களோ: ‘‘இப்போதே இல்லையேல் என்றும் இல்லை’’! என்ற கூக்குரலுடன் மிகவும் வெறி கொண்ட முயற்சிகளைச் செய்து வருகிருர்கள். யாரஸ்லாவ்லில் கலகம் நடக்கிறது. பிரிட்டிஷார், பிரெஞ்சுக்காரர் செல்வாக்கை நாம் காண முடியும், எதிர்ப்புரட்சி நிலவுடைமையாளர் முதலாளிகளின் சூழ்ச்சித்திட்டங்களை நாம் பார்க்கிருேம். எங்கெல்லாம் தானியம் பற்றிய பிரச்சினை எழுந்ததோ அங்கு அவர்கள் அரசு தானிய ஏகபோகத்துக்கு முட்டுக்கட்டை இட்டார்கள். அரசு தானிய ஏகபோகம் இன்றி சோஷலிசம் இருக்க முடியாது. இங்குதான் முதலாளித்துவ வர்க்கத்தினர் கட்டாயம் ஒன்று சேருவர், இங்குதான் முதலாளித்துவ வர்க்கத்தினர் நாட்டுப்புற பாமர விவசாயியை விடவும் பலமான ஆதரவைப் பெறுவர். எப்படியும் என்ன நிகழ்ந்த போதிலும், இன்று இல்லாவிடில் நாளை, ஏதாவது ஒரு பிரச்சினை இல்லாவிட்டால் இன்னென்றின் மீது சோஷலிஸ்டு மற்றும் முதலாளித்துவ சமுதாயத்தின் சக்திகளிடையே தீர்மானகரமான போராட்டம் வந்தே தீரும் என்பது நிச்சயம். உதாரண

மாக, நமது இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களைப் போன்ற போலி சோஷலிஸ்டுகள் மட்டுமே ஊசலாட முடியும். இந்தப் பிரச்சினை மீது இந்த அடிப்படையான பிரச்சினை மீது சோஷலிஸ்டுகள் ஊசலாடும் போது அவர்கள் போலி சோஷலிஸ்டுகள் மட்டுமே ஆவர், ஒரு செப்புக்காசின் மதிப்புக்கும் தகுதியற்றவர்களாவர். இப்புரட்சியின் விளைவு இத்தகைய சோஷலிஸ்டுகளை பிரெஞ்சு ஜெனரல்களின் வெறும் கையாட்களாக மாற்றுவதாகவே உண்மையில் இருந்து வந்துள்ளது. இந்தக் கையாட்களின் பாத்திரம் முன்னாள் இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கட்சியின் முன்னாள் மத்தியக் கமிட்டியால் நிதர்சனப்படுத்தப்பட்டது.

தோழர்களே, எதிர்ப்புரட்சி ருஷ்ய முதலாளித்துவ வர்க்கத்தினர் மற்றும் பிரிட்டிஷ்-பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளின் கூட்டு முயற்சிகளின் விளைவு என்னவெனில், நமது நாட்டில் உள்நாட்டுப் போர் நாம் எல்லோரும் எதிர்நோக்கி இராத அது வரலாம் என்று நாம் அனைவரும் தெளிவாக உணர்ந்திராத ஓர் இடத்தில் இருந்து இப்போது வருகிறது என்பதும், வெளியிலிருந்து வந்த போருடன் பிரிக்க முடியா முழுமையாக இரண்டறக் கலந்து விட்டது என்பதும் ஆகும். குலாக் கலகம், செக்கோஸ்லோவக் படையினர் கலகம் மற்றும் மூர்மன் இயக்கம் யாவும் ருஷ்யா மீது அழுத்தி வரும் அதே போரின் பகுதியேயாகும். மிகப்பெரிய இழப்புக்களை அடைந்தும் நம்பற்கரிய ஒரு கடினமான சமாதான உடன்படிக்கையில் கையொப்பமிட்டும் ஒரு பகுதியில் போரில் இருந்து தப்பித்துக் கொண்டோம், நாம் ஒரு கொள்ளைக்காரத்தனமான சமாதானத்தைச் செய்து கொள்கிறோம் என்பதை நாம் அறிவோம், ஆனால் நாம் நமது பிரசாரத்தையும் ஆக்கப் பணியையும் தொடர்ந்து நடத்த முடியும், அந்த வழியில் ஏகாதிபத்திய உலகின் சிதைவை ஏற்படுத்த முடியும் என்று நாம் கூறினோம். அவ்வாறு செய்வதில் நாம்வெற்றி பெற்றுள்ளோம். பிரேஸ்த்-லிட்டோவ்ஸ்க் சமாதான உடன்படிக்கையின் அடிப்படையில் ருஷ்யாவில் இருந்து எத்தனை கோடிகளைப் பறிக்கலாம் என்பது குறித்து ஜெர்மனி இப்போது நம்முடன் பேச்சு நடத்தி வருகிறது. ஆனால் அது ஜூன் 28ந்

தேதிய அரசாணையின்படி[75] நாம் பிரகடனம் செய்துள்ள எல்லாத் தேசவுடைமையாக்கச் சட்டங்களையும் அங்கீகரித்துள்ளது. குடியரசில் நிலத்தில் தனியுடைமை உரிமை பற்றிய பிரச்சினையை அது எழுப்பவில்லை. ஸ்பிரிதோனவாவும் இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களின் இதே போன்ற தலைவர்களும் பரப்பியுள்ள விசித்திரமான பொய்களுக்கு எதிர்ப்பு அடி என்ற முறையில் இந்த அம்சம் வலியுறுத்தப்பட வேண்டும். இந்தப் பொய்கள் நிலவுடைமையாளர்களுக்கு ஆதாயம் தருவதாக உள்ளது. ஆக அறியாமையிலும் பின்தங்கிய நிலையிலும் இருக்கும் கறுப்பு நூற்றுவர் பேர்வழிகள் இப்பொய்களைத் திரும்பச் சொல்லி வருகிறார்கள். இந்தப் பொய்களை உறுதியாக மறுக்க வேண்டும்.

சமாதான உடன்படிக்கை தாங்க முடியாததாக இருந்த போதிலும் உள்நாட்டில் சோஷலிஸ்டு நிர்மாணத்தை நடத்தி முடிக்க நாம் சுதந்திரம் பெற்றுள்ளோம். இந்தத் திசையில் நடவடிக்கைகள் எடுத்துள்ளோம் என்பதே இந்த விவகாரத்தில் உள்ள உண்மை நிலை. இந்த நடவடிக்கைகள் இப்போது மேற்கு ஐரோப்பாவில் தெரியவந்துள்ளன. மேலும் இவை முன்னவை எதையும் விட ஒப்பிட முடியாத அளவுக்கு அதிகமான பயனுறுதியுள்ள பிரசாரக் கூறுகளாக அமைந்துள்ளன.

ஒரு பக்கத்தில் ஒரு கூட்டணியுடனான போரில் இருந்து தப்பி வெளிவந்த நாம் இன்னொரு பக்கத்தில் இருந்து ஏகாதிபத்தியத் தாக்குதலுக்கு உடனே இலக்கானோம். ஏகாதிபத்தியம் உலகளாவிய ஒரு புலப்பாடாகும். இது ஒரு அல்லது இன்னொரு கொள்ளையர் கோஷ்டியின் ஆதிக்கத்துக்காக உலகம் முழுவதனை, பூமி முழுவதனைப் பங்குபோட்டுக் கொள்வதற்கான போராட்டமாகும். இப்போது இன்னொரு கழுகுகள் கோஷ்டியான ஆங்கில-பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் எமது மென்னியை நோக்கிப் பாய்ந்து எம்மை மீண்டும் போரில் இழுக்க அச்சுறுத்துகிறார்கள். அவர்களது போர் உள்நாட்டுப் போருடன் தொடர்ச்சியான முழுப் போராக இரண்டறக் கலக்கிறது. போர் மற்றும் ராணுவப் பகை நடவடிக்கைகள் பற்றிய பிரச்சினை மீண்டும் புரட்சியின் முக்கியமான அடிப்படையான பிரச்சினையாக முன்னணிக்கு வந்துள்ள

இன்று அதுவே நமது இடர்ப்பாடுகளின் பிரதான ஊற்றுக் கண்ணுக இருக்கிறது. இங்குதான் சங்கடம் முழுதும் காணக் கிடக்கிறது. மக்கள் போரினுல் சோர்வடைந்திருக்கிருர்கள், முன் என்றும் இருந்திராத வகையில் வளமும் வலியும் இழந்து கிடக்கிருர்கள். சாவின் விளிம்புக்கு போகும் வரை அடிக்கப் பட்ட ஒருவனிடம் ஊக்கத்தையும் உழைக்கும் ஆற்றலே யும் எப்படி எதிர்பார்க்க முடியாதோ அது போன்று ருஷ்ய மக்கள் மிகக்கடுமையான போர்ச் சோர்வும் வலியிழப்பும் கொண்ட நிலேயில் இருக்கிருர்கள். இதே வழியில் கிட்டத் தட்ட நாலாண்டு காலப் போர், ஜாராட்சியாலும், வரம் பற்ற முடியாட்சி, முதலாளிகளாலும், கேரென்ஸ்கியாலும் பாழ்படுத்தப்பட்டு, வதைக்கப்பட்டு, இழிவு செய்யப்பட்ட ஒரு நாட்டை மூழ்கடித்துள்ளதானது, ருஷ்ய மக்களிடையே பல காரணங்களால் இயல்பாகவே ஒரு பெரும் வெறுப்பு உணர்ச்சியை எழுப்பியது மேலும் நாம் இப்போது அனுப வித்து வரும் பிரம்மாண்டமான இடர்ப்பாடுகளின் பிரதான ஆதாரமாயும் இருந்தது.

இருப்பினும் நிகழ்ச்சிகளின் இத்தகைய திருப்பம் திட்ட வட்டமாயும் போருக்கு இட்டுச் சென்றது. நாம் மீண்டும் போருக்குள் தள்ளப்பட்டோம். நாம் போர் நிலேயில் இருக் கிருேம். இது உள்நாட்டுப் போர். மட்டுமல்ல. எமக்கு எதி ராக ஒன்றுசேர்ந்துள்ள குலாக்குகள், நிலவுடைமையாளர் கள் மற்றும் முதலாளிகளே எதிர்த்த போர் மட்டும் அல்ல. நாம் இப்போது பிரிட்டிஷ்-பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தை எதிர்க்க நேர்ந்துள்ளது. ஏகாதிபத்தியவாதிகள் தமது சேனே களே ருஷ்யாவுக்கு எதிராக முடுக்கும் நிலேயில் இன்னமும் இல்லே. அவர்கள் பூகோள நிலேமைகளால் தடுக்கப்படுகின்ற னர். ஆனுல் அவர்கள் நமது விரோதிகளுக்கு உதவுவதற் காகத் தம்மால் இயன்றது அனேத்தையும், தமது லட்சங் களேயும், தமது அரசுறவுத்துறைத் தொடர்புகளேயும் படை களேயும் ஈடுபடுத்தி வருகிருர்கள். நாம் போர்நிலேயில் இருக் கிருேம். வெற்றியுடன் இதிலிருந்து மீள முடியும். ஆனுல் இங்கு நாம் ஒரு கடுமையான எதிரியை சமாளிப்பதற்கு மிகவும் சங்கடமான ஓர் எதிரியை, அதாவது, போரினுல்

ஏற்பட்ட சோர்வு, போருக்கு எதிரான பகைமை வெறுப்பு ஆகியவற்றை எதிரிட நேர்ந்துள்ளது. இதை நாம் வென்று சமாளித்தாக வேண்டும், இல்லையேல் இந்தப் பிரச்சினையை —போர் என்னும் பிரச்சினையை—சமாளிக்க முடியாது. அது எமது சித்தத்தைச் சார்ந்திருக்கவில்லை. எமது நாடு மீண்டும் போரில் இறங்கியுள்ளது, புரட்சியின் விளைவு யார் வெற்றியடைகிறார்கள் என்பதையே முழுதும் பொருத்ததாக இருக்கும். இதில் பிரதான நடிகர்கள் செக்கோஸ்லோவாகியர்கள், ஆனால் மெய்யான இயக்குனர்கள், உண்மையான உந்து சக்தி செயல்படுத்தும் சக்தி பிரிட்டிஷ்-பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளாவர். ருஷ்ய சோஷலிஸ்டு கூட்டாட்சி சோவியத் குடியரசின் வாழ்நிலை குறித்த பிரச்சினை முழுதும், ருஷ்யாவின் சோஷலிஸ்டுப் புரட்சியின் முழுப் பிரச்சினையும் போர் என்ற பிரச்சினைக்குள் குறுக்கப்பட்டுள்ளது. ஏகாதிபத்தியப் போரில் இருந்து மக்கள் வெளியேறி வந்திருக்கும் நிலையை கருதிப்பார்க்கும் போது பிரம்மாண்டமான இடர்ப்பாடுகள் இருப்பதைக் காணலாம். நமது கடமை இப்போது முற்றும் தெட்டத்தெளிவாகிவிட்டது. எந்த ஒரு ஏமாற்றும் மிகப்பெரிய தீங்குவிளைக்கும், இந்தக் கசப்பான உண்மையை தொழிலாளர், விவசாயிகளிடம் இருந்து மறைப்பது குற்றச் செயல் என்று நாம் கருதுகிறோம். இதற்கு மாறாக, இந்த உண்மையை அவர்கள் மனதில் சாத்தியமான அளவுக்குத் தெளிவாயும் விவரமாயும் பதியவைப்பது அவசியம்.

ஆம், நமது படைகள் குற்றகரமான அளவுக்குப் பலவீனம் தோற்றுவித்த சம்பவங்கள் உள்ளன. உதாரணமாக, செக்கோஸ்லோவாகியர்கள் ஸிம்பீர்ஸ்கைப் பிடித்த போது நமது படைகள் பின்வாங்கியது—இத்தகைய சம்பவமாகும். படைகள் போரினால் சோர்ந்து களைத்துப் போய்விட்டன, போரை வெறுக்கின்றன என்பதை நாம் அறிவோம். ஆனால் ஏகாதிபத்தியம் சர்வதேசிய ரீதியில் தோற்கடிக்கப்படும் வரை அது ருஷ்யாவை ஏகாதிபத்தியப் போரில் இழுப்பதும், அதை கொலைக்களம் ஆக்குவதும் இயல்பானது தவிர்க்க முடியாது. நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பிரச்சினை பின்வருமாறு உள்ளது: நாம் ஒரு போரில் ஈடுபட்டுள்

ளோம், அந்தப் போரின் விளைவின் மீதே புரட்சியின் கதி சார்ந்திருக்கிறது. இதுவே நமது பிரசாரப் பணியின் நமது அனைத்து அரசியல், புரட்சிகர, நிர்மாணச் செயல்களின் முதலும் கடைசியுமான வாசகமாக இருத்தல் வேண்டும். குறுகிய காலத்தில் நாம் பெரும்பணி ஆற்றியிருக்கிறோம், ஆனால் வேலை இன்னும் பூர்த்தியாகவில்லை. நமது நடவடிக்கைகள் அனைத்தும் முற்றாகவும் முழுமையாகவும் இந்தப் பிரச்சினையின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும். இதன் மீதே புரட்சியின் கதியும் விளைவும், ருஷ்யப்புரட்சி மற்றும் உலகப் புரட்சியின் கதியும் இப்போது சார்ந்து நிற்கின்றன. பல புரட்சிகள் இன்றி உலக ஏகாதிபத்தியம் இன்றைய போரில் இருந்து தப்பி வெளியேற முடியாது. சோஷலிசத்தின் இறுதி வெற்றியின் மூலமன்றி வேறுவகையில் இந்தப் போர் முடிவு அடைய இயலாது. ஆனால் இப்போது நமது கடமை சோஷலிசம் என்ற இந்த சக்தியை, இந்த சோஷலிச ஒளி விளக்கை, சோஷலிசத்தின் ஊற்றுக் கண்ணைக் கட்டிக் காத்து பாதுகாத்து ஆதரிப்பதேயாகும். இது உலகம் முழுவதிலும் செயலூக்கத்துடன் செல்வாக்குச் செலுத்தி வருகிறது. காரியங்கள் இப்போது இருக்கும் நிலையில் இந்தக் கடமை ஒரு ராணுவக் கடமையாகும்.

இத்தகைய நிலைமையில் நாம் இருப்பது இதுவே முதல் தடவை அல்ல. சமாதானத்திற்காக நாம் எத்தகைய பாரமான விலை கொடுக்க நேரினும், அது நம்மிடம் கோரும் தியாகங்கள் எவ்வளவு கடுமையானதாக இருந்த போதிலும், நம்மிடமிருந்து மேலும் மேலும் அதிக பிரதேசங்களை பறித்துக்கொள்ள எதிரி எவ்வளவு தான் முயன்ற போதிலும், இத்தகைய மாபெரும் இடர்ப்பாடுகளின் முன்னும் ருஷ்யா இதுவரை சமாதானத்தையே அனுபவித்து வந்துள்ளது, தனது சோஷலிஸ்டு ஆதாயங்களை கெட்டிப் படுத்தும் நிலையில் உள்ளது என்று நம்மில் பலர் கூறிவந்திருக்கிறோம். நம்மில் பலர் எதிர்பார்த்ததை விடவும் அதிகமாக இந்தத்திசையில் நாம் முன்னே சென்றுள்ளோம். உதாரணமாக, நமது தொழிலாளர் கண்காணிப்பு அதன் ஆரம்ப வடிவங்களைக் காட்டிலும் பெருமளவுக்கு முன்னேற்றம் அடைந்துள்ளது. இன்று

நாம் அரசு நிர்வாகம் ஒரு சோஷலிஸ்டு அமைப்பாக மாற்றப் பட்டு வருவதைக் காணவிருக்கிறோம். நமது நடைமுறை விவகாரங்களில் நாம் மிகப்பெரிய முன்னேற்றம் அடைந்துள் ளோம். இப்போது தொழிலாளர்கள் தொழில் துறையினை முற்றாக நிர்வாகம் செய்யும் நிலையை எட்டியுள்ளோம். ஆனால் அந்தப் பணியினை சமாதானமாகத் தொடர்ந்து நடத்து வதை சந்தர்ப்ப சூழல்கள் தடைப்படுத்தி விட்டன. அவை நம்மை மீண்டும் ஒரு முறை போரில் இறக்கிவிட்டன. நாம் இப்போது சகல முயற்சிகளும் மேற்கொண்டு எல்லோரை யும் ஆயுதமேந்தி முன்வரும்படி கோர வேண்டும். இந்த விஷயத்தில் உறுதிப் பாடின்மை எந்தக் கம்யூனிஸ்டுக்கும் இழிவானதாகும்.

விவசாயிகளிடையே ஊசலாட்டம் இருப்பது எமக்கு வியப்பளிக்கவில்லை. விவசாயிகள் தொழிலாளர் போன்ற அதே வாழ்க்கை அனுபவத்தைப் பெற்றிருக்கவில்லை. தொழி லாளர்கள் பல பத்தாண்டுகளாக முதலாளிகளைத் தமது வர்க்கப் பகைவர்களாகக் கருதிப் பார்த்துப் பழக்கப்பட்ட வர்கள். அவர்களை எதிர்த்துப் போராடத் தமது சக்திகளை ஒன்றிணைக்கப் படிப்பினை பெற்றவர்கள். விவசாயிகள் இத்த கைய பல்கலைக்கழகத்தில் பயிலவில்லை என்பதை நாம் அறி வோம். ஒரு சமயம் அவர்கள் தொழிலாளர்கள் பக்கமாகச் சார்ந்து நின்றார்கள். ஆனால் இன்று நாம் ஒரு ஊசலாட்ட கட்டத்தைக் காண்கிறோம். இப்போது விவசாயிகள் பிளவு பட்டு வருகிறார்கள். குலாக்குகள் விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்கிறார்கள் என்ற எண்ணத்தை உருவாக்கும் பொருட்டு குலாக்குகள் விவசாயிகளுக்கு தானியத்தை நிர் ணய விலைக்கும் குறைவாக விற்பனை செய்த பல சம்பவங் களை நாம் அறிவோம். இவை எதுவும் எமக்கு வியப்புத் தர வில்லை. கம்யூனிஸ்டு தொழிலாளி ஊசலாட மாட்டான், தொழிலாளி வர்க்கம் உறுதியாக நிற்கும். ஆனால் விவசாயி கள் மத்தியில் குலாக் உணர்வு நிலவுமானால் அது முற்றிலும் புரிந்து கொள்ளக் கூடியதே. செக்கொஸ்லோவாகியர் எங்கு ஆட்சி நடத்துகிறார்களோ, எங்கு போல்ஷிவிக்குகள் ஆட்சி புரியவில்லையோ அங்கே பின்வரும் சித்திரத்தைக் காணலாம்:

முதலில் செக்கோஸ்லோவாகியர் விடுதலையாளர்கள் என்று உண்மையில் போற்றப்பட்டார்கள், ஆனால் இந்த முதலாளித்துவ ஆட்சி ஏற்பட்ட சில நாட்களுக்குள் செக்கோஸ்லோவாகியருக்கு எதிராகவும் சோவியத் அரசாங்கத்துக்கு ஆதரவாகவும் ஒரு மாபெரும் இயக்கம் எழுச்சியுறுகிறது. இதற்குக் காரணம், வாணிக சுதந்திரம் அரசியல் நிர்ணய சபை என்பன பற்றிய பேச்சு அனைத்தின் ஒரே அர்த்தம் நிலவுடைமையாளர், முதலாளிகள் ஆட்சியே என்பதை விவசாயிகள் உணரத் தொடங்கிவிட்டனர் என்பதே.

தொழிலாளர்களை அணிதிரட்டுவதும், சில வாரங்களுக்குள் போர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக சகலமும் அர்ப்பணிக்கப்படும் வகையில் ஓர் அமைப்பினை உருவாக்குவதுமே நமது வேலை. நாம் இப்போது பிரிட்டிஷ்-பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தோடும், ருஷ்யாவில் பூர்ஷ்வா வகைப்பட்ட, முதலாளித்துவத் தன்மையதான சகலத்தோடும், சோஷலிஸ்டுப் புரட்சியினை செயல்குலைத்து நம்மைப் போரில் சிக்க வைக்க முயலும் அனைவருடனும் போர் தொடுத்துள்ளோம். இப்போது இருக்கும் நிலையில் தொழிலாளர் விவசாயிகளின் ஆதாயங்கள் யாவும் இடர்ப்பாட்டுக்குள்ளாகியுள்ளன. பாட்டாளிகளின் விரிவான அனுதாபமும் ஆதரவும் நமக்கு உண்டு, பின்னர் அபாயம் முழுமையாயும் தவிர்க்கப்படும், மேலும் தமது வர்க்கத்தை ஆதரித்தும் சோஷலிஸ்டுப் புரட்சியைப் பாதுகாக்கவும் பாட்டாளிகளின் புதிய அணிகள் முன்வருவது திண்ணம் எனவும் நாம் நம்பிக்கை கொள்ளலாம். காரியங்கள் இப்போது இருக்கும் நிலையில் இப்போராட்டம் இரண்டு பிரதான பிரச்சினைகள் மீது நடத்தப்படுகிறது, புரட்சியின் நெருப்பில் முக்கியமான கட்சி வேறுபாடுகள் யாவும் அழிக்கப்பட்டுவிட்டன. தான் இடதுசாரிப் பக்கம் இருப்பதாக விடாமல் நினைவூட்டிக் கொண்டும், புரட்சித் தொடர்களின் மேகத்தின் பின்னே தன்னை ஒளித்துக் கொண்டும், அதேபோதில் உண்மையில் சோவியத் அரசாங்கத்துக்கு எதிராகக் கலகம் புரிந்து வரும் இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் யாரஸ்லாவ்ல் வெண்காவலர் போல அதே மாதிரிக் கையாள் ஆவார். வரலாற்றிலும் புரட்சிப் போராட்

டத்திலும் அவரது நிலை இதுவே! இன்று போர் அரங்கில் இரண்டு வர்க்கங்கள் மட்டுமே ஒன்றை யொன்று எதிர்த்து நிற்கின்றன: உழைக்கும் மக்கள் நலன்களைக் காத்து நிற்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும், நிலவுடைமையாளர் முதலாளி களின் நலன்களைக் காத்து நிற்பவர்களுக்கும் இடையில் தான் வர்க்கப் போராட்டம் நடக்கிறது. விவரமறியாத மக்கள் திரளினரை ஏமாற்றப் பயன்படுத்தப்படும் அரசியல் நிர்ணய சபை, சுதந்திர அரசு ஆகியவை பற்றிய பேச்சுகள் யாவும் செக்கோஸ்லோவாகிய மற்றும் காக்கேசியன் மென்ஷிவிக் இயக்கங்களின் அனுபவத்தால் அம்பலப்படுத்தப்பட்டு விட்டன. இந்தப் பேச்சுக்கள் அனைத்துக்கும் பின்னால், நில வுடைமையாளர்கள், முதலாளிகள் என்னும் அதே சக்திகள் நிற்கின்றன, ஜெர்மன் பிரதேசக் கைப்பற்றல் செய்வது போலவே செக்கோஸ்லோவாகியர் கலகமும் தனது பின்விளை வாக நிலவுடைமையாளர் முதலாளிகளின் ஆட்சியைக் கொண்டுவருகிறது. இந்தப் போரின் நோக்கம் இதுவே!

தோழர்களே, தொழிலாளர்கள் தமது அணிகளை முன் என்றையும் விட அதிக உறுதியுடன் ஒற்றுமைப்படுத்த வேண் டும், இந்தப் போராட்டத்தில் ஸ்தாபனத் திரட்சிக்கும் கட்டுப் பாட்டுக்கும் ஓர் உதாரணமாகத் திகழ வேண்டும். ஏகாதி பத்தியவாதிகளுடன் எல்லா பந்தங்களையும் ஒட்டறுத்துக் கொண்ட ஒரே நாடு இதுவரை ருஷ்யா மட்டுமே. நாம் ஆபத் தான காயங்களில் இருந்து இரத்தம் சிந்துவது உண்மை, ஏகாதிபத்திய விலங்கை எதிர்த்து, காலம் கடத்த முயன் றும், அதன் மீது இங்கும் அங்குமாக அடி கொடுத்தும், நாம் பின்வாங்கியுள்ளோம். ஆனால் சோஷலிஸ்டு சோவியத் குடி யரசு என்ற முறையில் நாம் சுதந்திரமாக இருந்து வந்திருக் கிறோம். நமது சோஷலிஸ்டு வேலையைச் செய்து முடித்தபடி நாம் உலகம் முழுதிலுமுள்ள ஏகாதிபத்தியத்தை எதிர்த் தோம். இந்தப் போராட்டம் உலகத் தொழிலாளர்களுக்கு மேலும் மேலும் தெளிவாகி வருகிறது. அவர்களது பொங்கி வரும் ஆக்குரோஷம் வருங்காலப் புரட்சியை நோக்கி அவர் களை நெருங்க நெருங்கக் கொண்டு வருகிறது. இதன் மீது தான் போராட்டம் தொடுக்கப்பட்டுள்ளது. காரணம், நமது

குடியரசு மட்டுமே ஏகாதிபத்தியத்தோடு கரம் கோர்த்து நடக்காத ஒரே நாடாகும். உலகை பிரெஞ்சுக்காரர்களா அல்லது ஜெர்மானியரா யார் ஆளவேண்டும் என்பதை முடிவு செய்ய லட்சக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப் படுவதை அனுமதிக்காத ஒரே நாடாகும். உலக ஏகாதிபத் தியப் போரில் இருந்து பலப்பிரயோகம் மூலம் புரட்சிகர மான வழிகளில் முறித்துக் கொண்டு, சோஷலிஸ்டுப் புரட்சி யின் பதாகையை உயர்த்தியுள்ள ஒரே நாடு நமது குடியர சாகும். ஆனல் அது மீண்டும் ஏகாதிபத்தியப் போருக்குள் இழுக்கப்படுகிறது, போர் முனைக்குள் வலுவந்தமாகத் தள்ளப்படுகிறது. செக்கோஸ்லோவாகியர் ஜெர்மானியரிடம் போராடட்டும், ருஷ்ய முதலாளித்துவ வர்க்கம் தம் நிலையை முடிவு செய்யட்டும், எந்த ஏகாதிபத்தியத் தரப்புடன் சேரு வது என்பதை மில்யுக்கோவ், ஸ்பிரிதோனவா மற்றும் கம்கோவுடன் உடன்பாடு பூண்டு முடிவு செய்யட்டும். ஆனல் அவர்கள் இந்த விஷயத்தில் முடிவு எடுப்பதைத் தடுக்க, நாம் நம் உயிர்களையே இழக்கத் தயாராக இருக்க வேண்டும் என்று சாற்றுகிறோம். காரணம், சோஷலிஸ்டுப் புரட்சி முழுவதன் கதிமோட்சம் அபாயத்தில் இருக்கிறது. (கரவொலி.) போர்க் களைப்பு மிகவும் குறிப்பிடத்தக்கதாயும் ராணுவச் செயல்பாடு மிகவும் தாழ்ந்த மட்டத்திலும் இருந்த சராத் தவ், சமாரா மற்றும் ஸிம்பீர்ஸ்க் குபேர்னியாக்களைச் சேர்ந்த விவசாயிகளின் மத்தியில் உணர்வு மாற்றம் ஏற்பட்டிருப் பதை நான் அறிவேன். கசாக்குகள் செக்கோஸ்லோவாகி யரின் சூறையாடலை அனுபவப்பட்ட பிறகு, அரசியல் நிர்ணய சபை மற்றும் பிரேஸ்த் சமாதான உடன்படிக்கை வீழ்க என்ற கூக்குரலின் அர்த்தம் என்ன என்பதன் மெய்யான தன்மையினை அறிந்த பின், அவர்கள் இவை யாவும் மீண்டும் நிலவுடைமையாளரும் முதலாளியும் திரும்பி வந்து அரியணை ஏறுவதற்கே இட்டுச் செல்லும் என்பதை உணர்ந்து இப் போது சோவியத் ஆட்சி அதிகாரத்தின் ஆர்வமிக்க ஆதர வாளர்கள் ஆகி வருகிறார்கள். புரட்சிக்குத் தலைமை தாங்கி அணிவகுத்துச் செல்லும் பெத்ரோகிராத் மற்றும் மாஸ்கோ தொழிலாளர் நிலைமையைப் புரிந்து கொள்வார்கள், இன்

றைய தருணம் எத்தனை பயங்கரமானது என்பதைப் புரிந்து கொள்வார்கள், முன் என்றையும் விட அதிக வைராக்கியத் துடன் செயல்படுவார்கள், சோஷலிஸ்டுப் புரட்சியின் நலனுக் காக பாட்டாளி வர்க்கம் ஆங்கில-பிரெஞ்சு மற்றும் செக்கோஸ்லோவாகிய எதிர்த்தாக்குதல்கள் இரண்டையும் தகர்த்து எறியும் என்பது திண்ணம். (கரவொலி.)

அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி,
மாஸ்கோ சோவியத், ஆலைக் கமிட்டிகள்,
மாஸ்கோ தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள்
சோவியத்துகளின் 1918 ஜூலை 29ன் அகில ருஷ்யக்
காங்கிரஸ் பிரதிநிதிகளின் கூட்டு அமர்வு என்ற
சிறு பிரசுரத்தில் 1918ல் வெளியிடப்பட்டது

அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி ஐந்தாவது கூட்டம். சுருக்கெழுத்துப் பிரதி என்ற நூலில் 1919ல் வெளியிடப் பட்டது	நூல் திரட்டு, தொகுதி 37, பக்கங்கள் 1-19

தொழிலாளர்-தோழர்களே,
இறுதியான நிர்ணயமான போராட்டத்தில் முன்செல்வீர்!

சோவியத் குடியரசு எதிரிகளால் சுற்றி வளைக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் அது உள்நாட்டிலும் வெளியிலும் உள்ள அதன் எதிரிகளை முறியடிப்பது திண்ணம். வெற்றியை உறுதி செய்யக்கூடிய ஒரு ஏற்றமான உணர்வு தொழிலாளி மக்களின் மத்தியில் ஏற்கெனவே காணத்தக்கதாக உள்ளது. மேற்கு ஐரோப்பாவில் புரட்சிப் பெருந் தீயின் பொறிகளும் பொங்கும் எழுச்சிகளும் எவ்வளவு அடிக்கடி ஏற்பட்டு வருகின்றன என்பதையும், உலகத் தொழிலாளர்களின் புரட்சியின் வெற்றி தொலைவில் இல்லை என்ற உத்தரவாதம் மூலம் அவை எமக்கு உத்வேகம் ஊட்டிவருவதையும் நாம் ஏற்கெனவே காண்கிறோம்.

ருஷ்யாவின் சோவியத் சோஷலிஸ்டுக் குடியரசின் இப்போதைய வெளிப்பகைவன் பிரிட்டிஷ், பிரெஞ்சு, அமெரிக்க மற்றும் ஜப்பானிய ஏகாதிபத்தியம் ஆகும். இந்தப் பகைவன் ருஷ்யாவைத் தாக்குகிறான்; நமது பிரதேசத்தைச் சூறையாடுகிறான், அர்ஹான்கெல்ஸ்கைக் கவர்ந்து பற்றி விட்டான், (பிரெஞ்சு செய்தித்தாள்களின் தகவலை நம்புவோமாயின்) விளாதிவஸ்தோக்கில் இருந்து நிக்கோல்ஸ்க்-உஸ்ஸூரீஸ்க் வரை முன்னேறி விட்டான். இந்தப் பகைவன் செக்கோஸ்லோவக் படைப் பிரிவின் ஜெனரல்கள் அதிகாரிகளுக்கு லஞ்சம் தந்து வசப்படுத்தி விட்டான். பிப்ரவரியில் ஜெர்மானியர் தோற்றுவித்த அதே மூர்க்கத்தனமும் பேராசை வெறியும் கொண்டு அமைதியாக இருக்கும் ருஷ்யாவை இப்பகைவன் தாக்கி வருகிறான். இதில் இருக்கும் ஒரே வித்தியாசம், போர்

முனையை மீட்டமைப்பதற்காக, அதாவது ருஷ்யாவை மீண்டும் பிரிட்டனுக்கும் ஜெர்மனிக்கும் இடையிலான ஏகாதிபத்தியப் போரில் (நேராகச் சொன்னல் கொள்ளைக்காரப் போரில்) மீண்டும் இழுப்பதற்காகவும், ருஷ்யாவின் பிரதேசத்தைக் கவர்ந்து பற்றிச் சூறையாடவும், சோவியத் அரசாங்கத்தை வீழ்த்தவும், பிரிட்டிஷாரும் ஜப்பானியரும் முனைந்து வருகிறார்கள் என்பதேயாகும்.

போரில் கைப்பற்றிய கொள்ளைப் பொருட்களை அவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் பொருட்டு, ருஷ்யாவில் நிலவுடைமையாளர், முதலாளிகளின் ஆட்சி அதிகாரத்தை மீட்டமைக்க பிரிட்டிஷ்-ஜப்பானிய முதலாளிகள் விரும்புகிறார்கள். பிரிட்டிஷ்-பிரெஞ்சு மூலதனத்துடன் ருஷ்யாவின் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் தளைப்படுத்திவைக்கவும், கடன்களாகத் தரப்பட்ட பல லட்சங்கள் மீதான வட்டித் தொகையை அவர்களிடம் இருந்து பிழிந்தெடுக்கவும், நமது நாட்டில் வெடித்தெழுந்துள்ளதும் உலகம் முழுதும் பரவும் வகையில் அச்சுறுத்தி வருவதுமான சோஷலிஸ்டுப் புரட்சி நெருப்பை அணைத்துவிடவும் அவர்கள் விரும்புகிறார்கள்.

ருஷ்யாவைப் பற்றுடல் செய்து அடிப்படுத்தும் அளவுக்கு பிரிட்டிஷ்-ஜப்பானிய ஏகாதிபத்தியக் காட்டுமிராண்டிகள் வல்லமை பெற்றவர்களல்ல. இதைச் செய்வதற்கு அண்டை நாடான ஜெர்மனியும் கூடப் போதிய வல்லமை பெற்றதல்ல. இதை உக்ரேனில் அந்த நாடுபெற்ற ''அனுபவமே'' எடுத்துக் காட்டியுள்ளது. பிரிட்டிஷாரும் ஜப்பானியரும் நம்மைத் திடுமெனப் பிடித்து விடலாம் என்று கருதினர்கள். அவர்கள் தோல்வியடைந்தார்கள். பெத்ரோகிராத் தொழிலாளர்களும் அவர்களைத் தொடர்ந்து மாஸ்கோ தொழிலாளர்களும் மாஸ்கோவுக்குப் பின் மத்தியத் தொழில்துறை பிராந்தியம் முழுவதன் தொழிலாளர்களும் மேலும் அதிக ஒற்றுமையுடன், அதிகரித்த உறுதியும் தீரமும் கொண்டு மேலும் பெரிய அளவில் எழுச்சியுற்று வருகிறார்கள். நாம் நிச்சயம் வெல்வோம் என்பதற்கு இது உறுதியான அறிகுறி.

அமைதியான ருஷ்யா மீது தமது தாக்குதலைத் தொடுத்தது மூலம் பிரிட்டிஷ்-ஜப்பானிய முதலாளித்துவக் கொள்ளை

யர் சோவியத் அரசாங்கத்தின் உள்நாட்டு விரோதியுடன் கூட்டணி சேரலாம் எனவும் கருதுகிறார்கள். அந்த உள்நாட்டு விரோதி யார் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். முதலாளிகள், நிலவுடைமையாளர்கள், குலாக்குகள் மற்றும் இவர்களது மரபுக்கொழுந்துகளுமே, தொழிலாளர் உழைக்கும் விவசாயிகளின்—தமது சக கிராமவாசிகளின் இரத்தத்தை உறிஞ்சாத விவசாயிகளின்—அரசாங்கத்தின் மீது பகைமை காட்டுகிறார்கள்.

குலாக் கலகங்களின் அலை ருஷ்யா முழுதும் மோதி வருகிறது. குலாக் சோவியத் அரசாங்கத்தை விஷம் போல வெறுக்கிறான், நூறாயிரக்கணக்கான தொழிலாளர்களை நெரித்துப் படுகொலை செய்யத் தயாராக இருக்கிறான். குலாக்குகளின் கை மேலோங்குமானால் அவர்கள் நூறாயிரக்கணக்கான தொழிலாளர்களை இரக்கமின்றிக் கொன்றழிப்பார்கள் என்பதையும், நிலவுடைமையாளர், முதலாளிகளுடன் கூட்டணி சேர்ந்து தொழிலாளர்களுக்கு முதுகை முறிக்கும் நிலைமைகளை மீண்டும் ஏற்படுத்துவார்கள், எட்டு மணி நேர வேலை நாளை ஒழித்து ஆலைகளையும் தொழிற்சாலைகளையும் முதலாளிகளிடம் ஒப்படைப்பார்கள் என்பதையும் நாம் நன்றாக அறிவோம்.

முந்திய ஐரோப்பியப் புரட்சிகள் அனைத்திலும் இவ்வாறே நடந்தது. அப்போது, தொழிலாளரின் பலவீனத்தின் விளைவாக குலாக்குகள் குடியரசை முடியாட்சியாகவும், உழைக்கும் மக்கள் அரசாங்கத்தை சுரண்டலாளர் செல்வந்தர் மற்றும் புல்லுருவிகளின் வல்லாட்சியாகவும் பின் திருப்புவதில் வெற்றி பெற்றார்கள். இது நமது கண்முன்னே லாத்வியாவில், பின்லாந்தில், உக்ரேனில் மற்றும் ஜார்ஜியாவில் நிகழ்ந்தது. எல்லா இடங்களிலும் பேராசை பிடித்த கொழுத்துப் பருத்த மிருகத்தனமான குலாக்குகள், தொழிலாளருக்கும் பொதுவாக ஏழைமக்களுக்கும் எதிராக நிலவுடைமையாளர்களுடனும் முதலாளிகளுடனும் சேர்ந்து செயல்பட்டார்கள். எல்லா இடங்களிலும் குலாக்குகள் நம்பற்கரிய மூர்க்க வெறியுடன் தொழிலாளிவர்க்கத்திடம் வஞ்சம் தீர்த்துக் கொண்டனர். எல்லா இடங்களிலும் தமது சொந்த நாட்டின்

தொழிலாளர்களுக்கு எதிராக வெளிநாட்டு முதலாளிகளுடன் சேர்ந்து செயல்பட்டார்கள். இந்த வழியில் தான் காடேட்டுகள், வலதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் மற்றும் மென்ஷிவிக்குகள் இயங்கிவந்துள்ளனர்; செக்கோஸ்லோவாகியாவில் நடந்த அவர்களது சாகசச் செயல்களை நினைவு கூர்ந்தால் மட்டுமே போதும். இந்த வழியில் தான், இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள் மாஸ்கோவில் கலகம் செய்த போது தமது முழு முட்டாள்தனம் மற்றும் உறுதியின்மை காரணமாகச் செயல்பட்டு யாரஸ்லாவ்லில் வெண்காவலருக்கும் காஸானில் செக்கோஸ்லோவாகியர், வெண்காவலருக்கும் துணை செய்தனர். இந்த இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களை கேரென்ஸ்கியும் அவரது நண்பர்களான பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளும் புகழ்ந்ததில் வியப்புண்டோ.

இதைப் பற்றிச் சந்தேகமே இல்லை. குலாக்குகள் சோவியத் அரசாங்கத்தின் வெறித்தனமான பகைவர்களாவர். ஒன்று, குலாக்குகள் பெருந் தொகையான தொழிலாளர்களைப் படுகொலை செய்வர், அல்லது உழைக்கும் மக்களின் அரசாங்கத்துக்கு எதிராக இருக்கும் கொள்ளைக்கார குலாக்கு சிறுபான்மையின் கலகங்களை தொழிலாளர்கள் தாட்சண்யமின்றி ஒடுக்குவர். இதில் நடுப்பாதை என்பது இருக்க முடியாது. சமாதானம் என்பதற்கு இடமே இல்லை: அவர்கள் சண்டை போட்டுக் கொண்டாலும் கூட குலாக்குகள், நிலவுடைமையாளர், ஜார், சமயகுரு ஆகியோருடன் எளிதில் சமரசத்துக்கு வர முடியும், ஆனால் தொழிலாளி வர்க்கத்துடன் என்றுமே வர முடியாது.

இதனால் தான் குலாக்குகளுக்கு எதிரான போராட்டத்தை இறுதியான நிர்ணயமான போராட்டம் என்று அழைக்கிறோம். இதனால், மேலும் பல குலாக்கு கலகங்கள் இரா என்றோ, சோவியத் அரசாங்கத்தின் மீதான அன்னிய முதலாளித்துவத்தின் மேலும் பல தாக்குதல்கள் இரா என்றோ அர்த்தமல்ல. ''இறுதியான'' போராட்டம் என்ற தொடர்களின் பொருள் நமது நாட்டில் கடைசியானதும் எண்ணிக்கையில் மிகப் பெரியதுமான சுரண்டும் வர்க்கங்கள்

நமக்கு எதிராகக் கலகம் செய்துவிட்டன என்பதை உணர்த்து கிறது.

குலாக்குகள் மிகவும் கொடுமை வாய்ந்த இரக்க உணர்ச் சியற்ற மிருகத்தனமான சுரண்டலாளர்கள் ஆவர். இதர நாடுகளின் வரலாற்றில் அவர்கள் அடிக்கடி நிலப்பிரபுக்கள், ஜார்கள், சமயகுருமார் மற்றும் முதலாளிகளின் ஆட்சி அதி காரத்தை அடிக்கடி மீட்டமைத்திருக்கிறார்கள். நிலப்பிரபுக் கள் முதலாளிகளை விடவும் குலாக்குகள் எண்ணிக்கையில் மிகவும் அதிகமாக உள்ளனர். இருப்பினும் அவர்கள் மக்கள் திரளினுள் சிறுபான்மையினரே.

கொள்ளையர்கள் உக்ரேனையும் இதர பிரதேசங்களையும் பறித்துக் கொள்வதற்கு முன்பு இருந்த ருஷ்யாவை எடுத்துக் கொண்டால், சுமார் ஒன்றரைக் கோடி விவசாயிக் குடும்பங் கள் ருஷ்யாவில் இருந்தன என்று வைத்துக் கொள்ளலாம். இந்த ஒன்றரைக் கோடிப்பேரில் ஒரு கோடி ஏழை விவசாயி கள் இருக்கலாம். இவர்கள் தமது உழைப்பு சக்தியை விற்று ஜீவனம் நடத்துபவர்கள், அல்லது செல்வந்தருக்கு அடிமைப் பட்டவர்கள், அல்லது உபரிதானியம் இல்லாதவர்கள், போரின் சுமைகளால் மிகவும் வறியவர்களாக்கப் பட்டவர் கள். சுமார் முப்பது லட்சம் பேர் நடுத்தர விவசாயிகள் என்று கருதப்பட வேண்டும். அதே போதில், இருபது லட் சம் பேர்கள் அளவுக்குள் குலாக்குகள், பணக்கார விவசாயி கள், தானியக்கொள்ளை லாபக் காரர்கள் ஆகியோர் அடங்கு வர். இந்த இரத்தம் உறிஞ்சும் பேர்வழிகள் போரில் மக்கள் இல்லாமையால் வாடியதைப் பயன்படுத்திச் செல்வந்தர்கள் ஆனவர்கள். தானியம் மற்றும் இதர உற்பத்தி பொருட் களின் விலையை ஏற்றி ஆயிரம் லட்சக்கணக்கான ரூபிள் வாரிக்குவித்தவர்கள். போரினால் பாழ்பட்ட விவசாயி களுக்குப் பிரதி கூலமாக, பட்டினியால் வாடும்தொழிலாளர் களுக்குப் பிரதி கூலமாகக் கொழுத்து வளர்ந்தவர்கள் இந்தச் சிலந்திகள். நகரங்களிலும் ஆலைகளிலும் உள்ள தொழிலாளர்கள் பட்டினியால் வாட, உழைக்கும் மக்களின் இரத்தத்தை உறிஞ்சும் இந்த அட்டைகள் மேலும் செல்வந் தர்களாயினர். இந்தப் பிசாசுகள் நிலவுடைமையாளர் நிலங்

களைத் தம் கைக்குள் திரட்டி வருகிறார்கள்; ஏழை விவசாயி களைத் தொடர்ந்து அடிமைப்படுத்தி வருகிறார்கள்.

குலாக்குகள் மீது தாட்சண்யமற்ற போர்! அவர்களை ஒழிப்போம்! அவர்களைத் தாங்கி ஆதரிக்கும் கட்சிகளை: வலது சாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர், மென்ஷிவிக்குகள் மற்றும் இன்றைய இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களை வெறுத்து இகழ்ந்து புறக்கணிப்போம்! குலாக்குகளின் கல கங்களை தமது சொந்த நாட்டின் உழைக்கும் மக்களுக்கு எதிராக அன்னிய முதலாளிகளுடன் கூட்டணி அமைக்கும் குலாக்குகளை தொழிலாளர்கள் கடுமையாக நசுக்க வேண் டும்.

குலாக்குகள், ஏழை விவசாயிகளின் அறியாமை, ஒற்று மையின்மை, தனிமைப்பட்ட நிலை ஆகியவற்றைத் தமக்குச் சாதகம் ஆக்கிக் கொள்கிறார்கள். அவர்களைத் தொழிலாளர் களுக்கு எதிராகத் தூண்டி விடுகிறார்கள். தானியத்தில் நூறு ரூபிள் அளவுக்கு லாபம் அடித்துச் ''சிறிது பணம்'' பண்ண'' அனுமதிப்பது மூலம் சில சமயங்களில் ஏழை விவசாயிகளுக்கு லஞ்சம் தருகிறார்கள் (அதே சமயம் ஏழை விவசாயிகளிட மிருந்து பல ஆயிரம் ரூபிள் கொள்ளையடிக்கிறார்கள்). குலாக்கு கள் நடுத்தர விவசாயிகளின் ஆதரவைப் பெற முயல்கிறார் கள், இதில் சில சமயம் வெற்றியும் அடைகிறார்கள்.

ஆனால் தொழிலாளி வர்க்கம் நடுத்தர விவசாயியிடம் சண்டையிடக் காரணம் எதுவுமில்லை. தொழிலாளர் குலாக்கு களுடன் எவ்வித சமரசத்துக்கும் வர முடியாது. ஆனால் நடுத்தர விவசாயிகளிடம் அவர்கள் ஓர் உடன்பாட்டை நாட லாம், இப்போது நாடுகிறார்கள். தொழிலாளர் அரசாங்கம், போல்ஷிவிக் அரசாங்கம் அதைச் செயலில் நிரூபித்து விட்டது.

''நிலத்தைச் சமூகவுடைமையாக்கும்'' சட்டத்தை நிறை வேற்றியது மூலமும் அதைக் கறாராகச் செயல்படுத்தியது மூலமும் இதை நிரூபித்தோம். இந்தச் சட்டத்தில் நடுத்தர விவசாயிகளின் நலன்களுக்கும் கருத்துக்களுக்கும் வழங்கப் பட்ட மிகப்பல சலுகைகள் அடங்கும்.

தானிய விலைகளை (அன்று) மும்மடங்காக அதி

கரித்தது மூலம் நாம் அதை நிரூபித்தோம்.[76] காரணம், நடுத்தர விவசாயியின் வருவாய்கள் செய்பொருட்களுக்கான இன்றைய விலைகளுக்குப் பெரும்பாலும் அளவில் ஒவ்வாத தாக இருக்கின்றன, அவை உயர்த்தப்பட வேண்டும் என் பதை நாம் முழுமையாக உணர்கிறோம்.

வர்க்க உணர்வுடைய ஒவ்வொரு தொழிலாளியும், இதை நிச்சயமாயும் நடுத்தர விவசாயிக்கு விளக்கிக் கூறுவார். ஜார்கள், நிலப்பிரபுக்கள், முதலாளிகளின் அரசாங்கத்தை விட சோஷலிசம் நடுத்தர விவசாயிக்கு மிகப்பெரிய அளவுக்கு அதிக அனுகூலமானது என்பதை பொறுமையாகவும் விடாப் பிடியாயும் திரும்பத்திரும்பவும் அவனிடம் சுட்டிக் காட்டு வார் என்பது திண்ணம்.

தொழிலாளர் அரசாங்கம் நடுத்தர விவசாயிக்கு என்றுமே தீங்கு இழைத்தது கிடையாது, என்றுமே அது தீங்கு இழைக் காது என்பது திண்ணம். ஆனால், ஜார்கள், நிலப்பிரபுக் கள், முதலாளிகள், குலாக்குகளின் அரசாங்கம் நடுத்தர விவசாயிக்கு எப்போதும் தீங்கு இழைத்து வந்துள்ளது என்பது மட்டுமல்ல, அது அவனை அறவே நெரித்துக்கொள்ளை யடித்து நாசப்படுத்திவிட்டது. ருஷ்யா உள்ளிட்ட எல்லா நாடுகளிலும் விதிவிலக்கின்றி உண்மையில் நிலவியது இதுவே.

வர்க்க உணர்வுடைய தொழிலாளியின் வேலைத்திட்டம் —ஏழை விவசாயிகளுடன் மிகவும் நெருக்கமான கூட்டணி மற்றும் முழுமையான ஒற்றுமை; நடுத்தர விவசாயிகளுக்குச் சலுகைகள், அவர்களுடன் உடன்பாடு, அந்த இரத்தம் உறிஞ் சும் பேர்வழிகள், பிசாசுகள், மக்களைச் சூறையாடுவோர் லாபக் கொள்ளையர், பஞ்சத்தால் கொழுப்பவர்களான குலாக்குகளை தாட்சண்யமின்றி ஒடுக்குவது என்பதாகும். இதுவே தொழிலாளி வர்க்கத்தின் கொள்கை.

1918 ஆகஸ்டு முதற்பாதியில், ஆகஸ்டு 6க்குப் பின் எழுதப்பட்டது

1925 ஜனவரி 17ல் முதலில் பிரசுரமானது ரபோச்சயா மாஸ்கோ, இதழ் 14

நூல் திரட்டு, தொகுதி 37, பக்கங்கள் *38-42*

அமெரிக்கத் தொழிலாளர்களுக்கு எழுதிய கடிதம்

தோழர்களே, 1905ஆம் ஆண்டுப் புரட்சியில் கலந்து கொண்டு அதற்குப் பிறகு பல ஆண்டுகள் உங்கள் நாட்டில் வாழ்ந்திருந்த ஒரு ருஷ்ய போல்ஷிவிக் எனது கடிதத்தை உங்களிடம் சேர்ப்பிக்க முன்வந்திருக்கிறார்.[77] அவரது யோசனையை நான் மேலதிகமான மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டேன், காரணம் இன்றைய கட்டத்தில், மிகவும் புதியதும், ஆகவலிமையானதும், முதலாளித்துவ லாபங்களைப் பங்கீடு செய்துகொள்வதற்காக தேசங்களை உலகுதழுவிய ரீதியில் படுகொலை செய்வதற்கு வெகு அண்மையில் சேர்ந்துள்ளதுமான—அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சமரசத்திற்கு இடந்தராத விரோதிகளாக விளங்கும் அமெரிக்காவின் புரட்சிகரத் தொழிலாளர்கள் தனிச் சிறப்பான முக்கியமான பாத்திரத்தை வகிக்க வேண்டும். இந்தத் தருணத்திலேயே, அமெரிக்கக் கோடீசுவரர்கள்—இந்த நவீன அடிமை உடைமையாளர்கள்—முதல் சோஷலிசக் குடியரசை நெரித்து அழிக்கும் நோக்கத்திற்காகக் கொடிய ஆங்கில-ஜப்பானிய ஏகாதிபத்தியவாதிகள் தொடுத்து விட்டுள்ள ஆயுதத் தாக்குதல் படையெடுப்புக்கு—நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, பகிரங்கமாகவோ அல்லது வஞ்சனையாக மூடி மறைத்தோ எப்படிச் செய்தாலும் இதில் வித்தியாசமில்லை—தமது ஆதரவை வழங்குவது மூலம் இரத்தவெறி ஏகாதிபத்தியத்தின் இரத்தவெறி வரலாற்றில் ஒரு தனிப்பட்ட துன்பியல் ஏட்டைப் புரட்டிவிட்டார்கள்.

நவீன நாகரிக அமெரிக்காவின் வரலாறு உண்மையிலேயே விடுதலை தந்த, உண்மையிலேயே புரட்சிகரமான, அந்த மகத்

தான போர்களில் ஒன்றேடு துவங்கியது. பெருவாரியான நாடுபிடிக்கும் போர்களுடன் ஒப்புநோக்கில் அத்தகைய போர்கள் மிகச் சிலவே. இந்த நாடுபிடிக்கும் போர்கள் இன்றைய ஏகாதிபத்தியப் போரைப் போலவே அநீதியாகப் பறித்துக் கொண்ட நிலங்கள், இழி வழியில் திரட்டிய ஆதாயங்களைப் பங்கீடுசெய்துகொள்வதன் மீது மன்னர்கள், நிலப்பிரபுக்கள் அல்லது முதலாளிகளிடையான பூசல்களால் விளைந்தவை. அந்தப் போரோ, இன்னும் இந்தியா, எகிப்து, உலகின் எல்லாப் பகுதிகளிலும் கோடிக்கணக்கான மக்களை காலனி அடிமைத்தனத்தில் வைத்து ஒடுக்கி வரும் அதே வழியில் அமெரிக்காவை ஒடுக்கி அந்த நாட்டைக் காலனி அடிமைத்தனத்தில் வைத்திருந்த இந்த ''நாகரிக'' இரத்த வெறியர்களான பிரிட்டிஷ் கொள்ளைக்காரர்களை எதிர்த்து அமெரிக்க மக்கள் தொடுத்த போராகும்.

அதற்குப் பிறகு ஏறத்தாழ 150 ஆண்டுகள் கடந்து விட்டன. முதலாளித்துவ நாகரிகம் அதன் செழிப்பான கனிகள் அனைத்தையும் ஈன்றளித்து விட்டது. அமெரிக்கா கூட்டு மனித முயற்சியின் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி மட்டத்தில், இயந்திரங்கள் மற்றும் நவீனப் பொறியியலின் அற்புதங்களைப் பயன்படுத்துவதில் சுதந்திரமான கல்விபெற்ற நாடுகளிடையே முதலிடத்தைப் பெற்றிருக்கிறது. அதே சமயம் அமெரிக்காவானது சகதியிலும் செல்வச் செழிப்பிலும் புரளும் விரல்விட்டெண்ணத்தக்க ஆணவம் பிடித்த கோடீசுவரர்களுக்கும் பஞ்சைப்பனுதி வாழ்வின் விளிம்பில் இடையருது வாழ்ந்துவரும் கோடிக்கணக்கான உழைப்பாளி மக்களுக்கும் இடையில் கிடக்கும் அகாதமான ஆழத்தைப் பொருத்தவரை முன்னணியில் நிற்கும் நாடுகளில் ஒன்ருக இருக்கிறது. நிலப்பிரபுத்துவ அடிமைத்தனத்தை எதிர்த்து ஒரு புரட்சிகரமான போரினைத் தொடுத்தது மூலம் உலகத்திற்கு ஓர் உதாரணத்தை நிலைநாட்டிய அமெரிக்க மக்கள், இப்பொழுது விரல்விட்டெண்ணக் கூடிய ஒரு சில கோடீசுவரர்களுக்கு மிகவும் அணித்தான முதலாளித்துவக் கட்டத்தின் கூலி அடிமைத்தனத்தில் இருப்பதை அறிகிருர்கள்; கூலிக்கு மாரடிக்கும் போக்கிரிகள் பாத்திரத்தைத் தாம்

வகித்துவருவதை அறிகிறார்கள். இந்தக் கூலிக்கு மாரடிக்கும் போக்கிரிகள் செல்வந்தக் கயவர்களின் நலனுக்காக "விடுதலை செய்கிறோம்" என்ற சாக்குப் போக்கில் ஃபிலிப்பைன்ஸ் குடியரசை 1898ல் நெரித்து அழித்தார்கள்[78], இன்று, 1918ல் ஜெர்மானியரிடமிருந்து "பாதுகாக்கிறோம்" என்ற சாக்குப்போக்கில் ருஷ்ய சோஷலிசக் குடியரசை நெரித்தழிக்கின்றனர்.

தேசங்களை நான்காண்டுகள் ஏகாதிபத்தியவாதிகள் படுகொலை செய்தது விளைவின்றிப் போய்விடவில்லை. பிரிட்டிஷ் மற்றும் ஜெர்மன் இரு கொள்ளைக்கார கோஷ்டியின் கயவர்களும் மக்களை ஏமாற்றியது மறுக்கமுடியாத தெட்டத் தெளிவான உண்மைகளால் அறவே அம்பலப்படுத்தப்பட்டு விட்டது. நாலாண்டுகள் நடந்த போரின் விளைவுகள் லாபத்தைப் பங்கீடு செய்து கொள்வதில் கொள்ளைக்காரர்களிடையிலான போருக்குப் பொருத்தமான முதலாளித்துவத்தின் பொது விதியினை வெளிப்படுத்தியது: ஆகச் செல்வந்தர்களும் வலிமை மிக்கவர்களும் ஆதாயமடைந்தார்கள், பெரும்பகுதியைக் கபளீகரம் செய்தார்கள்; ஆகப் பலவீனமானவர்கள் அப்பட்டமாகக் கொள்ளையடிக்கப்பட்டனர், துன்புறுத்தப்பட்டனர், நசுக்கப்பட்டு நெரித்துக் கொல்லப்பட்டனர்.

"காலனி அடிமைகளை" எண்ணிக்கையில் அதிகமாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் கொள்ளைக்காரர்களே வைத்திருந்தார்கள். பிரிட்டிஷ் முதலாளிகள் "தமது" பிரதேசத்தில் (பல நூற்றாண்டுகளாக அவர்கள் கபளீகரம் செய்த பிரதேசத்தில்) ஓர் அங்குலத்தைக்கூட இழக்கவில்லை; மாறாக ஆப்பிரிக்காவில் இருந்த ஜெர்மனியின் காலனிகளைக் கபளீகரம் செய்தார்கள், மெசபொடாமியாவையும் பாலஸ்தீனத்தையும் கபளீகரம் செய்தார்கள், கிரீசை நெருக்கி நசுக்கினார்கள், ருஷ்யாவைச் சூறையாடத் தொடங்கிவிட்டார்கள்.

ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின் கொள்ளைக்காரர்கள் வலுவான ஸ்தாபனமும் கட்டுப்பாடுமுள்ள "தமது" சேனைகளை வைத்திருந்தார்கள், ஆனால் காலனிகள் விஷயத்தில் பலவீனமாக இருந்தார்கள். அவர்கள் தமது காலனிகள் அனைத்தையும் இழந்து விட்டார்கள், ஆனால் ஐரோப்பாவில் பாதியை

சூறையாடி, பெருமளவிலான சிறு நாடுகளையும் பலவீன தேசங்களையும் நெருக்கி நசுக்கினார்கள். இரு பக்கங்களிலும் எத்தகைய ''விடுதலைப்'' போர்! இரு கோஷ்டிகளையும் சேர்ந்த ஆங்கில-பிரெஞ்சு மற்றும் ஜெர்மன் முதலாளிகள் தமது அடிவருடிகளான சமூக-தேசியவெறியருடன் அதாவது ''தமது சொந்த'' முதலாளி வர்க்கத்தின் பக்கத்தில் போய்ச் சேர்ந்து கொண்ட சோஷலிஸ்டுகளுடன் சேர்ந்து நின்று எத்துணை நன்றாகத் ''தமது நாட்டைக் காத்தனர்''!

அமெரிக்க கோடீசுவரர்களே ஆகப் பெரிய செல்வந்தர்களாகி, பூகோள ரீதியில் மிகவும் பாதுகாப்புடன் இருந்தார்கள். மற்ற எல்லோரையும் விட அவர்கள் அதிக லாபமடைந்தார்கள். அவர்கள் செல்வமிக்க நாடுகள் உள்ளிட்டு எல்லா நாடுகளையும் தமக்குக் கப்பம் செலுத்தும் நாடுகளாக மாற்றிவிட்டார்கள். கோடிக்கணக்கான டாலர்களை அவர்கள் பேராசையுடன் பறித்துக்கொண்டார்கள். ஒவ்வொரு டாலரும் சகதியால் கறைப்பட்டதாகும்: பிரிட்டனுக்கும் அதன் ''நேச நாடுகளுக்கும்'' இடையிலான இரகசிய உடன்படிக்கைகள், ஜெர்மனிக்கும் அதன் அடிமை நாடுகளுக்கும் இடையிலான இரகசிய உடன்படிக்கைகள், அடித்த கொள்ளையைப் பங்கீடு செய்வதற்கான உடன்படிக்கைகள், தொழிலாளர்களை ஒடுக்கவும் சர்வதேசிய சோஷலிஸ்டுகள் மீது அடக்குமுறை ஏவவும் பரஸ்பர ''உதவி'' உடன்பாடுகள் என்ற சகதியால் அது கறைப்பட்டிருந்தது. ஒவ்வொரு நாட்டிலும் செல்வந்தர்களை மேலும் செல்வந்தர்களாக்கியும் ஏழைகளை மேலும் ஏழைகளுமாக்கிய ''லாபகரமான'' யுத்த கண்ட்ராக்டுகள் என்ற சகதியால் ஒவ்வொரு டாலரும் கறைப்பட்டிருந்தது. அடித்த கொள்ளையில் ஆக அதிகப் பங்கு பிரிட்டிஷ் அல்லது ஜெர்மன் கொள்ளைக்காரர்களில் யாருக்கு என்பதையும் உலக முழுதிலுமுள்ள பலவீன நாடுகளை நெரித்து ஒடுக்குவதில் பிரிட்டிஷ் அல்லது ஜெர்மன் போக்கிரிகளில் யார் முன்னணியில் என்பதையும் முடிவு செய்வதற்காக நடைபெற்ற இந்த மாபெரும், உன்னத, விடுதலை, புனித யுத்தத்தில் கொல்லப்பட்ட ஒரு கோடிப் பேர், அங்கமிழந்த

இரண்டு கோடிப் பேர் கடல் போலச் சிந்திய இரத்தத்தால் ஒவ்வொரு டாலரும் கறைப்பட்டிருந்தது.

ஜெர்மன் கொள்ளைக்காரர்கள் யுத்த அட்டூழியங்களில் எல்லா சாதனைகளையும் விஞ்சிவிட்டார்கள், அதே பொழுதில் பிரிட்டிஷார் அவர்கள் கபளீகரம் செய்த காலனிகளின் எண்ணிக்கையில் மட்டுமன்றி அவர்களது வெறுக்கத்தக்க நய வஞ்சகத்திலும் எல்லா சாதனைகளையும் விஞ்சி விட்டார்கள். இன்றும் கூட ஆங்கில-பிரெஞ்சு மற்றும் அமெரிக்க முதலாளித்துவச் செய்தி ஏடுகள் தமது லட்சோபலட்சம் பிரதிகள் மூலம் ருஷ்யாவைப் பற்றிப் பொய்களையும் அவதூறுகளையும் பரப்பி வருகின்றன, ருஷ்யாவை ஜெர்மானியரிடமிருந்து ''காப்பதற்கு'' என்ற சாக்குப் போக்கில் அந்த நாட்டுக்கு விரோதமான தமது கொள்ளைக்காரப் படையெடுப்பை வஞ்சகமான முறையில் நியாயப்படுத்துகின்றன!

இந்த வெறுக்கத்தக்க அருவருப்பான பொய்யை மறுக்க அதிகச் சொற்கள் தேவையில்லை; நன்கறிந்த ஓர் உண்மையை சுட்டிக்காட்டுவதே போதுமானது. 1917 அக்டோபரில் ருஷ்யத் தொழிலாளர்கள் அவர்களது ஏகாதிபத்திய அரசாங்கத்தை வீழ்த்திய பிறகு சோவியத் அரசாங்கம், புரட்சிகரத் தொழிலாளர் விவசாயிகளின் அரசாங்கம், ஒரு நீதியான சமாதானத்தை, நாடுகளைப் பறித்துச் சேர்த்துக் கொள்வதோ அல்லது இழப்பீடுகளோ இல்லாத ஒரு சமாதானத்தை, எல்லா தேசங்களின் சம உரிமைகளை முழுமையாக உத்தரவாதம் செய்யும் ஒரு சமாதானத்தைக் கோரிப் பகிரங்கமாகப் பிரேரணை செய்தது,—போரில் ஈடுபட்ட நாடுகள் அனைத்திற்கும் அத்தகைய சமாதானம் தேவை என்று பிரேரேபித்தது.

ஆங்கில-பிரெஞ்சு மற்றும் அமெரிக்க முதலாளிகள் எமது யோசனையை ஏற்க மறுத்தார்கள், ஒரு பொது சமாதானம் பற்றி எம்முடன் பேச்சு நடத்தவும் அவர்கள் மறுத்தார்கள்! அவர்கள் தான் அனைத்து நாடுகளின் நலன்களுக்கும் துரோகம் விளைத்தார்கள், அவர்கள் தான் ஏகாதிபத்தியப் படுகொலையை நீட்டித்தார்கள்.

ருஷ்யாவை மீண்டும் ஏகாதிபத்தியப் போரில் இழுக்க

லாம் என்ற சாத்தியக் கூறை நம்பி சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ள மறுத்தார்கள், அதன் மூலம் கொள்ளைக்காரத்தனத்தில் சற்றும் குறையாத ஜெர்மன் முதலாளிகள் நாட்டைப் பிடித்துச் சேர்த்துக் கொள்ளும் கடுமையான பிரேஸ்த் சமாதானத்தை ருஷ்யா மீது திணிக்க இஷ்டம் போல் இடமளித்தார்கள்!

பிரேஸ்த் சமாதான உடன்படிக்கைக்காக இப்போது ஆங்கில-பிரெஞ்சு மற்றும் அமெரிக்க முதலாளிகள் நம்மைக் ''குற்றம் சாட்டுவது'' போன்று ஒரு வெறுக்கத்தக்க வஞ்சகமான செயல் எதையும் கற்பனை செய்வது கூடக் கடினமாகும். பிரேஸ்த் பேச்சுவார்த்தைகளை ஒரு பொது சமாதானத்திற்கான பொதுப் பேச்சுவார்த்தைகளாக மாற்றி விடக் கூடிய அந்த நாடுகளின் அதே முதலாளிகள் இப்போது நம்மீது ''குற்றம் சாட்டுவோராகிறூர்கள்''! காலனிகளைக் கொள்ளையடித்தல், தேசங்களைப் படுகொலை செய்தல் ஆகிய வற்றிலிருந்து லாபமடைந்த ஆங்கில-பிரெஞ்சு ஏகாதிபத்தியக் கொள்ளையர், பிரேஸ்துக்குப் பிறகு போரை ஏறத்தாழ ஒரு முழு ஆண்டு நீட்டித்திருக்கிறூர்கள், அப்படியிருக்க எல்லா நாடுகளுக்கும் நீதியான சமாதானம் வேண்டும் என்று பிரேரணை செய்த போல்ஷிவிக்குகளாகிய எம் மீது ''குற்றம் சாட்டுகிறூர்கள்'', முன்னுள் ஜாருக்கும் ஆங்கில-பிரெஞ்சு முதலாளிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட இரகசியமான கொலைக்காரத்தனமான உடன்படிக்கைகளை ரத்து செய்து, அவற்றைப் பொது மக்கள் வெறுத்து இகழும்படி அம்பலப்படுத்திய எம் மீது ''குற்றம் சாட்டுகிறூர்கள்.''

உலக முழுதிலுமுள்ள தொழிலாளர்கள், அவர்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும் சரி எம்மை வாழ்த்துகிறூர்கள், எம்மிடம் பரிவு காட்டுகிறூர்கள், ஏகாதிபத்தியத் தளைகளின் இரும்பு வளையத்தைத் தகர்த்ததற்காகவும் படுகேடான ஏகாதிபத்திய உடன்படிக்கைகளையும் ஏகாதிபத்திய விலங்குகளையும் தகர்த்ததற்காகவும்—சுதந்திரத்தை நோக்கித் தடைகளைத் தகர்த்து முன்னேறியதற்காகவும் அவ்வாறு செய்யும் பொழுது மாபெரும் தியாகங்களைப் புரிந்ததற்காகவும் —எம்மைப் பாராட்டுகிறூர்கள், ஒரு சோஷலிசக் குடியரசு

என்ற முறையில் ஏகாதிபத்தியவாதிகளால் சின்னுபின்னம் செய்யப்பட்டும் சூறையாடப்பட்டும் வந்த போதிலும் ஏகா திபத்தியப் போரிலிருந்து வெளியே நின்று உலகம் முழு வதும் காணும் வகையில் சமாதானத்தின் பதாகையை, சோஷலிசத்தின் பதாகையை ஓங்க உயர்த்தியதற்காக எம்மைப் பாராட்டுகிறுர்கள்.

இதற்காக சர்வதேச ஏகாதிபத்தியக் கும்பல் எம்மீது பகைமை பாராட்டுகிறது, எம்மீது ''குற்றம் சாட்டுகிறது'', எமது வலதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள் மற்றும் மென்ஷிவிக்குகள் உட்பட ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகள் அனைவரும் எம்மீது ''குற்றம் சாட்டுகின்றனர்'' என்ருல் இதில் சிறிதும் வியப்பில்லை. போல்ஷிவிக்குகள் பால் ஏகா திபத்தியத்தின் இந்தக் காவல் நாய்கள் தோற்றுவிக்கும் பகைமையும் வர்க்க உணர்வுடைய உலகத் தொழிலாளர் கள் காட்டும் ஆதரவும் எமது லட்சியம் நீதியானது என்பதை முன் என்றையும் விட அதிகமாக மெய்ப்படுத்திக் காட்டி யுள்ளன.

முதலாளி வர்க்கத்தை எதிர்த்து வெற்றியடைவதற் காக, ஆட்சி அதிகாரத்தைத் தொழிலாளர் கரங்களுக்கு மாற்றுவதற்காக, உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியைத் துவக்குவதற்காக, நாம் நமது நிலப்பரப்பில் ஒரு பகுதி யைத் தியாகம் செய்வது, ஏகாதிபத்தியத்திடம் கடு மையான தோல்விகளை அடையும் தியாகம் உள்ளிட்டு, மிக வும் வீருர்ந்த தியாகங்களைச் செய்வதற்கு நாம் தயங்க முடி யாது, தயங்கக் கூடாது என்பதை ஓர் உண்மையான சோஷலிஸ்டு புரிந்துகொள்ளத் தவற மாட்டார். சோஷ லிசப் புரட்சியின் லட்சியத்தை உண்மையிலேயே முன் கொண்டு செல்வதற்காகத் ''தனது'' நாடு ஆக மகத்தான தியாகம் புரிவதை ஆதரித்து தனது விருப்பத்தை ஓர் உண் மையான சோஷலிஸ்டு செயல்கள் மூலம் நிரூபித்திருப் பார்.

''தமது'' நோக்கத்திற்காக, அதாவது உலக மேலாதிக் கத்தை வென்று பெறுவதற்காக, பிரிட்டன் மற்றும் ஜெர்மனி யின் ஏகாதிபத்தியவாதிகள் பெல்ஜியம் மற்றும் செர்பியா

தொட்டு பாலஸ்தீனம் மற்றும் மெசபொடாமியா வரையில் எண்ணற்ற பல நாடுகளை அறவே நாசமாக்கி நெரித்து அழிக்கத் தயங்கவில்லை. ஆனால் சோஷலிஸ்டுகள் ''தமது'' நோக்கத்திற்காக, மூலதனத்தின் ஆதிக்கத்திலிருந்து உலகம் முழுவதன் உழைப்பாளி மக்களை விடுதலைசெய்யும், சர்வப்பொதுவான நிரந்தரமான சமாதானத்தை வென்று பெறுவதற்குத் தியாகம் இல்லாத ஒரு பாதையைக் கண்டுபிடிக்கும் வரையில் காத்துக் கிடக்க வேண்டுமா? எளிதான வெற்றி ''உத்தரவாதம்'' செய்யப்படும் வரை, அவர்கள் போராட்டத்தைத் துவக்க அஞ்சித் தயங்க வேண்டுமா? ''அவர்களது'', முதலாளிகளால் சிருஷ்டிக்கப்பட்ட ''தாய் நாட்டின்'' பிரதேச உரிமையையும் பாதுகாப்பையும் உலக சோஷலிசப் புரட்சியின் நலன்களுக்கு மேலாகக் கருத வேண்டுமா? இந்த வழியில் சிந்தனை செய்யும் சர்வதேச சோஷலிஸ்டு இயக்கத்தின் கயவர்கள், முதலாளித்துவ ஒழுக்கநெறியில் மானங்கெட்டு நடக்கும் அந்த அடிவருடிகள் மும்முறையும் கண்டனத்திற்குரியவர்கள்.

ஜெர்மன் ஏகாதிபத்தியத்தோடு ஓர் ''உடன்படிக்கை'' செய்துகொண்டதற்காக ஆங்கில-பிரெஞ்சு மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியக் கொள்ளையர் நம்மீது ''குற்றம் சாட்டுகின்றனர்.'' ''தமது'' சொந்த நாடுகளின் தொழிலாளர்கள் எம்பால் வெளிப்படுத்திய ஆதரவின் காரணமாக நடுநடுங்கும் அவர்கள், தொழிலாளர் அரசாங்கத்தை அவதூறு செய்யும் எத்தகைய வஞ்சகர்கள் எத்தகைய கயவர்கள்! அவர்களது போலித்தனம் அம்பலப்படுத்தப்படும். தொழிலாளர்களுக்கு எதிராக, உழைக்கும் மக்களுக்கு எதிராக ''சோஷலிஸ்டுகள்'' முதலாளி வர்க்கத்துடன் (அவர்களது சொந்த நாட்டு முதலாளி வர்க்கத்துடன் அல்லது வெளிநாட்டு முதலாளி வர்க்கத்துடன்) செய்து கொண்ட உடன்படிக்கைக்கும், தமது முதலாளி வர்க்கத்தைத் தோற்கடித்துவிட்ட தொழிலாளர்களின் பாதுகாப்புக்காக, ஒரு தேசிய சாயல் கொண்ட முதலாளி வர்க்கத்துடன் இன்னொரு தேசிய சாயல் கொண்ட முதலாளி வர்க்கத்திற்கு எதிராக, முதலாளித்துவ வர்க்கத்தினிடையேயுள்ள வெவ்வேறு குழுக்களிடையிலான

பகைமைகளைப் பாட்டாளி வர்க்கம் சாதகப்படுத்திக் கொள்வதற்காகச் செய்து கொள்ளும் உடன்படிக்கைக்கும் இடையிலான வேற்றுமையைக் காணுதது போல அவர்கள் பாசாங்கு செய்கிறுர்கள்.

ஒவ்வொரு ஐரோப்பியனும் இந்த வேற்றுமையை மிகவும் நன்ருகப் பார்க்கிருர் என்பது எதார்த்த உண்மை, அமெரிக்க மக்களுக்கு அவர்களது சொந்த வரலாற்றிலேயே இதற்கான, குறிப்பாயும் எடுப்பான ''உதாரணம்'' ஒன்று இருந்தது என்பதை இன்னும் ஒரு நொடியில் நான் காட்டுகிறேன். உடன்படிக்கைக்கு மேல் உடன்படிக்கைகள் உள்ளன; பிரெஞ்சுக்காரர்கள் கூறுவது போல fagots et fagots*.

உலகப் புரட்சி முழுமையாக முதிர்ச்சியடைவதற்கு முன்னுல் சர்வதேச ஒருமைப்பாட்டைச் சார்ந்து நின்ற, நிராயுதபாணியும் படைக்கலைப்புச் செய்ததுமான ருஷ்யாவை 1918 பிப்ரவரியில் ஜெர்மன் ஏகாதிபத்தியக் கொள்ளையர் தமது படைகளால் தாக்கிய பொழுது, பிரெஞ்சு முடியரசுவாதிகளுடன் ஓர் ''உடன்படிக்கை'' செய்து கொள்ள நான் சற்றும் தயங்கவில்லை. சொல்லில் போல்ஷிவிக்குகளிடம் பரிவும், செயலில் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்கு விசுவாசமும் பற்றுறுதியும் தோற்றுவித்த பிரெஞ்சு ராணுவ அதிகாரி கேப்டன் சதூல் என்னைக் காண பிரெஞ்சு அதிகாரி டி லுபெர்சாக்கை அழைத்து வந்தார். ''நான் ஒரு முடியரசுவாதி, எனது ஒரே நோக்கம் ஜெர்மனியின் தோல்வியை உறுதிசெய்வதே'' என்று டி லுபெர்சாக் என்னிடம் கூறினுர். ''அது சொல்லாமலே விளங்கும்'' [cela va sans dire] என்று நான் பதிலளித்தேன். ஆனுல் இது, ஜெர்மன் படையெடுப்பைத் தடங்கல் செய்யவும், ரயில்வேப் பாதைகளை வெடிவைத்துத் தகர்க்கவும், பிரெஞ்சு ராணுவ அதிகாரிகளான வெடிமருந்து சாதன நிபுணர்கள் நமக்குச் சில சேவைகள் புரிவது சம்பந்தமாக டி லுபெர்சாக்குடன் ஓர் ''உடன்படிக்கை'' செய்துகொள்வதிலிருந்து என்னைச் சிறிதளவும் தடுக்க

* வெட்டிக் கதைக்கு மேல் வெட்டிக் கதைகள்.—ப-ர்.

வில்லை. இது வர்க்க உணர்வுடைய ஒவ்வொரு தொழிலாளியும் ஏற்றுக்கொள்ளும் ''உடன்படிக்கைக்கு'' ஓர் உதாரணம், சோஷலிசத்தின் நலன்களுக்கு சாதகமான ஓர் உடன்படிக்கை. நாங்கள் ஒவ்வொருவரும் தமது ''கூட்டாளியை'' சுயவிருப்பத்தோடு தூக்கிலேற்றுவோம் என்பதை நாங்கள் அறிந்திருந்த போதிலும் பிரெஞ்சு முடியரசுவாதியும் நானும் கை குலுக்கினோம். சில காலத்திற்கு எங்கள் நலன்கள் தற்செயலாக இசைந்திருந்தன. முன்னேறிக் கொண்டு வந்த பேராசை வெறிபிடித்த ஜெர்மானியருக்கு எதிராக நாங்கள் ருஷ்யாவின் மற்றும் உலக சோஷலிசப் புரட்சியின் நலன்களுக்காக இதற்குச் சமமான பேராசை வெறிபிடித்த இதர ஏகாதிபத்தியவாதிகளின் எதிர் நலன்களைப் பயன்படுத்தினோம். இந்த வழியில் நாங்கள் ருஷ்யாவின் மற்றும் இதர நாடுகளின் தொழிலாளி வர்க்கத்தின் நலன்களுக்குப் பாடுபட்டோம்; உலக முழுதிலுமான பாட்டாளி வர்க்கத்தை வலுப்படுத்தினோம், முதலாளி வர்க்கத்தைப் பலவீனமாக்கினோம்; பல முன்னேற்றமடைந்த நாடுகளில் துரிதமாக முதிர்ச்சியடைந்து வரும் பாட்டாளி வர்க்கப் புரட்சி பூரணமாக முதிர்ச்சியடையும் தருணத்தை எதிர்நோக்கி மறைத்திட்டம், ஆதாரப் போர்த்தந்திரம், பின்வாங்குதல் என்று ஒவ்வொரு போரிலும் மிகவும் நியாயமாகவும் இன்றியமையாததாயும் இருக்கும் முறைகளை நாங்கள் கையாண்டோம்.

ஆங்கில-பிரெஞ்சு மற்றும் அமெரிக்கச் சுறுமீன்கள் ஆத்திரத்தால் எவ்வளவு தான் பொங்கிப்புகைந்தாலும் எவ்வளவுதான் அவர்கள் எம்மை அவதூறு செய்தாலும், வலதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள், மென்ஷிவிக் மற்றும் இதர சமூக-தேசபக்த செய்தித்தாள்களுக்கு லஞ்சமளிக்க எத்தனை கோடிகளை அவர்கள் செலவிட்டாலும், சரி, ஆங்கில-பிரெஞ்சுப் படைகள் ருஷ்யாவைத் தாக்குமானால் அவசிய நிலைமை ஏற்படுமானால் இதே போன்ற ஓர் ''உடன்படிக்கையை'' ஜெர்மன் ஏகாதிபத்தியக் கொள்ளையருடன் செய்து கொள்ள நான் ஒரு விநாடிகூடத் தயங்கமாட்டேன். எனது போர்த்தந்திரங்கள் ருஷ்யா, ஜெர்மனி, பிரான்ஸ், பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளின்—சுருங்கக் கூறின் நாகரிக உலகம்

முழுவதன்—வர்க்க உணர்வுடைய பாட்டாளி வர்க்கத்தால் ஒப்புக்கொள்ளப்படும் என்பதை நான் முற்றிலும் நன்ருக அறிவேன். இத்தகைய போர்த்தந்திரங்கள் சோஷலிசப் புரட்சியின் கடமைகளை எளிதாக்கும், அதனை விரைவுபடுத்தும், சர்வதேச முதலாளி வர்க்கத்தினைப் பலவீனமாக்கும், முதலாளி வர்க்கத்தை முறியடித்து வருகின்ற தொழிலாளி வர்க்கத்தின் நிலைகளை வலுப்படுத்தும்.

அமெரிக்க மக்கள் இந்தப் போர்த்தந்திரங்களை நெடுங் கால முன்பே (புரட்சிக்குச் சாதகமாகக்) கையாண்டார்கள். பிரிட்டிஷ் ஒடுக்குமுறையாளர்களை எதிர்த்து அவர்கள் தமது மாபெரும் விடுதலைப் போராட்டத்தை நடத்திய பொழுது, இப்பொழுது வட அமெரிக்காவின் ஐக்கிய நாடு என்று குறிப்பிடப்படுவதில் ஒரு பகுதியை உடைமையாக வைத்திருந்த பிரெஞ்சு மற்றும் ஸ்பானிய ஒடுக்குமுறையாளர்களும் அவர்களுக்கு எதிராக இருந்தார்கள். விடுதலைக்கான தமது கடினமான போரில் அமெரிக்க மக்கள் ஒடுக்குமுறையாளர்களைப் பலவீனமாக்கவும், ஒடுக்குமுறையை எதிர்த்துப் புரட்சிகரமான முறையில் போராடிக் கொண்டிருப்பவர்களை வலுப்படுத்தவும், ஒடுக்கப்பட்ட மக்கள் திரளின் நலன்களுக்குப் பாடுபடவும் வேண்டி சில ஒடுக்குமுறையாளர்களுடன் இதர ஒடுக்குமுறையாளர்களை எதிர்த்து ‘‘உடன்படிக்கைகள்’’ ஏற்படுத்திக் கொண்டார்கள். அமெரிக்க மக்கள் பிரெஞ்சுக்காரர்கள், ஸ்பெயின் நாட்டவர்கள் மற்றும் பிரிட்டிஷ்காரர்களுக்கு இடையிலான பூசல்களைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டார்கள், சில சமயங்களில் அவர்கள் பிரிட்டிஷ் ஒடுக்குமுறையாளர்களை எதிர்த்து பிரெஞ்சு மற்றும் ஸ்பானிய ஒடுக்குமுறையாளர்களின் படைகளுடன் கூட அக்கம் பக்கமாக நின்று போராடியிருக்கிருர்கள்; முதலில் அவர்கள் பிரிட்டிஷ்காரர்களைத் தோற்கடித்தார்கள், பிறகு (ஓரளவுக்கு மீட்புப் பணம் மூலம்) பிரெஞ்சுக்காரர்கள் மற்றும் ஸ்பெயின் நாட்டவர்களிடமிருந்து தம்மை விடுவித்துக் கொண்டார்கள்.

மாபெரும் ருஷ்யப் புரட்சியாளரான செர்னிஷேவ்ஸ்கி[79] வரலாற்று நடவடிக்கை நேவ்ஸ்கி நெடுஞ்சாலையின் நடை

பாதையல்ல என்று கூறினர். புரட்சி எளிதாகவும் இடர் இன்றியும் நடத்திச் செல்லப்படும், துவக்க முதலே பல்வேறு நாடுகளின் பாட்டாளிகளின் ஒன்றிணைந்த போராட்டம் இருக்கும், தோல்விகளுக்கு எதிராக உத்தரவாதமுண்டு, புரட்சியின் பாதை விரிவானதாய், தடங்கலற்றதாய், நேராக இருக்கும், வெற்றியை நோக்கி அணிவகுத்துச் செல்லும்போது சில சமயங்களில் மிகவும் கடுமையான உயிர்ச் சேதங்களை அடைய வேண்டி இருக்காது, ''முற்றுகையிடப்பட்ட கோட்டையில் காத்திருக்கவேண்டியிருக்காது'', மிகவும் குறுகலான, கடக்கமுடியாத, சுற்றிவளைத்த, அபாயகரமான மலைப் பாதைகளில் செல்ல வேண்டிய அவசியம் இருக்காது என்ற ''நிபந்தனைகள் மீது'' மட்டுமே ஒரு பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு ''ஒப்புதல்'' தருவேன் என்று எந்த ஒரு நபரும் இருந்தால் அவன் புரட்சியாளரல்ல, அத்தகைய நபர் முதலாளித்துவ அறிவுத் துறையினரின் பண்டிதப் பாணியிலிருந்து தன்னை இன்னும் விடுவித்துக் கொள்ளவில்லை; அத்தகைய நபர், நமது வலதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள், மென்ஷிவிக்குகள் ஏன் (சற்றே அரிதாகவாயினும்) இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள் போன்று எதிர்ப் புரட்சி முதலாளி வர்க்கத்தின் முகாமுக்குள் அடிக்கடி நழுவிச் செல்வதைக் காணலாம்.

முதலாளி வர்க்கத்தை எதிரொலிக்கும் இந்தக் கனவான்கள் புரட்சியினால் விளைந்த ''குழப்பம்'', தொழில் ''நாசம்'', வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் உணவுப் பற்றாக்குறை ஆகியவற்றுக்கு நம்மைக் குறைகூற விரும்புவார்கள். ஏகாதிபத்திய யுத்தத்தை வரவேற்று ஆதரித்தவர்கள், இந்தப் போரைத் தொடர்ந்து நடத்திய கேரென்ஸ்கியுடன் ''உடன்படிக்கை'' செய்துகொண்டவர்களிடமிருந்து வரும் இந்தக் குற்றச்சாட்டுகள் எவ்வளவு வஞ்சனையானவை! இந்த இன்னல்கள் அனைத்திற்கும் காரணம் இந்த ஏகாதிபத்திய யுத்தமே. போரினால் தோற்றுவிக்கப்பட்ட புரட்சி, நீண்ட நெடும், நாசகரமான, பிற்போக்குத்தனமான தேசங்களின் படுகொலையின் பின்விளைவான பயங்கர இடர்ப்பாடுகளையும் துன்பதுயரங்களையும் தவிர்த்திருக்க முடியாது. தொழில்

‘‘நாசம்’’ அல்லது ‘‘பயங்கரத்திற்கு’’ எம்மீது குற்றம் சாட்டுவது வஞ்சகம் அல்லது மடத்தனமான பண்டித பாணியாகும்; புரட்சி என்று அழைக்கப்படும் ஆக உயர்ந்த அளவுக்கு முனைப்பாக, மூர்க்கமான வர்க்கப் போராட்டம் எழுச்சியடைந்திருப்பதன் அடிப்படை நிலைமைகளைப் புரிந்து கொள்ள இயலாத தன்மையையே இது வெளிப்படுத்துகிறது.

இந்த மாதிரியான ‘‘குற்றம்’’சாட்டுவோர்’’ வர்க்கப் போராட்டத்தை ‘‘ஏற்றுகொண்டாலும்’’ கூட அவர்கள் சொல்லளவில் அந்த அங்கீகாரத்திற்கு வரம்பு கட்டிவிடுகின்றனர்; உண்மையில், பெரும்பாலும் வர்க்க ‘‘ஒத்துழைப்பு’’ மற்றும் ‘‘சமரசம்’’ என்ற அற்பவாதக் கற்பனைக்குள் நழுவிச் சென்று விடுகிறார்கள்; ஏனெனில் புரட்சிகர சகாப்தங்களில் வர்க்கப் போராட்டமானது தவிர்க்க வொண்ணாத வகையில் எப்போதும் ஒவ்வொரு நாட்டிலும் உள்நாட்டுப் போர் வடிவத்தை மேற்கொண்டது; மிகவும் கடுமையான நாசம், பயங்கரமுறை, போரின் நலனுக்காக இ சம்பிரதாயமான ஜன நாயகத்தைக் கட்டுப்படுத்தல் ஆகியவை இன்றி உள்நாட்டுப் போரைக் கருதிப்பார்க்க இயலாது. ‘‘வீட்டு’’, பேச்சு மேடை நாடாளுமன்ற சோஷலிஸ்டுகள் வடிவிலான கிறிஸ்துவ அல்லது ‘‘சமயச்சார்பற்ற’’ பசப்பும் சமய குருமார்கள் இந்த அவசியத்தைப் பார்க்க முடியாது, இதைப் புரிந்து கொள்ளவோ உணரவோ முடியாது. மனித குலத்தின் மாபெரும் பிரச்சினைகளுக்குப் போராட்டத்தாலும் மற்றும் போரினாலும் தீர்வு காணுமாறு வரலாறு கோருகிற ஒரு தருணத்தில் அதிகப்பட்ச ஆர்வத்தோடும் உறுதியுடனும் போராட்டத்தில் குதிக்காமல் இந்தக் காரணத்திற்காகப் புரட்சியைத் தவிர்த்து ஒதுக்குபவன் உயிர்ப்பற்ற ‘‘கூட்டில் அடைந்த மனிதன்’’ ஆவான்.

அமெரிக்க மக்களுக்கு ஒரு புரட்சிகரமான மரபு உண்டு; இதை அமெரிக்கப் பாட்டாளி வர்க்கத்தின் தலைசிறந்த பிரதிநிதிகள் சுவீகாரம் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் போல்ஷிவிக்குகளான எம்முடன் தமது பூரண ஒருமைப்பாட்டை மீண்டும் மீண்டும் பிரகடனம் செய்துள்ளனர். அந்த மரபே பதினெட்டாம் நூற்றாண்டில் பிரிட்டிஷ்காரர்களை

எதிர்த்து நடந்த விடுதலைப் போரும், பத்தொன்பதாம் நூற்ருண்டின் உள்நாட்டுப் போருமாகும். சில விஷயங்களில், தொழில்கள், தேசியப் பொருளாதாரத்தின் சில கிளைகளில் ஏற்பட்ட ''நாசத்தை'' மட்டும் கவனத்தில் எடுத்துக் கொள்வோமானுல், *1870*ல் அமெரிக்கா *1860*ஐ விடப் பின்னுல் இருந்தது. இந்தக் காரணங்களால் *1863—1865* அமெரிக்க உள்நாட்டுப் போரின் உலக வரலாற்று, முற்போக்கு, புரட்சிகர முக்கியத்துவத்தை எவரேனும் மறுத்தால் அவர் எத்தகைய புலமைப் பகட்டராய், எத்தகைய முட்டாளாக இருந்திருப்பார்!

நீக்ரோ அடிமைத்தனத்தை ஒழிப்பதற்காக, அடிமை உடைமையாளர் ஆட்சியை ஒழிப்பதற்காக, நீண்ட பல ஆண்டு காலம் உள்நாட்டுப் போரினூடே, ஒவ்வொரு போரையும் தொடர்ந்துவரும் எல்லையற்ற அழிவு சேதம் பயங்கரம் ஆகியவற்றினூடேயும் நாடு செல்ல அனுமதிக்கப்பட்டது பயனுள்ளதே என்பதை முதலாளி வர்க்கப் பிரதிநிதிகள் புரிந்து கொள்கிருர்கள். ஆனுல் இப்பொழுது அதை விடப் பெரிய கடமையான முதலாளித்துவ கூலியடிமைத்தனத்தை ஒழிக்கும், முதலாளி வர்க்க ஆட்சியை ஒழிக்கும் கடமையினை எதிரிட்டுள்ள சமயத்தில் முதலாளி வர்க்கத்தின் பிரதிநிதிகளும் ஆதரவாளர்களும், முதலாளி வர்க்கத்தால் அச்சுறுத்தப்பட்டுப் புரட்சியைத் தவிர்த்து ஒதுக்குகிற சீர்திருத்தவாத சோஷலிஸ்டுகளும் உள்நாட்டுப் போர் அவசியம் மற்றும் நியாயம் என்பதை புரிந்து கொள்ள முடியவில்லை, விரும்பவில்லை.

அமெரிக்கத் தொழிலாளர்கள் முதலாளி வர்க்கத்தைப் பின்பற்ற மாட்டார்கள். முதலாளி வர்க்கத்தை எதிர்த்து உள்நாட்டுப் போரை நடத்துவதில் அவர்கள் எங்களுடன் இருப்பார்கள். இது அவ்வாறுதான் இருக்கும் என்ற எனது திட நம்பிக்கையை உலகின் முழு வரலாறும் அமெரிக்கத் தொழிலாளர் இயக்கத்தின் வரலாறும் வலுப்படுத்துகின்றன. அமெரிக்கப் பாட்டாளி வர்க்கத்தின் மிகவும் அன்புக்குரிய தலைவருள் ஒருவரான யூஜின் டேப்சின் சொற்களை நான் நினைவு கூறுகிறேன். பகுத்தறிவுக்கு வேண்டுகோள் [*Appeal to Reason*][80]

என்ற பத்திரிகையில் 1915 இறுதியில் என்று நம்பு கிறேன் ''நான் எதற்காகப் போராட வேண்டும்'' என்ற கட்டுரையிலும் (இந்தக் கட்டுரையை சுவிட்சர்லாந்திலுள்ள பெர்னில் தொழிலாளர் பொதுக் கூட்டம் ஒன்றில் 1916ஆம் ஆண்டுத் துவக்கத்தில் மேற்கோள் காட்டினேன்) அவர் (டேப்ஸ்) இன்றைய கொலைகாரப் பிற்போக்குப் போருக்குக் கடனுதவிகள் வழங்குவதை ஆதரிப்பதை விடத் தாம் சுடப் படுவது மேல் என்ற கருத்தை வெளியிட்டார். ஒரே ஒரு புனிதமான போர், பாட்டாளி வர்க்கத்தின் நோக்கு நிலை யிலிருந்து நியாயமான போர், முதலாளிகளை எதிர்த்த போரே, மனித குலத்தைக் கூலியடிமைத்தனத்திலிருந்து விடு விக்கும் போரே என்பதை அவர் அறிந்திருந்தார்.

அமெரிக்கக் கோடீசுவரர்களின் தலைவரும் முதலாளித் துவச் சுறாமீன்களின் ஊழியருமான வில்சன், டேப்சைச் சிறை யில் தள்ளியது பற்றி நான் வியப்படையவில்லை. உண்மை யான சர்வதேசியவாதிகளிடம் புரட்சிகரப் பாட்டாளி வர்க் கத்தின் உண்மையான பிரதிநிதிகளிடம் முதலாளி வர்க்கம் கொடுமையாகவே இருக்கட்டும்! அவர்கள் எந்த அளவு அதிக மூர்க்கமாகவும் கொடுமையாகவும் இருக்கிறார்களோ அந்தளவுக்குப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வெற்றி நாள் மேலும் நெருங்கிவரும்.

எமது புரட்சியால் விளையும் நாசத்திற்காக நாம் குற்றஞ் சாட்டப்படுகிறோம்... குற்றம் சாட்டுவோர் யார்? முதலாளி வர்க்கத்தின் தாசர்கள்; இந்த முதலாளி வர்க்கம் தான் நாலாண்டுகால ஏகாதிபத்தியப் போரில் ஏறத்தாழ ஐரோப் பியக் கலாசாரம் முழுவதையும் அழித்து, ஐரோப்பாவைக் காட்டுமிராண்டித் தனத்துக்கும் வன்கொடுமைக்கும் பட்டி னிக்கும் இரையாக்கியது. இந்த முதலாளிகள், இந்த இடி பாடுகளின் மீது, கலாசாரத்தின் அழிவின் மீது, போரினால் விளைக்கப்பெற்ற அழிவு மற்றும் இடிபாடுகளினிடையேயோ, போரினால் வன்கொடுமைத்தன்மை பெற்ற மக்களுடனோ இப்போது நாம் ஒரு புரட்சியை நடத்தக் கூடாது என்று கோருகிறார்கள். இந்த முதலாளிகள் எவ்வளவு இரக்கமுள்ள வர்கள், எவ்வளவு நேர்மையுள்ளவர்கள்!

அவர்களது ஏவலாளர்கள் நாம் பயங்கரச் செயல்களில் ஈடுபடுவதாகக் குற்றம் சாட்டுகிறுர்கள்... பிரிட்டிஷ் முதலாளிகள் தமது 1649ஆம் ஆண்டையும் பிரெஞ்சு முதலாளிகள் தமது 1793ஆம் ஆண்டையும்[81] மறந்து விட்டார்கள். முதலாளிகள் நிலப்பிரபுத்துவத்திற்கு எதிராகத் தமது சொந்த நன்மைக்காகப் பயங்கரச் செயல்களைக் கையாண்டபொழுது அவை நீதியானவை, நியாயமானவை. ஆனுல் தொழிலாளர்களும் ஏழை விவசாயிகளும் இவற்றை முதலாளிகளுக்கு எதிராகப் பயன்படுத்தத் துணிந்தவுடன் இவை அட்டூழியமாகி விட்டன, குற்றகரமானதாகி விட்டன! சுரண்டும் ஒரு சிறுபான்மையினரை அகற்றி அந்த இடத்தில் வேறு ஒரு சுரண்டும் சிறுபான்மையினரை அமர்த்துவதற்குப் பயன்படுத்திய பயங்கரச் செயல்கள் நீதியானவை, நியாயமானவை. ஆனுல் எல்லாச் சுரண்டும் சிறுபான்மையினரையும் ஒழிக்கும் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டபொழுது, விரிவான உண்மையான பெரும்பான்மையினரின் நலன்களுக்காகப் பயன்படுத்தப்பட்டபொழுது, பாட்டாளி வர்க்கம், அரைப் பாட்டாளி வர்க்கம், தொழிலாளி வர்க்கம், ஏழை விவசாயிகளின் நலன்களுக்காகப் பயன்படுத்தப்பட்டபொழுது இந்தப் பயங்கரச் செயல்கள் அட்டூழியங்களாயின குற்றச்செயல்களாயின!

''அவர்களது'' யுத்தத்தில், உலகை ஆளப்போவது பிரிட்டிஷ் கொள்ளையரா அல்லது ஜெர்மன் கொள்ளையரா என்பதை முடிவு செய்வதற்கான யுத்தத்தில், சர்வதேச ஏகாதிபத்திய முதலாளிகள் ஒரு கோடி மனிதர்களைப் படுகொலை செய்தார்கள், இரண்டு கோடிப் பேர்களை முடமாக்கினுர்கள்.

எமது போரில், ஒடுக்குவோரையும் சுரண்டுவோரையும் எதிர்த்து ஒடுக்கப்படுவோரும் சுரண்டப்படுவோரும் நடத்திய போரில், எல்லா நாடுகளிலுமாக ஐந்து லட்சம் அல்லது பத்து லட்சம் உயிரிழப்புகள் எற்பட்டிருக்குமானுல், முதலாளிகள் முந்திய உயிரிழப்புகள் நியாயமானவை அதே பொழுதில் பிந்தியவை குற்றகரமானவை என்று கூறுவார்கள்.

பாட்டாளி வர்க்கத்திற்கு எடுத்துக் கூற இதற்கு முற்றிலும் வேறுபட்ட சில தகவல்கள் உள்ளன.

ஏகாதிபத்தியப் போரின் பயங்கரங்களுக்கிடையே, இப்போது பாட்டாளி வர்க்கம், எல்லாப் புரட்சிகளும் போதித்துள்ளதும் தொழிலாளர்களுக்கு அவர்களது சிறந்த ஆசான்களால், நவீன சோஷலிசத்தின் மூலவர்களால் மரபுரிமையாக விட்டுச் செல்லப்பட்டதுமான மாபெரும் உண்மையை மிகவும் தெளிவாகவும் எடுப்பாகவும் கற்றுக் கொள்கிறது. சுரண்டலாளர் எதிர்ப்பை நசுக்காமல் எந்தப் புரட்சியும் வெற்றிகரமாக நிறைவேருது என்பதே அந்த உண்மை. தொழிலாளர்களும் உழைக்கும் விவசாயிகளுமான நாம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய பொழுது சுரண்டுவோரின் எதிர்ப்பை நசுக்குவது எமது கடமையாகிவிட்டது. இதை நாம் செய்தோம், செய்து வருகிறேம் என்று நாம் பெருமைப் படுகிறேம். நாம் இதைப் போதிய உறுதியுடனும் தீர்மானமாகவும் செய்யவில்லை என்பது பற்றி வருந்துகிறேம்.

சோஷலிசப் புரட்சிக்கு முதலாளி வர்க்கத்திடமிருந்து எல்லா நாடுகளிலும் மூர்க்கமான எதிர்ப்பு தவிர்க்க முடியாதது என்பதையும் இந்த எதிர்ப்பு இந்தப் புரட்சியின் வளர்ச்சியோடு அதிகரிக்கும் என்பதையும் நாம் அறிவோம். பாட்டாளி வர்க்கம் இந்த எதிர்ப்பை நசுக்கும்; எதிர்க்கும் முதலாளி வர்க்கத்தை எதிர்த்த போராட்டத்தின் பொழுது அது இறுதியாக வெற்றிக்கும் ஆட்சி அதிகாரத்திற்குமாக முதிர்ச்சியடையும்.

ஊழல்பிடித்த முதலாளித்துவப் பத்திரிகைகள் எமது புரட்சி செய்கிற ஒவ்வொரு தவறையும் பற்றி உலக முழுதிற்கும் ஓலமிடட்டும். எமது தவறுகளைக் கண்டு நாங்கள் அஞ்சவில்லை. புரட்சி தொடங்கி விட்டது என்பதால் மக்கள் முனிவர்களாகி விடவில்லை. பல நூற்றுண்டுகளாக ஒடுக்கப்பட்டு, மிதித்துத் துவைக்கப்பட்டு, வறுமை, கொடுமை, அறியாமையினுல் பலவந்தமாகப் பீடிக்கப்பட்டிருந்த உழைப்பாளி வர்க்கங்கள் ஒரு புரட்சியை நடத்தும் போது தவறுகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. மேலும் நான் முன்பே ஒரு முறை சுட்டிக்காட்டியிருந்தது போன்று முதலாளித்துவ

சமுதாயம் என்ற பிணத்தை ஒரு சவப்பட்டியில் ஆணியறைந்து புதைத்துவிட முடியாது. முதலாளித்துவப் பிணம் அழுகிப்போய் நம்மிடையே சிதைவுற்று, காற்றைத் தூய்மை கெடுத்தும், எமது வாழ்க்கையில் நச்சூட்டியும் வருகிறது; பழமையானதும் அழிந்துவருவதும் அழுகிப்போனதுமான ஆயிரக் கணக்கான இழைகள் மற்றும் தளைகளில் புதியதும் பசுமையானதும் இளமையானதும் வீரியம் மிக்கதும் ஆனவற்றைச் சிக்குறச் செய்கிறது.

எதைப் பற்றி முதலாளி வர்க்கமும் அதன் அடிவருடிகளும் (நமது சொந்த வலதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள் மற்றும் மென்ஷிவிக்குகள் உட்பட) உலகம் முழுதுக்கும் கூக்குரலிடுகிறார்களோ, நாம் புரியும் ஒவ்வொரு நூறு தவறுகளுக்கும் 10,000 மாபெரும் வீரஞ்செறிந்த செயல்கள் புரியப்படுகின்றன. அவை மேலும் மகத்தானவை மேலும் வீரஞ்செறிந்தவை, காரணம் அவை ஒரு தொழில் மாவட்டம் அல்லது தொலைவிலுள்ள கிராமத்தில் அன்றாட வாழ்க்கையினிடையே எளிமையாயும் ஒதுக்கமாயும் நடைபெறுபவை. தமது வெற்றிகளைப் பற்றி உலக முழுதிற்கும் கூக்குரலிட்டுக் கூறும் (அதற்கான வாய்ப்பில்லாத) வழக்கமில்லாத மக்களால் புரியப்பட்டவை.

இதற்கு நேர்மாறான நிலைமை உண்மையில் ஏற்படினும் சரி—அவ்வாறு கருதுவது தவறு என்பதை நான் அறிவேன்—நாம் புரிந்த 100 சரியான செயல்களுக்கு நாம் 10,000 தவறுகளைச் செய்தாலுங்கூட, அப்படியிருந்தாலுங்கூட நமது புரட்சி மகத்தானதாயும் வெல்லற்கரியதாகவும் இருக்க வேண்டும், உலக வரலாற்றின் பார்வையிலும் அவ்வாறே நிச்சயமாக இருக்கும்; காரணம் முதல் தடவையாகச் சிறுபான்மையோரல்ல, செல்வந்தர் மட்டுமல்ல, கல்விகற்றவர்கள் மட்டுமல்ல, ஆனால் உண்மையான மக்கட்திரள், விரிவான பெரும்பான்மையான உழைப்பாளி மக்கள் தாமே புதிய வாழ்க்கையைக் கட்டி வருகின்றனர், தமது சொந்த அனுபவம் மூலம் சோஷலிச கட்டுமானத்தின் மிகவும் கடினமான பிரச்சினைகளைத் தீர்த்துவருகிறார்கள்.

இத்தகைய பணியின் போக்கில் இழைக்கப்படும் ஒவ்

வொரு தவறும் தமது முழு வாழ்வையும் மறு அமைப்புச் செய்து கொள்வதிலான பல லட்சக் கணக்கான சாமான்யத் தொழிலாளர் மற்றும் விவசாயிகளின் இந்த மிகவும் கடமையுணர்வும் முனைப்பார்வமும் கொண்ட இந்தப் பணியின் போக்கில் இத்தகைய ஒவ்வொரு தவறும் சுரண்டும் சிறுபான்மையினர் அடையும் ''குறையில்லாத'' ஆயிரம் லட்சம் வெற்றிகளைக் காட்டிலும்—அவர்கள் உழைக்கும் மக்களை மோசடிசெய்து ஏமாற்றுவதில் அடையும் வெற்றிகளைவிடவும்—சால மதிப்புடையதாகும். ஏனெனில் இத்தகைய தவறுகள் மூலமே தொழிலாளர்களும் விவசாயிகளும் ஒரு புது வாழ்வை நிர்மாணிக்கக் கற்றுக் கொள்வார்கள்; முதலாளிகள் இல்லாமல் வாழக் கற்றுக் கொள்வார்கள்; இந்த வழியில் மட்டுமே அவர்கள்—ஆயிரக் கணக்கான தடைகளின் ஊடே—வெற்றிகரமான சோஷலிசத்தை நோக்கித் தமக்கென ஒரு பாதையை வகுத்துக் கொள்வார்கள்.

அவர்களது புரட்சிகரப் பணிகளின் போக்கில் நமது விவசாயிகளால் தவறுகள் செய்யப்படுகின்றன, ஆனால் இவர்கள் ஒரே அடியாக 1917 அக்டோபர் 25-26 (பழைய பாணி) ஒரே இரவில் நிலத்தில் தனியுடைமையை முற்றாக ஒழித்துவிட்டார்கள், இப்போது மாதத்திற்கு மாதம் மிகப் பெரிய இடர்ப்பாடுகளை வென்று சமாளித்து, தமது தவறுகளைத் தாமே திருத்திக் கொண்டு, பொருளாதார வாழ்வில் புதிய நிலைமைகளை அமைத்தல், குலாக்குகளை எதிர்த்துப் போராடுதல், உழைக்கும் மக்களுக்கு (செல்வந்தருக்கு அல்ல) நிலம் வழங்குதல், கம்யூனிஸ்டு பெருவீத விவசாயத்திற்கு மாறிச் செல்லுதல் போன்ற மிகவும் கடினமான கடமைகளுக்குப் பயன்தரும் வழியில் தீர்வு காண்கிறார்கள்.

அவர்களது புரட்சிகரப் பணிகளின் போக்கில் நமது தொழிலாளர்களால் தவறுகள் செய்யப்படுகின்றன, ஆனால் அவர்கள் ஏற்கெனவே சில மாதங்களுக்குப் பிறகு ஏறத்தாழ எல்லா ஆகப்பெரிய ஆலைகளையும் தொழிற்சாலைகளையும் தேசவுடைமையாக்கிவிட்டார்கள், கடினமான அன்றாட வேலை மூலம் தொழில்களின் முழுப் பிரிவுகளையும் நிர்வாகம் செய்யும் புதிய கடமையைக் கற்றுக் கொண்டு இருக்கிறார்கள்; தேச

வுடைமையாக்கப்பட்ட நிறுவனங்களைச் செயல்பட வைத்திருக்கிறார்கள்; சோம்பலின் வலிமை மிக்க எதிர்ப்பு, குட்டிமுதலாளித்துவ மனப்பாங்கு தன்னலம் ஆகியவற்றை வென்று அகற்றி, புதிய சமூக உறவுகள், புதிய உழைப்புக் கட்டுப்பாடு, உறுப்பினர்கள் மீது தொழிலாளர் தொழிற்சங்கங்களின் புதிய செல்வாக்கு ஆகியவற்றுக்கான அடித்தளத்தை செங்கலுக்கு மேல் செங்கலாகக் கட்டி வருகிறார்கள்.

1905ஆம் ஆண்டிலேயே மக்களின் வலிமைமிகுந்த எழுச்சியால் படைக்கப்பெற்ற நமது சோவியத்துகள் அவற்றின் புரட்சிகரப் பணிகளின் போக்கில் தவறுகள் செய்கின்றன. தொழிலாளர் விவசாயிகளின் சோவியத்துகள் ஒரு புது மாதிரி அரசாகும், ஒரு புதிய உயர் மாதிரி ஜனநாயகம், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் ஒரு வடிவம், முதலாளி வர்க்கம் இல்லாமலும் முதலாளி வர்க்கத்திற்கு எதிராகவும் அரசாங்கத்தை நிர்வாகம் செய்யும் ஒரு சாதனம். முதல் தடவையாக இங்கு ஜனநாயகம் மக்கட்திரளுக்கு, உழைக்கும் மக்களுக்குச் சேவை செய்கிறது. ஆக ஜனநாயகமானது என்று கருதப்படும் எல்லா முதலாளித்துவக் குடியரசுகளிலும் கூட இன்னும் இருப்பது போன்று செல்வந்தருக்கான ஜனநாயகம் என்ற நிலை இங்கு போய்விட்டது. முதல் தடவையாக பத்துக் கோடிப் பேர் ஈடுபடுத்தப்படும் அளவிற்குப் பாட்டாளி வர்க்க மற்றும் அரைப்பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தைச் செயலாக்கும் பிரச்சினையுடன் மக்கள் மல்லாடிக் கொண்டிருக்கிறார்கள்,—இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவிட்டால் சோஷலிசம் குறித்துப் பேசவே முடியாது.

புலமைப் பகட்டர்களும் அல்லது முதலாளித்துவ-ஜனநாயகம் அல்லது நாடாளுமன்றத் தப்பெண்ணங்கள் திருத்த முடியாத அளவுக்குத் திணிக்கப்பட்ட மனங்களைக் கொண்ட மக்கள், எமது சோவியத்துகளின் உறுப்பினர்களைப் பற்றியும் உதாரணமாக, நேரடித் தேர்தல் இல்லாதது பற்றியும் குழம்பிப் போய் மறுப்புத் தெரிவிக்கிறார்கள். இந்தப் பேர்வழிகள் 1914—1918ஆம் ஆண்டுகளின் மாபெரும் எழுச்சிகளின் காலகட்டத்திலிருந்து எதையும் மறக்கவில்லை, எதை

யும் கற்றுக்கொள்ளவில்லை. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை உழைக்கும் மக்களுக்கான புதிய ஜனநாயகத்துடன் இணைப்பது,—உள்நாட்டுப் போரை அரசியலில் மக்கள் ஆகவிரிவான முறையில் பங்குபற்றுவதோடு இணைப்பது,—இத்தகைய இணைப்பை ஒரேயடியாகக் கொண்டுவர முடியாது; மேலும் இது நைந்துபோன மாமூல் நாடாளுமன்ற ஜனநாயகத்தோடு பொருந்துவதும் அல்ல. ஒரு புதிய உலகத்தின், சோஷலிச உலகத்தின் பொதுத் தோற்றம் சோவியத் குடியரசின் உருவில் எம்முன் எழுந்து வருகிறது. இந்த உலகம் தயார் நிலையில் இருந்து உருவான ஒன்றல்ல, ஜூபிடரின் தலையிலிருந்து உதித்தெழுந்த மினர்வா போல எழுவதல்ல[82] என்பதில் வியப்புக்கு இடமில்லை.

பழைய முதலாளித்துவ-ஜனநாயக அரசியல் அமைப்புச் சட்டங்கள் சம்பிரதாயமான சமத்துவம், கூட்டம் கூடும் உரிமை பற்றிச் சொல்வன்மையுடன் அளந்தன; ஆனால் நமது பாட்டாளி வர்க்கத்தின், விவசாயிகளின், சோவியத் அரசியல் அமைப்புச் சட்டம் சம்பிரதாய சமத்துவம் என்ற போலித்தனத்தை அகற்றி எறிந்துவிட்டது. முதலாளித்துவக் குடியரசுவாதிகள் அரசு பீடங்களைக் கவிழ்த்த பொழுது அவர்கள் முடியரசுவாதிகளுக்கும் குடியரசுவாதிகளுக்கும் இடையிலான சம்பிரதாய சமத்துவம் பற்றிக் கவலைப்படவில்லை. முதலாளித்துவ வர்க்கத்தை ஒழித்துக் கட்டும் விஷயத்தில் துரோகிகள் அல்லது முட்டாள்கள் மட்டுமே முதலாளி வர்க்கத்திற்கு சம்பிரதாய சமத்துவம் வேண்டும் என்று கோர முடியும். சிறந்த கட்டிடங்கள் முதலாளித்துவ வர்க்கத்திற்குச் சொந்தமாக இருக்கும் பொழுது தொழிலாளர் மற்றும் விவசாயிகளுக்குக் ''கூட்டம் கூடும் சுதந்திரம்'' என்பது ஒரு செப்புக் காசின் மதிப்புக் கூடப் பெறாது. எமது சோவியத்துகள் செல்வந்தர்களிடமிருந்து நகரத்திலும் கிராமத்திலும் இருந்த சிறந்த கட்டிடங்களைப் பறிமுதல் செய்து அவை அனைத்தையும் தொழிலாளர், விவசாயிகளுக்கு அவர்களது சங்கங்களுக்கும் கூட்டங்களுக்குமாக உடைமை மாற்றியளித்துள்ளன. இது உழைக்கும் மக்களுக்கான எமது கூட்டம் கூடும் சுதந்திரமாகும்! இதுவே எமது சோவியத்தின்

எமது சோஷலிச அரசியல் அமைப்புச் சட்டத்தின் பொருளும் உள்ளடக்கமுமாகும்!

இதனுல்தான் நாங்கள் அனைவரும் இன்னும் என்ன இன்னல்கள் எதிர்காலத்தில் உற்றபோதிலும் எமது சோவியத் குடியரசு வெல்லற்கரியது என்பதில் உறுதியாக நம்பிக்கை கொண்டிருக்கிறோம்.

அது வெல்லற்கரியது, காரணம் வெறிபிடித்த ஏகாதிபத்தியவாதிகளின் ஒவ்வொரு தாக்குதலும், சர்வதேச முதலாளி வர்க்கம் எம்மீது சுமத்தும் ஒவ்வொரு தோல்வியும், தொழிலாளர் மற்றும் விவசாயிகளின் மேலும் மேலும் அதிகமான பகுதிகளைப் போராட்டத்தில் எழுச்சியுறும்படிச் செய்கின்றன, அளப்பரிய தியாகம் செய்து அவர்கள் படிப்பினை பெற உதவுகின்றன, அவர்களை உருக்குப் போல உறுதிப்படுத்தி மிகவும் பரந்த அளவில் புதிய செயல்வீரத்தைத் தோற்றுவிக்கின்றன.

அமெரிக்கத் தொழிலாளர் தோழர்களே, உங்களிடமிருந்து உதவி விரைவில் வராது இருக்கலாம் என்பதை நாங்கள் அறிவோம், ஏனெனில் புரட்சி வெவ்வேறு நாடுகளில், வெவ்வேறு வடிவங்களில், வெவ்வேறு உணர்ச்சி வேகத்தில் (வேறு வகையில் இருக்க முடியாது) வளர்ச்சியடைந்து வருகிறது. ஐரோப்பியப் பாட்டாளி வர்க்கப் புரட்சி அண்மைக் காலத்தில் மிகவும் விரைவாக முதிர்ச்சியடைந்து வந்தபொழுதிலும், அது அடுத்த சில வாரங்களுக்குள் வெடிக்காமற் போகலாம். நாம் உலகப் புரட்சியின் தவிர்க்கவொண்ணுத் தன்மையில் நம்பிக்கை வைத்திருக்கிறோம், ஆனுல் இந்தப் புரட்சி தவிர்க்கவொண்ணுத வகையில் ஒரு நிர்ணயமான குறுகிய கால அளவில் வரும் என்று நம்பும் அளவுக்கு நாம் அத்தகைய முட்டாள்கள் என்று இதனுல் அர்த்தமல்ல. எமது நாட்டில் 1905 மற்றும் 1917ஆம் ஆண்டுகளில் இரண்டு மாபெரும் புரட்சிகளை நாம் கண்டிருக்கிறோம், புரட்சிகள் உத்தரவு போடப்பட்டோ உடன்படிக்கை மூலமோ நடப்பனவல்ல என்பதை நாம் அறிவோம். சோஷலிசப் பாட்டாளி வர்க்கத்தின் எமது ருஷ்யப் படைப் பிரிவை முன்னணிக்குக் கொண்டுவந்தது சூழ்நிலையேயாகும், அதற்குக் காரணம்

ருஷ்யாவின் விதிவிலக்கான பின்தங்கிய தன்மை என்பதையும், எமது திறன்கள் காரணமல்ல என்பதையும் உலகப் புரட்சி வெடிப்பதற்கு முன்னுல் பல தனிப் புரட்சிகள் தோற்கடிக்கப்படலாம் என்பதையும் நாங்கள் அறிவோம்.

இருப்பினும் நாம் வெல்லற்கரியவர்கள் என்பதை உறுதியாக நம்புகிறோம், காரணம் மனித குலத்தின் உணர்ச்சியினை ஏகாதிபத்தியப் படுகொலையால் தகர்க்க முடியாது. மனித குலம் அதை முறியடிக்கும். ஏகாதிபத்திய யுத்தத்தின் குற்றவாளித்தளைகளைத் தகர்த்த முதல் நாடு எமது நாடாகும். இந்தத் தளைகளை உடைப்பதற்கான போராட்டத்தில் நாம் மிகப் பெரும் துயரார்ந்த உயிர்ச்சேதங்களை அடைய நேர்ந்தது. எனினும் அவற்றை நாம் உடைத்தோம். ஏகாதிபத்திய சார்புத்தன்மையிலிருந்து நாம் சுதந்திரமாகியுள்ளோம், நாம் உலகம் முழுவதும் காணும்படி ஏகாதிபத்தியத்தைப் பூரணமாக அழித்தொழிக்கும் போராட்டத்தின் பதாகையினை உயர்த்தியுள்ளோம்.

நாம் முற்றுகையிடப்பட்ட கோட்டையினுள் இருப்பது போலத் தற்போது உள்ளோம், உலக சோஷலிசப் புரட்சியின் இதர படைப்பிரிவுகள் நமக்கு உதவிக்குவரும் என்று காத்துக் கொண்டிருக்கிறோம். இந்தப் படைப் பிரிவுகள் இருக்கின்றன, அவை எம்முடையவற்றைக் காட்டிலும் எண்ணிக்கையில் அதிகமானவை, ஏகாதிபத்தியத்தின் அட்டூழியங்கள் எந்தளவு நீடித்துத் தொடர்கின்றனவோ, அந்தளவுக்கு அப்படைப் பிரிவுகள் முதிர்ச்சியுற்று, வளர்ந்து மேலும் அதிக வலுவடைந்து வருகின்றன. தொழிலாளர்கள் தமது சமூகத்-துரோகிகளான கோம்பர்ஸ்கள், ஹெண்டர்சன்கள், ரெனெடேல்கள், ஷெய்டெமன்கள் மற்றும் ரென்னர்களிடமிருந்து விலகிக் கொண்டு விட்டார்கள். தொழிலாளர்கள் மெதுவாக, ஆனுல் உறுதியாக கம்யூனிஸ்டு, போல்ஷிவிக் போர்த்தந்திரங்களைப் பொருத்தமாகத் தழுவிப் பாட்டாளி வர்க்கப் புரட்சியை நோக்கி அணிவகுத்து முன்செல்கிறுர்கள்; அது மட்டுமே அழிந்து வரும் கலாசாரத்தை, அழிந்துவரும் மனித குலத்தைக் காப்பாற்றும் ஆற்றலுடையதாகும்.

சுருங்கக் கூறின் நாம் வெல்லற்கரியவர்கள், காரணம் உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சி வெல்லற்கரியது.

ஆகஸ்ட் 20, 1918 நி. லெனின்

பிராவ்தா, இதழ் *178*, ஆகஸ்ட் *22*, *1918*

நூல் திரட்டு, தொகுதி *37*, பக்கங்கள் *48-64*

அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி, மாஸ்கோ சோவியத், ஆலை மற்றும் தொழிற்சாலைக் கமிட்டிகள், தொழிற்சங்கங்களின் கூட்டு அமர்வு

அக்டோபர் 22, 1918[83]

தீர்மானம்

ஏகாதிபத்தியப் போரை எதிர்த்த பாட்டாளிகள் விவசாயிகளின் புரட்சிகர இயக்கம், அண்மையில் எல்லா நாடுகளிலும், பால்கன் நாடுகள், ஆஸ்திரியா மற்றும் ஜெர்மனியில் முனைப்பாயும் பிரம்மாண்டமான வெற்றிகளை அடைந்துள்ளது. இந்த வெற்றிகள் ஆங்கில-அமெரிக்க, பிரெஞ்சு முதலாளித்துவ வர்க்கத்தால் தலைமை தாங்கப்படும் சர்வதேச முதலாளித்துவ வர்க்கத்தை குறிப்பாயும் பகைமை கொள்ளச் செய்துள்ளன. புரட்சியை நசுக்குவதற்கு எல்லாவற்றுக்கும் மேலாக தற்போது புரட்சியின் பிரதான வெங்களமாக விளங்கும் ருஷ்யாவில் நிலவும் சோவியத் ஆட்சி அதிகாரத்தை நசுக்குவதற்குத் தம்மைத் தாமே ஒரு எதிர்ப் புரட்சி சக்தியாக ஒழுங்கமைத்துக் கொள்ள அவசர முயற்சிகள் செய்யுமாறு கட்டாயப்படுத்தியுள்ளன.

போரில் தோற்கடிக்கப்பட்டதும், வலிமை மிக்க புரட்சிகர இயக்கத்தால் உள்நாட்டில் அச்சுறுத்தப்பெறுவதுமான ஜெர்மன் முதலாளித்துவ வர்க்கமும் ஜெர்மன் அரசாங்கமும், தமது விமோசனத்திற்கான தேட்டத்தில் துவைந்து கிடக்கின்றன. ஜெர்மனியின் ஆளும் வட்டங்களில் ஒரு போக்கினர், தாமதிப்பதன் மூலம் பனிக்காலத்திற்கு முன்பு அவகாசம் பெற்று, புது வழியிலான அரண் அமைப்புகள் மீது நாட்டின் ராணுவத் தற்காப்புக்குத் தயார் செய்யலாம் என்று இன்னும் நம்பிக்கை வைத்துள்ளனர். இன்னொரு போக்கினர் புரட்சிகரப் பாட்டாளிகள் போல்ஷிவிக்குகளுக்கு எதிராக ஆங்கில-பிரெஞ்சு முதலாளித்துவ வர்க்கத்தாருடன் ஜுரவேகத்தில் உடன்பாட்டை நாடுகின்றனர். வெற்றியா

ளர்களான ஆங்கில-பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளிடம் பேரம் செய்யும் போதில் அவர்கள் மொத்தமாக மறுத்து விடுவதால், போல்ஷிவிக் அபாயம் குறித்து அவர்களைப் பீதிப் படுத்தவும், போல்ஷிவிக்குகளுக்கு எதிராகவும் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு எதிராகவும் சேவை புரிய முன்வருவதாக வாக்களித்து அவர்களை வசப்படுத்தவும் முயல்கின்றனர் இப் போக்கினர்.

ஜெர்மனியால் கீழடக்கப்பட்ட அல்லது பற்றுடல் செய்யப்பட்ட நாடுகளின் முதலாளித்துவ வர்க்கத்தினர் ஆன் டான்டுடன்[84] மேலும் ஆவலுடன் உடன்பாட்டை நாடுகின்ற னர். குறிப்பாயும் அந்த இடங்களில் உதாரணமாக பின்லாந்து மற்றும் உக்ரேன் போன்றவை விஷயத்தில் இவ்வாறு செய் கின்றனர். அங்கெல்லாம் அன்னியப் படை உதவி இன்றி சுரண்டப்படும் உழைக்கும் மக்கள் மீது ஆட்சி அதிகாரத் தைக் கட்டிக் காப்பது முற்றிலும் சாத்தியமல்ல என்பதை அவர்கள் அறிவார்கள்.

அந்த சந்தர்ப்ப சூழல்கள் காரணமாக சோவியத் ஆட்சி அதிகாரம் பின்வரும் தனி இயல்பான நிலைமையில் இருக்கக் காண்கிறது: ஒரு புறம், இப்போது நாம் இருப்பது போன்று சர்வதேசப் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு இவ்வளவு அரு காமையில் நாம் முன்பு என்றுமே இருந்ததில்லை என்ற நிலை; மறு புறம் இப்போது இருப்பது போன்று இத்தகைய ஓர் இன்னல் மிகுந்த நிலையில் நாம் முன்பு என்றுமே இருந்த தில்லை. ஒருவரை ஒருவர் கபளிகரம் செய்தும் பலவீனப்படுத் தியும் வரும் இரண்டு தோராயமான சமமான ஏகாதிபத் தியக் கொள்ளையர் கோஷ்டிகள் என்பவை இனிமேல் கிடை யாது. உலகம் முழுவதையும் ஏகாதிபத்தியவாதிகள் இடையே பங்கு போட்டுக் கொள்ளும் உத்தேசம் கொண்ட வெற்றியாளர்களின் தனி ஒரு கோஷ்டியான ஆங்கில-பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளே உள்ளனர். அது, எப்பாடுபட்டும் ருஷ்யாவில் சோவியத் ஆட்சி அதிகாரத்தை வீழ்த்தி அத னிடத்தில் முதலாளித்துவ ஆட்சி அதிகாரத்தை மீண்டும் நிலைநாட்ட எண்ணுகிறது. ருஷ்யாவை தென் பக்கத்தில் இருந்து டார்டனல்ஸ் மற்றும் கருங்கடல் வழியாகவோ

அல்லது பல்கேரியா மற்றும் ருமேனியாவின் வழியாகவோ இப்போது தாக்குவதற்குத் தயார் செய்து வருகிறது. மேலும் ஜெர்மன் அரசாங்கம் தம்முடன் நேரடியாகவோ அல்லது குறிப்புணர்த்தியோ ஏற்படும் ஓர் உடன்பாடு மூலம் ஆங்கில-பிரெஞ்சு துருப்புகள் உக்ரேனைக் கவர்ந்து பற்றிய பிறகு மட்டுமே, உக்ரேனில் இருந்து அதன் துருப்புக்களை விலக்கிக் கொள்ளும் எனவும், அதன் மூலம், மற்றபடி தவிர்க்க முடியாததாகிவிடும் உக்ரேனிய தொழிலாளர் விவசாயிகள் வெற்றியையும், அவர்கள் உக்ரேனிய தொழிலாளர், விவசாயிகள் அரசாங்கம் நிறுவுவதையும் அனுமதிக்கக் கூடாது எனவும் ஆங்கில-பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளில் குறைந்த பட்சம் ஒரு பகுதியினர் தெளிவாயும் நம்பி வருகின்றனர்.

கிரஸ்னேவ் மற்றும் வெண்காவலர் எதிர்ப்புரட்சியாளர் பின்னல், அவர்களை விடவும் மிக அதிக அபாயகரமான சக்தி, சர்வதேச எதிர்ப்புரட்சி முதலாளித்துவ வர்க்கத்தினர் சக்தி, அதிலும் முதன்மையாக ஆங்கில, அமெரிக்க மற்றும் பிரெஞ்சு முதலாளித்துவ வர்க்கத்தினருடன் சேர்ந்து எமக்கு எதிராகத் தாக்குதல் தொடுக்கத் தயாரிப்புகள் செய்து வருகிறது. இந்த உண்மை எல்லா இடங்களிலும் உணரப்படவில்லை, இதைப் பற்றிய உணர்வு தொழிலாளர் விவசாயிகளின் விரிவான திரள்களின் மத்தியில் ஆழமாக ஊடுருவவில்லை. எனவே இந்த உணர்வை நாம் மக்களுக்கு ஊட்டச் சோர்வின்றிச் செயல்பட வேண்டும். தெற்குப் போர் முனையை வலுப்படுத்தவும்; இப்போது நம்மிடம் இருப்பதை விடவும் ஒப்பிடற்கரியதான அதிக வலுவுள்ள செஞ்சேனையை நிறுவி அதனை ஆயுதபாணி ஆக்குவதில் விடா முயற்சியான கவனம் செலுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு தொழிலாளர் அமைப்பும், ஏழை விவசாயிகளின் ஒவ்வொரு சங்கமும், ஒவ்வொரு சோவியத் நிறுவனமும் சேனையை வலுப்படுத்தும் பிரச்சினைக்கு மீண்டும் மீண்டும் முதலிடம் அளிக்க வேண்டும். அதோடு நாம் செய்துள்ள பணி போதுமா என்பதையும், என்ன புதிய நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள முடியும், மேற்கொள்ள வேண்டும் என்பதையும் திரும்பத்திரும்ப மறு பரிசீலனை செய்தல் வேண்டும்.

நமது தொழிலாளர்கள் விவசாயிகளின் மனப்பாங்கில் குறிப்பிடத்தக்க ஒரு மாறுதல் ஏற்பட்டுள்ளது. மக்கள் தமது மோசமான போர்க்களைப்பினை வென்று சமாளித்து விட்டார்கள். ஒரு சேனை உருவாக்கப்படுகிறது, உருவாக்கப்பட்டு விட்டது. உழைக்கும் மக்களின் ஒரு புதிய கம்யூனிஸ்டுக் கட்டுப்பாடு, ஒரு வர்க்க உணர்வுடைய கட்டுப்பாடு வளர்ந்துள்ளது. இந்த மெய் விவரம், நாம் நமது சோஷலிஸ்டுத் தாயகத்தைப் பாதுகாக்க முடியும், நிச்சயம் பாதுகாப்போம், சர்வதேசப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் வெற்றியை அடைய முடியும் என்று நம்பிக்கையுடன் எதிர்பார்ப்பதற்கான சகல முகாந்தரங்களையும் தருகிறது.

அ.ரு.ம.நி.க. இஸ்வேஸ்தியா, இதழ் *231*, அக்டோபர் *23*ம் தேதி, *1918*

நூல் திரட்டு, தொகுதி *37*, பக்கங்கள் *126-128*

பித்திரீம் சரோக்கினின் பயனுள்ள ஒப்புதல்கள்

இன்றைய பிராவ்தா[85] பித்திரீம் சரோக்கின் எழுதி யுள்ள சிறப்பான, சுவையான கடிதத்தை வெளியிட்டுள்ளது. இது எல்லாக் கம்யூனிஸ்டுகளின் விசேஷ கவனத்துக்குக் கொண்டுவரப்பட வேண்டும். இந்தக் கடிதம் முதலில் வடக்கு திவின நிர்வாகக் கமிட்டியின் இஸ்வேஸ்தியாவில்[86] வெளி யிடப்பட்டது. இதில் பித்திரீம் சரோக்கின் வலதுசாரி சோஷ லிஸ்டுப் புரட்சியாளர் கட்சியில் இருந்து தாம் விலகுவதா யும் அரசியல் நிர்ணய சபையில் உள்ள தனது ஸ்தானத்தைத் துறந்து விடுவதாயும் அறிவிக்கிறார். மற்றவர்களுக்கு மட்டு மன்றித் தமக்கே கூட உறுதியான அரசியல் வழிமுறைகளை வழங்குவது கடினமாக இருப்பதாயும், எனவே அவர் ''அரசி யலில் இருந்து முற்றாக விலகிக் கொள்வதாயும்'' அவர் தமது இச்செயலுக்கான காரணத்தை விளக்குகிறார். அவர் எழுதுவதாவது: ''புரட்சியின் கடந்த ஆண்டு ஓர் உண்மை யினை எனக்குப் போதித்தது: அரசியல்வாதிகள் பிழைகள் செய்யலாம், அரசியல் சமூக ரீதியில் பயனுடையதாக இருக்க லாம், சமூக ரீதியில் தீங்குவிளைப்பதாகவும் இருக்கலாம், அப் படி இருக்க விஞ்ஞான கல்விப் பணி எப்போதும் பயனுடை யது எப்போதும் மக்களுக்குத் தேவைப்படுவது....'' இந்தக் கடிதத்தில் கையொப்பம் இட்டிருப்பதாவது: ''பித்திரீம் சரோக்கின் செயின்ட் பீட்டர்ஸ்பார்க் பல்கலைக்கழகம் மற்றும் உளவியல்-நரம்பியல் கல்லூரி விரிவுரையாளர், அரசி யல் நிர்ணய சபையின் முன்னாள் உறுப்பினர், சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கட்சியின் முன்னாள் அங்கத்தினர்.''

இந்தக் கடிதம் குறிப்பிடத் தகுதிவாய்ந்த ஒன்று. காரணம், முதலாவதாயும் இது மிகவும் சுவையான ''மானுட ஆவணம்'' ஆகும். தனது அரசியலின் பிழையான தன்மையை ஒத்துக் கொள்வதில் சரோக்கின் தோற்றுவித்துள்ள இத்தகைய நேர்மையையும் கபடமற்ற தன்மையையும் நாம் அடிக்கடி காண்பதில்லை. கிட்டத்தட்ட பெரும்பாலான சம்பவங்களில் தாம் பின்பற்றிவரும் கொள்கை தவறானது என்பது பற்றி மெய்யாகவே உணரும் அரசியல்வாதிகள் தமது அணி மாற்றத்தை மூடி மறைக்கவும் அதை ஓசைப்படாது வைத்திருக்கவும் ஏறத்தாழப் புறம்பானதான நோக்கங்களைப் ''புனைந்து கற்பிக்கவுமே'' முயல்கிறார்கள். ஒருவர் தமது அரசியல் பிழையைக் கபடமின்றி நேர்மையுடன் ஒப்புக்கொள்வது என்பதே ஒரு முக்கியமான அரசியல் செயலாகும். விஞ்ஞானப் பணி ''எப்போதும் பயனுடையது'' என்று கூறும் போது பித்திரீம் சரோக்கின் தவறு செய்கிறார். ஏனெனில் இந்தத் துறையிலும் கூடப் பிழைகள் செய்யப்படுகின்றன. ருஷ்ய இலக்கியத்திலும் கூட, உணர்வு பூர்வமாகப் பிற்போக்குவாதிகள் அல்லாத நபர்கள் பிற்போக்கான தத்துவவியல் கருத்துக்களைப் பிடிவாதமாக வாதித்துவரும் உதாரணங்களைக் காணலாம். மறு புறம் பிரபலமான ஒருவர், அதாவது மக்கள் பொதுவாக அறிந்த அளவில் ஒரு பொறுப்பான அரசியல் பதவியை வகித்து வந்த ஒரு நபர் அரசியலில் இருந்து விலகுவதாக வெளிப்படையாகப் பிரகடனம் செய்வதும் கூட அரசியல் தான். மக்கள் மீது ஒரு காலத்தில் செல்வாக்குச் செலுத்திய கட்சிகள் முழுமையும் தவறில் தமக்கும் பங்கு இருப்பதை ஒப்புக்கொள்ளும் பட்சத்தில், ஓர் அரசியல் தவறு குறித்த நேர்மையான குறை ஏற்பு, பலருக்கு மாபெரும் அரசியல் அனுகூலத்தை வழங்கும்.

பித்திரீம் சரோக்கினின் கடிதத்தின் அரசியல் முக்கியத்துவம் திட்டவட்டமாயும் இன்றைய தருணத்தில் மிகவும் மகத்தானது. இது நாம் அனைவரும் காரிய நோக்குடன் சிந்தித்துப் பார்த்து தீர்க்கமாகப் படித்தறிய வேண்டிய ஒரு ''படிப்பினை'' ஆகும்.

ஒவ்வொரு முதலாளித்துவ சமுதாயத்திலும் நிர்ணயகர

மான சக்திகளாக இருப்பவை பாட்டாளி வர்க்கமும் முதலாளித்துவ வர்க்கமும் தான். அதே பொழுதில் இந்த வர்க்கங்களுக்கு இடையே நிலை கொண்டுள்ள எல்லா சமூக நபர்களும் குட்டிமுதலாளித்துவ வர்க்கம் என்னும் வகை இனத்துக்குள் வருவர். இவர்கள் இந்த நிர்ணயகரமான இரு சக்திகளுக்கு இடையே தவிர்க்கவொண்ணு வகையில் ஊசலாடுவர். இந்த உண்மையை ஒவ்வொரு மார்க்சியவாதியும் நெடுங்கால முன்பே அறிவார். ஆனல் இந்த உண்மையை ஏட்டுளவில் அங்கீகரிப்பதற்கும், நடைமுறை எதார்த்தத்தின் சிக்கலான நிலைமைகளில் அதிலிருந்து தொடரும் முடிவுகளை வகுப்பதற்கான ஆற்றலுக்கும் இடையே மாபெரும் அகழி இருக்கிறது.

பித்திரீம் சரோக்கின் மிகவும் விரிவான பொதுஜன மற்றும் அரசியல் போக்கான மென்ஷிவிக் சோஷலிஸ்டுப் புரட்சியாளர் போக்கின் பிரதிநிதியாவார். இது தனி ஒரு போக்கு என்பதும், முதலாளித்துவ வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்கும் இடையிலான போராட்டத்தின் பாலான அவர்களது மனப்பான்மையில் மென்ஷிவிக்குகளுக்கும் சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களுக்கும் இடையிலான வேறுபாடு அற்பமானதே என்பதும் 1917 பிப்ரவரிக்குப் பிந்திய ருஷ்யப் புரட்சியின் நிகழ்ச்சிகளால் குறிப்பாயும் உறுதிப்பாடாகவும் எடுப்பாகவும் எண்பித்துக்காட்டப்பட்டுள்ளது. மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களும் குட்டிமுதலாளித்துவ வகைப்பட்ட ஜனநாயகவாதிகளின் ரகங்களே—இதுவே சம்பந்தப்பட்ட இந்தப் போக்கின் பொருளாதார சாரமும் அடிப்படை அரசியல் பண்பியலும் ஆகும். இந்தப் போக்கு அதன் துவக்க கட்டங்களில் எத்துணை அடிக்கடி ஒரு ''சோஷலிஸ்டு'' சாயலை மேற்கொள்கிறது என்பதை முன்னேறிய நாடுகளின் வரலாற்றில் இருந்து நாம் அறிகிறேம்.

பல மாதங்களுக்கு முன்னல் இந்தப் போக்கைச் சார்ந்தவர்களை போல்ஷிவிக்குகளிடம் இருந்தும் பாட்டாளி வர்க்கப் புரட்சியில் இருந்தும் மிகவும் வலுவந்தமாக வெறுத்து ஒதுக்கியது எது? இப்போது அவர்களைப் பகைமை நிலையில் இருந்து நடு நிலைமைக்குப் பெயர்ந்து வரும்படி தூண்டுவது

எது? இந்தப் பெயர்வுக்கு காரணம் முதலாவதாக, ஜெர்மனியிலும்[87] இதர நாடுகளிலுமான புரட்சியின் தொடர்பாக ஜெர்மன் ஏகாதிபத்தியம் வீழ்ச்சியடைந்ததும், ஆங்கில-பிரெஞ்சு ஏகாதிபத்தியம் அம்பலப்படுத்தப்பட்டதும்; இரண்டாவதாக, முதலாளித்துவ-ஜனநாயகப் பிரமைகள் அகற்றப்பட்டதுமே என்பது முற்றிலும் தெட்டத்தெளிவாகும்.

முதல் காரணத்தை எடுத்துப் பார்ப்போம். தேசபக்தி மிகவும் ஆழமாக வேர்பாய்ந்துள்ள உணர்ச்சிப் பாங்குகளில் ஒன்ருகும். நூறு, ஆயிரம் ஆண்டுகளாகத் தனித் தனியான தாய்நாடுகள் நிலவியதால் ஆழப்பதிய வைக்கப்பட்ட உணர்வாகும். நமது பாட்டாளி வர்க்கப் புரட்சியின் மிகவும் முனைப்பான, தனிச்சிறப்பான எனவும் கூறலாம், இடர்ப்பாடுகளில் ஒன்று, அது தேசபக்தியில் இருந்து தீவிரமாகத் திசை திரும்பிய ஒரு கட்டத்தை, பிரேஸ்த்-லிட்டோவ்ஸ்க் சமாதானத்தின் கட்டத்தைக் கடந்து செல்லும் கட்டாயத்திற்கு உள்ளாயிற்று என்பதே. இந்த சமாதானத்தால் கிளறப்பட்ட கசப்புணர்வு, வெறுப்பு மற்றும் வன்மையான ஆத்திரம் ஆகியவற்றைப் புரிந்து கொள்வது எளிது. மேலும் உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியின் உன்னதமான நலன்களுக்கு வேண்டி நாம் மாபெரும் தேசியத் தியாகத்தைச் செய்கிருேம், அதைச் செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியுள்ளோம் என்ற உண்மையை பாட்டாளி வர்க்கத்தின் வர்க்க உணர்வு பெற்ற முன்னணிப் படையினுல் மட்டுமே சரியாக மதிப்பிட முடியும் என்பதைத்தான் மார்க்சியவாதிகளான நாம் எதிர்பார்க்க முடியும் என்பது சொல்லாமலே விளங்கும். மார்க்சியவாதிகள் அல்லாத சித்தாந்தவாதிகளோ, பாட்டாளி வர்க்கத்தைச் சார்ந்திராத, வேலை நிறுத்தங்கள் மற்றும் புரட்சியின் நீடித்த பள்ளியில் பயிற்சி பெற்றிராத உழைக்கும் மக்களின் விரிவான திரளோ புரட்சி முதிர்ச்சியடைந்து வருகிறது என்ற உறுதியான திட நம்பிக்கையையோ அல்லது அதன்பால் மட்டுமமுப்பலற்ற அர்ப்பணிப்பையோ பெறுவதற்குரிய ஆதாரம் எதுவும் இருக்கவில்லை. அதிக பட்சம், நமது போர்த்தந்திரங்கள் அவர்களுக்கு கோடிக்கணக்காஞேரின் மெய்யான மிகவும் கண் கூடான நலன்களை, வெளிநாட்டில்

ஏதேனும் நிகழலாம் என்ற கருத்தியலான, கற்பனையான, புதிரான, நம்பிக்கைக்குப் பலிகொடுக்கும் விசித்திரமான, வெறித்தனமான மூடத்துணிச்சல் செயலாகவே தோற்ற மளித்தன. அவர்களது பொருளாதார நிலை காரணமாக குட்டி முதலாளித்துவ வகைப்பட்டோர், முதலாளித்துவ வர்க்கம் மற்றும் பாட்டாளி வர்க்கத்தை விடவும் அதிக தேசபக்தி உணர்வுடையவர்களாக இருக்கிறார்கள்.

ஆனால் அது நாம் ஏற்கெனவே சொல்லியது போலவே நடந்தது.

ஒரே எதிரி என்று தோன்றிய ஜெர்மன் ஏகாதிபத்தியம் வீழ்ச்சியடைந்துவிட்டது. ஒரு ''கனவு நாடகம்'' என்று (பிளெ ஹானவின் தொடரைப் பயன்படுத்தினால்) தோன்றிய ஜெர்மன் புரட்சி ஒரு மெய்நடப்பாகி விட்டது. குட்டிமுதலாளித்துவ வகைப்பட்ட ஜனநாயகவாதிகள் கற்பனையில் ஜனநாயகத் தின் நண்பனாகவும் ஒடுக்கப்பட்டோர் காவலன் என்றும் சித்திரிக்கப்பட்ட ஆங்கில-பிரெஞ்சு ஏகாதிபத்தியம் ஒரு காட்டுமிராண்டி மிருகமாக மாறிவிட்டது. அது ஜெர்மன் குடியரசின் மீதும் ஆஸ்திரிய மக்கள் மீதும் பிரேஸ்த் உடன் பாட்டை விடவும் மோசமான நிபந்தனைகளைத் திணித்தது. பிரெஞ்சு, அமெரிக்க ''சுதந்திர'' குடியரசாளர் படைகளை சிறிய பலவீனமான தேசங்களின் சுதந்திரத்தையும் சுயாதீ னத்தையும் நெரித்து நசுக்குவோராகவும், காவற்படையா யும் கொலைகாரர்களாயும் பயன்படுத்திய கொடிய காட்டு மிருகமாக இருந்தது. உலக வரலாறு ஆங்கில-பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தை ஈவிரக்கமற்ற முழுநிறைத் திட்பத்தோ டும் வெளிப்படையாயும் அம்பலப்படுத்தியது. தமது நாட் டிற்கு நேரடி சாதகம் (முன்னாட்களில் புரிந்துகொண்டபடி) என்பதல்லாத வேறு எதைப் பற்றியும் முன்னாட்களில் கேட்க வும் விரும்பாத ருஷ்யாவின் தேசபக்தர்களுக்கு ருஷ்யப் புரட் சியை ஒரு சோஷலிஸ்டுப் புரட்சியாக மாற்றுவது ஒரு புதி ரான முயற்சி அல்ல, மாறாக ஓர் அவசியத் தேவை, ஏனெனில் இதர மாற்று வழி வேறு எதுவும் கிடையாது என்பதையும், உலக சோஷலிஸ்டுப் புரட்சி, உலக போல்ஷிவிசம் வெற்றி வாகை சூடாவிடில், ஆங்கில-பிரெஞ்சு மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியம் ருஷ்யாவின் சுதந்திரத்தையும் சுயாதீனத்

தையும் தவிர்க்க முடியாத வகையில் அழித்து விடும் என்பதையும் உலக வரலாற்றின் மெய் நடப்புக்கள் நிதர்சனப் படுத்தின.

மெய்நடப்புக்கள் பிடிவாதமான விஷயங்களாகும் என்று ஆங்கிலேயர் கூறுவது வழக்கம். அண்மை மாதங்களின் போது உலக வரலாற்றில் மிகவும் முக்கியமான திரும்பு முனையைக் குறிக்கும் மெய் நடப்புக்களை நாம் பார்த்தோம். இந்த மெய்நடப்புக்கள் ருஷ்யாவின் குட்டிமுதலாளித்துவ வகைப் பட்ட ஜனநாயகவாதிகளை அவர்கள் போல்ஷிவிசத்தை வெறுத்த போதிலும்—இந்த வெறுப்பு நமது உள்கட்சிப் போராட்டத்தின் வரலாற்றால் மனத்தில் ஆழப்பதியவைக் கப்பட்டது—போல்ஷிவிசத்தோடான பகைமையில் இருந்து மாறி, முதலில் நடுநிலைமைக்கும் பிறகு போல்ஷிவிசத்தை ஆதரிப்பதற்கும் முன்வரக் கட்டாயப்படுத்தின. இந்த ஜன நாயக தேசபக்தர்களை நம்மிடமிருந்து மிகவும் பலமாகத் தள்ளி விலக்கியிருந்த புறவய எதார்த்தமான நிபந்தனைகள் இப்போது மறைந்து விட்டன. உலகில் தற்போது நிலவும் எதார்த்த நிபந்தனைகள் நம் பக்கமாகத் திரும்பும்படி அவர்களைக் கட்டாயப்படுத்துகின்றன. பித்திரீம் சரோக்கின் அணி மாற்றம் எவ்வகையிலும் தற்செயலானது அல்ல. ஆனால் அது வர்க்கம் முழுவதன் சார்பிலுமான, குட்டிமுதலாளித்துவ வகைப்பட்ட ஜனநாயகம் முழுவதன் தவிர்க்க முடியாத அணிமாற்றத்தின் அடையாளம் என்பதில் ஐயமில்லை. இந்த மெய்நடப்பை கவனத்தில் எடுக்கவும், அதைச் சாதகமாக்கிக் கொள்ளவும் தவறும் எவரும் ஒரு மோசமான சோஷலிஸ்டே ஆவார், அன்னவர் மார்க்சியவாதி அல்ல.

மேலும் பொதுவான முறையில் ஒரு சர்வப் பொது சஞ்சீவி என்ற முறையில் ''ஜனநாயகத்தில்'' நம்பிக்கை வைப்பதும், இந்த ஜனநாயகம் முதலாளித்துவ ஜனநாயகம், அதன் பயன்பாட்டிலும் அவசியத்திலும் வரலாற்று முறையில் வரையறை செய்யப்பட்டது என்பதைப் புரிந்து கொள்ளத் தவறுவதும், பல பத்தாண்டுகள், நூற்றாண்டுகளாக எல்லா நாடுகளிலுமான குட்டிமுதலாளித்துவ வகைப்பட்டோரின் பிரத்தியேகமான பண்பியலாக இருந்து வந்துள்ளது. பெரு

முதலாளித்துவ வர்க்கத்தவர் தடிப்பேறி இருக்கின்ருர்; முதலாளித்துவத்தின் கீழ் ஒரு ஜனநாயகக் குடியரசு, அரசின் இதர வடிவங்கள் அனைத்தையும் போலவே, பாட்டாளி வர்க்கத்தை ஒடுக்குவதற்கான ஒரு யந்திரமே தவிர வேறு எதுவுமல்ல என்பதை அவர் அறிவார். உண்மையான தலைவர்களுடனும் ஒவ்வொரு முதலாளித்துவ அரசு யந்திரத்தின் மிகவும் ஆழமான (எனவே அடிக்கடி மிகவும் ஒளி மறைவு செய்யப்படும்) தலையூற்றுடனுமான அவரது மிகவும் நெருக்கமான பரிச்சயத்தில் இருந்து பெரு முதலாளித்துவ வர்க்கத்தவர் இதை அறிவார். குட்டிமுதலாளித்துவ வகைப்பட்டவர் தமது பொருளாதார நிலை மற்றும் வாழ்க்கை நிலைமைகள் காரணமாக இந்த உண்மையைக் குறைந்தளவே மதிப்பிட முடிகிறது. அவர் ஒரு ஜனநாயகக் குடியரசு என்பது ''தூய ஜனநாயகத்தை'', ''ஒரு சுதந்திர மக்கள் அரசை'', மக்களின் வர்க்க சார்பற்ற, வர்க்கத்திற்கு அப்பாற்பட்ட ஆட்சியை, மக்கள் சித்தத்தின் தூய வெளிப்பாட்டை இத்தியாதிகளை எல்லாம் உணர்த்தும் என்ற பிரமையைப் பேணி வளர்த்தும் கூட வருகிருர். இந்த குட்டிமுதலாளித்துவ வகைப்பட்ட ஜனநாயகவாதியின் இந்தத் தப்பெண்ணங்களின் விடா உறுதிக்குத் தவிர்க்க முடியாத காரணம் அவர் கடுமையான வர்க்கப் போராட்டத்தில் இருந்தும், பங்கு மாற்று வாணிக அலுவலகம் மற்றும் ''உண்மை'' அரசியலில் இருந்தும் வெகு தொலைவில் இருப்பதாகும். பிரசாரத்தால் மாத்திரம் இந்தத் தப்பெண்ணங்களை மிகவும் துரிதமாகப் போக்கி விடலாம் என்று எதிர்பார்ப்பது முற்றிலும் மார்க்சியமற்றதான நிலைபாடாகும்.

ஆனல் உலக வரலாறு மிகவும் கொந்தளிப்பான வேகத்துடன் இயங்குகிறது. வழக்கமானதும், அளப்பரிய பளுக் கொண்ட தாக்கத்தால் நிலைநாட்டப்பட்டதுமான அனைத்தையும் ஈடிணையற்ற கடுமைவாய்ந்த நெருக்கடிகளால் தகர்த்து வருகிறது. இதனல் மிகவும் விடா உறுதியுள்ள தப்பெண்ணங்களும் அறுபட்டுப் போகின்றன. அரசியல் நிர்ணய சபையில் வெகுளித்தனமான நம்பிக்கையும், ''தூய ஜனநாயகத்தை'', ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்கு'' எதிராக

வைத்துப் பார்க்கும் வெகுளித்தனமான பழக்கமும், ‘‘பொது வான ஜனநாயகவாதியின்’’ மனதில் இயல்பாயும் தவிர்க்க முடியாத வகையிலும் உருப்பெற்றது. ஆனால் அர்ஹான் கெல்ஸ்க், சமாரா, சைபீரியா மற்றும் தெற்குப் பகுதியில் அரசியல் நிர்ணய சபை ஆதரவாளர்கள் பெற்ற அனுபவங் கள் மிகவும் விடா உறுதியுள்ள தப்பெண்ணங்களைக் கூட அழித்து விடக் கூடியவை. லட்சியமாகக் காட்டப்பட்டதான வில்சனின் ஜனநாயகக் குடியரசு நடைமுறையில் சிறிய பல வீனமான தேசங்களை மிகவும் மான ஈனமின்றி அடக்கவும் ஒடுக்கவும் செய்யும் ஆக வெறித்தனமான, ஏகாதிபத்தியத் தின் ஒரு வடிவமே என்பது நிரூபணமாயிற்று. சராசரி ‘‘ஜன நாயகவாதி’’, பொதுவாக மென்ஷிவிக்கும் சோஷலிஸ்டுப் புரட்சியாளரும் கருதினர்: ‘‘உயர் மாதிரி வடிவ அரசு என் பதான சிலதை சோவியத் அரசாங்கம் என்ற சிலதைப் பற்றி நாம் கனவாவது காண முடியுமா? கடவுள் நமக்கு ஒரு சாதாரண ஜனநாயகக் குடியரசையாவது அருளட்டும்.’’ சாமான்யமான ஓரளவு சமாதானமான காலங்களில் அவர் இந்த ‘‘நம்பிக்கையை’’ பல பத்தாண்டுகள் பேணி வைத்தி ருப்பார் என்பது திண்ணம்.

எனினும், இப்போது உலக நிகழ்ச்சிகளின் போக்கும் ருஷ்யாவின் முடியாட்சிவாதிகள் அனைவரும் ஆங்கில-பிரெஞ்சு, அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் கூட்டணி சேர்ந்த தால் பெற்ற கசப்பான படிப்பினைகளும், ஒரு ஜனநாயகக் குடியரசு ஒரு முதலாளித்துவக் குடியரசே என்பதையும், அது வரலாற்றின் முன்னே ஏகாதிபத்தியம் வைத்துள்ள பிரச்சினைகளின் பார்வை நிலையில் இருந்து ஏற்கெனவே காலா வதியாகிப் போன ஒன்று என்பதையும், நடைமுறையில் நிரூ பித்துக் காட்டுகின்றன. மாற்ற வழி வேறு இல்லை என்பதை அவை காட்டுகின்றன: ஒன்று சோவியத் ஆட்சி உலகின் ஒவ் வொரு முன்னேறிய நாட்டிலும் வெற்றிவாகை சூடும், அல்லது ஆகப் பிற்போக்கான ஏகாதிபத்தியம் வெற்றியடையும். இந்த கடும் காட்டுமிராண்டி ஏகாதிபத்தியம் சிறிய பலவீன மான தேசங்களை நெரித்து நசுக்கி உலகம் முழுவதும் பிற் போக்கு ஆட்சியினை மீண்டும் நிலைநாட்டி வருகிறது. இந்த

ஆங்கில-அமெரிக்க ஏகாதிபத்தியம் ஒரு ஜனநாயகக் குடியரசின் வடிவை பயன்படுத்தும் கலையினை முழுமையாயும் கற்றுக் கரைகண்டுவிட்டது.

ஒன்று அல்லது மற்றது.

நடுப்பாதை என்பது இல்லை. வெகு அண்மைக் காலம் வரையில் இந்தக் கருத்து போல்ஷிவிக்குகளின் கண்மூடித்தனமான வெறி என்று கருதப்பட்டு வந்தது.

ஆனால் இது மெய் என்பது தெரியவந்தது.

பித்திரீம் சரோக்கின் அரசியல் நிர்ணய சபையில் இருக்கும் தன் ஸ்தானத்தைத் துறந்து விட்டார் என்றால் அது காரணம் இல்லாமல் அல்ல. இது முழு வர்க்கத்தின் குட்டி முதலாளித்துவ வகைப்பட்ட ஜனநாயகவாதிகளின் பக்கம் ஏற்பட்ட அணி மாற்றத்தின் ஓர் அடையாளமேயாகும். அவர்கள் மத்தியில் ஒரு பிளவு தவிர்க்க முடியாததாகும்: ஒரு பகுதி நமது பக்கமாக வரும், இன்னொரு பகுதி நடுநிலைமையாக இருக்கும், அதே போதில் மூன்றாம் பகுதி ருஷ்யாவை ஆங்கில-அமெரிக்க மூலதனத்துக்கு விற்பனை செய்து, அன்னிய ஆயுதங்களின் உதவியுடன் புரட்சியை நசுக்க முயலும் முடியாட்சிவாதி அரசியல் சட்ட ஜனநாயகவாதிகளுடன் சேர்ந்து நிற்கும். மென்ஷிவிக்குகள் மற்றும் சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள் மத்தியில் போல்ஷிவிசத்தின் மீதான பகைமை நிலையில் இருந்து முதலில் நடுநிலைமைக்கும் பிறகு போல்ஷிவிசத்துக்கு ஆதரவும் தோற்றுவிக்கும் திருப்பம் ஏற்பட்டிருப்பதைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு, அதைப் பயன்படுத்துவது என்பது இன்றைய மிக அவசரமான கடமைகளில் ஒன்றாகும்.

மக்கள் முன் கட்சி வைக்கும் ஒவ்வொரு கோஷமும் அதன் உயிர்ப்பாற்றலை இழந்து விடும் நடைமுறை அற்றுப் போகும் என்பது திண்ணம், இருப்பினும், அதை அவசியமாக்கிய நிலைமைகள் மாறிவிட்ட போதும்கூடப் பலருக்கு செல்தகைமை உள்ளதாக நீடித்து இருக்கும். இது ஒரு தவிர்க்க முடியாத தீமை, இதை எதிர்த்துப் போராடி வென்று சமாளிக்காமல் நமது கட்சிக் கொள்கையின் பிழையற்ற தன்மையை உறுதிப்படுத்துவது சாத்தியமல்ல. நமது பாட்டாளி வர்க்கப்

புரட்சியின் காலப் பகுதியில் மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களுடனுன வேறுபாடுகள், குறிப்பாயும் கடுமையாக இருந்த கட்டம் வரலாற்று முறையில் அவசியமான காலப் பகுதியாகும். அவர்கள் நமது எதிரிகளின் முகாமுக்குள் இழுபட்டு மாறி முதலாளித்துவ மற்றும் ஏகாதிபத்திய ஜனநாயகக் குடியரசை மீட்டமைக்க முயலும் போது இந்த ஜனநாயகவாதிகளுக்கு எதிராக ஓர் உரமான போராட்டத்தை நடத்தாமல் தவிர்ப்பது என்பது சாத்தியமல்ல. இந்தப் போராட்டத்தின் கோஷங்களில் பல, உறைந்து போய் உயிர்ப்பாற்றலை இழந்து போய், புதிய கால கட்டத்தைச் சரியாக மதிப்பீடு செய்வதில் இருந்தும், அதைத் திறம்பட சாதகமாகப் பயன்படுத்துவதில் இருந்தும் நம்மைத் தடுக்கின்றன. இந்த கால கட்டத்தில் இந்த ஜனநாயகவாதிகள் மத்தியில் ஓர் அணிமாற்றம் தொடங்கியுள்ளது, இது நமது திசையில் ஏற்பட்டுள்ள மாற்றம். இது தற்செயல் மாற்றம் அல்ல, மாருக சர்வதேச நிலைமையின் சூழல்களில் ஆழ வேரூன்றி இருக்கும் மாற்றமாகும்.

இந்த அணி மாற்றத்தை ஊக்குவிப்பதும், இதைச் செய்கிறவர்களை நட்பு முறையில் பாராட்டி வாழ்த்துவதும் மட்டும் போதாது. அவர் எந்த நோக்கத்துக்காகப் பாடுபட்டு வருகிருர் என்பதை அறிந்த ஓர் அரசியல்வாதி, இத்தகைய திருப்பத்திற்கான காரியகரமானதும் ஆழமிக்கதுமான வரலாற்றுக் காரணங்கள் நிலவுகின்றன என்பதைத் திடமாக நம்புவாராஞல், அவர் குட்டிமுதலாளித்துவ வகைப்பட்ட விரிவான மக்கள் திரளின் பல்வேறு பகுதிகள் பிரிவுகள் மத்தியில் இந்த அணிமாற்றத்தைக் கொண்டுவரப் பயிலல் வேண்டும். யாரை அடக்க வேண்டும் என்பதையும் யாருடன், எப்போது, எப்படி உடன்பாடுக்கு வர வேண்டும் என்பதையும் ஒரு புரட்சிகரப் பாட்டாளி அறிந்திருக்க வேண்டும். அன்னிய ஏகாதிபத்தியக் ''கூட்டாளிகளுக்கு'' ருஷ்யாவை விற்பனை செய்து வரும் நிலப்பிரபுக்கள், முதலாளிகள் மற்றும் அவர்களது கையாட்களுக்கு எதிராகப் பயங்கர நடவடிக்கைகளைக் கையாண்டு அவர்களை அடக்காமல் தவிர்ப்பது கேலிக்கிடமானது, முட்டாள்தனமானது. அவர்களை

''நம்பவைக்க'' முயல்வதும், அல்லது பொதுவாக ''உள வியல் முறையில்'' செல்வாக்கின் கீழ் கொண்டு வருவதும் வெறும் நாடகமே. ஆனல் நிகழ்ச்சிகளின் போக்கு நமது பக்கமாகத் திரும்பும்படி அவர்களைக் கட்டாயப்படுத்தும் போது குட்டிமுதலாளித்துவ வகைப்பட்ட ஜனநாயகவாதி கள் விஷயத்தில் அடக்குமுறை மற்றும் பயங்கர வகைப்பட்ட போர்த்தந்திரங்களை மட்டுமே வலியுறுத்துவதும் இதே அள வுக்கு முட்டாள்தனமானது, கேலிக்கிடமானது.

பாட்டாளி வர்க்கம் இந்த ஜனநாயகவாதிகளை எங்கும் எதிர்ப்படுகிறது. நாட்டுப்புற மாவட்டங்களில் நமது பணி நிலப்பிரபுக்களை ஒழிப்பதும், சுரண்டலாளர் மற்றும் கொள்ளை லாபமடிக்கும் குலாக்குகள் எதிர்ப்பைத் தகர்ப்பதுமே ஆகும். இந்த நோக்கத்துக்கு நாம் அரைப்பாட்டாளிகள், ''ஏழைவிவசாயிகளை'' மட்டுமே நம்பகமாக சார்ந்து நிற்க முடியும். ஆனல் நடுத்தர விவசாயி நமது எதிரி அல்ல. அவன் ஊசலாடினன், ஊசலாடுகிருன், தொடர்ந்து ஊசலாடுவான். ஊசலாடுவோர் மீது செல்வாக்குச் செலுத்தும் பணியும் சுரண்டலாளரை வீழ்த்தும் மற்றும் தீவிரமான விரோதியைத் தோற்கடிக்கும் பணியும் முற்றிலுமை கொண்டனவல்ல. இன்றைய தருணத்தில் நடுத்தர விவசாயியுடன் ஓர் உடன் பாட்டுக்கு வருவதும் அதே போதில் குலாக்குக்கு எதிரான போராட்டத்தை ஒரு கணமும் கைவிடாது இருப்பதும் அதே சமயம் ஏழை விவசாயிகளை மட்டுமே சார்ந்து நிற்பதும் நமது கடமை. ஏனெனில் மேலே விவரிக்கப்பட்ட காரணங் களின் விளைவாக நடுத்தர விவசாயிகள் நமது திசையில் திரும்பு வது என்பது இப்போது தவிர்க்க முடியாததாகிவிட்டது.

இது, ஆக குட்டிமுதலாளித்துவ நிலைமைகளில் இருக் கும், அல்லது ஆக குட்டிமுதலாளித்துவக் கருத்துக்களைக் கொண்டுள்ள கைவினைக் கலைஞர், கம்மியர் மற்றும் தொழி லாளருக்கும், பல அலுவலக ஊழியர், ராணுவ அலுவலர் களுக்கும் பொதுவாக அறிவுஜீவிகளுக்கும் பொருந்தும். அவர்களிடையே ஏற்பட்டுள்ள இந்த அணிமாற்றத்தை பயன் படுத்த இயலாமற் போன பல சான்று நிகழ்ச்சிகள் நமது கட்சியில் ஏற்பட்டுள்ளன என்பது மறுக்க முடியாத உண்மை.

இந்த இயலாமையை வென்று சமாளிக்க முடியும், வென்று சமாளிக்க வேண்டும்.

தொழிற்சங்கங்களில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள மிகவும் பெரும்பான்மையான பாட்டாளிகளின் உறுதியான ஆதரவை நாம் ஏற்கெனவே பெற்றுள்ளோம். நம்மை நோக்கித் திரும்பியுள்ள உழைக்கும் மக்கள் இடையே உள்ள ஆகச் சிறு பாட்டாளியையும் ஆகப் பெரிய குட்டிமுதலாளித்துவப் பகுதிகளையும் எவ்வாறு நம் பக்கம் வென்று பெறுவது என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். அவர்களைப் பொதுவான ஸ்தாபனத்தில் உட்படுத்தவும் பொதுவான பாட்டாளி வர்க்கக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவும் நாம் அறிந்திருக்க வேண்டும். இந்தத் தருணத்தில் நமது கோஷம் இந்தப் பகுதியினரை எதிர்த்துப் போராடுவது என்பதல்ல. மாறாக, அவர்களை நம் பக்கம் வென்று சேர்த்துக் கொள்வது, அவர்கள் மீது செல்வாக்குச் செலுத்த இயல்வது, ஊசலாட்டக்காரர்களுக்கு நம்பிக்கை அளிப்பது, நடுநிலைமையாக இருப்பவர்களைப் பயன்படுத்துவது என்பதாகும். மேலும் இன்னும் பின்தங்கி நிற்பவர்களையும், ''அரசியல் நிர்ணய சபை'' அல்லது ''தேசபக்த-ஜனநாயகவாத'' பிரமைகளில் இருந்து வெகு அண்மையில் தம்மைத்தாமே விடுவித்துக் கொண்டவர்களுக்கும் வெகுஜன பாட்டாளிவர்க்க செல்வாக்கு மூலம் போதனை அளிப்பதும் ஆகும்.

உழைக்கும் மக்கள் இடையே நமக்கு ஏற்கெனவே போதியளவு உறுதியான ஆதரவு இருக்கிறது. இது சோவியத்துகளின் ஆறாவது காங்கிரசால்[88] முற்றும் எடுப்பான முறையில் மெய்ப்பிக்கப்பட்டது. நாம் முதலாளித்துவ வகைப்பட்ட அறிவுஜீவிகளைக் கண்டு அஞ்சவில்லை. ஆனால் அவர்கள் மத்தியில் இருக்கும் திட்டமிட்ட சீர்குலைவாளர்கள் மற்றும் வெண் காவலர்களை எதிர்த்த போராட்டத்தை ஒரு கணமும் தளர்த்த மாட்டோம். ஆனால் இன்றைய தருணத்திற்கான கோஷம் அவர்கள் மத்தியில் ஏற்பட்டுவரும் நம் பாலான மாறிய மனப்பான்மையை பயன்படுத்துவது என்பதேயாகும். சோவியத் பதவிகளுக்குள் தந்திரமாக ''நுழைந்துவிட்ட'' மோசமான முதலாளித்துவ நிபுணர்கள் இன்னும்

ஏராளமாக இருக்கிறார்கள். அவர்களை வெளியேற்றுவதும், நேற்று நமது உறுதியான எதிரிகளாக இருந்து இன்று நடு நிலையாக மட்டும் இருக்கும் நிபுணர்களைக் கொண்டு மாற்றீடு செய்வதும் இன்றைய தருணத்தில் மிகவும் முக்கியமான பணிகளில் ஒன்றாகும். இது, ''அறிவுஜீவிகள்'', கிளர்ச்சியாளர், பிரசாரகர்கள் மற்றும் அமைப்பாளர்களுடன் தொடர்பு கொள்ளும் ஒவ்வொரு தீவிர சோவியத் ஊழியரின் பணியும் ஆகும்.

சிக்கலானதும் விரைவில் மாற்றமடைந்து வருவதுமான ஒரு நிலையில், நடுத்தர விவசாயியுடன், நேற்று மென்ஷிவிக்காக இருந்த தொழிலாளியுடன், நேற்று சீர்குலைவாளராக இருந்த அலுவலக ஊழியர், அல்லது அறிவுஜீவியுடன் உடன்பாடு ஏற்படுத்திக் கொள்வதையும், இதர அரசியல் செயல்பாடு ஒவ்வொன்றையும் போலவே சாதிப்பதற்குத் திறமை வேண்டும் என்பது கண்கூடு. முந்திய அனுபவத்தால் பெற்ற தேர்ச்சியோடு திருப்தியடைந்து விடக் கூடாது. ஆனால் எல்லா சந்தர்ப்ப சூழல்களின் கீழும் மேலும் முன்னே சென்று, எல்லா சந்தர்ப்ப சூழல்களின் கீழும் மேலும் பெரிதான சிலவற்றைச் சாதிக்க முயன்று எல்லா சந்தர்ப்ப சூழல்களின் கீழும் சாமான்யமானதில் இருந்து மேலும் கஷ்டமான பணிகளை நோக்கி முன்னேற வேண்டும் என்பதே இங்கு முழுமையான விவகாரம் ஆகும். இல்லாவிடில் எத்தகைய முன்னேற்றமும் சாத்தியமல்ல, குறிப்பாயும் சோஷலிஸ்டு நிர்மாணத்தில் முன்னேற்றம் எதுவும் சாத்தியமல்ல.

முன்னொரு நாள் கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் காங்கிரசின் முகவர்கள் என்னைக் காண வந்தார்கள். கடன் வழங்கு கூட்டுறவு வங்கி குடியரசின் மக்கள் வங்கியுடன் இணைக்கப்பட்டதை எதிர்த்து ஆட்சேபம் தெரிவிக்கும் காங்கிரஸ் தீர்மானத்தை[89] என்னிடம் காட்டினார்கள். நான் நடுத்தர விவசாயிகளுடன் உடன்பாடு வேண்டும் என்பதை ஆதரிக்கிறேன் எனவும், கூட்டுறவாளர்கள் பக்கம் இருந்து போல்ஷிவிக்குகளின் பால் பகைமை உணர்வில் இருந்து நடுநிலையை நோக்கிய மனப்பான்மை மாற்றத்தின் தொடக்கங்களைக் கூட நான் உயர்வாக மதிக்கிறேன் எனவும்,

ஆனால் அவர்களது விசேஷ வங்கி குடியரசின் தனியொரு வங்கியுடன் முழுமையாக இணைக்கப்படுவதை அவர்கள் ஒத்துக்கொள்வதன் மூலம் மட்டுமே உடன்பாட்டுக்கான அடித்தளத்தை உருவாக்க முடியும் எனவும் நான் அவர்களிடம் கூறினேன். அதன் பின், அந்தக் காங்கிரஸ் பிரதிநிதிகள் தமது தீர்மானத்துக்குப் பதில் வேறு தீர்மானத்தை முன்வைத்தார்கள், அதைக் காங்கிரஸ் ஏற்குமாறு செய்தார்கள். அதில் இணைப்புக்கு எதிரான அனைத்தும் நீக்கப்பட்டது. ஆனால்... ஆனால் அவர்கள் கூட்டுறவாளர்களின் ஒரு விசேஷ ''கடன் வழங்கு சங்கத்திற்கான'' திட்டத்தை முன்வைத்தார்கள். இது உண்மையில் விசேஷ வங்கியில் இருந்து எவ்வழியிலும் வேறுபட்டதாக இருக்கவில்லை. அது கேலிக்கிடமானது. இத்தகைய வெறும் சொற்களால் ஒரு முட்டாளை மட்டுமே ஏமாற்ற முடியும். ஆனால் இத்தகைய ஒரு ''முயற்சி'' ''தோல்வியுற்றதால்'' நமது கொள்கை சிறிதும் பாதிக்கப்படவில்லை. நாம் கூட்டுறவாளர்களுடனும், நடுத்தர விவசாயிகளுடனும் உடன்பாட்டுக்கான ஒரு கொள்கையையே பின்பற்றி வந்துள்ளோம், இனியும் பின்பற்றி வருவோம். அதே சமயம் சோவியத் அரசாங்கம் மற்றும் சோவியத் சோஷலிஸ்டு நிர்மாணத்தின் கொள்கையை மாற்ற நடத்தும் ஒவ்வொரு முயற்சியையும் அடக்குவோம்.

குட்டிமுதலாளித்துவ வகைப்பட்ட ஜனநாயகவாதிகள் மத்தியில் ஊசலாட்டம் தவிர்க்க முடியாதது. செக்கோஸ்லொவாகியர் ஒரு சில வெற்றிகளை அடைந்தவுடனேயே, இந்த ஜனநாயகவாதிகள் பீதியுற்று விடுகிறார்கள், பீதியைப் பரப்பத் தொடங்குகிறார்கள், ''வெற்றியாளர்'' பக்கம் சேர விரைகிறார்கள், அவர்களை கெஞ்சும் பான்மையில் வாழ்த்தத்தயாராக இருக்கிறார்கள். இப்போதும் கூட, ஆங்கில-அமெரிக்க-கிரஸ்னேவ் வெண் காவலர்களின் எந்த ஒரு பகுதி அளவு வெற்றியும் கூட, மறு திசையில் ஊசலாட்டம் தொடங்கவும், பீதியை அதிகரிக்கவும், பீதியைப் பரப்புதல், துரோகம் விளைத்தல், ஏகாதிபத்தியவாதிகள் பக்கம் துறந்தோடுதல் இத்தியாதி சம்பவங்கள் பல்கிப் பெருகவும் போதுமானது என்பதை ஒரு கணம் கூட மறந்து விடக் கூடாது.

அதைக் குறித்து நாம் அறிவோம். அதை நாம் மறக்க மாட்டோம். சோவியத் அரசாங்கத்துக்கு நாம் வென்று பெற்றுள்ளதும், அரைப் பாட்டாளிகளால் ஆதரிக்கப்படுவது மான முழுமையான பாட்டாளி வர்க்க அடித்தளம் உறுதி யாகவும் நீடித்ததாகவும் விளங்கும். நமது அணிகள் தயங்கா, நமது சேனை தள்ளாடாது, இதை அனுபவத்தில் இருந்து நாம் ஏற்கெனவே அறிவோம். ஆனால் தீர்க்கமான உலக வரலாற்று மாற்றங்கள், கட்சி சார்பற்ற, மென்ஷிவிக், சோஷலிஸ்டுப் புரட்சியாளர் ஜனநாயகவாதிகளின் திரளின் மத்தியில் நமது பக்கமான ஒரு தவிர்க்க முடியாத திருப்பத் தைக் கொண்டு வரும் போது, நாம் இந்த அணிமாற்றத்தை பயன்படுத்தவும் அதை ஊக்குவிக்கவும் மக்களின் பல்வேறு பிரிவுகள் பகுதிகளிடை இதைப் புகுத்தவும் அவர்களுடன் உடன்பாடு கொள்ள சாத்தியமான அனைத்தையும் செய்ய வும் பயிற்சி பெற வேண்டும், நிச்சயம் பயிற்சி பெறுவோம். இவ்வாறு, சோஷலிஸ்டு நிர்மாணப் பணிக்கு உதவி செய்ய லாம், சோஷலிசத்தின் வெற்றியைத் தவக்கப்படுத்தும் கடு மையான பொருளாதாரக் குலைவு, அறியாமை, திறமின்மை எனும் சுமையை அகற்றவும் உதவ முடியும்.

1918 நவம்பர் 20ல் எழுதப்பட்டது

பிராவ்தா, இதழ் *252ல், 1918,* நவம்பர் *21ல்* வெளியிடப்பட்டது

நூல் திரட்டு, தொகுதி *37,* பக்கங்கள் *188-197*

பதிப்பாளர் குறிப்புகள்

[1] இங்கு லெனின் ருஷ்யக் கவிஞர் நி.அ. நெக்ராசவ் எழுதிய ''ருஷ்யாவில் யார் நன்ருக வாழ்கிருர்'' என்ற கவிதையில் இருந்து இச்சொற்களை குறிக்கோள் குறிப்பாக மேற்கோள் காட்டுகிருர்.

பக்கம் 49.

[2] சோவியத் ருஷ்யா மிகவும் கடுமையான நிபந்தனைகளை ஏற்று 1918 மார்ச்சில் ஜெர்மனியுடனும் அதன் நேச சக்திகளுடனும் செய்து கொண்ட பிரேஸ்த் சமாதான உடன்படிக்கை இங்கு குறிப்பிடப்படுகிறது. (இத்தேர்வு நூல்களின் தொகுதி 7, குறிப்பு 41ல் இதைப் பற்றி பார்க்க.)

பக்கம் 11.

[3] டில்ஸீட் சமாதான உடன்படிக்கை 1807 ஜூலை மாதம் பிரான்சுக்கும் பிரஷ்யாவுக்கும் இடையே ஏற்பட்டது. இது பிரஷ்யா மீது கடுமையும் தாழ்வுறுத்துவதுமான கடமைகளைச் சுமத்தியது. பிரஷ்யா பெருமளவிலான நிலப்பரப்பை இழந்தது, 10 கோடி பிராங்குகள் இழப்பீட்டுத் தண்டத் தொகை செலுத்த நேர்ந்தது. தனது படைபலத்தை 40 ஆயிரம் பெயர் அளவுக்குக் குறுக்கிக் கொள்ளவும், நெப்போலியன் கோரும்போது கூடுதல் ராணுவ சக்திகளை வழங்கவும், இங்கிலாந்துடன் வர்த்தகத்தை நிறுத்திவிடவும் பிரஷ்யா வாக்குறுதியளிக்க நேர்ந்தது.

பக்கம் 11.

[4] ஷ்லியாஹ்திச்—போலிஷ் பிரபு.

பக்கம் 12.

[5] சோவியத்துகளின் நாலாவது விசேஷ அகில ருஷ்யக் காங்கிரஸ் மாஸ்கோவில் 1918 மார்ச் 14—16 தேதிகளில்

பிரேஸ்த் சமாதான உடன்படிக்கை ஏற்கப்படுவதை உறுதி செய்வது சம்பந்தமாகக் கூட்டப்பட்டது.

இந்தக் காங்கிரசில் தீர்மானகரமான வோட்டுரிமை யுடன் கூடிய 1232 பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். இவர்களில் 795 பேர் போல்ஷிவிக்குகள், 283 பேர் இடது சாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள், 25 பேர் மைய வாத சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள், 21 பேர் மென்ஷி விக்குகள், 11 பேர் மென்ஷிவிக்-சர்வதேசியவாதிகள் மற்றும் பிறர் அடங்குவர். காங்கிரசின் நிகழ்ச்சி நிரலில் இருந்த பிரச்சினைகளாவன: சமாதான உடன்படிக்கையின் ஏற்புறுதி; தலைநகரை பெத்ரோகிராதில் இருந்து மாஸ் கோவுக்கு மாற்றுவது; அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியைத் தேர்ந்தெடுப்பது. சமாதான உடன்படிக்கை பற்றி அயல் துறை விவகாரத் துணை மக்கள் கமிசார் திரு. சிச்சேரின் விவரங்களை எடுத்துக் கூறினார். அதற்குப் பின்னர் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் சார் பில் வி. இ. லெனின் பிரதானப் பிரச்சினை குறித்து உரை ஆற்றினார். ஏற்புறுதிக்கு எதிராக இடதுசாரி சோஷ லிஸ்டுப் புரட்சியாளர்ப் பிரிவின் சார்பில் திரு. கம்கோவ் அறிக்கை செய்தார்.

பிரேஸ்த் உடன்படிக்கை ஏற்புறுதி செய்யப்படுவதற்கு எதிராக மென்ஷிவிக்குகள், இடதுசாரி மற்றும் வலதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள், மாக்சிமலிஸ்டுகள், அராஜகவாதிகள் மற்றும் பிறர் ஒரு ஐக்கிய முன்னணி யாக முன்வந்தார்கள். கடுமையான விவாதத்துக்குப் பிறகு சமாதான உடன்படிக்கையை ஏற்புறுதி செய்வது சம்பந்த மாக லெனின் பிரேரேபித்த தீர்மானத்தை இந்தக் காங் கிரஸ் பெயர்வாரி ஓட்டு மூலம் பெருமளவு பெரும்பான்மை ஆதரவுடன் அங்கீகரித்தது. பிரேஸ்த் உடன்படிக்கை ஏற் புறுதி செய்யப்பட்டதை ஒட்டி இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள் மக்கள் கமிசார்களின் சோவியத்து களில் இருந்து விலகிக் கொண்டார்கள். ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' ஓட்டளிப்பில் கலந்துகொள்ளவில்லை, இந்த உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டதால் நாட் டின் பாதுகாப்பும், புரட்சியின் சாதனைகளும் அரித்தழிக்கப் படும் என்று தனியாகப் பிரகடனம் செய்தனர். சமா தான உடன்படிக்கை ஏற்புறுதி செய்யப்படுவது குறித்து ஓட்டளிக்க மறுத்தது மூலம் ''இடதுசாரி கம்யூனிஸ்டு கள்'' கட்சியின் ஏழாவது காங்கிரஸ் தீர்மானத்தையும் சோவியத்துகளின் நான்காவது விசேஷ அகில ருஷ்யக் காங்கிரசில் கம்யூனிஸ்டுப் பிரிவு செய்த முடிவையும்

மீறிச் செயல்பட்டனர். கட்சியின் மத்தியக் கமிட்டி காங்கிரஸ் நடைபெற்ற தினங்களிலேயே கூடி கட்சித் தீர்மானங்களை எதிர்த்த செயல்கள் அனுமதிக்க முடியாதவை என்று முடிவு செய்தது.

சோவியத் அரசின் தலைநகரம் மாஸ்கோவாக இருக்கும் என்ற தீர்மானத்தை இந்தக் காங்கிரஸ் ஏற்றது. 200 பேர் கொண்ட மத்திய நிர்வாகக் கமிட்டியையும் தேர்ந்தெடுத்தது.

சமாதான உடன்படிக்கையை ஏற்புறுதி செய்வது பற்றிய காங்கிரஸ் தீர்மானம், வட்டார சோவியத்துகள், கட்சி நிறுவனங்கள் மற்றும் உழைக்கும் மக்கள் கூட்டங்களால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

பக்கம் 17.

6 இங்கு குறிப்பிடப்படுவது தொழிலாளர், விவசாயிகள், படையாளர் பிரதிநிதிகளின் சோவியத்துகளில் அக்காலத்தில் பிரதிநிதித்துவம் பெற்றிருந்த மென்ஷிவிக் மற்றும் சோஷலிஸ்டுப் புரட்சியாளர் குட்டிமுதலாளித்துவக் கட்சிகள் ஆகும். மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களும் விரைவில் பகிரங்கமான எதிர்ப்புரட்சி வழியைப் பின்பற்றலாயினர். எனவே அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியில் இருந்தும் வட்டார சோவியத்துகளில் இருந்தும் சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கட்சியின் இடதுசாரி மையப் பிரிவுகள் மற்றும் மென்ஷிவிக்குகளின் பிரதிநிதிகளை விலக்குவது சம்பந்தமான முடிவு 1918 ஜூன் 14ந் தேதி அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியால் எடுக்கப்பட்டது. இது ''அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் இஸ்வேஸ்தியா'' பத்திரிகையில் ஜூன் 18ந் தேதி 123ஆவது இதழில் பிரசுரிக்கப்பட்டது.

பக்கம் 17.

7 சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள் கட்சி 1901 இறுதியிலும் 1902 துவக்கத்திலும் ருஷ்யாவில் நிறுவப்பட்ட ஒரு குட்டி முதலாளித்துவக் கட்சியாகும். உலக ஏகாதிபத்தியப் போரின் போது பெரும்பாலான சோஷலிஸ்டுப் புரட்சியாளர் சமூக-தேசியவெறி நிலை மேற்கொண்டனர். 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு சோஷலிஸ்டுப் புரட்சியாளர் மென்ஷிவிக்குகளுடன் சேர்ந்து எதிர்ப்புரட்சி இடைக்கால அரசாங்கத்தின் பிரதானத் தூண்களாக இருந்தனர். இக்கட்சியின் தலைவர்கள் அந்த அரசாங்கத்தில் பதவிகள் வகித்தார்கள். நிலப்பிரபுக்

களின் நிலவுடைமைகளை ஒழிக்க வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கையை சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கட்சி ஆதரிக்க மறுத்தது. இடைக்கால அரசாங்கத்தில் இருந்த சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கட்சி அமைச்சர்கள் நிலப்பிரபுக்களின் நிலங்களைப் பறித்துக் கொண்ட விவசாயிகளுக்கு எதிராகத் தண்டனைப் படைகளை அனுப்பினர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு சோஷலிஸ்டுப் புரட்சியாளர் சோவியத் ஆட்சி அதிகாரத்துக்கு எதிராக முதலாளிகள், நிலப்பிரபுக்கள் மற்றும் அன்னியத் தலையீட்டாளர் தொடுத்த போராட்டத்தைத் தீவிரமாக ஆதரித்தனர்.

மென்ஷிவிக்குகள் — ருஷ்யாவின் சமூக-ஜனநாயக இயக்கத்தில் நிலவிய ஒரு சந்தர்ப்பவாதப் போக்கைச் சேர்ந்தவர்கள். மென்ஷிவிக்குகள் என்ற பெயரை இவர்கள் (1903) ருஷ்ய சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரசில் பெற்றுர்கள். காங்கிரசில் கட்சியின் மத்திய அமைப்புகளுக்கு நடைபெற்ற தேர்தல்களின் போது லெனின் தலைமையிலான புரட்சிகர ஜனநாயகவாதிகள் பெரும்பான்மை (போல்ஷின்ஸ்துவோ) பெற்றுர்கள். அதே பொழுதில் சந்தர்ப்பவாதிகள் சிறுபான்மை (மென்ஷின்ஸ்துவோ)ஆக இருந்தார்கள். இதன் விளைவாகவே 'போல்ஷிவிக்' மற்றும் 'மென்ஷிவிக்' என்ற பெயர்கள் ஏற்பட்டன.

1905-07 புரட்சியின் போது மென்ஷிவிக்குகள் புரட்சியில் தொழிலாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்தையும், விவசாயி மக்களுடனுன அதன் கூட்டணியையும் எதிர்த்தார்கள். மிதவாத முதலாளித்துவ வர்க்கத்துடன் உடன்பாடு வேண்டும் என்று கோரினுர்கள். அந்த வர்க்கம் புரட்சிக்குத் தலைமை தாங்க வேண்டும் என்று வற்புறுத்தினுர்கள். புரட்சியின் தோல்வியைத் தொடர்ந்த பிற்போக்கு ஆண்டுகளில் பெரும்பாலான மென்ஷிவிக்குகள் கலைப்புவாதிகள் ஆயினர்: தொழிலாளி வர்க்கத்தின் சட்டவிரோதமாக இயங்கி வந்த புரட்சிகரக் கட்சியைக் கலைத்துவிட வேண்டும் என்று கோரினுர்கள். 1917 பிப்ரவரியில் நடைபெற்ற முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு மென்ஷிவிக்குகள் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் பதவிகளை ஏற்றுக் கொண்டார்கள், அதன் ஏகாதிபத்தியக் கொள்கையை ஆதரித்தார்கள். போல்ஷிவிக்குகளால் ஆயத்தம் செய்யப்பட்டு வந்த சோஷலிஸ்டுப் புரட்சியை எதிர்த்தார்கள்.

அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு மென்ஷிவிக்குகள் பகிரங்கமான ஓர் எதிர்ப்புரட்சிக் கட்சியாக ஆகிவிட்டனர். சோவியத் ஆட்சிக்கு எதிராகச் சதிகளையும் கலகங்களையும் ஏற்பாடு செய்தார்கள், அவற்றில் பங்குபற்றினார்கள்.

பக்கம் 19.

8 இங்கு குறிப்பிடப்படுவது ஏப்ரல் அரசியல் நெருக்கடியாகும். இது *1918* ஏப்ரல் *18*ல் (மே *1*ந் தேதி) நேசநாடுகளுக்கு இடைக்கால அரசாங்கத்தின் சார்பில் அயல் விவகாரத்துறை அமைச்சர் காடேட் பா.நி. மில்யுக்கோவ் அனுப்பிவைத்த குறிப்பின் விளைவாக எழுந்தது. இந்தக் குறிப்பில் இடைக்கால அரசாங்கம், ஜார் அரசாங்கம் செய்து கொண்ட உடன்பாடுகள் கடைப்பிடிக்கப்படும் எனவும் போரை வெற்றிகரமான முடிவு வரை நடத்தப் போவதாயும் மீண்டும் உறுதியளித்தது. இடைக்கால அரசாங்கத்தின் ஏகாதிபத்தியக் கொள்கை உழைக்கும் மக்களின் விரிவான திரளின் இடையே கோபாவேசத்தைத் தூண்டியது. ஏப்ரல் *21*ல் (மே *4*ல்) போல்ஷிவிக் கட்சியின் அறைகூவலை ஒட்டி பெத்ரோகிராத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து சமாதானக் கோரிக்கையுடன் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். இந்த ஆர்ப்பாட்டத்தில் ஒரு லட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்களும் படையாளிகளும் கலந்து கொண்டார்கள். மாஸ்கோ, ஊரல் பகுதி, உக்ரேனியா, கிரோன்ஷ்டாத் மற்றும் நாட்டின் இதர நகரங்கள் பிராந்தியங்களில் ஆர்ப்பாட்டங்களும் கூட்டங்களும் நடைபெற்றன. மில்யுக்கோவின் குறிப்பை ஆட்சேபித்த தீர்மானங்கள் பல நகர சோவியத்துகளில் இருந்து மாஸ்கோ சோவியத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

ஏப்ரல் ஆர்ப்பாட்டங்கள் அரசாங்கத்தில் நெருக்கடியை ஏற்படுத்தியன. மக்கள் திரளின் நிர்ப்பந்தம் காரணமாக மில்யுக்கோவும் ராணுவ அமைச்சர் குச்கோவும் ராஜினாமாச் செய்யவேண்டி வந்தது. மே *5(18)*ல் முதல் கூட்டு அரசாங்கம் நிறுவப்பட்டது. இதில் *10* முதலாளித்துவ அமைச்சர்களுடன் சமரசக் கட்சிகளின் தலைவர்களான அ.ஃபி. கேரென்ஸ்கி, வீ.மி. செர்னேவ் (சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கட்சி), இ.கி. த்ஸெரெத்தேலி, ம.இ. ஸ்கோபெலெவ் (மென்ஷிவிக்குகள்) மற்றும் பிறர் பதவி ஏற்றனர். முதலாளித்துவ இடைக்கால அரசாங்கம் முதலாளித்துவத்தின் பக்கம் மாறிச் சென்றுவிட்ட சோஷலிஸ்டுப்

புரட்சியாளர் மற்றும் மென்ஷிவிக்குகளால் காப்பாற்றப் பட்டது.

பக்கம் 20.

[9] ஜூன் 18ல் (ஜூலை 1) இடைக்கால அரசாங்கத்தின் உத்தரவுப்படி போர்முனையில் ருஷ்யன் துருப்புக்கள் எதிர்த் தாக்குதலைத் தொடங்கின. இது கடும் தோல்வியில் வந்து முடிந்தது.

பக்கம் 20.

[10] 1917 ஜூலை 3—4 (16—17) தேதிகளில் இடைக்கால அரசாங்கத்தின் எதிர்ப்புரட்சிக் கொள்கையால் ஆத்திர மூட்டப்பட்ட கோபாவேசமுற்ற தொழிலாளர் மற்றும் படையாளர் திரள் பெத்ரோகிராதில் ஆர்ப்பாட்டம் நடத்தியது. இந்த ஆர்ப்பாட்டம் ஆயுதமேந்திய புரட்சி எழுச்சியாக வளரும் அபாயம் இருந்தது.

அந்தத் தருணத்தில் போல்ஷிவிக் கட்சி ஆயுதமேந்திய புரட்சி எழுச்சியினை விரும்பவில்லை. நாட்டின் புரட்சிகர நெருக்கடி இன்னும் பக்குவமடையவில்லை எனவும், தலைநகரில் வெடித்த புரட்சி எழுச்சியை சேனையும் மாநிலங்களும் ஆதரிக்கத் தயாராக இல்லை எனவும் அக்கட்சி கருதியது. இருப்பினும் போராட்டம் தொடங்கிவிட்டது, அதைத் தடுத்து நிறுத்துவது சாத்தியமல்ல. போல்ஷிவிக் கட்சி இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கு கொள்ளவும் அதற்கு ஓர் அமைதியான அமைப்புத் திரட்சியுள்ள தன்மையை வழங்கவும் முடிவு செய்தது. எல்லா அதிகாரங்களும் சோவியத்துகளுக்கே மாற்றி வழங்கப்பட வேண்டும் என்று ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் கோரினார்கள். ஆனால் அந்த நேரத்தில் சோவியத்துகளில் தலைமை வகித்து வந்த சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களும் மென்ஷிவிக்குகளும் ஆட்சி அதிகாரத்தை எடுத்துக் கொள்ள மறுத்தனர்.

இடைக்கால அரசாங்கம் மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களின் அறிவுடனும் அனுமதியுடனும் அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக ராணுவ பள்ளி மாணவர் மற்றும் எதிர்ப்புரட்சி கசாக்குப் படைகளை ஏவிவிட்டது. அவை ஆர்ப்பாட்டம் செய்த மக்கள் மீது சுட்டன. போர் முனையில் இருந்து கலைபட்ட பிற்போக்கு படைப் பிரிவுகள் விரைந்தன.

ஜூலை 4 முதல் 5 (17 முதல் 18) வரை இரவில் நடைபெற்ற மத்தியக் கமிட்டி மற்றும் மக்கள் கமிசார் உறுப்பினர் கூட்டத்தில் ஆர்ப்பாட்டத்தை அமைதியான முடி

வுக்குக் கொண்டுவருவதற்கான முடிவு எடுக்கப்பட்டது. இது கட்சி எடுத்த சரியான நடவடிக்கையாகும். இதன் மூலம் உரிய காலத்தில் பின்வாங்கி, புரட்சியின் பிரதான சக்திகள் நசுக்கப்படாமல் பாதுகாக்க முடிந்தது.

ஆர்ப்பாட்டத்தை நசுக்கிய பிறகும் இடைக்கால அரசாங்கம் ஒடுக்கு முறையைத் தொடர்ந்து நீடித்தது: போல்ஷிவிக் பத்திரிகைகளை ஒடுக்கியது, கைதுகள், சோதனைகள், இனக்கொலைகள் தொடங்கின. மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களும் உண்மையிலேயே எதிர்ப்புரட்சிக் கொலைபாதகர்களின் பங்காளிகளாயும் கூட்டாளிகளாயும் மாறிவிட்டனர்.

பக்கம் 20.

11 **கர்னீலவ் கலகம்**—*1917* ஆகஸ்டில் முதலாளிகள் நிலப்பிரபுக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு எதிர்ப்புரட்சிக் கலகம். இதற்கு அப்போது முதற் படைத் தலைவராக இருந்த ஜாராட்சி ஜெனரல் கர்னீலவ் தலைமை தாங்கினார். கலகக்காரர்கள் பெத்ரோகிராதைக் கைப்பற்றவும், போல்ஷிவிக் கட்சியைத் தகர்க்கவும் சோவியத்துகளைக் கலைக்கவும் ஒரு ராணுவ சர்வாதிகாரத்தை நிலை நாட்டவும் அதன் வழி முடியாட்சியை மீண்டும் நிறுவ வழிசமைக்கவும் விரும்பினார்கள். இந்தக் கலகம் ஆகஸ்டு 25 (செப்டெம்பர் 7)ல் தொடங்கியது.

போல்ஷிவிக் கட்சியின் அறை கூவலை ஏற்று பெத்ரோகிராத் தொழிலாளரும், புரட்சிகரப் படையாளிகளும் கடற்படையினரும் கலகக்காரர்களை எதிர்த்துப் போராட எழுச்சியுற்று முன்வந்தனர். பெத்ரோகிராத் தொழிலாளர்கள் விரைவில் செங்காவலர் படைப்பிரிவுகளை உருவாக்கினர். பல வட்டாரங்களில் புரட்சிகரக் கமிட்டிகள் நிறுவப்பட்டன. கர்னீலவ் படைகளின் முன்னேற்றம் தடுத்து நிறுத்தப்பட்டது. போல்ஷிவிக் பிரசார மூலம் அவற்றின் கட்டுணர்வு குலைக்கப்பட்டது. மக்கள் திரளின் நிர்ப்பந்தம் காரணமாக இடைக்கால அரசாங்கம் கர்னீலவையும் அவரது கூட்டாளிகளையும் கைதுசெய்து வழக்கு நடத்தும்படி உத்தரவிட நேர்ந்தது.

பக்கம் 20.

12 **கசாக்குகள்**—நிலப்பிரபுத்துவ ஒடுக்குமுறையில் இருந்து தப்பி ஓடிய பண்ணை அடிமை விவசாயிகள் மத்தியில் இருந்து வந்த சுதந்திரமான மக்களும் ருஷ்ய அரசின் எல்லை

மாவட்டங்களில் குடியமர்ந்த நகரப்புற ஏழை மக்களு மாவர்.

18ஆம் நூற்ருண்டுக்குள் கசாக்குகள்—தனியுரிமை பெற்ற விவசாயிகளாயினர். விசேஷ நிபந்தனைகளின் கீழ் அரசுக்கு ராணுவ சேவை புரிந்தனர். அவர்களைக் கொண்ட விசேஷ ராணுவப் பிரிவுகள் நிறுவப்பட்டன. இவை புரட்சி இயக்கத்தை எதிர்த்துப் போரிடுவதற்காக எதேச்சாதி காரத்தால் பயன்படுத்தப்பட்டன.

பக்கம் 21.

13 பாரிஸ் கம்யூன்—1871ல் நடந்த புரட்சியின் விளைவாகப் பாரிஸ் நகரத் தொழிலாளர்களால் தோற்றுவிக்கப்பட்ட தொழிலாளி வர்க்க அரசாங்கம். வரலாற்றில் இது முதலாவது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமாக விளங்கிற்று. மார்ச் 18 முதல் மே 28 வரை 72 நாட்கள் பாரிஸ் கம்யூன் நீடித்தது.

பக்கம் 22.

14 நியேலொ நரோதா ஆதரவாளர்கள்—சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களைக் குறிப்பது. 1917 மார்ச் முதல் 1918 ஜூலை வரை ''நியேலொ நரோதா'' எனும் தினசரி செய்திப் பத்திரிகை அவர்களது கட்சி ஏடாக இருந்தது. அதன் எதிர்ப்புரட்சி நடவடிக்கை காரணமாக இப்பத்திரிகை மூடப்பட்டது.

பக்கம் 28.

15 காடேட்டுகள்—ருஷ்யாவின் மிதவாத முடியரசுவாத முதலாளித்துவ வர்க்கத்தினரின் முதன்மையான கட்சியான அரசியல் சட்ட ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர்களாவர். இக்கட்சி 1905 அக்டோபரில் நிறுவப்பட்டது. முதலாளி வர்க்கத்தினர், ஸெம்ஸ்த்வோ தலைவர்களான நிலப் பிரபுக்கள், முதலாளித்துவ அறிவுத் துறையாளர் பிரதிநிதிகளைக் கொண்டதாக அது இருந்தது. பின்னால் காடேட்டுகள் ஏகாதிபத்திய முதலாளி வர்க்கத்தின் கட்சியாயினர்.

முதல் உலகப் போரின் போது காடேட்டுகள் ஜார் அரசாங்கத்தின் கொள்ளைக்காரத்தனமான அயல்துறைக் கொள்கையை ஆதரித்தார்கள். 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியில் முடியரசைப் பாதுகாக்க முயன்றனர். முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் முக்கிய பதவிகள் வகித்த அவர்கள் ஒரு ஜனவிரோதமான எதிர்ப்புரட்சிக் கொள்கையினைப் பின்பற்றினர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு அவர்

கள் சோவியத் ஆட்சி அதிகாரத்தின் மாருத விரோதிகளா யினர், ஆயுதமேந்திய எதிர்ப்புரட்சிச் செயல்கள் மற்றும் அன்னியத் தலையீட்டுப் போர்ச்செயல்கள் அனைத்திலும் பங்கேற்றனர்.

பக்கம் 29.

16 இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்—இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் (சர்வதேசியவாதிகள்) கட்சி 1917 நவம்பர் 19 முதல் 28 (டிசம்பர் 2 முதல் 11) வரை நடைபெற்ற அதன் முதல் அகில ருஷ்யக் காங்கிரசில் முறையாக நிறுவப்பட்டது. அதுவரையில் அவர்கள் முதல் உலகப் போரின் போது உதித்தெழுந்த சோஷலிஸ்டுப் புரட்சிக் கட்சியின் இடதுசாரிப் பிரிவாக இருந்தனர்.

சோவியத்துகளின் இரண்டாம் அகில ருஷ்யக் காங்கிரசில் சோஷலிஸ்டுப் புரட்சியாளர் பிரிவில் இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் பெரும்பான்மையாக அமைந்தனர். காங்கிரசில் பங்கு கொள்வது சம்பந்தமாக இப் பிரிவு பிளவுற்றது. தமது கட்சியின் மத்தியக் கமிட்டியின் நெறியாணைகளின்படி செயல்பட்ட வலதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் காங்கிரசில் இருந்து வெளியேறினர். இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் தொடர்ந்து இருந்து நிகழ்ச்சி நிரலில் எழுந்த முக்கிய இனங்கள் மீது போல்ஷிவிக்குகளுடன் சேர்ந்து ஓட்டளித்தனர். அந்த சமயத்தில் விவசாயிகள் மத்தியில் பல ஆதரவாளர்களைக் கொண்டிருந்த இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களுடன் ஒரு கூட்டணி அமைப்பது அவசியம் என்று போல்ஷிவிக்குகள் கருதி சோவியத் அரசாங்கத்தில் சேர முன்வரும்படி இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களை அழைத்தனர். ஆனால் இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள் சேர மறுத்தனர். நவம்பரிலும், டிசம்பர் துவக்கத்திலும் நடந்த பேச்சுவார்த்தைகளின் விளைவாக அரசாங்கத்தில் அவர்கள் பங்கு பற்றுவது சம்பந்தமாக ஓர் உடன்பாடு எட்டப்பட்டது. அவர்கள் மக்கள் கமிசார்கள் கவுன்சிலின் பொதுக் கொள்கையைப் பின்பற்ற ஒப்புக் கொண்டு மக்கள் கமிசாரகங்கள் பலவற்றின் அமைப்புகளில் பதவி ஏற்றனர்.

போல்ஷிவிக்குகளுடன் ஒத்துழைக்கும் அதே போதில் இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள் சோஷலிஸ்டு நிர்மாணம் பற்றிய அடிப்படைப் பிரச்சினைகளில் அவர்களுடன் வேறுபட்டனர், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை எதிர்த்தனர். 1918 ஜனவரி-பிப்ரவரி மாதங்களில்

அவர்களது மத்தியக் கமிட்டி பிரேஸ்த் சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளப்படுவதற்கு எதிராகப் பிரசாரம் நடத்தியது, இந்த உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டு, மார்ச் மாதத்தில் சோவியத்துகளின் நாலாம் காங்கிரசால் ஏற்புறுதி செய்யப்பட்ட போது அவர்கள் மக்கள் கமிசார்கள் கவுன்சிலில் இருந்து விலகிக் கொண்டு விட்டார்கள். 1918 கோடையில் நாட்டுப்புறப் பகுதிகளில் சோஷலிஸ்டுப் புரட்சி வளர்ச்சியடைந்து, ஏழை விவசாயிகள் கமிட்டிகள் அமைக்கப்பட்டதோடு இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளரின் சோவியத் எதிர்ப்புப் போக்கியல்புகள் மேலும் வலுப்பெற்றன. ஜூலை மாதத்தில் அவர்களது மத்தியக் கமிட்டி மாஸ்கோவில் இருந்த ஜெர்மன் தூதர் மிர்பாஹ் படுகொலை செய்யப்படுவதை ஏற்பாடு செய்தது. சமாதான உடன்படிக்கை ஏற்படாது குலைவு செய்யும் உத்தேசத்தோடும் சோவியத் ருஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் இடையே போரைத் தூண்டிவிடவும் கருதி சோவியத் ஆட்சி அதிகாரத்துக்கு எதிராக ஆயுதமேந்திய கலகத்தையும் ஏற்பாடு செய்தது. ஜூலை கலகம் ஒடுக்கப்பட்ட பிறகு நடைபெற்ற சோவியத்துகளின் ஐந்தாவது அகில ருஷ்யக் காங்கிரஸ் தமது தலைவர்களின் கருத்துக்களை ஏற்று நடந்து வந்த இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களை சோவியத்துகளில் இருந்து விலக்கிட முடிவு செய்தது. மக்கள் திரள் மத்தியில் எல்லா ஆதரவையும் இழந்து விட்ட இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கட்சி சோவியத் ஆட்சி அதிகாரத்திற்கு எதிராக ஆயுதமேந்திய போராட்டத்தைத் துவங்கியது. போல்ஷிவிக்குகளுடன் ஒத்துழைக்க விரும்பிய சில இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள் 'நரோத்னிக் கம்யூனிஸ்டுக் கட்சி', 'புரட்சிகரக் கம்யூனிஸ்டுக் கட்சி' ஆகியவற்றை நிறுவினார்கள். அவர்களில் மிகவும் கணிசமான பேர் பின்னால் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்தார்கள்.

பக்கம் 30.

17 அரசாங்க டூமா—*1905* புரட்சிகர நிகழ்ச்சிகளின் விளைவாக ஜாரிச அரசாங்கம் கட்டாயமாகக் கூட்டும்படி ஏற்பட்டதான பிரதிநிதித்துவ அமைப்பாகும். டூமா சம்பிரதாயமாக ஒரு சட்டமியற்றும் அமைப்பு, அதற்கு உண்மையான ஆட்சி அதிகாரம் இல்லை. டூமாவுக்கான தேர்தல்கள் நேரடியாகவோ சமத்துவ அடிப்படையிலோ சர்வப்பொதுவாகவோ நடக்கவில்லை. தொழிலாளி வர்க்கம் மற்றும் ருஷ்யரல்லாத தேசிய இனத்தவருக்கு வோட்

டுரிமை மிகவும் குறுக்கப்பட்டிருந்தது. கணிசமான அளவிலான தொழிலாளர் விவசாயிகளுக்கு எவ்விதமான வோட்டளிக்கும் உரிமையும் இருக்கவில்லை. முதலாவது டூமாவும் (1906 ஏப்ரல்-ஜூலை) இரண்டாவது டூமாவும் (1907 பிப்ரவரி-ஜூன்) ஜார் அரசாங்கத்தால் கலைக்கப்பட்டன. 1907ல் ஜூன் 3ல் திடீர் அரசியல் மாற்றத்திற்குப் பிறகு அரசாங்கம் ஒரு புதிய தேர்தல் வாக்களிப்புச் சட்டத்தை வெளியிட்டது. அச்சட்டம் தொழிலாளர், விவசாயிகள், நகரப்புற குட்டிமுதலாளித்துவ வகைப்பட்டோரின் ஓட்டுரிமையை மேலும் அதிகமாகக் குறுக்கியது. மூன்ருவது டூமா (1907-12) மற்றும் நாலாவது டூமா (1912-17)க்களில் நிலப்பிரபுக்கள்,பெருமுதலாளிகளின் பிற்போக்கு கூட்டணி முழுமையாக ஆதிக்கம் செலுத்துவதை உத்தரவாதம் செய்தது.

பக்கம் 31.

18 போர்முனையில் இருந்து அப்போதுதான் திரும்பிவந்த ஓர் அதிகாரியான துபாஸவ் 1917 செப்டம்பர் 21 (அக்டோபர் 4)ல் பெத்ரோகிராத் சோவியத்தின் கூட்டத்தில் ஆற்றிய உரையை லெனின் மனதிற்கொண்டு இவ்வாறு குறிப்பிடுகிருர்.

பக்கம் 34.

19 பின்லாந்தின் சமூக-ஜனநாயகக் கட்சித் தலைமையின் அறைகூவலை ஒட்டி 1918 ஜனவரி 27ல் பின்லாந்தில் புரட்சி வெடித்தது. ஸ்வின்ஹவுட் முதலாளித்துவ அரசாங்கம் வீழ்த்தப்பட்டது, ஆட்சி அதிகாரம் தொழிலாளர் கரங்களுக்கு மாற்றப்பட்டது. ஜனவரி 29ல் பின்லாந்தின் புரட்சி அரசாங்கம் மக்கள் பிரதிநிதிகளின் கவுன்சில் நிறுவப்பட்டது.

ஆனல் பாட்டாளி வர்க்கப் புரட்சி பின்லாந்தின் தெற்குப் பகுதியில் மட்டுமே வெற்றி பெற்றிருந்தது. ஸ்வின்ஹவுட் அரசாங்கம் நாட்டின் வட பகுதியில் உறுதிப்பட்டு இருந்தது. அங்கு எதிர்ப்புரட்சி சக்திகள் அனைத்தும் ஒன்று குவியத் தொடங்கின. ஜெர்மன் கெய்சர் அரசாங்கத்திடம் உதவி கோரின. 1918 மே 2ந் தேதி ஜெர்மன் ராணுவப் படைகள் தலையிட்டன. கடுமையான உள்நாட்டுப் போர் மூன்று மாதங்கள் நீடித்தது. இவற்றின் விளைவாக பின்லாந்தில் புரட்சி நசுக்கப்பட்டது. வெள்ளை பயங்கர அடக்குமுறை தாண்டவமாடியது. புரட்சிகரத்

தொழிலாளர் விவசாயிகள் பலர் தூக்கிலிடப்பட்டனர், பலர் சிறைகளில் சித்திரவதை செய்யப்பட்டனர்.

பக்கம் 37.

20 இங்கு குறிப்பிடப்படுவது மார்ச் 1ந் தேதி லெனின் தலைமையிலான ஒரு விசேஷக் கமிஷன் கையொப்பமிட்டதான ''ருஷ்யன் மற்றும் பின்னிஷ் சோஷலிஸ்டுக் குடியரசுகளுக்கு இடையிலான உடன்படிக்கையாகும்.'' பின்லாந்தின் அரசின் சர்வவுரிமையினை அங்கீகரிக்கும் அடிப்படையில் உருவான இந்த உடன்படிக்கை சோவியத் அரசாங்கம் தேசங்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய கோட்பாட்டை முரணின்றிக் கடைப்பிடித்து வருகிறது என்பதற்கு ஓர் அத்தாட்சியாக விளங்கியது. மக்கள் கமிசார்கள் கவுன்சிலால் அங்கீகரிக்கப்பட்ட இந்த உடன்படிக்கை ''அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் இஸ்வேஸ்தியா'', இதழ் 45ல் 1918 மார்ச் 10ந் தேதி பிரசுரிக்கப்பட்டது.

பக்கம் 37.

21 **சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள்** என்ற லெனினது நூல் கையெழுத்துப் பிரதியில் ''இன்றைய நிலைமையில் சோவியத் அரசாங்கத்தின் பணிகள் மீதான ஆராய்ச்சியுரைகள்'' என்ற தலைப்பைக் கொண்டதாக இருந்தது.

லெனினது ''ஆராய்ச்சியுரைகள்'' 1918 ஏப்ரல் 26ல் கட்சியின் மத்தியக் கமிட்டிக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன. மத்தியக் கமிட்டி அவற்றை ஒருமுகமாக அங்கீகரித்து ''பிராவ்தா'', ''இஸ்வேஸ்தியா'' பத்திரிகைகளிலும் தனிப்பட்ட பிரசுரமாகவும் வெளியிடுவது என்று முடிவு செய்தது.

1918ல் இந்த வெளியீட்டின் பத்துக்கும் அதிகமான பதிப்புக்கள் மாஸ்கோ, பெத்ரோகிராத், சராத்தவ், காஸான், தம்போவ் மற்றும் ருஷ்யாவின் இதர நகரங்களில் வெளியிடப்பட்டன. இதே ஆண்டில் இந்த வெளியீடு நியூயார்க்கில் ஆங்கில மொழியிலும் ஜினிவாவில் பிரெஞ்சு மொழியிலும் வெளியிடப்பட்டது. ஜூரிக்கில் ஃபி. பிளாட்டன் பதிப்பித்த ஜெர்மன் மொழி சுருக்கப் பதிப்பு *Am Tage nach der Revolution* என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது.

இந்த ''ஆய்வுரையின்'' சுருக்கமான மறுவெளியீட்டை தீர்மான வடிவில் தயாரித்த அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி, அதன் அமர்வில் சோவியத் ஆட்சி அதி

காரத்தின் உடனடிப் பணிகள் குறித்து அறிக்கை செய்யும் பொறுப்பை மத்தியக் கமிட்டி லெனினிடம் ஒப்படைத்தது. (இத்தொகுதியின் பக்கங்கள் 116-121 பார்க்க.)

பக்கம் 50.

22 லெனினது ஆலோசனை மீது செயல்பட்ட மக்கள் கமிசார்கள் கவுன்சில் ''மக்கள் கமிசார்கள் மற்றும் உயர் பதவி அரசாங்க ஊழியர்கள் அலுவலர்களின் ஊதியம் சம்பந்தமாக'' 1917 நவம்பர் 18 (டிசம்பர் 1)ந் தேதி ஒரு முடிவை ஏற்றது. இந்த நகல் முடிவை லெனின் எழுதித் தயாரித்திருந்தார்.

இந்த முடிவின்படி மக்கள் கமிசார்களின் அதிகப்பட்ச மாதச் சம்பளம் 500 ரூபிள் எனவும் கூடுதலாக குடும்பத்தில் வேலை செய்ய இயலாத நிலையில் இருக்கும் ஒவ்வொருவருக்கும் 100 ரூபிள் அனுமதிப்பது எனவும் திட்டம் செய்யப்பட்டது. இந்தத் தொகை தொழிலாளியின் சராசரி மாதச் சம்பளத்துக்கு இணையாகும். 1918 ஜனவரி 2 (15)ல் மக்கள் கமிசார் கவுன்சில், லெனினல் கையொப்பமிடப்பட்ட இந்த முடிவு குறித்து விவரம் கோரிய தொழிலாளர் நலத்துறை மக்கள் கமிசார் அ.கி. ஷ்லியாப்னிக்கவுக்கு பதிலளிக்கும் முறையில் 1917 நவம்பர் 18 (டிசம்பர் 1)ல் அரசாணை நிபுணர்கள் ஊதியத்தை நிர்ணயிக்கவில்லை எனவும் விஞ்ஞானிகள் தொழில்நுட்ப நிபுணர்களுக்கு உயர் ஊதியம் அனுமதிக்கலாம் என்று குறிப்பிட்டது.

பக்கம் 66.

23 நோவஷீஸ்னெந்த்சி — மென்ஷிவிக்-சர்வதேசியவாதிகளின் ஒரு பிரிவு. இது ''நோவயா ஷீஸ்ன்'' (''புதிய வாழ்வு'') என்ற செய்திப் பத்திரிகையை வெளியிட்டது. இப்பத்திரிகை 1917 ஏப்ரல் 18 (மே 1) முதல் 1918 ஜூலை வரையில் பிரசுரிக்கப்பட்டது. இப்பத்திரிகை அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியையும் சோவியத் ஆட்சி அதிகாரம் நிலைநாட்டப்பட்டதையும் பகைமை உணர்வுடன் எதிரிட்டது.

பக்கம் 67.

24 சோவியத் ஆட்சி அதிகாரத்தின் ஆரம்ப நாட்கள் தொட்டே அயல்துறை வர்த்தகம் கண்காணிப்பின் கீழ் வந்தது. அயல்துறை வர்த்தகத்தில் அரசு ஏகபோகத்தைக் கொண்டு வருவது பற்றிய விஷயத்தை லெனின் 1917 டிசம்பரில் எழுப்பினர். அயல்துறை வர்த்தகத்தில் ஏக

போகம் பற்றிய அரசாணையை மத்திய நிர்வாகக் கமிட்டி 1918 ஏப்ரல் 22ந் தேதி அங்கீகரித்தது.

பக்கம் 72.

25 1918 ஜூன் 17ந் தேதியன்று மக்கள் கமிசார்கள் கவுன்சில் ''நேரடி வரிகள் விதிப்பு பற்றிய 1917 நவம்பர் 24ந் தேதிய அரசாணையில் மாற்றமும் சேர்ப்பும் குறித்த அரசாணையை'' ஏற்றது. இது வருவாய் மற்றும் சொத்துக்கள் மீதான வரியைக் கறாராக நிர்ணயம் செய்தது.

பக்கம் 73.

26 நுகர்வாளர் கூட்டுறவு சங்கங்கள் பற்றிய அரசாணை 1918 ஏப்ரல் 10ந் தேதியன்று மக்கள் கமிசார்கள் கவுன்சிலால் ஏற்கப்பட்டது. ஏப்ரல் 11ந் தேதி நடைபெற்ற அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில் ஊர்ஜிதம் செய்யப்பட்டது. இது லெனினது கையொப்பத்துடன் ஏப்ரல் 13ந் தேதிய ''பிராவ்தா'', இதழ் 71லும், ஏப்ரல் 16ந் தேதிய ''அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் இஸ்வேஸ்தியா'', இதழ் 75லும் வெளியிடப்பட்டது. நகல் அரசாணைக்குப் பல திருத்தங்களை லெனின் கொண்டு வந்தார்: அரசாணையின் பாராக்கள் 11, 12, 13 அவரால் முழுதும் எழுதப்பட்டவை. லெனினது திருத்தங்களுடன் இந்த அரசாணை மக்கள் கமிசார்கள் கவுன்சிலாலும் பின்னர் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியாலும் அங்கீகரிக்கப்பட்டது.

பக்கம் 77.

27 இங்கு குறிப்பிடப்படுவது, ஏப்ரல் 3ந் தேதி தொழிற்சங்கங்களின் அகில ருஷ்ய மத்தியக் கவுன்சிலால் ஏற்கப்பட்டதும், 1918 ஏப்ரல் முதலில் ''தேசியப் பொருளாதாரம்'', இதழ் 2ல் வெளியிடப்பட்டதுமான ''தொழிலாளர் கட்டுப்பாடு பற்றிய விதி முறைகள்'' ஆகும். தொழிற்சங்கக் கவுன்சில் நாட்டிலுள்ள எல்லா அரசுத் தொழில் நிறுவனங்களிலும் உள் ஒழுங்கியக்கத்துக்கான கறாரான விதிகளைப் புகுத்த உத்தேசித்தது. உற்பத்தி அளவுகளை நிர்ணயிக்கவும் தொழிலாளர் உற்பத்தி ஆற்றலைக் கணக்கு வைக்கவும் தொழிலாளருக்கு வேலைவீதக் கூலி முறையைக் கொண்டுவரவும் அளவுக்கு மேல் அதிகமாக நிறைவேற்றப்பட்ட வேலைக்கு போனஸ் வழங்கவும் தொழிலாளர் கட்டுப்பாட்டைக் குலைப்போர் விஷயத்தில் கடுமையான தண்டனை நடவடிக்கை மேற்கொள்ளவும் உத்தேசித்தது.

அகில ருஷ்ய மத்திய தொழிற்சங்க கவுன்சில் எடுத்த முடிவுகளின் அடிப்படையில் உலோகத் தொழிலாளர் சங்கத்தின் மத்தியக் கமிட்டி உலோகத் தொழிலில் வேலை வீதக் கூலி, போனஸ் முறை பற்றிய நெறியாணைகளை எல்லா கீழ்மட்டப் பிரிவுகளுக்கும் விடுத்தது. வேலைவீதக் கூலி கோட்பாடு இறுதியாக ஏற்கப்பட்டு 1918 டிசம்பரில் சோவியத் ''தொழில் பற்றிய சட்டத்தின் தொகுப்பில்'' வெளியிடப்பட்டது.

பக்கம் 82.

28 இங்கு குறிப்பிடப்படுவது நிர்வாகத்தை மத்தியப்படுத்தல், சாலைப் பாதுகாப்பு, போக்குவரத்து சாதனங்களின் ஆற்றலை உயர்த்தல் சம்பந்தமாக மக்கள் கமிசார்கள் கவுன்சில் பிறப்பித்த அரசாணையாகும். போக்குவரத்து சாதனங்கள் துறை மக்கள் கமிசாரகத்தின் ஆலோசனையைக் கவனத் திற்கொண்டு ரயில்வேத் துறை விவகாரங்களில் பல் வேறு நிறுவனங்களின் தலையிடாமை சம்பந்தமான நகல் அரசாணையைப் பரிசீலித்த மக்கள் கமிசார்கள் கவுன்சில் லெனினது பின்வரும் யோசனைகளின் அடிப்படையில் இந்த அரசாணையை மறு உருவாக்கம் செய்ய ஒரு விசேஷக் கமி ஷனைப் பணித்தது: ''1) மேலும் அதிக மத்தியத்துவமாக் கல், 2) ஒவ்வொரு வட்டார மையத்திற்கும் ரயில்வே ஸ்தாபனத்தால் தேர்வு செய்யப்படும் தனிப்பட்ட பொறுப் புள்ள நபர்களை (வேலை இயக்குனரை) நியமித்தல், 3) அவர்களது உத்தரவுகளை முழுநிறைவாகச் செயல்படுத்தல், 4) ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக ராணுவக் காவலர் படைப்பிரிவுக்கு சர்வாதிகார உரிமைகள், 5) இரயில்வே இஞ்சின், வண்டிகள் தொகுதி அதன் இட அமைப்புப் பற்றிக் கணக்கு வைப்பதற்கான நடவடிக்கைகள், 6) தொழில் நுட்பப் பிரிவு உருவாக்கப்படுவதற்கான நடவடிக்கைகள், 7) எரிபொருளூட்டல்''. கமிஷனால் முன்வைக்கப்பட்ட இந்த நகல் அரசாணை மார்ச் 21ந் தேதி நடைபெற்ற மக்கள் கமிசார்கள் கவுன்சில் அமர்வில் பரிசீலிக்கப்பட்டது. லெனின் பல முக்கியமான திருத்தங் களைக் கொண்டுவந்தார். அதற்குப் பின் இது அரசாங்கத் தால் அங்கீகரிக்கப்பட்டது. மென்ஷிவிக்குகள், இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களால் பெருமளவு செல் வாக்குச் செலுத்தப்பட்டு வந்த ரயில்வேத் தொழிலாள ரின் அகில ருஷ்ய நிர்வாகக் கமிட்டி இந்த அரசாணை மீது பகைமைப் போக்கை கடைப்பிடித்தது. இதன் தொடர் பாக மக்கள் கமிசார்கள் கவுன்சிலின் மார்ச் 23ந் தேதிய

அமர்வில் இந்த அரசாணையை மாற்றுவது பற்றிய பிரச்சினை எழுப்பப்பட்டது, இரயில்வேப் போக்குவரத்தில் நாச வேலை மற்றும் மந்தப்போக்குகளை அகற்றுவதற்கு கறாரான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுவதன் அவசியத்தை லெனின் விளக்கிக்கூறினார். மேலும் அரசாணையை ஆணித்தரமாக உறுதிப்படுத்தும் திருத்தங்களையும் கொண்டுவந்தார். இந்தத் திருத்தங்களுடன் சேர்ந்து இந்த அரசாணை மார்ச் 23ந் தேதி அரசாங்கத்தால் அங்கீகரிக்கப் பட்டது. மார்ச் 26ந் தேதி லெனினுல் கையொப்பமிடப் பட்ட வடிவில் ''அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் இஸ்வேஸ்தியா'', இதழ் 57ல் வெளியிடப்பட்டது.

பக்கம் 97.

29 **நோவயா ஷீஸ்ன்**—குறிப்பு 23 பார்க்க.

வ்பெரியோத்—மார்ச் 1917 முதல் மாஸ்கோவில் இருந்து பிரசுரிக்கப்பட்டு வந்த மென்ஷிவிக் தினசரி. இது மென்ஷிவிக்குகளின் மாஸ்கோ அமைப்பின் ஏடாகவும், பிறகு மாஸ்கோ அமைப்பு மற்றும் மத்தியப் பிராந்தியத்தின் ரு.ச.ஜ. தொ. கட்சி (மென்ஷிவிக்) கமிட்டியின் ஏடாகவும் வெளியிடப்பட்டது. 1918 ஏப்ரல் 2 முதல் இந்தப் பத்திரிகை மென்ஷிவிக்குகளின் மத்தியக் கமிட்டியின் ஏடாகவும் வந்தது. அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு இதன் எதிர்ப்புரட்சி நடவடிக்கைகள் காரணமாக இப்பத்திரிகை இருமுறை நிறுத்தப்பட்டது. 1919 பிப்ரவரியில் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் முடிவுப்படி இப்பத்திரிகை மூடப்பட்டது.

தியேலோ நரோதா—குறிப்பு 14 பார்க்க.

நாஷ் வெக்—காடேட் எதிர்ப்புரட்சிக் கட்சியின் மத்திய ஏடான ''ரெச்'' பத்திரிகையின் பெயர்களில் ஒன்று. இது 1906 பிப்ரவரி முதல் 1917 அக்டோபர் 26 (நவம்பர் 8) வரை வெளிவந்தது. பின்னுல் (ஆகஸ்டு 1918 வரை) வேறு பெயர்களில் வெளிவந்தது.

பக்கம் 101.

30 **அக்டோபர் 1905**—அக்டோபர் பொது அரசியல் வேலை நிறுத்தம்.

பிப்ரவரி 1917—பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி வெடித்தது.

அக்டோபர் 1917—அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சி வெடித்தது.

பக்கம் 104.

31 லெனின் இங்கு எங்கெல்சின் ''டூரிங்குக்கு மறுப்பு'' எனும் நூலைக் குறிப்பிட்டு மேற்கோள் தருகிறார். (பிரெடெரிக் எங்கெல்ஸ் ''டூரிங்குக்கு மறுப்பு.'' மாஸ்கோ. 1979.)

பக்கம் 108.

32 அரசியல் நிர்ணய சபை கூட்டப்படுவது குறித்து இடைக்கால அரசாங்கம் அதன் 1917 மார்ச் 2(15) பிரகடனத்தில் அறிவித்தது. அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல்களை செப்டம்பர் 17(30)ந் தேதிக்கு நிர்ணயிக்கும் முடிவை ஜூன் 14(27)ந் தேதி இடைக்கால அரசாங்கம் ஏற்றது. ஆனால் ஆகஸ்டில் இத்தேர்தல்களை நவம்பர் 12 (25) வரை ஒத்திப் போட்டது.

அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல்கள் அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு நவம்பர் 12(25)ல் நிர்ணயித்த நேரத்தில் அக்டோபர் புரட்சிக்கு முன்பாகத் தயாரித்த பட்டியலின்படி நடைபெற்றது. இந்த சபையின் இயைபு முதலாளித்துவ வர்க்கம் ஆட்சி அதிகாரத்தில் இருந்த போது நிலவிய சக்திகளின் அணிசேர்க்கையைப் பிரதிபலித்தது. சோவியத் ஆட்சி அதிகாரத்தை ஆதரித்த மிகப் பெரிய பெரும்பான்மை மக்களின் சித்தத்திற்கும், முதலாளி வர்க்கம் மற்றும் நிலப் பிரபுக்களின் நலன்களை வெளிப்படுத்திய அரசியல் நிர்ணய சபையின் சோஷலிஸ்டு புரட்சியாளர் மென்ஷிவிக் காடேட்டு பெரும்பான்மை பின்பற்றிய கொள்கைக்கும் இடையே முரண்பாடு இருந்தது. ''உழைக்கும் மற்றும் சுரண்டப்பட்ட மக்களின் உரிமைகள் பற்றிய பிரகடனத்தை'' அரசியல் நிர்ணய சபை விவாதிக்க மறுத்து சமாதானம் நிலம் பற்றிய அரசாணைகளையும், சோவியத்துகளிடம் ஆட்சி அதிகாரம் மாற்றி வழங்கப்படுவதையும் அங்கீகரிக்க மறுத்த போது 1918 ஜனவரி 6(19)ல் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி முடிவுப்படி அது கலைக்கப்பட்டது.

பக்கம் 108.

33 ''விஞ்ஞான தொழில் நுட்ப வேலைக்கான நகல் திட்டம்'' தேசியப் பொருளாதாரம் பற்றிய பிரச்சினைகளை எடுத்துச் செயல்பட ருஷ்யாவின் விஞ்ஞானிகளை ஒன்று திரட்டுவதில் ஒரு முக்கியமான கட்டத்தைக் குறிக்கிறது.

1918 ஜனவரியில் லெனினுலும் சோவியத் அரசாங்கத்தாலும் விஞ்ஞானப் பேரவையுடன் பேச்சுக்கள் தொடங்கப்பட்டன. கல்விக்கான மக்கள் கமிசாரகத்தின் வேலைகளை லெனின் நெறியாக்கம் செய்தார். அது இந்தப்

பேச்சுக்களை நடத்தியது. மார்ச் மாத இறுதியில் சோவியத் அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்த அறிக்கையில் விஞ்ஞானப் பேரவை நாட்டின் இயற்கை வள ஆதாரங்களைத் தேடி ஆராய்வதில் வேலை செய்யத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தது. இதன்படி, லெனின் தலைமையில் ஏப்ரல் 12ந் தேதி நடைபெற்ற மக்கள் கமிசார்கள் கவுன்சில் கூட்டத்தில் ''நாட்டின் தொழில் துறையைச் சரியான முறையில் பகிர்ந்தளிப்பது, பொருளாதார மூலவளங்களை மிகவும் சீராகப் பயன்படுத்துவது என்ற பிரச்சினைகளுக்கு முறையாகத் தீர்வு காணும் அவசரப் பணி'' விஞ்ஞானப் பேரவையிடம் ஒப்படைக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட விஞ்ஞானப் புத்தாராய்ச்சிக்கு நிதி உதவ வேண்டுவதன் அவசியத்தை மக்கள் கமிசார்கள் கவுன்சில் அங்கீகரித்தது.

பக்கம் 115.

34 1915ல் விஞ்ஞானப் பேரவையால் உருவாக்கப்பட்ட ருஷ்யாவின் இயற்கை உற்பத்தி சக்திகளை ஆராய்வதற்கான கமிஷனின் விஷயாதாரங்களை மனதிற்கொண்டு லெனின் இதைக் குறிப்பிடுகிறார். லெனினது நெறிமுறைப்படி இந்தக் கமிஷனின் ஆசிரியப் பணிகள் கணிசமாக விரிவாக்கப்பட்டன. ''ருஷ்யாவின் செல்வ வளம்'' மற்றும் ''ருஷ்யாவின் இயற்கை உற்பத்தி சக்திகள்'' பற்றிய பல தொகுப்புகள் வெளிவரத் தொடங்கின. சோவியத் ஆட்சியின் முதல் மூன்றாண்டுகளில் (1918-20) இக்கமிஷன் புரட்சிக்கு முந்திய மூன்று ஆண்டுகளைக் காட்டிலும் நான்கு மடங்கு அதிகமான நூல்களை வெளியிட்டது.

பக்கம் 115.

35 **சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள் பற்றிய ஆறு ஆய்வுரைகள்,** 1918 ஏப்ரல் 29ல் நடந்த கூட்டத்தில் மத்திய நிர்வாகக் கமிட்டியில் சோவியத் அரசாங்கத்தின் உடனடிப் பணிகள் பற்றிய அவரது அறிக்கை விவாதிக்கப்பட்ட பிறகு, அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் நெறியாணைப்படி லெனினால் எழுதப்பட்டன. மே 3ந் தேதி மிகச் சில திருத்தங்களுடன் இந்த ஆராய்ச்சியுரைகள் கட்சியின் மத்தியக் கமிட்டியால் ஒருமுகமாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. லெனினது ஆராய்ச்சியுரைகள் ''எல்லா சோவியத்துகளின் வேலைகளுக்கும் அடிப்படையாக அமைதல் வேண்டும்'' என்ற சுட்டுக் குறிப்புடன் மே 4ந் தேதி அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் தலைமைக் குழு

அவற்றை வட்டார சோவியத்துகளுக்கு அனுப்பி வைத்தது.

பக்கம் 116.

36 ஜெர்மனியுடன் ஒரு சமாதான உடன்படிக்கையை (பிரேஸ்த்-லிட்டோவ்ஸ்க் சமாதான உடன்படிக்கை) ஏற்படுத்திக் கொள்வது தொடர்பாக 1918ஆம் ஆண்டுத் துவக்கத்தில் எழுந்ததான ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளின்'' எதிர்ப்பாளர் பிரிவு இங்கு குறிப்பிடப்படுகிறது. ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகள்'' ஒரு மனித நிர்வாகமும், தொழிலாளர் கட்டுப்பாடும் புகுத்தப்படுவதையும் எதிர்த்தார்கள். தொழில் துறையில் முதலாளித்துவ வகைப்பட்ட நிபுணர்கள் நியமிக்கப்படுவதையும் எதிர்த்தார்கள். லெனின் தலைமையில் இருந்த கட்சி ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுகளின்'' கொள்கைக்குத் தீர்மானகரமான பதிலடி கொடுத்தது.

பக்கம் 121.

37 இங்கு குறிப்பிடப்படுவது கட்சி விரோத ''இடதுசாரி கம்யூனிஸ்டுப்'' பிரிவின் கோஷ்டிவாத ஏடான கம்யூனிஸ்ட் வாரப் பத்திரிகையாகும். இது மாஸ்கோவில் 1918 ஏப்ரல் 20 முதல் ஜூன் வரை வெளியிடப்பட்டது. 4 இதழ்கள் பிரசுரமாயின.

பக்கம் 123.

38 இந்தத் தொடர்கள் சல்திக்கோவ்-ஷெத்ரீன் எழுதியுள்ள ''மாகாணத்தில் இருந்து வந்த மனிதனின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நாட்குறிப்பு'' என்ற நவீனத்தில் இருந்து தரப்பட்டவை.

பக்கம் 126.

39 நார்ட்ஸீஸ்—தொன்மையான கிரேக்க புராணக் கதையில் வரும் ஒரு பாத்திரம். தனது சொந்த நிழலில் மோகம் கொண்ட ஓர் அழகிய வாலிபனைக் குறிப்பது. சுய மோகம் கொண்ட நபர் என்பதன் சித்திரம்.

பக்கம் 128.

40 நொஸ்திரியோவ் — கோகலின் ''இறந்த ஆன்மாக்கள்'' என்ற நூலில் விடாத் தொல்லை தரும் நிலப்பிரபுவின் மாதிரியான ஒரு பாத்திரம்.

பக்கம் 132.

41 ஐங்கர்கள் — பிரஷ்ய பிரபுத்துவ நிலவுடைமையாளர்கள்.

பக்கம் 147.

42 ''பிரான்சிலும் ஜெர்மனியிலும் விவசாயிகள் பிரச்சினை'' என்ற நூலில் எங்கெல்ஸ் விளக்கும் மார்க்சின் அறிவிப்புகளை லெனின் மேற்கோள் தருகிறார் (மார்க்ஸ், எங்கெல்ஸ் ''தேர்வு நூல்கள்''. மாஸ்கோ. 1973, தொகுதி 3, பக்கம் 474).

பக்கம் 152.

43 அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியையும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் மென்ஷிவிக்குகள் எந்த ஒரு அடிப்படை ஆராய்ச்சியுரை கொண்டு எதிர்த்தார்களோ அதை மனதிற்கொண்டு குறிப்பிடுகிறார் லெனின். மென்ஷிவிக்குகளின் இந்தக் கருத்துக்களை வடித்தெடுத்த வெளியீடாக நி. சுஹானவ் எழுதியுள்ள ''புரட்சி பற்றிய குறிப்புகள்'' என்ற நூல் விளங்குகிறது. இவற்றை லெனின் ''நமது புரட்சி'' (சுஹானவ் குறிப்புகள் தொடர்பானது) என்ற நூலில் கண்டன விமர்சனம் செய்துள்ளார்.

பக்கம் 157.

44 கூட்டில் அடைந்த மனிதர்—இதே பெயரில் வெளிவந்த சேகவ் கதையின் முக்கிய பாத்திரம். குறுமனத்தினனை ஓர் அற்பவாதி, எந்த ஒரு புதுப்புனைவையும், முன்முயற்சியையும் கண்டு அஞ்சும் பேர்வழி.

பக்கம் 158.

45 ஸ்நாமியா த்ருதா — தினசரிப்பத்திரிகை. சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கட்சி ஏடு. 1917 செப்டம்பரில் வெளிவரத் தொடங்கியது. 1917 டிசம்பர் முதல் இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் மத்திய ஏடு. இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கலகத்தின் போது 1918 ஜூலையில் மூடப்பட்டது.

பக்கம் 160.

46 இங்கு குறிப்பிடப்படுவது 1917 ஜூன் 11 (24)ந் தேதி இடைக்கால அரசாங்கத்தின் அமைச்சர் மென்ஷிவிக் த்ஸெரெத்தேலி ஆற்றிய உரையாகும். அவர் சோவியத்துகளின் முதல் அகில ருஷ்யக் காங்கிரஸ் தலைமைக் குழு, தொழிலாளர் படையாளர் பிரதிநிதிகளின் பெத்ரோகிராத் சோவியத்தின் நிர்வாகக் கமிட்டி, விவசாயிப் பிரதி

நிதிகள், சோவியத்தின் நிர்வாகக் கமிட்டி மற்றும் காங்கிரசின் எல்லா கோஷ்டிகளின் குழுமம் ஆகியவை அடங்கிய கூட்டுக் கூட்டத்தில் இந்த உரை நிகழ்த்தினர். ஜூன் 10 (23)ந் தேதி போல்ஷிவிக்குகளால் துவக்கப்பட்ட பெத்ரோகிராத் தொழிலாளர் படையாளர்களின் அமைதியான ஆர்ப்பாட்டம் சம்பந்தமான பிரச்சினை மீதான விவாதத்தில் அவர் பேசினர். அவரது உரை அவதூறு செய்வதாயும் எதிர்ப்புரட்சித் தன்மை கொண்டதாயும் இருந்தது. அரசாங்கத்தை எதிர்த்துச் சதி செய்வதாயும் எதிர்ப்புரட்சியில் பங்கு பற்றியிருப்பதாயும் போல்ஷிவிக்குகளை அவர் குற்றம் சாட்டினர், போல்ஷிவிக்குகளைப் பின்பற்றி நின்ற தொழிலாளர்களிடம் இருந்து ஆயுதங்களைப் பறித்துவிட தீர்மானகரமான நடவடிக்கைகள் எடுப்பதாக அச்சுறுத்தினர்.

பக்கம் *161.*

47 **லிபெர்டான்கள்**—மென்ஷிவிக் தலைவர்களான லிபெர் மற்றும் டான் அவர்களது ஆதரவாளர்களுக்குச் சூட்டப்பட்ட வஞ்சப் புகழ்ச்சியான கேலிப் பெயர். மாஸ்கோவிலிருந்து வெளியிடப்பட்ட போல்ஷிவிக் செய்திப் பத்திரிகையான ''சொத்ஸியால்-டெமக்ராட்,, ஏட்டில் இந்தத் தலைப்புடன் தெம்யான் பேத்னியின் புனை கதைக்குப் பின் இப்பெயர் ஒட்டிக் கொண்டது.

பக்கம் *161.*

48 செங்கதிர்க் கடவுளும் கலைகளின் புரவலனுமான ஃபோயிபசுக்குத் தனது பாடல்களை அனுப்பி வைத்த சாமானியக் கவிஞனைப் பற்றிய வி.லெ. பூஷ்கினின் அங்கதச் செய்யுளை இங்கு லெனின் சுட்டுகிருர். இந்த அங்கதச் செய்யுள் பின் வரும் சொற்களுடன் முடிவுறுகிறது:

அவன் படிக்க கொட்டாவிவிட்டபடி
ஃபோயிபஸ் கேட்டார்:
''இந்தச் சொல்லாளன் வயதென்ன,
எத்தனை நாள் இத்தகைய
இசையொலிப் பாடல் புனைந்துள்ளான்''?
''அவன் வயது பதினைந்து'' எனப்
பதிலிறுத்தான் இராட்டா
''பதினைந்து ஆண்டுகளே மேலில்லை என் இறைவா''
''அப்படியெனில் அளிப்போம்
பிர்ச் மரக் கட்டையால் அடி ஒன்றை.''

பக்கம் *164.*

49 குறிப்பு 28ஐப் பார்க்க.

50 **புர்ஸாக்குகள்**—விடுதிகளில் (புர்ஸாக்கள்) வசிக்கும் சமயப் பள்ளி மாணவர்கள். அவற்றில் வாழ்க்கை மிகவும் கடினமாயும் உடல் ஒறுப்புத் தண்டனை முரடான தன்மை கொண்டதாயும் இருந்தது. இதை ருஷ்ய எழுத்தாளர் நி.கெ.பமியலோவ்ஸ்கி ''புர்ஸா பற்றிய கட்டுரைகள்'' என்ற தமது நூலில் வருணித்துள்ளார்.

பக்கம் 170.

51 **இன்றைய அரசியல் நிலைமை மீதான ஆய்வுரையின்** நகல் வி.இ. லெனினல் 1918 மே மாதம் எழுதப்பட்டது. அந்த சமயமே ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சி (போல்ஷிவிக்) யின் மத்தியக் கமிட்டியால் விவாதிக்கப்பட்டது. இந்த ஆய்வுரையின் இறுதி வாசகம் மத்தியக் கமிட்டியால் மே 13ந் தேதி அங்கீகரிக்கப்பட்டது. அதே நாளில் இந்த ஆய் வுரையின் அடிப்படையில் மத்தியக் கமிட்டியின் நெறி யாணைப்படி லெனின் மாஸ்கோ நகர மக்கள் கட்சி மாநாட் டில் அறிக்கை செய்தார். இந்த மாநாடு பெரும்பான்மை ஓட்டுகளால் இந்த ஆய்வுரையினை ஏற்றுக் கொண்டது.

அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி மற்றும் மாஸ்கோ சோவியத்தின் கூட்டுக் கூட்டத்தில் ''இன்றைய அரசியல் நிலைமை மீதான ஆய்வுரை'' அவர் சமர்ப்பித்த அயல்துறைக் கொள்கை பற்றிய அறிக்கையில் மே 14ந் தேதி லெனினல் முழுமையாக விரித்துரைக்கப்பட்டது. அதே நாளில் லெனினது ஆய்வுரை மாஸ்கோ மாவட்ட மாநாட்டாலும், மே 15ந் தேதி ரு.க. கட்சி (போ.)யின் மாஸ்கோ பிராந்திய மாநாட்டாலும் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

பக்கம் 172.

51a **காடேட்டுகள்**—குறிப்பு 15 பார்க்க.

அக்டோபர்வாதிகள்—அக்டோபர்வாதிகள் கட்சி அல்லது ''அக்டோபர் 17 சங்கம்'' என்பதன் உறுப்பினர்களாவர். இந்த அமைப்பு 1905ல் அக்டோபர் 17ல் வெளியிடப்பட்ட கொள்கை அறிக்கைக்குப் பிறகு நிறுவப்பட்டது. இதில் புரட்சியினுல் பீதியடைந்த ஜார் மக்களுக்கு ''சிவில் உரிமை களுக்கான ஓர் உறுதியான அடிப்படையினை'' வழங்கு வதாக வாக்களித்தார். இந்தக் கட்சி பெரும் தொழிலதி பர்கள் மற்றும் தமது பிரபுத்துவப் பண்ணைகளை முத லாளித்துவ முறையில் நிர்வகித்து வந்த நிலவுடைமை யாளர்களின் நலன்களை ஆதரித்தது. இக்கட்சிக்கு மாஸ்கோ

முதலாளியான அ. இ. குச்கோவும் பெரிய நிலவுடைமையாளரான மி. வி. ரத்ஸியான்கோவும் தலைவர்களாக இருந்தனர். அக்டோபர்வாதிகள் ஜார் அரசாங்கத்தின் உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளை ஆதரித்தனர். 1917 அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப்பிறகு அக்டோபர்வாதிகள் எல்லா ஆயுதமேந்திய எதிர்ப்புரட்சிப் போர்களிலும் சோவியத் ருஷ்யாவுக்கு எதிரான அன்னியத் தலையீட்டாளர்களின் போர்ச் செயல்களிலும் பங்கு பற்றினர்.

பக்கம் 173.

52 **பஞ்சம் பற்றி (பெத்ரோகிராத் தொழிலாளருக்கு ஒரு கடிதம்)** வி. இ. லெனின் புத்தீலவ் (இப்போது கிரவ்) ஆலை கொள்முதல் கமிட்டி தலைவரும் தொழிலாளியுமான அ.வ. இவனேவுடன் உரையாடிய பிறகு எழுதினர்.

குலாக்குகள், உணவுச் சூதாட்டக்காரர்கள், ஒழுங்கு குலைப்போர், லஞ்சப் பேர்வழிகளை எதிர்த்துப் போராட ஒரு நம்பகமான உழைப்பாளர் படை நிறுவும்படி லெனின் நெறியாணை செய்ததை நிறைவேற்றும் முறையில் 1918 ஜூன் துவக்கத்தில் பெத்ரோகிராத் தொழிலாளர் 400 பேர் கொண்ட முதல் உணவுப் படைப்பிரிவை அனுப்பி வைத்தனர்.

பக்கம் 179.

53 **தேசியப் பொருளாதாரத் தலைமைக் கவுன்சில்களின் முதலாவது அகில-ருஷ்ய காங்கிரஸ்** மாஸ்கோவில் 1918 மே 26 முதல் ஜூன் 4 வரையில் நடைபெற்றது. தேசியப் பொருளாதார சோவியத்துகளின் 5 பிராந்திய, 30 குபேர்னியா மற்றும் கணிசமான அளவிலான வட்டார அமைப்புகள், தேசியப் பொருளாதார உயர் கவுன்சில், தொழிற்சங்க அமைப்புகள், ஆலை மற்றும் தொழிற்சாலைக் கமிட்டிகள் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 252 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

காங்கிரசின் முதல் அமர்வில் லெனின் உரையாற்றினர். அதில் அவர் பொருளாதார நிர்மாணத்தின் மற்றும் தேசவுடைமையாக்கப்பட்ட பொருளாதாரத்தின் அமைப்பு மற்றும் நிர்வாகத்தின் உடனடிப் பணிகளை விவரித்தார். சோஷலிஸ்டு உற்பத்தியை ஒழுங்கமைத்தல், ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாட்டின் அடிப்படையில் நிர்வாகம், நிர்வாகத்தை மத்தியத்துவப்படுத்தல் ஆகியவற்றுக்கான லெனினது திட்டத்தை எதிர்த்து ''இடதுசாரி கம்யூனிஸ்டுகள்'', அராஜகவாத-சிண்டிகல்வாதிகள், மென்ஷி

விக்குகள் மற்றும் இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கள் இந்தக் காங்கிரசில் பேசினார்கள். ஆனால் காங்கிரசில் பெரும்பான்மையோர் போல்ஷிவிக் தீர்மானங்களை ஏற்றுக் கொண்டார்கள். சோஷலிஸ்டு தேசவுடைமையாக்கத்தை மேலும் தொடர்ந்து நடத்த வேண்டும், இதை தொழில்துறையின் முக்கிய கிளைகளுக்கு மட்டுமன்றி தனி யாரின் பெரிய வர்த்தக நிறுவனங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்பதை இந்தக் காங்கிரஸ் ஒப்புக்கொண்டது. தேசவுடைமையாக்கப்பட்ட நிறுவனங்களைப் பற்றிய ஓர் ஆய்வுரையையும், நகருக்கும் நாட்டுப்புறத்துக்கும் இடை யிலான பண்டமாற்று பற்றிய தீர்மானத்தையும் காங்கிரஸ் ஏற்றது. தேசியப் பொருளாதார உயர் கவுன்சிலை மறுசீர மைப்பது பற்றியும், தொழிலாளர் கட்டுப்பாடு, தொழி லாளர் உற்பத்தி ஆற்றலை உயர்த்தல் ஆகியவற்றின் மேம் பாட்டுக்கான நடவடிக்கைகள் குறித்தும் முடிவு எடுத்தது. பக்கம் 192.

54 தேசிய தலைமைப் பொருளாதாரக் கவுன்சில் உருவாக்கப் படுவது குறித்த பிரச்சினை அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சி வெற்றியடைந்தவுடன் உடனடியாக முன்வைக்கப் பட்டது.

இந்த உயர் பொருளாதார அமைப்பை நிறுவுவதற் கான திட்டம் மக்கள் கமிசார்கள் கவுன்சிலால் நியமிக்கப் பட்ட விசேஷக் கமிட்டியால் வகுக்கப்பட்டது.

தே.பொ.உ. கவுன்சில் உருவாக்கப்படுவது குறித்த விஷயத்தை விவாதித்த அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் போல்ஷிவிக் குழு இந்த அமைப்பை தொழி லாளர் சர்வாதிகாரத்தின் உறுப்பாக மாற்றுவது, அதற்குச் சட்டமியற்றும் உரிமைகளை வழங்குவது ஆகியவற்றின் அவசியத்தை உருவரை செய்தது. டிசம்பர் 1 (14)ந் தேதி தே.பொ.உ.க. உருவாக்கப்படுவது பற்றிய விஷயம் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில் விவா திக்கப்பட்டது. ‘‘உயர் பொருளாதாரக் கவுன்சில் பற்றிய அரசாணை’’ ஏற்கப்பட்டு டிசம்பர் 5 (18)ல் ‘‘தொழிலா ளர் விவசாயிகள் இடைக்கால அரசாங்கத்தின் செய்திப் பத்திரிகை’’, இதழ் 25ல் பிரசுரிக்கப்பட்டது.

தே.பொ.உ.க. ஸ்தாபன வேலைகளுக்கு லெனின் மிகுந்த கவனம் செலுத்தினார், இதன் வேலைகளை நெறி யாக்கம் செய்தார், தேசியப் பொருளாதார சோவியத்து களின் காங்கிரசுகளில் உரையாற்றினார். தே.பொ.உ.க. நடவடிக்கைகளைத் தக்கபடி ஏற்பாடு செய்வது சம்பந்த

மாக மக்கள் கமிசார்கள் கவுன்சிலின் கூட்டங்களில் பல முறை விவாதிக்கப்பட்டது. பெருந்தொழில்கள் தேச வுடைமையாக்கம் முழுமை செய்யப்பட்டதோடு இந்த உயர் பொருளாதாரக் கவுன்சில் சோவியத் நாட்டின் அரசுத் தொழில் நிர்வாக அமைப்பாக மாற்றமடைந்தது.

பக்கம் 192.

55 1861ல் ருஷ்யாவில் பண்ணை அடிமை முறை ஒழிக்கப் பட்டது.

பக்கம் 201.

56 **தேசவுடைமையாக்கப்பட்ட நிறுவனங்களின் நிர்வாகம் பற்றிய விதிகளின்** நகல் உயர் பொருளாதாரக் கவுன்சிலால் வகுக்கப்பட்டதாகும். இந்த நகல் தேசியப் பொரு ளாதார சோவியத்துகளின் முதல் அகில ருஷ்யன் காங் கிரசின் உற்பத்தி ஒழுங்கமைப்புப் பிரிவின் அமர்வில் 1918 மே 28 மற்றும் 30ல் விவாதிக்கப்பட்டது. ''இடது சாரி கம்யூனிஸ்டுகளின்'' நிர்ப்பந்தத்தின் கீழ் இந்தப் பிரிவு உற்பத்தியில் ஒரு மனித நிர்வாகம் மற்றும் தேசவுடை மையாக்கப்பட்ட நிறுவனங்களில் நிர்வாகத்தை மையப் படுத்தல் எனும் கட்சியின் பாதைக்கு முரணான நகல் ஆய் வுரையை ஏற்றது.

இப்பிரிவினால் வகுக்கப்பட்ட இந்த ஆய்வுரையினைப் பார்வையிட்ட லெனின் விசேஷமாயும் தோற்றுவிக்கப் பட்டதான சமரசக் கமிஷன் இதைப் பரிசீலிக்க வேண்டும் என்று யோசனை முன்வைத்தார். இக்கமிஷன் இங்கு வெளி யிடப்பட்ட லெனினது குறிப்புக்களின் அடிப்படையில் இந்த ஆய்வுரையைத் திருத்தியமைத்தது. ''இடதுசாரி கம்யூனிஸ்டுகள்'' எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் தேசியப் பொருளாதார சோவியத்துகளின் முதல் அகில ருஷ்யக் காங்கிரஸ் சமரசக் கமிஷனின் நகல் ஆய் வுரையைப் பெரும்பான்மை ஓட்டுக்களால் அங்கீகரித்தது.

பக்கம் 205.

57 **சோவியத்துகளின் ஐந்தாவது அகில-ருஷ்யக் காங்கிரஸ்** 1918 ஜூலை 4ந் தேதியன்று மாஸ்கோவில் ஆரம்பமா யிற்று. நிர்ணயகரமான ஓட்டுரிமையுடன் கூடிய 1164 பிரதிநிதிகள் காங்கிரசில் கலந்து கொண்டார்கள். அவர் களில் 773 பேர் போல்ஷிவிக்குகள்; 353 பேர் இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள்; மாக்சிமலிஸ்டுகள் (இடது சாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளரில் ஒரு வகையினர்)

17 பேர்; 4 பேர் அராஜகவாதிகள்; 4 பேர் மென்ஷிவிக்-சர்வதேசியவாதிகள்; 3 பேர் இதர கட்சியினர்; 10 பேர் கட்சி சார்பற்றவர்கள்.

அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி பிரேரேபித்த நிகழ்ச்சி நிரலை காங்கிரஸ் ஒப்புக்கொண்டது: அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி மற்றும் மக்கள் கமிசார்கள் கவுன்சிலின் அறிக்கைகள்; உணவுப் பொருள் பிரச்சினை; சோஷலிஸ்டு செஞ்சேனையை நிறுவுதல்; ருஷ்யாவின் சோஷலிஸ்டுக் குடியரசின் அரசியல் சட்டம்; அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டிக்கான தேர்தல்கள்.

அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் தலைவர் யா. மி. ஸ்வெர்த்லோவ் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் வேலைகளைப் பற்றிய விவரங்களை அறிக்கை செய்தார். மக்கள் கமிசார்கள் கவுன்சில் வேலைகளைப் பற்றி லெனின் அறிக்கை செய்தார். ''சோவியத் அரசாங்கத்தின் அயல்துறை மற்றும் உள்துறைக் கொள்கையை முழுமையாக அங்கீகரிப்பது'' என்று கூறும் கம்யூனிஸ்டு குழுவின் தீர்மானத்தைப் பெரும்பான்மை வோட்டுகள் ஆதரவுடன் காங்கிரஸ் நிறைவேற்றியது. சோவியத் அரசாங்கத்திடம் நம்பிக்கை இல்லை என்றும், பிரேஸ்த்-லிட்டோவ்ஸ்க் சமாதான உடன்படிக்கையைக் கண்டனம் செய்தும், சோவியத் ஆட்சி அதிகாரத்தின் அயல்துறை மற்றும் உள்துறை கொள்கையில் மாற்றம் கோரியும் இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள் கொண்டு வந்த தீர்மானம் நிராகரிக்கப்பட்டது.

காங்கிரசில் தோற்கடிக்கப்பட்ட இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் பகிரங்கமான ஆயுதப் போரில் இறங்கினர். மாஸ்கோவில் ஜூலை 6ல் எதிர்ப்புரட்சிக் கலகம் தொடங்கினர். காங்கிரஸ் ஜூலை 9 வரை ஒத்தி வைக்கப்பட்டது. அது மீண்டும் கூடிய போது ஜூலை 6—7ல் நிகழ்ச்சிகள் பற்றிய அரசாங்கத்தின் அறிக்கையைக் கேட்டது. இடதுசாரிசோஷலிஸ்டுப் புரட்சியாளர்களின் குற்றகரமான செயல்களை சமாளிக்க அரசாங்கம் எடுத்த உறுதியான நடவடிக்கைகளை அது முழுமையாக அங்கீகரித்தது.

உணவுப் பிரச்சினை பற்றிய ஒரு தீர்மானத்தில் காங்கிரஸ் தானிய (அரசு) ஏகபோகத்தை ஊர்ஜிதம் செய்தது, குலாக்குகளின் எதிர்ப்பை உறுதியாக ஒடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியது. ஏழை விவசாயிகளின் கமிட்டிகள் நிறுவப்படுவதை ஒப்புக்கொண்டது. உழைக்கும் மக்களின் கட்டாய ராணுவ சேவையின் அடிப்

படையில் செஞ்சேனையை நிறுவவும் கெட்டிப்படுத்தவு மான அவசிய நடவடிக்கைகளை உருவரை செய்யும் கம் யூனிஸ்டு குழுவின் தீர்மானத்தை நிறைவேற்றியது.

ரு. சோ. சோ. கூ. குடியரசின் முதல் அரசியல் சட்டத்தை காங்கிரஸ் ஏற்றது. இது சோவியத் நாட்டின் உழைக்கும் மக்களது சாதனைகளை சட்ட உருவில் கெட்டிப் படுத்தியது.

பக்கம் 206.

58 ''முந்திய பேச்சாளர்''—இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சி யாளர் தலைவருள் ஒருவரான ம. அ. ஸ்பிரிதோனவா எனும் பெண்மணி ஆவார். அகில ருஷ்ய மத்திய நிர் வாகக் கமிட்டியின் விவசாயிகள் பிரிவின் வேலைகள் பற்றி அவர் ஒரு துணை அறிக்கை சமர்ப்பித்தார். அதில் சோவியத் அரசாங்கம் கம்யூனிஸ்டு கட்சி ஆகியவற்றின் கொள்கைகள் மீதான பல எதிர்ப்புரட்சித் தாக்குதல்கள் அடங்கி இருந்தன.

பக்கம் 206.

59 கோலஸ் துருதவோவா கிறிஸ்த்யான்ஸ்த்வா (''உழைக் கும் விவசாயிகளின் குரல்'') — பெத்ரோகிராதில் 1917 நவம்பர் இறுதியில் இருந்து வெளியிடப்பட்டுவந்த ஒரு தினசரிப் பத்திரிகையாகும். இது இரண்டாம் அவை யைச் சேர்ந்த விவசாயிப் பிரதிநிதிகளின் அகில ருஷ்ய சோவியத்தின் நிர்வாகக் கமிட்டியின் ஏடாகும். 1918 ஜூலை 10 வரை இப்பத்திரிகையின் தலைமை சோஷ லிஸ்டுப் புரட்சியாளர் கரங்களில் இருந்தது. 1918 நவம் பர் 6 முதல் இப்பத்திரிகை நிலத்துறை மக்கள் கமிசாரகத் தின் ஏடாக மாறியது. இது 1919 மே வரையில் வெளி வந்தது.

பக்கம் 213.

60 இங்கு குறிப்பிடப்படுவது சோவியத்துகளின் ஐந்தாவது அகில-ருஷ்யக் காங்கிரசின் அங்கீகாரத்துக்காகச் சமர்ப் பிக்கப்பட்டதான ருஷ்யாவின் சோஷலிஸ்டு கூட்டாட்சி சோவியத் குடியரசின் நகல் அரசியல் சட்டம் (அடிப் படைச் சட்டம்) ஆகும். இந்த நகல் அரசியல் சட்டத்திற் கான தயாரிப்புக்களை யா. மி. ஸ்வெர்த்லோவ் தலைமை யிலான அரசியல் சட்டக் கமிட்டி செய்து முடித்தது. இக்கமிட்டி 1918 ஏப்ரல் 1ந் தேதி அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியால் நிறுவப்பட்டது. சோவியத்துகளின் ஐந்தாவது காங்கிரசில் சமர்ப்பிப்பதற்காக இந்த நகல்

அரசியல் சட்டத்தை விரிவிளக்கம் செய்யும் பணி ருஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சி (போ.) மத்தியக் கமிட்டியின் ஒரு விசேஷக் கமிட்டியிடம் ஒப்படைக்கப்பட்டது. இக்கமிட்டிக்கு லெனின் தலைவராக இருந்தார். லெனினது ஆலோசனைப்படி ரு.சோ.கூ.சோ.கு. அரசியல் சட்டத்தின் வாசகத்தில் முன்னுரைப் பகுதியில் ''உழைக்கும் மற்றும் சுரண்டப்பட்ட மக்களின் உரிமைகள் பற்றிய பிரகடனம்'' உட்படுத்தப்பட்டது. சோவியத் குடியரசுகளில் தேசிய இனங்கள், வருண இனங்களின் சமத்துவம் குறித்த ஷரத்து சேர்க்கப்பட்டது. ரு.சோ.கூ.சோ.கு. பரப்பில் வாழும் வெளிநாட்டு மக்களின் அரசியல் உரிமைகள் பற்றிய பாராவும், தமது அரசியல் அல்லது சமய நம்பிக்கைகளுக்காக அடக்குமுறைக்கு ஆளாக்கப்படும் எல்லா வெளிநாட்டு மக்களுக்கும் புகலிடம் அளிப்பது பற்றிய ஷரத்தும் இதில் சேர்க்கப்பட்டது. ரு.க.க.(போ.) மத்தியக் கமிட்டியால் அடிப்படையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நகல் அரசியல் சட்டம் சோவியத்துகளின் ஐந்தாவது காங்கிரசின் அங்கீகாரத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டது. ஜூலை 10ந் தேதி இந்தக் காங்கிரஸ் ரு.சோ.கூ.சோ. குடியரசின் அரசியல் சட்டத்தை ஒருமுகமாக அங்கீகரித்தது. இதன் வாசகத்தை இறுதியாகப் பதிப்புக்குமாறு அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் புதிய ஊழியர்களைப் பொறுப்பாக்கியது.

1918 ஜூலை 19ந் தேதி ரு.சோ.கூ.சோ. குடியரசின் அரசியல் சட்டம் அடிப்படைச் சட்டமாக வெளியிடப்பட்டு வெளியிடப்பட்ட நாள் முதல் அமுலுக்கு வந்தது.

பக்கம் 219.

61 இங்கு குறிப்பிடப்படுவது மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களின் தீவிரமான பங்கேற்புடன் ஆன்டான்டின் ஏகாதிபத்தியவாதிகள் ஏற்பாடு செய்ததான செக்கோஸ்லோவாகிய ராணுவப் பிரிவின் எதிர்ப்புரட்சிக் கலகம் ஆகும். இந்தச் செக்கோஸ்லோவாகிய ராணுவப் பிரிவு ருஷ்யாவில் போர்க் கைதிகளாக இருந்த செக் மற்றும் ஸ்லோவக் இனத்தவர், ஆஸ்திரோ-ஹங்கேரியப் படையின் முன்னாள் படையாளர்களைக் கொண்டு மகத்தான அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்கு முன்பாக அமைக்கப்பட்டது. தமது ஆயுதங்களை ஒப்படைத்துத் தமது ருஷ்ய அதிகாரிகளை விலக்கிவிட வேண்டும் என்ற நிபந்தனை மீது, 1918 மார்ச் 26ல் ஏற்பட்ட உடன்பாட்டின்படி, இந்தப் படைப் பிரிவுக்கு விளாதிவஸ்தோக் வழி

யாக ருஷ்யாவை விட்டு வெளியேறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆனால் இந்தப் படைப் பிரிவின் எதிர்ப்புரட்சியாள அதிகாரிகள் அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரான்சின் ஏகாதிபத்தியவாதிகளின் நெறியாணைப் படியும் அவர்களது ஆதரவோடும் மே மாதக் கடைசியில் ஆயுதமேந்திய கலவரத்தைத் தூண்டி விட்டனர். வெண் காவலர் மற்றும் குலாக்குகளுடன் மிகவும் நெருக்கமாக இணைந்து செயல்பட்ட இந்தக் கலகக்காரர்கள் ஊரலின் பெரும் பகுதி, வோல்கா பிரதேசம் மற்றும் சைபீரியாவைப் பற்றுடல் செய்தனர், எல்லா இடங்களிலும் முதலாளித்துவ வர்க்கத்தின் ஆட்சியை மீண்டும் நிலைநாட்டினர். மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களின் பங்கேற்புடன் செக்கோஸ்லோவக் கலகக்காரர்கள் பற்றுடல் செய்த பிராந்தியங்களில் வெண் காவல் அரசாங்கங்கள் நிறுவப்பட்டன: ஓம்ஸ்கில்—''சைபீரிய அரசாங்கம்'', சமாராவில்—அரசியல் நிர்ணய சபை உறுப்பினர் கமிட்டி ('கொமுச்') இத்தியாதி.

ஜூன் 11ந் தேதி கலகம் துவங்கிய உடன் ருஷ்யாவில் இருந்த செக்கோஸ்லோவக் கம்யூனிஸ்டு குழுக்களின் மத்திய நிர்வாகக் கமிட்டி இந்தப் படைப் பிரிவின் அணிகளுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தது. அதில் இந்தக் கலகத்தின் எதிர்ப்புரட்சித் தன்மை அம்பலப்படுத்தப்பட்டது. கலகத்தை நிறுத்தி செஞ்சேனையின் செக்கோஸ்லோவக் பிரிவில் சேருமாறு அவர்களிடம் கோரப்பட்டது. தமது அதிகாரிகளால் ஏமாற்றப்பட்டுவிட்டோம் என்பதை உணர்ந்த அணிகளில் பலர் இப்படைப்பிரிவில் இருந்து விலகிக் கொண்டனர், சோவியத் ஆட்சி அதிகாரத்தை எதிர்த்துப் போராட மறுத்தனர். கிட்டத்தட்ட 12,000 செக் மற்றும் ஸ்லோவக் படையாளர் செஞ்சேனை அணிகளில் சேர்ந்து போராடினர்.

1918 இலையுதிர் காலத்தில் வோல்காப் பிரதேசம் செஞ்சேனையால் விடுவிக்கப்பட்டது. இறுதியாக வெள்ளை செக் படையினர் 1920ல் ஒடுக்கப்பட்டனர்.

பக்கம் 224.

62 இங்கு குறிப்பிடப்படுவது ''எதிர்ப்புரட்சி, நாசவேலை மற்றும் கொள்ளை லாபமடித்தலை தாட்சண்யமின்றி எதிர்த்துப் போராடும்'' நோக்கத்துடன் 1917 டிசம்பர் 7 (20)ந் தேதி மக்கள் கமிசார்கள் கவுன்சிலின் நெறியாணைப் படி நிறுவப்பட்டதான **மக்கள் கமிசார்கள் கவுன்சிலின் அகில ருஷ்ய விசேஷக் கமிஷன்** ஆகும். இந்த அகில ருஷ்ய விசேஷக்

கமிஷனுக்கு ஃபெ.எ.த்ஸெர்ஜீன்ஸ்கி தலைவராக இருந்தார். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் மிகவும் முக்கியமான அமைப்புகளில் ஒன்றாக இருந்த இந்த அகில ருஷ்ய விசேஷக் கமிஷன் எதிர்ப்புரட்சியின் சீர்குலைவு வேலைகளை எதிர்த்தும், சோவியத் குடியரசின் அரசுப் பாதுகாப்புக்காகவும் நடந்த போராட்டத்தில் பெரும் பங்கு வகித்தது. 1921 டிசம்பரில் நடைபெற்ற சோவியத்துகளின் 9 ஆவது அகில ருஷ்யக் காங்கிரஸ் அகில ருஷ்ய விசேஷக் கமிஷன் குறித்து நிறைவேற்றிய தீர்மானத்தில் அதன் வீரஞ்செறிந்த பணிகளை வலியுறுத்தியது. அக்டோபர் புரட்சியின் சாதனைகளைப் பாதுகாப்பதிலும், சோவியத் ஆட்சி அதிகாரத்தை வலுப்படுத்துவதிலும் இந்த விசேஷக் கமிஷனின் அமைப்புகள் செய்து முடித்த பணிகளைக் கவனத்தில் எடுத்துக் கொண்டது. அதோடு இக்கமிஷனின் செயல்பாடுகளின் பரப்பெல்லையினைக் குறுக்குவது என்று யோசனை முன்வைத்தது. 1922 பிப்ரவரி 6ல் அகில ருஷ்ய விசேஷக் கமிஷனை அகற்றிவிடுவது பற்றிய அரசாணையை அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி ஏற்றது.

பக்கம் 225.

63 ஏழை விவசாயிகள் கமிட்டிகள் என்பவை 1918 ஜூன் 11, ''நாட்டுப்புற ஏழை மக்கள் அமைப்பு மற்றும் வழங்கீடு மீதான'' அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் அரசாணையால் நிறுவப்பட்டன. இது கீழ்மட்டத்தில் முன்முயற்சி எடுப்பதன் மீது ஏழை விவசாயிகள் கமிட்டிகள் நிறுவப்படும் வழக்கத்தை ஊக்குவித்தது. 1918 நவம்பருக்குள் வட்டாரங்களில் இருந்த கம்யூனிஸ்டுக் கட்சித் தலைமையின் கீழ் 105 ஆயிரம் ஏழை விவசாயிகள் கமிட்டிகள் உருவாக்கப்பட்டு செயல்படலாயின.

ஏழை விவசாயிகள் கமிட்டிகளின் நடைமுறை வேலை கிராம வேலைகளின் எல்லாத் துறைகளையும் தழுவியதாக இருந்தது. அவை உண்மையில் கிராமங்களில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் அமைப்புகளின் அடித்தளமாக விளங்கின. அவற்றின் அமைப்பு கிராமங்களில் சோஷலிஸ்டுப் புரட்சி மேலும் வளர்ச்சியடைந்து வருவதைக் குறித்தன.

இந்தக் கமிட்டிகள், குலாக்குகளின் எதிர்ப்புரட்சியை அடக்குவதிலும், குலாக்குகளின் பொருளாதார அதிகாரத்தை அவர்களை ஓரளவுக்கு உடைமை நீக்கம் செய்வது மூலமும் இறுதியாக நிலவுடைமை உரிமையை ஒழிப்பதன்

மூலமும் அரித்து பலவீனப்படுத்துவதிலும், பஞ்சத்தால் பீடிக்கப்பட்ட நகரப்புறத் தொழிலாளர் மற்றும் செஞ் சேனைக்கு உணவு வழங்கலை ஏற்பாடு செய்வதிலும் தலை சிறந்த பங்கு வகித்தன. கூட்டு விவசாய நிறுவனங்களான —ஆர்டல்கள், கம்யூன்களை—நிறுவுவதில் இக்கமிட்டிகள் செயலூக்கமுள்ள பங்கு வகித்தன. இந்த நிறுவனங்கள் அரசுப் பண்ணைகளுடன் சேர்ந்து கிராமங்களில் சோஷ லிஸ்ட் வடிவ பொருளாதார அமைப்புக்களின் ஆரம்ப மையங்களாக விளங்கின.

தொழிலாளி வர்க்கத்துக்கும் விவசாயி மக்களுக்கும் இடையேயான நேச அணியினைக் கெட்டிப்படுத்துவதிலும், சோவியத் ஆட்சி அதிகாரத்துக்கு ஆதரவாக நடுத்தர விவசாயிகளை வென்று ஈர்ப்பதிலும் இக்கமிட்டிகளின் வேலைகள் முக்கியத்துவம் பெருகியதாக இருந்தன.

1918 இலையுதிர் காலத்துக்குள் இக்கமிட்டிகள் சோஷ லிஸ்டுப் புரட்சியில் தமது வரலாற்றுப் பாத்திரத்தைப் பூர்த்தி செய்து முடித்துவிட்டன. எனவே 1918 நவம்ப ரில் நடைபெற்ற சோவியத்துகளின் விசேஷ ஆருவது அகில ருஷ்யக் காங்கிரஸ் எல்லா வோலஸ்த் மற்றும் கிராம சோவியத்துகளுக்குப் புதிய தேர்தல் நடத்துவ தென பிரேரேபித்தது. தேர்தல்களுக்குப் பிறகு இந்த ஏழை விவசாயிக் கமிட்டிகள் தம் நடவடிக்கைகளை நிறுத்தி புதிய சோவியத்துகளிடம் தமது சாதனங்கள் மற்றும் ஆவணங்களை ஒப்படைக்கும்.

பக்கம் 229.

64 ''உணவுக் கமிசாரின் விசேஷ அதிகாரம் மீதான'' அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் அரசாணையை இங்கு லெனின் குறிப்பிடுகிருர். இந்த அரசாணை உணவு வழங் கீடு, வினியோகம் ஆகியவற்றை மத்தியப்படுத்தவும், தொழிலாளர் தானிய இயக்கங்கள் ஏற்பாடு செய்து குலாக்குகளை எதிர்த்துப் போராட ஏழை விவசாயிகளுக்கு உதவவும் வகை செய்தது.

பக்கம் 235.

65 இங்கு குறிப்பிடப்படுவது மூன்ருவது ஸிம்மர்வால்ட் மாநாடாகும். இது 1917 செப்டம்பர் 5—12 தேதிகளில் ஸ்டாக்ஹோமில் நடைபெற்றது. பல்வேறு நாடுகளையும் சேர்ந்த சோஷலிஸ்டுக் கட்சிகளின் இடதுசாரி சக்திகள் பிரதிநிதித்துவம் பெற்றிருந்தன. பெரும்பாலான பிரதிநிதி கள் மையவாத நிலை மேற்கொண்டனர்.

பக்கம் 240.

66 சர்வதேச உறவுகள் கமிட்டி—*1916* ஜனவரியில் பிரெஞ்சு சர்வதேசியவாதிகளால் நிறுவப்பட்டது. இந்தக் கமிட்டியின் உருவாக்கம், பிரான்சில் சமூக-தேசியவெறி அமைப்புகளை எதிர்ப்பதற்காக சோஷலிஸ்டுகளின் புரட்சிகர சர்வதேச அமைப்பை நிறுவச் செய்த முதல் முயற்சியாகும். சர்வதேசிய சக்திகளின் ஒற்றுமைக்கு இந்த ''சர்வதேச உறவுகள் கமிட்டியை'' பயன்படுத்துவது அவசியம் என்று லெனின் கருதினர். லெனினது நெறியாணைப்படி இ. அர்மான் இக்கமிட்டியின் வேலைகளில் பங்கு பற்றினர்.

ருஷ்யாவில் நடைபெற்ற மகத்தான அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியின் செல்வாக்கு மற்றும் பிரெஞ்சு தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வளர்ச்சி காரணமாக இந்தக் கமிட்டி புரட்சிகர சர்வதேசிய சக்திகளை ஒன்று திரட்டும் மையமாகியது. 1920ல் இது பிரெஞ்சு கம்யூனிஸ்டுக் கட்சியில் இணைந்தது.

இங்கு லெனின் குறிப்பிடும் வேண்டுகோள் 1918 ஜூன் 29ந் தேதி ''பிராவ்தா'', இதழ் 131ல் வெளியிடப்பட்டது.

பக்கம் 240.

67 சோவியத் குடியரசில் நிலவிய கடுமையான ராணுவ மற்றும் பொருளாதார நிலை தொடர்பாக அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி, மாஸ்கோ சோவியத், ஆலை மற்றும் தொழிற்சாலைக் கமிட்டிகள், மாஸ்கோ தொழிற்சங்கங்களின் கூட்டுக் கூட்டம் *1918* ஜூலை *29*ல் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் சுமார் 2000 பேர் கலந்து கொண்டார்கள். லெனினது அறிக்கை மீது கம்யூனிஸ்டு குழுவினல் பிரேரேபிக்கப்பட்ட தீர்மானம் ஒருமுகமாக நிறைவேற்றப்பட்டது. சோஷலிஸ்டுத் தாயகத்திற்கு அபாயம் ஏற்பட்டுள்ளது என்பதை இத்தீர்மானம் ஒப்புக்கொண்டு உழைக்கும் மக்களின் எல்லா அமைப்புகளின் செயல்பாடுகளும் குடியரசின் பாதுகாப்புத் தேவைகளுக்குக் கீழடக்கப்பட வேண்டும் எனவும், நிலைமையை மக்கள் திரளுக்கு விளக்கிச் சொல்ல விரிவான பிரசார இயக்கம் நடத்தப்பட வேண்டும் எனவும் எதிர்ப்புரட்சி முதலாளி வர்க்கம் சம்பந்தப்பட்டவரை உயர்ந்தளவிலான விழிப்புணர்ச்சி அவசியம் எனவும், பல அரசாங்க ஊழியர்கள் ராணுவ வேலைக்கும் உணவுத் தொழிலுக்கும் மாற்றப்பட வேண்டும், தானிய சப்ளைக்கு உறுதியான போராட்டம் நடத்தப்பட வேண்டும் எனவும் இத்தீர்மானம் கோரியது.

பக்கம் 245.

68 சுதந்திரத்தின் முன்னேடி—சோவியத் ருஷ்யாவில் இருந்த செக்கோஸ்லோவக் கம்யூனிஸ்டு குழுவின் மத்திய ஏடு. ருஷ்யாவில் இருந்த செக்கோஸ்லோவக் கம்யூனிஸ்டுகளின் காங்கிரசின் முடிவுப்படி இது நிறுவப்பட்டது. இக்காங்கிரஸ் 1918 மே 25—27 தேதிகளில் மாஸ்கோவில் நடைபெற்றது. இப்பத்திரிகை வார இதழாக 1918 ஜூன் 7 முதல் 1919 மே 1 வரை வெளிவந்திருந்தது. 42 இதழ்கள் மாஸ்கோவில் பிரசுரமாயிற்று.

1918 ஜூன் 28ல் இப்பத்திரிகையில் வெளியிடப்பட்ட ''பிரெஞ்சு ஜன லட்சங்கள்'' என்ற கட்டுரையை லெனின் குறிப்பிடுகிறுர். இக்கட்டுரை இதே நாளில் ''பிராவ்தாவிலும்'' ''அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி இஸ்வேஸ்தியாவில்'' பகுதியளவிலும் வெளிவந்தது.

பக்கம் 246.

69 இங்கு குறிப்பிடப்படுவது 1918 ஜூலை 6—7ல் சோவியத்துகளின் ஐந்தாவது அகில ருஷ்யக் காங்கிரஸ் அமர்வு நடந்த சமயம், இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் தொடுத்த எதிர்ப்புரட்சிக் கலகம் ஆகும் (குறிப்பு 16ஐப் பார்க்க).

பக்கம் 249.

70 தஷ்நக்திசுத்யூன் கட்சி—ஓர் அர்மீனியன் தேசியக் கட்சியாகும். இது 1890ஆம் ஆண்டுகளில் 'துருக்கி அர்மீனியர்களை' துருக்கி ஆதிக்கத்தில் இருந்து விடுதலை செய்யும் நோக்கத்துடன் தோற்றுவிக்கப்பட்டது. இக்கட்சியில் முதலாளித்துவ வர்க்கத்துடன் கூடவே தேசிய அறிவுத்துறையினரும் குட்டிமுதலாளித்துவ வகைப்பட்டவரும் கணிசமாக இடம் பெற்றிருந்தனர். தேசிய மற்றும் சோஷலிஸ்டு தொடர்களால் ஏமாற்றப்பட்ட விவசாயிகளும் தொழிலாளிகளும் இதில் சேர்ந்தனர். 1905—1907 புரட்சியின் போது தஷ்நக்திசுத்யூன் சோஷலிஸ்டுப் புரட்சியாளருடன் சேர்ந்து கொண்டது. 1907ல் இக்கட்சியின் காங்கிரஸ் நரோத்னிக் தன்மையுள்ள ''சோஷலிஸ்டு'' வேலைத் திட்டத்தை அதிகாரபூர்வமாக ஏற்றது.

1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு, தஷ்நக்குகள் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தின் கொள்கைகளை ஆதரிக்கலாயினர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு தஷ்நக்குகள் சோவியத் ஆட்சி அதிகாரத்துக்கு எதிராக மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள், முஸ்ஸாவதிஸ்டு

கள் ஆகியோருடன் சேர்ந்து ஒரு எதிர்ப்புரட்சிக் கூட்டணி அமைத்தார்கள். 1918க்கும் 1920க்கும் இடையே அவர்கள் அர்மீனியாவின் எதிர்ப்புரட்சி முதலாளித்துவ தேசிய அரசாங்கத்துக்குத் தலைமை வகித்தார்கள். அவர்களது செயல் அர்மீனியாவை, அன்னிய ஏகாதிபத்தியவாதிகளின் காலனியாகவும், சோவியத் குடியரசுக்கு எதிராக பிரிட்டிஷ் பிரெஞ்சு தலையீட்டாளர்கள் மற்றும் ருஷ்யன் வெண் காவலர்களுக்கு ஒரு தாக்குதளமாகவும் மாற்ற வழிவகுத்தது. போல்ஷிவிக் கட்சியால் தலைமை தாங்கப்பட்டு, செஞ்சேனையின் உதவி பெற்று அர்மீனிய உழைக்கும் மக்கள் தஷ்நக் அரசாங்கத்தை 1920 நவம்பரில் வீழ்த்தினர், டிரான்ஸ் காக்கஸசில் சோவியத் ஆட்சி அதிகாரம் வெற்றி சூடிய பிறகு தஷ்நக்திசுத்யூன் அமைப்புகள் அடக்கப்பட்டன.

பக்கம் 249.

71 முஸ்ஸாவதிஸ்டுகள் — அஸர்பைஜான் எதிர்ப்புரட்சிவாத முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ தேசியக் கட்சி உறுப்பினர்களாவர். ‘‘முஸ்ஸாவத்’’ கட்சி 1912ல் தோன்றியது. துருக்கியரின் பின்னர், ஆங்கிலத் தலையீட்டாளர்களின் ஆதரவைச் சார்ந்து நின்ற முஸ்ஸாவதிஸ்டுகள் 1918 ஜூன் முதல் 1920 ஏப்ரல் வரை அஸர்பைஜானில் ஆட்சிப் பதவிவகித்தனர். பாக்கூ தொழிலாளர் அஸர்பைஜான் விவசாயிகள் கூட்டு முயற்சியாலும் அவர்களுக்கு உதவ முன்வந்த செஞ்சேனையின் துணையாலும் முஸ்ஸாவதிஸ்டுகள் அரசாங்கம் வீழ்த்தப்பட்டது. அக்கட்சி தகர்க்கப்பட்டுக் கலைக்கப்பட்டது.

பக்கம் 251.

72 1918 ஜூலை 25ந் தேதி பாக்கூ சோவியத்தின் அவசர அமர்வில் துருக்கியின் எதிர்த்தாக்குதல் தொடர்பாக நகரில் ஏற்பட்டுள்ள அரசியல் ராணுவ நிலைமை விவாதிக்கப்பட்டது. பாக்கூவைப் பாதுகாப்பது என்ற சாக்கில் மென்ஷிவிக்குகள், தஷ்நக்குகள் மற்றும் சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள் பிரிட்டிஷ் துருப்புக்களை ‘‘உதவிக்கு வருமாறு’’ அழைக்க வேண்டும் என்று கோரினார்கள். பாக்கூ சோவியத்தின் போல்ஷிவிக் தலைவர்கள் இந்த துரோகத்தனமான கோரிக்கையை உறுதியாக நிராகரித்தனர். ஆனால் போல்ஷிவிக்குகள் முயற்சிகளை மீறி பிரிட்டிஷ் துருப்புக்களை அழைப்பது என்ற தீர்மானம் ஒரு சிறு பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேறியது.

சிறுபான்மையில் இருந்த பாக்கூ மக்கள் கமிசார்கள் கவுன்சிலின் போல்ஷிவிக் உறுப்பினர்கள் மக்கள் கமிசார்கள் பதவிகளை வகிக்க மறுத்தார்கள். ஆனால் இந்த நிலைமைகளில் இவ்வாறு விலகுவது பிழையானது என்பதை விரைவில் பாக்கூ போல்ஷிவிக்குகள் உணர்ந்தார்கள். பாக்கூ சோவியத் நிர்வாகக் கமிட்டியின் விசேஷக் கூட்டத்தில் ஆட்சி அதிகாரம் பற்றி எதிர்காலத்தில் இறுதி முடிவு எடுக்க வேண்டி எல்லா மக்கள் கமிசார்களும் தம் பதவிகளில் நீடித்து இருக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. ஜூலை 27ல் நடைபெற்ற பாக்கூ நகர மாநாட்டில் போராடாமல் ஆட்சி அதிகாரத்தைக் கைவிடப்போவதில்லை என்று போல்ஷிவிக்குகள் முடிவு செய்தனர். பாக்கூவைப் பாதுகாக்க அவசரமாக ஏற்பாடுகள் செய்யவும், பொதுவான படைதிரட்டல் பிரகடனம் செய்யவும் நகரையும் சோவியத் ஆட்சி அதிகாரத்தையும் பாதுகாக்குமாறு தொழிலாளிகளிடம் வேண்டுதல் செய்யவும் தீர்மானித்தனர். இந்த முடிவை நிறைவேற்ற பாக்கூ மக்கள் கமிசார் கவுன்சில் பல நடவடிக்கைகளை எடுத்தது: நகரில் ராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது; எதிர்ப்புரட்சி கிளர்ச்சி நடத்தக் கூடாது என்று அ. ரு. விசேஷ கமிஷனுக்கு நெறியாணை விடுத்தது. பாக்கூ தொழிலாளர் ஆயுதமேந்தி சாத்தியமான வரை நகரைப் பாதுகாக்கும்படி அறைகூவல் விடப்பட்டது.

எனினும், அஸர்பைஜான் கம்யூனிஸ்டுகள் மற்றும் பாக்கூ பாட்டாளிகளின் முன்னணிப் பகுதியின் வீரஞ்செறிந்த முயற்சிகள் தஷ்நக்குகள், மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டுப் புரட்சியாளரின் துரோகத்தால் குலைவுண்டன. தஷ்நக் படைகள் போர்முனையை விட்டு வெளியேறின, அதனால் ஏற்பட்ட இடைவெளிக்குள் துருக்கிப் படைகள் முன்னேறின. ஜூலை 31ந் தேதி அன்னியத் தலையீட்டாளர் மற்றும் அவர்களது கையாட்களின் தாக்குதலின் கீழ் பாக்கூவில் இருந்த சோவியத் ஆட்சி தற்காலிகமாகத் தோற்கடிக்கப்பட்டது. அன்னியத் தலையீட்டுடன் கூடவே பாக்கூவில் சோவியத் ஆட்சி அதிகாரம் வீழ்ச்சியடைந்ததற்கு வேறு இணையான காரணங்களும் இருந்தன. அஸர்பைஜானில் இருந்த கட்சி அமைப்பும், மக்கள் கமிசார்கள் கவுன்சிலும் பாக்கூ பாட்டாளிகள் மற்றும் அஸர்பைஜான் உழைக்கும் விவசாயி மக்கள் இடையே உறுதியான ஒற்றுமையைப் பெறவில்லை என்பதும், தேசியப் பிரச்சினையில் பல பிழைகள் செய்தன என்பதும் இதில் அடங்கும். இவற்றை முஸ்ஸாவதிஸ்டு

களும் தஷ்நக்குகளும் இதர எதிர்ப்புரட்சியாளர்களும் பயன்படுத்தி மக்களை ஏமாற்றினர்கள்.

ஆன்டான்டு கையாட்களான சோஷலிஸ்டுப் புரட்சி யாளர், மென்ஷிவிக்குகள் மற்றும் தஷ்நக்குகள் ''மத்திய காஸ்பியன் பிரதேச சர்வாதிகாரம்'' எனப்பட்டதான ஒரு எதிர்ப்புரட்சி அரசாங்கத்தை நிறுவினர். அஸர்பை ஜானில் இருந்த சோவியத் தலைவர்கள் கைது செய்யப் பட்டனர். செப்டம்பர் 20ந் தேதி இரவு 26 பாக்கூ கமி சார்கள் (ஸ். கி. ஷௌமியான், மி. அ. அஸிஸ்பெக்கவ், பி. அ. ஜபரீத்சே, இ. தி. ஃபியலேத்தவ், யா. டி. ஸெவின், கி. நீ. கொர்கானவ், மி. கி. வெஸீரவ் மற்றும் இதரர்) பிரிட்டிஷ் தலையீட்டாளர்களால் சோஷலிஸ்டு புரட்சி யாளர் மென்ஷிவிக்குகள் உடந்தையுடன் சுட்டுக் கொல்லப் பட்டனர்.

பக்கம் 253.

73 அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சி ஜெர்மன் புரட்சி இயக் கத்தின் வளர்ச்சி மீது மாபெரும் செல்வாக்குச் செலுத் தியது. பிரேஸ்த்-லிட்டோவ்ஸ்கில் சோவியத் பிரதிநிதிக் குழுவுடன் நடத்திய சமாதானப் பேச்சுக்களின் போது ஜெர்மன் அரசாங்கம் முன்வைத்த மிகவும் மிகைப்பட்ட கோரிக்கைகள் ஜெர்மன் தொழிலாளர்களிடையே ஆத் திரத்தை எழுப்பின. இதன் விளைவாக 1918 ஜனவரி பிற் பகுதியிலும் பிப்ரவரி முதற்பகுதியிலும் அரசியல் பொது வேலைநிறுத்தம் தூண்டப்பட்டது.

ஜனவரி 28ந் தேதி சட்டவிரோதமாகப் போராடிவந்த ''ஸ்பார்ட்டகஸ்'' கழகத்தின் அறைகூவலை ஏற்று பெர் லின் நகரின் நூருயிரக் கணக்கான தொழிலாளரும் தொழி லாளிப் பெண்டிரும் வேலைநிறுத்தம் செய்து தொழி லாளர் சோவியத்துகளைத் தேர்ந்தெடுத்தனர். இந்த வேலை நிறுத்தம் ஜெர்மனியின் 39 நகரங்களிலும் பரவியது. 15 லட்சம் தொழிலாளர் இதில் கலந்து கொண்டனர். பல இடங்களில் தொழிலாளர் சோவியத்துகள் தேர்ந்தெடுக் கப்பட்டன. அவற்றின் ஊழியர்களிடையில் இருந்து செயல் கமிட்டிகள் உருவாக்கப்பட்டன.

தொழிலாளர்கள் பிப்ரவரி 4 காலை முதல் வேலைக்குச் செல்ல வேண்டும் என்று ராணுவத் தலைமையகம் கோரி யது. போலீஸ் மற்றும் துருப்புக்களின் உதவியுடனும், சமூக-ஜனநாயகத் தலைவர்கள் உடந்தையுடனும் கெய்சர் அரசாங்கம் இந்த இயக்கத்தை அடக்க முடிந்தது.

பக்கம் 257.

74 இங்கு குறிப்பிடப்படுவது யாரஸ்லாவ்லில் 1918 ஜூலை 6ல் துவங்கப்பட்ட வெண் காவலர் கலகம் ஆகும். இது வலதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் ப. வீ. சாவின்கவின் தலைமையிலான "நாட்டுப் பாதுகாப்புக்கும் சுதந்திரத்துக்குமான எதிர்ப்புரட்சி யூனியனுல்" ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தக் கலகம் இந்த சமயத்தில் சோவியத் ருஷ்யாவில் நடைபெற்ற இதர எதிர்ப்புரட்சிக் கலகங்களைப் போலவே ஆன்டான்டின் ஏகாதிபத்தியவாதிகளால் மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டுப் புரட்சியாளரின் தீவிரப் பங்கேற்புடன் தயார் செய்யப்பட்டதாகும். ருஷ்யாவில் தலையிடுவதற்கான பொதுத்திட்டத்தின் ஒரு பகுதியே இது. மாஸ்கோவில் இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கலகத்துடன் ஏககாலத்தில் நடப்பதற்கு இது திட்டமிடப்பட்டது. அதே சமயத்தில் பல இதர நகர்களில் கலகங்கள் தொடங்க வேண்டியிருந்தன.

யாரஸ்லாவ்லில் கலகத்தின் தருணத்தில் பல சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களும் மென்ஷிவிக்குகளும் வெள்ளைக் காவலர் படை அதிகாரிகளும் கூட ஒரு முகமாகத் திரண்டனர். ஜூலை 6ந் தேதி கலகக்காரர் நகரின் மையப் பகுதியைக் கைப்பற்றினர், ஆயுதசாலை, தபால், தந்தி நிலையம் இதர நிறுவனங்களைப் பற்றுடல் செய்தனர். கட்சி சோவியத் ஊழியர் படுகொலை செய்யப்படுவது தொடங்கியது. தொழிலாளர் புறப்பகுதிகளையும் கலகக்காரர்கள் பிடிக்க முயன்றனர், ஆனால் உறுதியான திடமான எதிர்ப்பு எழுந்தது. நிறுவனங்களில் இருந்த கட்சி அமைப்புகள் மக்களைத் திரட்டி கலகத்தை அடக்குமாறு தொழிலாளர்களை வேண்டின. ஆயுதமேந்திய தொழிலாளர் செஞ்சேனைப் பிரிவுகளுடன் சேர்ந்து போரிட்டனர். சோவியத் அரசாங்கம் ராணுவப் பிரிவுகளையும் ஆயுதமேந்திய தொழிலாளர் படைகளையும் அனுப்பி யாரஸ்லாவ்லில் தொழிலாளருக்கு உதவியது. 1918 ஜூலை 21ல் இக்கலகம் அடக்கப்பட்டது.

பக்கம் 259.

75 இங்கு லெனின் குறிப்பிடுவது 1918 ஜூன் 28ல் அங்கீகரிக்கப்பட்டதான பெருவீதத் தொழில்துறையை தேசவுடைமையாக்கம் செய்வது பற்றிய மக்கள் கமிசார்கள் கவுன்சிலின் அரசாணையாகும். இந்த அரசாணைப்படி 2 லட்சம் முதல் பத்து லட்சம் ரூபிளும் அதற்கு அதிகமாகவும் நிலையான மூலதனம் வைத்திருந்த பெரிய தொழில்துறை நிறுவனங்கள் யாவும் தேசவுடைமையாக்கப்பட்டன. மா

பெரும் இடர்ப்பாடுகள் இருந்தபோதிலும் தேசவுடைமை யாக்கம் வெகு விரைவில் செய்து முடிக்கப்பட்டது. ஆகஸ்டு 31ந் தேதிக்குள் தேசவுடைமையாக்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை மூவாயிரத்திற்கும் அதிகமாகி விட்டது. தனியாருக்கு உடைமையாக இருந்த ரயில்வே, முனிசிப்பல் சேவைகள் (தண்ணீர் வழங்கு துறை, எரிவாயு, டிராம் இத்தியாதி) தேசவுடைமையாக்கப்பட்டு ஸ்தல சோவியத்துகளின் கீழ் வைக்கப்பட்டன.

பக்கம் 264.

76 இங்கு குறிப்பிடப்படுவது ''1918 அறுவடை செய்யப்பட்ட தானியத்துக்கான நிர்ணய விலைகள்'', தானியத்தின் கொள்முதல் விலையை மூன்று மடங்கு உயர்த்த வகை செய்யும் 1918 ஆகஸ்ட் 6ல் மக்கள் கமிசார்கள் கவுன்சில் எடுத்த முடிவு ஆகும்.

பக்கம் 279.

77 **அமெரிக்கத் தொழிலாளர்களுக்கு எழுதிய கடிதம்** அமெரிக்க ஐக்கிய நாட்டுக்கு அனுப்பி வைக்கப்படுவதை போல் ஷிவிக்கான மி. மி. பரதீன் ஏற்பாடு செய்தார். அவர் அண்மையில் அமெரிக்கா சென்றிருந்தார். அன்னிய ராணுவத் தலையீடு மற்றும் சோவியத் ருஷ்யா முதலாளித்துவ நாடுகளால் முற்றுகை இடப்பட்டிருந்த நிலைமைகளில் மிகப் பெருமளவிலான இடர்ப்பாடுகளை வென்று சமாளிக்க வேண்டி இருந்தது. இக்கடிதத்தோடு ரு. சோ. கூ. சோ. குடியரசின் அரசியல் சட்டத்தின் பிரதிகளும் தலையீட்டை நிறுத்தும்படி கோரி ஜனதிபதி வில்சனுக்கு சோவியத் அரசாங்கம் அனுப்பிய குறிப்பின் பிரதிகளும் அனுப்பி வைக்கப்பட்டன. அமெரிக்க சோஷலிஸ்டும் பத்திரிகையாளருமான ஜான் ரீடு செய்த செயலூக்கமான முயற்சிகளால் இவை அமெரிக்கப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டன.

1918 டிசம்பரில் ''அமெரிக்கத் தொழிலாளருக்கு எழுதிய கடிதம்'' ஆங்கில மொழியில் (சற்றே சுருக்கப்பட்டு) அமெரிக்க சோஷலிஸ்டுக் கட்சி இடதுசாரிப் பிரிவின் ஏட்டிலும், நியூயார்க் சஞ்சிகையான *The Class Struggle* மற்றும் போஸ்டன் வாரப்பத்திரிகையான *The Revolutionary Age* ஆகியவற்றிலும் வெளியிடப்பட்டது. இதை வெளியிடும் பணியில் ஜான் ரீடும் ஸென்-கத்தயாமாவும் பங்கு பற்றினர். பிறகு இது ஒரு சிறு பிரசுரமாக வெளி வந்தது. அமெரிக்க, மேற்கு ஐரோப்பிய பத்திரிகைகளில் பலமுறை மறுபிரசுரம் செய்யப்பட்டது.

''அமெரிக்கத் தொழிலாளருக்கு எழுதிய கடிதம்'' அமெரிக்க இடதுசாரி சோஷலிஸ்டுகளால் விரிவாகப் பயன் படுத்தப்பட்டது. அமெரிக்க, ஐரோப்பியத் தொழிலாளி வர்க்க கம்யூனிஸ்டு இயக்கத்தின் வளர்ச்சியில் இது பெரும் பங்கு வகித்தது. சோவியத் ருஷ்யாவுக்கு எதிரான ராணுவத் தலையீட்டை எதிர்த்து வந்த அமெரிக்க இயக்கத்தை வலுப்படுத்த உதவியது.

பக்கம் 280.

78 *1898* ஏப்ரலில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் கியூபாவிலும் ஃபிலிப்பைன்சிலும் ஸ்பானிய காலனியாதிக்க வாதிகளுக்கு எதிராக எழுந்த தேசியவிடுதலை இயக்கத்தைத் தமது நோக்கங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டு ஸ்பெயின் மீது போர் தொடங்கினர்கள். ஒரு சுதந்திரக் குடியரசைப் பிரகடனம் செய்துவிட்ட ஃபிலிப்பைன்ஸ் மக்களுக்கு உதவும் சாக்கில் அவர்கள் ஃபிலிப்பைன்சில் படைகளை இறக்கினர்.*1898* டிசம்பரில் பாரிசில் கையொப்ப மிடப்பட்ட சமாதான உடன்படிக்கைப்படி தோல்வியடைந்த ஸ்பெயின் அமெரிக்காவுக்கு சாதகமாக ஃபிலிப்பைன்ஸ் மீதிருந்த தனது உரிமைகளை விட்டுக் கொடுத்தது. *1899* பிப்ரவரியில் அமெரிக்க ஏகாதிபத்தியம் வஞ்சகமாக ஃபிலிப்பைன் குடியரசைத் தாக்கியது. உறுதியான எதிர்ப்பு ஏற்பட்டதும் அமெரிக்கப் படைகள் மக்களை கூண்டோடு கொலைப்படுத்துவதில் கொடூரமாகச் சித்திரவதை செய்வதில் இறங்கின. ஆள்பலம், ஆயுதபலம் இவற்றில் மேம்பட்டு இருந்த போதிலும் தலையீட்டாளர்களால் ஃபிலிப்பைன்சை அடிமைப்படுத்துவது எளிதாக இருக்கவில்லை. படையெடுப்பாளர்களை எதிர்த்து கொரில்லாப் போர் தொடங்கியது. விவசாயிகள் சுதந்திரத்துக்கான தமது போராட்டத்துடன் நிலத்துக்கும் மேம்பட்ட வாழ்க்கை நிலைமைகளுக்குமான போராட்டத்தை இணைத்ததால் பீதியடைந்த முதலாளிகளும் நிலப்பிரபுக்களும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளுடன் உடன்பாடு செய்துகொண்டனர். *1901*ல் ஃபிலிப்பைன்சில் தேசவிடுதலை இயக்கம் அடக்கப்பட்டு அது அமெரிக்காவின் காலனி ஆயிற்று.

பக்கம் 282.

79 ''அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஜனதிபதிக்கு அரசியல்-பொருளாதார கடிதங்கள்'' என்னும் நூல் அமெரிக்க பொருளியலாளர் கி. சி. காரி எழுதியதாகும். இதை நி.க. செர்னிஷேவ்ஸ்கி மதிப்பாய்வு செய்தார். அவர் எழுதிய

தாவது: ''வரலாற்றுப் பாதை என்பது நேவ்ஸ்கி சாலே யின் நடைபாதை அல்ல. அது புழுதியும் அழுக்கும் சகதியும் முட்களும் நிறைந்த பாதை. புழுதி மேனியில் பட்டுவிடும் என்றும் உயர் காலணிகள் அழுக்குப்பட்டுவிடும் எனவும் பயப்படும் பேர்வழிகள் பொது வேலைகளுக்குப் புறப்பட வேண்டாம்.''

பக்கம் 290.

80 *Appeal to Reason* (''பகுத்தறிவுக்கு வேண்டுகோள்'') அமெரிக்க சோஷலிஸ்டுகளின் பத்திரிகை. 1895ல் கான்சாஸ் மாநிலத்தில் ஜிரார்த் நகரில் தொடங்கப்பட்டது. சோஷலிசக் கருத்துக்களுக்காக இது பிரசாரம் நடத்திவந்தது, தொழிலாளர்களிடையே செல்வாக்குப் பெற்றிருந்தது. ஏகாதிபத்திய உலகப் போரின் போது இப்பத்திரிகை சர்வதேசிய நிலேயை அனுசரித்தது.

1915 செப்டம்பர் 11ம் தேதியில் யூ. டேப்சின் கட்டுரை ஒன்று இதில் பிரசுரிக்கப்பட்டது. தமது நினைவில் இருந்து லெனின் இக்கட்டுரையின் தலேப்பைக் குறிப்பிட்டிருக்க வேண்டும். இதன் தலேப்பு: *"When I shall fight"*.

பக்கம் 293.

81 பதினேழாம் நூற்றுண்டில் 1649ல் நடைபெற்ற ஆங்கில முதலாளித்துவப் புரட்சியின் போது முதலாம் சார்லஸ் மன்னர் தூக்கிலிடப்பட்டார். முடியாட்சியும் பிரபுக்கள் சபையும் கலேக்கப்பட்டன. குடியரசு பிரகடனம் செய்யப்பட்டு 1660 வரையில் நிலவியது.

பதினெட்டாம் நூற்றுண்டின் கடைசியில் 1793 செப்டம்பர் 4—5ல் நடைபெற்ற பிரெஞ்சு முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சியின் போது அரசியல் சட்டமன்றம் எதிர்ப்புரட்சியின் பயங்கரச் செயல்களுக்கு (புரட்சியின் பிரபல தலேவர்களான ஜ. ப. மராத், ஜ. ஷொமியே மற்றும் பிறர் கொல்லப்பட்டதற்கு) எதிரடியாக பயங்கர நடவடிக்கைகளே எடுத்து புரட்சியின் விரோதிகள் மீதான அடக்கு முறைக் கொள்கையை விஸ்தரித்தது.

பக்கம் 295.

82 ஜூபிடரும் மினர்வாவும்—பண்டைய ரோமானியக் கடவுள்கள். ஜூபிடர் ஆகாயம் ஒளி, மழை இடி ஆகியவற்றின் தேவன். பின்னர் ரோமானியப் பேரரசின் தலேமைத் தேவன். மினர்வா—போர், கைத்தொழில், விஞ்ஞானம்,

கலைகள் ஆகியவற்றின் தேவி. ஜூபிடரின் தலையில் இருந்து மினர்வா அவதரித்ததாகக் கூறுகிறது புராணம்.

பக்கம் 300.

83 **அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி, மாஸ்கோ சோவியத், ஆலை மற்றும் தொழிற்சாலைக் கமிட்டிகள், தொழிற்சங்கங்களின் கூட்டு அமர்வு** மாஸ்கோவில் 1918 அக்டோபர் 22ந் தேதி நடைபெற்றது. சர்வதேச நிலைமை பற்றி லெனின் அறிக்கை செய்தார். இங்கு வெளியிடப்பட்டுள்ள தீர்மானம் இந்த அமர்வில் ஏற்கப்பட்டது. பின்னுல் சர்வதேச நிலைமை பற்றிய லெனினது அறிக்கையின் அடிப்படையில் சிறு திருத்தங்களுடன் சோவியத்துகளின் ஆருவது காங்கிரசில் ஏற்கப்பட்டது. சோவியத்துகளின் ஆருவது விசேஷ அகில ருஷ்யக் காங்கிரசைக் கூட்டுவது பற்றிய முடிவு ஒருமனதாக ஏற்கப்பட்டது. நிகழ்ச்சி நிரலும் ஒப்புக் கொள்ளப் பட்டது.

பக்கம் 304.

84 **ஆன்டான்ட்**—இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ஜாராட்சி ருஷ்யாவின் ஏகாதிபத்தியக் கூட்டு. முதல் உலகப் போரின் போது அமெரிக்கா, ஜப்பான், இத்தாலி இதர நாடுகளும் இதில் உட்பட்டிருந்தன. இந்த ஆன்டான்டு நாடுகள் இளம் சோவியத் அரசிற்கு எதிரான தலையீட்டுப் போரில் ஈடுபட்டன.

பக்கம் 305.

85 **பிராவ்தா**—ஒரு செய்திப்பத்திரிகை, கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்திய ஏடு. 1912 மேயில் வெளியீடு தொடங்கியது.

பக்கம் 308.

86 இங்கு லெனின் ''பிராவ்தா'' (இதழ் 251, 1918 நவம்பர் 20) வெளியிட்டிருந்த வடிவில் பித்திரீம் சரோக்கினின் கடிதத்தை மேற்கோள் காட்டுகிருர். அதில் இக்கடிதம் ''வடக்கு திவின நிர்வாகக் கமிட்டியின் இஸ்வேஸ்தியாவில்'' வெளியிடப்பட்டதாகத் தவருகக் கூறப்பட்டுள்ளது. உண்மையில் வடக்கு-த்வின நிர்வாகக் கமிட்டியின் செய்திப் பத்திரிகையின் பெயர் ''கிறிஸ்தியான்ஸ்கியே இ ரபோச்சியே டூமி'' (''விவசாயிகள், தொழிலாளிகளின் சிந்தனை'') என்பதாகும். இக்கடிதம் இதன் இதழ் 75ல் 1918 அக்டோபர் 29ல் வெளிவந்தது.

பக்கம் 308.

87 ஜெர்மனியில் புரட்சி 1918 நவம்பரில் வெடித்தெழுந்தது.
பக்கம் 311.

88 தொழிலாளர், விவசாயிகள், கசாக்குகள், செஞ்சேனைப் பிரதிநிதிகளின் சோவியத்துகளின் விசேஷ ஆருவது அகில ருஷ்யக் காங்கிரஸ் மாஸ்கோவில் 1918 நவம்பர் 6 முதல் 9ந் தேதி வரை நடைபெற்றது. இதன் ஆரம்பம் அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியின் ஆண்டு விழாக் கொண்டாட்டத்துடன் சேர்ந்து நிகழ்ந்தது.

அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியின் ஆண்டு விழா பற்றியும் சர்வதேச நிலைமை குறித்தும் லெனின் அறிக்கை செய்தார். லெனினுல் எழுதப்பட்டதும் அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி, மாஸ்கோ சோவியத், ஆலைத் தொழிற்சாலைக் கமிட்டிகள் மற்றும் தொழிற்சங்கங்களின் கூட்டு அமர்வில் 1918 அக்டோபர் 22ல் ஏற்கப்பட்டதுமான தீர்மானத்தை காங்கிரஸ் ஒரு முகமாக உறுதி செய்தது (இந்தத் தொகுதியில் பக்கங்கள் 304-307 பார்க்க). சமாதானப் பேச்சுக்களைத் தொடங்குமாறு சோவியத் ருஷ்யாவுக்கு எதிராகப் போர் நடத்திவரும் நாடுகளின் அரசாங்கங்களிடம் விடும் வேண்டுகோளை காங்கிரஸ் ஏற்றது. வேறு பல தீர்மானங்கள்: புரட்சிகரமான சட்டபூர்வத் தன்மை, சோவியத் நிர்மாணம், ஏழை விவசாயிகள் கமிட்டிகளை வோலஸ்த் மற்றும் கிராம சோவியத்துகளுடன் இணைத்தல் ஆகியவை நிறைவேற்றப்பட்டன. ஜெர்மனியில் வெடித்தெழுந்த புரட்சி குறித்த தகவலை காங்கிரஸ் பிரதிநிதிகள் மிகுந்த உத்வேகத்துடன் வரவேற்ருர்கள். ஜெர்மன் தொழிலாளர், படையாளர், கடற்படையாளர் ஆகிய புரட்சி எழுச்சியில் பங்குபற்றியவர்களுடன் தம் ஒருமைப்பாட்டைப் பிரகடனம் செய்தார்கள்.

சோவியத் ஆட்சி அதிகாரம் அது நிலவிய முதலாண்டில் அடைந்துள்ள சாதனைகளை காங்கிரஸ் தொகுத்தளித்தது, அண்மை எதிர் காலத்திற்கான சோவியத் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தை வகுத்தது.
பக்கம் 319.

89 லெனின் இங்கு நினைவு கூர்வது, உத்தேச தேசவுடைமையாக்கத்துக்கு எதிராக மாஸ்கோ மக்கள் வங்கி பங்குதாரர்களின் விசேஷக் காங்கிரஸ் நிறைவேற்றிய தீர்மானம் ஆகும். 1918 டிசம்பர் 2ந் தேதிய மக்கள் கமிசார்கள் கவுன்சிலின் அரசாணைப்படி மாஸ்கோ மக்கள் வங்கி தேசவுடைமையாக்கப்பட்டது. அதன் சொத்துக்களும்

கடன்களும் ரு.சோ.கூ.சோ. குடியரசின் தேசிய வங்கிக்கு மாற்றப்பட்டன. மாஸ்கோ மக்கள் வங்கியின் போர்ட், ரு.சோ.கூ.சோ குடியரசின் தேசிய வங்கியின் மத்திய போர்டின் கூட்டுறவுப் பிரிவாக மறு சீரமைக்கப்பட்டது.

பக்கம் 320.

பெயர்க் குறிப்பகராதி

அலெக்சாந்தர் முதலாவது (ரமானவ்) [Alexander I (Romanov)] *(1777—1825)*—ருஷ்யாவின் பேரரசர் *(1801—1825).* *—45.*

அலெக்சேயெவ் [Alexeyev], மிஹயீல் வசீலியெவிச் *(1857—1918)*—ஜாராட்சி ஜெனரல், முடியரசுவாதி, எதிர்ப் புரட்சியாளர். *1917* பிப்ரவரி முதலாளித்துவ-ஜன நாயகப் புரட்சிக்குப் பிறகு பிரதம தளபதியானர். பிறகு சில காலம் பிரதம தளபதி கேரென்ஸ்கியின் தலைமைய கத்தின் தலைவராக இருந்தார். ருஷ்யாவில் உள்நாட்டுப் போர் நடந்த போது வெண்காவலர் தொண்டர்படை யின் தலைவராக வடக்கு காக்கஸசில் இருந்தார்.*—249.*

இசூவ் [Isuv], இயோசிஃப் அந்திரேயெவிச் *(1878—1920)*—சமூக-ஜனநாயகவாதி, மென்ஷிவிக். *1917*ல் மென்ஷி விக்குகளின் மாஸ்கோ கமிட்டி உறுப்பினர், மாஸ்கோ சோவியத்தின் செயற்குழு உறுப்பினர்.*—160, 161, 168.*

எங்கெல்ஸ் [Engels], பிரெடெரிக் *(1820—1825)—107.*

ஒசின்ஸ்கி, நி. (ஒபலேன்ஸ்கி, வி. வி.) [Osinsky (Obolensky)] *(1887—1938)—1907* முதல் போல்ஷிவிக் கட்சியின் உறுப்பினர். *1918*ல் ''இடதுசாரி கம்யூனிஸ்டு'' ஆனர்; ''இடதுசாரி கம்யூனிஸ்டுக்'' கொள்கைப் போக்கின் பிரதான கர்த்தா.*—164.*

கரேலின் [Karelin], விளதீமிர் அலெக்சாந்தரவிச் *(1891—1938)* —இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கட்சியை நிறுவியவர்களில் ஒருவர்; அக்கட்சியின் மத்திய கமிட்டி உறுப்பினர். இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சி

யாளர்கள் *1918* ஜூலையில் நடத்திய கலகத்துக்குத் தலைமை தாங்கியவர்களில் ஒருவர்.—*149, 159.*

கர்னீலவ் [Kornilov], லாவ்ர் இயோர்கியெவிச் *(1870—1918)*—ஜாரிஸ்டு ஜெனரல், முடியாட்சிவாதி. *1917* ஜூலை-ஆகஸ்டு மாதங்களில் ருஷ்யப் படைகள் எல்லாவற்றின் தலைவர். *1917* ஆகஸ்டு, இடைக்கால அரசாங்கத்தைக் கவிழ்த்து ராணுவ சர்வாதிகாரத்தை நிறுவுவதற்கான கலகத்திற்குத் தயாரிப்பு செய்தார். அக்கலகம் முறியடிக்கப்பட்ட பின் கைது செய்யப்பட்டார். பிற்பாடு தோன் ஆற்றுப் பிரதேசத்துக்கு ஓடி, சோவியத் மக்களை எதிர்த்துப் போராடிய வெண்காவலர் ''தொண்டர் படையை'' நிறுவி அதன் சேனாதிபதியானார்.—*20, 76, 80, 82, 88, 91, 94, 102, 105, 185.*

கலேதின் [Kaledin], அலெக்சேய் மக்சீமவிச் *(1861—1918)*—ஜாராட்சி ஜெனரல், தோன் கசாக்குகள் தலைவர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு தோன் பிரதேசத்தில் கசாக்குகள் எதிர்ப்புரட்சித் தலைவருள் ஒருவர். வெண்காவலர் ''தொண்டர் படையினை'' உருவாக்குவதில் பங்கு பற்றினர். கசாக்குகள் கலகத்துக்குத் தலைமை தாங்கினர்.—*190.*

கவெனியாக் [Cavaignac], லுயீ எழேன் *(1802—1857)*—பிரெஞ்சு ஜெனரல், பிற்போக்கு அரசியல் பிரமுகர். *1848* ஜூனில் ராணுவ சர்வாதிகாரத்துக்குத் தலைமை தாங்கினர்; பாரிஸ் தொழிலாளர் எழுச்சியை மிகக் கொடூரமாக நசுக்கியவர்.—*91, 144.*

கிரஸ்னேவ் [Krasnov], பியோத்தர் நிக்கலாயெவிச் *(1869—1947)*—ஜாரிஸ்டு ஜெனரல். *1917* ஆகஸ்டில் நடந்த கர்னீலவ் கலகத்தில் தீவிரப் பங்கெடுத்துக் கொண்டார். *1917* அக்டோபர் இறுதியில் சோவியத் எதிர்ப்பு கலகத்தின் போது கேரென்ஸ்கியால் பெத்ரோகிராதுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கசாக்கு படைப் பிரிவின் தளபதியாக இருந்தார். *1918—1919*ல் தோன் பிரதேசத்து எதிர்ப்புரட்சி கசாக்குப் படைகளுக்குத் தலைமை தாங்கினர்.—*63, 210, 211, 225, 228, 306, 321.*

கிலாவுசேவித்ஸ் [Clausewitz], கார்ல் *(1780—1831)*—பிரஷ்ய ஜெனரல். பெயர் பெற்ற முதலாளித்துவ ராணுவத்

தத்துவவாதி. நெப்போலியனது போர்களையும் ஏனைய போர்களையும் பற்றிய வரலாற்று நூல்கள் பலவும் எழுதியவர்.—*135.*

கிஷ்கின் [Kishkin], நிக்கலாய் மிஹாய்லவிச் *(1864—1930)*—காடேட்டுகளது கட்சியின் தலைவர்களில் ஒருவர். இடைக் கால முதலாளித்துவ அரசாங்கத்தில் அமைச்சர். அக்டோபர் சோஷலிசப் புரட்சித் தருணத்தில் பெத்ரோகிராதின் ''சர்வாதிகாரி'' எனப் பதவி பெற்றார். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு சோவியத் ஆட்சிக்கு எதிராக போராட்டம் நடத்தினார்.—*54.*

குச்சுக்-ஹான் [Kuchuk-Khan] *(மரணம்: 1921)*—இரான் அரசியலாளர். வாணிக முதலாளி வர்க்கம் மற்றும் நிலப்பிரபுக்களின் ஒரு பகுதியினரின் நலன்களை ஆதரித்து நின்றார்.—*251.*

கெகெச்கோரி [Gegechkori], யெவ்கேனி பெத்ரோவிச் *(பிறப்பு: 1879)*—மென்ஷிவிக். 1917 நவம்பருக்குப் பின் டிரான்ஸ்காக்கஸஸ் எதிர்ப்புரட்சி அரசாங்கத்திற்குத் தலைவராக இருந்தார். பின்னர் ஜார்ஜிய மென்ஷிவிக் அரசாங்கத்தின் அயல்துறை அமைச்சராகவும் துணைத் தலைவராகவும் இருந்தார். 1921ல் ஜார்ஜியாவில் சோவியத் ஆட்சி நிலைநாட்டப்பட்டபோது நாட்டை விட்டு ஓடினார்.—*63, 94, 101, 105.*

கே [Ghe], அ.யூ. *(மரணம்: 1919)*—ருஷ்ய அராஜகவாதி. அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின் சோவியத் ஆட்சியதிகாரத்தை ஆதரித்தவர். மூன்றாவது, நான்காவது முறைகளில் கூட்டப்பட்டதான அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்.—*149, 159.*

கேரென்ஸ்கி [Kerensky], அலெக்சாந்தர் ஃபியோதரவிச் *(1881—1970)*—சோஷலிஸ்டுப் புரட்சியாளர். 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பின் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் நீதி, ராணுவ, மற்றும் கடற்படை அமைச்சராகவும், பிற்பாடு அமைச்சர் அதிபராகவும் தலைமைச் சேனாதிபதியாகவும் இருந்தார். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின்பு சோவியத் ஆட்சியதிகாரத்தை எதிர்த்துப் போராடினார். 1918ல் நாட்டை விட்டு ஓடினார்.—*20, 23, 29, 33, 37, 42, 54, 56, 58, 63, 80, 88, 101, 151, 158, 160, 182, 187, 207, 210, 214, 226, 276, 291.*

கொர்கானவ் [Korganov], கிரிகோரி நீகனவிச் *(1886—1918)* —பாக்கூ மக்கள் கமிசார்கள் கவுன்சிலில் ராணுவத் துறை கமிசார். 1918 செப்டம்பரில் இதர பாக்கூ கமிசார்கள் 25 பேருடன் சேர்த்து ஆங்கிலத் தலையீட்டாளர்களால் கொலைசெய்யப்பட்டார்.—250.

கோட்ஸ் [Gots], அப்ராம் ரஃபயீலவிச் *(1882—1940)*—சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கட்சியின் தலைவர்களில் ஒருவர். 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு தொழிலாளர் படையாளர் பிரதிநிதிகளின் பெத்ரோகிராத் சோவியத்தில் இருந்தார். ''தாயக விடுதலை மற்றும் புரட்சி பாதுகாப்பு'' எனும் எதிர்ப்புரட்சிக் ''கமிட்டியின்'' உறுப்பினர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியைத் தொடர்ந்து சோவியத் ஆட்சி அதிகாரத்தை எதிர்த்துப் போரிட்டார்.—63, 88, 94, 101, 105.

கோம்பர்ஸ் [Gompers], சாமுவெல் *(1850—1924)*—அமெரிக்கத் தொழிற்சங்க இயக்கத்தின் பிரமுகர். ''அமெரிக்க உழைப்பாளர் சம்மேளனத்தின்'' [American Federation of Labour] நிறுவகர்களில் ஒருவர். முதலாளிகளுடன் வர்க்க ஒத்துழைப்புக் கொள்கையைக் கடைப்பிடித்தார், தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிப் போராட்டத்தை எதிர்த்தார். அக்டோபர் புரட்சி மற்றும் சோவியத் அரசு மீது பகைமையுடன் நடந்து கொண்டார்.—302.

சதூல் [Sadoul], ஜாக் *(1881—1956)*—பிரெஞ்சு ராணுவ அதிகாரி; பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியின் உறுப்பினர். பிரெஞ்சு ராணுவக் குழுவின் உறுப்பினராக 1917ல் ருஷ்யாவிற்கு வந்தார். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியால் ஈர்க்கப்பட்டு கம்யூனிஸ்டுக் கருத்துக்களின் ஆதரவாளரானார். ருஷ்யாவின் கம்யூனிஸ்டுக் கட்சியின் (போல்ஷிவிக்) பிரெஞ்சுப் பிரிவில் உறுப்பினரானார். பின்னர் செஞ்சேனையில் சேர்ந்தார். சோவியத் ருஷ்யாவுக்கு எதிரான ஆன்டான்டு நாடுகளின் ராணுவத் தலையீட்டைப் பகிரங்கமாக எதிர்த்தார்.—288.

சரோக்கின் [Sorokin], பித்திரீம் அலெக்சாந்தரவிச் *(1889—1968)*—முதலாளித்துவ சமூகவியலாளர். சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கட்சி உறுப்பினர். 1917க்கு முன்னால் பெத்ரோகிராத் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளர்.

*1919*க்கும் *1922*க்கும் இடையே பெத்ரோகிராத் உயர் கல்வி நிலையங்களில் சமூகவியல் போதித்தார். எதிர்ப் புரட்சி நடவடிக்கைகளுக்காக ருஷ்யாவில் இருந்து வெளியேற்றப்பட்டார்.—*308, 309, 313, 316.*

சாவின்கவ் [Savinkov], **பரீஸ் வீக்தரவிச்** *(1879—1925)*—சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கட்சித் தலைவர்களில் ஒருவர். *1917* பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் உதவி ராணுவ அமைச்சர், பிறகு பெத்ரோகிராதின் கவர்னர் ஜெனரல். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு எதிர்ப்புரட்சிக் கலகங்களை ஏற்பாடு செய்தார், சோவியத் குடியரசுக்கு எதிராக ஆயுதமேந்திய தலையீட்டுக்கு உதவி புரிந்தார். வெள்ளை வெறியராளுர்.—*63, 94, 214.*

செரெதா [Sereda], **செமியோன் பஃப்னுதியெவிச்** *(1871—1933)*—பிரபல சோவியத் அரசறிஞர். *1903* முதல் போல்ஷிவிக். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு பொறுப்பான அரசாங்க மற்றும் சபை நிர்வாகப் பதவிகள் வகித்தார். *1918—1921* ஆண்டுகளில் ரு.சோ. கூ.சோ. குடியரசில் விவசாயத்துறை மக்கள் கமிசாராக இருந்தார்.—*238.*

செர்னிஷேவ்ஸ்கி [Chernishevsky], **நிக்கலாய் கவ்ரீலவிச்** *(1828—1889)*—ருஷ்யாவின் மாபெரும் புரட்சிகர ஜனநாயகவாதி, பொருள்முதல் தத்துவஞானி, விஞ்ஞானி, எழுத்தாளர், இலக்கிய விமர்சகர். ருஷ்ய சமூக-ஜனநாயகத்தின் புகழ்வாய்ந்த முன்னோடிகளில் ஒருவர்.—*110, 290.*

செர்னேவ் [Chernov], **விக்தர் மிஹாய்லவிச்** *(1876—1952)*—ருஷ்யாவில் சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கட்சியின் தலைவர்களிலும் தத்துவவாதிகளிலும் ஒருவர். முதலாவது உலகப் போரின் போது இடதுசாரி என்று உரிமை கொண்டாடிய போதிலும் உண்மையில் ஒரு சமூக-தேசியவெறி நிலையே மேற்கொண்டார். *1917* மே-ஆகஸ்டில் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தில் நிலத்துறை அமைச்சராக இருந்தார். நிலப்பிரபுக்களுக்குச் சொந்தமான நிலத்தை எடுத்துக் கொண்ட விவசாயிகள் மீது கொடிய அடக்குமுறையை ஏவிவிட்டவர். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு சோவியத்து-எதிர்ப்புக்

கலகங்களுக்கு ஏற்பாடு செய்தவர்களில் ஒருவர்.—*28, 29, 37, 54, 91.*

டான் (கூர்விச்) [Dan (Gurvich)], ஃபியோதர் இலீச் *(1871—1947)*—மென்ஷிவிக் தலைவர்களில் ஒருவர். *1917* பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு பெத்ரோகிராத் சோவியத்தின் நிர்வாகக் கமிட்டி உறுப்பினர், மத்திய நிர்வாகக் கமிட்டியின் தலைமைக் குழு உறுப்பினர். இடைக்கால முதலாளித்துவ அரசாங்கத்தை ஆதரித்தார். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு சோவியத் ஆட்சியை எதிர்த்துப் போராடினர்.—*161.*

டெய்லர் [Taylor], பிரெடெரிக் வின்ஸ்லோ *(1856—1915)*—அமெரிக்கப் பொறியாளர், *1905-1906*ல் அமெரிக்க இஞ்சினியர்கள்-தொழில் நுட்பவியலாளர் சங்கத்தின் தலைவராக இருந்தார். வேலை நேரத்திலிருந்து அதிக பட்ச பலன் கிடைப்பதற்கும், உற்பத்திச் சாதனங்களையும் உழைப்புக் கருவிகளையும் சிக்கனச்சீரமைப்பு வாய்ந்த முறையில் பயன்படுத்துவதற்குமான உழைப்பு ஒழுங்கு முறையை வகுத்தவர்.—*83, 120, 161.*

டேப்ஸ் [Debs], யூஜின் விக்தர் *(1855—1926)*—அமெரிக்கத் தொழிலாளர் இயக்கத்தின் தலைசிறந்த பிரதிநிதிகளில் ஒருவர்; சமூக-ஜனநாயகக் கட்சியின் அமைப்பாளர்களில் ஒருவர். இக்கட்சி *1900—1901*ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட சோஷலிஸ்டுக் கட்சியின் பிரதான அமைப்பாக உருவாயிற்று. உலக ஏகாதிபத்தியப் போரின் போது சர்வதேசியவாதியாய் இருந்தார். சமூக தேசியவெறியர்களின் துரோகத்தைக் கண்டனம் செய்தார். அமெரிக்கா போரில் பங்கேற்றதுக்கு எதிராகப் பிரசாரம் செய்தார். ஏகாதிபத்திய-எதிர்ப்புப் பிரசாரம் புரிந்ததற்காக *1918*ல் *10* ஆண்டுச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார், ஆனல் *1921*ல் விடுதலை செய்யப்பட்டார்.—*293, 294.*

தப்ரலியூபவ் [Dobrolubov], நிக்கலாய் அலெக்சாந்தரவிச் *(1836—1861)*—புகழ்மிக்க ருஷ்யப் புரட்சிகர ஜனநாயகவாதி, பிரபல இலக்கிய விமர்சகர், தத்துவஞானி, பொருள் முதல்வாதி. ருஷ்யாவின் புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகளின் முன்னேடிகளில் ஒருவர்.—*110.*

திரோத்ஸ்கி (பிரான்ஷ்டைன்) [Trotsky (Bronstein)], லெவ் தவீதவிச் *(1879—1940)*—ருஷ்யாவின் சமூக-ஜனநாயக வாதி, *1897*லிருந்து மென்ஷிவிக். *1905-07* புரட்சியின் தோல்விக்குப் பிறகு கலைப்புவாதி ஆனுர். போர், சமா தானம் மற்றும் புரட்சி ஆகிய பிரச்சினைகளில் லெனினை யும் போல்ஷிவிக்குகளையும் எதிர்த்தார். முதல் உலகப் போரின் போது மையவாத நிலை மேற்கொண்டார். *1917*ல் அவர் நாடு கடந்த வாழ்வு முடிந்து ருஷ்யா திரும்பிய பின் போல்ஷிவிக் கட்சியில் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார். ஆனுல் அவர் போல்ஷி விசத்தை ஒப்புக்கொள்ளவில்லை. லெனினியத்தையும் கட்சிக் கொள்கையையும் எதிர்த்து மறைமுகமாயும் பகிரங்கமாயும் போராட்டம் நடத்தினுர்.

அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு கட்சி யின் பொதுக்கொள்கையையும், சோவியத் யூனியனில் சோஷலிசம் கட்டப்படுவதையும் தொடர்ந்து எதிர்த்த போதிலும் முக்கியமான பல பதவிகளை வகித்தார். *1927*ல் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார். *1929*ல் சோவியத் விரோத நடவடிக்கைகளுக்காக நாட்டை விட்டு வெளி யேற்றப்பட்டார். *1932*ல் அவரது சோவியத் குடி யுரிமையை இழந்தார்.—*209*.

துர்கேனெவ் [Turgenev], இவான் செர்கேயெவிச் *(1818—1883)*—மாபெரும் ருஷ்ய எழுத்தாளர்.—*110*.

தூத்தவ் [Dutov], அலெக்சாந்தர் இலிச் *(1864—1921)*—ஜாரிஸ்டு கர்னல், ஒரென்புர்க் கசாக்குப் படைகளின் தலைவர். கசாக்கு எதிர்ப்புரட்சியின் தலைவர்களில் ஒருவர்.—*63, 101, 105, 190*.

த்ஸெரெத்தேலி [Tsereteli], இராக்லி கியோர்கியெவிச் *(1882—1959)*—மென்ஷிவிக் தலைவர்களில் ஒருவர். *1917* பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு பெத்ரோகிராது சோவியத்தின் செயற்குழு உறுப்பினர்; சோவியத்துக்களின் (முதலாவது கூட்டம்) மத்தியச் செயற்குழு உறுப்பினர். *1917* மேயில் முதலாளித்துவ இடைக்கால அரசாங்கத்தின் அமைச்சரானுர், முதலில் தபால் தந்தித்துறை அமைச்சராகவும் பிறகு உள்துறை அமைச்சராயும் இருந்தார். போல்ஷிவிக்குகளுக்கு எதி ரான கொடிய அடக்குமுறையைத் தூண்டியோரில் ஒரு

வர். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின்பு ஜார்ஜியாவில் மென்ஷிவிக்குகளின் எதிர்ப்புரட்சி அரசாங்கத்தின் தலைவர்களில் ஒருவர்.—*28, 29, 37, 54, 91, 161.*

த்ஸெர்ழீன்ஸ்கி [Dzerzhinsky], **ஃபெலிக்ஸ் எத்முந்தவிச்** *(1877—1926)*—கம்யூனிஸ்டுக் கட்சியிலும் சோவியத் அரசாங்கத்திலும் ஒரு தலைசிறந்த தலைவர். *1895* முதல் கட்சி உறுப்பினர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு எதிர்ப்புரட்சியாளர், சீர்குலைவாளர்களை எதிர்த்துப் போராடுவதற்கு என்று நிறுவப்பட்ட அகில ருஷ்ய விசேஷக் கமிஷனின் தலைவர்.—*225.*

நிக்கலாய் இரண்டாவது (ரமானவ்) [Nicholas II (Romanov)] *(1868—1918)*—*1894*முதல் *1917* பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சி வரையில் ஆட்சியில் இருந்த ருஷ்யாவின் கடைசிப் பேரரசர்.—*23, 34, 182, 187.*

நெப்போலியன் முதலாவது (போனப்பார்ட்) [Napoleon I (Bonaparte)] *(1769—1821)*—பிரான்சின் பேரரசர் *(1804—1814* மற்றும் *1815).*—*13, 30, 40, 41, 43, 45, 144.*

பக்ரோவ்ஸ்கி [Pokrovsky], **மிஹயீல் நிக்கலாயெவிச்** *(1868—1932)*—*1905* முதல் போல்ஷிவிக். பிரபல சோவியத் அரசறிஞர், பொதுப் பிரமுகர், வரலாற்றாசிரியர். பிரேஸ்த் சமாதான உடன்படிக்கை ஏற்பட்ட சமயம் ஓர் ''இடதுசாரி கம்யூனிஸ்டு.''—*160.*

பமியலோவ்ஸ்கி [Pomyalovsky], **நிக்கலாய் கெராசிமவிச்** *(1835—1863)*—ருஷ்ய எழுத்தாளர், ஜனநாயகவாதி, ''புர்ஸா பற்றிய கட்டுரைகள்'' என்னும் நூலை எழுதினார்.—*170.*

பிளெஹானவ் [Plekhanov], **கியோர்கி வலென்தீனவிச்** *(1856—1918)*—ருஷ்ய, சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தலைசிறந்த பிரதிநிதி. ருஷ்யாவில் முதன் முதலில் மார்க்சியத்தைப் பரப்பியவர். ரு.ச.ஜ.தொ. கட்சியின் இரண்டாவது காங்கிரசுக்குப் பிறகு *(1903)* சந்தர்ப்பவாதத்துடன் இணக்கவாத நிலையை அனுசரித்தார். பிற்பாடு மென்ஷிவிக்குகளுடன் சேர்ந்து கொண்டார். முதலாவது உலகப் போரின் போது *(1914-18)* சமூக-தேசியவெறியராக இருந்தார்.

1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பின் மென்ஷிவிக்கு-பாதுகாப்புவாதிகளின் தீவிர வலதுசாரி (''யெதீன்ஸ்துவோ'') குழுவுக்குத் தலைமை தாங்கினார். போல்ஷிவிக்குகளையும் சோஷலிஸ்டுப் புரட்சியையும் எதிர்த்துப் பிரசாரம் செய்தார். சோஷலிசத்திற்கு மாறிச் செல்ல ருஷ்யா இன்னும் பக்குவம் அடையவில்லை என்று கருதினார். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியின்பால் எதிர்மறைப் போக்கை மேற்கொண்டார். ஆனால் சோவியத் ஆட்சிக்கு எதிரான போராட்டத்தில் சேரவில்லை.—312.

பீட்டர் முதலாம் (மகா பீட்டர்) [Peter I], *(1672—1725)—ருஷ்ய மன்னர் (1682—1725), முதலாவது அனைத்து ருஷ்யப் பேரரசர்.—149.*

புஹாரின் [Buharin], நிக்கலாய் இவானவிச் *(1888—1938)—பத்திரிகையாளர், பொருளியலாளர். 1906லிருந்து ருஷ்யாவின் சமூக-ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் உறுப்பினர். அரசு, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், தேசங்களின் சுயநிர்ணய உரிமை போன்ற பல பிரச்சினைகளில் லெனினிய-விரோதக் கருத்து கொண்டிருந்தார். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின் முக்கிய பதவிகள் வகித்தார். 1918ல் பிரேஸ்த் சமாதான உடன்படிக்கை பற்றிய விவாதம் நடந்த போது கட்சி-விரோத ''இடதுசாரிக் கம்யூனிஸ்டுக்'' குழுவுக்குத் தலைமை தாங்கினார். 1928 முதல் கட்சியின் வலதுசாரி எதிர்த்தரப்பினருக்குத் தலைமை தாங்கினார். கட்சி-விரோத நடவடிக்கைகளுக்காக 1937ல் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார்.—152, 153, 156, 159, 168, 169, 171.*

பெலருசவ் [Belorusov], அ. ச. *(1859—1919)—முதலாளித்துவ சிறுபிரசுர எழுத்தாளர், எதிர்ப்புரட்சியாளர்.—89.*

பொகயேவ்ஸ்கி [Bogayevsky], மி. பி. *(1881—1918)—தோன் பிரதேசத்தில் எதிர்ப்புரட்சியில் தீவிரமான பங்கு வகித்தார். ''தோன் பிரதேசத்தில்'' எதிர்ப்புரட்சி ''அரசாங்கத்தில்'' பதவி ஏற்றார். தீவிரமான எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளுக்காகக் கைது செய்யப்பட்டு தண்டனை வழங்கப்பட்டுத் தூக்கிலிடப்பட்டார்.—55, 63, 105, 159.*

மார்க்ஸ் [Marx], கார்ல் *(1818—1883)—91, 93, 153, 156,*

மார்த்தவ், எல். (ஸெதர்பாவும், யூலி ஓசிப்பவிச்) [Martov L. (Tsederbaum)], *(1873—1923)*—மென்ஷிவிக்குத் தலைவர்களில் ஒருவர். முதல் உலகப் போரின் போது மையவாதி நிலையை அனுசரித்தார். *1917* பிப்ரவரிப் புரட்சிக்குப் பின் சர்வதேசியவாத-மென்ஷிவிக்குகளின் குழுவுக்குத் தலைமை தாங்கியவர். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின் சோவியத் ஆட்சியதிகாரத்தின் பகிரங்க விரோதிகளுடன் சேர்ந்து கொண்டார்.—*88, 89, 91, 110, 256.*

மிர்பாஹ் [Mirbach], வில்ஹெல்ம் *(1871—1918)*—ஜெர்மன் அரசுறவாளர். *1918* ஏப்ரல் முதல் மாஸ்கோவில் ஜெர்மன் தூதராக இருந்தார். *1918* ஜூலை 6ந் தேதி ஜெர்மனிக்கும் சோவியத் ருஷ்யாவுக்கும் இடையே ஒரு போரைத் தூண்டிவிடும் உத்தேசம் கொண்ட சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களால் கொலை செய்யப்பட்டார்.—*208, 209.*

மில்யுக்கோவ் [Milyukov], பாவெல் நிக்கலாயெவிச் *(1859—1943)* — காடேட்டுக் கட்சியை நிறுவியவர்களிலும் தலைவர்களிலும் ஒருவர். இடைக்கால அரசாங்கத்தின் முதலாவது இயைவில் வெளிநாட்டுத்துறை அமைச்சர். வெற்றிகரமான முடிவை நோக்கி ஏகாதிபத்தியப் போரைத் தொடர்ந்து நடத்தும் கொள்கையைப் பின்பற்றினர்.—*215.*

மேரிங் [Mehring], ஃப்பிரான்ஸ் *(1846—1919)*—ஜெர்மன் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தலைசிறந்த பிரமுகர். இடதுசாரி ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளின் தலைவர்களிலும் தத்துவவியலாளர்களிலும் ஒருவர். ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியைத் தோற்றுவிப்பதில் முக்கிய பங்கு வகித்தார்.—*240.*

ரமானவ்—நிக்கலாய் இரண்டாவது (ரமானவ்) பார்க்க.

ரெனெடேல் [Renaudel], பியேர் *(1871—1935)*—பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியின் சீர்திருத்தவாதத் தலைவர்களில் ஒருவர். முதல் உலகப் போரின் போது *(1914—1918)* சமூக-தேசியவெறி நிலை மேற்கொண்டார்.—*302.*

ரென்னர் [Renner], கார்ல் *(1870—1950)*—ஆஸ்திரிய அரசியல்வாதி, ஆஸ்திரிய வலதுசாரி சமூக-ஜனநாயகவாதிகளின் தலைவரும் தத்துவாசிரியரும் ஆனர். ''கலாசார-தேசிய சுயாட்சி'' என்பதான முதலாளித்துவ-தேசிய

வாதத் தத்துவத்தின் மூலவர்களில் ஒருவர். முதல் உலகப் போரின் போது சமூக-தேசியவெறி நிலே மேற்கொண்டார்.—*302.*

லஸாரி [Lazzari], **கான்ஸ்டண்டீனே** *(1857—1927)*—இத்தாலிய தொழிலாளி வர்க்க இயக்கத்தின் முக்கியமான தலேவர். இத்தாலிய சோஷலிஸ்டுக் கட்சியின் நிறுவகருள் ஒருவர். முதல் உலகப் போரின் போது அக்கட்சியின் மையத்துக்குத் தலேமை தாங்கினுர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்குப் பிறகு சோவியத் ருஷ்யாவை ஆதரித்தார். கம்யூனிஸ்டு அகிலத்தின் இரண்டாவது மூன்ருவது காங்கிரசுகளில் கலந்து கொண்டார்.—*240.*

லிபெர் (கோல்டிமன்) [Lieber (Goldman)], **மிஹயீல் இஸாக்கவிச்** *(1880—1937)*—புந்த் தலேவருள் ஒருவர். முதல் உலகப் போரின் *(1914—1918)* போது சமூக-தேசியவெறியர். *1917* பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு தொழிலாளர், படையாளரின் பெத்ரோகிராத் சோவியத்தின் நிர்வாகக் கமிட்டி உறுப்பினராயும், முதல் மத்திய நிர்வாகக் கமிட்டியின் தலேமைக் குழு உறுப்பினராயும் இருந்தார். மென்ஷிவிக் நிலே மேற்கொண்டு கூட்டு அரசாங்கத்தை ஆதரித்தார். அக்டோபர் புரட்சியின் பால் பகைமை காட்டினுர்.—*161.*

லீப்க்னெஹ்ட் [Liebknecht], **கார்ல்** *(1871—1919)*—ஜெர்மன் மற்றும் சர்வதேசத் தொழிலாளி வர்க்க இயக்கத்தின் தலேசிறந்த பிரமுகர். இடதுசாரி ஜெர்மன் சமூக-ஜனநாயகவாதிகளின் தலேவர்களில் ஒருவர். முதல் உலகப் போரின் போது புரட்சிகர சர்வதேசியவாதி. ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியின் நிறுவகர்களில் ஒருவர். *1919* பெர்லின் தொழிலாளர் புரட்சி எழுச்சியின் தலேவர்களில் ஒருவர். இந்தப் புரட்சி எழுச்சி ஒடுக்கப்பட்ட பிறகு கா. லீப்க்னெஹ்ட் எதிர்ப்புரட்சியாளர்களால் மிருகத்தனமாகக் கொலே செய்யப்பட்டார்.—*36.*

லுபெர்சாக் [Lubersac], **ஜான்**—பிரெஞ்சு ராணுவ அதிகாரி, பிரபு, முடியரசுவாதி. பிரெஞ்சு ராணுவத் தூதுக் குழுவின் உறுப்பினராக *1917—1918*ல் ருஷ்யா வந்திருந்தவர்.—*288.*

லெனின் [Lenin], **விளதீமிர் இலீச்** *(1870—1924)—152, 242, 244.*

வில்சன் [Wilson], **உட்ரோ** *(1856—1924)—1913—1921*ல் அமெரிக்க ஜனுதிபதி. சோவியத் ருஷ்யாவிற்கு எதிராக ஏகாதிபத்திய அரசுகள் நடத்திய ராணுவத் தலையீட்டுக்கு ஏற்பாடு செய்தோரில் இவரும் ஒருவர்.—*294, 315.*

வில்ஹெல்ம் இரண்டாவது (ஹோஹன்ஸோலர்ன்) [Wilhelm II (Hohenzollern)], *(1859—1941)*—ஜெர்மன் பேரரசர், பிரஷ்ய மன்னர் *(1888—1918).—41.*

வின்னிச்சேன்கோ [Vinnichenko], **விளதிமிர் கிரீலவிச்** *(1880—1951)*—உக்ரேனிய முதலாளித்துவ தேசியவாதி. *1917* பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு எதிர்ப்புரட்சி உக்ரேனிய மத்திய ராடாவின் அமைப்பாளர் மற்றும் தலைவர்களில் ஒருவர். *1918—1919*ல் பெத்லியூராவுடன் சேர்ந்து உக்ரேனில் முதலாளித்துவ தேசிய அரசாங்கத்திற்குத் தலைமை தாங்கினுர்.—*29.*

ஷெய்டெமன் [Scheidemann], **ஃபிலீப்** *(1865—1939)*—ஜெர்மன் சமூக-ஜனநாயக கட்சியின் கடைகோடியான வலது சாரிச் சந்தர்ப்பவாதப் பிரிவின் தலைவர்களில் ஒருவர். ஜெர்மனியில் *1918* நவம்பரில் நடைபெற்ற புரட்சியின் போது மக்கள் பிரதிநிதிகள் கவுன்சில் உறுப்பினராக இருந்தார். இது உண்மையில் முதலாளி வர்க்கத்தின் நலன்களைக் காத்து நின்றது. *1918—1921*ல் ஜெர்மன் தொழிலாளர் இயக்கத்தை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிப்பதற்குத் திட்டமிட்டு ஏற்பாடு செய்தவர்களில் ஒருவர்.—*110, 302.*

ஷௌமியான் [Shaumyan], **ஸ்தெபான் கியோர்கியெவிச்** *(1878—1918)*—பிரபல சோவியத் அரசறிஞர், கட்சிப் பிரமுகர். *1900* ஆண்டு முதல் ரு.ச.ஜ.தொ. கட்சி உறுப்பினர். *1917* பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு தொழிலாளர் பிரதிநிதிகளின் பாக்கூ சோவியத்தின் தலைவர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சியைத் தொடர்ந்து காக்கேசியன் விவகாரத்துறை விசேஷக் கமிசாராகவும் பாக்கூ மக்கள் கமிசார்கள் கவுன்சில் தலைவராகவும் இருந்தார். *1918* ஆகஸ்டில் பாக்கூ கம்யூனின் வீழ்ச்சிக்குப் பிறகு மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டுப் புரட்சியாளர் உதவியுடன் பிரிட்டிஷ் தலையீட்டாளர்களால் கைது செய்யப்பட்டு இதர *25* பாக்கூ கமிசார்களுடன் சேர்த்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.—*252.*

ஸெத்கின் [Zetkin], கிளாரா *(1857—1933)*—ஜெர்மன் மற்றும் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் தலைசிறந்த தலைவர். ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியின் நிறுவகருள் ஒருவர். முதல் உலகப் போரின் போது புரட்சிகர சர்வ தேசியவாதி நிலை மேற்கொண்டார். சமூக-தேசிய வெறியை எதிர்த்தார். கம்யூனிஸ்டு அகிலத்தின் மூன்ருவது காங்கிரசில் கம்யூனிஸ்டு அகிலத்தின் நிர்வாகக் கமிட்டி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.—*240*.

ஸெமியோனவ் [Semyonov], கிரிகோரி எம். *(1890—1946)*—டிரான்ஸ் பைகால் கசாக் படையின் தலைவர். தொலைக் கிழக்கில் சோவியத் ஆட்சி அதிகாரத்தை எதிர்த்து ஆயுதமேந்திய போராட்டம் நடத்திஞர். டிரான்ஸ் பைகால் மற்றும் அமூர் பகுதிகளில் எதிர்ப்புரட்சி அரசாங்கங்களை அமைத்தார்.—*172*.

ஸ்கரபாத்ஸ்கி [Skoropadsky], பாவெல் பெத்ரோவிச் *(1873—1945)*—ஜாராட்சி ஜெனரல், அக்டோபர்வாதி. *1918* ஏப்ரல் முதல் டிசம்பர் வரை ஜெர்மன் ஏகாதிபத்தியவாதி களால் உக்ரேனில் இருந்த முதலாளித்துவ அரசாங்கத் தின் தலைவராக நியமிக்கப்பட்டார்.—*231*.

ஸ்தலிப்பின் [Stolypin], பியோத்தர் அர்காதியெவிச் *(1862—1911)*—ஜாராட்சி ருஷ்யாவின் அரசுறவாளர். *1906—1911* ஆண்டுகளில் ருஷ்யாவின் மந்திரி சபைத் தலைவர், உள்துறை விவகார அமைச்சர். அவரது பெயருடன் கடுமையான அரசியல் பிற்போக்கு சம்பந்தப்படுத்தப் பட்டுள்ளது. புரட்சி இயக்கத்தை ஒடுக்க மரண தண்டனை பரவலாகப் பயன்படுத்தப்பட்டது. (இதுவே ஸ்தலீப்பின் பிற்போக்கு *1907—1910* என்று அழைக்கப்படுகிறது.) —*31*.

ஸ்தாலின் [Stalin], இயோசிஃப் விஸ்ஸரியோனவிச் *(1879—1953)*—*1898* முதல் கட்சி உறுப்பினர். *1912* முதல் ரு.ச.ஜ.தொ. கட்சி (போ.) மத்தியக் கமிட்டி உறுப் பினர். அக்டோபர் சோஷலிஸ்டுப் புரட்சிக்கான தயாரிப்பு கள் மற்றும் நிறைவேற்ற கட்டத்தில் புரட்சி எழுச் சிக்குத் தயார் செய்வதற்காக மத்தியக் கமிட்டியால் நிறுவப்பட்ட புரட்சிகர ராணுவ மையத்தின் உறுப்பின ராக இருந்தார்.

1917 நவம்பர் முதல் *1923* ஜூலை வரையில் தேசிய இனங்கள் விவகாரங்களின் மக்கள் கமிசாராகவும் *1919*

மார்ச் முதல் அரசுக் கட்டுப்பாட்டுத்துறை கமிசாராக வும் பிறகு தொழிலாளர் விவசாயிகளது மேற்பார்வைத் துறையின் தலைவராகவும் 1922 ஏப்ரல் 25ந் தேதி வரை இருந்தார். ரு.க.க.(போ.) அரசியல் குழுமத்தின் உறுப் பினர். உள்நாட்டுப் போரின் போது குடியரசின் புரட்சி கர ராணுவ சோவியத்தின் மற்றும் பல முனைகளின் புரட்சிகர ராணுவ சோவியத்துக்களின் உறுப்பினர்.

1922ல் கட்சியின் மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1941க்குப் பின் மக்கள் கமிசார்கள் கவுன்சில் தலைவரானார். பின்னால் சோவியத் யூனியனின் அமைச்சரவைத் தலைவரானார்.

கட்சியின் மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாள ராக நீண்ட காலம் இருந்த ஸ்தாலின் இதர தலைவர் களுடன் சேர்ந்து சோஷலிசத்தைப் படைத்துருவாக்க ஊக்கமுடன் போராடினார். கட்சி விரோதப் போக்குகளை குறிப்பாயும் திரோத்ஸ்கிவாதம் மற்றும் வலதுசாரி சந்தர்ப்பவாதத்தை எதிர்த்து முறியடிப்பதில் பெரும் பங்கு வகித்தார்.

இவை யாவும் இருந்த போதிலும் சோவியத் வாழ்க் கையில் முரணானதான பல அம்சங்கள் அவரது பெயருடன் தொடர்பு பூண்டிருந்தன. இதையே கம்யூனிஸ்டுக் கட்சி மார்க்சியம்-லெனினியத்துக்கு அன்னியமானதான தனி நபர் வழிபாட்டின் வெளிப்பாடுகள் என்று வரையறுத் தது.—*251.*

ஸ்பிரிதோனவா [Spiridonova], **மரீயா அலெக்சாந்தரவ்னா** *(1884—1941)* — சோஷலிஸ்டுப் புரட்சியாளர்களின் தலைவர்களில் ஒருவர். 1917 பிப்ரவரி முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பின் சோஷலிஸ்டுப் புரட்சி யாளர்களின் இடதுசாரிப் பிரிவைத் தோற்றுவித்தவர் களில் ஒருவர். 1917 நவம்பரில் இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர் கட்சியை அமைத்து அதன் மத்திய கமிட்டி உறுப்பினரானார். 1918 ஜுலையில் இடதுசாரி சோஷலிஸ்டுப் புரட்சியாளர்கள் கிளப்பிவிட்ட கலகத் தில் தீவிரப் பங்கெடுத்துக் கொண்டவர்.—*213, 238, 264.*

ஹிண்டன்பர்க் [Hindenburg], **பாவுல்** *(1847—1934)*—ஜெர்மன் அரசியல் ராணுவப் பிரமுகர், ஜெனரல்-பீல்டு மார்ஷல். ஜெர்மன் ஏகாதிபத்தியத்தின் தேசியவெறி, பிற்போக்கு ஆகியவற்றின் பிரதிநிதி. முதல் உலக ஏகாதிபத்தியப்

போரின் போது கீழ்த்திசைப் போர் முனையில் ஜெர்மன் சேனையின் தலைவர். பிறகு ராணுவத் தலைமை அகத்தின் தலைவர். சோவியத் ருஷ்யாவுக்கு எதிரான ராணுவத் தலையீட்டை ஏற்பாடு செய்தவருள் ஒருவர். *1918* ஜெர்மன் புரட்சியை அடக்குவதில் பங்கு பற்றினர். *1925—1934* ஆண்டுகளில் வெய்மார் குடியரசின் தலைவர்.—*41.*

ஹேண்டர்சன் [Henderson], ஆர்த்தர் *(1863—1935)*—தொழிற் கட்சி, பிரிட்டிஷ் தொழிற்சங்க இயக்கம் ஆகியவற்றின் தலைவர்களில் ஒருவர். ருஷ்யாவில் நடைபெற்ற பிப்ரவரி *1917* முதலாளித்துவ-ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு அவர் ருஷ்யாவுக்கு வந்து ஏகாதிபத்தியப் போரைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று கிளர்ச்சிப் பிரசாரம் செய்தார். *1919*ல் இவர் பெர்ன் இரண்டாவது அகிலத்தின் அமைப்பாளர்களில் ஒருவராக இருந்தார். இங்கிலாந்தில் இருந்த முதலாளித்துவ அரசாங்கத்தில் பலமுறை பதவிகள் வகித்தார்.—*302.*

ஹோஹன்ஸோலர்ன்—வில்ஹெல்ம் இரண்டாவது *(ஹோஹன் ஸோலர்ன்) பார்க்க.*

வாசக நேயர்களுக்கு

இந்த மொழிபெயர்ப்பைப் பற்றியும் இந்தப் புத்தகத்தின் தயாரிப்பைப் பற்றியும் வாசக நேயர்களின் கருத்தை முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்வுடன் வரவேற்கும்.

கடிதங்களைத் தயை செய்து “Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR” என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

விற்பனையாளர்கள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

41. பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை—600098.

ஷோ-ரூம்

136, மவுண்ட் ரோடு, சென்னை—600002.

கிளைகள்

80, மேலக் கோபுர வீதி, மதுரை—625001.
87/89, ஒப்பணக்கார தெரு, கோயபுத்தூர்—641001.
சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி—620008.
செர்ரி ரோடு, சேலம்—636001.

விற்பனை நிலையங்கள்

3—22—75—D, மதுரை சாலை,
திருநெல்வேலி ஜங்ஷன்.
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்.

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

அடுத்து வரும்வி. இ. லெனின், தேர்வு நூல்கள், ஒன் பதாம் தொகுதியில் பாட்டாளி வர்க்கப் புரட்சியும் ஓடுகாலி காவுத்ஸ்கியும்; கம்யூனிஸ்டு அகிலத்தின் முதலாவது காங்கிரஸ், மார்ச் 2—6, 1919 (முதலாளித்துவ ஜனநாய கம் மற்றும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய ஆய்வுரைகளும் அறிக்கையும்); மாபெரும் தொடக்கம் என்னும் நூல்கள் இடம் பெறுகின்றன